## பதிப்புரை

எமது தமிழ்மொழி வளம் மிக்கது. இவ் வளத்தை வரம்பமைத்துப் பாதுகாப்பது இலக்கணமெனக் கூறுதல் தகும். இன்று எம்மத்தியில் எத்தனையோ இலக்கண நூல்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. இவை எவ்வளவுதான் வெளிவந்த போதும் இலக்கண வரம்பிற்கு உட்பட்டு தமிழை நல்வழக்கில் எழுத வழிகாட்டிய நூல்களில் இற்றைக்குச் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னைய நூல்கள் இன்றும் இலக்கிய ஆர்வலர் களாலும், மாணவர்களாலும், பரவிப் பேணப்பட்டு, எங்கு எப்படிச் சேதமுற்ற நூலாயினும் அதனை வாங்கிப் படிக்க, பாதுகாக்க வேணவாக் கொள்வது எம் மத்தியில் காணப்படுகின்றது.

அவ்வகையில் '**தமிழிலக்கணமும் உரையமைப்பும்**' (வருடம் 1958) என்ற இவ் அரிய இலக்கணநூல் என்வசம் சுமார் இருபது வருடங்களாக எனது தேவையையும் பிறரது தேவையையும் நிறைவு செய்வதாக உள்ளது. இந்நூலை எழுதிய ஆசான் கலாநிதி வ. பொன்னையா அவர்கள் போற்றத் தக்கவர். இவரது அறிவுசால் புலம் அவரது நூலில் எங்கும் செறிவுற விதைக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் மறுபதிப்பொன்றைப் புதிதாகப் பெற்றுவிட எவ்வளவோ முயன்றும் இதன் மறுபதிப்பு வெளிவராமையை இட்டு நான் மிக வருந்துகிறேன். சிலோனில் எவ்வளவோ இலக்கியநூல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இதற்கான மறுபதிப்பு வெளிவராதது வருந்தத்தக்கது என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

இந்நூலாசிரியனின் தொண்டு அழியாது இக்காலச் சந்ததி யினருக்குக் கிடைக்கும் வகையில் இந்நூலில் சிறுதொகையை வெளியிட்டுள்ளேன். இது இலக்கிய, இலக்கண ஆர்வலர்களுக்குச் செய்யும் சேவையாகவே கருதுகிறேன். இந்நூலாசிரியனின் அன்றைய அரிய பணிக்காக இன்றும் என்றும் அவர் தாள் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

நன்றி,

– ஆர்வலன் –



## பொருளடக்கம்

### பகுதி I. தமிழிலக்கணம்


| | அதிகாரம் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாக்கிய ஆக்கமரபு | 01 - 46 |
| 2. | சொல்லாக்க மரபு | 47 - 72 |
| 3. | புணர்ச்சி மரபு | 73 - 83 |
| 4. | பெயர்ச்சொன் மரபு | 84 - 123 |
| 5. | வினைச்சொன் மரபு | 124 - 158 |
| 6. | இடைச்சொன் மரபு | 159 - 173 |
| 7. | உரிச்சொன் மரபு | 174 - 176 |


### பகுதி II. உரையமைப்பு


| | | |
|---|---|---|
| 8. | வாக்கிய வகுப்பு | 176 - 186 |
| 9. | வாக்கிய மாற்றம் | 187 - 209 |
| 10. | வாக்கியத் தொகுப்பு | 210 - 218 |
| 11. | தன்கூற்றும் பிறன்கூற்றும் | 219 - 232 |
| 12. | வழாநிலையும் வழுவமைதியும் | 233 - 263 |
| 13. | இலக்கணைச் சொற்களும் இலக்கணைத் தொடர்களும் | 264 - 291 |
| 14. | நிறுத்தக் குறிகள் | 292 - 298 |
| 15. | கதையெழுதுதல் | 299 - 304 |
| 16. | கடிதமெழுதுதல் | 305 - 317 |
| 17. | சுருக்கவுரையெழுதுதல் | 318 - 337 |
| 18. | வாக்கிய அமைப்பும் பந்தி அமைப்பும் | 338 - 345 |
| 19. | கட்டுரையெழுதுதல் | 346 - 362 |
| 20. | பெயர்த்துரையெழுதுதல் | 363 - 368 |
| 21. | நயமெழுதுதல் | 369 - 392 |


RangaRakes tamilnavarasam.com

# தமிழிலக்கணமும் உரையமைப்பும்

## பகுதி I. தமிழிலக்கணம்

### அதிகாரம் 1.

### வாக்கிய ஆக்க மரபு

**(1)** நாம் உரையாடுதற்கும் எழுதுதற்கும் வாக்கியங்களை வழங்குகின்றோம். வாக்கியமாவது முடிந்த கருத்துக் கொண்ட தொடர்மொழியாம். 'கந்தன் இங்கு வந்தான்' என்பது பொருளாலே முற்றிநிற்கின்றமையால், வாக்கியம் எனப்படும். 'வந்த கந்தன்' என்பது பொருளாலே முற்றாது நிற்கின்றமையால் வாக்கியம் எனப்படாது. வாக்கியப் பொருளுணர்ச்சிக்குத் தக்க சொற்கள் பொருட் பொருத்தமுறச் சேர்ந்து நிற்கவேண்டும். நீராலே நனை என்னுமிடத்து நனைத்தற்கண்ணே நீருக்குத் தகுதி உண்டு என்பதால் வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாதல் காண்க. தீயாலே நனை என்னுமிடத்து நனைத்தற்கண்ணே தீயிற்குத் தகுதி இல்லை என்பதால் வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாமை காண்க. சொற்கள் ஒழுங்குமாறி இருந்தாலும் வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாது. 'பேதமை அணிகலம் என்பது மாதர்க்கு' என்பது பொருள்படாது. இதன் கண்ணுள்ள ஒழுங்கை மாற்றி, 'பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்' எனின், பொருள்படுதல் காண்க.

**வினா (1)** வாயாலே கேள், மூக்காலே பார் என்பனவற்றைத் தகுதி நோக்கித் திருத்தி எழுதுக.

**விடை** வாயாலே பேசு, மூக்காலே முகர்.

**வினா (2)** 'குற்றஞ் சுற்றம் பார்க்கில் இல்லை' என்பதன் கண்ணுள்ள சொற்களின் ஒழுங்கை மாற்றி அதனை வாக்கியமாக அமைக்க.

**விடை** குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை

**வினா(3)** பூ, மரம், தேள் என்னும் பொருள்களின் செய்திகள் கிளைவிடும், கொட்டும், மலரும் என்பனவற்றாற் குறிக்கப்படின், அச் செய்திகளைக் குறிக்கும் வாக்கியங்களை அமைக்க.



RangaRakes

tamilnavarasam.com

**விடை** பூ மலரும்; மரங் கிளை விடும்; தேள் கொட்டும்.

**வினா (4)** கோடி, குடி, நாழி, கண், முழம், கலம், என்னுஞ் சொற்கள் கொண்டு பின்வரும் வெண்பாவை முடிக்க:–

உண்பது .......... உடுப்பது நான்கு ...............
எண்பது .............. நினைந்தெண்ணுவன ........... புதைந்த
மாந்தர் ......... வாழ்க்கை மண்ணின் ........... போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

**விடை** உண்பது **நாழி** உடுப்பது நான்கு**முழம்**
எண்பது **கோடி** நினைந் தெண்ணுவன – **கண்**புதைந்த
மாந்தர்**குடி** வாழ்க்கை மண்ணின் **கலம்**போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

**வினா (5)** கீழ்க்காணும் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள சொற்கள் கொண்ட பழமொழிகளை எழுதுக.

(i) மாடு, தொழுவம், இடம், நினைத்தல், கட்டுதல்.
(ii) பொய், வாய், போசனம், சொல்லல், கிடைத்தல்

**விடை** (i) மாடு நினைத்த இடத்தில், தொழுவங் கட்டுவார்களா?
(ii) பொய் சொன்ன வாய்க்குப் போசனங் கிடையாது.

## பயிற்சி 1.

1. சுரந்தவன், இறந்தவன், கெடுத்தவன், சிறந்தவன் என்னுஞ் சொற்களைத் தக்க இடங்களில் இட்டுப் பின்வரும் வாக்கியத்தை முடிக்க.

ஒன்றுமாய்ப் பலவுமாய் இருக்கும் இறைவன் எண் ............
தலை ............அருள் ............ இருள்............

2. நட்டாலும், சுட்டாலும், கெட்டாலும், அட்டாலும் என்பன கொண்டு மேற்காணும் வெண்பாவை முடிக்க.

............ பால்சுவையிற் குன்றா தளவளாய்
............ நண்பல்லார் – நண்பல்லர்
............ மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
............ வெண்மை தரும்.

3. ஒழுங்குமாற்றி வாக்கியங்களாக அமைக்க:

(1) சீதை சோலைக்குச் சென்றான் இராமன் விளையாடிய.
(2) விரைந்து பார்த்தான் விறைத்து வந்து அவன் என்னை.





(3) அத்தெருவின் அறுகை ஆடும் அருகில் இருக்கும் தின்னாது.
(4) தவறினாள் குலம் மனைவி கற்புநிலை ஆயின் கெடும்.
(5) நெஞ்சு அற்ற மாசு உடையார் இனிது வன்சொல்.
(6) ஊரக் கல்லுந் தேயும் எறும்பு.
(7) முற்றம் போனால் நித்தம் சலிக்கும்.
(8) எண்ணெயைக் கண்ணோய் நீங்கும் இட்டாற் கால்களில்.
(9) புலி அடையாளம் பதுங்குவது பாய்ச்சலுக்கு.
(10) காய்க்கும் பூவாதே மரமும் உள.

4. மலை, வளி, வெயில், சூரியன், மான், மழை, இலை, நோய், வித்து என்பனவற்றின் செய்திகள் வெருளும், பெய்யும், எறிக்கும், நிற்கும், உதிரும், காலிக்கும், முளைக்கும், துன்புறுத்தும், உளரும் என்பன வற்றாற் குறிக்கப்படின், அச்செய்திகளைக் குறிக்கும் வாக்கியங்களை அமைக்க.

5. தகுதி நோக்கித் திருத்தி எழுதுக.

(1) தச்சர் மரங்களை வாளால் வெட்டுவர்.
(2) வண்ணார் ஆடை ஒளிப்பவர்.
(3) ஆகாயத் தாமரை மாலை கட்ட உதவும்.
(4) இறைவன் சிற்றறிவு உள்ளவன்.
(5) குயவன் பானை நெய்பவன்.

6. கீழ்க்காணும் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள சொற்கள் கொண்ட பழமொழி களை எழுதுக.

(1) கால், சகடம், வருதல், போல், செல்வம்.
(2) தனயன், தந்தை, அந்த, எந்த, வழி.
(3) கிழங்கு, ஒன்று, முட்டு, கொட்டி, உதவுதல்
(4) குஞ்சு, பொன், காக்கை, தான்.
(5) பானை, பதம், சோறு, ஒன்று
(6) முகம், தெரிதல், அழகு, அகம்
(7) உடைத்தல், ஊன்றல், கொடுத்தல், உச்சி, தடி,
(8) பிறத்தல், நியாயம், கலகம்.
(9) பழி, பாவம், ஒன்று, பக்கம்.
(10) கைச்செலவு, காணுதல், உதவுதல், பணம், கனவு.

(2) ஒரு சொல்லின் எதிர்மறைப் பொருளையேனும் மறுதலைப் பொருளையேனுந் தருஞ் சொல் அதன் எதிர்ச்சொல் எனப்படும்.



RangaRakes
tamilnavarasam.com

ஒரு சொல் குறிக்கும் பொருளுக்கும் அதன் எதிர்மறை குறிக்கும் பொருளுக்கும் இடையில் யாதும் பகுப்பு இல்லை. அகம், புறம் என்பன ஒன்றுக்கொன்று எதிர்மறை; அகமும் புறமுமல்லாத ஒன்று இல்லை என்பது காண்க.

ஒரு சொல் குறிக்கும் பொருளுக்கும் அதன் மறுதலை குறிக்கும் பொருளுக்கும் இடையிற் பகுப்பு உண்டு. நீளம் அகலம் என்பன ஒன்றுக் கொன்று மறுதலை; உயரம் என்பது அவற்றிற்கு இடைப் பகுப்பாதல் காண்க ; அது நீளமல்லாததாயும் அகலமல்லாததாயும் உள்ள ஒன்று.

(அ) பின்வருவன ஒன்றுக்கொன்று **எதிர்ச்சொல்** எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| அகங்கை, அங்கை | புறங்கை | அடி | முடி, நுனி |
| அண்மை | சேய்மை | அல் | பகல் |
| அறம் | மறம் | அன்பு | வன்பு |
| ஆக்கம் | கேடு | ஆக்கல் | அழித்தல் |
| ஆங்காலம் | போங்காலம் | ஆண்டான் | அடிமை |
| இகழ் | புகழ் | இசை | வசை |
| இடஞ்சுழி | வலஞ்சுழி | இணக்கம் | பிணக்கம் |
| இம்மை | மறுமை | இயங்குதிணை | நிலைத்திணை |
| இயல்பு | விகாரம் | இயற்கை | செயற்கை |
| இயற்பெயர் | புனைபெயர் | இரா, இரவு | பகல் |
| இருள் | ஒளி | இல்பொருள் | உள்பொருள் |
| இல்லறம் | துறவறம் | இளமை | முதுமை, மூப்பு |
| இறப்பு | பிறப்பு | இன்பம் | துன்பம் |
| இன்மை | அன்மை, மறுதலை | ஈதல் | ஏற்றல் |
| உடன்பாடு | எதிர்மறை | உண்டு | இல்லை |
| உயர்த்தல் | தாழ்த்தல் | உயர்வு | தாழ்வு, இழிவு |
| உயிர் | மெய் | உள் | வெளி |
| உள்ளங்கால் | புறங்கால் | உள | இல |
| உறக்கம் | விழிப்பு | உறவு | பகை |
| எதிர் | நேர் | ஊடல் | கூடல் |
| எளிது | அரிது | ஏழை | செல்வன் |
| ஏற்றம் | இறக்கம் | ஏற்றுமதி | இறக்குமதி |





| | | | |
|---|---|---|---|
| ஐயம் | துணிபு, திரிபு | ஒடுக்கம் | விரிவு |
| ஒருமை | பன்மை | ஒற்றுமை | வேற்றுமை |
| ஒற்றை | இரட்டை | ஒறுப்பு | மலிவு |
| கலக்கம் | தெளிவு | களவு | கற்பு |
| கனவு | நனவு | காய் | கனி |
| காய்தல் | உவத்தல் | காலை | மாலை |
| கிட்டுதல் | எட்டுதல் | குணக்கு | குடக்கு |
| குறில் | நெடில் | குறை | நிறை |
| குறைமதி | நிறைமதி, வளர்மதி | குறைவு | நிறைவு |
| கூட்டல் | கழித்தல் | கூடுதல் | பிரிதல் |
| கெட்ட | நல்ல | கைகொடுத்தல் | கைதுடைத்தல் |
| கொடுத்தல் | வாங்குதல் | கொடுக்குமதி | வருமதி |
| கொடுந்தமிழ் | செந்தமிழ் | கொள்ளல் | விற்றல் |
| கொள்வனவு | விற்பனவு | சிற்றறிவு | பேரறிவு |
| சிறப்பு | பொது | சிறிது | பெரிது |
| சீதேவி | மூதேவி | சுடுகாடு | இடுகாடு |
| சுடுசோறு | பழஞ்சோறு | சுருக்கம் | விரிவு |
| செங்கோல் | கொடுங்கோல் | செந்தாமரை | வெண்டாமரை |
| செய்வினை | செயற்பாட்டுவினை | செல்காலம் | வருங்காலம் |
| செல்லுதல் | வருதல் | செல்வம் | வறுமை |
| சேர்த்தல் | பிரித்தல் | தண்ணீர் | வெந்நீர் |
| தண்மை | வெம்மை | தமர் | பிறர் |
| தருதல் | கொடுத்தல் | தலைக்கூடல் | தலைப் பிரிதல் |
| தலைப்பிள்ளை | கடைப்பிள்ளை | தற்கிழமை | பிறிதின் கிழமை |
| தன்வினை | பிறவினை | தனிமொழி | தொடர்மொழி |
| திட்பம் | நுட்பம் | திறத்தல் | மூடுதல், அடைத்தல், பூட்டுதல் |
| திணைத்துணை | பனைத்துணை | துயிலுணர்தல் | துயின்மடிதல் |
| துன்னியார் | துன்னலர் | தெருள் | மருள் |
| தெளிவு | மயக்கம் | தொகுத்தல் | வகுத்தல் |
| தொகை | வகை, விரி | தொடக்கம் | முடிவு |



RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| நகை | அழுகை |
| நட்பு | பகை |
| நல்லறிவு | புல்லறிவு |
| நல்வினை | தீவினை |
| நற்கதி | துர்க்கதி |
| நற்குணம் | தீக்குணம் |
| நற்கோள் | துர்க்கோள் |
| நற்சொல் | தீச்சொல் |
| நற்றாய் | செவிலித்தாய் |
| நன்செய் | புன்செய் |
| நன்மை | தீமை |
| நன்னீர் | துன்னீர், புன்னீர் |
| நாள் | கோள் |
| நிழல் | வெயில் |
| நினைவு | மறதி |
| நுண்மை | பெருமை |
| பகுப்பு | தொகுப்பு |
| படைத்தல் | அழித்தல் |
| பல | சில |
| பாவம் | புண்ணியம் |
| புகழ் | இகழ் |
| புதுமை | பழமை |
| பூரிப்பு | வாட்டம் |
| பெருக்கம் | சுருக்கம் |
| பேரின்பம் | சிற்றின்பம் |
| போதல் | வருதல் |
| மணக்கோலம் | பிணக்கோலம் |
| மலர்தல் | குவிதல் |
| மனையறம் | துறவறம் |
| முகதலை | சமதலை |
| முதல் | கரு, உரி |

| | |
|---|---|
| நஞ்சு | அமுதம் |
| நண்பன் | பகைவன் |
| நல்லார் | பொல்லார் |
| நற்கணம் | தீக்கணம் |
| நற்காலம் | துர்க்காலம் |
| நற்குறி | தீக்குறி, துர்க்குறி |
| நற்சார்பு | தீச்சார்பு |
| நற்புத்தி | துர்ப்புத்தி |
| நன்காடு | இடுகாடு |
| நன்மக்கள் | புன்மக்கள் |
| நன்னிலம் | புன்னிலம் |
| நன்னெறி | புன்னெறி, துன்னெறி |
| நிலைமொழி | வருமொழி |
| நிறைமதி | பிறைமதி |
| நீளம் | அகலம் |
| பகுதி | விகுதி, தொகுதி |
| பகைமை | கேண்மை |
| பருப்பம் | சிறுப்பம் |
| பாட்டு | உரை |
| பிந்துதல் | முந்துதல் |
| புதிய | பழைய |
| பூட்டுதல் | திறத்தல் |
| பூரியார் | சீரியார் |
| பெருக்கல் | வகுத்தல் |
| பொழிப்புரை | அகலவுரை |
| போற்றுதல் | தூற்றுதல் |
| மணப்பறை | பிணப்பறை |
| மருட்டுதல் | தெருட்டுதல் |
| மாரி | கோடை |
| முதல் | இடை, கடை |
| முதனூல் | வழிநூல், புடைநூல் |





| | | | |
|---|---|---|---|
| முற்றும்மை | எச்சவும்மை | முற்றுவமை | குறையுவமை |
| முன் | பின் | முன்னங்கால் | பின்னங்கால் |
| மெய் | பொய் | மெலித்தல் | வலித்தல் |
| மெலியார் | வலியார் | மென்மை | வன்மை |
| மேடு | பள்ளம் | மேதகை | இழிதகை |
| மேல் | கீழ் | வடகலை | தென்கலை |
| வரவு | செலவு | வரிவடிவு | ஒலிவடிவு |
| வலம் | இடம் | வளர்ச்சி | தேய்வு |
| வாட்டம் | மலர்ச்சி | வாய்மை | பொய்மை |
| வாழ்த்தல் | வைதல் | வாழ்வு | தாழ்வு |
| விதி | விலக்கு | விரிதல் | குவிதல், கூம்புதல் |
| விருப்பு | வெறுப்பு | வினா | விடை |
| வீரன் | கோழை | வெற்றி | தோல்வி. |

(ஆ) தமிழ்ச்சொற்கள் பெரும்பான்மை தமிழ் மரபின்படி **அல், இல், ஆ** என்னும் இடைநிலைகளைப் பின்னாற் பெற்றும் எதிர்ச்சொற்களைத் தரும்.

உ – ம்: அருள் – **அருளல்லது;** சுகம் – சுகமின்மை.

அறிவு – **அறியாமை;** நடந்தான் – நடந்தானல்லன், நடந்திலன், நடக்கவில்லை.

(இ) தமிழ்ச் சொற்களுள் வடசொற்கள் வடமொழி மரபின்படி **அ, அந், நி, நிர், கு, வி** முதலியவற்றை முன்னாற் பெற்றும் எதிர்சொற்களைத் தரும். இம்முறையேயன்றிப் பிறவாறும் எதிர்ச்சொற்களைத் தரும்.

**'அ' பற்றி வரும் எதிர்ச்சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| கண்டம் | அகண்டம் | கண்டிதம் | அகண்டிதம் |
| காரணம் | அகாரணம், காரியம். | காலம் | அகாலம் |
| கிரமம் | அக்கிரமம் | கிராகியம் | அக்கிராகியம் |
| குணம் | அகுணம் | கௌரவம் | அகௌரவம் |
| சக்கியம் | அசக்கியம் | சங்கம் | அசங்கம் |
| சங்கியம் | அசங்கியம் | சஞ்சலம் | அசஞ்சலம் |
| சத்தி | அசத்தி | சத்தியம் | அசத்தியம் |
| சத்து | அசத்து | சந்தர்ப்பம் | அசந்தர்ப்பம் |



RangaRakes tamilnavarasam.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சம்பவம் | – | அசம்பவம் | சம்பாவிதம் | – | அசம்பாவிதம் |
| சமயம் | – | அசமயம் | சமர்த்தன் | – | அசமர்த்தன் |
| சரம் | – | அசரம் | சரீரி | – | அசரீரி |
| சலம் | – | அசலம் | சற்காரியம் | – | அசற்காரியம் |
| சற்பாத்திரம் | – | அசற்பாத்திரம் | சாக்கிரதை | – | அசாக்கிரதை |
| சாத்தியம் | – | அசாத்தியம் | சாதாரணம் | – | அசாதாரணம் |
| சாந்தன் | – | அசாந்தன் | சாரம் | – | அசாரம் |
| சித்தம் | – | அசித்தம் | சிந்தியம் | – | அசிந்தியம் |
| சிரத்தை | – | அசிரத்தை | சீரணம் | – | அசீரணம் |
| சுகம் | – | { அசுகம்<br>துக்கம் | சுகி | – | அசுகி |
| சுபம் | – | அசுபம் | சுத்தம் | – | அசுத்தம் |
| சேடம் | – | அசேடம் | சுரர் | – | அசுரர் |
| சோகம் | – | அசோகம் | சேதனம் | – | அசேதனம் |
| தலம் | – | அதலம் | ஞானம் | – | அஞ்ஞானம் |
| திட்டம் | – | அதிட்டம் | தன்மம் | – | அதன்மம் |
| துவிதம் | – | அத்துவிதம் | திருட்டம் | – | அதிருட்டம் |
| நாமதேயம் | – | அநாமதேயம் | தைரியம் | – | அதைரியம் |
| நிசம் | – | அநிசம் | நித்தம் | – | அநித்தம் |
| நித்தியம் | – | அநித்தியம் | நியாயம் | – | அநியாயம் |
| நீதி | – | அநீதி | நிர்வசனம் | – | அநிர்வசனம் |
| பத்தியம் | – | அபத்தியம் | பக்குவம் | – | அபக்குவம் |
| பரபக்கம் | – | { அபரபக்கம்<br>சுபக்கம் | பரஞானம் | – | அபரஞானம் |
| பரிமிதம் | – | அபரிமிதம் | பரமுத்தி | – | அபரமுத்தி |
| பாவம் | – | அபாவம் | பாத்திரம் | – | அபாத்திரம் |
| பிரத்தியட்சம் | – | அப்பிரத்தியட்சம் | பிரசித்தம் | – | அப்பிரசித்தம் |
| பிரமேயம் | – | அப்பிரமேயம் | பிரமாணம் | – | அப்பிரமாணம் |
| பிரியம் | – | அப்பிரியம் | பிராமணன் | – | அப்பிராமணன் |
| பூர்வம் | – | அபூர்வம் | பின்னம் | – | அபின்னம் |
| பேதம் | – | அபேதம் | பூரணம் | – | அபூரணம் |
| மலன் | – | அமலன்,நிமலன் | மங்கலம் | – | அமங்கலம் |
| வியத்தம் | – | அவ்வியத்தம் | யோக்கியன் | – | அயோக்கியன் |
| வியாத்தி | – | { அவ்வியாத்தி<br>அதிவியாத்தி | வியயம் | – | அவ்வியயம் |





### 'அந்' பற்றி வரும் எதிர்ச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அங்கன் | – | அனங்கன் | அந்தம் | – | அனந்தம் |
| அன்னியம் | – | அனன்னியம் | அர்த்தம் | – | அனர்த்தம் |
| ஆகுலன் | – | அனாகுலன் | ஆசாரம் | – | அனாசாரம் |
| ஆதரவு | – | அனாதரவு | ஆதி | – | அனாதி |
| ஆயாசம் | – | அனாயாசம் | ஆவசிகம் | – | அனாவசிகம் |
| இச்சை | – | அனிச்சை | உத்தமன் | – | அனுத்தமன் |
| உசிதம் | – | அனுசிதம் | ஏகம் | – | அனேகம். |

### 'நி' பற்றி வரும் எதிர்ச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காயன் | – | நிகாயன் | சலன் | – | நிச்சலன் |
| சித்தம் | – | நிச்சித்தன் | சுவாசம் | – | நிச்சுவாசம் |
| சாரம் | – | நிசாரம் | சேடம் | – | நிச்சேடம் |
| களங்கம் | – | நிட்களங்கம் | காமியம் | – | நிட்காமியம் |
| தரிசனம் | – | நிதரிசனம் | மலன் | – | நிமலன். |

### 'நிர்' பற்றி வரும் எதிர்ச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆசை | – | நிராசை | ஆதாரம் | – | நிராதாரம் |
| ஆதரவு | – | நிராதரவு | கதி | – | நிர்க்கதி |
| குணம் | – | நிர்க்குணம் | சலம் | – | நிர்ச்சலம் |
| நாமன் | – | நிர்நாமன் | மலம் | – | நிர்மலம் |
| மூலம் | – | நிர்மூலம் | வசனம் | – | நிர்வசனம் |
| விக்கினம் | – | நிர்விக்கினம் | விகற்பம் | – | நிர்விகற்பம் |
| விசாரம் | – | நிர்விசாரம் | விவாதம் | – | நிர்விவாதம் |

### 'கு' பற்றி வரும் எதிர்ச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உருபி | – | குருபி | தர்க்கம் | – | குதர்க்கம் |
| மார்க்கம் | – | குமார்க்கம் | | | |

### 'வி' பற்றி வரும் எதிர்ச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலட்சணம் | – | விலட்சணம் | பக்கம் | – | விபக்கம் |
| மலன் | – | விமலன் | மார்க்கம் | – | விமார்க்கம் |
| யோகம் | – | வியோகம் | | | |

### 'அவ' பற்றி வரும் எதிர்ச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலட்சணம் | – | அவலட்சணம் | கதி | – | அவகதி |



RangaRakes tamilnavarasam.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கீர்த்தி | – | அவகீர்த்தி, அபகீர்த்தி | சகுனம் | | அவசகுனம், அபசகுனம் |
| மதித்தல் | – | அவமதித்தல் | மரணம் | – | அவமரணம் |
| மரியாதை | – | அவமரியாதை | மானம் | – | அவமானம் |
| மிருத்து | – | அவமிருத்து | யோகம் | – | அவயோகம் |

**பிறமுறை பற்றி வரும் எதிர்ச்சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அனுகூலம் | – | பிரதிகூலம் | அதிட்டம் | – | துரதிட்டம் |
| ஆதி | – | அந்தம் | ஆரோகணம் | – | அவரோகணம் |
| இலாபம் | – | நட்டம் | உபகாரம் | – | அபகாரம் |
| உபசாரம் | – | அபசாரம் | கிராமம் | – | நகரம் |
| சகளம் | – | நிட்களம் | சகுணம் | – | நிர்க்குணம் |
| சகுனம் | – | அபசகுனம் | சடம் | – | சித்து |
| சனனம் | – | மரணம் | | | |
| சவிகற்பம் | – | நிர்விகற்பம் | சிருட்டி | – | திதி, சங்காரம் |
| சுகம் | – | துக்கம், சுகவீனம் | சுபக்கம் | – | பரபக்கம் |
| சுமங்கலி | – | அமங்கலி | சூக்குமம் | – | தூலம் |
| தற்பவம் | – | தற்சமம் | தற்பிரகாசம் | – | பரப்பிரகாசம் |
| திரம் | – | சரம் | துதி | – | நிந்தை |
| நயம் | – | நட்டம் | நிவிருத்தி | – | பிரவிருத்தி |
| நீசம் | – | உச்சம் | வாதி | – | பிரதிவாதி |
| விவேகம் | – | அவிவிவேகம் | | | |

**வினா (1)** பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுங் கோடிட்ட இடங்களில் அடைப்புக்குட் கிடக்கும் எதிர்ச்சொற்களை இட்டு வாக்கியம் முடிக்க.

(i) இருப்பது ...............; போவது –: (மெய், பொய்)

(ii) ............... கைம்மண்ணளவு: – உலகளவு.

(கல்லாதது, கற்றது)

**விடை** (i) இருப்பது **பொய்**: போவது **மெய்.**

(ii) **கற்றது** கைம்மண்ணளவு: **கல்லாதது** உலகளவு.

**வினா (2)** மேல்வரும் பழமொழி ஒவ்வொன்றிலுங் கோடிட்ட இடங்களில் ஒன்றுக்கொன்று எதிரான சொற்களை இட்டு வாக்கியம் முடிக்க.

(i) குடந்தளும்பும்; – குடந்தளும்பாது.





(ii) வெல்லும்; – கொல்லும்.

**விடை** (i) **குறை**குடந் தளும்பும் : **நிறைகுடந்** தளும்பாது.

(ii) **சத்தியம்** வெல்லும்: **அசத்தியங்** கொல்லும்.

**விடை (3)** மேல்வரும் வாக்கியங்களிலுள்ள கோடிட்ட இடங்களிலே தக்க எதிர்ச்சொற் சோடிகளிட்டு வாக்கியம் முடிக்க.

(i) விட்டுணுவும் பிரமனும் இறைவனின் ............. தேடி அலைந்தனர்.

(ii) அத்தெருவிற்கு ............. பல உண்டு.

**விடை** (i) விட்டுணுவும் பிரமனும் இறைவனின் **அடிமுடி** தேடி அலைந்தனர்.

(ii) அத்தெருவிற்கு **ஏற்றவிறக்கம்** பல உண்டு.

**வினா (4)** 'அந்த யோகி **விகற்பம்** ஆன சமாதியைத் தாண்டினான்' என்னும் வாக்கியத்திலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொல்லுக்குப் பதிலாக எதிர்ச்சொல்லிட்டு வாக்கியப் பொருள் வேறுபடாத வாறு எழுதுக.

**விடை** அந்த யோகி **நிர்விகற்ப** சமாதியை அடைந்தான்.

## பயிற்சி 2

**1.** மேல்வருஞ் சொற்களிற் எதிர்ச் சொற்களைத் தந்து, அவ்வெதிர்ச் சொற்களின் பொருள் புலப்படுமாறு வாக்கியங்கள் எழுதுக:– இன்சொல், இடஞ்சுழி, உயர்வு, சிற்றறிவு, இருள், அன்பு, பேதம், ஆதி, ஏறுதல், தலைக்கூடல், தொகுத்தல், போற்றுதல், மதித்தல், வேண்டுதல்.

**2.** பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலுந் தடித்த எழுத்துக் களிலுள்ள சொற்றொடருக்குப் பதிலாக ஒவ்வொரு சொல்லிட்டு வாக்கியம் முடிக்க:–

(1) நீர் செய்த செயல் **ஆவசிகம்** அன்று.

(2) இறைவன் **களங்கம் இல்லாதவன்.**

(3) நீர் சொல்வது **நியாயமானது அன்று.**

(4) ஏழைகளின் மீது **ஆதரவு இல்லாமை** ஒருவனைக் கெடுக்கும்.

(5) அவ் விவேகி **இல்லறத்தான் அல்லன்.**

**3.** மேல்வரும் பழமொழிகளைப் பிழைநீக்கி எழுதுக:–

(1) ஒரு மெய்யை மறைக்க ஒன்பது மெய் சொல்ல வேண்டும்.



RangaRakes
tamilnavarasam.com

(2) இளமையிற் சோம்பல் முதுமையிற் செல்வம்.
(3) எல்லாருக்கும் இல்லை இலையும் பழுப்பும்.
(4) கேளுங் கிளையுங் கெட்டோர்க்கு உண்டு.
(5) தூரத்துப் பச்சை கண்ணுக்குச் சூடு.

4. பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுமுள்ள கோடிட்ட இடத்தில், அடைப்புக்குட் கிடக்கும் எதிர்ச்சொற்களுள்ளே தக்கதை இட்டு வாக்கியம் முடிக்க:

(1) அறிவிலார் சொல்லும் --- வார்த்தையைக் கல்விமான்கள் பொறுப்பர். (புகழ், நிந்தை)
(2) --- கேட்பவன் ஒருபோதும் உய்யமாட்டான். (நற்புத்தி, துர்ப்புத்தி)
(3) பெற்றாரை ஆதரிக்காதவன் --- புகுவதில்லை (சுவர்க்கம், நரகம்)
(4) கொடுக்கக் கொடுக்க --- பெருகும் (வறுமை, செல்வம்)
(5) --- நோக்கிப் பொருள் ஈதல் கூலிக்கு வேலை செய்தல் போலாகும். (வசை, இசை)
(6) --- முகமுள்ள குரங்கு ஒன்றாயினுங் காணக் கிடைக்காது. (கெட்ட, நல்ல)
(7) நல்லவரோடு சேர்ந்த --- நற்குணம் பெறுவர் (சிறியார், பெரியார்)
(8) மனத்தினது தூய்மை மக்களுக்கு --- தரும். (கேடு, ஆக்கம்)
(9) ஊன் உண்பவருக்கு --- ஆட்சி இல்லை (அருள், மருள்)
(10) பெரியார் செய்தற்கு --- செய்வார். ( எளியன, அரியன)

5. பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுங் கோடிட்ட இடங்களில் அடைப்புக்குட் கிடக்கும் எதிர்ச் சொற்களை இட்டு வாக்கியம் முடிக்க:–

(1) --- பெரியோர்: – இழிகுலத்தோர் (இடாதார், இட்டார்)
(2) --- அன்றி --- ஒருவரும் மகிழ்ச்சி அடையார். (வன்சொலால், இன்சொலால்)
(3) கற்றாரை --- விரும்புவர்; --- விரும்பார். (மேன்மக்கள், கீழ்மக்கள்)
(4) இளமையில் --- முதுமையில் --- பயன்படா. (செல்வமும்; வறுமையும்)





(5) தாமரை பகலில்--- இரவில் ---; (கூம்பும், விரியும்)
(6) பனிபெய்து குளம் ---; மழை பெய்தே ---(நிறையும், நிறையாது)
(7) --- ஒடுங்கிச் --- ஓங்குதல் அநியாயம் . (பெரியோர், சிறியோர்)
(8) ---அன்றி --- உதவார் ( யோக்கியர், அயோக்கியர்)
(9) சண்டைக்கு ---.; சபைக்கு --- ; (பிந்து, முந்து)
(10) நட்புத் திருவினை--- பகை திருவினை--- (அழிக்கும், ஆக்கும்)

6. மேல்வரும் பழமொழி ஒவ்வொன்றிலுங் கோடிட்ட இடங்களில் ஒன்றுக்கொன்று எதிரான சொற்களை இட்டு வாக்கியம் முடிக்க:–

(1) --- ஒரு காலஞ் --- ஒரு காலம்.
(2) --- ஆகும் --- போகும்.
(3) --- மாட்டுக்கு --- பச்சை.
(4) --- பழக்கம் --- சுபாவம்.
(5) --- காலம் வந்தாற் --- ஈசலுக்குச் சிறகு.
(6) --- சொன்னால் எருதுக்குக் கோபம் --- சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
(7) --- அருமை --- போனால் தெரியும்.
(8) --- சொல்லிக் கெட்டவனுமில்லை;--- சொல்லி வாழ்ந்தவனுமில்லை.

7. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள கோடிட்ட இடங்களிலே தக்க எதிர்ச்சொற் சோடிகள் இட்டு வாக்கியம் முடிக்க:–

(1) --- நடக்கையால் அறியலாம்.
(2) --- ஒருவழி நில்லா.
(3) ஊழால் வரும் --- தவிர்க்க வல்லவர் ஒருவரும் இல்லை.
(4) ஒரு நாட்டின் --- அந்நாட்டின் பொருளாதார நிலையைக் காட்டும்.
(5) வேடனைக் கண்டதும் அம்மான் --- எல்லாந் தாண்டி ஓடிற்று.
(6) எழுத்துக்களுக்கு --- என்னும் இருவடிவு உண்டு.
(7) ஒருவன் அடையும் --- அவன் முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினைகளைச் சார்ந்தன.
(8) ஞானிகள் எல்லாரையும் --- எனப் பாராது ஒப்ப நோக்குவர்.

8. தனிமொழிகளுட் சில ஒலிவேறுபாடு விளங்காதோர்க்கு மயக்கங் கொடுக்கும்; அவை ணகர னகரப் பேதச் சொற்களும், ரகர றகரப் பேதச் சொற்களும், லகர ழகர ளகரப் பேதச் சொற்களுமாம். அவற்றின் பொருள் வேறுபாடு வழக்குநோக்கி அறியப்படும்.



RangaRakes
tamilnavarasam.com

**பயிற்சி 3**

1. பின்வரும் ஒவ்வொரு சிறு பிரிவிலுமுள்ள கோடிட்ட இடங்களில் அடைப்புக்குட் கிடக்குஞ் சொற்களை இட்டு வாக்கியம் முடிக்க:-

## I. ணகர னகரப் பேதச் சொற்கள்

1. மேல்வாயானது – எனப்படும். – என்னும் பறவை இப் பூவுலகில் ஒருகாலம் இருந்ததெனக் கருதப்படுகின்றது **(அன்னம்; அண்ணம்)**

2. எனது – முற்கோபியாய் இருந்த போதிலும் என்னைப் பார்த்து, 'எனது அருமைத் தம்பீ, இங்கே வா' என அழைப்பான். எனது அண்ணன்– ஆயினும் அவன் ஏவல்வழி நிற்பேன். (**அண்ணன்; அன்னன்** – அத்தன்மையினையுடையான்).

3. கோள்களுள்ளே சந்திரனே எமக்கு – கோள், நீலத்தின்– என்பது நீலமல்லாத பிறநிறங்கள் எல்லாவற்றையுந் தழுவும். (**அண்மை**– சமீபம்; **அன்மை**).

4. கந்தனது மோவாயிற் கரிய – உண்டு. கொல்லன் (உலை– கக்குகின்றது. (**அணல்** – தாடி; **அனல்** – வெப்பம்)

5. அமரர் எல்லாந் தத்தம் – ஊர்ந்து தக்கன் வேள்விக்குச் சென்றனர். இராமரது வானர – கடல் தாண்டி இலங்கைமாநகர் அடைந்தது. (**அணிகம்** – வாகனம், அணிகலம்; **அனிகம்** – சேனை)

6. இராமரணையைக் கட்டுதற்கு – ஒன்றும் உதவி செய்தது.– அடித்து மரங்களை வீழ்த்தியது. (**அணிலம்** – அணில்; **அனிலம்** – காற்று)

7. வைகாசிக்குப்பின் வருவது – மாதம். – சலாகை தைக்க உதவும். (**ஆனி ; ஆணி** )

8. அரசனின் – மீறி நடப்போர் தண்டிக்கப்படுவர். விலங்குகளுட் பெரியது –(**ஆணை** – கட்டளை; **ஆனை**)

9. தன் சுற்றத்தோடு – கந்தன் வாழ்கின்றான். அச்செய்தியைக் கேட்ட தும் முருகன் – இரங்கினான். (**இணைந்து** – சேர்ந்து; **இனைந்து** – வருந்தி)

10. ஊன் – அருளைக் கெடுக்கும். பகைவரோடு பேச – பகைமை தீர்க்கும். (**உண்ணல் ; உன்னல்** – நினைத்தல், எழும்புதல், இழுத்தல்.)





11. பேடி நெஞ்சில் – இல்லாதவன். நீ – அங்குச் சென்றாய்? (**ஏண்** – வலிமை, எல்லை; **ஏன்.**)

12. வீரனுக்கு நெஞ்சில் – உண்டு. வேடன் – ஒன்றை அம்பு கொண்டு வீழ்த்தினான். (**ஏணம்** – நிலைபேறு; **ஏனம்** – பன்றி.)

13. – பெற்றிட இறைவன் எனக்கு அருள் புரிவான். இராமன் கானகஞ் செல்வதைக் கண்ட குடிகளுட் சிலர் கதற – குடிகள் விம்மி நின்றனர். (**ஏணை** – நிலை, புடைவைத்தொட்டில்; **ஏனை** – மற்றை.)

14. – அருச்சுனனுக்குத் தோழன் – வள்ளல்களுட் சிறந்தவன். (**கண்ணன் ; கன்னன்**)

15. வேடன் பறவைகளைப் பிடிப்பதற்கு – வைப்பான். அப்பெண்– பருவத் தினள். (**கண்ணி** – வலை, முடிப்புக்கயிறு, பூமாலை; **கன்னி** – குமரி.)

16. சினத்தை ஒரு – தானுங் காத்தல் அரிது. அச்சுமை – மிக்கது. (**கணம்; கனம்**)

17. நீர் அனுப்பிய – சொன்ன விளைவு யாதும் நடக்கவில்லை. மூடன் – விலக்கிக் காய்தின்பான். (**கணி** – சோதிடன் ; **கனி.**)

18. இராமன் விடுத்த – இராவணனது நெஞ்சிற் பாய்ந்தது. தன் வீடு – எரி உற்றதெனக் கதறினான். (**கணை** – அம்பு; **கனை** – செறிவு, மிகுதி.)

19. அவன் – பொருந்த முகமலர்ச்சி காட்டி நின்றான். தலைவி தோழிய ரோடு – பொழிலகத்து விளையாடச் சென்றாள். (**காண்** –காட்சி, அழகு; **கான்** – வாசனை, காடு, பூ.)

20. – இன்மையால் வீடு விலைக்குக் கொள்ள முடியாது நின்றான். – முழுவதும் மலர்மயமாய்க் கிடந்தது. (**காணம்** – பொருள், பொன்; **கானம்** – காடு)

21. நீர் அரசனை – இப்பொழுது தகாத காரியம். கோடை காலத்திலே தெருக்களிற் – வீசும். (**காணல்; கானல்** – வெப்பம், வாசனை, பேய்த்தேர், கடற்கரை.)



RangaRakes tamilnavarasam.com

22. அப்பெண் பொன்னாற் செய்த – ஒன்றில் உணவிட்டுத் தன் மகவிற்கு ஊட்டினாள். இன்பம் யாதுமின்றி – உற்றவனைக் கைவிடேல். (**கிண்ணம்**; **கின்னம்** – துன்பம்.)

23. அப்பொருளை எவ்வாறு அடையலாமென நின்றாள். – அன்பர் என்பூடுருக இறைவன் – நின்றான். (**குணித்து** – ஆலோசித்து, கணித்து; **குனித்து** – ஆடி, வளைத்து.)

24. அணுவினை நூறு கூறிட்டு ஒரு – செய்தாலும், அதன் கண்ணும் இறைவன் உளன். முறை செய்யுங் – இல்லாக்குடி பாழ். (**கோண்** – நுண்பகுதி, கோணம்; **கோன்** – அரசன்.)

25. அக்களி விழாவிற்கு வந்த மக்களின் மீது விழாச்செய்தோர் – தூவினர். அவர்கள் – சேர்ந்த சாந்து கொண்டு சுவர் கட்டுகிறார்கள். (**சுண்ணம்** – வாசனைப்பொடி; **சுன்னம்** – சுண்ணாம்பு, சுழி.)

26. – அழிந்து நிற்பவன் மக்களுட் பதரெனப்படுவான். மலைச் சாரலிற்– ஒன்றுகண்டு அதனிடத்து நீர் பருகச் சென்றேன். (**சுணை** – சுரணை; **சுனை** – மலையூற்று, நீர்நிலை.)

27. புகையிலையின் – தின்னற்கு உதவாது. மழை – படப் பெய்தது. (**சோணை** – காம்பினடி; **சோனை** – விடாமழை.)

28. நீரிலே – உண்டு. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு – உண்டு. (**தண்மை**; **தன்மை**.)

29. அவன் சுற்றமெல்லாம் இழந்து – நிற்கின்றான். வைத்தியர் நோய்க்காரணம் நாடி அதற்குத்தக்க மருந்து கொடுத்துத் – நிற்பர். (**தணித்து**; **தனித்து**.)

30. – இல்லாத நெஞ்சுடையான் கோழை எனப்படுவன். தவஞ் செய்வோனது – எல்லாஞ் சிதைந்து தேயும். (**திண்மை** – வலிமை, உறுதி; **தின்மை** – தீமை.)

31. ஒரு சொல்லினது பாலறிதற்கு முன்னர் – அறிதல் வேண்டும். – சோறு உண்டமையால், வயிறு குத்திற்று என்றான். (**திணை**; **தினை**.)

32. அவன் பனந் – ஒன்றைத் தோளிற் சுமக்கின்றான். தலைவி தன்மீது – கொண்டாளெனத் தலைவன் உணர்ந்தான். (**துணி** – துண்டம்; **துனி** – வெறுப்பு.)





33. – சிலர் இறைவனைப் புகழார். – மதுரையைத் தந் தலை நகராகக் கொண்டனர். (**தெண்ணர்** – அறிவிலிகள்; **தென்னர்** – தெற்கு, பாண்டியவரசர்.)

34. ஞானிகளுக்கு – இல்லை. அவ்விரு கோல்களையும் – கொண்டு இணைத்தான். (**நண்ணார்** – பகைவர்; **நன்னார்** – நல்லநார்.)

35. – ஆற்றாது நயமில்லாதன செய்தாரையும் அறிவுடையோர் பகையார். ஒருவன் பிறவுயிர்களுக்குச் செய்யும் – நற்பிறப்புக் கொடுக்கும். (**நண்பு**; **நன்பு** – நன்மை.)

36. மதயானை கட்டிய இடத்திற்கு – நிற்றல் அபாயத்திற்கு இடமாகும். தன்மகன் இறந்த செய்தியைக் கேட்டதும் – வருந்தினான். (**நணி** – சமீபம் ; **நனி** – மிகுதியாய்.)

37. அவ்வில்லிற் பூட்டிய – ஒடிந்தது. நேற்று – அவ்வூருக்குப் போனேன். (**நாண்** ; **நான்**.)

38. அக்கன்னி இளைஞன் ஒருவனைக் கண்டதும் – எய்தி நின்றாள். அப்பெண்ணின் கூந்தலிலே – கமழ்கின்றது. (**நாணம்**; **நானம்** – வாசனைப் பண்டம்)

39. – அரிசி பிட்டுக்கு உதவும். – ஆயுதம் குழந்தையின் கையில் இருத்தல் ஆகாது. (**நுணித்த** – பொடியாக்கிய; **நுனித்த** – கூராக்கிய.)

40. பாடகன் ஒருவன் – அமைந்த பாடல் பாடினான். – கொண்டு நூற்ற நூலால் இவ்வாடை நெய்யப்பட்டது. (**பண்** – இசை; **பன்** – பருத்தி.)

41. – மிக்க நாட்டிற்கு நெல் பற்றிக் குறை இல்லை. அவன்– செடி அருகிற் பதுங்கி நின்றான். (**பண்ணை** – வயல், மகளிர் விளையாட்டு; **பன்னை** – தறி, ஒருசெடிவிசேடம்.)

42. என்கடன் அடியார்க்கு – செய்து கிடப்பதே. அது – படுகின்ற நெடுமலை. (**பணி**; **பனி**.)

43. அச்சேகவன் – இன்றியுந் தன் கடமை செய்வான். காவலரைக் கண்ட கள்வர் – உற்றனர். (**பணிப்பு** – ஏவல்; **பனிப்பு** – நடுக்கம்)



RangaRakes

tamilnavarasam.com

44. அவன் அக்குற்றியைத் தனது பெரிய – தோளின் மீது வைத்துக் காவினான். – மரம் வீடு கட்டுவதற்கு உதவும். (**பனை; பணை** – மூங்கில்; பெருமை)

45. கன்னன் விடுத்த – அருச்சுனனைத் தாக்கவில்லை. விசர் நாயாற் கடிக்கப்பட்டவன் சல – செய்தல் ஆகாது. (**பாணம்** – அம்பு; **பானம்** – பருகும் உணவு.)

46. அறிவு என்னும் – கொண்டு சமுசாரக் கடலைக் கடக்கலாம். கொலைக் குற்றத்தால் அவன் கையிற் – பூட்டப்பட்டு நிற்கின்றான். (**புணை** – தெப்பம்; **புனை** – பொலிவு , அழகு , விலங்கு.)

47. – மரந் துலாச் செய்தற்கு உதவும். விலங்குகளுட் பெரியது- (**பெண்ணை** – பனை; **பென்னை** – யானை.)

48. துலாப் போடுதற்கு – மரம் வேண்டும் – கடி பொறுக்காதோர் தலை சொறிவர். (**பேண்; பேன்.**)

49. குயவர் – கொண்டு பானை வனைவர். – இழந்த பெண் விதவை எனப்படுவள். (**மண்; மன்** – அரசன் , தலைவன், கணவன்.)

50. – விண்ணவர்க்கு ஆவுதி கொடுப்பர். – தங்குடிகளை முறை செய்து காப்பாற்றுவர். (**மண்ணவர் ; மன்னவர்.**)

51. கந்தன் அக் குளத்திலே – வழக்கம். மன்னர்க்கு – செங்கோன்மை. (**மண்ணுதல்** – நீராடுதல் ; **மன்னுதல்** – நிலைபெறுதல்.)

52. அந்த யானையின் கோடு – ஆய் இருக்கின்றது. – புண்பட்டு இருக்கின்றமையால், ஊண் செல்லாது வருந்துகின்றான். (**மண்ணை** – கூர்மழுக்கம்; **மன்னை** – தொண்டை)

53. இப் பூவிலே – கமழ்கின்றது. தீயோர் – போன போக்கெல்லாம் போவர். (**மனம்; மணம்**)

54. கமலம் – கொண்டு தேங்காய் துருவுகின்றாள். தனக்கென ஒரு – இல்லாதவன் பிறரால் இகழப்படுவன். (**மணை** – தேங்காய் துருவும் அலகு, பலகை, மழுங்கலாயுதம் ; **மனை** – வீடு)

55. தலைவன் ஒப்பிலாத தனது தலைவியின் – எழிலைத் துய்த்து நின்றான். அரசன் காட்டினுட்சென்று – வேட்டை ஆடினான். (**மாண்** – மாட்சிமை; **மான்.**)





56. தன்னுடைய ஆசிரியரைப் பேணாத – கற்குங் கல்வி பயன் படாது. – மந்திரச்சுற்றமுடையவன். (**மாணவன்; மானவன்** – மனிதன், அரசன்.)

57. திருமால் உலகினை – ஆய்நின்று அளந்தான். – ஒருபோதும் பிறர் இழிக்கத்தக்க செயல்களைச் செய்யான். (**மாணி** – பிரமசாரி, குறள் வடிவம்; **மானி** – கௌரவ முள்ளவன்.)

58. விருப்பம் இல்லாவிட்டாலும் – இல்லாத கொடையே விரும்பத் தக்கது. அவ்வீரன் போர் – புகுந்து உற்றார் உறவினரெனப் பாராது கடும்போர் புரிந்தான். (**முணை** – வெறுப்பு; **முனை** – போர், போர்க்களம், நுனி.)

59. அவ்வீரனது கை – மெச்சத்தக்கது. – மொழிக்கு உறுப்பாகும். (**வண்ணம்** – நிறம், சிறப்பு, அழகு; **வன்னம்** – நிறம், எழுத்து.)

60. – இல்லா மக்கள் வள்ளல்கள் ஆகார். பெரியோர் தமக்குத் துன்பஞ் செய்தார் மாட்டும் – பேசார். (**வண்மை** – ஈகை; **வன்மை.**)

61. அருச்சுனன் விடுத்த பாணம் புகையொடு – கக்கிக் கொண்டு சென்றது. அம்மரம் – அளாவி நிற்கின்றது. (**வாணம்** – தீ, ஆகாச வாணம் முதலியன ; **வானம்** – ஆகாயம், மேகம்.)

62. பிரமாவினது தேவி – எனப்படுவாள். மழை பெய்த பின் – ஒன்று அம்மரத்தின் மீது நெருப்பெழ விழுந்தது. (**வாணி** – சொல், கல்வி, சரசுவதி ; **வானி** – மேற்கட்டி, காற்றாடி, இடிக்கொடி.)

## II. ரகர றகரப் பேதச் சொற்கள்

1. அவன் அப்பலகையை – கொண்டு தேய்த்து அழுத்தமாக்கினான். – செய்தான் சுவர்க்கம் புகுவான். (**அரம்** – அராவுங் கருவி; **அறம்** – புண்ணியம்.)

2. தேவதாசன் – தீண்டி இறந்தான். இலங்கையிலே நீர் – இல்லாத ஆறுகள் பல உண்டு. (**அரவு** – பாம்பு; **அறவு** – ஒழிவு.)

3. முருகக்கடவுளை – மகனெனக் கூறுவர். – இல்லாதவனுக்குச் சுவர்க்கம் இல்லை. (**அரன்** – சிவன்; **அறன்** – தருமம்.)

4. மாங்காய் – தின்றான். எங்கடமை இன்னதென – செய்தலே நன்மை பயக்கும். (**அரிந்து; அறிந்து.**)



RangaRakes

tamilnavarasam.com

5. இவ்வாற்று நீரின் – இம் மரவீழ்ச்சிக்குக் காரணமெனலாம். எஞ் சங்கத்தின் மூன்றாம் வருடத்தின் – பத்திரம் நேற்று வாசிக்கப்பட்டது. (**அரிக்கை; அறிக்கை** – அறிவிப்பு.1)

6. – ஒருத்தி அவ்வீரனைக் காதலிக்கின்றாள். அத்துறவி – முதிர்ந்தவன். (**அரிவை** – பெண் ; **அறிவை** – ஞானம்.)

7. வண்டு நறுமலரின் – உடைக்கும். – தின்னும் ஆடு மிக்க பால் கொடுக்கும். (**அருகு ; அறுகு.**)

8. எட்டின் – பங்கு நாலாம். எனது வீட்டிற் பெரிய – ஒன்று உண்டு. (**அரை; அறை.**)

9. எம் முன்னோர் நகரங்களைச் சுற்றி – கட்டுவர். – அடைந்த கஞ்சி பழங்கஞ்சி. (**ஆரல்** – மீன்வகை, மதில்; **ஆறல்.**)

10. எமது அரசன் – இல்லாத வன்கணாளன். இத்தெருவில் ஒவ்வோர் ஏற்றத்திற்கும் ஒவ்வோர் – உண்டு. (**இரக்கம்; இறக்கம்.**)

11. கழிந்ததற்கு – மனவுறுதியைக் கெடுக்கும். ஆழமறியா நீர் நிலையினுள் – விபத்திற்கு இடமாகும். (**இரங்கல்; இறங்கல்.**)

12. – உண்டு வாழ்வது இகழ்ச்சியைத் தரும். தீமை செய்வோர் பிறந்து – உழலுவர். (**இரந்து ; இறந்து.**)

13. அரிச்சந்திரன் – குலத்துதித்த மன்னன். ஞானி – பிறவிகளைக் கடந்தவன். (**இரவி** – சூரியன்; **இறவி** – சாவு.)

14. அமாவாசை – இருட்டி இருக்கும். வலைஞர் வலைவீசி – பிடிப்பர். (**இரவு; இறவு** – இறால்.)

15. சென்ற இடத்தில் – துறவிகளினுடைய தொழில். கல்லாது – மூடர் செய்வது. (**இருத்தல்; இறுத்தல்** – விடைகூறல், தங்குதல் உடைத்தல்.)

16. முருகன் இருந்த – காலொடிந்தது. அவன் ஒவ்வொரு நாளும் ஆயிரம் – தண்டினான். (**இருப்பு**; – ஆசனம்; **இறுப்பு** – குடியிறை கடன் செலுத்துகை.)





17. கொல்லர் – கொண்டு கத்தி செய்வர். – புகுந்து முயல் வேட்டை ஆடலாம். (**இரும்பு; இறுப்பு** – தூறு, குறுங்காடு.)

18. இலை குழைகள் ஆட்டிற்கு – ஆகும். – கொடுக்காத குடிகள் அரசனாலே தண்டிக்கப்படுவர். (**இரை; இறை** – அரசிறை, கை, ஆசனம்.)

19. – பாம்பினை அடித்துக் கொன்றான். நெல்லுக்கு – நீர் புல்லுக்கும் பயன் அளித்தது. (**இறைத்த, இரைத்த.**)

20. எனது நண்பன் – வலியால் வருந்துகின்றான். எனது நெஞ்சுபடும் – ஆற்ற முடியாதது. (**ஈரல்; ஈறல்** – துக்கம்.)

21. காற்று – கப்பலோட்டிகளுக்குப் பயத்தைக் கொடுக்கும். வல் லோட்டுப் பழங்களை நகத்தால் – அந்நகத்திற்கே தீங்கு தரும். (**உரத்தல்** – கெட்டியாதல், பலத்தல்; **உறத்தல்** – கிள்ளி யெடுத்தல், பிளத்தல்.)

22. உலக்கை கொண்டு நெல்லுக்குற்ற – உதவும். துன்பம் – மக்களின் இயல்பு. (**உரல்; உறல்** – அடைகை , பரிசம்.)

23. எடுத்த கருமத்தை முடித்தற்கு – வேண்டும். துறவு பூண்டவனுக்கு – இல்லை. (**உரவு** – வலிமை, மனோபலம்; **உறவு.**)

24. மேகம் நெடுங்கடலிலிருந்து நீர்முகந்து – நின்றது. நாட்பட்ட காய்ச்சல் காரணமாக அவன் – கிடக்கின்றான். (**உராவி** – பரந்து; **உறாவி** – சோர்ந்து.)

25. இராமன் மர – உடுத்துக் கானகஞ் சென்றான். கண்ணன் – வெண்ணெய் திருடி உண்பான். ) **உரி** – தோல், பட்டை; **உறி.**)

26. மரங்கள் ஒன்றோடு ஒன்று – நின்றன. மழை நீரைப்பூமி – நின்றது. (**உரிஞ்சி** – உராய்ந்து, பூசி ; **உறிஞ்சி** – உள்ளிழுத்து)

27. – இல்லாக் கன்னியை ஒருவரும் விரும்பார். – வளிவீசி அப்பலாக் கொம்பை முறித்தது. (**உரு** – படிவு, வடிவழகு, அச்சம்; **உறு** – மிகுதியான.)



RangaRakes

tamilnavarasam.com

28. பொன்னைத் தீயில் வைத்து – முயன்றான். மாணாக்கரை ஆசிரியர் – அவர் ஏக்கங்கொண்டனர். (**உருக்க; உறுக்க.**)

29. முன்னை வினைவந்து – ஒழியாதென அரற்றினான். தனது தோழனுக்குத் துயர் – அற்புச் செயலாகாது. (**உருத்தல்** – தோன்றுதல், மிகுதல்; **உறுத்தல்** – மிகுக்கை.)

30. கல்லின்மீது – அற்றுப்போகுமாறு மிக்க மழை பெய்தது. இல்லாத பிண்டம் ஒன்றைப் பெற்றெடுத்தாள். (**உருப்பு** – வெப்பம், கொடுமை; **உறுப்பு** – அவயவம், அங்க லட்சணம்.)

31. மேகம் – கேட்டுக் குழந்தைகள் வீரிட்டு அழுகின்றன. பன்றி வயலில் – கேட்டுக் கமக்காரன் அவ்வோசை பிறந்த திசை பற்றித் துப்பாக்கியொடு சென்றான். (**உருமுதல் ; உறுமுதல்.**)

32. திருக்குறளுக்குப் பலர் – செய்தனர். அவ்வாளின் – ஒடிந்துவிட்டது. (**உரை; உறை.**)

33. தட்டார் பொன்னின் மாற்றறிய உரை கல்லில் அதனை – பார்ப்பர். மழைநீர் உப்பு – நிற்குமாகையாற் பருகற்கு உதவாது. (**உரைத்து; உறைத்து.**)

34. எறும்பு – கல்லுந்தேயும். – வைத்து அவித்து உண்பதற்குக் கடலை தகும். (**ஊர; ஊற.**)

35. – கறி தின்று அசீரண நோயால் வருந்துகிறான். சிறிய – குடிக்கும் நீருமாகிவிடும். (**ஊரல்** – கிளிஞ்சில். **ஊறல்** – நீரூற்று.)

36. அவன் – நெருப்பிற்கு விறகு இடுகின்றான். காலால் – பசுவைக் கால்கட்டிப் பால் கறத்தல் வழக்கம் (**எரியும்; எறியும்.**)

37. வீட்டில் – விளக்கு அணைந்து விட்டது. நாட்டிற்கு –நிலா காட்டிற்கும் ஆகும். (**எரிந்த; எறித்த.**)

38. கள்ளர் பகலிற் – உறைவர். ஆவின் பாலைக் – காய்ச்சிப் – பருகுவர். (**கரந்து** – மறைந்து; **கறந்து.**)

39. அடுப்பில் எரிந்த விறகு நீறாதாயின் – எனப்படும். யான் அச்செயல் செய்தமைக்கு அவனே – விநாயகக்கடவுள் – முகம் உள்ளவர். மரக் – தின்னுவதற்கு உதவும். (**கரி** – அடுப்புக்கரி, யானை, சான்று; **கறி.**)





40. உப்புக் – கறி இதய நோயுற்றாருக்கு ஆகாது. ஆடு – முளை வளராது. (**கரிக்கும்** – உப்புச் சுவை மிகும், கரியாகும்; **கறிக்கும்** – கடித்துத்தின்னும்.)

41. மகளிர் – சிதைத்தோர்க்கு உய்வு இல்லை. அவன் குற்றஞ் செய்யாத என்மீது – கொண்டிருக்கின்றான். (**கரு** – கருப்பம்; **கறு** – மன வைரம்.)

42. அவன் பழம் விலக்கிக் – கடிப்பான். கந்தன் இளநீர் பருகிவிட்டுக் – தின்பான். (**கருக்காய்** – பிஞ்சு; **கறுக்காய்** – இளநீர்க் கண்பக்கக் கயர்.)

43. அந்நாடு மழையின்மை பற்றி – உற்றது. அவ்வாடையினது நிறங் – (**கருப்பு** – பஞ்சம் ; **கறுப்பு.**)

44. தனக்கு நிகர் இல்லை எனக் – கொள்ளுபவன் இடுக்கண் உறுவான். யான் ஒரு குற்றமுஞ் செய்திலேனாயினும் அவன் என்மீது – கொண்டான். (**கருவம்** – செருக்கு ; **கறுவம்** – வெகுளி.)

45. கல்விக்குக் – இல்லை. பற்களிற் – ஏறும். (**கரை ; கறை** – மாசு.)

46. இக்காட்டிற் – செடிகள் செறிந்திருக்கின்றன. அப் பெண்மணி கழுத்திற் – அணிந்திருக்கின்றாள். (**காரை ; காறை** – கழுத்தணி வகை.)

47. அக் – பனிப்படலத்தாலே மூடப்பட்டிருக்கின்றது. ஒருவன்– செய்த ஆற்றைக்கேள். (**கிரி** – பன்றி, மலை; **கிறி** – மாயம், பொய்.)

48. இக்காடு – பயில்கின்ற மரங்கள் கொண்டது. வீமன் அடித்த அடியினாலே துரியோதனன் – முறிந்து வீழ்ந்தான். (**குரங்கு; குறங்கு** – தொடை)

49. குதிரை ஒற்றை – உடையவிலங்கு, குறத்தி சொல்லுங் – கேட்டு அஞ்சாதீர். (**குரம்** – குதிரைக் குளம்பு; குறம் – குறத்தி சொல்லுங் குறி.)

50. குறிஞ்சிநிலமகன் – எனப்படுவான். நன்மாணாக்கன் – சொல்வழி ஒழுகுவன். (**குரவன்** – ஆசிரியன், தந்தை; **குறவன்.**)

51. திருவள்ளுவர் – வெண்பாவிலே தந்நூலை இயற்றினார். தன் சேவலின் – கேளாது அன்றிற்பெடை மயங்கிற்று. (**குரல்; குறள்**)



RangaRakes
tamilnavarasam.com

52. – முளைக்கும் இடத்தில் எருக்கு முளையாதா? இதன் – முப்பத்தாறு அங்குலம். (**குருக்கு** – பிரமதண்டுச்செடி; **குறுக்கு.**)

53. அந்நாடாக் குளிர்ச்சி உற்றுக் – கிடந்தது. அவன் மேனி முழுவதும் வேர்க்குரு – நின்றன. (**குருத்து** – தோன்றி, கோபங்கொண்டு; **குறுத்து.**)

54. கறையான் புற்றிற் – காணப்படும். அவன் காதிற்குட் – உண்டு. (**குரும்பி** – புற்றாஞ்சோறு ; **குறும்பி** – காதுள் அழுக்கு முதலியன.)

55. இறைவன் – ஆயும் நெடுமையாயும் இருப்பன். தன்மகன் சான்றோனெனக் கேட்டதாய் – எய்தினான் (**குருமை** – பெருமை, நிறம்; **குறுமை.**)

56. – புனல் உறுநுரைதரும். கன்னன் இரப்போர் – தீர்க்கும் வள்ளல். (**குரை** – ஒலி; **குறை.**)

57. அவன் செலவைக் – எண்ணினான். அப்பெருமாட்டி தனது நாயைக் – செய்தாள். (**குறைக்க** ; **குரைக்க.**)

58. மணமகள் – அரையிற் சுற்றி மணவறையினுட் புகுந்தாள். அவனுக்கு வாழ்க்கை நடத்துதற்கு ஒரு – ஆயினும் இல்லை. (**கூரை, கூறை**)

59. அவன் பற்கள் – பட்டன. – தின்னும் மாடு கொழுப்புக் கெடும். (**கோரை; கோறை.**)

60. அங்கு திருடிய கள்ளர் – செய்யப்பட்டனர். அவன் – சுளுக்கால் வருந்துகின்றான். (**சிரை** – நரம்பு; **சிறை.**)

61. கணவனை இழந்த பெண் ஒருத்தி தலை – நிற்கின்றான். உழவர் தந் தேவைக்காக நீர் – வைப்பர். (**சிரைத்து; சிறைத்து.**)

62. கந்தன் – குடித்து வெறி கொண்டான். – கறி அசீரணத்தைக் கொடுக்கும். (**சுரா** – கள் ; **சுறா.**)

63. வேடர் – இட்டுப் புறாப்பிடிப்பர். அவன் ஓடிய – போற்றத்தக்கது. (**சுருக்கு** – கண்ணி, குழைச்சு; **சுறுக்கு** – விரைவு.)

64. அவ்வீட்டினுட் கொள்ளைக்காரர் பலர் புகுந்து – அடித்தனர். – செடி துலாக்கொடி செய்தற்கு உதவும். ( **சூரை; சூறை** – கொள்ளை, சுழல் காற்று.)





65. – உணவு நோய் தராது. தாழ் – காப்பிலே தன் பணம் முழுவதையும் வைத்திருக்கின்றான். (**செரித்த** – சீரணமான; **செறித்த** – அடைந்த.)

66. பாண்டியன் சேனை – களம் உற்றது. உழவர் – உழுது நெல் விதைப்பர். (**செரு** – ஊடல், போர்; **செறு** – வயல், கோபம்.)

67. உயிர்ச் – பாவந்தரும். காலில் இட்ட – கழற்றாமல் இல்லம் புகுந்தான். (**செருப்பு** ; **செறுப்பு** – கொலை, கட்டுப்பாடு.)

68. இரப்போர் ஈவோரை நாடிச் – இயல்பு, இனம் இனத்தைச் – வியப்பன்று. (**சேரல்; சேறல்** – செல்லுதல்.)

69. தினவு தீர்க்கச் சிரங்கு – மனிதர் இயல்பு. மாரி காலத்திலே மழை – வியப்பன்று. (**சொரிதல்; சொறிதல்.**)

70. – மரம் முளையாது. – கருச் சிதையினுஞ் சிதையும். (**தரித்த; தறித்த.**)

71. – கொண்டு சிலை அமைத்தான். இடையன் எருதுகளை – கொண்டு செலுத்தினான். (**தாரு** – மரம்; **தாறு** – முட்கோல், வாழைக் குலை.)

72. இவ்வரசன் அறத்தோடு புணர்ந்த – அறிந்து செங்கோல் ஓச்சுகின்றான் – இல்லாத புத்தியை உடையவர் கோழைகள் எனப்படுவர். (**திரம்** – உறுதி; **திறம்** – வழி, சார்பு, வேடம், கற்பு.)

73. கடற்கரையிலே நின்றவனைத் – ஈர்த்துச் செல்கின்றது. கொடுக்காத சிற்றரசர்கள் பேரரசனின் கோபத்திற்கு ஆளாவர். (**திரை; திறை** – கப்பம்.)

74. இறைவன் அடியார்களின் இருளைத் – அருள் சுரந்து நிற்பான். துறவிகள் இல்வாழ்க்கையைத் – நிற்பர். (**துரந்து** – போக்கி, ஓட்டி; **துறந்து.**)

75. அந்நாட்டிலே – குடி ஊர்கள் உண்டு. அக் கத்தியிலே – பிடித்திருக்கின்றது. (**துரு** – களிம்பு, குற்றம், செம்மறியாடு; **துறு** – நெருக்கம்.)

76. தேங்காய்த் – கறிக்கு உதவும். ஒருவரோடு ஒருவர் – மூச்சுத் திணறுதற்கு இடமாகும். (**துருவல்** – தேடுகை, தேங்காய்த் துருவல்; **துறுவல்** – நெருங்குதல்.)



RangaRakes
tamilnavarasam.com

77. இன்று பெய்தது பெருமழையன்றித் – ஆகும். அந்நோயாற் படுந் – பொறுக்குந் தரத்தன்று. (**தூரல்** – நிறைமை, துன்பம்; **தூறல்** – சிறுமழை.)

78. நிலத்தில் எறியத் – பந்தைப் பிடித்தான். – கணையாலே மான் எய்து வீழ்த்தினான். (**தெரித்த** – தேர்ந்தெடுத்த, வெளிப்படுத்திய; **தெறித்த.**)

79. அவன் கழுத்தில் அணிந்திருப்பது நறுமலர்த் – கண்ணீர்த் – அவளது துன்பத்தைக் காட்டுகின்றது. (**தெரியல்** – பூமாலை, தெரிந்து கொள்ளல்; **தெறியல்** – சிதறல்.)

80. புலியைக் கண்டு – உற்று நின்றான். போக்கு வரவிற்கு வேண்டிய – இல்லாத ஊர் இல்லை. (**தெரு**; **தெறு** – கோபம், அச்சம்)

81. நூல்களைத் – செய்து கற்பவனே அறிவாளி. மலர்த் – மாந்திய கடுவன் வெறிகொண்டது. (**தேரல்** – தெரிந்தெடுத்தல்; **தேறல்** – தெளிவு, கள், தேன்.)

82. பாரவண்டி கற்களைப் பொடிப் பொடியாக – வல்லது. கத்திரி கையினால் அக் கோலைத் துண்டுதுண்டாக – முயன்றான். (**நருக்க** – நொறுக்க, துண்டாக்க; **நறுக்க** – துண்டிக்க.)

83. அப் பெண்மணி அரிய கலத்திலே – இட்டுத் தாளித்தாள்.– வரும் என்றெண்ணித் தசரதன் இல் வாழ்க்கையைத் துறக்க எண்ணினான். (**நரை**; **நறை** – தேன்கள், வாசனைப்பண்டம்.)

84. கங்கை பரந்து – வயலழிவுக்கு அறிகுறி, காய் – பழமாதற்கு அறிகுறி. (**நிரத்தல்** – நிரம்புதல்; **நிறத்தல்.**)

85. ஒரு பொருளினது – அதனுடைய திணிவைச் சார்ந்துளது.– மனையிற் கைநீட்டி வாழ்வது கெட்ட வாழ்க்கையாகும். ( **நிரை**; **நிறை.**)

86. அவன் அக்கனியை – சாறாக்கினான். கோபத்தாற் புருவம் – நின்றனர். (**நெரிந்து** – நொறுக்கி; **நெறிந்து** – புருவம் வளைத்து.)

87. வெள்ளம் பள்ளத்தை நாடிப் – நிற்கும். பட்சிகள் – செல்லும். (**பரந்து**; **பறந்து.**)





88. பறக்கும் பிராணி – எனப்படும். – சூழ்ந்த நாடு தீவு எனப்படும். (**பரவை** – கடல் ; **பறவை.**)

89. அவன் – ஊர்ந்து செல்கின்றான். வலைஞன் வலையோடு – கொண்டு செல்கின்றான். (**பரி** –குதிரை; **பறி.**)

90. அவன் என்மீது – உணவு அளித்தான். அம் மரங் காற்றினால் வேர் – வீழ்ந்தது. (**பரிந்து** – இரங்கி, பற்றுவைத்து; **பறிந்து** – இடம்பெயர்ந்து, அறுந்து.)

91. அரசன் குடிகளைப் – நிற்பன். மரத்தினின்று பழம் – தின்னலாம். (**பரித்து** – அறுத்து, பாதுகாத்து; **பறித்து.**)

92. தோட்டக்காரர் நிலத்தைப் – கொண்டு கிண்டிப் பண்படுத்துவர். பூமியிலுள்ள கருங்கல்லினது திரள் – எனப்படும். (**பாரை**; **பாறை.**)

93. பாலின்கட் – இட்டால், அது தயிராகும். – தொழுதும் மேற்கதி பெறலாம். (**பிரை** – உறைமோர், பயன் ; **பிறை** – இளமதி.)

94. வீட்டின்பின் – முழுவதும் மரத்தாற் செறிவுற்று இருந்தது. மதுரை என்னும் – பாண்டியராற் கொள்ளப்பட்ட தலைநகரம். (**புரம்** – நகரம்; **புறம்.**)

95. விறகுவெட்டிகள் – சென்று விறகு தறிப்பர். அரசனின் – குடிகளைக் க்கவலையின்றி இருக்குமாறு செய்தது. (**புரவு** – கொடை, பாதுகாப்பு; **புறவு** – சிறுகாடு)

96. அவன் – கறியோடு சோற்றை உண்டான். கொல்லன் உலையிற் – பறக்கின்றது. (**பொரி** ; **பொறி.**)

97. அவன் இலாஞ்சனை – ஏட்டைப் பிரித்து வாசித்தான். நெய்யிட்டுப் – முட்டை சுவைக்கு மென்பர். (**பொரித்த**; **பொறித்த.**)

98. தீயின்கண் இட்டமீன் – கரியாயிற்று. அச்சுவர் மீண்டும் – வீழ்ந்தது. (**பொரிந்து** ; **பொறிந்து** – பறிந்து.)

99. அந்தப் – பல அருவிகளின் பிறப்பிடமாம். தன் – உணராமல் வாழும் மகன் மகனெனப்படான். (**பொருப்பு** – மலை ; **பொறுப்பு.**)

100. – செய்யாது அறஞ் செய்பவரே இவ்வுலகிலே நன்மதிப்புப் பெறுவர். வற்றிய – தளிர்க்காது. (**மரம்**; **மறம்** – பாவம், வீரம், பகை, வெற்றி.)



RangaRakes
tamilnavarasam.com

101. பிறந்தவர் எல்லாம் – சகசம், பசித்தோனை உண்ணாவகை – பாவந்தரும். (**மரித்தல்** – சாதல்; **மறித்தல்**)

102. அவன் – ஆர்ந்த கொன்றைமாலை சூடினன். அவன் – இல்லாக் குலத்திற் பிறந்தவன். (**மரு** – வாசனை; **மறு** – குற்றம்.)

103. தக்கன் சிவனை – என்று அவமதித்தான். தான் இழந்த கடிகாரத் தைத்தேடி முன்சென்ற –எல்லாந் திரிந்து அலைந்தான். (**மருகு** – மருகன், காட்டு மல்லிகை; **மறுகு** –தெரு.)

104. அவன் அவ்வுரைக்கு – எழுதினான். – உடைய விலங்குகளுக்கு அணித்தாய் நிற்றல் அபாயந்தரலாம் (**மருப்பு** – விலங்கின் கொம்பு; **மறுப்பு** – கண்டனம்.)

105. – என்னும் விலங்கு மானினத்தைச் சேர்ந்தது – காக்காதவனுக்கு நண்பர் இல்லை (**மரை; மறை** – இரகசியம், வேதம்.)

106. நான் கொடுத்த தினைக்குப்பதிலாக – தந்த நெல் இதுவாகும். – பொய்த்தாலும் இவ்வள்ளல் கொடையிலே தீரான். (**மாரி**; **மாறி** – பண்டமாற்றுவோன்.)

107. அவளது மேனி – போன்றது. குத்திய அரிசியை – அறக் கொழித் தனர். (**முரி** – துண்டு, நொய்யரிசி; **முறி** – துண்டு, தளிர், பத்திரம்.)

108. – செம்பூவைத்தரும். – கடித்துப் பல் லொடிந்தது. (**முருக்கு; முறுக்கு.**)

109. சோழன் பாண்டியனின் காவன் மரத்தை – வெற்றி அடைந்தான். குயவர் திகிரி – பானை வனைவர். (**முருக்கி** – அழித்து; **முறுக்கி** – சுழற்றி.)

110. பூவின் – உண்டு வண்டு முரலும். அவளின் மீது காதல் அவனுக்கு – கொண்டது. (**முருகு** – தேன், அழகு, தெய்வம்; **முறுகு** – திண்மை.)

111. அவன் எண்ணரிய தவஞ்செய்து – பெற்றான். மழையின்மையாற் கானம் – கூர்ந்தது. (**வரம்; வறம்** – பஞ்சம், வற்றுகை, கோடை.)

112. உயிர்களை – பாவச்செய்கை. கடலையை – கடலைக்காரர் செய்கை. (**வருத்தல்; வறுத்தல்.**)





113. துவையலோடு சோறு உண்பானுக்கு – கிடைத்தது. அது பனிபடு கின்ற நெடு – மிக்கநாடு. (**வரை** – மலை, எல்லை, அளவு; **வறை.**)

114. – இல்லாத மந்திரச்சுற்றம் அரசனுக்கு கேடு பயக்கும். சோறு ஆக்குதற்கு – வேண்டும். (**விரகு** – உபாயம், தந்திரம், விவேகம்; **விறகு.**)

115. வேண்டாமை என்னுஞ் செருக்கு – ஈனும். மக்களுக்கு ஒவ்வொரு கையிலும் ஐந்து – உண்டு. (**விரல்; விறல்**–வெற்றி, வீரம், வலி, பெருமை.)

## III. லகர ழகர பேதச் சொற்கள்.

1. அவன் வறுமையால் – உற்றான். தாமரைக்குளத்தில் – இருப்பதை அறியாது இறங்கியவன் அதன் கண் ஆழ்ந்து உயிர்நீத்தான். (**அல்லல்** – துன்பம்; **அள்ளல்** – சேறு, நெருக்கம்.)

2. தன்கொம்பின் – பார்த்து வியந்த மானுக்கு அக்கொம்பாலேயே தீங்கு உண்டாயிற்று. உளியின் – கூர்மையானது. கோட்டான், கோழி, மயில் என்பவற்றின் பெண் – எனப்படும். (**அலகு** – ஆயுதவலகு; **அழகு; அளகு** – கோட்டான் முதலியவற்றின் பெண்.)

3. அக்கோலினது நீளத்தை – அறியலாம். – துன்புற்றாருக்கு வள்ளல்கள் உதவுவர். (**அலந்து** – வறுமைப்பட்டு; **அளந்து.**)

4. – மிக்க குளத்திலே தாமரை அலர்கின்றது. ஊனுண்டவன் இறந்த பின் – சேர்வன். (**அழறு** – சேறு; **அளறு** – நரகம், குழைசேறு, குழம்பு.)

5. எனக்குப் பேச இடங்கொடாது நேற்று – கந்தன் இன்று இறந்தான். பல்கதிர் – பாறை மிதித்துச் சென்றேன். (**அலற்றிய** – இடை விடாமற் பேசிய; **அழற்றிய** –வெம்மைசெய்த.)

6. தேங்காயை – உடைத்தான். ஆந்தை – அது கேட்டுக் குழந்தை வீரிட்டழுதது. (**அலற; அளற** – சிதற.)

7. – முரலும் மாலையை அணிந்திருக்கின்றான். ஆணும் பெண்ணு மல்லாத – பிறப்பை ஒருவரும் விரும்பார். தமக்கு ஒருவன் – வந்த செய்தாலும் பெரியோர் அவன்மீது நட்பு விடார். (**அலி; அழி** – கேடு; **அளி** – வண்டு, அன்பு.)



RangaRakes
tamilnavarasam.com

8. எனக்கு – வாக்கைக் காப்பாற்றினார். – எழுத்துத் துலங்காது. (**அளித்த; அழித்த.**)

9. பாம்மைக் கலைக்க அது – புகுந்தது. – கடல் ஓடியுந் திரவியந் தேடல் வேண்டும். (**அலை; அளை** – புற்று, தயிர், பொந்து.)

10. தலைவி – ஆக்கிய அடிசிலைத் தலைவன் இன்னமுதென அயின்றான். புசிப்பு யாதுமின்றி யாசகன் – திரிகின்றான். (**அலைந்து; அளைந்து** – துழாவி.)

11. – இன்றியும் பலர் என் மணவிழாவிற்கு வந்து சேர்ந்தனர். நோயாளிக்கு – பற்றி நோய் ஏறிற்று. (**அலைப்பு** – அசைக்கை, வருத்தம்; **அழைப்பு.**)

12. – என்னும் விருட்சம் பல மக்களுக்கு ஒருங்கு நிழல் கொடுக்கும். சுமை சுமப்பதற்கு – இல்லாமல் அலைந்தேன். (**ஆல்; ஆள்** – ஆண்மகன், ஊழியன், சமர்த்தன்.)

13. பாம்பினாற் கடியுண்ட தேவதாசன் – ஏற உயிர் நீத்தான். நீர் நிலையில் – அறியாது இறங்குதல் ஆகாது. (**ஆலம்** – நஞ்சு, ஆல், நீர், கடல், மழை; **ஆழம்.**)

14. – புற்றெடுக்க அதன் கண் பாம்பு குடிகொண்டது. மயிலின் – கேட்டு இன்புற்றேன். (**ஆலல்** – ஒலி, மயிற்குரல்; **ஆழல்** – கறையான்.)

15. – என்னும் விலங்கு இப்பொழுது பூவுலகில் இல்லை. – சூழ்ந்த நாட்டில் வாழ்கின்றான். அவன் – குடித்து வெறிகொண்டு நிற் கின்றான். (**ஆலி** – மழைத்துளி, ஆலங்கட்டி, காற்று, கள்; **ஆழி** – கடல், சக்கரம்; **ஆளி** – விலங்குவகை.)

16. அம்மி நீருள் – வியப்பன்று. மயில் களிப்புற்று – கண்டு வியந்தேன். நல்லரசன் – நாட்டிற்கு நன்மை தரும். (**ஆலுதல்** – ஒலித்தல், களித்தல், ஆடுதல் ; **ஆழுதல்; ஆளுதல்.**)

17. – சேர்ந்த யானை அங்குப் பிணிக்கப்பட்டது. – தின்னாப் பசுவும் உண்டோ, (**ஆலை** – கரும்பாலை, கரும்பு கள், யானைக்கூடம்; **ஆளை** – அறுகு.)





18. ஐம்பத்தாறு என்னும் எண் இரண்டு – கொண்டது. எளியார் மீது – காட்டல் ஒருபோதும் நன்மை பயவாது. (**இலக்கம்; இளக்கம்** – தளர்ச்சி, நெகிழ்ச்சி.)

19. – பருவத்தைக் கவனமாகக் கழிக்க வேண்டும். – பழம் இனிமை யானது. (**இலந்தை; இளந்தை** – பாலியம்.)

20. – காத்த கிளிபோல நான் ஏமாற்றம் அடைந்தேன். அக் காரியஞ் செய்தால் – படுமென மறுத்தான். (**இலவு; இழவு** – நட்டம், கேடு, சாவு, வறுமை)

21. எல்லாராலும் இகழப்பட்டு – ஒருவன் பெருமையைக் குறைக்கும். கொம்பில்லாத மரத்தினின்றும் – எளிதன்று. (**இழிதல்** – இறங்குதல், விழுதல், இழிவுபடுதல்; **இளிதல்** – இகழப்பட்டு எளியனாதல்.)

22. தனது ஆசிரியனை – கூறும் மாணாக்கன் கல்வி கடைத்தேறல் அரிது. பல்லை – காட்டி நிற்பவன் சிறந்த வேலைக்காரன் ஆகான். (**இழித்து** – நிந்தித்து, இறக்கி; **இளித்து** – அவமதித்து, பல்லைக் காட்டி.)

23. – அறிந்து உண்பானிடத்து இன்பம் நிலை நிற்கும். மீன் சந்தைக்குப் போனவன் துர்மணம் நுகர ஆற்றாது – கொண்டு அவ்விடத் தினின்றும் நீங்கினான். (**இழிவு ; இளிவு** – இகழ்ச்சி, இழிதகவு, அருவருப்பு.)

24. மரத்தினின்றும் பறித்த – வாடும். – சூழ்ந்த தோட்டத்திலிருந்து மிளகாய்பறித்து வந்தான். – அணிந்த மங்கையர் பலர் திரண்டு வந்தனர். (**இலை; இழை** – ஆபரணம், நூல்; **இளை** – இளமை, கட்டுவேலி, காவற்காடு.)

25. நூல் – ஆடை செய்வர். பல வேலைசெய்து – தோன்றுகின்றான். (**இழைத்து; இளைத்து.**)

26. – கொண்டு தேங்காய் உரிக்கலாம். தீவினை வந்து பொருந்திய விடத்துப் பெரியோர் – வலிமை காட்டி நிற்பர். (**உல்** – கழு, தேங்காய் உரிக்குங் கருவி; **உள்.**)

27. புலியைத் தன் முன்னிலையிற் கண்டவன் அச்சத்தால் – உற்றான். இறைவனோடு இரண்டறக் கலப்பவர் – இல்லாத இன்பம் பெறுவார்.



RangaRakes

tamilnavarasam.com

சென்ற தேயத்திலே தான் அடைந்த – கூறலுற்றான். (**உலப்பு**– அழிவு, குறைவு; **உழப்பு** – வருத்தம், முயற்சி; **உளப்பு** – நடுக்கம்.)

28. – நினைத்தவண்ணம் கை செய்தது. – போலத் திரண்ட தோளினன் வந்தான். (**உலம்** – திரண்டகல், திரட்சி ; **உளம்** – மனம்.)

29. குறுநரி – ஓசை கேட்டேன். பல புட்கள் – ஒலிகேட்டுக் கண் விழித்தேன். சிங்கம் நின்று – காட்டிற் சென்றேன். (**உலம்பும்** – அலப்பும், பேரொலி செய்யும் ; **உழம்பும்** – ஓசைகலந்தொலிக்கும்; **உளம்பும்** – ஊளையிடும்.

30. ஈரமான அரிசியை வெயிலில் – வைத்தாள். நீர் – தாமரை நிலை குலைந்தது. (**உலர; உளர** – அசைய, தலைமயிர் ஆற்ற யாழ் வாசிக்க.)

31. – தொழிலே மிக்க ஊதியந் தரும். பகைப்புலத்தே – பார்க்கச் சென்றவன் சிறையாக்கப்பட்டான். **உழவு; உளவு** – வேவு, ஒற்றன்.)

32. பொருட்பற் றிருக்கப்பற்றில்லேமென – நிற்கும் மக்களும் இவ் வுலகில் உள்ர். எதிரியைக் கண்டதும் உளம் – நின்றான். அவன் அத்துன்பமான செய்தியைக் கேட்டதுங் கண்ணும் முகமும் – நின்றான். (**உலறி** – பொலிவழிந்து, வற்றி, உரை தடுமாறி ; **உழறி** – கலங்கி ; **உளறி** – பிதற்றி.)

33. – வாழுங்காட்டிற் புலியும் உண்டு. அவள் புலம்பிய – குரல் கேட்டு அப்பக்கம் போனேன். கொல்லன் – வெப்பம் மிக்கது. (**உலை; உழை** – மான், இடம், பூவிதழ் ; **உளை** – அழுகை, குதிரை முதலியவற்றின் பிடரி மயிர்.)

34. மக்கள் வசியா வீடு – போகும். நெடுநேரம் நடந்ததால் அவன்கால் –நின்றான். தன்மகனைத் தேடிச் சந்திரமதி காடெல்லாம் – திரிந்தாள். (**உலைந்து ; உளைந்து.**)

35. தன் கடமை காரணமாகத் தன் காரியத்தையே – பாவி அங்கு நிற் கின்றாள். அவன் – பணம் அவனையே சேர்ந்தது. நரி – ஓசைக் காடெல்லாங் கேட்டது. (**உலைத்த** – கெடுத்த, கலைத்த; **உழைத்த** – சம்பாதித்த; **உளைத்த** – ஊளையிட்ட, ஒலித்த)





36. துரியோதனன் பாண்டவர் – நோக்கி இருந்தான். யாழின்– வெளி யோசையோடு ஒத்திசைத்தது. கால் – கடுநடையால் உண்டாகும். (**உலைவு** – அழிவு, தோல்வி சஞ்சலம், தரித்திரம் ; **உழைவு** – யாழின் இன்னோசை ; **உளைவு** –குடைச்சனோவு.)

37. நினது – ஓங்குக என வாழ்த்தினாள். – எழ உண்ணாதன உண்டான். (**ஊழி** –ஊழிக்காலம், வாழ்நாள் ; **ஊளி** – சத்தம், பசி.)

38. – கொதிக்கச் சுரத்தாற் பீடிக்கப்பட்டான். நரியின் – சத்தங் கேட் கின்றது. (**ஊழை** –பித்தம்; **ஊளை** – ஊளைச் சத்தம், தீ நாற்றம்.)

39. – உதித்தமைகண்டு புட்கள் எல்லாம் ஒலித்தன. எண்ணெய்க்காரன் – இன்றி வருந்துகின்றான். ( **எல்** – சூரியன், நாள், இரவு, பகல், பெருமை; **எள்.**)

40. ஞாயிற்றின் – பட்ட கண் கூசும். காலையிற் புட்களின் – கேட்டுத் துயில் எழுவாரும் உளர். (**ஒலி; ஒளி.**)

41. தன் கன்றுக்கெனப் பாலை – கறவையின் செயல். ஆடை– வண்ணாரின் செயல். வயலிடத்துக் களையை – கமக்காரனின் செயல். (**ஒலித்தல்** – சத்தமிடல், வெளுத்தல்; **ஒழித்தல்** – அழித்தல்; **ஒளித்தல்**– மறைத்தல்.)

42. பகைவர் சேனை போர்க்களத்தில் – கண்டு களிப்பெய்தினான். பயங்காரணமாகத் தூது போதலைத் – வீரனுக்கு அழகன்று. (**ஒழித்தல்** – அழித்தல், தீர்தல்; **ஒளிதல்** – மறைதல், தவிர்த்தல்

43. – அயின்று வெறி கொண்டான். அவன் – வீட்டில் வாழ்கின்றான். (**கல்; கள்.**)

44. ஒருவனை வஞ்சித்து அவன் பொருளைக் – அறமாகாது. மொழிப் பிரச்சினை பற்றி எழுந்த – இன்னுந் தீரவில்லை. (**கல்லல்** – குழப்பம்; **கள்ளல்** – திருடுகை.)

45. பிறன்பொருளைக் – காத்த நெஞ்சினையுடையான் எல்லோராலும் நன்கு மதிக்கப்படுவன். அறநூல்களைக் – உய்தி கூடுதற்குத் தடையாகும். (**கள்ளாமை; கல்லாமை.**)



RangaRakes
tamilnavarasam.com

46. அரிச்சந்திரன் குலத்திற் – யாதொன்றும் இல்லை. புலி தன்னை நோக்கி வருவதைக் கண்ட இளைஞன் – கொண்டு கைத்துப் பாக்கியை நழுவவிட்டான். (**கலக்கம்; களக்கம்** – குற்றம்.)

47. அவன் – சென்று கல்வி கற்றான். – விளைப்போர் சமுதாயத்திற்குக் கேடு செய்வர். (**கலகம், கழகம்.**)

48. வள்ளத்தில் வந்தவன் அரையளவு நீருள்ள – பார்த்து அதனில் இறங்கி நடந்து கரை சேர்ந்தான். பெரியோருடன் – நன்மை தரும். – கெடுத்து முயற்சியை மேற்கொண்டு ஒழுகுபவனுக்குச் செல்வந் தானே வரும். (**கலப்பு; கழப்பு** – சோம்பல் ; **களப்பு** – கடலில் ஆழமில்லாத இடம்.)

49. போர்க் – புகுந்த வீரன் மார்பிற் புண்பட்டு உயிர்துறந்தான். குடிநீர் கொண்டுவந்த – கவிழ நீர் பெருகிற்று. (**கலம்** – பாத்திரம், ஆபரணம்; **களம்** – இடம்.)

50. அவன் – மாப்பூட்டிய தேரில் ஊர்கின்றான். – வந்த சிந்தையோடு ஏற்பார்க்குப் பிச்சை இடுவான். – சென்று உப்புப்பெற்றான்.– உணவு உண்டு மனம் பூரித்தான். (**கலி** – கடல், ஒலி, செருக்கு; **கழி** – உப்பளம்; **களி** – மாக்களி, மகிழ்ச்சி, கள், கட்குடியன்.)

51. – எண்கணிதத்தின் அடிப்படைச் செயல்களுள் ஒன்று. கட்குடித்துக் – பூரியார் தொழில். நீர் வளஞ் செறிந்த நாட்டிலே நெல் – வியப்பன்று. (**கலித்தல்** – செழித்தல், ஒலித்தல்; **கழித்தல்; களித்தல்.**)

52. – செய்த சூழ்ச்சியினாலே நளன் அரசிழந்தான். – ஒருவன் கட்குடித்து மயங்கிக்கிடக்கின்றான். (**களியன்** – குடியன்; **கலியன்** – கலிபுருடன்.)

53. நெல் செழிக்கக் – பிடுங்குவர். – கொண்டு ஓடம் ஓட்டுவர். பல– கற்றுத் தேறினான். (**கலை** – சாத்திரம்; **களை** – பூமி, குற்றம்; **கழை** – ஓடக்கோல் மூங்கில், தண்டு.)

54. மேய்ந்த மாட்டைக் – மனிதன் இவனே. ஓடிக் – இளைஞனுக்கு மூச்சுத்திணறிற்று. (**களைத்த, கலைத்த.**)

55. கூட்டங் – பின்னரே நான் அங்குச் சென்றேன். தன் குற்றங்– பின்னரே பிறர் குற்றம் நீக்க முயலலாம். (**களைந்த; கலைந்த.**)





56. – பறித்த களைகள் எல்லாம் ஒரு குவியலாய்க் கிடந்தன. பல கலை கற்பவன் – எனப்படுவான். (**கலைஞன்; களைஞன்.**)

57. அவன் – கழுவாது வீட்டிற்குட் சென்றான். வித்திட்டாலுங் காஞ்சிரங் – தெங்காகாது. (**கால்; காழ்** – வித்து, மரவைரம், பரிக்கோல், மனவுறுதி.)

58. ஈரம் புலராத – உடுத்தி நின்றான். – அறிந்து செய்யும் வினை வீண் போகாது. – ஊதி நின்றான். (**காலம் ; காழம்** – உடை விசேடம்; **காளம்** – ஊதுகொம்பு, நஞ்சு, மேகம்.)

59. தஞ்சுற்றத்தினருள் யாரும் ஒருவர் இறந்தால் ஐரோப்பியர் கரிய – உடுத்து நிற்பர். அப்படைவீரன் – ஊதினான். (**காழகம்** – ஆடை, கருமை, கைக்கவசம்; **காளகம்** – கருமை, எக்காளம்.)

60. – பருவத்தினன் ஒருவன் வந்தான். – உணவு அருந்திவிட்டேன். (**காலை; காளை**)

61. தாய் – பருவம் அடைந்தாலும் அவளைப் பேணுதல் வேண்டும். ஒரு பொருட் – ஒரு பொருளையே குறிக்கும். (**கிழவி** – முதியவள், தலைவி; **கிளவி** – மொழி.)

62. புவலர்மணிக்கு ஒரு பொற் – வழங்கப்பட்டது. அக்கூண்டில் உள்ள – பேசவல்லது. புலியைக் கண்டதும் இளைஞன்– கொண்டான். (**கிலி** – பயம்; **கிழி** – நிதிப்பொதி; **கிளி.**)

63. அவன் அரையிற் கட்டிய – சிறிது தளர்ந்தது. – மக்கள் இழிந்த சொற்பேசி மகிழ்வர். அவன் – வாதத்தால் வருந்துகின்றான். (**கீல்** – உடற்பொருத்து; **கீழ்; கீள்** – கூறு, கடி சூத்திரம்.)

64. சேனைத் தலைவன் – செய்து எதிரியைத் தோற் கடித்தான்.– கொண்டு அரிசி புடைப்பர். (**குல்லம்** – முறம்; **குள்ளம்** – தந்திரம்.)

65. முதியோனை யன்றிக் – ஒருவனை அக்கோதை மணஞ் செய்தாள். அவன் அழகாற் சிறந்தமையாற் – எனப்படுவான். (**குழகன்** – இளையோன், அழகன்; **குளகன்** – வாலிபன்.)

66. அவ்யானை – அருந்துகின்றது. அவன் – ஆர்ந்த கொன்றைமாலை சூடி நின்றான். (**குழகு** – அழகு, இளமைச்செவ்வி; **குளகு** – விலங்கின் இலையுணவு.)



RangaRakes

tamilnavarasam.com

67. – நன்றாயின் குணமும் நன்றாகும். தாமரைக் – நீந்தற்கு உதவாது. **(குளம்; குலம்.)**

68. குதிரை ஒற்றைக் – உள்ள விலங்கு. – இல்லாமையாற் சோறு உண்ணாமல் இருந்தான். **(குழம்பு; குளம்பு** – விலங்கின் பாதம்.)

69. – கொண்டு மிளகாய் அரைக்கலாம். – கொட்டிக் குழந்தை இறந்தது. மழலைக் – தந்தையின் கவலையைப் போக்கியது. **(குழவி ; குளவி.)**

70. கூகை – சத்தங்கேட்டுக் கண் விழித்தேன். நரி – சத்தங் கேட்டுச் சிங்கங் கர்ச்சித்தது. **(குழறிய; குளறிய.)**

71. அமரருக்கு அரசன் – சோறு சமைக்குங் – விழுந்து உடைந்தது. **(குலிசி** – இந்திரன்; **குழிசி** – பானை.)

72. வாழைக் – ஒன்றை விலைக்குக் கொண்டேன். அம்மரத்திற் – பறித்து ஆட்டிற்கு இட்டேன். **(குழை ; குலை.)**

73. கொண்டை – போயிற்று. சோறு – போயிற்று. **(குழைந்து; குலைந்து.)**

74. கொண்டையைக் – நின்றாள். சோற்றைக் – தந்தாள். **(குழைத்து; குலைத்து.)**

75. செக்கில் இட்ட – எண்ணெய் தரும். வாழும் இடத்திற் – குவிந்து வைத்தல் ஆகாது. கடைத்தெருவில் வேண்டிய – விலைக்குக் கொள்ளலாம். **(கூலம்** – நெல் முதலிய பண்டம்; **கூழும்** – எள்; **கூளம்** – வைக்கோற்சண்டு.)

76. காளி ஆதல் – ஆதல் இல்லை என்பார் அறிவுடையோர். வேலை செய்வித்துவிட்டுக் – கொடுக்க மறுப்பவனை ஒருவரும் மதியார். **(கூலி; கூளி** – பேய்.)

77. கருப்பவதிக்கு உணவெல்லாவற்றிலுங் – உண்டு – இல்லாதவனை அவன் கேட்டால் அறியலாம். **(கெழீ** – நட்பு; **கெலி** – ஆசை)

78. அச் சீமாட்டி தன் – செரற்படி நடந்தாள் – கிளரும் மார்பினை யுடையான் ஒருவன் பாயுமா ஏறிச் செல்கின்றான். **(கேழ்** – ஒளி **கேள்** – கணவன், நண்பன்.)





79. கற்பில்லாதவளை மனைவியாகக் – பல ஏதத்திற்கு இடமாகும். பிறவுயிர்களைக் – பாவம். **(கொல்லுதல்; கொள்ளுதல்.)**

80. – கட்டையின் உதவியால் வழிபிடித்துச் சென்றான். ஓரி என்பவன் – ஆண்ட அரசருள் ஒருவன் **கொல்லி** – கொல்லிமலை; **கொள்ளி.)**

81. – வாழ் வேடருக்கு ஊனுணவாற் குறையில்லை திருடர் வேற்றுப் புலஞ்சென்று – அடிப்பர். **(கொள்ளை; கொல்லை** – முல்லைநிலம்.)

82. – இருந்த அரசனைப் பார்த்து மந்திரி பல அறிவுரை புகட்டினான். – ச் சென்றவழித் துன்னூசி செல்லும். அச் செய்யுளின் கருத்தை அதற்குக்கீழ் இருக்குங் – விளக்கும். **(கொலு** – ஓலக்க விருக்கை; **கொளு** – செய்யுளின் கருத்து விளக்குஞ் சொற்றொடர்; **கொழு** – துளையிடும் பெரிய ஊசி.)

83. அத் தோட்டத்திற் – இலைவாழை உண்டு. இன்னா செய்து எத் துணைச் செல்வம் பெறலாமாயினும் அது செய்யாமை அறிவுடை யோர் –. கொண்டு மாட்டைத் துரத்தினான். **(கோழ்** – செழிப்பான, கொழுப்பான; **கோள்** – துணிபு, கிரகம் , **கோல்.)**

84. – சில நோய்க்கு மருந்தாம். – சுற்றுவோர் பல நாடுகளின் இயல்பு களை அறிவர். தலைமெழுகிக் – இட்டனர். **(கோலம்; கோளம்** – உருண்டை, பூமி ; **கோழம்** – சங்க நஞ்சு.)

85. – ப் பூத்தேடி அலைந்தும் பயனில்லை. – குப்பை கிளறும். திரிகடு கத்தின் ஒரு கூறு –. **(கோழி ; கோலி** – திப்பலி; **கோளி** – பூவாது காய்க்கும் மரம்.)

86. – பூனைக்கு இரையாகும். – மனத்தைத் திட்பமாக்கல் எளிதன்று. திரிகடுகத்தின் ஒரு கூறு – **(கோழை ; கோலை** – மிளகு; **கோளை** – எலி.)

87. – கொண்டு பாத்திரங் கழுவலாம். ஞானிக்கு இயமன் கொண்டு போகுஞ் – இல்லை. **(சலம்; சளம்** – துன்பம் .)

88. – கறிதின்னல் ஆகாது. – மனத்தினை உடையவனுக்கு உரன் கெடுவது திண்ணம். **(சலித்த** – சஞ்சலப்பட்ட, சோர்ந்த ; **சளித்த**– புளித்த.)



RangaRakes

tamilnavarasam.com

89. வலைஞர் – வீசி மீன் பிடிப்பர். – பானை செய்தற்கு உதவாது. ( **சாலம்** – வலை ; **சாளம்** – குங்குலியம், மணல்.)

90. பணச் – கொண்டு அரிசி விலைக்குக் கொள்ளக் கடைவீதி சென்றாள். அவ்வயலிற் – செழித்தோங்கி வளர்கின்றன. (**சாலி** – செந்நெல், நெற்பயிர்; **சாளி** – பை).

91. மகளிர் பலர் – கொட்டி விளையாடுகின்றனர். அவன் சிறிய – ஒன்று கட்டி அதன்கண் வாழ்கின்றான். இந்நகரில் அறச் – பல உண்டு. (**சாலை**; **சாழை**; **சாளை** – குடிசை.)

92. சோறு கறி சமைத்தற்குத் தனது வீட்டிற்கு அருகில் – ஒன்று கட்டுவித்தான். – வெட்டுதற்குக் கோடரி தேவைப்படாது. (**சுள்ளி**; **சுல்லி** – மடைப்பள்ளி, அடுப்பு.)

93. – க்காற்று வீசிப் பயிரை அழித்தது. – க்கறி தின்றான். (**சுளி** – புளியாரை; **சுழி**.)

94. அன்பைப் பொருளாகக் கொண்டவன் ஒருவரோடாயினுஞ் – பேசல் ஆகாது. சண்டமாருதஞ் – அடித்தது. (**சுழித்து** – சுழன்று; **சுளித்து** – கோபித்து.)

95. ஒரு பொருளையும் வேண்டாதானுக்கு மனச் – இல்லை. அன்பின்றிச் – கொள்ளல் அறிவுடையோர்க்கு ஆகாது. (**சுளிவு** – கோபம்; **சுழிவு** –கவலை.)

96. – கொண்ட பெண் பத்தாமாதம் பெண் மகவு பெற்றெடுத்தாள். இரவிற் – இன்றி வழிச் செல்லல் அபாயந்தரும். – இல்லாது ஆளும் அரசன் அரசு தவறுவான். (**சூல்** – கருப்பம் ; **சூழ்** – ஆலோசனை, ஆராய்ச்சி; **சூள்** – தீவெட்டி, சபதம்.)

97. – பெருவிருப்புற்றுப் புளிதின்பாள். சூழ்ந்த உலகிற் பலவகை மக்கள் உளர். அவளது உச்சிக் கொண்டையிற் – ஒன்று ஒளிர்கின்றது. (**சூலி** – கருப்பவதி; **சூளி** –ஒருவகை அணி; **சூழி**– கடல், சேணம் முகபடாம்.)

98. அவள் – உயர்ந்த மணிமாடத்தில் வசிக்கின்றாள். அவள் – போன்ற விழியினை உடையாள். (**சேல்** –கெண்டை மீன் ; **சேழ்** – மேலிடம்.)

99. – தின்று வயிறு குத்திற்று. தமிழ்நாடுகளுட் – வளமிக்கது. (**சோழப்** – சோழநாடு; **சோளம்**.)





100. – முழுவதையும் ஓரடியால் அளந்தான் மால். தாமரை – கயிறு திரித்தற்கு உதவும். (**ஞாளம்** – தண்டு; **ஞாலம்** – பூமி.)

101. – க்கொடி நீரிலே முளைக்கும். அவ்வீட்டிற்கு – காவல். (**ஞாழி** – வள்ளை; **ஞாளி** – நாய், கள்.)

102. – குடை செய்தற்கு ஓலைதரும். ஞான நூல் கற்பானுக்குத் – தீரும். (**தலப்பம்** – தாலிப்பனை; **தளப்பம்** – தாளிப்பனை; – காதணி கை, மனவுலைவு.)

103. அவள் வீட்டினது – வழுவழுப்பாய் இருக்கின்றது. அவ்விடலை – பூசி மேனியை மினுங்கச் செய்கின்றான். இத் –பிரசித்தி பெற்ற கோயிலைக் கொண்டது. (**தலம்** – இடம், சத்திரம்; **தழம்**– தயிலம்; **தளம்**.)

104. மழை பெய்ததும் மரந் – கொண்டது. அடிமைத் – நீங்கியவாழ்வே நல்வாழ்வாகும். தலைவனைக் கண்ட தலைவி நாணித் – குனிந்தாள். (**தலை**; **தளை** – கட்டு; **தழை** – தளிர்.)

105. – நிற்கும் மரம் பல பழந்தரும். மேகந் – நின்றாலும் இவ்வூருக்குப் பஞ்சமில்லை. (**தளையாது** – பெய்யாது; **தழையாது** – செழிக்காது.)

106. காய்க்குங் காலத்திலே மா – அது பூக்காது என்பதற்கு அறிகுறி. அன்பால் இறைவனைத் – இன்பந் தரும். (**தளைத்தல்** – கட்டுதல்; **தழைத்தல்** – செழித்தல்.)

107. கதவைத் – கொண்டு அடைத்தான். விளக்குத் – முரிந்து கிடக்கின்றது. கொப்புளங் கொண்டமையாலே – புரட்டி உணவுண்ண முடியாது வருந்துகின்றான். (**தால்** –நா ; **தாழ்** – தாழக்கோல்; **தாள்** – தண்டு.)

108. இனியாயினுந் – இன்றி வேலையைத் தொடங்குக என்றான். பாட்டிற்கு ஏற்பத் – போட்டான். – துலாச் செய்தற்கு உதவும். (**தாலம்** – பனை ; **தாழம்** – தாமதம்; **தாளம்**.)

109. வன்மத்து இட்டமையாலே – உடைந்து தயிர் சிந்தியது.– ஓலை கொண்டு கூரை வேயலாம். கழுத்தில் அணிந்த – அறுந்து விழுந்தது. (**தாலி**; **தாழி** – வாயகன்ற சட்டி; **தாளி** – பனை.)



RangaRakes tamilnavarasam.com

**110.** தூய மனத்தினை உடையவர் – இல்லாதவர். அவன் மகிழ்ச்சி யினாலே – எய்தினான். (**துலக்கம்** – பிரகாசம், தெளிவு; **துளக்கம்** – ஒளி, மனக்கலக்கம்.)

**111.** அவன் இறைவனைத் தொழுது முடி – நின்றான். தச்சன் உளியைத் – கூராக்கினான். (**துலக்கி** – மெருகிட்டு, பிரகாசிக்கச்செய்து, தீட்டி; **துளக்கி** – விளக்கி, அசைத்து, வணங்கி.)

**112.** அம்புபட்ட மரை – நின்றது. – கிடக்கும் உளி முன்னர் தீட்டப் பட்டது. (**துலங்கி** – பிரகாசித்து, **துளங்கி** – நிலைகலங்கி, தளர்ந்து, ஒலித்து.)

**113.** தச்சர் உளிகொண்டு மரங்களிலே – செய்வர். பொருள்களை நிறுத்தற்கு – உதவும். (**துலை** – நிறைகோல், தூரப்பிரதேசம்; **துளை** – துவாரம்.)

**114.** இம்மருந்திற்குக் கரும்பினது – அனுபான மரம். மத்திடுந் – இங்குக் கேட்கின்றது. (**தெழி** – ஒலி ; **தெளி** – தெளிவு, சாறு, ஒளி.)

**115.** – சொல்லைத் தேறினவர்க்குத் தவறு இல்லை. அருச்சுனன் போர்க் களத்திலே – சங்கின் ஓசை துரியோதனன் படையயைத் திகில டையச் செய்தது. (**தெழித்த** – முழக்கிய, அதட்டிய, அடக்கிய; **தெளித்த** – தெரிவித்த, தூவிய.)

**116.** – ஒன்று வெட்டி அதன்கண்ணே தென்னங் கன்றை நட்டான். அவன் மனத் – ஒழிந்து நின்றான். (**தொல்லை** – துன்பம், பழமை; **தொள்ளை** – குழி, துளை, அறியாமை.)

**117.** சீதை நெடுந் – நடந்தமையாற் களைப்புற்றாள். உளி – இடு வதற்கும் உதவும். (**தொலை** – தூரம், அழிவு; **தொளை** – துவாரம்.)

**118.** பசுத் தங்குதற்குத் – ஒன்று கட்டினான். அச்சுமையைத் – கொண்டு சுமந்தான். – செருப்புச் செய்தற்கு உதவும். (**தோல், தோள், தோழ்** – பசுக்கொட்டில்.)

**119.** – வாய்ச்சொல் பலிக்கும். ஞானிகளுக்கு – இல்லை. (**நல்லார்** – பெரியார், கற்றவர், மகளிர்; **நள்ளார்** – பகைவர்.)

**120.** – கடற்கரையிற் காணப்படும். அக்கட்டழகனுக்குத் தக்க– ஒருத்தி மனைவியாக வாய்த்தாள். (**நல்லி** – பெண்; **நள்ளி** – நண்டு.)





**121.** அப்பொய்கையிலே – மலர்ந்தன. – யாதும் இல்லாத சிறியேனுக்கு இறைவன் அருள் ஈந்தான். (**நலம்** – நன்மை, அழகு, புகழ், சுக வாழ்வு: **நளம்** – தாமரை.)

**122.** தேசிங்கு தன் குதிரையினுடைய – அடக்கி அதன்மீது ஊர்ந்து சென்றான். புண்காரணமாக எனக்கு வந்த – நீக்க வல்லவன் அம் மருந்துவன். (**நலி** – நோவு ; **நளி** – செருக்கு, செறிவு, குளிர்ச்சி.)

**123.** பலர் – வழங்காத காட்டுவழியாகச் சென்றான். உரையாசிரியர் சிலர் செய்யுள்களுக்கு – பொருள் உரைப்பர். (**நலிந்து, நளிந்து** – செறிந்து, பரந்து.)

**124.** இராமனது நிறம் – என்பர். அக்கோலினது – பத்தடி, (**நீலம்** – நீலநிறம், நீலச்சாயம், நவநிதியிலொன்று, கருங்குவளை, கண் ணிடுமை; **நீளம்.**)

**125.** – மகள் அளித்த மீன்பொரிக்கறி சுவைத்தான். அவன் அம்மலை யிலுள்ள – புகுந்து கிடந்தான். (**நுழை** – குகை, சிறுவழி, நுண்மை; **நுளை** – வலைச்சாதி, ஈனம்.)

**126.** – விருப்பொடு பரிசில்பெறச் சென்றவன் ஏமாற்றம் அடைந்தான். சுவர்ப்புறத்தே –கள்வன் சிறையாக்கப்பட்டான். (**பல்கிய** – மிகுந்த; **பள்கிய** – பதுங்கிய.)

**127.** இராமர் விடுத்த – இராமனது மார்பைத் துளைத்தது. – நாடி ஓடியவெள்ளம் வீட்டிற்குட் புகுந்தது. (**பல்லம்** – அம்பு, கரடி; **பள்ளம்.**)

**128.** கல்வி கற்றற்குப் – சென்ற பிள்ளை திரும்பி வரவில்லை என்று தாய் ஏங்கினாள். – சொல்வது கேட்டுத் திகில் அடைதல் அறியாமை யாம். (**பல்லி; பள்ளி.**)

**129.** காய் முதிர்ந்தாற் – ஆகும். உடற் – இல்லாதானுக்கு இன்ப வாழ்க்கை இல்லை.(**பலம்** – வலி, காய், கனி, பயன்; **பழம்** – கனி.)

**130.** இராமன் – பாவங்களுக்கு அஞ்சுபவன். – கொண்டு உண்பது இகழ்ச்சி. நரகர்க்குப் – இட்டான். (**பலி** – பிச்சை, உணவுப் பொருள்; **பழி** – நிந்தை.)

RangaRakes

tamilnavarasam.com

131. பெரியாரைப் – பாவந் தரும். பெரியார் சொற் – வியப்பாகாது. (**பலித்தல்** – பயன்விளைத்தல், தேர்தல், செழித்தல்; **பழித்தல்**– நிந்தித்தல்.)

132. பொரிக் கறியோடு – இட்டுச் சோறுண்டான். மழையின்மை பற்றி நெற் – வாய்க்கவில்லை. (**பலிதம்** –பலிக்கை, பயன் ; **பளிதம்** – கற்பூரம், பச்சடி.)

133. வேடன் புலி உறங்கும் – தேடித் திரிந்தான். அக்குடியன்– ஆர்ந்து வெறித்தான். (**பழை** – கள்; **பளை** –விலங்கின் வளை.)

134. – அடைந்த வீடு வாழ்தற்கு உதவாது. தாய்ப் – குடித்து வளரும் பிள்ளை உடலுரம் பெறும்.; (**பால்; பாழ்** – நாசம்.)

135. – வெடி செய்தற்குப் பயன்படும். ஆற்றைக் கடந்து செல்லப் – வேண்டும். (**பாலம்; பாளம்** – வெடியுப்பு, உலோகக்கட்டி.)

136. – பழத்தைக் கரடி விரும்பி உண்ணும். அக்கமுகின் – அதன் பூவை மூடி இருக்கின்றது. (**பாலை; பாளை** – மடல் )

137. அவனுடைய இரு விழிகளிலுமிருந்து – வடிகின்றது. தலைவனது பிரிவு தலைவிக்குப் – பயந்தது. (**பீழை** – துன்பம்; **பீளை** – கண் மலம்.)

138. கமக்காரர் தங்கறவைகளுக்கு இரையாகப் – வெட்டி இடுவர். வயல் காப்போர் – ஓச்சிப் பயன் பெறுவர். பண்டைத் தமிழரசர்– ஓர்த்துப் படை அமைப்பர். (**புல்; புள்** – பறவை, வண்டு, பறவை நிமித்தம், கிட்டிப்புள்.)

139. சில பூவில் அல்லியைப் – மூடி இருக்கும். மெய்யெழுத்துக்கள் எல்லாம் – உள்ளன. (**புல்லி** – புறவிதழ் ; **புள்ளி**.)

140. கறிக்கு – கரைத்து விட்டாள். அவள் – போலப் பாய்ந்தாள்.(**புலி; புளி**.)

141. காற்றோட்டத்திற்குத் தக்க பல – உள்ள வீடு ஒன்றைக் கட்டு வித்தான். – உணவு உண்டு வாழ்தல் அறிவுடையாருக்கு ஆகாது. (**புலை** – ஊன், இழிவு, பொய், கீழ்மகன் ; **புழை** – துளை, வாயில், சாளரம், ஒடுக்க வழி.)

142. அவன் – மெல்லணையின் மீது துயில்கின்றான். புகையும் புகுதற்கு அரிய – நுழைந்து சென்றான்.) **பூழை** – துவாரம், சிறுவாயில்; **பூளை** – இலவு.)





143. தச்சன் உளியால் ஒரு – துளைத்தான். இத்தூணிற் பொற்குடம் பொருந்திய ஒரு –அமைந்திருக்கின்றது. இவ்வயல் இவ் வாண்டு தந்த – அளவாற் குறைவு. (**பொலி** – நெற்குவியல்; **பொழி**– கனு; **பொளி** – உளியாலிட்ட துளை, மண்வெட்டி வெட்டு.)

144. மழை – விருட்சங்களுக்கு நன்று. கல்லை உளியாற் –எளிதன்று. சோறு – சமைப்போனது சாமர்த்தியத்தைக் காட்டும். (**பொலிதல்** – பெருகுதல்; **பொழிதல்** – பெய்தல்; **பொளிதல்** – கொத்துதல்.)

145. இவ்வுலகில் ஒருவனைப் – ஒருவன் இல்லை. பசுங்காய் ஒன்றை இருகூறு செய்து ஒரு – முருகனுக்கும் மற்றையது கந்தனுக்கும் உரியனவாகுக என்றாள். (**போல்; போழ்** – பிளவு, துண்டு, தகடு, தோல்வார்.)

146. இராமன் புய – பற்றி அச்சிலையை வளைத்தான். – இல்லாத நிலத்திற் பயிர் வளரா. (**மல்லல்** – வளம், அழகு, பொலிவு, மிகுதி, வலி, செல்வம் ; **மள்ளல்** – வலிமை.)

147. – இருவர் மற்போர் செய்கின்றனர். – உழுகின்ற எருதுகளை உரப்புவார். (**மல்லர்** – மற்போர் செய்வோர்; **மள்ளர்** – மருதநிலத்து வாழ்வோர், திண்ணியோர், படைவீரர், இளைஞர்.)

148. பெரு – பெய்து பயிரை அழத்தது. இந்த – பல நீரூற்றுகளைக் கொண்டது. (**மலை ; மழை**.)

149. மந்தமாருதம் – வீசியது. அவ்வுரை கேட்டதும் அரசன் சிங்கம் போற் சீறி – எழுந்தான். (**மலைத்து** – மாறுபட்டு, பொருதி; **மழைத்து** – குளிர்ந்து, கருநிறமாகி, மழை நிறைந்து)

150. தனக்கு ஒரு – கட்டுவித்தான். கழுத்தில் அணிந்த – ஒடிந்து விழுந்தது. (**மாலிகை** – மாலை, வரிசை; **மாளிகை** – வீடு, கோயில், மாடவீடு.)

151. பொற்கொல்லர் – உருக்கி அணிகலஞ் செய்வர். – அவித்த நீர் சில மருந்துகளுக்கு அனுபானமாகும். – காலத்திற் பறவைகள் எல்லாந் தம் இருப்பிடங்களுக்குப் பறந்து செல்லும். (**மாலை** – அந்திப் பொழுது, பூந்தொடை, மாதரணிவடம்; **மாழை** – பொன், திரட்சி, உலோகக் கட்டி ; **மாளை** – புளியம்பட்டை.)

152. குதிரை யூர்வோர் குதிரைகளை – கொண்டு செலுத்துவர். அப் படைவீரர் – முழக்கிப் போர்க்களம் புகுந்தனர். (**முழவு** – முரசு, பால் கறக்கும் பாத்திரம்; **முளவு** – முட்கோல், முள்ளம்பன்றி.)



RangaRakes

tamilnavarasam.com

153. மலை நாட்டுக் கள்ளர் – தேடி இராப்பொழுதை அங்கு கழிப்பர். அவ் வித்திலே – இன்னும் வெளிவரவில்லை. கன்றைக் கண்ட பசு – சுரந்து நிற்கும். (**முலை; முழை** – குகை, துடுப்பு; **முளை.**)

154. இலட்சுமணன் சூர்ப்பனகையை – ஆக்கினான். மயங்கிக் கிடந்த இராமரை அனுமன் – கொண்டு மயக்கந் தீர்த்தான். வேகவைத்த கறியை – கொண்டு துழாவுவர். (**மூலி; மூளி** – உறுப்புக்குறை; **மூழி** – அகப்பை, சோறு, நீர்நிலை.)

155. அவன் – இட்ட தயிர்போற் கலங்கி நின்றான். தலையில் அடிபட்டதால் அவன் – கலங்கி நிற்கின்றான். அவனைத் தேடி – முடுக்குக்கள் எல்லாம் அலைந்து திரிந்தேன். (**மூலை; மூழை** – மத்து, அகப்பை, சோறு, குழிந்த இடம்; **மூளை.**)

156. – ஒன்று கொன்று அதன் ஊனைச் சுவைத்தனன். அவன்– ஒன்று கட்டுவித்து அதன் கண் வாழ்ந்தான். இவ்வூர்ப் பிச்சைக்காரர் – பருகிக் காலங்கழிப்பர். (**மேலகம்** – மேல்வீடு; **மேழகம்** – ஆடு; மேளகம் – கஞ்சி.)

157. அவள் – இதழ் மாலை ஒன்றை அணிந்திருக்கிறாள். நளன் – உருட்டிச் சூதாடி அரசிழந்தான். (**வல்** – சூதாடு கருவி, வலிமை, விரைவு ; **வள்** – வளம், பெருமை, வாள், வாளுறை, கடிவாளம், வலிமை.)

158. – பேசி மூன்று ஊரை அழித்தான். – ஏறி ஆற்றைக் கடந்து செல்லலாம். (**வல்லம்** – ஆற்றல்; **வள்ளம்** – வட்டில், சிறு தோணி.)

159. – எழுதிய கையை உயர்த்தினாள். – போன்ற ஒருத்தியை அவன் மணஞ் செய்தான். (**வல்லி** – கொடி, இளம் பெண், கால் விலங்கு; **வள்ளி** – தொய்யிற்கொடி, கைவளை, கொடி.)

160. பண்டைத் தமிழர் – ஏறிக் கடல் கடந்து பிற நாட்டுப் பொருள்கள் வாங்கிவருவர். – செறிந்த காடுகளுள்ளே மான்மரைகளும் வாழும். (**வல்லியம்** – புலி; **வள்ளியம்** – மரக்கலம், ஊது குழல், மெழுகு.)

161. மகளிர் நெற்குத்தியபோது – பாடினர். – வாழ் விலங்குகளைச் சிறு காட்டிற் காண்பது அரிது. (**வல்லை** – பெருங்காடு; **வள்ளை**– வள்ளைப்பாட்டு.)





162. கல்லி லிருந்த சந்தனத்தை – த் தனது நெற்றியிற் பொட்டிட்டாள். அவள் அக்கொடியை – எடுத்தாள். ( **வலித்து; வழித்து**– திருடி யெடுத்து, வடித்து.)

163. அவன் அச்செய்யுளுக்கு – பொருள் கொண்டான். துக்கமான செய்தியைக் கேட்டதும் அவனுடைய விழிகளிலிருந்து கண்ணீர் – ஓடியது. (**வலிந்து** – இடர்ப்பட்டு, திண்ணியதாகி; **வழிந்து** – வடிந்து.)

164. இவ்வாக்கியங்களை – க்களைந்தெழுதுக. – க் கொண்ட தோளினை உடையானுக்கு இக்காரியஞ் செய்தல் அருமையன்று. (**வலு**– பலம்; **வழு** – குற்றம், கேடு, தவறு, பழிப்புரை.)

165. பரதவர் – வீசி மீன் பிடிப்பர். இச் சாரலிற் பல – வளர்கின்றன. தேவியின் முன் கையில் உள்ள – கழன்று விழுந்தது. (**வலை; வழை** – சுரபுன்னை; **வளை** –சங்கு, கைவளை, துளை, உத்திரம்.)

166. தச்சர் – கொண்டு மரம் அரிவர். எசமானனைக் கண்ட நாய் – குழைத்து நின்றது. (**வால்; வாள்.**)

167. அருச்சுனன் விடுத்த – கன்னனது தேரிற் பூட்டிய பரிகளைக் கொன்றது. – என்பவன் இராமன் கணையால் உயிர்நீத்த வானர வேந்தன். எமது செம்மல் அந்தணர் – என வாழ்த்தினார். (**வாலி**– வானர வீரருள் ஒருவன் ; **வாழி; வாளி** – அம்பு, காதணிவகை.)

168. – செறிந்த கடலிலே நீந்தினான். – பழம் முக்கனிகளுள் ஒன்றாகும். – பருவத்துப் பெண் ஒருத்தியை விவாகஞ்செய்ய மறுத்தான். (**வாலை** – இருதுவாகாத பெண், திராவகம் வடிக்கும் பாண்டம்; **வாழை; வாளை** – மீன்வகை.)

169. எரிந்த – அணைந்தது கண்டு அதனை மறுபடியுங் கொழுத்தினாள். ஞானிகளுக்கு விதி – இல்லை. (**விலக்கு; விளக்கு.**)

170. அறநூ லுணர்ந்தோர் பாவச் செயல்களை – வாழ்வர். மாணாக்கருக்கு விளங்காதவற்றை – கூறல் ஆசிரியர் கடன். (**விலக்கி; விளக்கி** – தெளிவாக்கி, துலக்கி, பொடியிட்டுப் பற்றவைத்து.)

171. தன் வழியில் – கிடந்த ஆற்றைக் கடந்து சென்றான். மாணாக்கன் ஆசிரியன் கேட்ட வினாவை – அதற்குத்தக்க விடை இறுத்தான். (**விலங்கி** – குறுக்கிட்டு, தடுத்து, ஒளிவிட்டு, கொன்று; **விளங்கி.**)



RangaRakes tamilnavarasam.com

**172.** நேற்றுப் பரிசளிப்பு – எங் கழகத்திலே நடைபெற்றது. இலங்கையில் – மரஞ்செறிந்த காடுகள் உண்டு. அவன் – புடைக்க உணவு அருந்தினான். (**விலா; விழா** – கொண்டாட்டம், உற்சவம்; **வீளா.**)

**173.** கிளியின் – கேட்ட திசைபற்றிச் சென்றான். – இல்லா மாந்தர்க்கு நிறம் புலப்படாது. (**விழி** – கண்; **விளி** – ஓசை, அழைப்பு.)

**174.** ஒருவரை விருந்திற்கு – அவரைக் குறைகூறல் ஆகாது. அவன் நித்திரையின்றி – இருந்தான். (**விழித்து; விளித்து** – அழைத்து, பாடி.)

**175.** இராவணனுக்குச் சூர்ப்பணகையால் – துன்பம் அளப்பரியன. ஒரு பொருளைப்பெற – ஒருவனுக்கு அதனை அடைதல் அரிதாகாது. (**விழைந்த** – விரும்பிய; **விளைந்த** – உண்டாகிய, முதிர்ந்த.)

**176.** வித்திடாமல் – பெறுவார் யாருமிலர். பெரியோரின் – விழுமிய பொருள்களிலேயே இருக்கும். (**விழைவு** – விருப்பம், புணர்ச்சி; **விளைவு** – விளைபொருள், முதிர்ச்சி, நிகழ்ச்சி.)

**177.** பெருமழை பெய்தமையால் – பெருகி வயலை நிறைத்தது.– இட்டுக் கரைக்காத தேநீர் இனிமைதராது. (**வெல்லம்** – கருப்பஞ்சாற்றுக் கட்டி; **வெள்ளம்** – நீர்ப்பெருக்கு, கடல், நீர்.)

**178.** அவ்வீரன் எறிந்த – எதிரியின் மார்பிற் பாய்ந்தது. – எய்த கணையாற் காமங்கொண்டு இரவுமுழுவதுந் தூங்காதிருந்தான். (**வேல்; வேள்** – மன்மதன், முருகக்கடவுள்.)

**179.** சோழனது – பாண்டியனைத் துதிக்கையாலே தூக்கி எறிந்தது. தன் – புகுந்து முளைக்கீரை பிடுங்கிக் கறியாக்கித் தன் விருந்தினரை உபசரித்தான். (**வேலம்** –தோட்டம்; **வேழம்** – யானை, மூங்கில், கரும்பு, வேழநோய்.)

**180.** அவன் – யாதுமின்றித் தன் வாழ்வை வாளா கழிக்கின்றான். எக் காரியத்தையுந் தக்க – பார்த்துச் செய்தல் வேண்டும். (**வேலை; வேளை** – பொழுது, சமயம், காலம்.)

**(2)** பின்வருங் கூட்டங்களிலுள்ள சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

அரி, அறி; அலை, அளை; கலை, கழை; வலை, வளை; வேலை, வேளை; மனம், மணம்; கரி, கறி; விரல், விறல்; அன்னம், அண்ணம்; பொருப்பு, பொறுப்பு.



## அதிகாரம் 2.

## சொல்லாக்க மரபு

**4.** **சொல்** என்பது வாக்கியத்திற்கு உறுப்பாய் எழுத்தினால் ஆக்கப் பட்டுப் பொருள் குறித்து வருவது. சொல் எனினும் மொழி எனினும் ஒக்கும். எழுத்து உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்தம் என நான்கு வகைப்படும்.

அவற்றுள், **உயிரெழுத்தாவன** அ, ஆ, ............ ஔ என்னும் பன்னிரண்டுமாம்; **மெய்யெழுத்தாவன** க், ங், ச், ................ ன் என்னும் பதினெட்டுமாம் ; **உயிர்மெய்யெழுத்தாவன** க, கா, கி, .............. னௌ என்னும் இருநூற்றுப்பதினாறுமாம்.

இவை மெய்யின் மேல் உயிரேறி நிற்பன:
கா = க்;+ ஆ ; சி = ச் + இ ; மு =ம்+ உ.
**ஆய்தம்** என்பது ஃ என்னும் ஒன்றே.

**5.** உயிர் பன்னிரண்டனுள் அ,இ,உ,எ,ஒ, என்னும் ஐந்துங் குற்றோசை உடையனவாதலாலே **குற்றெழுத்துக்கள்** எனப்படும்.

ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்னும் ஏழும் நெட்டோசை உடையன வாதலாலே **நெட்டெழுத்துக்கள்** எனப்படும்.

மெய்பதினெட்டனுள் க்,ச்,ட்,த்,ப்,ற் என்னும் ஆறும் வல்லென்னும் ஓசையை உடையனவாதலாலே **வல்லெழுத்துக்கள்** எனப்படும்.

ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் என்னும் ஆறும் மெல்லென்னும் ஓசையை உடையனவாதலாலே **மெல்லெழுத்துக்கள்** எனப்படும்.

ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்னும் ஆறும் வல்லென்று இசையாமலும் மெல் லென்று இசையாமலும் இடைநிகர்த்த ஓசையை உடையனவாதலாலே **இடையெழுத்துக்கள்** எனப்படும்.

**6.** அ, இ, உ என்பன மொழிக்கு அகத்தாதல் புறத்தாதல் சுட்டுப் பொருளில் வரும்போது **சுட்டெழுத்துக்கள்** எனப்படும்.

**உ–ம்:** அவன், இவன், உவன் – அ, இ, உ என்பன மொழிக்கு அகத்துறுப்பு. அம்முருகன், இம்முருகன், உம் முருகன் – அ, இ, உ என்பன மொழிக்குப் புறத்துறுப்பு.



RangaRakes
tamilnavarasam.com

7. எ, யா, ஆ, ஓ, ஏ என்பன மொழிக்கு முதலிலாதல் ஈற்றிலாதல் வினாப்பொருளில் வரும்போது **வினாவெழுத்துக்கள்** எனப்படும்.

**உ-ம்:** எவன், யாவன் – எ, யா என்பன மொழிக்கு முதலிலே அகத்துறுப்பு.

எந்நாகன், யாங்ஙனம் – எ, யா என்பன மொழிக்கு முதலிலே புறத்துறுப்பு.

முருகனா, கந்தனோ – ஆ,ஓ என்பன மொழிக்கு ஈற்றிலே புறத்துறுப்பு.

ஏவன் – ஏ என்பது மொழிக்கு முதலிலே அகத்துறுப்பு.

முருகனே – ஏ என்பது மொழிக்கு ஈற்றிலே புறத்துறுப்பு.

8. (அ, ஆ), (இ, ஈ), (உ, ஊ), (எ,ஏ), (ஒ,ஓ), (ஐ,இ), (ஔ,உ), (க,ங), (ச,ஞ), (ட,ண), (த,ந), (ப,ம), (ற,ன) என்னும் ஒவ்வொரு சோடியும் **இனவெழுத்துக்கள்** எனப்படும்

9. **மாத்திரை** என்பது கண்ணிமைப்பொழுது, அல்லது கைந் நொடிப் பொழுதாம். குற்றெழுத்திற்கு ஒரு மாத்திரையும், நெட்டெழுத்திற்கு இரு மாத்திரையும், மெய்யெழுத்திற்கும் ஆய்தத்திற்கும் அரை மாத்திரையும், உயிர் மெய் யெழுத்திற்கு அதன்மீது ஏறிய உயிரளவு மாத்திரையுங் கூறப்படும்.

10. தமிழ் மொழியிற் சில எழுத்துக்களே மொழிக்கு முதலிலுஞ் சில எழுத்துக்களே மொழிக்கு இறுதியிலும் வரும்.

(i) பன்னீருயிரும் அவை ஏறிய க்,ச்,த்,ந்,ப்,ம் என்னும் ஆறு மெய்களும் வ, வா,வி, வீ, வெ, வே, வை, வெள, ய, யா, யு, யூ, யோ, யௌ, ஞ, ஞா, ஞெ, ஞொ, என்னும் உயிர் மெய்களும் மொழிக்கு முதலாகி வரும்.

**உ-ம்:** அணி, ஆடை, இரை, ஈரல், உரை, ஊர், எலி, ஏவல், ஐயம், ஒலி, ஓடு, ஔவை, கரை, காரை, கிறி, கீறல், குறை, கூறல், கெலி, கேள்வி, கைதை, கொடை, கோடை, கௌவை ; சடை, சாணி, சினம், சீர், சுறா, சூழ்ச்சி, செவி, சேவல், சையம், சொறி, சோறு, சௌரியம் ; தடை, தாடி, தினை, தீமை, துணி, தூசு, தெற்கு, தேவை, தையல், தொடை, தோடு, தௌவை; நடை, நாடு, நிலை, நீளம், நுனி, நூல், நெந்பு, நேரம், நைதல், நொடி, நோன்பு, நௌவி; படை, பால், பிடி, பீடு, புடை, பூட்டு, பெடை, பேடு, பையல், பொறை, போலி, பௌவம் ; மலை, மான், மின், மீன், முனை, மூட்டு, மெய், மேடு, மையல், மொட்டு, மோடு, மௌவல்; வலி, வாள், விடை, வீடு, வெயில், வேலி, வைப்பு, வெளவால்; யன்னல், யானை, யுகம், யூகம், யௌவனம், ஞமலி, ஞானம், ஞெகிழ்ச்சி, ஞொள்கல்.





(ii) எகரம் அல்லாத பதினோருயிர்களும் ண், ம், ன், ய், ர், ல், ழ், ள் என்னும் எட்டு மெய்களும் மொழிக்கு இறுதியாகி வரும்.

**உ-ம்:** சில, பலா, செவி, தீ, மடு, பூ, சே, கை, நொ, போ, வெள, புண், வரம், மான், வேய், கார், கால், பாழ், வாள்.

சிறுபான்மை ஞ், ந், வ் என்பனவும் மொழிக்கு இறுதியாகி வரும்.

**உ-ம்:** உரிஞ் (உரிஞ்சுதல்), வெரிந் (முதுகு), தெவ் (பகை), அவ் (அவை).

11. மொழியிடையே மெய்யோடுமெய் கூடுங் கூட்டம் **இடைநிலை மயக்கம்** எனப்படும்.

(i) வல்லெழுத்து மயங்கி நிற்குங் கூட்டங்கள் பின்வருமாறு:–
க்க் (ஆக்கம்), ச்ச் (எச்சம்), ட்ட் (பட்டு), த்த் (பத்து), ப்ப் (வெப்பம்), ற்ற் (வெற்றி), ட்க் (வெட்கம்), ட்ச் (வெட்சி), ட்ப் (நட்பு), ற்க்(கொற்கை), ற்ச்(முயற்சி), ற்ப்;(கற்பு),

(ii) மெல்லெழுத்து மயங்கி நிற்குங் கூட்டங்கள் பின்வருமாறு:–
ங்ங் (அங்ஙனம்), ஞ்ஞ் (அஞ்ஞான்று), ண்ண் (அண்ணம்), ந்ந் (மெய்ந்நீட்சி), ம்ம் (அம்மை), ன்ன் (அன்னம்;), ங்க் (பங்கு), ஞ்ச் (இஞ்சி), ண்ட் (வண்டு), ந்த் (பந்து), ம்ப் (அம்பு', ன்ற்(பன்றி), ஞ்சி(கஞ்சி), ண்க் (உண்கலம்), ண்ச் (வெண்சோறு), ண்ஞ் (வெண்ஞமலி), ண்ப் (பண்பு), ண்ம் (அண்மை), ண்ய் (மண்யாது), ண்வ் (மண்வலிது), ம்ய் (மரம்யாது), ம்வ் (மரம் வலிது), ன்க் (தின்கை), ன்ச் (நன்செய்), ன்ஞ் (புன்ஞமலி), ன்ப் (அன்பு), ன்ம் (நன்மை), ன்ய் (பொன் யாது), ன்வ் (பொன் வலிது.)

(iii) இடையெழுத்து மயங்கிநிற்குங் கூட்டங்கள் பின்வருமாறு:–
ய்ய் (வெய்யோன்), ல்ல் (வெல்லம்), வ்வ் (எவ்வம்), ள்ள் (கள்ளம்), ய்க் (வாய்க்கால்), ய்ச் (பாய்ச்சல்), ய்த் (எய்தல்), ய்ந் (மெய்ந்நீட்சி), ய்ப் (வாய்ப்பு), யம் (மெய்ம்மயக்கம்), ய்வ் (வேய்வலிது), ய்ஞ் (வேய்ஞ்ஞாற்சி), ய்ங் (வேய்ங்குழல்), ர்க் (வேர்கடிது), ர்ச் (அதிர்ச்சி), ர்த் (வேர்தீது), ர்ந் (வேர்நீட்சி), ர்ப் (வேர் பெரிது), ர்ம் (வேர்மாட்சி), ர்வ் (வேர்வலிது), ர்ய் (வேர்யாது), ர்ஞ் (வேர்ஞாற்சி), ர்ங் (ஆர்ங்கோடு), ல்க் (பல்குதல்), ல்ச் (வேல்சிறிது), ல்ப் (வேல்



RangaRakes
tamilnavarasam.com

பெரிது), ல்வ் (செல்வம்) , ல்ய் (வேல்யாது), ழ்க் (வீழ்க்க) ழ்ச் (வீழ்ச்சி), ழ்த் (ஆழ்தல்), ழ்ந் (வீழ்ந்தன), ழ்ப் (தாழ்ப்பு), ழ்ம் (வீழ்மாண்டது), ழ்வ் (வீழ்வலிது), ழ்ய் (வீழ்யாது), ழ்ஞ் (வீழ்ஞான்றது), ழ்ங் (பாழ்ங்கிணறு), ள்க் (வாள்கடிது), ள்ச் (வாள்சிறிது), ள்ப் (வாள்பெரிது), ள்வ் (கள்வன்), ள்ய் (வாள்யாது).

**12.** மொழிக்கு முதலிலே நிற்கத்தகாத எழுத்து மொழி முதலெழுத்தாய் நிற்குஞ் சொல்லும் மொழிக்கு இறுதியிலே நிற்கத்தகாத எழுத்து மொழியிறுதி எழுத்தாய் நிற்குஞ் சொல்லும் மொழிக்கு இடையிலே நிற்கத்தகாத கூட்டம் மொழியிடைநிலையாய் நிற்குஞ் சொல்லுந் தமிழோசையைச் சிதைக்கும் என்பதுபற்றித் தமிழ்ச் சொற்கள் எனப்படா. அன்றியும், தமிழெழுத்தல்லாத பிற எழுத்துக்களைக் கொண்ட சொற்களையும் அக் காரணம் பற்றித் தமிழ்ச் சொற்களாகா என விலக்கலாம்.

**வினா** டம்பம், இடிக்கெற், சக்தி, புஷ்பம் என்பன தமிழ்ச் சொற்களாகா என்பதை நியாயங்கூறிச் சாதிக்க. இவற்றைத் தமிழோசைப்படுத்த வரும் உருவங்களையும் தருக.

**விடை** டம்பம் என்பது மொழிக்கு முதலிலே நிற்கத்தகாத டகரத்தை மொழிமுதல் எழுத்தாகக் கொண்டமை பற்றித் தமிழ்ச்சொல் லாகாது.

இடிக்கெற் என்பது மொழிக்கு இறுதியிலே நிற்கத்தகாத றகரத்தை மொழியிறுதி எழுத்தாகக் கொண்டமை பற்றித் தமிழ்ச் சொல்லாகாது.

சக்தி என்பது மொழிக்கு இடையிலே நிற்கத்தகாத க்த் என்னுங் கூட்டத்தை இடைநிலையாகக் கொண்டமை பற்றித் தமிழ்ச் சொல் லாகாது.

புஷ்பம் என்பது தமிழெழுத்தல்லாத ஷ் என்னும் வேற்றுமொழி எழுத்தைக் கொண்டமைபற்றித் தமிழ்ச் சொல்லாகாது.

இவற்றைத் தமிழோசைப்படுத்த வரும் உருவங்கள் இடம்பம், இடிக்கெற்று, சத்தி, புட்பம் என்பன.

## பயிற்சி

**1.** மேல்வருஞ் சொற்களிலுள்ள வல்லொற்றுக்களை இன மெல்லொற்றுக்களாக்கப் பெறப்படுஞ் சொற்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்க:

குச்சி, பாட்டம், பத்து, கப்பம், குற்றம்.





**2.** அரங்கு, இரும்பு, ஒழுங்கு, வண்டு, விலங்கு என்னுஞ் சொற்களுக்கும் அவற்றிலுள்ள மெல்லொற்றுக்களை இனவல்லொற்றாக்கப் பெறப்படுஞ் சொற்களுக்கும் பொருள் வேறுபாடு தோன்றுமாறு வாக்கியங்கள் அமைக்க.

**3.** மேல்வருவனவற்றிலே சுட்டெழுத்துக்களையும் வினா வெழுத்துக்களையுந் தேர்ந்தெடுத்து அவை அகத்துறுப்பாகவோ புறத்துறுப்பாகவோ இருக்கின்றன எனக் கூறுக.

**(i)** ஆராற் கேடு? வாயாற் கேடு.

**(ii)** கறுப்புநாய் வெள்ளை நாயாகுமா?

**(iii)** இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை.

**(iv)** மானம் பெரிதோ? பிராணன் பெரிதோ?

**(v)** அவர் 'அம்முதல் ஈராறாவி' என்றனரா?

**4.** பின்வருஞ் சொற்களுள்ளே தமிழ்ச் சொல்லாகாதனவற்றை நியாயங் கூறி விலக்குக. அவற்றைத் தமிழோசைப்படுத்த வரும் உருவங்களையுந் தருக.

லாபம், இயக்கன், டாம்பீகம், உதிஷ்டிரன், உலோபம், இடாக்டர், பொலீஸ், பருப்பதம், பக்தி, அர்த்தம், ரோமம், சேட், பதுமம், கட்சி, நஷ்டம், அஸ்திரம், காப்பியம், விஷயம், தூலம்.

**13.** சொல்லானது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்லென நான்கு வகைப்படும்.

**1.** **பெயர்ச் சொல்** என்பது புலனறிவிற்கு விடயமாகிய பொருளை உணர்த்துஞ் சொல்லாம்.

**உ-ம்:** மண், நீர், மலை, விலங்கு, புள்.

பெயர்ச்சொல் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் இவை பற்றியுஞ் சுட்டு வினா முதலியன பற்றியும் வரும்.

**உ-ம்:**

| | |
|---|---|
| **பொருள் :** | குழையன், குழையள், குழையர், குழையது, குழையவை. |
| **இடம் :** | நிலத்தவன், நிலத்தவள், நிலத்தவர், நிலத்தது, நிலத்தவை. |
| **காலம் :** | ஓணத்தவன், ஓணத்தவள், ஓணத்தவர், ஓணத்தது,ஓணத்தவை. |
| **சினை :** | திணிதோளன், திணிதோளள், திணிதோளர். |
| **குணம் :** | பெரியன், பெரியள், பெரியர், பெரியது, பெரியவை. |
| **தொழில் :** | ஆடுவான், ஆடுவாள், ஆடுவார், ஆடலது, ஆடலவை. |



RangaRakes
tamilnavarasam.com

**சுட்டு** : அவன், அவள், அவர், அது, அவை

**வினா** : யாவன், யாவள், யாவர், யாது, யாவை.
எவன், எவள், எவர், எது, எவை.

**பிற** : பிறன், பிறள், பிறர், பிறிது, பிற

**மற்றை** : மற்றையவன், மற்றையவள், மற்றையவர், மற்றையது, மற்றையவை.

2. **வினைச்சொல்** என்பது பொருளின் புடைபெயர்ச்சியாகிய தொழிற் பண்பின் காரியத்தை உணர்த்துஞ் சொல்லாம். வினைச் சொல்லானது தெரிநிலை வினை, குறிப்பு வினை என இருவகைப்படும். தெரிநிலை வினையாவது காலங் காட்டும் உறுப்பைத் தெரிநிலையாக (வெளிப்படையாக) உள்ளது. குறிப்பு வினையாவது காலங்காட்டும் உறுப்பைக் குறிப்பாக உள்ளது. தெரிநிலைவினை, குறிப்புவினை என்னும் இரண்டும் முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மும்மூன்று வகைப்படும்.

(i) **தெரிநிலைவினைமுற்றாவது** தெரிநிலையாகக் (வெளிப்படையாகக்) காலத்தைக் காட்டிப் பொருள்பற்றி முற்றி நிற்கும் வினைச் சொல்லாம்.

**உ-ம்.** வந்தான், நடக்கின்றான், போவான்.

(ii) **தெரிநிலைவினைப் பெயரெச்சமாவது** தெரிநிலையாகக் காலத்தைக் காட்டிப் பொருள்பற்றிமுற்றாது பெயர் கொண்டு முடியும் வினைச் சொல்லாம்.

**உ-ம்.** வந்த கந்தன், நடக்கின்ற கந்தன், போகுங் கந்தன்.

இங்கு, வந்த, நடக்கின்ற, போகும் என்னுஞ் சொற்கள் பொருள்பற்றி முற்றாது கந்தன் என்னும் பெயர்கொண்டு முடிதலாலே தெரிநிலைவினைப் பெயரெச்சங்களாதல் அறிக.

(iii) **தெரிநிலைவினை வினையெச்சமாவது** தெரிநிலையாகக் காலத்தைக் காட்டிப் பொருள்பற்றி முற்றாது வினைகொண்டு முடியும் வினைச் சொல்லாம்.

**உ-ம்.** உழுதுவருவான், உண்ணவருவான், அவ்வாறு நிகழின் வருவான்.

இங்கு, உழுது, உண்ண, நிகழின் என்னுஞ் சொற்கள் பொருள்பற்றி முற்றாது வருவான் என்னும் வினைகொண்டு முடிதலாலே தெரிநிலைவினை வினையெச்சமாதல் அறிக.





(iv) **குறிப்புவினைமுற்றாவது** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் இவைபற்றித் தோன்றிக் குறிப்பாகக் காலத்தைக் காட்டிப் பொருள்பற்றி முற்றாது நிற்கும் வினைச்சொல்லாம்.

| | | |
|---|---|---|
| பொன்னன் | – | பொருள் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. |
| அகத்தினன் | – | இடம் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. |
| குணத்தினன் | – | காலம் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. |
| செங்கண்ணன் | – | சினை அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. |
| கரியன் | – | குணம் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. |
| கடுநடையன் | – | தொழில் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. |

(v) **குறிப்புவினைப் பெயரெச்சமாவது** குறிப்பாகக் காலத்தைக் காட்டிப் பொருள்பற்றி முற்றாது பெயர் கொண்டு முடியும் வினைச்சொல்லாம்.

**உ-ம்.** அரிய கந்தன், நல்ல கந்தன், கரியகந்தன்.

இங்கு, அரிய, நல்ல, கரிய என்பன குறிப்புவினைப் பெயரெச்சங்களாதல் அறிக.

(vi) **குறிப்புவினை வினையெச்சமாவது** குறிப்பாகக் காலத்தைக் காட்டிப் பொருள்பற்றி முற்றாது வினைகொண்டு முடியும் வினைச் சொல்லாம்.

**உ-ம்.** கவலை இன்றி வாழ்கிறான், அறம் அன்றிச் செய்யான், வேண்டினால் அல்லது கொடான். இங்கு, இன்றி, அன்றி, அல்லது என்பன குறிப்புவினையெச்சங்களாதல் அறிக. இம்முற்றுக்களும் எச்சங்களும் **உடன்பாட்டிலும் எதிர்மறையிலும்** வரும். உடன்பாட்டு வினைச்சொற்களை **விதிவினைகள்** என்றும் எதிர்மறை வினைச் சொற்களை **மறைவினைகள்** என்றுங் கூறுவது உண்டு.

**உ-ம்.** நடந்தான், நடந்த, நடந்து, சிறியன், சிறிய, மெல்ல என்பன **உடன்பாட்டுவினைகள்.**

நடந்திலன், நடவாத, நடவாது, அன்று, அல்லாத ; அன்றி என்பன **எதிர்மறைவினைகள்.**

3. **இடைச்சொல்** என்பது தனித்துநிற்கும் ஆற்றலின்றிப் பெயர்வினைகளைச் சார்ந்துநின்று பொருளை உணர்த்துஞ் சொல்லாம்.

**உ-ம்:** போல், நேர், என, என்று, மற்று, வாளா, இனி, தொறும், திண்ணென, திடுக்கென, ஐ, ஒடு, கு, இன், அது, கண், அத்து, இற்று, அன், இன்.



RangaRakes tamilnavarasam.com

4. **உரிச்சொல்** என்பது பொருளின் குணப்பண்பையேனும் தொழிற் பண்பையேனும் உணர்த்தும் சொல்லாம்.

**உ-ம்:** அறிவு, அச்சம், உண்ணல், உடுத்தல், கைப்பு, இனிப்பு, வட்டம், முக்கோணம், வெண்மை, செம்மை, தண்மை, மென்மை, சால, உறு, தவ, நனி, கழி, கூர், கடி.

அறிவு, அச்சம் போன்ற பண்புகள் பொருளெனவும் படுமாகையாற் பெயர்ச்சொல்லென்றுங் கூறப்படும்.

**14.** உலக வழக்கிற் சில சொற்கள் எழுத்துப் பிழையோடு வழங்கப் படும். அவை இழிவழக்கு என விலக்கப்படும்

## பெயர்ச்சொற்கள்

| உயர்வழக்கு | இழிவழக்கு | உயர்வழக்கு | இழிவழக்கு |
|---|---|---|---|
| அகப்பை | ஏப்பை | அருகு | அருகாமை |
| அழற்சி | அழர்ச்சி | இந்தஅண்டை | இந்தண்டை |
| இளநீர் | இளனீ | இன்னுமொன்று | இன்னொன்று |
| ஈர்க்கு | ஈக்கு | எண்ணெய் | எண்ணை |
| எலுமிச்சை | எலிமிச்சை | குடுமி | குடும்பி |
| குரல்வளை | குரவளை | கைம்மாறு | கைமாறு |
| கொப்புளம் | பொக்களம் | சமுசாரம் | சம்சாரம் |
| சர்க்கரை | சக்கரை | சிகைக்காய் | சீயாக்காய் |
| சிடுமூஞ்சி | சுடுமூஞ்சி | சீழ்க்கை | சீக்கை |
| சுகவீனம் | சுகயீனம் | சுடுநீர்,வெந்நீர் | சுடுதண்ணீர் |
| சுணைக்கேடன் | சுணைக்கெட்டவன் | சூழ்ச்சி(உபாயம்) | சூட்சி |
| செய்தி | சேதி | செய்ந்நன்றி | செய்நன்றி |
| செலவு | சிலவு | செவிடன் | செகிடன் |
| தசாநாதன் | திசாநாதன் | தலையணை | தலையணி |
| திறப்பு | துறப்பு | தீபாவளி | தீவாளி |
| தேவை | தேள்வை | நுங்கு | நொங்கு |
| நெருஞ்சி | நெரிஞ்சி | நெற்றி | நெத்தி |
| பப்படம் | பப்பளம் | பரிகாரி | பரியாரி |
| பரண் | பறண் | பருந்து | பிராந்து |
| பலா | பிலா | பார்ப்பனி | பாப்பாத்தி |
| பாய்ச்சல் | பாச்சல் | பா(நெசவுப்பா) | பாவு |





| | | | |
|---|---|---|---|
| பிண்ணாக்கு | புண்ணாக்கு | | |
| பிட்டு | புட்டு | பாகற்காய் | பாவற்காய் |
| பிழுக்கை | புழுக்கை | புடைவை | பிடவை |
| பீளை | பூளை | பூரணை | பவுறணை |
| புலிமுகச்சிலந்தி, புலிமெய்ச்சிலந்தி | புலிமச்சிலந்தி | | |
| பெண்டு(மனைவி) | பெண்டில் | மணவறை | மறவணை |
| மற்றைப்பொருள் | மற்றப்பொருள் | மாதுளை | மாதாளை |
| முக்காடு | மொட்டாக்கு | மெய்ஞ்ஞானம் | மெய்ஞானம் |
| வியர்வை,வியர் | வேர்வை | வெண்ணெய் | வெண்ணை |
| வெயில் | வெய்யில் | வைக்கோல் | வைக்கல் |

## வினைச்சொற்கள்

| உயர்வழக்கு | இழிவழக்கு | உயர்வழக்கு | இழிவழக்கு |
|---|---|---|---|
| அமர்த்துதல் (அடக்குதல்) | அமத்தல் | அயர்த்தல் (மறத்தல்) | அயத்தல் |
| அலக்கழித்தல் | அலைக்கழித்தல் | அவிழ்த்தல் | அவிட்டல் |
| உயர்த்துதல் | உயத்துதல் | உரோஞ்சுதல் | உரஞ்சுதல் |
| உலர்த்தல் | உணர்த்துதல் | ஏமாறுதல் | ஏமாந்போதல் |
| கத்தரிக்கோல் (கத்தரிகை) | கத்திரிக்கோல் | கத்தரித்தல் | கத்திரித்தல் |
| கவிழ்த்தல் | கவிட்டல் | காத்தல் (பாதுகாத்தல்) | கார்த்தல் (உறைத்தல்) |
| சுரண்டுதல் | சுறண்டுதல் | செயித்தல் | சயித்தல் |
| செலவழித்தல் | சிலவழித்தல் | துருவுதல் | திருவுதல் |
| நூர்த்தல் | நூத்தல் | பாய்ச்சுதல் | பாச்சுதல் |
| பராக்குப்பார்த்தல் | பிராக்குப்பார்த்தல் | | |

**15.** பின்வருஞ் சொற்கள் இருவகையாக வழங்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அவகீர்த்தி | அபகீர்த்தி | அவிர்ப்பாகம் | அவிப்பாகம் |
| ஆசூசம் | ஆசௌசம் | உற்சவம் | உச்சவம் |
| சமர்த்தன் | சமத்தன் | சயரோகம் | கயரோகம் |
| சனனம் | செனனம் | சுயம்பிரகாசம் | சொப்பிரகாசம் |
| நியாயம் | ஞாயம் | துற்குணம் | துர்க்குணம் |



RangaRakes
tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| துற்குறி | துர்க்குறி | பலம் | பெலம் |
| பலவந்தம் | பெலவந்தம் | பாலகன் | பாலன் |
| பிறவிடுதி | புறவிடுதி | புத்தகம் | பொத்தகம் |
| மற்கடம் | மர்க்கடம் | விசயம் | விசையம் |
| முகூர்த்தம் | முழுத்தம் | | |

**வினா (1)** பின்வரும் வாக்கியங்களிலே உள்ள பெயர் சொற்களையும் வினைச்சொற்களையுந் தேர்ந்தெடுக்க.

**(i)** நீ செய்த பாவஞ் சாலப் பல என நினைந்து நனி வருந்தினாய்.

**(ii)** அகத்தின் அழகு முகத்திற் றெரியும்.

**விடை (i)** நீ, பாவம், பல என்பன பெயர்ச் சொற்கள்.
செய்த, நினைந்து வருந்தினாய் என்பன வினைச்சொற்கள்.

**(ii)** அகம், அழகு, முகம் என்பன பெயர்ச் சொற்கள்.
தெரியும் என்பது வினைச்சொல்.

**வினா (2)** நட, அறி என்னும் வினையடிகளிற் பிறந்த குணப்பண்பைக் குறிக்குஞ் சொற்கள் எல்லாவற்றையும் எழுதுக.

**விடை (i)** நட – நடை, நடக்கை, நடப்பு, நடத்துகை, நடவாமை, நடத்தாமை.

**(ii)** அறி – அறிவு, அறிகை, அறிக்கை, அறிவிப்பு, அறியாமை, அறிவியாமை,

**வினா (3)** மேல்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்றொடர் ஒவ்வொன்றுக்கும் பதிலாக ஒவ்வொரு சொல் லிடுக.

(i) **ஆதிரையிற் பிறந்தவன்** ஒருவன் என்னிடம் வந்தான்.

(ii) **குழையினை உடையவன்** ஒருவன் அத்தெருவில் வீழ்ந்தான்.

**விடை (i)** ஆதிரையான் ஒருவன் என்னிடம் வந்தான்.

**(ii)** குழையினன் ஒருவன் அத்தெருவில் வீழ்ந்தான்.

## பயிற்சி 5

1. பின்வரும் வாக்கியங்களிலே உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையுந் தேர்ந்தெடுக்க.
   1. பாவலர் அருமை நாவலர் அறிவார்.
   2. ஆனைவரும் முன்னே, மணியோசைவரும் பின்னே,
   3. தேவர் தின்றாலும் வேம்பின் இயற்கை மாறாது.





   4. அன்பற்ற மாமிக்குக் கும்பீடுங் குற்றமே.
   5. உலையில் இட்ட அரிசி வெந்ததை ஓர் அகப்பையாலே அறியலாம்.
2. மேல்வரும் வாக்கியங்களிலே உள்ள பெயர்ச்சொற்களைத் தேர்ந் தெடுத்து அவற்றுள் ஒவ்வொன்றும் பொருள், இடம், காலம் முதலிய வற்றுள் எதுபற்றி வந்தது எனக் கூறுக.
   1. நல்லூரான் ஒருவனிடஞ் சென்றேன்.
   2. ஈவாரை விலக்குவார் யார்?
   3. தங்கச்சி நல்லள் என்றனர்.
   4. தடங்கண்ணானைத் தொழு.
   5. அவன் எங்குச் சென்றான்.?
3. கீழ்க்காணும் வாக்கியங்களிலே உள்ள வினைச் சொற்களைத் தேர்ந் தெடுத்து அவை ஒவ்வொன்றும் இன்ன வகையின எனக் கூறுக.
   1. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.
   2. பனி பெய்து குளம் நிறையாது.
   3. எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறும்.
   4. எமது இறை அறமன்றிப் பிற செய்யான்
   5. அவன் சிறிய தேர் ஊர்ந்து மெல்லச் சென்றான்.
4. பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்கள் இன்ன வகைப்பாற்படுமெனக் கூறுக.
   1. அவன் **வாளா** இருக்கின்றான் **வேலன்** சொன்னான்.
   2. **இனி**, எமது ஊருக்குப் போகலாம் **எனக்** கூறினேன்.
   3. படிக்குந் **தொறும்** அறிவு வளரும்.
   4. **தவச்**சேய் நாட்டில் **இருப்பவர்** தந்நாடு நினைந்து நினைந்து உருகுவர்.
   5. **மற்றுப்** பற்று யாதும் இன்றிக் **கடவுளைத்** தொழுதான்.
5. கீழ்க்காணும் வினையடிகளிற் பிறந்த பெயர்ச் சொற்களுட் குணப் பண்பைக் குறிக்குஞ் சொற்கள் எல்லாவற்றையுந் தருக:–
   உண், விடு, அரி, வை, தேய், செல், வாழ், கேள்.
6. பின்வரும் வாக்கியங்களில் இழி வழக்குச் சொற்களுக்குப் பதிலாக உயர்வழக்குச் சொற்கள் இடுக:–
   1. கந்தனின் பெண்டிலின் கண்களிற் பூளை சாடிற்று.
   2. அப்பாப்பாத்தி பிலாப்பழந் தின்று வயிறு குத்திக் கிடக்கின்றாள்.



RangaRakes

tamilnavarasam.com

3. அவ்விடையன் பறணிற் கிடந்த புண்ணாக்கை எடுத்து வந்தான்.
4. எனக்கு அருகாமையில் இரை தின்றுகொண்டு நின்ற கோழிக் குஞ்சை ஒரு பிராந்து இறாஞ்சியது.
5. பப்பளத்தொடு புட்டுத் தின்றேன்.
6. சுகயீனமாய்க் கிடந்தவன் ஒருவன் ஒரு பரியாரியைத் தன்னிடம் அனுப்பும்படி என்னை வேண்டிக்கொண்டான்.
7. கைச்சிலவிற்குக் காசு தேள்வைப்பட்டுத் துறப்புக் கொண்டு தன்பெட்டியைத் துறக்கின்றான்.
8. தலையணியிற்குட் கிடந்த பஞ்சை அவள் அவிட்டு எடுக்கின்றாள்.
9. ஆட்டுப் புழுக்கை சேர்க்கப் போனவன் நெரிஞ்சி முள்ளில் அகப்பட்டுக் கொண்டான்.
10. புகையிலை உணத்துதல் அலைக்கழிந்த வேலைகளில் ஒன்று.
11. அவள் அப்பாத்திரத்தைக் கவிட்டு அதன் புறத்தைச் சுறண்டுகிறாள்.
12. இன்னொரு வேளை மற்ற உச்சவம் நடக்குமென்று அவன் கூறினான்.
13. அவன் முளகாயை வெய்யிலில் உலத்துகின்றான்.
14. பவுறணையிலன்று மாதாளம்பழம் ஒன்று எனக்குக் கிடைத்தது.
15. தேங்காய் திருவும்போது விளக்கு நூந்தது.
16. நீ எனக்கு நொங்கு தருவாய் என்று நினைந்து ஏமாந்து போனேன்.
17. மறவணைக்குப் பட்டுப்பிடவை ஒன்று உடுத்திக் கொண்டு மணமகள் வந்தாள்.
18. அச்செகிடன் செய்நன்றி மறந்து எனது ஆடையைக் கத்திரிக் கோலாற் கத்திரிக்கின்றான்.
19. தனது உடம்பில் இருந்த வேர்வையை நீக்க அவன் சுடு தண்ணீரிலே முழுகுகின்றான்.
20. மெய்ஞானம் பெறுதற்கு உயிரைக் கார்க்கும் இறைவனை வழிபடவேண்டும்.

16. **திணை** என்பது சொல்குறிக்கும் பொருள் பகுத்தறிவுப் பொருளோ பகுத்தறிவில்லாப் பொருளோ எனக் காட்டுவது; பகுப்பு அல்லது சாதி எனப் பொருள்படும். திணை உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.





**உயர்திணையாவன** மக்கள், தேவர், நரகர் என்னும் மூவகைப் பகுத்தறிவுப் பொருள்களாம்.

**அஃறிணையாவன** விலங்கு, பறவை முதலிய பகுத்தறிவில்லாப் பொருள்களும் நிலம், வீடு முதலிய உயிரில்லாப் பொருள்களுமாம்.

17. **பால்** என்பது சொல்குறிக்கும் பொருள் ஆணோ, பெண்ணோ, பலரோ, ஒன்றோ, பலவோ எனக் காட்டுவது ; பிரிவு எனப் பொருள்படும். பால் உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்றும் அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என்றும் பிரிக்கப்படும்.

அவன், மற்றையான், போன்றான், சென்றான் என்பன
**உயர்திணை ஆண்பாற் சொற்கள்.**

அவள், மற்றையாள், போன்றாள், சென்றாள் என்பன
**உயர்திணைப் பெண்பாற் சொற்கள்.**

அவர், மற்றையார், போன்றார், சென்றார் என்பன
**உயர்திணைப் பலர்பாற் சொற்கள்.**

அது, மற்றையது, போன்றது, சென்றது என்பன
**அஃறிணை ஒன்றன்பாற் சொற்கள்**

அவை, மற்றையவை, போன்றன, சென்றன என்பன
**அஃறிணைப் பலவின்பாற் சொற்கள்.**

நான்,நாம், நீ, நீர், போன்றேன், போன்றோம், சென்றாய், சென்றீர் என்பன **இருதிணைப் பொதுச் சொற்கள்.**

18. **இடம்** என்பது சொல் குறிக்கும் பொருள் பேசும் பொருளோ, பேசும் பொருளினால் எதிர் முகமாக்கப்பட்டு முன்னின்று கேட்கும் பொருளோ, பேசப்படும் பொருளோ எனக் காட்டுவது. இடந் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

**தன்மையாவது** பேசும்பொருளின் இடம்.

**உ-ம்:** நான், யான், நாம், யாம், வந்தேன், வந்தோம் என்பன தன்மையிடச்சொற்கள்.

**முன்னிலையாவது** பேசும் பொருளினால் எதிர்முகமாக்கப்பட்டு முன்னின்று கேட்கும் பொருளின் இடம்.

**உ-ம்:** நீ, நீர், நீயிர், நீவிர், வந்தாய், வந்தீர் என்பன முன்னிலையிடச்சொற்கள்.

**படர்க்கையாவது** பேசப்படும் பொருளின் இடம்.

**உ-ம்:** அவன், அவள், அவர், அது, அவை, வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன என்பன படர்க்கை யிடச்சொற்கள்.



RangaRakes

tamilnavarasam.com

19. காலம் என்பது சொல்குறிக்கும் பொருளானது தொழிலினது கழிவோ, நிகழ்வோ, எதிர்வோ எனக் காட்டுவது. அது இறந்தகாலம், நிகழ்காலம். எதிர்காலம் என மூவகைப்படும்.

**இறந்தகாலமாவது** தொழில் கழிந்த காலம்.

**உ-ம்:** வந்தான், நடந்தான் என்பன இறந்தகாலச் சொற்கள்.

**நிகழ்காலமாவது** தொழில் ஆரம்பிக்கப்பட்டு முற்றுப் பெறாத காலம்.

**உ-ம்:** வருகின்றான், நடக்கின்றான் என்பன நிகழ்காலச் சொற்கள்.

**எதிர்காலமாவது** தொழில் பிறவாக் காலம்.

**உ-ம்:** வருவான், நடப்பான் என்பன எதிர்காலச் சொற்கள்.

**வினா** பின்வருஞ் சொற்களுக்குச் சொல்லிலக்கணங் கூறுக.
அவன், சீமாட்டி, நான், நீர், ஓடினோம், வருவாய், நிற்கின்றது, நடக்கின்றன, அவை, மற்றையவர்.

**விடை**

| | | |
|---|---|---|
| அவன் | – | உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைச் சுட்டுப்பெயர். |
| சீமாட்டி | – | உயர்திணைப் பெண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயர். |
| நான் | – | இருதிணை ஒருமைத் தன்மைப் பெயர். |
| நீர் | – | இருதிணைப் பன்மை முன்னிலைப் பெயர். |
| ஓடினோம் | – | இருதிணைப் பன்மைத் தன்மை இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று. |
| வருவாய் | – | இருதிணை ஒருமை முன்னிலை எதிர்காலத் தெரிநிலைவினைமுற்று. |
| நிற்கின்றது | – | அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை நிகழ்கால வினை. |
| நடக்கின்றன | – | அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை நிகழ்கால வினை. |
| அவை | – | அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைச் சுட்டுப்பெயர். |
| மற்றையவர் | – | உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர். |

## பயிற்சி 6

1. பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களினுடைய திணை பால்களைக் கூறுக.
   1. **கந்தன்** அங்கு இருக்கின்றான் என அவன் மகள் **கூறினாள்.**
   2. அவர் **உணர்ச்சி** ததும்பப் **பேசினார்.**
   3. இராமன் எய்த **அம்பு** தாடகையின் மார்பை ஊடுருவிச் **சென்றது.**
   4. **பொற்கொல்லர்** பொன்கொண்டு அணிகலஞ் செய்வர்.
   5. இருவருள் **ஒருத்தி** பாட **மற்றையவள்** ஆடினாள்.





2. கீழ்க்காணும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களின் இடங் காலங்களைக் கூறுக.
   1. அப்பெருமாட்டி தன் வீட்டிற்குட் **புகுந்தாள்.**
   2. நான் என்ன பிழை **செய்தேன்** என ஏங்கினேன்.
   3. நீ நேற்று எங்குச் **சென்றாய்?**
   4. நாம் நாளைக்குக் கோயிலுக்குப் **போவோம்.**
   5. நாம் இங்கு **நிற்கின்றோம்** என்பதை நீயிர் அறியீரா?
   6. நீ இங்கிருந்து எங்குச் **செல்வாய்** என எனக்கு உரை.
   7. அவ்வயலிலே மேய்ந்த பசுக்கள் எல்லாம் வீடு **சேர்ந்தன.**
   8. அவன் இங்கு **வருவான்** என நான் அறிந்தேன்.

3. மேற்காணுஞ் சொற்களுக்குச் சொல்லிலக்கணங் கூறுக:–
அது, பிறர், மருமகள், நாம், நீ, மூதாட்டி, வந்தனர், பிறிது, சென்றேன், வருவீர், அவர், கொல்லிச்சி.

20. **பதமாவது** ஓரெழுத்தாலாயினும் பலவெழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டுப் பொருளை அறிவிப்பது. பதம், சொல், மொழி என்பன ஒருபொருட் சொற்கள். பதம் பகாப்பதம், பகுபதம் என இருவகைப் படும்.

1. **பகாப்பதம்** என்பது பகுக்கப்படாத இயல்பினையுடையதாம். அது பெயர்ப்பகாப்பதம், வினைப் பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப் பதம் என நான்கு வகைப்படும்.
நிலம், நீர்,மலை, விலங்கு என்பன பெயர்ப்பகாப்பதம்
நட,வா,போ,செல் என்பன வினைப்பகாப்பதம்.
மற்று, பிற, உம், ஏ, ஓ என்பன இடைப்பகாப்பதம்.
சால, உறு, தவ, நனி, கடி என்பன உரிப்பகாப்பதம்.

2. **பகுபதம்** என்பது பகுதி, விகுதி முதலியனவாகப் பகுக்கப்படும் இயல்பினையுடையதாம். அது பெயர்ப் பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

அறிஞன் (அறி + ஞ் + அன்) என்பது பெயர்ப்பகுபதம்.
நடக்கின்றான் (நட + க் + கின்று + ஆன்) என்பது வினைப்பகுபதம்.
பகுபதவுறுப்புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறாம்.



RangaRakes tamilnavarasam.com

**21.** பகுதி என்பது பகுபதத்தின் முதலிலே நிற்கும் பகாப்பதமாம்.

**உதாரணம்:-**

| | |
|---|---|
| பொன்னன் என்பதில், பொன் என்னும் | பொருட்பெயர் பகுதியாம். |
| அகத்தன் என்பதில், அகம் என்னும் | இடப்பெயர் பகுதியாம். |
| ஓணத்தன் என்பதில், ஓணம் என்னும் | காலப்பெயர் பகுதியாம். |
| பல்லன் என்பதில், பல் என்னும் | சினைப்பெயர் பகுதியாம். |
| கரியன் என்பதில், கருமை என்னும் | பண்புப்பெயர் பகுதியாம். |
| செய்யன் என்பதில், செம்மை என்னும் | பண்புப்பெயர் பகுதியாம். |
| பாசி என்பதில், பசுமை என்னும் | பண்புப்பெயர் பகுதியாம். |
| வலைஞன் என்பதில் வலைமை என்னும் | சாதிப்பண்புப்பெயர் பகுதியாம். |
| நடையன் என்பதில் நடை என்னும் | தொழிற்பெயர் பகுதியாம். |
| உண்டான் என்பதில் உண் என்னும் | வினையடி பகுதியாம். |
| வந்தான் என்பதில் வா என்னும் | வினையடி பகுதியாம். |
| சென்றான் என்பதில் செல் என்னும் | வினையடி பகுதியாம். |
| சித்திரித்தான் என்பதில் சித்திரம் என்னும் | பெயர்ச்சொல் பகுதியாம். |
| நிகர்த்தான் என்பதில் நிகர் என்னும் | இடைச்சொல் பகுதியாம். |
| சான்றான் என்பதில் சால் என்னும் | உரிச்சொல் பகுதியாம். |
| செய்வித்தான் என்பதில் செய்வி என்னும் | பிறவினையடி பகுதியாம். |

**ந.க.** கு,டு,று என்னும் மூன்று உயிர்மெய்யீறுகளையுடைய சில வினையடி தம்மொற்று இரட்டி இறந்தகாலங் காட்டும்.

உ–ம்: புகு – புக்கான், நகு – நக்கான், தொகு – தொக்கான், விடு – விட்டான், தொடு – தொட்டான், போடு – போட்டான், உறு – உற்றான், பெறு – பெற்றான்.

**22.** **விகுதி** என்பது பகுபதத்தின் ஈற்றிலேநிற்கும் இடைப் பகாப்பதமாம். அவ்விகுதி பல வகைப்படும். அப்பல வகை விகுதிகளைக் கொண்ட சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லிற்கும் அருகில் அதன் தன் விகுதி இருத்தல் காண்க.

1. **பெயர் விகுதிகள் -** பொன்னன் (அன்), இடத்தான் (ஆன்), பிறன் (ன்), வடமன் (மன்), கோமான் (மான்), குழையள் (அள்), இடத்தாள் (ஆள்), கூனி (இ), பிறள் (ள்), கரியர் (அர்), இடத்தார் (ஆர்), தேவிமார் (மார்), கோக்கள் (கள்), பிறர் ( ர்), அது (து) , நெடுங்காலன (அ), அவை (வை), நுந்தை (தை), எங்கை (கை), எம்பி (பி) , எம்முன் (முன்), தோன்றல் (அல்) ,

2. **தொழிற்பெயர் விகுதிகள் -** ஓடுதல் (தல்), பாடல் (அல்) , தேட்டம் (அம்), கொலை (ஐ), கடக்கை (கை) , சேர்வை (வை),





போக்கு (கு), கடப்பு (பு) , வரவு (வு), மறதி (தி) நுகர்ச்சி (சி), கலவி (வி), விக்குள் (உள்), வேக்காடு (காடு), கோட்பாடு (பாடு) , தோற்றரவு (அரவு), வாரானை (ஆனை), கடவாமை (ஆமை), செய்வது (து).

3. **பண்புப்பெயர் விகுதிகள் -** நன்மை (மை), தொல்லை (ஐ) , மாட்சி (சி) , மாண்பு (பு) , மழவு (உ) நன்கு (கு) , நன்றி (றி) , நன்று (று), நலம் (அம்) .

4. **தெரிநிலைவினைமுற்று விகுதிகள் -** வந்தனன் (அன்) , வந்தான் (ஆன்) , வந்தனள் ( அள்), வந்தாள் (ஆள்) , நடந்தனர் (அர்), நடந்தார் (ஆர்), நடந்தன (அ) , நடவா (ஆ), நடந்தது (து), கூயிற்று (று), நடந்தனென் (என்), நடந்தேன் (ஏன்), நடப்பல் (அல்), நடப்பம் (அம்) , நடப்பேம் (ஏம்), நடப்போம் (ஓம்) , நடந்தனை (ஐ), நடந்தாய் (ஆய்), நடத்தி (இ), நடந்தனிர் (இர்), நடந்தீர் (ஈர்), வாழ்க (க) , வாழிய (இய), வாழியர் (அர்), மறால் (ஆல்), மறவேல் (ஏல்), நடமின் (மின்), உண்ணும் (உம்).

5. **குறிப்புவினைமுற்று விகுதிகள் -** கரியன் (அன்) , கரியள் (அள்), கரியார் (ஆர்), கரிது (து), கரியன் (அ), அற்று (று).

6. **தெரிநிலை வினைப் பெயரெச்ச விகுதிகள் -** செய்த (அ), செய்கின்ற (அ), செய்யும் (உம்) .

7. **தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் -** செய்து (உ) , தேடி (இ), போய் (ய்), உண்ணா (ஆ), உண்டென (என), செய்ய (அ), உண்ணின் (இன்), உண்டால் (ஆல்), செய்தக்கால் (கால்), செய்தானேல் (ஏல்), செய்தானெனின் (எனின்), செய்தானாயின் (ஆயின்) , செய்தானேனும் (ஏனும்), உணற்கு (கு), செய்தக்கடை (கடை), செய்த வழி (வழி), செய்த விடத்து (இடத்து), செய்தலும் (உம்), செய்யாமல் (மல்), செய்யாமை (மை), செய்யாமே (மே).

8. **குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி -** கரிய (அ).

9. **குறிப்புவினை வினையெச்ச விகுதிகள் -** மெல்ல (அ), அன்றி (றி) , அல்லது (து) , அல்லால் (ஆல்), அல்லாமல் (மல்), அல்லாக் கடை (கடை), அல்லாவழி (வழி), அல்லாவிடத்து (இடத்து).

10. **பிறவினை விகுதிகள் -** செய்வி (வி), நடப்பி (பி) போக்கு (கு), பாய்ச்சு (சு), உருட்டி (டு), நடத்து (து), எழுப்பு (பு), துயிற்று (று).



RangaRakes

tamilnavarasam.com

**11. வினைமுதற்பொருள் உணர்த்தும் விகுதிகள்** - அலரி (இ), பறவை (ஐ), எச்சம் (அம்), இவை முறையே அலர்வது. பறப்பது, எஞ்சுவது எனப் பொருள்படுதல் காண்க.

**12. செயப்படுபொருள் உணர்த்தும் விகுதிகள்** - ஊருணி (இ) தொடை (ஐ), நீத்தம் (அம்), இவை முறையே ஊராரால் உண்ணப்படுவது (குளம்), தொடுக்கப்படுவது (மாலை), நீத்தப்படுவது (வெள்ளம்) எனப் பொருள் படுதல் காண்க.

**13. கருவிப்பொருள் உணர்த்தும் விகுதிகள்** - மண்வெட்டி (இ), பார்வை (ஐ), நோக்கம் (அம்). இவை முறையே மண்வெட்டற்கருவி, பார்த்தற்கருவி (கண்), நோக்கற்கருவி (கண்) எனப் பொருள்படுதல் காண்க.

**14. துணிவுப்பொருள் விகுதிகள்** - போய்விட்டாள் (விடு), செய் தொழிந்தாள் (ஒழி).

**15. தற்பொருட்டுப்பொருள் விகுதி** - அடித்துக்கொண்டான் (கொள்).

**16. செயப்பாட்டுவினைப்பொருள் விகுதிகள்** - கட்டப்பட்டான் (படு), கட்டுண்டான் (உண்).

**17. பகுதிப்பொருள் விகுதிகள்** - எழுந்திருக்கின்றான் (இரு), உரைத் திடுகின்றான் (இடு), முருகனானவன் (ஆனவன்). சொல்லென்பது (என்பது), எழுத்தாவது (ஆவது).

**18. தன்மைப்பொருள் விகுதி** - ஆண்மை (மை).

**19. புணர்ந்து கெட்ட விகுதிகள்:-**

**(i)** தளிர், பூ, காய், கனி, நுரை, திரை, அலை என்பவற்றில் வினை முதற்பொருளை உணர்த்தும் இ என்னும் விகுதி புணர்ந்து கெட்டது.

**(ii)** ஊண், தீன், பூண், கோள், உரி, துணி, மடி, எழுத்து, பாட்டு என்பவற்றிற் செயப்படுபொருளை உணர்த்தும் அம் விகுதி புணர்ந்து கெட்டது.

**(iii)** நோக்கு என்பதிற் கருவிப்பொருளை உணர்த்தும் அம் விகுதி புணர்ந்து கெட்டது.

**(iv)** நட, நடப்பி என்பவற்றில் ஏவற்பொருளை உணர்த்தும் ஆய்விகுதி புணர்ந்துகெட்டது.





**(v)** கெடு, அடி என்பவற்றிலே தல் என்னுந் தொழிற்பெயர்விகுதி புணர்ந்து கெட்டது.

**20. காலங்காட்டும் விகுதிகள்:** சில விகுதிகள் இடைநிலைகளை ஏற்காது தாமே காலங்காட்டும்.

**(i)** உம் என்னுஞ் செய்யுமென் முற்று விகுதி **நிகழ்காலமும் எதிர்காலமுங்** காட்டும். உ-ம்: உண்ணும், நடக்கும்.

**(ii) பின்வருவன எதிர்காலங்காட்டும் விகுதிகள்:**

இ என்னும் முன்னிலை வினைமுற்று விகுதி.

**உ-ம்:** சேறி ; செல்வாய் என்னும் பொருளது.

ப என்னும் படர்க்கை வினைமுற்று விகுதி.

**உ-ம்:** நடப்ப; நடப்பார் என்னும் பொருளது.

க,இய, இயர், அல் என்னும் வியங்கோள் வினைமுற்று விகுதிகள்.

**உ-ம்.** வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல்.

ஆய், இ, ஆல், ஏல், மின், உம், ஈர் என்னும் முன்னிலை ஏவல்வினைமுற்று விகுதிகள்.

**உ-ம்:** உண்ணாய், உண்ணுதி, மறால், அழேல் நடமின், உண்ணும், உண்ணீர்.

**23. இடைநிலை** என்பது பகுபதத்தின் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலே நிற்கும் இடைப்பகாப்பதமாம். அது காலங்காட்டா இடைநிலை, காலங்காட்டும் இடைநிலை என இருவகைப்படும்.

**1. காலங்காட்டா இடைநிலை** பெயர்ப் பகுபதங்களில் வரும்.

**உ-ம்.**

| | |
|---|---|
| இடைச்சி, வலைச்சி என்பவற்றில், | ச் என்பது இடைநிலை. |
| அறிஞன், வறிஞன் என்பவற்றில் | ஞ் என்பது இடைநிலை. |
| வெள்ளாட்டி, மலையாட்டி என்பவற்றில் | ட் என்பது இடைநிலை. |
| வண்ணாத்தி, பாணத்தி என்பவற்றில் | த் என்பது இடைநிலை. |
| செட்டிச்சி, தச்சிச்சி என்பவற்றில் | இச் என்பது இடைநிலை. |
| கச்சினன், கழலினன் என்பவற்றில் | இன் என்பது இடைநிலை. |
| வானவன், வில்லவன் என்பவற்றில் | வ் என்பது இடைநிலை. |
| ஓதுவான், பாடுவான் என்பவற்றில் | வ் என்பது இடைநிலை. |

இங்கு ஓதுவான், பாடுவான் என்பன ஓதுகின்ற இயல்பினை யுடையவன், பாடுகின்ற இயல்பினையுடையவன் என்னும் பொருள்பட்டு வினை யாலணையும் பெயர்களாதல் அறிக.



RangaRakes tamilnavarasam.com

2. **காலங்காட்டும் இடைநிலைகள்** வினைப் பகுபதங்களில் வரும்.

(i) **இறந்தகால இடைநிலைகள்** த்,ட்,ற், இன், ய் என்பனவாம்.

நடந்தான் என்பதில், த் என்னும் இடைநிலை இறந்தகாலங் காட்டும்.
உண்டான் என்பதில் ட் என்னும் இடைநிலை இறந்தகாலங் காட்டும்.
தின்றான் என்பதில் ற் என்னும் இடைநிலை இறந்தகாலங்காட்டும்.
போனான் என்பதில் இன் என்னும் இடைநிலை முதற்குறைந்து இறந்தகாலங்காட்டும்.
எஞ்சியது என்பதில் இன் என்னும் இடைநிலை கடைக்குறைந்து இறந்தகாலங்காட்டும்.
போயது என்பதில் ய் என்னும் இடைநிலை இறந்தகாலங் காட்டும்.

**ந.க.** நடத்தல் என்னுந் தொழிற்பெயரில், த் என்னும் இடைநிலை காலங்காட்டாது. நடந்தான் என்னும் வினையாலணையும் பெயரில், த் என்னும் இடைநிலை இறந்தகாலங் காட்டும்.

(ii) **நிகழ்கால இடைநிலைகள்** ஆநின்று, கின்று, கிறு, ஆகிடந்து, ஆவிருந்து என்பனவாம்.

உண்ணாநின்றான் என்பதில் ஆநின்று என்னும் இடைநிலை நிகழ்காலங் காட்டும்.
உண்கின்றான் என்பதில் கின்று என்னும் இடைநிலை நிகழ்காலங்காட்டும்.
உண்கிறான் என்பதில் கிறு என்னும் இடைநிலை நிகழ்காலங்காட்டும்.
உண்ணாகிடந்தான் என்பதில் ஆகிடந்து என்னும் இடைநிலை நிகழ்காலங்காட்டும்.
உண்ணாவிருந்தான் என்பதில் ஆவிருந்து என்னும் இடைநிலை நிகழ்காலங்காட்டும்.

(iii) **எதிர்கால இடைநிலைகள் ப், வ்** என்பனவாம்.

நடப்பான் என்பதில், ப் என்னும் இடைநிலை எதிர்காலங்காட்டும்.
வருவான் என்பதில் வ் என்னும் இடைநிலை எதிர்காலங்காட்டும்.

24. **சாரியை** என்பது பதத்தோடு பதமாதல் விகுதியாதல் உருபாதல் சார்தற்பொருட்டு அவற்றைப் புணர்த்துவது அது பதச்சாரியை எழுத்துச்சாரியை என இருவகைப்படும்.

1. **பதச்சாரியை:** நடந்தனர் (அன்), ஒருபாற்கு (ஆன்), மாதுளம்பழம் (அம்), மண்ணாங்கட்டி (ஆம்), தொடையல் சூடி (அல்), மரத்திலை (அத்து), சிலவற்றை (அற்று), பதிற்றுப்பத்து (இற்று), நாகின்கால் (இன்), அவன்றன்னை (தன்), அவன்றான் (தான்), அவர்தம்மை (தம்), அவர்கள் (தாம்), எல்லாநம்மையும் (நம்), எல்லீர் நும்மையும் (நும்).

2. **எழுத்துச்சாரியை:** நடந்தது (அ), இல்லாப்பொருள் (ஆ), முருகனுக்கு (உ) , ஒன்றேகால் (ஏ) , பண்டைக்காலம் (ஐ), உண்குவான் (கு), செய்துகொண்டான் (து), ஆன்கன்று (ன்).





ஆவினுக்கு என்பதில் இன், உ என்னும் இரண்டு சாரியைகள் வந்தன.
மாத்தினுக்கு என்பதில் அத்து, இன், உ என்னும் மூன்று சாரியைகள் வந்தன.

25. **சந்தி** என்பது விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, சாரியைப்புணர்ச்சி, உருபுப்புணர்ச்சி என்னும் நால்வகைப் புணர்ச்சியிலுமுள்ள எழுத்துப் புணர்ச்சியாம்.

**உ-ம்:**

அவன் (அ + வ் + அன்) – விகுதிப் புணர்ச்சியில் வ் என்பது சந்தி.
கிளியழகு ( கிளி + ய் + அழகு ) – பதப்புணர்ச்சியில் ய் என்பது சந்தி.
ஆவினை (ஆ + வ் + இன் + ஐ) – சாரியைப்புணர்ச்சியில் வ் என்பது சந்தி
ஆவை (ஆ + வ் + ஐ) – உருபுப்புணர்ச்சியில் வ் என்பது சந்தி.

26. **விகாரம்** என்பது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று வகைத்தாம்.

அ + குடம் = அக்குடம். ககரவொற்றுத் தோன்றிற்று.
நட + த் + த் + அன் + அன் = நடந்தனன். சந்தியால் வந்த தகர வல்லொற்று நகர மெல்லொற்றாகத் திரிந்தது.
நல் + மை + நன்மை. லகரமெய் னகரமெய்யாகத் திரிந்தது.
மரம் + நீட்சி = மரநீட்சி. மகரமெய் கெட்டது.

**பயிற்சி 7**

1. பின்வருஞ் சொற்களின் பகுதிகள் இன்ன பகாப்பதங்கள் எனக் கூறுக:–
மாண்டான், நல்லூரான், சென்றான், ஆதிரையான், பிறர், நடத்தினான், வயிறன், போட்டான்.
2. மேல்வருஞ் சொற்களிலுள்ள இடைநிலைகள் இன்ன என எடுத்துக் காட்டுக. அவை இன்ன காலங் காட்டுகின்றன என்றுங் கூறுக:–
போகின்றான், நடப்பான், விஞ்சியன, கொல்லிச்சி, கண்டான், தந்தான், உடையினன், போனான்
3. பாட்டு, திரை, குடிமை, நோக்கம், மலர் என்னுஞ் சொற்களின் விகுதிகளையும் அவ்விகுதிகள் உணர்த்தும் பொருள்களையுந் தருக.
4. கீழ்வரும் பெயரெச்சங்களைத் தக்க வாக்கியங்களில் அமைக்க:–
உண்ட, வாழ்கின்ற, உணரும், வருகிற, பாடாநின்ற.
5. நடந்து, போய், புகின், நின்றால், விட்டானேல், உணற்கு, வந்ததும், செய்யாமல் என்னுந் தெரிநிலை வினையெச்சங்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் அமைக்க.



RangaRakes

tamilnavarasam.com

6. கீழ்க்காணுங் குறிப்பு வினையெச்சங்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் அமைக்க:–

அன்றி, இன்றி, அல்லாவிடத்து, அல்லாமல், அல்லது.

7. மேற்காணும் வாக்கியங்களிலுள்ள வினையெச்சங்களைத் தேர்ந் தெடுத்து அவை தெரிநிலை வினையெச்சங்களா, அன்றிக் குறிப்பு வினையெச்சங்களா எனக் கூறுக:–

1. கடலிலே துரும்பு கிடந்தாலும் மனதிலே சொற்கிடவாது.
2. காணி கொடாமற் காரியம் முடிந்தது.
3. கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா?
4. அவன் அன்பு இல்லாது பேசுகின்றான்.
5. கீழ்மக்கள் சாவாராயின் உலகஞ் செவ்விதாக நடைபெறும்.
6. கோழிகூவப் பொழுது புலர்ந்தது.
7. தீ இல்லாமற் புகை கிளம்பாது.
8. தேன் உண்டெனின் ஈ தேடிவரும்.
9. அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆட வேண்டும்.
10. பதறிச் செய்கிற காரியஞ் சிதறிக் கெட்டுப்போகும்.

27. **தொகைச்சொல்** என்பது வேற்றுமையுருபு முதலிய உருபுகள் இடையே கெட்டு நிற்க, இரண்டு முதலிய சொற்கள் பிளவுபடாது ஒருசொற்றன்மைப்பட்டுத் தொடருந் தொடர்ச்சியாம். அது அறு வகைப்படும்.

1. **வேற்றுமைத்தொகையாவது** பெயரோடு பெயரும் வினையுந் தொடர்ந்து நிற்றற்கண் ஐ முதலிய ஆறு வேற்றுமையுருபுகளும் இடையிலே தொக்குநிற்குந் தொகைச்சொல்லாம்.

**உதாரணம்:-**

| | |
|---|---|
| நிலங்கடந்தான் (நிலத்தைக் கடந்தான்). | – இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தலைவணங்கினான் (தலையால் வணங்கினான்) | – மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| முருகன் மனைவி (முருகனுக்கு மனைவி) | – நாலாம் வேற்றுமைத்தொகை |
| ஊர் நீங்கினான் (ஊரினீங்கினான்) | – ஐந்தாம் வேற்றுமைத்தொகை |
| முருகன் கை (முருகனது கை) | – ஆறாம் வேற்றுமைத்தொகை |
| குன்றக் கூகை (குன்றத்துக் கண் கூகை) | – ஏழாம் வேற்றுமைத்தொகை |

குழைக்காது என்பது குழையை உடைய காது என விரியுமாதலால் இரண்ட னுருபும் பயனும் உடன்றொக்க தொகை எனப்படும்.

பொற்குடம் என்பது பொன்னால் ஆகுங் குடம் என விரியுமாதலான் மூன்றனுருபும் பயனும் உடன்றொக்க தொகை எனப்படும்.





மன்றப்பனை என்பது மன்றத்துக்கண்ணே நின்கும் பனை என விரியுமாதலால் ஏழனுருபும் பயனும் உடன்றொக்கதொகை எனப்படும்.

வடுகக்கண்ணன் என்பது வடுக நாட்டின் கண்ணே பிறந்த கண்ணன் என விரியுமாதலால் ஏழனுருபும் பயனும் உடன்றொக்க தொகை எனப்படும்.

வடுகங்கண்ணன் என்பது வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என விரியுமாதலால் நான்கனுருபும் பயனும் உடன்றொக்க தொகை எனப்படும்.

2. **வினைத்தொகையாவது** பெயரெச்சத்தோடு பெயர்ச்சொல்லானது தொடர்ந்து நிற்றற்கண் விகுதியுங் காலங்காட்டும் இடைநிலையும் இடை யிலே தொக்கு நிற்குந் தொகைச் சொல்லாம்.

**உ-ம்:-** செய்குன்று, கொல்யானை, வருபுனல்.

இவை விரியுமிடத்துச் செய்யப்பட்ட குன்று, செய்யப்படுகின்ற குன்று, செய்யப்படுங் குன்று, கொன்றயானை, கொல்லுகின்றயானை, கொல்லும் யானை, வந்தபுனல், வருகின்றபுனல், வரும்புனல் என முன்பின் வருஞ் சொற்களின் குறிப்பால் ஒருகாலம் பற்றியும் முக்காலம் பற்றியும் விரியும்.

3. **பண்புத்தொகையாவது** பண்புப்பெயரொடு பண்பிப்பெயர் தொடர்ந்து நிற்றற்கண் இடையில் ஆகிய என்னும் உருபு தொக்குநிற்குந் தொகைச் சொல்லாம்.

| | |
|---|---|
| செந்தாமரை (செவ்விது ஆகிய தாமரை) | – வண்ணப் பண்புத்தொகை. |
| வட்டக்கல் (வட்டம் ஆகிய கல்) | – வடிவுப் பண்புத்தொகை. |
| ஒருபொருள் (ஒன்று ஆகிய பொருள்) | – அளவுப் பண்புத்தொகை. |
| ஓரணில் (ஒன்று ஆகிய அணில்) | – அளவுப் பண்புத்தொகை. |
| மூவேந்தர் (மூவர் ஆகிய வேந்தர்) | – அளவுப் பண்புத்தொகை. |
| இன்சொல் ( இனிது ஆகிய சொல்) | – சுவைப் பண்புத்தொகை. |
| சாரைப்பாம்பு (சாரைஆகியபாம்பு) | – இருபெயரொட்டுப்பண்புத்தொகை. |

**இருபெயரொட்டுப் பண்புத் தொகையாவது** பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயரும் ஒருபொருளின் மேலனவாய் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்றற் கண் ஆகிய என்னும் உருபு தொக்குநிற்குந் தொகைச் சொல்லாம்.

4. **உவமைத்தொகையாவது** உவமானச் சொல்லோடு உவமேயச் சொல்லானது தொடர்ந்து நிற்றற்கண்ணே போல முதலிய உவமவுருபுகள் கெட்டுநிற்குந் தொகைச் சொல்லாம்.

புலிமறவன் (புலிபோலும் வினையை உடைய மறவன்) – வினையுவமை.
மழைக்கை (மழைபோலும் வண்மையை உடைய கை) – பயனுவமை.
துடியிடை ( துடிபோலும் மெய்யினை உடைய இடை ) – மெய்யுவமை.
பவளவாய் (பவளம்போலும் நிறத்தினை உடைய வாய்) – பண்புவமை.



RangaRakes

tamilnavarasam.com

**5. உம்மைத்தொகையாவது** பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல் லானது தொடர்ந்து நிற்றற்கண்ணே எண்ணும்மை இடையிலும் இறுதியிலுந் தொக்குநிற்குந் தொகைச் சொல்லாம்.

இராப்பகல் (இரவும் பகலும்) – எண்ணலளவை உம்மைத்தொகை.
கழஞ்சேகால் (கழஞ்சுங் காலும்) – எடுத்தலளவை உம்மைத்தொகை.
நாழியாழாக்கு (நாழியும் ஆழாக்கும்) – முகத்தலளவை உம்மைத்தொகை.
சாணரை (சாணும் அரையும்) – நீட்டலளவை உம்மைத்தொகை.

உயர்திணைச் சொற்களானவை. தொடர்ந்துநின்று உம்மைத் தொகை ஆகும்போது ரகர விகுதியையாதல் கள் விகுதியையாதல் பெற்று வரும்.

சேர சோழ பாண்டியர் (சேரனுஞ் சோழனும் பாண்டியனும்).
பாங்கன் பாங்கிகள் (பாங்கனும் பாங்கியும்).

அஃறிணைச் சொற்களாயினும் பொதுத்திணைச் சொற்களாயினுந் தொடர்ந்துநின்று உம்மைத்தொகை ஆகும்போது கள் விகுதி பெற்றும் பெறாதும் வரும்.

ஆடுமாடு, ஆடுமாடுகள் (ஆடுகளும், மாடுகளும்).
தாய்தந்தை, தாய்தந்தைகள் (தாயுந் தந்தையும்).

**6. அன்மொழித் தொகையாவது** வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைக்குப் புறத்தே அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகளானவை தொக்கு நிற்குந் தொகைச் சொல்லாம்.

**உ-ம்: (i)** பூங்குழல் (பூவினையுடைய குழலினை உடையாள்) – இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

பொற்றொடி (பொன்னாலாகிய தொடியினை உடையாள்) – மூன்றாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

அணியிலக்கணம் (அணிக்கு இலக்கணஞ் சொல்லப்பட்ட நூல்)– நான்காம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

பொற்றாலி (பொன்னினாகிய தாலியை உடையாள்) – ஐந்தாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

கிள்ளிகுடி (கிள்ளியினது குடி இருக்கும் ஊர்) – ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.





கீழ்வயிற்றுக்கழலை (கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான்) – ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

**(ii)** தாழ்குழல் (தாழ்ந்த குழலினை உடையாள்)
– வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

**(iii)** கருங்குழல் (கரியதாகிய குழலினை உடையாள்)
– பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

**(iv)** துடியிடை (துடிபோலும் இடையை உடையாள்)
– உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

**(v)** உயிர்மெய் (உயிரும் மெய்யுங் கூடிப் பிறந்த எழுத்து) – உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

**28.** தொகைச் சொற்களுட் சில பல பொருள்படும்.

**உ-ம்:** தற்சேர்ந்தார் என்பது தன்னைச் சேர்ந்தார், தன்னோடு சேர்ந்தார், தன்கட்சேர்ந்தார் என மூன்று பொருள்படுதல் காண்க.

சொல்லிலக்கணம் என்பது சொல்லினது இலக்கணம், சொல் லுக்கு இலக்கணம், சொல்லின்கண் இலக்கணம், சொல்லினது இலக்கணங் கூறும் நூல் என நான்கு பொருள்படுதல் காண்க.

புலிகொல்யானை என்பது பன்மொழித்தொடர்; அது புலியைக் கொன்றயானை, புலியானது கொன்றயானை, புலியினாற் கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்படுதல் காண்க.

**வினா:** மேல்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களுக்குப் பதிலாகத் தொகைச் சொற்கள் இடுக:–

**(i)** சிறியனவாகிய ஆறுகள் பெரிதாகிய ஆற்றோடு சேர்கின்றன.
**(ii)** பூவினையுடைய குழலினை உடையாள் பெய்கின்ற மழையிலே நனைகின்றாள்.

**விடை:** **(i)** சிற்றாறுகள் பேராற்றோடு சேர்கின்றன.
**(ii)** பூங்குழல் பெய்மழையிலே நனைகின்றாள்.

**பயிற்சி 8**

**1.** வெண்கரும்பு, மதிமுகம், பலாமரம், செய்பயிர், பதினைந்து, பணிமொழி, யாழ்ப்பண், ஆதிபகவன், ஆடரங்கு, குறுமுனி, ஆண்டகை, முப்பத்து மூவர், சுனைக்குவளை, ஆயிழை, கொலைவாளி, அஞ்சிறை, விற்கை யிராமன், ஏந்திழை, பொன்னணிவீதி என்பன என்ன தொகைச் சொற் களாகுமெனக் கூறுக.



RangaRakes
tamilnavarasam.com

2. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள தொகைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பெயர்களையும் விரிகளையும் தருக:–

1. இம்மெல்லியல் அழிபொருளை உறுதுணையாக கொண்டு வாழ்கின்றாள்.
2. இளைஞனொருவன் இராப்பகலாக நல்லாசிரியனிடஞ் சொல்லிலக்கணங் கற்கின்றான்.
3. நிலமகள் புன்மக்களையும் பெரும் பொருளாகக் கொண்டு சுமக்கின்றாளே!
4. அந்த ஆண்டகை உழுபடைகொண்டு நெல்வயலை உழுகின்றான்.
5. அப் பொற்கொடி தன் கருங்குழலை நன்மலரால் அலங்கரிக்கின்றாள்.
6. புலிகொல்யானை ஒன்று ஓடிற்று.
7. அவனிடம் மரப்பாவை ஒன்று உண்டு.
8. என்னை நீங்கி இடர்க்கடலிலே மூழ்கின்ற மன்னர் மன்னனைத் தேற்றுவதே நின் கடன்.
9. இராமர் தமது ஆருயிர்த் தம்பியோடு கானகஞ் சென்றார்.
10. அவன் வடகலையொடு தென்கலையுங் கற்றுத் தேறியவன்.

3. பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களுக்குப் பதிலாகத் தொகைச் சொற்கள் இடுக:–

1. முருகன் **செம்பினாலாகிய குடம்** ஏந்திச் செல்கின்றான்.
2. எனது நண்பன் **எழுத்திற்கு இலக்கணஞ் சொன்ன நூலைக்** கற்கின்றான்.
3. **தாமரை மலர்போன்ற சிவந்த கண்களையுடைய வீரன்** ஒருவன் செய்த வீரச்செயல்களைப் புகழ்தல் இயலாது.
4. **திரைகள் ஆர்ந்த கடல் சூழ்ந்த உலகில்** உள்ளோர் செய்த தவத்தின் பயனாய் இராமர் பிறந்தார்.
5. **வில்லைக் கையில் ஏந்திய இராமன்** மாயமானைத் தொடர்ந்து சென்றான்.
6. **பவளம்போன்ற சிவந்த வாயினையுடைய** சீதை இராமரை நினைந்து உருகினாள்.
7. எனது தம்பி **தூய்தாகிய நீரையுடைய கங்கையிலே** நீராடுகின்றான்.
8. **நல்ல வினை** செய்தார்க்கு **நல்ல பிறப்புக்** கிடைக்கும்.



# அதிகாரம் 3

## புணர்ச்சி மரபு

29. புணர்ச்சியாவது நிலைமொழி வருமொழிகள் ஒன்றுபடப் புணர்வதாம். வாழை என்னுஞ் சொல்லோடு பழம் என்னுஞ் சொல்லானது புணரின், வாழைப்பழம் எனவரும். நடந்து என்னுஞ் சொல்லோடு போனான் என்னுஞ் சொல்லானது புணரின் நடந்து போனான் என வரும். இவ்வாறன்றி, வாழைபழம், நடந்துப்போனான் என்று புணர்த்தினால், இப்புணர்ச்சி தமிழ் கற்றார்க்கு ஓசைபற்றி நகை விளைக்கும்.

இக்காலத்திலே தமிழ்கற்றார் சிலர் சந்தி நோக்காது எழுதுவதே மாணாக்கருக்குத் தெளிவு பயக்கும் எனக்கருதிப் புணர்ச்சி விதிகளை ஓரிடத்துந் தழுவாது எழுதுகின்றனர். சந்தி தமிழ்மொழிக்கு உயிர் எனலாம். தக்க சந்தி இல்லாவிட்டால் ஓசையோடு பொருட்புலப்பாடுஞ் சில இடங்களிற் கெடும். ஆகவே, தமிழ்கற்கும் மாணாக்கர் புணர்ச்சி விதிகளுக்கு மாறாகாமல் வாக்கியங்கள் எழுதப் பழகவேண்டும்.

தெளிவின் பொருட்டு இன்ன இன்ன இடங்களிற் கடுமையான சந்திகளை விலக்கி எழுதுமாறும். ஓசைக்கேடு பொருட்கேடுகள் பயவாதவிடத்துச் சந்திகள் இன்றி எழுதுமாறும் இற்றைக் காலமரபை ஒட்டிக் கீழ்க் காட்டப்படும்.

அப்புணர்ச்சி விகாரப்புணர்ச்சி, இயல்புபுணர்ச்சி என இரு வகைப்படும். அவற்றுள்,

1. **விகாரப்புணர்ச்சியாவது** நிலைமொழி வருமொழிகளினுடைய முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்தும் எழுத்தாயினுஞ் சாரியை யாயினுந் தோன்றலுந் திரிதலுங் கெடுதலுமாம்.

மா + தளிர் = மாந்தளிர். நிலைமொழியீற்றில், நகர வொற்றுத் தோன்றிற்று)
கல் + சிறுமை = கற்சிறுமை. நிலைமொழியீறு திரிந்தது.
மரம் + வேர் = மரவேர். நிலைமொழியீறு கெட்டது.
ஆறு + பத்து = அறுபது. நிலைமொழிமுதல் குறுகிற்று.
ஆடு + மயிர் = ஆட்டுமயிர், நிலைமொழியிடையில் டகரந் தோன்றிற்று.
பனை + காய் = பனங்காய். நிலைமொழியீறு கெட்டு 'அம்' சாரியை தோன்றிச்சாரியையீற்று மகரம் வருமொழிமுதலுக்கு இனமாய்த் திரிந்தது.





RangaRakes

tamilnavarasam.com

**2.** **இயல்புபுணர்ச்சியாவது** தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களை அடையாததாம்.

மண் + மலை = மண்மலை, யானை + கரிது = யானைகரிது.

**30.** வேற்றுமையுருபு தொக்கு நிற்க நிலைமொழி வருமொழிகள் பொருந்தும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி என்றும், பிறவுருபு தொக்கு நிற்கவும், வேற்றுமையுருபு விரிந்து நிற்கவும் பொருந்தும் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி என்றுங் கூறப்படும்.

முருகன் கை – வேற்றுமையுருபு தொக்குநிற்கும் வேற்றுமைப்புணர்ச்சி.
தாமரைமுகம் – பிறவுருபு தொக்குநிற்கும் அல்வழிப் புணர்ச்சி.
கந்தன் வந்தான் – உருபு யாதுமின்றி நிற்கும் அல்வழிப் புணர்ச்சி.
மரத்தை ஏறினான் – வேற்றுமையுருபு விரிந்து நிற்கும் அல்வழிப் புணர்ச்சி.

**31.** நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழி முதலுயிர் ஏறிநிற்பது மரபு; எனினும், பெயரும் பெயருமாதல், பெயருந் தொழிலுமாதல் பிரிந் திசைக்குந் தொடர்களிலே தெளிவின் பொருட்டு மெய்யின் மேல் உயிரேறி நில்லாமை இற்றைக்கால மரபு.

**உ-ம்:** காலழகு, கந்தனில்லம், பொருளணி;
ஆசிரியர் இருவர், மரம் ஏறினான், கந்தன் அவன்.

**32.** உயிரோடு உயிர் மயங்காதாகையால், உயிரீற்றின்முன் உயிர்வரின், இடையே யகர வகரங்கள் என்னும் உடம்படுமெய்களுள் ஒன்று தோன்றும். உடம்படுமெய்யாவது வருமொழி முதலுயிருக்கு உடம்பாக நிற்கும் மெய் யாம். நிலைமொழியீற்று உயிரையும் வருமொழிமுதல் உயிரையும் உடம் படுத்தும் மெய்யெனினும் பொருந்தும்.

**33.** இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிரீற்றின்முன் உயிர்முதன்மொழி வந்தால் யகரமும், அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிரீற்றின் முன் உயிர்முதன்மொழி வந்தால் வகரமும், ஏ என்னும் உயிரீற்றின்முன் உயிர் முதன்மொழி வந்தால் யகர வகரங்களுள் ஒன்றும் உடம்படுமெய்யாக வரும்.

எனினும், பெயரும் பெயருமாதல் பெயருந் தொழிலுமாதல் பிரிந் திசைக்குந் தொடர்களில் உயிர்முன் உயிர்வந்தால், தெளிவின் பொருட்டு உடம்படு மெய்யின்றி வழங்கல் இற்றைக்கால மரபு.





**(i)** கிளியழகு, தீயழகு, தினையழகு;
விளவழகு, பலாவழகு, மடுவழகு, பூவழகு, நொவ்வழகு, கோவழகு, கௌவழகு, சேயடி, சேவடி.

**(ii)** கிளி அழகிது, தீ அழகிது, தினை அழகிது, விள அழகிது, பலா அழகிது, மடு அழகிது, பூ அழகிது.

**34.** பெயரும் பெயருமாதல் பெயருந் தொழிலுமாதல் பிரிந்திசைக்குந் தொடர்களிலே மயங்கா மெய்கள் ஒன்றன் முன் ஒன்று வந்தால், அவ் வெழுத்துக்கள் விகாரப்படாது நிற்பது தெளிவின் பொருட்டு இற்றைக்கால எழுத்தாளரால் வேண்டப்படும்.

அவர்கள் மூவர் – பெயரும் பெயரும் பிரிந்திசைக்குந் தொகை நிலைத் தொடர்.
வள்ளல் தெற்கே சென்றார் – பெயரும் பெயரும் பிரிந்திசைக்குந் தொகா நிலைத்தொடர்.
அரண் நின்றான் – பெயருந் தொழிலும் பிரிந்திசைக்குந் தொகை நிலைத்தொடர்.
வேல் தொடப்பட்டது – பெயருந் தொழிலும் பிரிந்திசைக்குந் தொகாநிலைத் தொடர்.

## உயிரீற்றுப்புணர்ச்சி

**35.** பின்வரும் புணர்ச்சிகளை நன்கு கவனிக்க:–

**1.**

| | |
|---|---|
| எ + அணி = எவ்வணி; | அ + அணி = அவ்வணி |
| எ + யானை = எவ்யானை; | அ + யானை = அவ்யானை. |
| எ + குதிரை = எக்குதிரை; | அ + குதிரை = அக்குதிரை. |
| எ + நாள் = எந்நாள்; | அ + நாள் = அந்நாள். |
| எந்த + அணி = எந்தஅணி; | அந்த + அணி = அந்த அணி (பிரிந்திசை) |
| எந்த + குதிரை = எந்தக்குதிரை; | அந்த + குதிரை = அந்தக்குதிரை. |
| எந்த + நாள் = எந்தநாள்; | அந்த + நாள் = அந்த நாள் |
| எந்த + யானை = எந்தயானை; | அந்த + யானை = அந்த யானை |

**2.**

| | |
|---|---|
| நாகு + அழகு = நாகழகு; | பஞ்சு + அழகு = பஞ்சழகு. |
| நாகு + யாப்பு = நாகியாப்பு; | பஞ்சு + யாப்பு = பஞ்சியாப்பு. |
| நாகு + அழகிது = நாகு அழகிது; | பஞ்சு + அழகிது = பஞ்சு அழகிது (பிரிந்திசை) |
| நாகு + யாது = நாகு யாது; | பஞ்சு + யாது = பஞ்சுயாது. (பிரிந்திசை) |

கதவு + அழகு = கதவழகு
கதவு + யாப்பு = கதவியாப்பு
கதவு + அழகிது = கதவு அழகிது. (பிரிந்திசை)
கதவு + யாது = கதவு யாது. (பிரிந்திசை)

**3.**

| | |
|---|---|
| நின்ற + பசு = நின்ற பசு; | நின்றன + பசு = நின்றன் பசு. |
| தன + கைகள் = தனகைகள்; | சில + தேர் = சில தேர். |



RangaRakes
tamilnavarasam.com

4. பல் + பல = பலபல, பலப்பல, பற்பல.
சில + சில = சிலசில, சிலச்சில, சிற்சில.
பல + கலை = பல கலை, பல்கலை; பல + ஞானம் = பலஞானம், பன்ஞானம்.
பல + நாள் = பலநாள், பன்னாள்; பல + மணி = பலமணி, பன்மணி.
பல + அணி = பலவணி, பல்லணி, பல அணி. (பிரிந்திசை)
சில + கலை = சிலகலை, சில்கலை; சில + ஞானம் = சிலஞானம், சின்ஞானம்.
சில = நாள் = சிலநாள், சின்னாள்; சில + மணி = சிலமணி, சின்மணி.
சில + அணி = சிலவணி, சில்லணி, சில அணி. (பிரிந்திசை)

5. ஆ + குறிது = ஆகுறிது; மா + குறிது = மாகுறிது.
உண்ணா + பசுக்கள் = உண்ணாபசுக்கள்; உண்ணா + கிடந்தன = உண்ணாகிடந்தன.

6. புளி + கறி = புளிக்கறி, புளிங்கறி; புளி + சோறு = புளிச்சோறு, புளிஞ்சோறு.
புளி + தயிர் = புளித்தயிர், புளிந்தயிர்; புளி + பாளிதம் = புளிப்பாளிதம், புளிம்பாளிதம்.

7. பரணி + கார்த்திகை = பரணிகார்த்திகை; யானை + குதிரை = யானைகுதிரை. (உம்மைத்தொகை).
பங்குனி + திங்கள் = பங்குனித்திங்கள்; சாரை + பாம்பு = சாரைப்பாம்பு. (பண்புத்தொகை).
காவி + கண் = காவிக்கண்; பனை + கை = பனைக்கை. (உவமைத்தொகை)
பருத்தி + குறிது = பருத்திகுறிது; யானை + கரிது = யானைகரிது.
கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது; தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது.

8. நீ + குறியை = நீகுறியை; பீ + குறிது = பீகுறிது.
மீ + கூற்று = மீக்கூற்று; மீ + கோள் = மீக்கோள்.
மீ + தோல் = மீந்தோள்.

9. தந்தையொடு + போனான் தந்தையொடுபோனான்;
கந்தனது + கை = கந்தனது கை.
ஒரு + கை = ஒருகை; இரு + கை = இருகை; அறு + தலை = அறுதலை.
எழு + புறம் = எழுபுறம்; ஏழு + வாயில் = ஏழுவாயில்.
அடு + களிறு = அடுகளிறு ; அது + குறிது = அதுகுறிது.
எது + பெரிது = எதுபெரிது.

10. கொக்கு + கால் = கொக்குக்கால்; கொக்கு + கடிது = கொக்குக்கடிது.
ஏகு + கால் = ஏகுகால்; அறிந்து + தந்தான் = அறிந்துதந்தான்.
சால்பு + பெரிது = சால்புபெரிது; பொருது + சென்றான் = பொருது சென்றான்.

11. நாகு + கள் = நாகுகள்; சிறகு + கள் = சிறகுகள்;
கொக்கு + கள் = கொக்குகள்; பரப்பு + கள் = பரப்புக்கள்
(இங்கு கள் என்பது பன்மையுருபு)





12. அங்கு + கொண்டான் = அங்குக்கொண்டான்; எங்கு + கொண்டான் = எங்குக்கொண்டான்.
அன்று + கண்டான் = அன்று கண்டான்; என்று + கண்டான் = என்று கண்டான்.
அங்கு என்பது ஏழாம் வேற்றுமை இடப்பொருளுணர்த்தும் இடைச்சொல்.
அன்று என்பது ஏழாம் வேற்றுமைக் காலப் பொருளுணர்த்தும் இடைச் சொல்.

13. தெள்கு + கால் தெள்குகால்; எஃகு + கடுமை = எஃகுகடுமை.
நாகு + கால் = நாகுகால்; வரகு + கதிர் = வரகுகதிர்.

14. நாடு + அரண் = நாட்டரண்; சாறு + நிறம் = சாற்று நிறம்.
முருடு + கால் = முருட்டுக்கால்; முயிறு + வயிறு = முயிற்று வயிறு.

15. கன்று + ஆ = கற்றா; மருந்து + பை = மருத்துப்பை.
கரும்பு + நாண் = கருப்புநாண்; கரும்பு + வில் = கருப்பு வில்.
பந்து + அழகு = பந்தழகு; விருந்து + சோறு = விருந்துச்சோறு.
நரம்பு + நடு = நரம்புநடு; எறும்பு + வளை = எறும்புவளை.
என்பு + உடம்பு = எற்புடம்பு, அன்பு + தளை = அற்புத்தளை.
குரங்கு + மனம் = குரக்குமனம்.

16. பண்டு + காலம் = பண்டைக்காலம்; இன்று + நாள் = இற்றைநாள்.
அன்று + கூலி = அற்றைக்கூலி ; இன்று + நலம் = இற்றைநலம்.

17. வடக்கு + கிழக்கு = வடகிழக்கு; வடக்கு + மேற்கு = வடமேற்கு.
வடக்கு + திசை = வடதிசை; வடக்கு + மலை = வடமலை, வடக்குமலை.
குணக்கு + திசை = குணதிசை; குடக்கு + கடல் = குடகடல்.
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு; தெற்கு + மேற்கு = தென்மேற்கு.
தெற்கு + திசை = தென்றிசை ; தெற்கு + மேற்கு = தென் மேற்கு.
தெற்கு + திசை = தென்றிசை ; தெற்கு + மலை = தென்மலை, தெற்கு மலை.
மேற்கு + கடல் = மேல்கடல்; மேற்கு + வீதி = மேல்வீதி.
கிழக்கு + கரை = கீழ்கரை; கிழக்கு + சார் = கீழ்சார்.
கிழக்கு + திசை = கீழ்த்திசை.
கிழக்கு + குளம் = கீழைக்குளம்; கிழக்கு + சேரி = கீழைச்சேரி.
மேற்கு + சேரி = மேலைச்சேரி; மேற்கு + குளம் = மேலைக்குளம்.
தெற்கு + வடக்கு = தெற்கு வடக்கு ; வடக்கு + தெற்கு = வடக்குத் தெற்கு.

வடகிழக்கு என்பது வடக்குங் கிழக்கும் ஆய ஒருகோணம் எனப் பொருள்படுதலால் உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாதல் காண்க. வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்பனவும் அத்தொகையாதல் அறிக.

18. தெங்கு + காய் = தேங்காய்.



RangaRakes tamilnavarasam.com

19. ஒன்று + பத்து = ஒருபது; இரண்டு + பத்து = இருபது.
மூன்று + பத்து = முப்பது; நாலு + பத்து = நாற்பது.
ஐந்து + பத்து = ஐம்பது; ஆறு + பத்து = அறுபது.
ஏழு + பத்து = எழுபது; எட்டு + பத்து = எண்பது.
ஒன்பது + பத்து = தொண்ணூறு; ஒன்பது + நூறு = தொளாயிரம்.
பத்து + ஒன்று = பதினொன்று ; பத்து + இரண்டு = பன்னிரண்டு.
பத்து + மூன்று = பதின்மூன்று; பத்து + ஐந்து = பதினைந்து.
ஒன்று + படை = ஒருபடை; இரண்டு + வட்டி = இருவட்டி, இரண்டு வட்டி

மூன்று + வட்டி = முவ்வட்டி, மூவட்டி, மூன்றுவட்டி.
ஒன்று + அணில் = ஓரணில்; இரண்டு + அணில் = ஈரணில்.
ஒருவன் + வேந்தன் = ஒருவேந்தன் . இருவர் + வேந்தர் = இருவேந்தர்.
மூவர் + வேந்தர் = மூவேந்தர்.
ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று; இரண்டு + இரண்டு = இவ்விரண்டு.
மூன்று + மூன்று = மும்மூன்று ; நான்கு + நான்கு = நந்நான்கு.
ஐந்து + ஐந்து = ஐவைந்து; ஆறு + ஆறு = அவ்வாறு.
ஏழு + ஏழு = எவ்வேழு ; எட்டு + எட்டு = எவ்வெட்டு.
பத்து + பத்து = பப்பத்து.

20. பூ + கொடி = பூக்கொடி, பூங்கொடி; பூ + சோலை = பூச்சோலை, பூஞ்சோலை
பூ + தடம் = பூத்தடம், பூந்தடம்; பூ + பணை = பூப்பணை, பூம்பணை.

21. அவனே + கொண்டான் = அவனே கொண்டான்; அவனோ + கொண்டான் = அவனோகொண்டான்

22. வழுதுணை + காய் = வழுதுணங்காய் ; தாழை + பூ = தாழம்பூ.
ஆவிரை + வேர் = ஆவிரம்வேர்; புன்னை + கானல்= புன்னையங்கானல்;
முல்லை + புறவம் = முல்லையம்புறவம், முல்லைப்புறவம்.

23. பனை + கொடி = பனைக்கொடி (பனையை எழுதியகொடி).
பனை + காய் = பனங்காய்; பனை + தூண் = பனந்தூண்.
பனை + பழம் = பனம்பழம்; பனை + திரள் = பனந்திரள், பனைத்திரள்:
பனை + அட்டு = பனாட்டு.

24. செட்டி + தெரு = செட்டித்தெரு ; ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான்
தவ + பெரியன் = தவப்பெரியன்; கடி + கமலம் = கடிக்கமலம்.
ஏரி + கரை = ஏரிக்கரை; குழவி + கை = குழவிகை.
குழந்தை + கை = குழந்தைகை; கூப்பு + கரம் = கூப்புகரம்.
ஈட்டு + தனம் = ஈட்டுதனம்; நாட்டு + புகழ் = நாட்டுபுகழ்.

25. கருமை + குதிரை = கருங்குதிரை; செம்மை + ஆம்பல் = சேதாம்பல்.
சிறுமை + அறிவு = சிற்றறிவு ; பெருமை + அறிவு = பேரறிவு.
பசுமை + தார் = பைந்தார்; பசுமை + இலை = பச்சிலை.





## மெய்யீற்றுப் புணர்ச்சி

26. மண் + அகம் = மண்ணகம்; பொன் + ஒளி = பொன்னொளி – வேற்றுமை.
மண் + அளந்தாள் = மண் அளந்தாள்; கல் + எறிந்தான் = கல் எறிந்தான். – வேற்றுமைப்பிரிந்திசை.
மண் + அரிது = மண் அரிது; பொன் + அரிது = பொன் அரிது – அல்வழிப்பிரிந்திசை.

27. சிறுகண் + களிறு = சிறுகட்களிறு; பொன் + தகடு = பொற்றகடு. – வேற்றுமை
மண் + ஞாற்சி = மண்ஞாற்சி; பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி. – வேற்றுமை.
மண் + நீட்சி = மண்ணீட்சி; பொன் + நீட்சி = பொன்னீட்சி. – வேற்றுமை.
மண் + வன்மை = மண்வன்மை, பொன் + வன்மை = பொன்வன்மை. – வேற்றுமை.
மண் + கடிது = மண்கடிது; பொன் + கடிது = பொன்கடிது. – அல்வழி.
மண் + நீண்டது = மண் நீண்டது; பொன் + நீண்டது = பொன் நீண்டது. – அல்வழிப்பிரிந்திசை.

28. தூண் + நன்மை = தூணன்மை; செம்பொன் + நன்மை = செம்பொனன்மை. – வேற்றுமை.
தூண் + நிறுத்தினான் = தூண் நிறுத்தினான் ; செம்பொன் நிறுத்தான்= செம்பொன் நிறுத்தான். – வேற்றுமைப்பிரிந்திசை.
தூண் + நன்று = தூண் நன்று; செம்பொன் + நன்று = செம்பொன் நன்று. – அல்வழிப்பிரிந்திசை.

29. பாண் + குடி = பாண்குடி ; உமண் + குடி = உமண்குடி. – வேற்றுமை.
பரண் + கால் = பரண்கால்; கவண் + கால் = கவண்கால். – வேற்றுமை.
சாண் + கோல் = சாண்கோல், சாட்கோல். – அல்வழி.

30. தேன் + கடிது = தேன்கடிது; தேன் + ஞான்றது = தேன்ஞான்றது. – அல்வழி.
தேன் + யாது = தேன்யாது; தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி. – அல்வழி.
தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு – அல்வழி
தேன் + கடுமை = தேன்கடுமை; தேன் + மலிவு = தேன்மலிவு – வேற்றுமை
தேன் + யாப்பு = தேன்யாப்பு; தேன்+ மலர் = தேன்மலர், தேமலர். – வேற்றுமை
தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம் – வேற்றுமை

31. தன் + பகை = தன்பகை, தற்பகை; என் + பகை = என்பகை, எற்பகை – வேற்றுமை.
நின் + பகை = நின்பகை. – வேற்றுமை.

RangaRakes tamilnavarasam.com

**32.** **மரம் + நன்மை** = மரநன்மை; மரம் + அடி = மரவடி . – வேற்றுமை
**மரம் + வேர்** = மரவேர்; மரம் + கோடு = மரக்கோடு. – வேற்றுமை.
**வட்டம் + ஆழி** = வட்டவாழி ; வட்டம் + கல் . – அல்வழி.
**பவளம் + இதழ்** = பவளவிதழ்; பவளம் + வாய் = பவளவாய். – அல்வழி.
**கமலம் + கண்** = கமலக்கண். – அல்வழி.

**33.** வலம் + இடம் = வலமிடம்; நிலம் + வானம் = நிலம் வானம் – அல்வழி
உண்டனம் + யாம் = உண்டனம் யாம் புலியும் + யானையும் = புலியும் யானையும் – அவ்வழி
குளம் + கரை = குளக்கரை, குளங்கரை – வேற்றுமை
நாம் + கடியம் = நாங்கடியம், நிலம் + தீ = நிலந்தீ – அவ்வழி
உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு; முருகனும் தேவனும் = முருகனும் தேவனும் – அவ்வழி
மரம் + நீண்டது = மரம் நீண்டது; மரம் + மாண்டது = மரம் மாண்டது அவ்வழிப் பிரிந்திசை

**34.** எம் + ஞாண் = எஞ்ஞாண். எம் + நூல் = எந்நூல்;
நம் + ஞாண் = நஞ்ஞாண், நம் + நூல் = நந்நூல் ;
நும் + ஞாண் = நுஞ்ஞாண், நும் + நூல் = நுந்நூல் ;
தம் + ஞாண் = தஞ்ஞாண், தம் + நூல் = தந்நூல்.
எம் + மணி = எம்மணி, நம் + மணி = நம்மணி;
நும் + மணி = நும்மணி, தம் + மணி = தம்மணி.

**35.** அகம் + செவி = அகஞ்செவி, அஞ்செவி; அகம் + கை = அகங்கை, அங்கை.

**36.** வேய் + குறிது = வேய்குறிது; வேர் + சிறிது = வேர்சிறிது – அல்வழி.
யாழ் + பெரிது = யாழ்பெரிது; பேய் + பூதம் = பேய்பூதம். – அல்வழி.
நீர் + கலை = நீர்கனல்; இகழ் + புகழ் = இகழ்புகழ். – அல்வழி.
மெய் + புகழ் = மெய்ப்புகழ்; கார் + பருவம் = கார்ப்பருவம் – அல்வழி.
பூழ் + பறவை = பூழ்ப்பறவை. – அல்வழி.
நாய் + கால் = நாய்க்கால் ; தேர் + தட்டு = தேர்த்தட்டு – வேற்றுமை.
யாழ் + கோடு.
வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல்; ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு – வேற்றுமை.

**37.** தமிழ் + அரசன் = தமிழவரசன்; தமிழ் + பிள்ளை = தமிழ்ப்பிள்ளை, தமிழப்பிள்ளை.– வேற்றுமை.
தமிழ் + நாகன் = தமிழ்நாகன், தமிழநாகன்; – வேற்றுமை.
தமிழ் + வணிகன் = தமிழ்வணிகன், தமிழவணிகன் – வேற்றுமை
தாழ் + கோல் = தாழக்கோல். – வேற்றுமை
கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்; கீழ் + சாதி – வேற்றுமை
= கீழ்சாதி, கீழ்ச்சாதி; கீழ் + பிறப்பு = கீழ்ப்பிறப்பு. – வேற்றுமை





**38.** கல் + குறை = கற்குறை; முள் + குறை = முட்குறை – வேற்றுமை.
கல் + சிறுமை = கற்சிறுமை ; முள் + சிறுமை = முட்சிறுமை. – வேற்றுமை.
கல் + பெருமை = கற்பெருமை; முள் + பெருமை = முட்பெருமை. வேற்றுமை.
கல் + குறிது = கல்சிறிது, கற்குறிது; முள் + குறிது = முள்குறிது, முட்குறிது . – அல்வழி.
கல் + சிறிது = கல்சிறிது, கற்சிறிது; முள் + சிறிது = முள்சிறிது, முட்சிறிது. – அல்வழி.
கல் + பெரிது = கல்பெரிது, கற்பெரிது ; முள் + பெரிது = முள்பெரிது, முட்பெரிது . – அல்வழி.
கல் + பெரிது = கல்பெரிது, கற்பெரிது; முள் + பெரிது = முள்பெரிது, முட்பெரிது. – அல்வழி.
கல் + தீமை = கற்றீமை; முள் + தீமை = முட்டீமை. – வேற்றுமை.
கல் + தீமை = கல் தீது ; முள் + தீது = முள் தீது. – அல்வழிப்பிரிந்திசை.

கற்றீமை, முட்டீமை என்பவற்றைக் கல்லினது தீமை, முள்ளினது தீமை என விரித்து வழங்கல் சிறப்பு.

அவன் + தான் = அவன்றான் ; அவன் + தான் = அவடான். – அல்வழி.
அதனால் + தான் = அதனாற்றான் ; நடந்தால் + தான் = நடந்தாற்றான். – அல்வழி.

கல் + மாட்சி = கன்மாட்சி; முள் + மாட்சி = முண்மாட்சி. – வேற்றுமை.
அல்லல் + நோய் = அல்லனோய்; மருள் + நோய் = மருணோய். – அல்வழி.

இவற்றைக் கல்லின்மாட்சி, முள்ளின்மாட்சி, அல்லலாகிய நோய், மருளாகிய நோய் என விரித்து வழங்கலே சிறப்பு.

கல் + யாப்பு = கல்யாப்பு;முள் + யாப்பு = முள்யாப்பு. – வேற்றுமை.
கல் + யாது = கல்யாது; முள் + யாது = முள்யாது. – அல்வழி.
வில் + படை = விற்படை; முள் + படை = முட்படை . – அல்வழி.
நில் + கந்தா = நில்கந்தா; கொள் + கந்தா = கொள்கந்தா. – அல்வழி.
கொல் + களிறு = கொல்களிறு; கொள் + பொருள் = கொள்பொருள். – அல்வழி.
வேல் + தீது = வேல் தீது; வாள் + தீது = வாள் தீது. – அல்வழிப்பிரிந்திசை.
தோன்றல் + நல்லன் = தோன்றல் நல்லன்; வேள் + நல்லன் = வேள் நல்லன்.– அல்வழிப்பிரிந்திசை.
தோன்றல் + நன்மை = தோன்றனன்மை; வேள் + நன்மை = வேணன்மை. – அல்வழிப்பிரிந்திசை.

இவற்றைத் தோன்றலினது நன்மை, வேளினது நன்மை என உருபு விரித்து வழங்கல் சிறப்பு.



RangaRakes tamilnavarasam.com

கால் + குதித்து = கால்குதித்து; வாள் + போழ்ந்து = வாள் போழ்ந்து. – வேற்றுமை.
நெல் + கடிது = நெற்கடிது; சொல் + கடிது = சொற்கடிது. – அல்வழி.

பிரிந்திசையாதல்பற்றி, நெல் கடிது, சொல் கடிது என்றும் வழங்கலாம்.

39. புள் + கடுமை = புள்ளுக்கடுமை, புட்கடுமை. – வேற்றுமை.
புள் + நன்மை = புள்ளுநன்மை, புண்ணன்மை. – வேற்றுமை.
புள் + வன்மை = புள்ளுவன்மை, புள்வன்மை. – வேற்றுமை.
புள் + கடிது = புள்ளுக்கடிது, புட்கடிது. – அல்வழி.
புள் + நன்று = புள்ளுநன்று, புண்ணன்று. – அல்வழி.

பிரிந்திசையாதல்பற்றிப் புள் கடிது, புள் நன்று என்றும் புணர்த்தலாம்.

40. சோழன் + நாடு = சோழனாடு, சோணாடு; பாண்டியன் + நாடு = பாண்டியனாடு, பாண்டிநாடு.
மலையமான் + நாடு = மலையமானாடு, மலாடு;
தொண்டைமான் + நாடு = தொண்மைானாடு, தொண்டைநாடு.
மரம் + அடி = மரவடி, மராடி; குளம் + ஆம்பல் = குளவாம்பல், குளாம்பல்.

## பயிற்சி 9

1. பின்வருவனவற்றைப் புணர்த்துக:– கிளி + அழகு, மடு + அருமை, தெங்கு + காய், ஒன்று + அலை, இரண்டு + ஆடு, புளி + சோறு, கண் + ஒளி, தேன் + குடம், நம் + நூல், தோட்டம் + கிணறு, நன்மை + நூல், கள் + குடி, மருள் + நோய், சோழன் + நாடு, இதனால் + தான், இன்று + நாள்.

2. பின்வருவனவற்றைப் புணர்ச்சி நீக்கி எழுதுக.
செஞ்சோறு, கட்டிமை, கோயில், பாண்டிநாடு, மூவேந்தர், கண்ணிமை, மராடி, வெண்டாமரை, கண்மலம், சொற்றீமை, அரனடிமை, சேவடி.

3. மேல்வரும் வாக்கியங்களைப் புணர்ச்சிவிதி தழுவித்திருத்தி எழுதுக:–

1. அவனுக்கு கணிதம் கற்பித்தால் பயன்படாது.
2. அதனால்தான் அவன் அங்கு செல்லவில்லை.
3. ஒரு எலி ஓர் மரத்தில் செத்து கிடக்கின்றது.





4. அவன் செய்து கொண்ட வேலையை பாராட்டுவார் இல்லை.
5. அவன் என்நேரமும் நிற்பகையைப்பற்றி பேசுகிறான்.
6. ஆறுக் கடக்க போனவன் சேற்றில் புதைந்துக் கொண்டான்.
7. அவ்வாழையிலிருந்துப் பசுமைத்தார் ஒன்றை அறுத்து கொண்டான்.
8. தோட்டத்தில் பழமிருக்க தூரத்தில் போவானேன்?
9. கடை சங்க நூல்கள் கீழ்கணக்கு நூல்கள், மேல்கணக்கு நூல்கள் என இருவகைப்படும்.
10. புனல்நாடன் போர்களத்தில் பகைமன்னரை கொன்றான்.
11. முருகனும் கந்தனும் மெய்ஞானம் தரும் திறலானை தொழுதனர்.
12. உயர்குடியில் பிறந்தவரிடம் கல்லியறிவு இல்லாவிடினும் செய்நன்றி இருக்கும்.
13. மூலைமுடக்குகள் எல்லாம் திரிந்து அதனை தேடி பார்த்தேன்.
14. அவள் தான் அதனை செய்தான்.
15. பாரியின் மகள் பாணன் ஒருவனுக்கு பொன்னை சோறாக நல்கினாள்.

4. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் புணர்ச்சி விதி தழுவித் திருத்தி எழுதுக.

அம்மலையின் உச்சியை சேர்ந்ததும் எனது நண்பன் கீழே கலக்கம் கொண்டு நிற்கும் என்னை பார்த்து சிரித்தான். அதன்பின், ஒருவாறு என்மீது மனம் கசிந்தவனாய் தோற்றினான். அரைமணி நேரத்திற்குள் கீழிறங்கி கையில் பிடித்து கொண்டு மனம் தளராது ஏறுமாறு பலபல புத்திகள் புகட்டினவனாய் கடப்புகள் பலகடந்து என்னை மலைமீது வழிநடத்தினான். யான் தானும் மலைச்சிகரத்தை அடைந்தவுடன் உளம்தேறி இறைவன் மீது பல பாட்டுகள் பாடினேன்.



RangaRakes
tamilnavarasam.com

## அதிகாரம் 4.

# பெயர்ச்சொன் மரபு

**36.** பெயர்ச்சொல் என்பது புலனறிவிற்கு விடயமாகிய பொருளை உணர்த்துஞ் சொல்லாமென முற்கூறியமை காண்க.

அப்பெயர்ச் சொல்லானது ஒரு காரணமுமின்றி வழங்கிவருஞ் சொல்லாயின் காரணப்பெயரென்றும், பல பொருளுக்குப் பொதுவாய் வருவாயின் பொதுப்பெயரென்றும், ஒரு பொருளுக்கே சிறப்பாய் வருமாயின் சிறப்புப்பெயரென்றும், ஒரு காரணம் பற்றிப் பல பொருளுக்குப் பொதுவாகப் நிற்ப அவற்றுள் ஒன்றற்கே சிறப்பாய் வழங்கப்படுமாயின் காரணவிடுகுறிப் பெயரென்றுங் கூறப்படும்.

| | | |
|---|---|---|
| **உ-ம்:** | மரம், விலங்கு, புள் | – இடுகுறிப் பொதுப்பெயர். |
| | பனை, பலா, ஆடு, கோழி. | – இடுகுறிச் சிறப்புப்பெயர். |
| | அணி (அணியப்படுவது). | – காரணப் பொதுப்பெயர். |
| | வளை, சிலம்பு | – காரணச் சிறப்புப்பெயர். |
| | முக்கண்ணன், அந்தணன் | – காரணவிடுகுறிப்பெயர். |

**ந.க.** முக்கண்ணன் என்பது மூன்று கண்களையுடையவன் எனப் பொருள்படுதலால் எல்லாக் கடவுளர்க்குஞ் செல்லுமாயினுஞ் சிவபெருமானுக்கே இடுகுறியாய் வழங்கிவருஞ் சொல்லாதல் பற்றிக் காரணவிடுகுறிப்பெயராம்.

அந்தணன் என்பது வேதாந்தத்தை அணவுவோன் எனப் பொருள் படுதலாலே நால்வகைச் சாதியுள்ளும் வேதாந்தத்தை அணவுவோர்க்குச் செல்லுமாயினும் பிராமணனுக்கே இடுகுறியாய் வழங்கி வருதல்பற்றிக் காரணவிடுகுறிப் பெயராம்.

**37.** பெயர்ச்சொல்லானது இடம்பற்றித் தன்மைப்பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப்பெயரென மூன்று வகைப்படும்.

**உ-ம்:** நான், யான் என்னும் இரண்டுந் தன்மை யொருமைப்பெயராம்.

நாம், யாம், நாங்கள், யாங்கள் என்னும் நான்குந் தன்மைப் பன்மைப் பெயராம்.

நீ என்பது முன்னிலை யொருமைப் பெயராம்.





நீர், நீயிர், நீவிர், நீங்கள், எல்லீர் என்னும் ஐந்தும் முன்னிலைப் பன்மைப் பெயராம்.

அவன், அவள், அது, கண்ணன், குழையன் முதலிய பெயர்கள் படர்க்கையொருமைப் பெயராம்.

அவர், அவை, குழையர், குழையவை முதலியபெயர்கள் படர்க்கைப் பன்மைப்பெயராம்.

தன்மை முன்னிலைப் பெயர்களையுஞ் சுட்டுப் பெயர்களையும் பிரதிப்பெயர்கள் எனக் கூறலாம்.

**38.** படர்க்கைப் பெயர்கள் பால்பற்றி உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பெயர், உயர்திணைப் பெண்பாற் படர்க்கைப் பெயர், உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர், அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப்பெயர், அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயர் என ஐந்து வகைப்படும்.

**1.** உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பெயர்கள்
அன், ஆன், மன், மான், ன் முதலிய விகுதிகளை உடையன.
**உ-ம்:** குழையன், நல்லூரான், வடமன், கோமான், பிறன்.

**2.** உயர்திணைப் பெண்பாற் படர்க்கைப் பெயர்கள்
அள், ஆள், ள், இ, ஐ முதலிய விகுதிகளை உடையன.
**உ-ம்:** குழையள், நல்லூராள், பிறள், குறத்தி, இந்திரை.

**3.** உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்கள்
அர், ஆர், கள், மார், ர் முதலிய விகுதிகளை உடையன.
**உ-ம்:** குழையர், நல்லூரார், மனுக்கள், தேவிமார், பிறர்.

**4.** அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர்கள் து என்னும் விகுதியை உடையன.
**உ-ம்:** அது, யாது, நிலத்தது, வருவது, மற்றையது, பிறிது, உள்ளது, இல்லது.

**5.** அஃறிணைப் பலவின் பாற் படர்க்கைப் பெயர்கள்
அ, கள், வை முதலிய விகுதிகளை உடையன.
**உ-ம்:** பல, சில, பிற, வருவன, கோடுகள், மற்றையவை, வருபவை.

**39.** சில ஆண்பாற் சொற்களுக்குரிய பெண்பாற் சொற்கள் கீழே தரப் பட்டுள்ளன. அவற்றின் பொருள் பின்வரும் உதாரணங்கள் பற்றி அறியப்படும்:–

அம்பலவன் – அம்பலதில் ஆடியவன். அரசன் – அரசகுலத்திற் பிறந்தவன்.
அரசி – அரசனுக்கு மகள். ஆற்றலான் – ஆற்றலால் வென்றவன்.



RangaRakes
tamilnavarasam.com

கணக்கன் – கணக்காலே முயன்று உண்பவன். காமி – காமத்தாலே மயங்கியவன்.
கூத்தன் – கூத்தினைப் பயின்றவன். சைவன் – சிவனுக்கு அடியான்.
தமிழன் – தமிழைப்பேசுபவன். தென்மன் – தெற்கிலிருந்து வந்தவன்.
தோளன் – பலமுள்ள தோளை உடையவன். பிணியன் – பிணியால் வருந்துகின்றவன்.
பொன்னன் – பொன்னை உடையவன். மருத்துவன் – மருந்தினைக் கூட்டுபவன்.
மானி – மானத்தாற்கெட்டவன். வயிறன் – பெரிய வயிற்றை உடையவன்.
வாணிகன் – வாணிகத்தான் ஆயினான்.

| **ஆண்** | **பெண்** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|---|
| அகத்தான் – | அகத்தாள், அகத்தி | அடியான் – | அடியாள் |
| அப்பன் – | அம்மை | அரக்கன் – | அரக்கி |
| அரசன் – | அரசி | அவன் – | அவள் |
| அம்பட்டன் – | அம்பட்டச்சி / அம்பட்டத்தி | அன்னான் – | அன்னாள் |
| அழகன் – | அழகி | ஆடூஉ – | மகடூஉ |
| ஆண்டான் – | ஆண்டாள் | ஆயன் – | ஆய்ச்சி |
| இடையன் – | இடைச்சி | இந்திரன் – | இந்திராணி |
| இந்திராபதி – | இந்திரை | இயக்கன் – | இயக்கி |
| இளையன் (தம்பி) – | இளைச்சி (தங்கை) | இறைவன் – | இறைவி |
| ஈசுவரன் – | ஈசுவரி | ஈன்றான் – | ஈன்றாள் |
| உத்தமன் – | உத்தமி | உழவன் – | உழத்தி |
| எசமான் – | எசமாட்டி | எயினன் – | எயிற்றி |
| எலும்பன் – | எலும்பி | எளியன் – | எளியள் |
| எதிலன் (அன்னியன்) – | ஏதிலாள் | ஐயன் – | ஐயை |
| ஒருவன் / ஒருத்தன் – | ஒருத்தி | ஓசன் (ஆசிரியன்) – | ஓசி |
| கண்ணாளன் – | கண்ணாட்டி | கடைஞன் – | கடைச்சி |
| கண்டகன் – | கண்டகி | கணக்கன் – | கணக்கிச்சி |





| | | | |
|---|---|---|---|
| கணவன் – | கணவாட்டி / மனைவி | கள்ளன் – | கள்ளி கள்ளீச்சி (சாதிப்பெயர்) |
| கறுப்பன் – | கறுப்பி | கன்னான் – | கன்னாத்தி |
| காதலன் – | காதலி | காதுகன் – | காதுகி |
| காமுகன் – | காமுகி | கிரிசன் – | கிரிசை |
| கிருகி – | கிருகிணி | கிழவன் – | கிழவி, கிழத்தி |
| குட்டையன் – | குட்டைச்சி | குமரன் – | குமரி |
| குமாரன் – | குமாரி / குமாரத்தி | குயவன் – | குயத்தி |
| குறவன் – | குறத்தி, குறவி | குறளன் – | குறளி |
| கூத்தன் – | கூத்தி | கூனன் – | கூனி |
| கொல்லன் – | கொல்லிச்சி | கோமான் – | கோமாட்டி |
| சகோதரன் – | சகோதரி | சங்கரன் – | சங்கரி |
| சித்தன் (சிவன்) – | சித்தை (பார்வதி) | சிலதன் (தோழன்) – | சிலதி (சேடி) |
| சிவன் – | சிவை | சீபதி – | சீ (இலக்குமி) |
| சீலன் – | சீலி | சுந்தரன் – | சுந்தரி |
| சூரன் – | சூரி | செட்டி – | செட்டிச்சி |
| செடியன் (இழிந்தோன்) – | செடிச்சி | செம்படவன் – | செம்படத்தி / செம்படைச்சி |
| செய்யோன் (செந்நிறமுள்ளவன்) – | செய்யோள் | செல்வன் – | செல்வி |
| சேட்டன் (மூத்தவன்) – | சேட்டை | சோழியன் – | சோழிச்சி |
| தச்சன் – | தச்சிச்சி | தட்டான் – | தட்டாத்தி |
| தந்தை / தகப்பன் – | தாய் | தம்பி – | தங்கை |
| தமன் – | தமள் | தமையன் – | தமக்கை / தவ்வை |
| தருமவாளன் – | தருமவாட்டி | தலைவன் – | தலைவி |
| தற்பரன் – | தற்பரை | தனயன் / தனையன் – | தனையை (மகள்) |
| தனாட்டியன் (தனவாளன்) – | தனாட்டி | தாசன் – | தாசி (சேடி) |



RangaRakes
tamilnavarasam.com

தானவன் – தானவன் (அசுரப்பெண்)
திருவாளன் – திருவாட்டி
துணைவன் – துணைவி(மனைவி)
தூயவன் – தூயவள்
தேவராளன் – தேவராட்டி (சன்னதக்காரி)
தோழன் – தோழி,தோழிச்சி
நந்தனன் (புதல்வன்) – நந்தனை, நந்தனி நந்தினி
நம்பிரான் – நம்பிராட்டி
நாசனன் – நாசனி
நாயகத்தான் – நாயகத்தி
நாயன் – நாய்ச்சி
நிமலன் – நிமலை
நுமன் – நுமள்
பகவன், பகவான் – பகவதி
பதகன் (கொடும்பாவி) – பதகி
பரமேசுவரன் – பரமேசுவரி
பரன் – பரை
பறையன் – பறைச்சி
பாங்கன் – பாங்கி
பாடகன் – பாடகி
பார்ப்பனன் – பார்ப்பனி, பார்ப்பனத்தி
பிக்கு – பிக்குணி
பிராணநாயகன் – பிராணநாயகி
பிறன் – பிறள்

திக்கரன் – திக்கரி (குமரி)
துட்டன் – துட்டி
தூதன், தூதுவன் – தூதி
தூயன் – தூயாள்
தொங்கன் (கள்ளன்) – தொங்கி
நடன் – நடி
நம்பி (ஆணிற்சிறந்தோன்) – நங்கை
நரகன் – நரகி
நாயக்கன் – நாயக்கச்சி
நாயகன் – நாயகி
நிசாசரன் – நிசாசரி
நும்பி – நுவ்வை (நுமது நங்கை)
நேசன் – நேசி
பண்ணவன் (தேவன்) – பண்ணவி
பதுமாசனன் (பிரமன்) – பதுமாசனி (இலக்குமி)
பரவன் – பரத்தி
பரிபூரணன் – பரிபூரணி
பாக்கியவான் (பாக்கியவாளன்) – பாக்கியவதி
பாட்டன் – பாட்டி
பாணன் – பாணிச்சி, விறலி.
பார்ப்பான் – பார்ப்பாத்தி
பிரான் – பிராட்டி
பிரியன் – பிரியை
பின்னவன் (தம்பி) – பின்னவள்





பின்னன் (தம்பி) – பின்னி
புண்ணியவாளன் – புண்ணியவாட்டி
புதல்வன் – புதல்வி
புருடன் – மனைவி
புலையன் – புலைச்சி
பூரணன் (சிவன்) – பூரணி (பார்வதி)
பேரன் – பேர்த்தி (பௌத்திரி)
மகாதேவன் – மகாதேவி
மகேந்திரன் – மகேந்திராணி
மணமகன் – மணமகள்
மருகன் – மருகி
மருத்துவன் – மருத்துவச்சி
மறவன் – மறத்தி
மாமன் – மாமி
முக்கண்ணன் – முக்கண்ணி
மூடன் – மூடி
மைத்துனன் – மைத்துனி
வடுகன் – வடுகச்சி
வலைஞன், வலையன், வலைவன் – வலைச்சி
வாகீசுவரன் – வாகீசுவரி
வாமலோசனன் (திருமால்) – வாமலோசனை
வாலிபன் – வாலை
விருத்தன் – விருத்தை

பின்னோன் (தம்பி) – பின்னை
புத்திரன் – புத்திரி
புராணன் (சிவன்) – புராணை (பார்வதி)
புலவன் – புலச்சி
புலவன் (பிரமன்) – புலச்சி (இலக்குமி)
பெருமான் – பெருமாட்டி
மகன் – மகள்
மகேசன் – மகேசுவரி
மங்கலியன் (அம்பட்டன்) – மங்கலை
மணவாளன் – மணவாட்டி
மருமகன் – மருமகள்
மலையான் – மலையாட்டி
மாணாக்கன் – மாணாக்கி
மித்திரன் – மித்திரை
முடவன் – முடத்தி
மூதாளன் – மூதாட்டி
மொட்டையன் – மொட்டைச்சி
வண்ணான் – வண்ணாத்தி
வாகீசன் – வாகீசை
வாணிகன் – வாணிகச்சி
வாமன் (சிவன்) – வாமை
விரத்தன் (உலகப்பற்றில்லாதவன்) – விரத்தி
வினையாளன் (ஏவலாளன்) – வினையாட்டி



RangaRakes
tamilnavarasam.com

வீரன் – வீரி

வெள்ளாளன் – { வெள்ளாடிச்சி / வெள்ளாளச்சி }

வேடன் – வேடிச்சி

வேண்மான் – வேண்மாள்

வேலைக்காரன் –வேலைக்காரி

பின்வருவன ஒன்றுக்கொன்று உரியனவாகா என்பது அவற்றின் பொருள்பற்றி அறியப்படும்.

இல்லான் (வறியவன்) – இல்லாள் (மனைவி)
ஐயன் (முனிவன், தந்தை, அரசன், எசமானன்) – ஐயள் (வியக்கத்தக்கவள்)
சகதேவன் (பஞ்சபாண்டவருள் இளையவன்) – சகதேவி (பூமிதேவி)
சங்காரன் (அழிப்பவன்) – சங்காரி (குதிரைவாலி)
சோழன் (சோழவரசன்) – சோழிச்சி (சோழநாட்டுப்பெண்)
தரைமகன் (செவ்வாய்) – தரைமகள் (பூமிதேவி, மானிடப்பெண்)
துட்டன் (தீயோன்) – துட்டை (கற்பில்லாதவள், கட்டுக்கடங்காதவள்).
பார்மகன் (மானிடன்) – பார்மகள் (பூமிதேவி)
மண்மகள் (குயவன்) – மண்மகள் (பூமிதேவி)
வேளாளன் (உபகாரி, வேளாளச்சாதியான்) – வேளாட்டி (பணிப்பெண்)

## பயிற்சி 10

1. பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குரிய பெண்பாற் சொற்களைத் தருக:–
அப்பன், பார்ப்பான், இந்திராபதி, ஆயன், உழவன், மங்கலியன், புராணன், குரவன், மூதாளன், மணமகன், பிறன், மருத்துவன், மறவன், மாணாக்கன், புலையன்.

2. மேல்வரும் பெண்பாற் சொற்களுக்குரிய ஆண்பாற் சொற்களை எழுதுக:–
அரசி, காமுகி, இடைச்சி, மகேசுவரி, வினையாட்டி, பிரியை, பாக்கிய வதி, துட்டி, ஆண்டாள், தமள், கூனி, பிராட்டி, துணைவி, பாங்கி, மாமி

3. கீழ்க்காணுஞ் சொற்களுக்குப் பொருள் கூறுக:–
வீரி, பூமகன், பின்னவன், நுமன், தரைமகன், துட்டை, பாண்டியன், நிசாசரி, பறைச்சி, சோழன், பாட்டி, தூதி, பாடகன், மண்மகன், தங்கை, ஐயள், வேளாட்டி, மண்மகன்.





4. தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்றொடர் ஒவ்வொன்றுக்கும் பதிலாக ஒவ்வொரு சொல்லிடுக.

1. **உத்தம குணமுள்ள பெண்** ஒருத்தி கந்தனுக்கு மனைவியாக வாய்த்தாள்.
2. எங்கடைக் கணக்கைப் பரிசீலனை செய்தற்குக் **கணக்காலே முயன்று உண்பவள்** ஒருத்தியைக் கூலிக்கு அமர்த்தினோம்.
3. சோழநாட்டிற் பிறந்த ஆண்மகன் ஒருவன் அத்தெருவாற் போகின்றான்.
4. திலகவதி பலநாளாகக் காய்ச்சலால் அலைப்புண்டு ஈற்றில் **எலும்புதோன்ற மெலிந்தபெண்** ஆனாள்.
5. **தருமசிந்தையுள்ள பெண்** ஒருத்தி அவ்வனாதைப் பெண்ணைக் காப்பாற்றுகிறாள்.
6. **புண்ணியம் மிகுதியாகச் செய்பவன்** ஒருவன் என் கவலையை நீக்கினான்.
7. **பெண்ணிற் சிறந்தாள்** ஒருத்தியை அந்நம்பி மணந்தாள்.
8. **தச்சச் சாதியிற் பிறந்தவள்** ஒருத்திக்கும் **தட்டாரச் சாதியிற் பிறந்தவள் ஒருத்திக்கும்** இடையில் வாக்குவாதம் உண்டாயிற்று.
9. கந்தனின் **சகோதரியின் மகன்** காய்ச்சலால் வருந்துகின்றாள்.
10. **பெருமையிற் சிறந்தவள்** ஒருத்தி எனது துன்பத்தைச் தீர்ந்தாள்.
11. அருச்சுனன் இந்திர சபைக்குச் சென்றபோது அங்கே தோழிகள் பலரோடு **இந்திரனின் மனைவி** இருத்தலைக் கண்டான்.
12. என் **மனைவியின் சகோதரன்** என்மீது வெகுண்டான்.
13. **புலமைநிறைந்த பெண் ஒருத்தி** அச் செய்யுளுக்கு உரை கூறினாள்.
14. **வேட்டுவச் சாதியிற் பிறந்தவள்** ஒருத்தி அப்பன்றியைக் கொன்றாள்.
15. **விருத்தப் பருவத்தை அடைந்தவன்** விரைந்து ஓடல் ஆகாது.
16. **பதுமத்தை ஆசனமாக உள்ளவன்** எனக்கு அருள் புரிவாள்.
17. **நுமது தங்கை** அம்மாளிகையில் இருந்ததைக் கண்டேன்.
18. **மருத்துவஞ் செய்கின்ற பெண்** ஒருத்தி எந்நோயைத் தீர்த்தாள்.
19. **பெண்ணிற் சிறந்தவள்** ஒருத்தி அக்குழுவில் இருக்கின்றாள்.
20. **அரக்கர் குலத்திற் பிறந்தவள்** வன்னெஞ்ச முடையவளாகக் காணப் படுவாள்.



RangaRakes

tamilnavarasam.com

**40. அஃறிணையிருபாற் பொதுப்பெயர்:** து என்னும் ஒன்றன்பால் விகுதி களையாதல் அ, வை, கள் என்னும் பலவின்பால் விகுதிகளையாதல் பெறாத அஃறிணைப் பெயர்ச் சொற்கள் அத்திணையின் இருபால்களுக்கும் பொதுப் பெயராம். அவை பால்பகாவஃறிணைப் பெயர்கள் எனக் கூறப்படும். அவற்றின் பாலானது முடிக்குஞ் சொல்பற்றி அறியப்படும்.

**உ-ம்:** மரம் வளர்ந்தது, பறவை பறந்தது.
மரம் வளர்ந்தன, பறவை பறந்தன.

**41. இருதிணைப் பொதுப்பெயர்:** கறுப்பன், கறுப்பி என்பனபோன்ற முதற் பெயர்களும் முடவன், முடத்தி என்பன போன்ற சினைப்பெயர்களும், தந்தை, தாய் என்னும் முறைப் பெயர்களும், நான், யான், நாம், யாம், நாங்கள் என்னுந் தன்மைப்பெயர்களும், நீ, நீர், நீயிர், நீவிர், நீங்கள், எல்லீர் என்னும் முன்னிலைப்பெயர்களும், எல்லாம், தாம், தான் என்னும் மூன்று பெயர்களும் இருதிணைக்கும் பொதுவாய் வரும். அவற்றினுடைய திணை முடிக்குஞ் சொல்பற்றி அறியப்படும்.

கறுப்பன் இவன், கறுப்பன் இவ்வெருது.
– முதற்பெயர் இருதிணை ஆணிற்கும்பொது.
கறுப்பி இவள், கறுப்பி இப்பசு.
– முதற்பெயர் இருதிணைப் பெண்ணிற்கும் பொது.
தந்தை இவன், தந்தை இவ்வெருது.
– முறைப்பெயர் இருதிணைப் ஆணிற்கும் பொது.
தாய் இவள், தாய் இப்பசு.
– முறைப்பெயர் இருதிணைப் பெண்ணிற்கும் பொது.
நான் பெரியென், நான்பேய். – நான் என்னுந் தன்மைப்பெயர்
– இருதிணை ஒருமை மூன்றற்கும் பொது.
நாம் பெரியம், நாம்பேய்கள் – நாம் என்னுந் தன்மைப்பெயர் இரு திணைப் பன்மை இரண்டிற்கும் பொது.
நீ பெரியை, நீபேய். – நீ என்னும் முன்னிலைப்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொது.
நீர்பெரியீர், நீர்பேய்கள். – நீர் என்னும் முன்னிலைப்பெயர் இருதிணைப்பன்மை இரண்டிற்கும் பொது.
நாம் எல்லாம் வந்தோம், நீர் எல்லாம் வந்தீர், அவரெல்லாம் வந்தனர்.
அவை எல்லாம் வந்தன. – எல்லாம் என்னும் பெயர் இருதிணைப் பன்மை இரண்டிற்கும்பொது.
தாம் வந்தனர், தாம் வந்தன – தாம் என்னும் பெயர் இருதிணைப் பன்மை இரண்டிற்கும் பொது.
தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது. – தான் என்னும் பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொது.





**42. தொழிற்பெயர்கள்** படர்க்கை யிடத்திற்கே உரியவை; அவை காலங் காட்டா. **வினையாலணையும் பெயர்கள்** இடம் மூன்றிற்கும் உரியவை அவை காலங் காட்டும்.

என் செய்கை நன்று, நின்மறதி தீது, அவர் நடந்தது தீது. செய்கை, மறதி, நடந்தது என்னுந் தொழிற் பெயர்கள் படர்க்கை இடத்திற்கே உரியவாதல் காண்க.

உண்டேனைக் கண்டான். உண்பாய்க்கு வேண்டியது யாது? உண் கின்றானுக்கு நீர் கொடு. உண்டேன், உண்பாய், உண்கின்றான் என்னும் வினையாலணையும் பெயர்கள் இடம் மூன்றிற்கும் உரியவாதல் காண்க.

**43.** ஒன்று என்பதை அடிக்கொண்டு ஒருவன், ஒருத்தி என்னும் ஆண்பால் ஒருமைப்பெயரும், பெண்பால் ஒருமைப் பெயரும் உண்டாகு மேயன்றிப் பன்மைப்பெயர் உண்டாகா. எனின், இருவள், இருத்தி என்பன வழுவாம்.

**44.** ஒருவர் என்னுஞ் சொல் உயர்திணை ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுப்பெயராய் ஒரு பொருளையே உணர்த்துமாயினும் பலர்பால் வினைகொண்டே முடியும்.

ஆடவருள் ஒருவர் கழகத்திற்குட் புகுந்தார். – ஆண்பால்.
பெண்களுள் ஒருவர் அட்டிலிற்குட் புகுந்தார். – பெண்பால்.

**45.** எல்லாரும் என்னுஞ் சொல் உயர்திணைப் படர்க்கைப் பலர் பாலுக்கே உரித்து.

**உ-ம்:** எல்லாரும் வந்தனர்.

**46.** சில உயர்திணைப் பெயர்களும், இருதிணைப் பெயர்களும், பால் பகாவஃறிணைப் பெயர்களும் உயர்த்துதல்பற்றி ஆர் என்னும் விகுதிபெற்றுப் பன்மைச் சொல்கொண்டு முடியும்.

தொல்காப்பியனார் வந்தார், நங்கையார் வந்தார். – உயர்திணைப்பெயர்.
கறுப்பனார் வந்தார், தந்தையார் வந்தார். – இருதிணைப்பெயர்.
நரியார் வந்தார், பூனையார் வந்தார். – பால்பகா வஃறிணைப் பெயர்.

**47.** பெண்மகன் என்னுஞ் சொல் வினைகொள்ளுமிடத்து ஈறுபற்றி வினைகொள்ளாது பொருண்மைபற்றியே வினைகொள்ளும்.

**உ-ம்:** பெண்மகன் வந்தாள்.



RangaRakes
tamilnavarasam.com

**48. ஆகுபெயர்** – ஒரு பொருளின் இயற்பெயர் அப் பொருளோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவந்தால், அது ஆகுபெயர் எனப்படும். அவ்வாகுபெயர் பதின்மூன்று வகைப்படும்:–

1. **பொருளாகுபெயர்** – கடுத்தின்றான். கடு என்னும் முதற்பெயர் அதன் சினைமேல் வந்தது.
2. **இடவாகுபெயர்** – ஊர்கிளம்பிற்று. ஊர் என்னும் இடப்பெயர் இடத்தில் வாழ்வார்மேல் வந்தது.
3. **காலவாகுபெயர்** – கார் அறுத்தது. கார் என்னுங் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்காயிற்று.
4. **சினையாகுபெயர்** – வெற்றிலை நட்டான். வெற்றிலை என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்காயிற்று.
5. **குணவாகுபெயர்** – நீலஞ் சூடினாள். நீலம் என்னும் நிறக் குணப்பெயர் அதனுயுடைய குவளைமலருக் காயிற்று.
6. **தொழிலாகுபெயர்** – வற்றலோடு உண்டான். வற்றல் என்னுந் தொழிற்பெயர் அதனோடு தொடர்புடைய கறிக்காயிற்று.
7. **அளவையாகுபெயர்** – காலாலே நடந்தான். கால் என்னும் அளவைப்பெயர் அவ்வளவையோடு தொடர்புடைய பொருளுக்காயிற்று.
8. **சொல்லாகுபெயர்** – இந்நூலுக்கு உரை செய்தான். உரை என்னுஞ் சொல் அதனோடு தொடர்புடைய பொருளுக்காயிற்று.
9. **தானியாகுபெயர்** – விளக்கு முரிந்தது. விளக்கு என்னுந்தானியின் பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற் காயிற்கு.
10. **கருவியாகு பெயர்** – தேவாரம் ஓதினான். தேவாரம் என்னுங் கருவிப் பெயர் அதன் காரியமாகிய நூலிற் காயிற்று.
11. **காரியவாகு பெயர்** – அலங்காரங்கற்றான். அலங்காரம் என்னுங் காரியப்பெயர் அதனை உணர்த்துங் கருவியாகிய நூலிற்காயிற்று.
12. **கருத்தாவாகுபெயர்** – திருவள்ளுவர் படித்தான். திருவள்ளுவர் என்னுங் கருத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலிற்காயிற்று.





13. **உவமையாகு பெயர்** – பாவை வந்தாள். பாவை என்னும் உவமைப் பெயர் உவமேயமாகிய பெண்ணுக்காயிற்று.

**49. தொகுதிப்பெயர்கள்.** பல பொருள்களின் கூட்டங்களை உணர்த்தும் ஒருபெயர்த் தொகுதிகளைத் தொகுதிப் பெயர்களெனக் கூறலாம். அவற்றுட் சில மேற்காணப்படும்.

**இருகண்** – ஊனக்கண்ணுஞ் ஞானக்கண்ணும்.
**இருசுடர்** – சந்திர சூரியர்.
**இருதிணை** – உயர்திணையும் அஃறிணையும்; இயங்குதிணையும் நிலைத்திணையும்; அகத்திணையும் புறத்திணையும்.
**இருபுலன்** – மலசலங்கள்
**இருபுனல்** – கீழ்நீர் மேல்நீர்கள்.
**இருபொருள்** – கல்வியுஞ் செல்வமும்
**இருபோது** – காலை மாலைகள்.
**இருமரபு** – தாய்வழி தந்தைவழிகள்.
**இருமருந்து** – சோறும் நீரும்.
**இருமுதுகுரவர், பெற்றோர்** – தாய்தந்தையர்.
**இருமை** – இம்மை மறுமைகள்.
**இருவகையறம்** – இல்லறமுந் துறவறமும்.
**முக்கடுகம், முக்கடுகு, திரிகடுகம்** – சுக்குத் திற்பலி மிளகு.
**முக்கந்தம், திரிகந்தம்** – கிராம்பும், நாவற்பூவும் சண்பகமும்; சந்தனமுஞ் செஞ்சந்தனமும் அகிலும்.
**முக்கரணம், முப்பொறி திரிகரணம்** – மனம் வாக்குக் காயங்கள்.
**முக்கருணை** – காறு கருணையுங் காறாக்கருணையும் புளிக் கருணையும்.
**முக்கனி, முப்பழம்** – வாழைப்பழம் மாம்பழமும் பலாப்பழமும்.
**முக்காலம்** – இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பன.
**முக்கணம், திரிகுணம்** – சாத்துவிதமும் இராசதமும் தாமதமும்.
**முக்குலம்** – சூரியகுலம், சந்திரகுலம், அக்கினி குலம் என்னுங் குலங்கள்.



RangaRakes
tamilnavarasam.com

**முக்குற்றம், முக்குறும்பு, முப்பகை** – காம வெகுளி மயக்கங்கள்.
**முச்சங்கம்** – தலைச்சங்கமும் இடைச்சங்கமுங் கடைச் சங்கமும்.
**முச்சுடர்** – சூரியனுஞ் சந்திரனும் அக்கினியும்.
**முத்தமிழ்** – இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பன.
**முப்பழம், திரிபலை** – கடுக்காயும் நெல்லிக்கனியுந் தான்றிக்காயும்.
**முப்பால்** – அறம்பொருளின் பங்கள்; ஆண்பால், பெண் பால், அலிப்பால் என்பன.
**முப்பாழ்** – வெயிற்பாழ், வெள்ளப்பாழ், குடிப்பாழ் என்பன.
**முப்பிணி, முத்தோசம்** – வாத பித்த சிலேட்டுமங்கள்.
**முப்புவனம்** – சுவர்க்கமும் பூமியும் பாதாளமும்.
**முப்பேதம்** – சுகதபேதம், சுசாதிபேதம், விசாதி பேதம் என்பன.
**முப்பொருள்** – பதி பசு பாசங்கள்.
**முப்பொழுது, முப்போது** – காலை யுச்சி மாலைகள்.
**மும்மதம்** – கன்னமதமுங் கைமதமுங் கோச மதமும்.
**மும்மலம், திரிமலம்** – ஆணவமுங் கன்மமும் மாயையும்.
**மும்முரசு** – நியாயமுரசும் வீரமுரசுந் தியாகமுரசும்.
**மும்மூர்த்தி, திரிமூர்த்தி** – பிரமாவும் விட்டுணுவும் உருத்திரனும்.
**மும்மை** – உம்மை யிம்மை மறுமைகள்.
**மும்மொழி** – பழிகூறலும் புகழ்கூறலும் மெய் கூறலும்.
**மூவடிவு** – ஆண், பெண், அலி என்பன.
**மூவர்** – பிரமா, விட்டுணு, உருத்திரன் என்போர் ; சேர சோழ பாண்டியர்; அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்போர்.
**மூவாசை** – மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் ஆசைகள்.
**மூவிசை** – மந்தம், மத்திமம், உச்சம் என்பன.
**மூவிடம்** – தன்மை முன்னிலை படர்க்கைகள்.
**மூவினம்** – பசு, எருமை, ஆடு என்பன ; வல்லினமும் மெல்லினமும் இடையினமும்.
**மூவுலகு, மூவுலகம்** – சுவர்க்கமும் மத்திமமும் பாதாளமும்.





**மூவெயில், திரிபுரம்** – பொன், வெள்ளி, இரும்பு என்பனவற்றாற் செய் யப்பட்டுச் சிவனால் அழிக்கப்பட்ட மூன்று நகரங்கள்.
**மூவேந்தர், மூவரசர்** – சேர சோழ பாண்டியர்.
**நால்வகைத் தோற்றம்** – அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன.
**நால்வகைப் பூ** – கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்பன.
**நால்வகைப் பொருள்** – அறம் பொருளின்பம் வீடுகள்.
**நால்வகை யரண்** – மலையரண், காட்டரண், மதிலரண், நீரரண் என்னும் அரண்கள்.
**நால்வகை வருணம்** – பிராமண சத்திரிய வைசிய சூத்திரர்.
**நாற்கணம்** – உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என்பன.
**நாற்கதி** – தேவரும் நரகரும் மக்களும் விலங்குகளும்.
**நாற்கரணம்** – மனம் புத்தி சித்தமகங்காரங்கள்.
**நாற்கவி** – ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னுங் கவிகள்.
**நாற்குணம்** – அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் ஆண்களின் குணங்கள் ; நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்களின் குணங்கள்.
**நாற்படை, சதுரங்கம்** – யானை, தேர், பரி, காலாள் என்பன.
**நாற்பயன், நாற்பொருள்** – அறமும் பொருளும் இன்பமும் வீடும்.
**நாற்பாதம்** – சரியை கிரியை யோகம் ஞானங்கள்.
**நாற்பொன்** – ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புநதம் என்பன.
**நாற்றிசை** – வடக்குக்கிழக்குத் தெற்கு மேற்குக்கள்.
**நான்மறை, நால்வேதம்** – இருக்கும் யசுரும் சாமமும் அதர்வணமும்
**ஐங்கணை, பஞ்சபாணம்** – தாமரைமலர், அசோகமலர், மாமலர், முல்லைமலர், கருங்குவளைமலர் என்பன.
**ஐங்கதி, பஞ்சகதி** – மல்லகதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி என்பன.
**ஐங்காயம்** – கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங் காயம் என்பன.



RangaRakes
tamilnavarasam.com

**ஐங்குரவர்** – அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்னுங் குரவர்கள்.

**ஐந்தவத்தை** – சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன.

**ஐந்திணை** – குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னுந் திணைகள்.

**ஐந்திலக்கணம்** – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன.

**ஐந்துணவு** – கடிக்கப்படுவன, நக்கப்படுவன, பருகப் படுவன, விழுங்கப்படுவன, மெல்லப்படுவன ஆகிய உணவுகள்.

**ஐந்துப்பு** – கறியுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு என்பன.

**ஐந்து பா** – வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாஎன்பன.

**ஐந்தொழில், பஞ்சகிருத்தியம்** – படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அளித்தல் என்பன.

**ஐம்படை, பஞ்சாயுதம்** – சங்கம், சக்கரம், கதை, சார்ங்கம், கட்கம் என்ற திருமாலின் ஆயுதங்கள்.

**ஐம்பால்** – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் என்பன.

**ஐம்பான்முடி** – கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்பன.

**ஐம்புலன்** – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.

**ஐம்பூதம்** – நிலம், நீர், தீ, வளி, வெளி என்பன. (பிரிதிவியப்புத்தேயுவாயு வாகாயம்.)

**ஐம்பெருங்காப்பியம்** – சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன.

**ஐம்பெருங்குழு** – அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதர், சாரணர் என்போர்.

**ஐம்பெரும்பாதகம், பஞ்சமாபாதகம்** – கொலை, களவு, பொய்கூறல், கள்ளுண்ணல், குருநிந்தை என்பன.





**ஐம்பொறி** – மெய் வாய் கண் மூக்குச் செவிகள்.

**ஐம்பொன்** – பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்னும் உலோகங்கள்.

**ஐவகைத்தாயார்** – பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத் தாய், கைத்தாய், செவிலித்தாய் என்னுந் தாயர்.

**ஐவர், பஞ்சபாண்டவர்** – தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் பாண்டு புத்திரர்.

**அறுசமயம்** – சைவம், வைணவம், சாத்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் என்பன.

**அறுசுவை** – கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன.

**அறுபகை** – காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன.

**அறுவகைத்தானை** – வேற்றானை, வாட்டானை, விற்றானை, தேர்த்தானை, பரித்தானை, களிற்றுத் தானை என்பன.

**அறுவகைப்படை** – மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்பன.

**ஆறங்கம், வேதாங்கம்** – சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்பன.

**ஆறாதாரம்** – மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன.

**எழுகடல், சத்தசாகரம்** – உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் என்பன.

**எழுதீவு** – நாவலந்தீவு, இறலித்தீவு, இலவந்தீவு, கிரவுஞ்சத்தீவு, குசைத்தீவு, தேக்கந்தீவு, புட்கரந்தீவு என்பன.

**எழுநகரம், சப்தபுரி** – அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன.

**எழுபவம், எழுபிறப்பு** – தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன.



RangaRakes
tamilnavarasam.com

**எழுமதம்** – இரண்டு கன்னம், இரண்டு கண், இரண்டு கரத்து வாரம், ஒரு கோசம் என்னும் இவற்றிலிருந்து யானைக்குத் தோன்றும் மதநீர்.

**எழுமுனிவர், சப்தவிருடிகள்** – அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் என்போர்.

**எழுவகைத்தாது** – இரதம், உதிரம், என்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம் என்பன.

**ஏழிசை** – குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி. விளரி, தாரம் என்பன.

**ஏழுபருவம்** – பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை. அரிவை, தெரிவை. பேரிளம்பெண் என்னும் பருவங்கள்.

**எட்டுச் சித்தி, அட்டமாசித்தி** – அணிமா, மகிமா, இலகிமா, பிராத்தி, பிரகா மியம், ஈசத்துவம், வகித்துவம் என்பன.

**எட்டுத்திக்கு, எட்டுத்திசை** – வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு என்பன.

**எட்டுத்திக்குப்பாலகர்** – இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போர்.

**எட்டுத்தொகை** – நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற் றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அக நானூறு ; புறநானூறு என்பன.

**எண்குணம்** – தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயல்பாகவே உணர்தல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளு டைமை, முடிவிலாற்றலுடைமை, வரம் பிலின்பமுடைமை என்னுஞ் சிவன் குணங்கள்.

**எண்பதம்** – நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, துவரை, இராகி என்பன.





**எண்பேராயம் எண்பெருந்துணைவர்** – கரணத்தியலவர். கருமவிதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர் நகரமாந்தர், படைத் தலைவர், யானை வீரர், இவுளிமறவர் என்பவர்.

**எண்வகை மணம்** – பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், ஆசுரம், காந்தருவம், இராட்சசம், பைசாசம் என்பன.

**எண்வகையெச்சம்** – சிதடு, உறுப்பில் பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் என்பன.

**எண்வகையோகாங்கம்** – இயமம், நியமம், ஆசனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன.

**எண்வகைச்செல்வம் அட்டைசுவரியம்** – இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்பன.

**எண்வகைப்போகம் அட்டபோகம்** – பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம் பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி என்பன.

**அட்டமூர்த்தம்** – பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னுஞ் சிவ வடிவங்கள்.

**அட்டஇலக்குமி** – தனஇலக்குமி, தானிய இலக்குமி, தைரிய இலக்குமி, வீரஇலக்குமி, வித்தியா இலக்குமி, கீர்த்தி இலக்குமி, விசய இலக்குமி, இராச்சிய இலக்குமி என்னும் இலக்குமிகள்.

**நவக்கிரகம்** – சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்பன.

**நவதானியம்** – கோதுமை, நெல், துவரை, பயறு, கடலை, அவரை, எள், உழுந்து, கொள் என்பன.

**நவதீர்த்தம்** – கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோணை, துங்கபத்திரை என்பன.

**நவநிதி** – பதுமம், மாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம், கர்வம் என்பன.



RangaRakes tamilnavarasam.com

**நவமணி, நவரத்தினம்** – கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் என்பன.

**நவமுகில்** – சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலம், துரோ ணம், காளம், நீலம், வாருணம், வாயுவம், தமம் என்பன.

**நவரசம்** – நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சாந்தம் என்பன.

**நவலோகம்** – பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா, துத்த நாகம், வெண்கலம் என்பன.

**தசாங்கம்** – ஆறு, மலை, யானை, குதிரை, நாடு, ஊர், கொடி, முரசு, தார், தேர் என்பன.

**தசாவதாரம்** – மற்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருட்டிணன், கற்கி என்னுந் திருமாலின் அவதாரங்கள்.

**பத்துப்பாட்டு** – திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற நூல்கள்.

**பதினெண்கீழ்க்கணக்கு** – நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவைநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, திணை மாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடு கம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந் நிலை என்ற நூல்கள்.

வினா:- கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வழுக்கள் இன்ன வகையின எனக்கூறி அவற்றை நீக்கி எழுதுக.

**(i)** இவன் பால்கறக்கும் பசு முடவன்.





**(ii)** இவ்வெருது அக்கன்றினது தாய்.

**(iii)** நாம் எல்லோரும் அங்குச் சென்றோம்.

**விடை**

**(i)** பசு முடவன் என்பது அஃறிணைப் பெண்பால் ஆண்பால்களின் மயக்கம்.
இவன் பால் கறக்கும் பசு முடத்தி.

**(ii)** எருது தாய் என்பது அஃறிணை ஆண்பால் பெண்பால்களின் மயக்கம்.
இவ்வெருது அக்கன்றினது தந்தை.

**(iii)** நாம் எல்லோரும் என்பது தன்மைபடர்க்கைகளின் மயக்கம்.
நாம் எல்லாம் அங்குச் சென்றோம்.

## பயிற்சி 11

**1.** பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களினுடைய திணை பால்களைக் கூறுக:-

**(1)** அவன் பணத்தையே பொருள் என்றுகொண்டு வாழ்கின்றான்.
**(2)** பிறிது ஒன்றைத் தந்தால் அது நன்று.
**(3)** வறியார் வேண்டுவனவற்றைக் கொடுப்பதே ஈகை.
**(4)** திலகவதி தன் காதலனைக் காணாது வருந்தினாள்.
**(5)** அவ்வயல்களிற் பசுமேய்கின்றன எனக் கூறினான்.

**2.** மேல்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்கள் வினையாலணையும் பெயர்களா அன்றித் தொழிற் பெயர்களா எனக் கூறுக.

**(1)** அவர்கள் அங்கு **வந்ததை** யான் அறியேன்.
**(2)** இங்கு **வருபவர்களைக்** கொண்டு **செய்யவேண்டியதைச்** செய்வி.
**(3)** கற்றாரைப் **பேணுதல்** அரசனது கடன்.
**(4)** **அறிவுடையாரை** அரசனும் விரும்பும்.
**(5)** பொருள் **இல்லாதவன்** அது **பெறுதலும்** அது **பெற்றவன்** அதனை **இழத்தலும்** உலகத்தியல்பு.

**3.** கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வழுக்கள் இன்னவகையின எனக்கூறி அவற்றை நீக்கி எழுதுக.

**(1)** நீங்கள் ஒவ்வொருவரும் நாளைக்கு இங்கு வர வேண்டும்.



RangaRakes

tamilnavarasam.com

(2) நாம் அனைவரும் அதனைக் கண்டேம்.

(3) அம்மனிதன் அச்செயலை ஆலோசனை சிறிதும் இன்றிச் செய்துவிட்டார்.

(4) அந்நங்கை தன்னழகை வியந்து 'யான் அழகினன்' எனக் கூறினாள்.

(5) அது நேற்றுப் பெற்றதல்ல.

4. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள ஆகுபெயர்களைத் தேர்ந்தெடுத்து அவை ஒவ்வொன்றும் இன்ன ஆகுபெயரெனக் கூறுக:-

(1) உலகம் இக்கொள்கையை ஏற்காது.

(2) கூதிர் வீசும்.

(3) ஊன் கொடுத்தான்.

(4) இம்மணி ஒன்று.

(5) இத்தூண் வெள்ளி.

(6) யானை வந்தான்.

(7) கார்த்திகை பூத்தது.

(8) அவன் யாழ் கேட்டான்.

5. கீழ்க்காணுந் தொகுதிப் பெயர்களின் விரிகளை எழுதுக:-

அறுபகை, முத்தமிழ், எழுமதம், ஐங்குரவர், நாற்கதி, இருசுடர், மூவாசை, நாற்பயன், இருமை, ஐந்துபா.

6. மேற்கூறுவன எத்தொகுதிப் பெயர்களைச் சார்ந்தனவெனக் கூறுக:-

முன்னிலை, இம்மை, முல்லை, நிறை, பூமி, கொடிப்பூ, புளிப்பு, உச்சி, வெள்ளி, வீமன்.

7. பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்றொடர் ஒவ்வொன்றுக்கும் பதிலாக ஒரு தொகுதிச் சொல்லிடுக:-

(1) **சேர சோழ பாண்டியர்** ஒருங்கு இருந்த அமயத்தில் அவர் முன்னிலையிற் புலவன் ஒருவன் சென்று குறையிரந்தான்.

(2) அவன் **எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்பும் அணியுங்** கற்றுத் தேர்ந்தான்.

(3) **யானையுந் தேரும் குதிரையுங் காலாளும்** இல்லாத அரசன் பகைவர்கையிற் சிக்கிக்கொள்வான்.

(4) **தாய்தந்தையரை** இழந்து அவன் அல்லல் உறுகின்றான்.





(5) **மனம் வாக்குக் காயங்களின்** சுத்தத்தால் ஒருவன் குணம் அறியப்படும்.

(6) மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்காகத் திருவள்ளுவர் **இல்லறமுந் துறவறமுங்** கூறினார்.

(7) **காம வெகுளி மயக்கங்களி**லிருந்து நீங்கியவன் அறிவுடையோன் எனப்படுவான்.

(8) **காலை மாலை**களில் இறைவனைத் தொழல் வேண்டும்.

50. **வேற்றுமை** என்பது தன்னை ஏற்கும் பெயர்ப் பொருளை வேறுபடுத்தி உணர்த்துவது; அது முதல்வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப் படும். அவற்றின் உருபு முறையே பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்பன. முதலாம் வேற்றுமையைப் பெயர் வேற்றுமை என்றும் எழுவாய் வேற்றுமை என்றுங் கூறுதலும் உண்டு.

51. **முதல் வேற்றுமையின்** உருபாவது திரிதலில்லாத பெயராம். அதன் பொருள் வினைமுதற்பொருளாம்; கருத்தாப்பொருள் என்றுங் கூறலாம். அக்கருத்தா இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இரு வகைப்படும்.

| | |
|---|---|
| தச்சன் கோயிலைக் கட்டினான். | தச்சன் இயற்றுதற் கருத்தா. |
| அரசன் கோயிலைக் கட்டினான். | அரசன் ஏவுதற் கருத்தா. |

இவ்வெழுவாய் வேற்றுமைக்கு ஆனவன், ஆகின்றவள், ஆவார், என்பது, முதலாய ஐம்பாற் சொற்களுஞ் சொல்லுருபுகளாக வரும்.

கந்தனானவன் வந்தான். தாயாகின்றவள் வருகிறாள்.

மாணாக்கராவார் பலர். பகுபதம் என்பது பகுக்கப்படாதது.

நரிகளென்பவை ஊளையிடும்.

52. **இரண்டாம் வேற்றுமையின் உருபு** ஐ என்பதேயாம். இது தன்னை ஏற்கும் பெயரைச் செயப்படு பொருளாய் வேறுபடுத்தலால் இதன் பொருள் செயப்படுபொருளாம்.

| | |
|---|---|
| குடத்தை வனைந்தான். | ஐ செயப்படுபொருளில் வந்தது. |
| பொன்னை உடையான். | ஐ செயப்படுபொருளில் வந்தது. |

53. **மூன்றாம் வேற்றுமையின்** உருபுகளானவை ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன. இவற்றுள் ஆல், ஆன் என்னும் உருபுகள் இரண்டும் பெரும்பான்மையாகக் கருவிப் பொருளிலுங் கருத்தாப் பொருளிலும் ஒடு,



RangaRakes

tamilnavarasam.com

ஓடு என்பன உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும். அக்கருவி முதற் கருவி, துணைக்கருவி என இரண்டு வகைப்படும். முதற் கருவி என்பது காரியத்தோடு ஒற்றுமை உடையது. துணைக்கருவி என்பது முதற் கருவியைக் காரியப்படுத்துதற்குத் துணையாய் நிற்பது.

| | |
|---|---|
| மண்ணால் வனைந்தான்<br>உணர்வினால் உணர்ந்தான். | ஆல் உருபு முதற்கருவிப் பொருளது. |
| மண்ணான் வனைந்தான். | ஆன் உருபு முதற்கருவிப் பொருளது. |
| வாளால் வெட்டினான். | ஆல் உருபு துணைக் கருவிப்பொருளது. |
| வாளான் வெட்டினான். | ஆல் உருபு துணைக் கருவிப்பொருளது. |
| தச்சனால் அக்கோயில் கட்டப்பட்டது. | ஆல் உருபு இயற்றுதற்கருத்தாப் பொருளது. |
| தச்சனான் அக்கோயில் கட்டப்பட்டது. | ஆன் உருபு இயற்றுதற்கருத்தாப் பொருளது. |
| அரசனால் அக்கோயில் ஆகியது. | ஆல் உருபு ஏவுதற் கருத்தாப் பொருளது. |
| அரசனான் அக்கோயில் ஆகியது. | ஆன் உருபு ஏவுதற் கருத்தாப் பொருளது. |
| தந்தையொடு மகன் வந்தான். | ஒடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளது. |
| தந்தையோடு மகன் வந்தான். | ஓடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளது. |

கருவி, காரணம், ஏது என்பன ஒருபொருட் சொற்கள். அக்கருவி காரகவேது, ஞாபகவேது என்னும் இரண்டாகவும் பிரிக்கப்படும். காரக வேது என்பது தொழிலை இயற்றுவிப்பது; ஞாபகவேது என்பது தொழிலை அறிவிப்பது. மண்ணால் வனைந்தான் என்பதில், மண்ணானது தன் காரியமாகிய குடத்திற்கு முதற்காரணமாய் நின்று வனைவதாகிய தொழிலை இயற்றுவித்தலின், 'ஆல்' உருபு காரகவேதுப் பொருளில் வந்தது.

உணர்வினால் உணர்ந்தான் என்பதில், உணர்வு தன் காரியத்திற்கு முதற்காரணமாய் நின்று உணர்த்தலாகிய தொழிலை அறிவித்தலின், 'ஆல்' உருபு ஞாபக வேதுப்பொருளில் வந்தது.

ஆல், ஆன் என்னும் உருபுகளுக்குப் பதிலாகக் **கொண்டு** என்னும் சொல்லுருபும், ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்குப் பதிலாக **உடன்** என்னுஞ் சொல்லுருபும் வரும்.





**உ-ம்:** மண்கொண்டு வனைந்தான்.
தந்தையுடன் மகன் வந்தான்.

**54.** **நான்காம் வேற்றுமையின்** உருபு கு என்பதேயாம். இவ்வுருபு தன்னை ஏற்கும் பெயரைக் கொள்ளுதற் பொருண் முதலாயினவாக வேறு படுத்தலால், இதன் பொருள் கோடற் பொருள், பகை தொடர் பொருள், நட்புத் தொடர் பொருள், தகுதியுடைப்பொருள், முதற்காரண காரியப் பொருள், நிமித்தகாரண காரியப்பொருள், முறைக்கியை பொருள் என்பன வாம்.

| | |
|---|---|
| அந்தணனுக்குப் பசுக்கொடுத்தான். | குவ்வுருபு கோடற் பொருளில் வந்தது. |
| ஞானிக்குப் பகை இல்லை. | குவ்வுருபு பகை தொடர் பொருளில் வந்தது. |
| வள்ளல்களுக்கு நண்பர் உண்டு. | குவ்வுருபு நட்புத் தொடர் பொருளில் வந்தது. |
| ஈவோர்க்குப் புகழ் உரித்து. | குவ்வுருபு தகுதியுடைப் பொருளில் வந்தது. |
| இது குடத்திற்கு வைத்த மண். | குவ்வுருபு முதற்காரணகாரியப் பொருளில் வந்தது. |
| அவன் கூலிக்கு வேலை செய்தான் | குவ்வுருபு நிமித்த காரணகாரியப் பொருளில் வந்தது. |
| தசரதனுக்கு மகன் இராமன். | குவ்வுருபு முறைக்கியை பொருளில் வந்தது. |

குவ்வுருபுக்குப் பதிலாகப் பொருட்டு, நிமித்தம் என்பன சொல் லுருபுகளாக வரும் ; குவ்வுருபின்மேல் ஆக என்பதுஞ் சொல்லுருபாக வரும்.

**உ-ம்:** புகழின் பொருட்டு அறச்சாலை கட்டினான்.
புகழினிமித்தம் அறச்சாலை கட்டினான்.
புகழுக்காக அறச்சாலை கட்டினான்.

**55.** **ஐந்தாம் வேற்றுமையினுடைய** உருபுகள் இல், இன் என்பனவாம். இவை தம்மை ஏற்கும் பெயர்களை நீக்கப் பொருண் முதலாயினவாக வேறுபடுத்தலால், இவற்றின் பொருள்களாவன நீக்கப்பொருள், உவமப்



RangaRakes
tamilnavarasam.com

பொருவுப் பொருள், உறழ்பொருவுப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப் பொருள் என்பனவாம்; உறழ்தல் என்பது ஒன்றின் ஒன்றை மிகுத்தல்.

தலையில் இழிந்தது மயிர். இல்லுருபு நீக்கப்பொருளில் வந்தது.
தலையின் இழிந்தது மயிர். இன்னுருபு நீக்கப்பொருளில் வந்தது.
இதனிற் கரிது இது (இதனைப் போற்கரிது இது). இல்லுருபு உவமப் பொருவுப் பொருளில் வந்தது.
இதனின்கரிது இது (இதனைப்போற்கரிது இது). இன்னுருபு உவமப்பொருவுப் பொருளில் வந்தது.
இதனிற் கரிது இது (இதனினுங் கரிது இது). இல்லுருபு உறழ்பொருவுப் பொருளில் வந்தது.
இதனின் கரிது இது (இதனிலுங்கரிது இது) இன்னுருபு உறழ்பொருவுப் பொருளில் வந்தது.
நல்லூரில் வடக்குத் திருநெல்வேலி. இல்லுருபு எல்லைப் பொருளில் வந்தது.
நல்லூரின் வடக்குத் திருநெல்வேலி. இன்னுருபு எல்லைப்பொருளில் வந்தது.
அறிவில் உயர்ந்தவன் ஞானி. இல்லுருபு ஏதுப்பொருளில் வந்தது.
அறிவின் உயர்ந்தவன் ஞானி. இன்னுருபு ஏதுப்பொருளில் வந்தது.

பின்னவை இரண்டினும் இல், இன் என்னும் உருபுகள் ஞாபக வேதுப் பொருளில் வந்தமை காண்க.

நின்று, இருந்து என்பவை இல், இன் என்னும் உருபுகளின் மேல் உம் பெற்றும் பெறாதும் நீக்கப் பொருளிலும் எல்லைப்பொருளிலுஞ் சொல் லுருபுகளாக வரும்.

வறுமையினின்றும் நீங்கினான் நின்றும் என்பது நீக்கப்பொருளில் வந்தது.
வறுமையினின்று நீங்கினான். நின்று என்பது நீக்கப்பொருளில் வந்தது.
வறுமையிலிருந்தும் நீங்கினான். இருந்தும் என்பது நீக்கப் பொருளில் வந்தது.
வறுமையிலிருந்து நீங்கினான். இருந்து என்பது நீக்கப்பொருளில் வந்தது.





இது அக்கோட்டினின்றும் பத்தடி. நின்றும் என்பது எல்லைப்பொருளில் வந்தது.
இது அக்கோட்டினின்று பத்தடி. நின்று என்பது எல்லைப்பொருளில் வந்தது.
இது அக்கோட்டிலிருந்தும் பத்தடி. இருந்தும் என்பது எல்லைப் பொருளில் வந்தது.
இது அக்கோட்டிலிருந்து பத்தடி. இருந்து என்பது எல்லைப் பொருளில் வந்தது.

இற்றைக்காலத்து எழுத்தாளர் சிலர் ஐகார வுருபின் மேல் விட, காட்டிலும், பார்க்கிலும் என்பவற்றை உறழ் பொருவுப் பொருளிற் சொல்லுருபாக வழங்குவர்.

அதனைவிட எளிது இது, அதனைக் காட்டிலும் எளிது இது, அதனைப் பார்க்கிலும் எளிது இது. இவ்வழக்குக்கள் இழிவழக்கென விலக்கப்படும்.

**56.** **ஆறாம் வேற்றுமையினுடைய** உருபுகள் அது, அ என்பனவாம். இவ்வுருபுகளுள் அது என்பது அஃறிணை ஒருமைப் பெயரையும் அ என்பது பன்மைப் பெயரையும் வருமொழியாகக் கொள்ளும். இவ்வுருபு களானவை தம்மை ஏற்கும் பெயர்களை வருமொழிப் பொருளோடு சம்பந்தப் பொருளாக வேறுபடுத்தலால், இவற்றின் பொருள் சம்பந்தப் பொருளாம்.

பூவினது வெண்மை. அது என்னும் உருபு சம்பந்தப் பொருளது.
மக்களது தொகுதி. அது என்னும் உருபு சம்பந்தப் பொருளது.
தன் கைகள். அ என்னும் உருபு சம்பந்தப் பொருளது.
சம்பந்தன் செந்தமிழ்பத்தும். அ என்னும் உருபு சம்பந்தப் பொருளது.

சிறுபான்மை அது என்னும் உருபு உயர்திணை ஒருமைப் பன்மைப் பெயர்களையும் அஃறிணைப் பன்மைப் பெயர்களையும் வருமொழிகளாகக் கொள்ளும்.

அரனது தோழன். – வருமொழி உயர்திணை ஒருமைப் பொருளது.
நினது அடியார். – வருமொழி உயர்திணை பன்மைப் பொருளது.
எனது கைகள். – வருமொழி அஃறிணைப் பன்மைப் பொருளது.

இற்றைக்கால மரபின் படி அ என்னும் உருபை ஓரிடத்தும் வழங்காது அது என்னும் உருபை வரு மொழியினுடைய திணை பால்களை நோக்காது வரையறையின்றி வழங்கலாம்.

**உடைய** என்னும் உருபு ஆறாவதன் பொருளியல் வருமொழியின் எல்லாத் திணை பால்களுக்குஞ் சொல்லுருபாக வரும்.



RangaRakes
tamilnavarasam.com

காங்கேயனுடைய வீடு; காங்கேயனுடைய வீடுகள்;
மக்களுடைய தலைவன்; மக்களுடைய தலைவர்.

**57.** **ஏழாம் வேற்றுமையினுடைய** உருபுகள் கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, உழை, வழி, உழி, உள், அறம், புறம், இல் என்பனவும் பிறவுமாம். இவை தம்மை ஏற்கும் அறுவகைப் பெயர்களையும் வருமொழிப் பொருள்களுக்கு இடப்பொருளாக வேறுபடுத்தலால் இவற்றின் பொருள் இடப்பொருளாம்.

மணியின்கண் இருக்கின்றது ஒளி. மணி என்னும் பொருள் வருமொழிப் பொருளுக்கு இடமாயிற்று.
ஊரின்கண் உள்ளது கோயில். ஊர் என்னும் இடம் வருமொழிப் பொருளுக்கு இடமாயிற்று.
வேனிலின்கண் மாப் பூக்கும். வேனில் என்னுங் காலம் வருமொழிப் பொருளுக்கு இடமாயிற்று.
காலின் கண் உள்ளது விரல். கால் என்னுஞ் சினை வருமொழிப் பொருளுக்கு இடமாயிற்று.
இளமையின் கண் உள்ளது செவ்வி. இளமை என்னுங் குணம்வருமொழிப் பொருளுக்கு இடமாயிற்று.
ஓட்டத்தின்கண் உள்ளது விசை. ஓட்டம் என்னுந் தொழில் வருமொழிப் பொருளுக்கு இடமாயிற்று.

ஏனையுருபுகளுக்கும் மேலுள்ளவாறு உதாரணங்கள் கூறலாம். சுருக்கம்பற்றி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் இங்கு தருதல் காண்க:–

ஊர்க்காலிருந்த சோலை, கோயிற்கடை சென்றான், வேந்தரிடை இருந்தான், வலைத்தலை மான்போல, கடல் வாய் அமுது, தேர்த்திசை இருந்தான். அவர்வயிற்கற்றான், கற்றார் முன் அரும்பாது கழிவிரக்கம், மலைச்சார் ஓடினான், கைவலத்துள்ளது, இல்லிடப்பரத்தை, தன்மேல் எழுந்த வெகுளி, இறைநிழற்கீழ் வாழ்ந்த குடிகள், தேர்ப்புடை வந்தான், சூரன் முதல் வந்த உரன்மாய்மாலை, காதலிபின் சென்றது, எம்பாடு வாராத நண்பர், அரசனுழைச் சென்றான், நிழல்வழி அசைந்தான், சிறையுழிக்கிடந்தான், மாரியுள் வந்தான். கையகத்து உள்ளது, ஊர்ப்புறத்து இருந்தான், ஊரில் வாழ்ந்தான்.





கண், கால், கடை, இடை முதலியன ஏழாம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் உருபுகளாகாது இடவேறுபாடுகளை உணர்த்தும் பெயர்ச் சொற்களாய்க் கீழ் வரும் உதாரணங்களிலே நிற்றல் காண்க:

கண்ணகன்ற ஞாலம், அகத்தில் இருந்தான், கடைக்குறை.

**58.** **எட்டாம் வேற்றுமையினுடைய** உருபுகள் பெயரீறு திரிதலுங் கெடுதலும் இயல்பாதலும், பெயரீற்றில் ஏ, ஓ மிகுதலும் ஈற்றயலெழுத்துத் திரிதலுமாம். இவ்வுருபுகளானவை தம்மை ஏற்கும் பெயர்களை விளிக்கப்படும் பொருள்களாய் வேறுபடுத்தலால் இவ்வுருபுகளின் பொருள் விளிக்கப்படு பொருளாம்.

| | |
|---|---|
| ஆதிரையாய் கூறாய். | ஈறு திரிந்தது |
| புலவ உண்ணாய். | ஈறு கெட்டது. |
| முனி போகாய். | ஈறு இயல்பாயிற்று. |
| கந்தனே வருவாய். | ஏ மிகுந்தது. |
| அப்பனோ செல்லாய் | ஓ மிகுந்தது. |
| சான்றீர் உரையீர் | ஈற்றயலெழுத்துத் திரிந்தது. |

**59.** நுமன் முதலாகிய கிளைப்பெயர்களும் எவன், யாவன் முதலாகிய ஐம்பால் வினாப்பெயர்களும், அவன் முதலாகிய ஐம்பாற் சுட்டுப் பெயர்களும், தாம், தான் என்னும் இருதிணைப் பொதுப்பெயர்களும், மற்றை, பிற என்னும் இடைச்சொற்கள் அடியாகப் பிறந்த ஐம்பாற் பெயர்களும் விளியேலா.

**60.** நீயிர், நீவிர், நான் என்னும் பெயர்கள் எழுவாயல்லாத வேற்றுமைகளை ஏலாவாம்.

**61.** முதல்சினைத் தொடர்பின்கண் முதல் ஐ உருபை ஏற்றால், சினை கண்ணுருபை ஏற்கும்; முதல் அது உருபை ஏற்றால், சினை ஐ உருபை ஏற்கும். இரண்டும் ஐ உருபை ஏற்றல் சிறப்பன்று.
ஆட்டை வாலின்கண் வெட்டினான்; ஆட்டினது வாலை வெட்டினான்.
ஆட்டை வாலை வெட்டினான் என்பது சிறப்பன்று.

**62.** பிண்டித்த பொருளும் பிண்டப் பொருளுந் தொடர்ந்து நிற்றற்கண் பிண்டித்தபொருள் ஐ உருபை ஏற்றால், பிண்டப்பொருள் கண்ணுருபை ஏற்கும். பிண்டித்த பொருள் அது உருபை ஏற்றால், பிண்டப்பொருள் ஐ உருபை ஏற்கும். இரண்டும் ஐயுருபை ஏற்றல் – சிறப்பன்று.



RangaRakes
tamilnavarasam.com

நெல்லைப் பொலியின்கண் வாரினான்.
நெல்லினது பொலியை வாரினான்.
நெல்லைப் பொலியை வாரினான் என்பது சிறப்பன்று.

## பயிற்சி 1

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுதல்கள் ஒவ்வொன்றும் இயற்றுதற் கருத்தாவா, அன்றி ஏவுதற் கருத்தாவா என்று கூறுக; அவற்றுள் ஒவ்வொன்றும் எவ்வெவ் வேற்றுமைக் கருத்தா என்றுங் கூறுக :–

(1) எம்மூர்ப் பிராமணனால் ஆக்கப்பட்ட கோயில் இதுதான்.
(2) குயவன் குடம் வனைவான்.
(3) இது தச்சனாற் கட்டப்பட்ட வீடு.
(4) கந்தனால் இக்கருமஞ் செய்யத்தகும்.
(5) இப்பிராமணன் என்னை இகழ்கின்றான்.

2. கீழ்க்காணும் வாக்கியங்களிற் செயற்படுபொருள்களைத் தேர்ந்தெடுக்க. அவற்றுள் ஒவ்வொன்றும் இன்ன வேற்றுமை என்றுங் கூறுக:–

(1) எண்ணிச் செய்வது செட்டு, எண்ணாமைச் செய்வது வேளாண்மை.
(2) கையூன்றிக் கரணம் போடவேண்டும்.
(3) துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா?
(4) பதறிச் செய்கிற காரியஞ் சிதறிக் கெட்டுப் போகும்.

3. பின்வரும் வாக்கியங்களிலே மூன்றாம் வேற்றுமை யுருபுகள் எவ்வெப்பொருளில் வந்தன எனக் கூறுக:–

(1) முள்ளாலே முள்ளை எடுக்க வேண்டும்.
(2) மனத்தொடு வாய்மை மொழிந்தான்.
(3) அவன் வாணிகத்தால் ஆயினான்.
(4) இவனின் முகம் மதியொடு ஒக்கும்.
(5) வேடன் வில்கொண்டு அம்பெய்தான்.
(6) அவன் இதன் பொருளைத் தன் முன்னறிவினால் உணர்ந்தான்.

4. மேல்வரும் வாக்கியங்களில் ஏதுப் பொருளைத் தருஞ்சொற்கள் எவ்வேற்றுமையைச் சார்ந்தன என்றும், அவற்றுள் ஒவ்வொன்றுங் குறிப்பது காரகவேதுவா, அன்றி ஞாபகவேதுவா என்றுங் கூறுக:–

(1) கந்தன் முருகனிலும் அறிவிற் பெரியன்.





(2) மழை பெய்யாதாயின், உழவர் ஏரின் உழார்.
(3) விசர்நாயாற் கடிக்கப்பட்டமையால், இவன் பிழையான்.
(4) கம்பன் கல்வியிற் பெரியன்.
(5) முயற்சியிற் பிறத்தலால் ஒலி நிலையாது.
(6) குயவன் சக்கரத்தாற் பானை வனைவன்.

5. பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலும் நாலாம் வேற்றுமையுருபு எப்பொருளில் வந்தது எனக் கூறுக:–

(1) இப்பிணிக்கு மருந்து யாதும் இல்லை.
(2) அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை.
(3) ஆசிரியர் மாணாக்கருக்கு நூற்பொருள் உரைத்தார்.
(4) அருள் அறத்திற்குத் தக்கது.
(5) பாவஞ் செய்வார்க்கு அறங்கூற்றம்.
(6) அருச்சுனன் வீமனுக்குத் தம்பி.

6. மேல்வரும் வாக்கியங்களிற் கோடிட்ட இடம் ஒவ்வொன்றிலும் மக்கள், குப்பை, தவம், காமம், கால் என்னுஞ் சொற்களுள் ஏற்றதைத் தக்க உருபோடு இட்டு வாக்கியம் முடிக்க:–

(1) அத்துறவி ...................... பற்றுவிட்டான்.
(2) அவன் யானையைக் ...................... வெட்டினான்.
(3) வெகுளி ...................... பகை.
(4) தருமர் முத்தியை ...................... பெற்றார்.
(5) அவன் ...................... தலையைச் சிதறினான்.

7. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வேற்றுமை உருபுகளின் பொருள்களைக் கூறுக:–

(1) நேற்று முருகன் ஓர் ஆலமரத்திினின்றும் வீழ்ந்தான்.
(2) கந்தன் கோயிற்கடைச் சென்றான்.
(3) மாந்தர் சிலர் தலையின் இழிந்த மயிரைப் போன்றவர்.
(4) கந்தன் முருகனை ஒரு கத்திகொண்டு வெட்டினான்.
(5) அவனுடைய மாடு எம்வயலுட் புகுந்தது.
(6) அவன் யாழ்ப்பாணத்திலிருந்து திரிகோணமலைக்குச் சென்றான்.

8. மேல்வருவனவற்றை நல்வழக்கு வாக்கியங்களாக அமைக்க:–

(1) முருகன் கந்தனைக் காட்டிலும் உயர்ந்தவன்.
(2) காந்தியைவிடப் பெரியமனிதன் உலகிற் பிறக்கவில்லை.



RangaRakes
tamilnavarasam.com

(3) என்னைப் பார்க்கிலும் நீ சிறந்தனை.
(4) அவன் யானையைக் காலை வெட்டினான்.

**9.** பின்வரும் வாங்கியங்களிலே தடித்த எழுத்துக்களில் உள்ள ஒவ்வொன்றும் வேற்றுமை யுருபா, அன்றா எனக் காரணங் காட்டிக் கூறுக. உருபெனின், இன்ன வேற்றுமை இன்னபொருளில் வந்தது எனக் கூறுக:-

(1) கந்த**னின்** வேல்.
(2) அவன் மாளிகைக்**கீழ்** இருந்தான்.
(3) அவன் மாளிகைக்கு **மேல்** ஏறினான்.
(4) தலைவி **புறத்**திற்போய் விளையாடுவதுண்டு.
(5) அப்பெருமான் வீட்ட**கத்து** இருக்கின்றான்.

**63. உருபுமயக்கம்:** பொருளுக்கு இயையாது மயங்கி நிற்கும் எவ்வுருபையும் பொருளுக்கு இயைந்த உருபாகத் திரித்துக் கொள்ள வேண்டும்.

**உ-ம்:** ஈசற்கு யான்வைத்த அன்பு. இங்கு ஈசன் கோடற்பொருளாகாது இடப்பொருளாய் நிற்றலாலே இவ்வுருபைக் கண்ணுருபாகத்திரித்து ஈசன் கண் யான் வைத்த அன்பு எனல் வேண்டும்.

புலியொடு ஒத்தான் – இங்கு புலி உடனிகழ்ச்சிப் பொருளாகாது செயப்படு பொருளாய் நிற்றலால் ஒடு வுருபை ஐயுருபாகத்திரித்துப் புலியை ஒத்தான் எனல் வேண்டும்.

**64.** ஒரு வேற்றுமைப் பொருள் வேறு வேற்றுமை உருபுகளோடு தகுதியாக வருதலும் உண்டு.

**(1) வினைமுதற்பொருள்** (வி.பொ). எழுவாயுருபு மூன்றனுருபுகளோடன்றி நான்கனுருபு ஆறனுருபுகளோடும் வரும்.

அவர் செய்தார். அவர் என்னும் வி. பொ. எழுவாயுருபோடு வந்தது.
அவராற் செய்யத்தகும் அக்காரியம். அவர் என்னும் வி. பொ. மூன்றனுருபோடு வந்தது.
அவர்க்குச் செய்யத்தகும் அக்காரியம். அவர் என்னும் வி. பொ. நான்கனுருபோடு வந்தது.
அவரது வரவு. அவர் என்னும் வி. பொ. ஆறனுருபோடு வந்தது.

**(2) செயப்படுபொருள்** (செ.பொ.) ஐ என்னும் உருபோடன்றி விளியுருபொழிந்த ஏனையுருபுகளோடும் வரும்.





சோறு அடப்பட்டது. சோறு என்னுஞ் செ. பொ. எழுவாயுருபொடு வந்தது.
சோற்றை அட்டான். சோறு என்னுஞ் செ. பொ. இரண்டனுருபோடு வந்தது.
அரிசியாற் சோறாக்கினாள். அரிசி என்னுஞ் செ. பொ. மூன்றனுருபோடு வந்தது.
அவட்குக் கொள்ளும் இவ்வணிகலம். அவள் என்னுஞ் செ. பொ. நான்கனுருபோடு வந்தது.
பழியின் அஞ்சும். பழி என்னுஞ் செ. பொ. ஐந்தனுருபோடு வந்தது.
நூலது குற்றங் கூறினான். நூல் என்னுஞ் செ. பொ. ஆறனுருபோடு வந்தது.
தூணின்கட் சார்ந்தான் தூண் என்னுஞ் செ. பொ ஏழனுருபோடு வந்தது.

**(3) கருவிப்பொருள்** (க.பொ) மூன்று ஐந்து என்னும் உருபுகளோடன்றி ஒன்று, நான்கு, ஆறு என்னும் உருபுகளோடும் வரும்.

| | |
|---|---|
| கண் காணும். | கண் என்னுங் க.பொ. எழுவாயுருபோடு வந்தது. |
| கண்ணாற் காண்பன். | கண் என்னுங் க.பொ. மூன்றனுருபோடு வந்தது. |
| கண்ணிற்குக்காணலாம். | கண் என்னுங் க.பொ. நான்கனுருபோடு வந்தது. |
| கண்ணிற் காணலாம். | கண் என்னுங் க.பொ. ஐந்தனுருபோடு வந்தது. |
| கண்ணது காட்சி. | கண் என்னுங் க.பொ. ஆறனுருபோடு வந்தது. |

**(4) கோடற்பொருள்** (கோ. பொ.) நான்கனுருபோடன்றி விளியுருபு ஒழிந்த ஏனையுருபுகளோடும் வரும்.

| | |
|---|---|
| இரப்பவர் என்பெறினுங் கொள்வர். | இரப்பவர் என்னுங் கோ. பொ. எழுவாயுருபோடு வந்தது. |
| செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும். | தவ்வை என்னுங் கோ.பொ. இரண்டனுருபோடு வந்தது. |
| நாகராற் பலி. | நாகர் என்னுங் கோ. பொ. மூன்றனுருபோடு வந்தது. |
| நாகர்க்குப் பலி. | நாகர் என்னுங் கோ. பொ. நான்கனுருபோடு வந்தது. |
| நாகரின் அன்பு செய்தான். | நாகர் என்னுங் கோ. பொ. ஐந்தனுருபோடு வந்தது. |
| நாகரது பலி. | நாகர் என்னுங் கோ. பொ. ஆறனுருபோடு வந்தது. |



RangaRakes tamilnavarasam.com

நாகர்கண் அன்பு செய்தான். — நாகர் என்னுங் கோ. பொ. ஏழனுருபோடு வந்தது.

**(5) நீக்கப்பொருளும்** (நீ. பொ.) **எல்லைப்பொருளும்** (எ.பொ.) ஐந்தனுருபோடன்றி முறையே இரண்டினுருபோடும் நான்கனுருபோடும்வரும்.

நல்லூரை நீங்கினான். — நல்லூர் என்னும் நீ. பொ. இரண்டனுருபோடு வந்தது.

நல்லூருக்கு வடக்குத் திருநெல்வேலி. — நல்லூர் என்னும் எ.பொ. நான்கனுருபோடு வந்தது.

நல்லூரின் நீங்கினான். — நல்லூர் என்னும் நீ.பொ. ஐந்தனுருபோடு வந்தது.

நல்லூரின் வடக்குத் திருநெல்வேலி. — நல்லூர் என்னும் எ.பொ. ஐந்தனுருபோடு வந்தது.

**(6) சம்பந்தப்பொருள்** (ச.பொ.) ஆறனுருபோடன்றி நான்கு, ஐந்து, ஏழு என்னும் உருபுகளோடும் வரும்.

முருகனுக்கு மகன். — முருகன் என்னுஞ் ச.பொ. நான்கனுருபோடு வந்தது.

மரத்தின் நீங்கிய கொம்பு. — மரம் என்னுஞ் ச. பொ. ஐந்தனுருபோடு வந்தது.

முருகனது கை. — முருகன் என்னுஞ் ச.பொ. ஆறனுருபோடு வந்தது.

உயிரின் கண் உணர்வு. — உயிர் என்னுஞ் ச.பொ. ஏழனுருபோடு வந்தது.

**(7) இடப்பொருள்** (இ.பொ.) ஏழனுருபோடன்றி ஒன்று, இரண்டு, நான்கு என்னும் உருபுகளோடும் வரும்.

தூண் போதிகை தொட்டது. — தூண் என்னும் இ.பொ. எழுவாயுருபோடு வந்தது.

துணைச் சார்ந்தான். — தூண் என்னும் இ. பொ. இரண்டனுருபோடு வந்தது.

இவ்விடத்திற்கு வருவன். — இவ்விடம் என்னும் இ.பொ. நான்கனுருபோடு வந்தது.

தூணின் சார்ந்தான். — தூண் என்னும் இ.பொ. ஏழனுருபோடு வந்தது.





**பயிற்சி 17**

**1.** பின்வருவனவற்றிற் பொருளுக்கு இயையாது மயங்கி நிற்கும் உருபுகளை இயையுமாறு திரிக்க:–

(1) நாயொடு நிகர்த்தான்.
(2) கிழங்கு மணற்கு ஈன்ற முளை.
(3) இந்நகர்க்கே வாழ்கின்றோம்.
(4) கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம்.
(5) காலத்தினாற் செய்த நன்றி.

**2.** மேல்வரும் வாக்கியங்களிலுள்ள வேற்றுமை யுருபுகளின் பொருள்களை எழுதுக:–

(1) அவன் அவ்வூரை நீங்கினான்.
(2) கந்தன் என்மீது அன்பு கொண்டான்.
(3) செவிக்குக் கேட்கலாம்.
(4) பழியின் அஞ்சினான்.
(5) ஆவிற்கு அதன் கன்று அரிது.
(6) நல்லூருக்கு வடக்குத் திருநெல்வேலி.
(7) நாளைக்கு வருவான்.
(8) இவன் கந்தனுக்கு மகன்.

## பெயர்கள் உருபேற்கும் முறை

**64.** உருபுகளை ஏற்குமிடத்து யான் என்னுந் தன்மை ஒருமை பெயர் என் எனவும், நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் நின், உன் எனவும், நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் நும், உம் எனவும், நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப்பெயர் நுங்கள், உங்கள் எனவும் தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர்கள் தன், தம், தங்கள் எனவும் விகாரப்படும்.

யாம் என்னுந் தன்மைப் பன்மைப் பெயர் எம் என விகாரப்படும்.

குவ்வுருபை ஏற்குமிடத்து நீங்கள், தாங்கள் என்பன விகாரப்படுதலோடு உச்சாரியையும் பெறும். ஏனைய தம் விகாரங்களோடு அகரச் சாரியையும் பெறும். இச்சாரியையாகிய அகரத்தின் முன்னும், ஆறனுருபின் முன்னுந் தனிக்குற்றொற்று இரட்டாது.



RangaRakes tamilnavarasam.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யான் | என்னை | என்னொடு | எனக்கு | என்னின் | எனது | என்கண் |
| யாம் | எம்மை | எம்மொடு | எமக்கு | எம்மின் | எமது | எங்கண் |
| நீ | நின்னை | நின்னொடு | நினக்கு | நின்னின் | நினது | நின்கண் |
| | உன்னை | உன்னொடு | உனக்கு | உன்னின் | உனது | உன்கண் |
| நீர் | நும்மை | நும்மொடு | நுமக்கு | நும்மின் | நுமது | நுங்கண் |
| | உம்மை | உம்மொடு | உமக்கு | உம்மின் | உமது | உங்கண் |
| நீங்கள் | நுங்களை | நுங்களொடு | நுங்களுக்கு | நுங்களின் | நுங்களது | நுங்களின்கண் |
| உங்களை | உங்களொடு | உங்களுக்கு | உங்களுக்கு | உங்களின் | உங்களது | உங்களின்கண் |
| தான் | தன்னை | தன்னொடு | தனக்கு | தன்னின் | தனது | தன்கண் |
| தாம் | தம்மை | தம்மொடு | தமக்கு | தம்மின் | தமது | தங்கண் |
| தாங்கள் | தங்களை | தங்களொடு | தங்களுக்கு | தங்களின் | தங்களது | தங்களின்கண் |

**65.** அது, இது, உது, எது, யாது என்பன உருபேற்றற்கண் அன்சாரியையும் இன்சாரியையும் பெற்று வரும்; சிறுபான்மை சாரியை பெறாதும்வரும்.

அது, அதனை, அதனொடு, அதனுக்கு, அதனின், அதனது, அதன்கண், அது, அதினை, அதினொடு, அதினுக்கு, ..., அதினது, அதின்கண். அது, அதை, அதொடு, அதுக்கு, அதின், ... .....
பிறவும் அன்ன.

**66.** அவை, இவை, உவை, எவை, யாவை, கரியவை முதலிய ஐகார ஈற்று அஃறிணைப் பன்னைப் பெயர்கள் உருபேற்றற்கண் ஈற்றைகாரங் கெட்டு அற்றுச்சாரியை பெறும்; நான்கனுருபையும் ஏழனுருபையும் ஏற்றற் கண் அற்றுச் சாரியையோடு இன்சாரியையும் பெறும்.

**உ-ம்:** அவை, அவற்றை, அவற்றோடு, அவற்றிற்கு, அவற்றின், அவற்றது, அவற்றின்கண். பிறவும் அன்ன.

**67.** பல, சில, உள்ள, இல்ல, சிறிய, பெரிய, அரிய முதலிய அகர ஈற்று அஃறிணைப் பன்மைப் பெயர்கள் உருபேற்றற்கண் அற்றுச் சாரியை பெறும்; நான்கனுருபும் ஏழனுருபும் ஏற்றற்கண் அற்றுச் சாரியையொடு இன் சாரியையும் பெறும்.

**உ-ம்:** பல, பலவற்றை, பறவற்றோடு, பலவற்றிற்கு, பலவற்றின், பலவற்றது, பலவற்றின்கண், பிறவும் அன்ன.

**68.** அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஈற்றுப் பெயர்கள் உருபேற்றற்கண் இன் சாரியையைப் பெறும்.





விள, விள வினை, விளவினொடு, விளவினுக்கு, விளவினின், விள வினது, விளவின் கண்,
பலா, பலாவினை, பலாவினொடு, பலாவினுக்கு, பலாவினின், பலாவினது, பலாவின்கண்.
வரவு, வரவினை, வரவினொடு, வரவினுக்கு, வரவினின், வரவினது, வரவின் கண்,
மரு, மருவினை, மருவி னொடு, மருவினுக்கு, மருவினின், மருவினது, மருவின் கண்,
சே, சேவினை, சேவினொடு, சேவினுக்கு, சேவினின், சேவினது, சேவின்கண்,
வெள, வெளவினை, வெளவினுக்கு வெளவினொடு, வெளவினின், வெளவினது, வெளவின்கண்

**69.** ஆ, மா, கோ என்னும் பெயர்கள் உருபேற்றற் கண் னகரச்சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

ஆ, ஆனை, ஆனொடு, ஆனுக்கு, ஆனின், ஆனது, ஆனின்கண்.
ஆவை, ஆவொடு, ஆவிற்கு, ஆவின், ஆவினது, ஆவின்கண்.
பிறவும் அன்ன.

**70.** மகர வீற்றுப் பெயர்ச் சொற்கள் உருபேற்றற் கண் அத்துச் சாரியை பெறும். பெறுதற்கண் மகரவீறுஞ் சாரியை முதலுங் கெடும். சிலவிடத்து அத்துச் சாரியையோடு இன் சாரியையும் பெறும். சிலவிடத்து இன் சாரிய்யயே பெறும்.

மரம், மரத்தை, மரத்தொடு, மரத்திற்கு, மரத்தின், மரத்தது, மரத்துக்கண், மரத்தினை, மரத்தினொடு, மரத்தினுக்கு, மரத்தினின், மரத் தினது, மரத்தின் கண், உரும், உருமினை, உருமினுக்கு, உருமினின், உரு மினது, உருமின்கண்.
பிறவும் அன்ன.

**71.** தனிக் குறிலைச்சாராத வல்லொற்றின் மேல் ஏறி நிற்கும் உகர வீற்றுச் சொற்கள் உருபேற்றற்கண் இன் சாரியை பெறும். அவற்றுள்ளே, நெட்டெழுத்தைச் சார்ந்த டகார றகாரங்களின் மேல் ஏறிநிற்கும் உகரவீற்றுச் சொற்கள் தம்மொற்று இரட்டும்.

நாகு, நாகினை, நாகினொடு, நாகினுக்கு, நாகினின், நாகினது, நாகின்கண்,
வரகு, வரகினை, வரகினொடு, வரகினுக்கு, வரகினின், வரகினது, வரகின்கண்,

ஆடு, ஆட்டினை, ஆட்டினொடு, ஆட்டினுக்கு, ஆட்டினின், ஆட்டினது, ஆட்டின்கண், ஆட்டை, ஆட்டொடு, ஆட்டுக்கு, ஆட்டின், ஆட்டது, ஆட்டுக்கண்.



RangaRakes
tamilnavarasam.com

ஆறு, ஆற்றினை, ஆற்றினொடு, ஆற்றினுக்கு, ஆற்றினின், ஆற்றினது, ஆற்றின்கண், ஆற்றை, ஆற்றொடு, ஆற்றுக்கு, ஆற்றின், ஆற்றது, ஆற்றுக்கண்.

**72.** ஒன்று முதலாய எண்ணுப் பெயர்கள் உருபேற்றற்கண் அன், இன் என்னுஞ் சாரியைகளைப் பெற்றும் பெறாதும் வரும்

ஒன்று, ஒன்றனை, ஒன்றனொடு ஒன்றனுக்கு, ஒன்றனின், ஒன்றனினது,ஒன்றனின்கண், ஒன்றினை, ஒன்றினொடு, ஒன்றினுக்கு, ஒன்றினின், ஒன்றினது, ஒன்றினின்கண், ஒன்றை, ஒன்றொடு, ஒன்றுக்கு, ஒன்றின், ஒன்றது ....

பிறவும் அன்ன.

**73.** உயிரீற்றுச் சொற்களும் மெய்யீற்றுச் சொற்களும் இன்னுருபு அல்லாத உருபுகளை ஏற்றற்கண்ணே பெரும்பான்மையாக இன்சாரியை பெறும்.

எலி, எலியினை, எலியினொடு, எலியிற்கு, ......, எலியினது, எலியின்கண், எலியினுக்கு, எலியின். பெண், பெண்ணினை, பெண்ணினொடு, பெண்ணிற்கு, ....... பெண்ணினது, பெண்ணின்கண் பெண்ணுக்கு, பெண்ணின்.

எலியினுக்கு என்பதில் இன்சாரியையொடு உகரச் சாரியை பெறுதலையும், பெண்ணுக்கு என்பதில் இன் சாரியையன்றி உகரச்சாரியை பெறுதலையுங் காண்க.

**74.** எல்லாம் என்னுஞ் சொல் அஃறிணைப் பொருளில் உருபேற்றற்கண் மகரவீறுகெட்டு அற்றுச்சாரியையொடு முற்றும்மையும் பெறும்; உயர்திணைப் பொருளில் உருபேற்றற்கண் நம்முச்சாரியை முற்றும்மையும் பெறும்.

**உ-ம்:** எல்லாம், எல்லாவற்றையும், எல்லாவற்றொடும், எல்லாவற்றிற்கும், எல்லாவற்றிலும், .... எல்லாவற்றின் கண்ணும், –அஃறிணைப் படர்க்கைப்பன்மை.

எல்லாம், எல்லாநம்மையும், எல்லா நம்மொடும், எல்லா நமக்கும், எல்லா நம்மிலும், ....., எல்லாநங்கண்ணும். – உயர்திணைத் தன்மைப்பன்மை.

அதுபோல, எல்லாப்பொருளும், எல்லாப் பொருளையும், எல்லாப் பொருளொடும், எல்லாப் பொருளுக்கும், எல்லாப் பொருளிலும், ......., எல்லாப் பொருட்கண்ணும். – அஃறிணைப் படர்க்கைப்பன்மை.





எல்லாமக்களும், எல்லாமக்களையும், எல்லாமக்களொடும், எல்லாமக்களுக்கும், எல்லாமக்களிலும், ....., எல்லா மக்கள் கண்ணும் – உணர்திணைப் படர்க்கைப்பன்மை.

**75.** எல்லாரும், எல்லீரும் என்பன உருபேற்றற்கண் உம்மைகெட்டு முறையே தம், நும் என்னுஞ் சாரியை பெற்றும் பெறாதும் முற்றும்மையாலே முடியும்.

எல்லாரும், எல்லார்தம்மையும், எல்லார்தம்மொடும், எல்லார் தமக்கும், எல்லார் தம்மிலும் ........., எல்லார் தங்கண்ணும். – உயர் திணைப் படர்க்கைப்பன்மை.

எல்லோரும், எல்லாரையும், எல்லாரொடும், எல்லாருக்கும், எல்லாரிலும் ...... எல்லார் கண்ணும் – உயர்திணைப் படர்க்கைப் பன்மை.

எல்லீரும், எல்லீர் நும்மையும், எல்லீர் நும்மொடும், எல்லீர் நுமக்கும், எல்லீர் நும்மிலும், ....., எல்லீர் நுங்கண்ணும். – உயர்திணை முன்னிலைப்பன்மை.

எல்லீரும், எல்லீரையும், எல்லீரொடும், எல்லீருக்கும், எல்லீரிலும், ........., எல்லீர் கண்ணும். – உயர்திணை முன்னிலைப் பன்மை.

## பயிற்சி 14

**1.** பின்வரும் பெயர்ச்சொற்கள் எட்டு வேற்றுமைகளிலும் பெறும் உருவங்களைத் தருக:–

செலவு, தாங்கள், நுமர், நிலா, மாடு, வரம், நீ, நான், சில, உரும்.

**2.** மேல் வருவனவற்றிற் கோடிட்ட இடங்களில் வினாப் பெயர்களைத் தக்க உருபுகளோடு இட்டு வாக்கியம் முடிக்க:–

**(1)** .................. உன்னைக் காண விரும்புகிறான்?
**(2)** அம்மகளிருள் .................. இந்நூலைக் கொடுப்பாய்?
**(3)** பணம், கல்வி என்னும் இவற்றுள் .................. சிறந்தது?
**(4)** நீ அந்நூல்களுள் .................. கற்றாய்?
**(5)** ஆடவருள் .................. சிறந்தவனென்று கருதுகிறாய்?
**(6)** இப் பசுக்களுள் .................. நீ புல்லிடுவை?



RangaRakes
tamilnavarasam.com

3. கீழ்க்காணும் வாக்கியம் ஒவ்வொன்றிலுங் கோடிட்ட இடத்தில் அடைப்புக்குட் கிடக்குஞ் சொல்லைத் தக்க உருபொடு இட்டு வாக்கியம் முடிக்க: –

(1) அவன் ................... உயரத்தாற் குறைந்தவன். (யான்)
(2) அப்பெருமாட்டி ................... போல நற்குணமுடையவள். (நீ)
(3) அவன் ................... புகுந்து விறகு வெட்டினான். (காடு)
(4) தச்சன் ஒரு ................... அரிந்து பலகைகளாக்கினான். (மரம்)
(5) அவற்றுள்ளே ................... எனக்குத் தருவாய் (சில)
(6) ................... பெறுதற்கு ஊக்கம் வேண்டும். (அவை)
(7) அவர்கள் ................... நீ கெடுத்துவிட்டாய் (எல்லாரும்)
(8) செய்தற்கு ................... பெரியர் செய்வர். (அரிய)
(9) கொல்லர் ................... ஆயுதங்கள் செய்வர் (எஃகு)
(10) அவர் மரங்கள் ................... தறித்து வீழ்த்தினர் (எல்லாம்)
(11) ஈர ................... எலும்பு இல்லை. (நா)
(12) இனம் ................... காக்கும். (இனம்)
(13) ...................ஒவ்வொன்று எளிது. (எல்லாரும்)
(14) ................... ஏற்ற கோலங் கொள்ள வேண்டும். (காலம்)
(15) ................... திருத்தமாகச் செய் (செய்வன)
(16) .............. ஊருக்கு ஆனை, அயலூருக்குப் பூனை (தான்)
(17) நாம் ஒருவருக்குக் கொடுத்தால்
................... ஒருவர் கொடுப்பர் (நாம்)
(18) ................... இருந்தாலுங் காற்றிற்கு இரை. (நூறு)
(19) ................... அறிந்தால், தலைவனை அறியலாம். (தான்)
(20) ................... இருக்கும் இரகசியம் மதிகேடனுக்கு வாக்கிலே. (மனம்)
(21) ................... வலி இல்லாதவர் புகழ் எய்தார். (தாம்)
(22) அரசன் ................... தமர் செய்யாமை தவறு. (ஏவியன்)
(23) கூடுங் – செல்வம் வந்து கூடும். (காலம்)
(24) மறைவான காரியத்தில் ................... நம்புதல் ஆகாது (எவரும்)
(25) ................... வந்த பொருள் அறத்துக்கு ஆகாது. (பாவம்)
(26) இலங்கையிற்பிறந்த ................... வாக்குரிமை இல்லை. (எல்லாமக்களும்)
(27) அவர்கள் ................... இகழ்கிறார்கள். (எல்லாநாமும்)





(28) நாம் ........... ஆலோசித்துச் செய்தல் வேண்டும். (எவையும்)
(29) நாம் ................... அம் மைதானத்தில் விளையாடினோம். (எல்லாம்)
(30) ................... உள்ளது ஒளி. (மணி)
(31) ................... உகந்தது வளையல் (கை)
(32) அவன் ................... நீர் கொடுத்தான் (ஆ)
(33) ................... இறைத்த நீர் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம். (நெல்)
(34) அவன் ................... வேலை செய்தான். (கூலி)
(35) அவனுடைய ................... பீளை வடிகின்றது. (கண்)



RangaRakes
tamilnavarasam.com

## அதிகாரம் 5.

# வினைச்சொன் மரபு

**76.** வினைச்சொல்லானது தெரிநிலை வினைமுற்று, குறிப்புவினைமுற்று என்னும் இருவகை வினைமுற்றுக்களாயும், தெரிநிலைவினைப் பெயரெச்சம், குறிப்புவினைப் பெயரெச்சம் என்னும் இருவகைப் பெயரெச்சங்களையும், தெரிநிலைவினை வினையெச்சம், குறிப்புவினை வினையெச்சம் என்னும் இருவகை வினையெச்சங்களாயும் பிரிக்கப்படும்.

**77.** தெரிநிலை வினைமுற்றுங் குறிப்பு வினைமுற்றும் இருதிணை ஐம்பால் மூவிடங்கள் பற்றி வரும்.

**(1) படர்க்கை வினைமுற்றுக்கள்**

**(i)** அன், ஆன் என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச் சொற்கள் உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினை முற்றுக் களாம்.

| இ. தெரி மு. | நி.தெரி.மு. | எ.தெரி. மு. | குறி. மு. | |
|---|---|---|---|---|
| அன் – நடந்தனன் | நடக்கின்றனன் | நடப்பன் | குழையன் | |
| ஆன் – நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் | குழையான் | அவன் |

**(ii)** அள், ஆள் என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச் சொற்கள் உயர்திணைப் **பெண்பாற் படர்க்கை வினை முற்றுக் களாம்.**

| இ.தெரி. மு | நி.தெரி.மு. | எ.தெரி.மு. | குறி. மு. | |
|---|---|---|---|---|
| அள் – நடந்தனள் | நடக்கின்றனன் | நடப்பன் | குழையள் | |
| ஆள் – நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் | குழையாள் | அவள். |

**(iii)** அர், ஆர் என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச் சொற்கள் உயர்திணைப் **பலர்பாற் படர்க்கை வினை முற்றுக் களாம்.**

| இ.தெரி.மு. | நி.தெரி.மு | எ.தெரி.மு. | குறி.மு | |
|---|---|---|---|---|
| அர் – நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | குழையர் | அவர். |
| ஆர் – நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் | குழையார் | |

**(iv)** து, று, டு என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச்சொற்கள் அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.





| இ.தெரி.மு | நி.தெரி.மு. | எ.தெரி.மு. | குறி.மு. | |
|---|---|---|---|---|
| து – நடந்தது | நடக்கின்றது | நடப்பது | குழையது | அது |
| று – கூயிற்று | – | – | குழையிற்று | |
| டு – – | – | – | பொருட்டு | |

**(v)** அ என்னும் விகுதியை இறுதியில் உள்ள வினைச்சொற்கள் அஃறிணைப் **பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.**

| இ.தெரி.மு | நி.தெரி.மு. | எ.தெரி.மு. | குறி.மு. | |
|---|---|---|---|---|
| அ – நடந்தன | நடக்கின்றன | நடப்பன | அரியன | அவை. |

**(2) தன்மை வினைமுற்றுக்கள்.**

**(i)** என், ஏன், அன் என்னும் விகுதிகளை இறுதியில் உள்ள வினைச் சொற்கள் இருதிணைத் **தன்மை ஒருமைவினை முற்றுக்களாம்.**

| இ.தெரி.மு. | நி.தெரி.மு. | எ.தெரி.மு. | குறி.மு. | |
|---|---|---|---|---|
| என் – உண்டனென் | உண்கின்றனென் | உண்பென் | குழையென் | யான் |
| ஏன் – உண்டேன் | உண்கின்றேன் | உண்பேன் | குழையேன் | |
| அன் – உண்டனன் | உண்கின்றனன் | உண்பன் | குழையன் | |

**(ii)** அம், ஆம், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகளை இறுதியில் உள்ள வினைச்சொற்கள் இருதிணைத் **தன்மைப் பன்மை வினை முற்றுக்களாம்.**

| இ. தெரி.மு | நி.தெரி.மு. | எ.தெரி.மு. | குறி.மு. | |
|---|---|---|---|---|
| அம் – உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் | குழையம் | யாம் |
| ஆம் – உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் | குழையாம் | யானும் நீயும். |
| எம் – உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம் | குழையெம் | யாம் |
| ஏம் – உண்பேம் | உண்கின்றேம் | உண்பேம் | குழையேம் | யானும் |
| ஓம் – உண்டோம் | உண்கின்றோம் | உண்போம் | குழையோம் | அவனும் |

இவற்றுள் அம், ஆம் என்னும் விகுதிகளை இறுதியில் உள்ள சொற்கள் முன்னிலையிடத்தாரையும் எம், ஏம், ஓம் என்னும் விகுதிகளை ஈற்றில் உள்ள சொற்கள் படர்க்கையிடத்தாரையும் உளப்படுத்தும் மாகையால், இச்சொற்கள் **உளப்பாட்டுத் தன்மைப் பன்மைச் சொற்கள்** எனப்படும். இவை சிறுபான்மை மாறிவருதலும் உண்டு.



RangaRakes

tamilnavarasam.com

**(3) முன்னிலைவினை முற்றுக்கள்.**

(i) ஐ, ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியில் உள்ள வினைச் சொற்கள் இருதிணை **முன்னிலை ஒருமைவினைமுற்றுக்களாம்.**

| | இ. தெரி. மு | நி. தெரி. மு. | எ. தெரி. மு. | குறி. மு. | |
|---|---|---|---|---|---|
| ஐ | – உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையினை | நீ |
| ஆய் | – உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் | |
| இ | – உண்டி | உண்ணாநின்றி | வருதி | வில்லி | |

(ii) இர், ஈர், என்னும் விகுதிகளை இறுதியில் உள்ள வினைச் சொற்கள் இருதிணை **முன்னிலைப் பன்மை வினை முற்றுக்** களாம்.

| | இ. தெரி. மு | நி. தெரி. மு. | எ. தெரி. மு. | குறி. மு. | |
|---|---|---|---|---|---|
| இர் | – உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | குழையிர் | நீர். |
| ஈர் | – உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | குழையீர் | |

**78. எதிர்மறை வினைமுற்றுக்கள்**

(i) இல், அல், ஆ என்னும் எதிர்மறை இடைநிலைகளோடு பால் காட்டும் விகுதிகளைப் பெற்று வரும் வினைச் சொற்களும், ஆகார ஈற்று எதிர்காலப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்களும், அல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றிப் பாலிடங்கள் காட்டும் விகுதிகளைப் பெற்ற சொற்களோடாயினும் இல்லை என்னும் எதிர் மறைப் பொதுக்குறிப்பு வினையோடாயினுங்கூடி ஒரு சொன்னீமைப் பட்டு நிற்குஞ் சொற்களும் **எதிர்மறைத்தெரிநிலை வினைமுற்றுக் களாம்.**

| | இ. தெரி. மு | நி. தெரி. மு. | எ. தெரி. மு |
|---|---|---|---|
| இல் | நடந்திலன் | நடக்கின்றிலன் | நடக்கிலன் |
| | பெற்றிலன் | பெறுகின்றிலன் | பெறுகிலன் |
| அல் | – | – | நடக்கலன் |
| | | | உண்ணலன் |
| ஆ | – | – | நடவான் |
| | | | நடவா |

| | | | |
|---|---|---|---|
| **அல்லன்** | நடந்தானல்லன் | நடக்கின்றானல்லன் | நடப்பானல்லன் |
| **அல்லேன்** | நடந்தேனல்லேன் | நடக்கின்றேனல்லேன் | நடப்பேனல்லேன் |
| **அல்லை** | நடந்தாயல்லை | நடக்கின்றாயல்லை | நடப்பாயல்லை |
| **இல்லை** | நடந்தானில்லை | நடக்கின்றானில்லை | நடப்பானில்லை |





இங்கு, இல் என்னும் இடைநிலை நடந்திலன் என்பதிற் போல இறந்தகால இடைநிலையோடும், பெற்றிலன் என்பதிற்போல விகாரப்பட்டு இறந்த காலங்காட்டும் பகுதியோடும் நடக்கின்றிலன் என்பதிற்போல் நிகழ்கால இடைநிலையோடுங் கூடி வருதல் காண்க.

காலங்காட்டும் இடைநிலையோடு கூடாது, இல் என்னும் இடை நிலை நடக்கிலன் என்பதிற்போலக் குச் சாரியை பெற்றும், அல் என்னும் இடைநிலை நடக்கலன், உண்ணலன் என்பனவற்றிற்போலக் குச் சாரியை பெற்றும் பெறாதும், ஆகாரவிடைநிலை நடவான் என்பதிற்போலச் சாரியை பெறாது எதிர்கால இடைநிலை பெற்றும் எதிர்காலமுணர்த்தல் காண்க.

(ii) அல், இல் என்னும் பண்படியாகத் தோன்றிப் பாலிடங்கள் காட்டும் விகுதிகளைப் பெற்றும் வரும் வினைச் சொற்கள் **எதிர்மறைக் குறிப்பு வினை முற்றுக்களாம்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| படர்க்கை | – | அல்லன் ; | அல்லள்; | அல்லர்; | அன்று | அல்ல | அல்லன. |
| | | இலன்; | இலள்; | இலர்; | இன்று; | இல; | இல்லன. |
| முன்னிலை | – | அல்லாய் ; | அல்லீர் | | | | |
| | | இலாய் ; | இலீர். | | | | |
| தன்மை | – | அல்லேன் | அல்லேம். | | | | |
| | | இலேன்; | இலேம். | | | | |

**79.** வேறு, இல்லை, உண்டு, யார் என்னும் நான்கு குறிப்பு வினை முற்றுக்களும் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். இவற்றுள் யார் என்பது அஃறிணைக்கு வருதல் இற்றைக்கால மரபு.

| | |
|---|---|
| அவன், அவள், அவர், அது, அவை | வேறு, இல்லை, உண்டு, யார் |
| யான், யாம் | |
| நீ, நீர் | |

யார் என்பது ஆரென விகாரப்பட்டும் வரலாம்.

யாவர் என்பது வகரங் கெட்டு யார் என நிற்கும் பலர்பாற் படர்க்கை வினாப்பெயர்க்கு யார் என்னுங் குறிப்பு வினைமுற்று வேறாதல் காண்க.

**80.** எவன் என்னுங் குறிப்பு வினைமுற்று வினாப்பொருளில் அஃறிணை இருபாற்கும் பொதுவாகி வரும்.

**உ-ம்:** அஃது எவன்? அவை எவன்?

எவன் என்பது என், என்ன, என்னை என விகாரப்பட்டும் வரும்.



RangaRakes tamilnavarasam.com

எவன் என்னும் உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினாப்பெயர்க்கு எவன் என்னும் வினாக்குறிப்பு வினைமுற்று வேறாதல் காண்க.

**81.** செய்யும் என்னுந் தெரிநிலைவினைமுற்று நிகழ் காலத்திற் பல்லோர் படர்க்கையிலும் முன்னிலையிலுந் தன்மையிலும் வராது; ஏனைப் பாலிடங்களில் வரும்.

அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும்.
– பிழையற்றவை.
அவர் வரும், நீ வரும், நீர் வரும், நான் வரும், நாம் வரும்,
– பிழையானவை.

**82.** வினைப்பயனிலையானது எழுவாயோடு திணை பாலிடங்கள் பற்றி மயங்காது நிற்கும். மயங்கின், வழுவாம்.

அவர் வந்தன என்பது திணைவழு.
உயர்திணை அஃறிணை மயக்கமாதலறிக.
அவன் வந்தாள் என்பது பால்வழு.
ஆண்பால் பெண்பால் மயக்கமாதலறிக.
நான் வந்தான் என்பது இடவழு.
தன்மைப் படர்க்கை மயக்கமாதலறிக.

அவர் வந்தார், அவன் வந்தான், நான் வந்தேன் என்பன வழுவிலிகள்.

**83.** உம்மையினால் இணைக்கப்பட்ட இரண்டு ஒருமை எழுவாய் களேனும் இரண்டின் மேற்பட்ட ஒருமை எழுவாய்களேனும் பன்மைவினைப் பயனிலை கொள்ளும்.

**உ-ம்:** கந்தனும் முருகனும் இங்கு வந்தனர்.
கந்தனும் முருகனும் பூதனும் இங்கு வந்தனர்.

**84.** பல ஒருமைப் பெயர்கள் ஒரு பொருளைக் குறித்து வருமாயின், முடிக்கும் வினை ஒருமை வினையாய் இருத்தல் வேண்டும்.

**உ-ம்:** ஆசிரியன் வேலூரான் முருகன் வந்தான்.

**85.** ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும், ஒவ்வொன்றும் முதலிய எழுவாய்கள் ஒருமை வினைப் பயனிலையாலும் ஒவ்வொருவரும் என்னும் எழுவாய் பன்மைவினைப் பயனிலையாலும் முடியும்.

அவருள் ஒவ்வொருவனும் வாய்விட்டரற்றினான்.
அவருள் ஒவ்வொருத்தியும் அவ்விழாவிற் கலந்தாள்.





அவற்றுள் ஒவ்வொன்றுங் கெட்டுவிட்டது.
அவருள் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மாம்பழம் பெற்றான்.
அவருள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பரிசு பெற்றனர்.

**86.** ஆதல்.... ஆதல், ஆவது.... ஆவது, ஆயினும்..... ஆயினும், தான்... தான் என்னும் இடைச்சொற்களால் இணைக்கப்பட்ட ஒருமை எழுவாய்கள் ஒருமை வினைப் பயனிலையைக் கொள்ளும்.

கந்தனாதல் முருகனாதல் இங்கு வருவான்.
எண்கணிதமாவது நுண்கணிதமாவது கற்பிக்கப்பட்டதா?
கந்தனாயினும் முருகனாயினும் அங்குச் செல்வான்.
பொன்றான் வெள்ளிதான் கொடுக்கப்பட்டதா?

**87.** ஆதல்... ஆதல் முதலியனவற்றால் இணைக்கப்பட்ட எழுவாய் களுள் ஒன்றாயினும் பன்மைப்பாலில் இருந்தால் வினைப்பயனிலை பன்மைப்பாலில் இருத்தல் வேண்டும்; பன்மை எழுவாய் வினைப்பயனி லைக்கு அருகில் வைக்கப்படுதல் வேண்டும்.

தலைமை ஆசிரியனாதல் உதவியாசிரியராதல் அங்கு இருந்திலர்.
கந்தனாயினும் அவனுடைய நண்பராயினுங் காக்கப்பட்டாரல்லர்.

**88.** ஆதல் – ஆதல் முதலியவற்றால் இணைக்கப்பட்ட எழுவாய்கள் இடம்பற்றி வேறுபடின், வினைப் பயனிலை தன்மைச்சொல் இருந்தால் அதனை அண்மையாக்கி அதனோடும், தன்மைச்சொல் இல்லாவிடில் முன்னிலைச்சொல்லை அண்மையாக்கி அதனோடும் மயங்கும்.

அவனாதல் யானாதல் பிழைபடுவேன்.
அவனாதல் நீயாதல் குறைகேட்பாய்.

இவற்றைப் பின்வருமாறு கூறுதல் சிறப்பாகும்:–

அவன் பிழைபடுவான் ; அன்றெனின் யான் பிழைபடுவேன்.
அவன் குறைகேட்பான்; அன்றெனின் நீ குறை கேட்பாய்.

**89.** உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து தாமும் எழுவாயாய் நிற்கின்ற பொருள், இடம் முதலிய ஆறும் அவ்வுயர்திணையோடு சேர்ந்து முடிக்கப் பட்டால், உயர்திணை முடிபைப் பெறுவனவாம்; அஃறிணை எழுவாயைத் தொடர்ந்து வருவன அஃறிணை முடிபைப் பெறுவனவாம்.

| | உயர்திணை | அஃறிணை |
|---|---|---|
| **பொருள்** | – நம்பி பொன் பெரியன். | கிணறு நீர் ஊறிற்று. |
| **இடம்** | – நம்பி நாடு பெரியன். | மாடு பிறந்த இடம் நல்லது. |



RangaRakes
tamilnavarasam.com

**காலம்** – நம்பி வாழ்நாள் பெரியன் மாடு பிறந்த காலம் நல்லது.
**சினை** – நம்பி மூக்குக் கூரியன். மாடு கோடு கூரிது.
**குணம்** – நம்பி குடிமை நல்லன். மாடு சாதி நல்லது.
**தொழில்** – நம்பி நடை கடியன். மாடு நடை கடிது.

இங்கு பொன் என்பது எழுவாயாய் நின்று பெரியன் என்பதனோடு இயைந்து பொன் பெரியன் என ஒரு சொன்னீர்மைப்பட்டு நம்பி என்பதற்குப் பயனிலையாய் நின்றமை காண்க. பிறவுமன்ன.

**90.** ஒருமைப்பெயர் பன்மைப்பெயர்களுள் ஒன்றும் பிறிதோர் ஒருமைப் பெயரும் ஒருவினைக்கு இயலுமிடத்து முன்னதின்மேல் ஏகாரவிடைச் சொல்லைச் சாரவைத்து அதன்மேல் அன்றி என்னும் வினையெச்சத்தைத் தொடர வைத்துப் பின்னதனை உம்மை ஏற்கச்செய்து ஒருமை வினைப் பயனிலையாலே முடித்தல் மரபு.

அவனேயன்றி இவனும் உடன்பட்டான். அவனும் உடன்பட்டான், இவனும் உடன்பட்டான் என்னும் பொருளது.
அவனேயன்றி இவனும் உடன்படான். அவனும் உடன்படான்.
இவனும் உடன்படான் என்னும் பொருளது.

**91.** ஒருமைப்பெயர் பன்மைப் பெயர்களுள் ஒன்றும் பிறிதோர் ஒருமைப் பெயரும் ஒன்றுக்கொன்று எதிரான வினைகளுக்கு இயலுமிடத்து முன்ன தன்மேல் அன்றி என்னும் வினையெச்சத்தை வைத்துப் பின்னதனை ஒருமை வினைப் பயனிலையாலே முடித்தல் மரபு.

அவனன்றி இவன் வந்தான். அவன் வரவில்லை
இவன் வந்தான் என்னும் பொருளது.
அவரன்றி இவன் வந்தான். அவர் வரவில்லை.
இவன் வந்தான் என்னும் பொருளது.

## பயிற்சி 15

**1.** தந்த சொற்கள் கொண்டு பின்வரும் வாக்கியங்களை முடிக்க.

(1) கந்தனும் முருகனும் நேற்று இங்கு – அல்லர். (வா)
(2) கந்தனாதல் முருகனாதல் நாளைக்கு அங்கு – அல்லன் (போ)
(3) நானும் அவனும் அங்கு நாளைக்கு – (செல்)
(4) நானும் நீயும் அவனும் அதனை நாளைக்கு – (செய்)
(5) நானும் நீயும் அக்கோயிலை அடுத்த ஆண்டு – (புதுப்பி)





(6) நீயும் அவனும் நேற்று என்னபானம் – (அருந்து)
(7) புலிகள் பட்டினி கிடந்தாலுங் காய்கறி – (தின்)
(8) நான் நற்குணம் படைத்துளேன் ஆதலால் என் நட்பினரைக் கைவிடுவேன். – (அல்)
(9) நீ நேற்று அங்குச் செல்லவில்லை என அறிந்தும் இனி ஒருபோதும் அங்குப் போவாய் – என உணர்ந்தேன் –. (அல்)
(10) உன்மகன் காணேண்டி என்பதனை மறந்து அவன் – என வருந்துகின்றாய். (நட)

**2.** மேல்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்கள் ஒவ்வொன்றும் இன்ன பெயராகும் என்றாதல் இன்னவினையாகும் என்றாதல் கூறுக:–

(1) நீ **யார்**?
(2) **யார்** இதனைச் செய்தார்?
(3) **என்ன** காரியஞ் செய்தனை?
(4) நீ வந்த காரியம் **என்ன**?
(5) நுமருள் **யாவன்** இதனைச் செய்தவன்?
(6) அவ்வெருதுகளுள்ளே முடவன் **யாது?**

**3.** பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்கள் எவ்வகையைச் சார்ந்தன எனக்கூறுக; அவற்றினுடைய திணை பாலிடங் காலங்களையுங் கூறுக:–

(1) இறைவனுக்கு வேறாக ஒருபொருளும் இல்லை.
(2) யானும் வேறு நீயும் வேறு.
(3) நுங்குதிரைகள் ஓடுகின்றில என வருந்துகின்றீர்.
(4) யானும் நீயும் ஓணத்தினேம் என இப்பொழுது அறிகின்றேன்.
(5) இவ்வுலகைப் படைத்தவன் எங்கு உளன் என நாம் அறிகிலம்.

**4.** மேல்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்கள் எக்காலங்களில் வந்தன. எனக் காரணங் காட்டிக் கூறுக:–

(1) அவன் ஒருபாட்டுப் பாடினான்.
(2) அவர் உடனே தன்னில்லம் புக்கார்.
(3) நீ அவ்வுணவை உண்ணவில்லை என யான் சொல்வேனல்லேன்.
(4) அக்குழந்தை பால் முழுவதையும் உறிஞ்சியது.
(5) அவர் நீர் அருந்தப் போனார்.
(6) நான் கற்றிலேன் என எனது தாய் கவல்கின்றாள்.



RangaRakes tamilnavarasam.com

**5.** கீழ்க்காணும் வாக்கியங்களின் மறைவகைகள் எல்லாவற்றையுந் தருக.

(1) அவன் எல்லா நூல்களையுங் கற்றான்.
(2) அவன் பிடித்த பிடியை விட்டான்.
(3) அப் பூ ஞாயிறு உதயமானதும் மலரும்.
(4) அக் குரங்கு தேன் அருந்தி வெறிகொண்டது.
(5) நீ அவனுக்குச் சில பரிசு கொடுக்கின்றாய்.
(6) நான் இவ்வேலையைச் செய்வேன்.

**6.** பின்வரும் வாக்கியங்களில் இன்ன வழுக்கள் உள என எடுத்துக் காட்டி அவற்றை நீக்கி எழுதுக.

(1) யான் அவ்வீதியாலே நடந்தேனல்ல.
(2) நீர் அங்கு சென்றீர் அல்ல.
(3) நான் கூறியது பிழையல்ல.
(4) கந்தனுடைய பசு நின்பைங்கூழை மேய்ந்தனவன்று.
(5) அவனைக் கெடுத்தவன் நீயல்ல.
(6) யானும் அவனும் நல்லூருக்குப் போனேன்.
(7) யான் அவனோடு திருநெல்வேலிக்குப் போனோம்.
(8) மாணாக்கரன்றி ஆசிரியன் வந்தார்.
(9) யான் அவ்வழி நடந்திலம் என்பதை நீர் அறியீரா?
(10) அவன் யார் என்பதை யார் அறிவான்?
(11) நீ காண்டற்கு அரியான்.
(12) இவன் குற்றி அன்று.
(13) நீர் பொருளுடையான் என்பதை ஒருவரும் அறிந்திலன்.
(14) இச்செயல் அறத்தினுள் ஒன்றல்ல.
(15) நான் கல்வியிலன் என்பதை ஒருவருக்குந் தெரியாது.
(16) நாம் எல்லோருங் கரியர் என எம்மை இகழ்வாரும் உளர்.
(17) மாணாக்கரேயன்றி ஆசிரியனும் வந்தார்.
(18) நீர் எந்நாட்டினர் என அவன் என்னை வினவினான்.
(19) அவர் தான் குழையினர் என புகழ்ந்து கூறவில்லை.
(20) நீர் தான் குழையினர் என அறிந்தேன்.
(21) நீ நிறம்பற்றிச் செய்யான் எனக் கூறினான்.
(22) நீயும் அவனும் என்னென்ன செய்தீர்?
(23) நீ முருகனல்லன் கந்தன்.
(24) கந்தனாயினும் முருகனாயினும் நேற்று வந்தாரல்லர்.





(25) அவருள் ஒவ்வொருமனிதனும் ஒவ்வொரு குற்றஞ் செய்தனர்.
(26) நீ மூக்குக் கூரியன்.
(27) நீயாதல் அவனாதல் அங்குச் சென்றாயல்லை.
(28) கந்தனாயினும் பிள்ளைகளாயினும் அங்குச் சென்றானல்லன்.
(29) நீர் நடை கடியர்.
(30) மந்திரியாராதல் அரசனாதல் அங்குக் காணப்பட்டிலர்.
(31) அப்பெண்களுள் ஒவ்வொருத்தியுந் தான் கண்டதே பெரிது என்றனர்.
(32) இவ்வெருதுகள் உழவு நல்லது.
(33) மாணாக்கரொடு ஆசிரியனும் வந்தார்.
(34) நீ யான் அல்லன்.
(35) நீங்கள் ஒவ்வொருவரும் அதனைச் செய்தல் வேண்டும்.
(36) நாம் அனைவரும் அக்கோயிலுக்குப் போவோம்.

## 92. முன்னிலை ஏவல் வினைமுற்றுக்கள்

(i) ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச் சொற்களும் ஆய் விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதிமாத்திரையாய் நிற்கும் வினைச் சொற்களும் **முன்னிலை ஏவல் ஒருமை உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுக்களாம்.**

**உ-ம்:** உண்ணாய்
உண்ணுதி } நீ
உண்

**ந.க.** உண்ணாய் என்னும் முன்னிலை ஏவல் ஒருமை உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று உண் என்னும் பகுதியும் ஆய் என்னும் விகுதியும் பெற்று முடிந்தது. உண்ணாய் என்னும் முன்னிலை ஒருமை எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று உண் என்னும் பகுதியும், ஆ என்னும் எதிர்மறை இடைநிலையும், ஆய் என்னும் விகுதியும் பெற்று, ஆகார இடைநிலை கெட்டு முடிந்தது.

(ii) அல், ஆல், ஏல் என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச் சொற்களும் எதிர்மறை ஆகார இடைநிலையின் பின்னர்த் தகர எழுத்துப்பேற்றோடு இகரவிகுதியும் பெற்று முடியும் வினைச் சொற்களும் **முன்னிலை ஏவல் ஒருமை எதிர்மறைத் தெரிநிலை வினை முற்றுக்களாம்.**



RangaRakes
tamilnavarasam.com

**உ-ம்:** உண்ணல்
மறால்
உண்ணேல்
உண்ணாதி } நீ

**(iii)** ஈர், உம் என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள வினைச்சொற்களும், அல் என்னும் எதிர்மறை இடைநிலை பெறாது மின் என்னும் விகுதியொடு முடியும் வினைச்சொற்களும் **முன்னிலை ஏவற் பன்மை உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுக்களாம்.**

**உ-ம்:** உண்ணீர்
உண்ணும்
உண்மின் } நீர்

**ந.க.** உண்ணீர் என்னும் முன்னிலை ஏவற்பன்மை உடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்று உண் என்னும் பகுதியும் ஈர் என்னும் விகுதியும் பெற்று முடிந்தது. உண்ணீர் என்னும் முன்னிலைப் பன்மை எதிர்மறைத் தெரிநிலைவினை முற்று உண் என்னும் பகுதியும், ஆ என்னும் எதிர்மறை இடைநிலையும், ஈர் என்னும் விகுதியும் பெற்று, ஆகார இடைநிலை கெட்டு முடிந்தது.

**(iv)** அல் என்னும் எதிர்மறை இடைநிலை பெற்று மின் என்னும் விகுதியோடு முடியும் வினைச்சொற்களும், எதிர்மறை ஆகார இடைநிலையின் பின்னர்த் தகர எழுத்துப் பேற்றோடு ஈர் என்னும் விகுதியாலே முடியும் வினைச்சொற்களும் **முன்னிலை ஏவற் பன்மை எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுக்களாம்.**

**உ-ம்:** உண்ணன்மின்
உண்ணாதீர் நீர்.

**93. வியங்கோள் வினைமுற்றுக்கள்.**

**(i)** இடைநிலை இன்றி க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளை இறுதியில் உள்ளனவாய் வாழ்த்துதற் பொருளிலும், விதித்தற் பொருளிலும், வேண்டிக் கோடற் பொருளிலும், வைதற் பொருளிலும் இருதிணை ஐம்பான் மூவிடங்களிலும் வரும் ஏவல்வினைச் சொற்கள் **உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்றுக்களாம்.**





**வாழ்த்தல் விதித்தல் வேண்டிக்கோடல் வைதல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க. | வாழ்க | செய்க | அருளுக | கெடுக | யான், யாம் |
| இய. | வாழிய | | | | நீ,நீர், அவன் |
| இயர். | வாழியர் | | | | அவள், அவர் |
| அ. | வளர | | | | அது, அவை. |
| அல். | ஓம்பல் | | | | |

தன்மையில் விதித்தற்பொருள் வாராமை அறிக.

**ந.க.** வாழிய என்பது பெரும்பாலும் ஈற்றுயிர் மெய் கெட்டு வாழி என வரும்.

**உ-ம்:** ஆ வாழி, அந்தணர் வாழி.

இற்றைக்கால வழக்கிலே வியங்கோள், வினைமுற்றுக்கள் செல்லக் கடவன், செல்லக்கடவள், செல்லக்கடவர், செல்வானாக, செல்வாளாக, செல்வாராக எனச் சிறப்புப் பாலிடங்களுக்க உரியவாய்வருத லுங் காண்க.

**(ii)** அல், ஆல் என்னும் விகுதிகளை உள்ள ஏவல்வினைச் சொற்களும், அல் என்னும் இடைநிலை பெற்று க என்னும் விகுதியாலே முடியும் வினைச்சொற்களும் **எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுக்களாம்.**

அல் மகனெனல் ... மகன் என்று சொல்லற்க என்னும் பொருளது.
ஆல் மரீஇயதொரால்.... மரீஇயது ஒருவற்க என்னும் பொருளது.
க சொல்லற்க

சொல்லற்க, செய்யற்க என்பவற்றைச் சொல்லாதொழிக. செய்யாதொழிக என்றுங் கூறலாம்.

**94.** வேண்டும், தகும், படும் என்னும் இம்மூன்று சொற்களும் வியங்கோட் பொருளில் இருதிணை ஐம்பான் மூவிடங்களிலும் வரும். வேண்டாம் என்பது வேண்டும் என்பதன் எதிர்மறை. அது கடைக்குறைந்து வேண்டா என்றும் நிற்கும்.

இவரால் இக்காரியஞ் செய்யத்தகும்.
வஞ்சரை அஞ்சப்படும்.
அரசன் வையத்தைக் காத்தல் வேண்டும்.
ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
இறைவன் உளனெனில், அரசன் உலகைக் காத்தல் வேண்டா.



RangaRakes
tamilnavarasam.com

## பயிற்சி 16.

1. மேல்வரும் ஏவல்வினை முற்றுக்களின் எதிர்மறைகளை எழுதுக:– ஈவாய், தின், ஊட்டுவீர், எழுப்பு, கொள்ளுதி, தேய்மின், பாய்ச்சும், அகற்று.

2. பின்வரும் ஏவல் வாக்கியங்களின் மறைகளை எழுதுக:–

(1) நீ இங்கு வருவாய். (2) அதனைச் செய்.
(3) நீர் நடமின். (4) நீர் ஒருப்படுவீர்.
(5) நீர் அங்குச் செல்லும். (6) அச்சோற்றை உண்ணுதி.

3. நடவாய், காணீர் என்னுஞ் சொற்கள் உடன் பாட்டுப்பொருளிலும் எதிர்மறைப்பொருளிலும் வரும் வாக்கியம் நான்கு எழுதுக. நும் வாக்கியங்களில் எவை ஏவல் வாக்கியங்களாகும் என்றுங் கூறுக.

4. விடல், தொடரேல், கூறுதி, வறால் என்னுஞ் சொற்கள் கொண்ட ஏவல்வாக்கியம் நான்கு எழுதுக.

5. பின்வரும் வியங்கோள் வாக்கியங்களின் மறைகளை எழுதுக:–

(1) நின்செல்வம் பெருகுக.
(2) நீ அதனைச் செய்க.
(3) அவன் இங்கு வரக்கடவன்.
(4) நீ அவனைப் பேண வேண்டும்.
(5) எங்கோ வாழ்க.
(6) ஓதாமல் ஒவ்வொரு நாளும் இருக்க வேண்டும்.
(7) அவர் அங்குப் போவாராக.
(8) கெடுக அவன் இல்லம்.
(9) நீ பொன் பெரியையாகுக.
(10) வரம்பு உயர.

6. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வியங்கோள் வினைமுற்றுக்கள் ஒவ்வொன்றும் எப்பொருளில் வந்ததெனக் கூறுக:–

(1) நின் புகழ் சிறக்க.
(2) கெடுக நின் வாழ்நாள்.
(3) இப்பாட்டிற்குப் பொருள் கூறுவாயாக.
(4) நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்.
(5) நின்கழல் வெல்க.
(6) அரசன் வாழி
(7) அவன் செல்வம் அழிக.
(8) நீ செல்க
(9) பாக! நின்தேரைக்கடாவுக.
(10) வழாஅல் ஓம்பல்





(11) யானும் நின்னொடு உடனுறைக.
(12) அரசன் வேண்டுவனவற்றை அவன் விரும்புமாறு சொலல்.
(13) யான் நின்னொடு பொருவேனாக.
(14) அவன் அதற்கு விடை கூறாதொழிக.
(15) வாழிய நெஞ்சே.
(16) அவன் அங்குச் செல்லக்கடவன்.
(17) நம்பி கேட்டு இதுமறக்க.
(18) யான் உம்மைப் பேணுவேனாக.

95. **தெரிநிலை வினையினங்கள்** விதிவினை மறைவினைகள் என்றும், தன்வினை பிறவினைகள் என்றும், செயப்படுபொருள் குன்றியவினை செயப் படுபொருள் குன்றாத வினைகள் என்றும், செய்வினை செயப்பாட்டு வினைகள் என்றும் வேறு வேறு வகைகளிற் பிரிக்கப்படும். இவற்றுள் விதி வினை மறைவினைகளானவை முன்னர்க் கூறப்பட்டன. இனி, ஏனைப் பாகுபாடுகள் கூறப்படும்.

### தன்வினையும் பிறவினையும்

96. (1) தன்வினையாவது இயற்றுதற் கருத்தாவினது தொழிலை உணர்த்தும் முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம்.

வந்தான், உண்டான், போனான், திருந்தினான், ஆடினான், அழிந்தான்.

(2) பிறவினையாவது ஏவுதற் கருத்தாவினது தொழிலை உணர்த்தும் முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம்.

வருவித்தான், உண்பித்தான், போக்கினான்
திருத்தினான், ஆட்டினான், அழித்தான்.

97. தன்வினைப் பகுதிகளிலிருந்து பிறவினைப் பகுதிகள் பல்வேறு வழிகளாற் பெறப்படும். சில தன்வினைப்பகுதிகள் வழிகளாற் பெறப்படும். பெற்றுப் பிறவினைப் பகுதிகளாய் வரும்.

| வினையடி | தன்வினைப் பகுதி | பிறவினைப் பகுதி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|---|
| வா | வா | வருவி | வந்தான் | வருவித்தான் |
| உண் | உண் | உண்பி | உண்டான் | உண்பித்தான் |
| கல் | கல் | கற்பி | கற்றான் | கற்பித்தான் |
| வில் | வில் | விற்பி | விற்றான் | விற்பித்தான் |
| கேள் | கேள் | கேட்பி | கேட்டான் | கேட்பித்தான் |
| தேடு | தேடு | தேடுவி | தேடினான் | தேடுவித்தான் |
| சார் | சார் | சார்வி | சார்ந்தான் | சார்வித்தான் |



RangaRakes tamilnavarasam.com

**(2)** சில தன்வினைப் பகுதிகள் வி என்னும் விகுதி பெற்று ஒரு பொருளும் பி என்னும் விகுதிபெற்று வேறொரு பொருளுந் தந்துநின்று பிறவினைப் பகுதிகளாய் வரும்.

| **வினையடி** | **தன்வினைப் பகுதி** | **பிறவினைப் பகுதி** | **தன்வினை** | **பிறவினை** |
|---|---|---|---|---|
| அடு | அடு | அடுவி | அட்டான் | அடுவித்தான் |
| | | அடுப்பி | அடுத்தான் | அடுப்பித்தான் |
| அமை | அமை | அமைவி | அமைந்தான் | அமைவித்தான் |
| | | அமைப்பி | அமைத்தான் | அமைப்பித்தான் |
| அரி | அரி | அரிவி | அரிந்தான் | அரிவித்தான் |
| | | அரிப்பி | அரித்தான் | அரிப்பித்தான் |
| இசை | இசை | இசைவி | இசைந்தான் | இசைவித்தான் |
| | | இசைப்பி | இசைத்தான் | இசைப்பித்தான் |
| களை | களை | களைவி | களைந்தான் | களைவித்தான் |
| | | களைப்பி | களைத்தான் | களைப்பித்தான் |
| துணி | துணி | துணிவி | துணிந்தான் | துணிவித்தான் |
| | | துணிப்பி | துணித்தான் | துணிப்பித்தான் |
| தொடு | தொடு | தொடுவி | தொட்டான் | தொடுவித்தான் |
| | | தொடுப்பி | தொடுத்தான் | தொடுப்பித்தான் |
| படி | படி | படிவி | படிந்தான் | படிவித்தான் |
| | | படிப்பி | படித்தான் | படிப்பித்தான் |
| பணி | பணி | பணிவி | பணிந்தான் | பணிவித்தான் |
| | | பணிப்பி | பணித்தான் | பணிப்பித்தான் |
| பரி | பரி | பரிவி | பரிந்தான் | பரிவித்தான் |
| | | பரிப்பி | பரித்தான் | பரிப்பித்தான் |
| மடி | மடி | மடிவி | மடிந்தான் | மடிவித்தான் |
| | | மடிப்பி | மடித்தான் | மடிப்பித்தான் |
| விளி | விளி | விளிவி | விளிந்தான் | விளிவித்தான் |
| | | விளிப்பி | விளித்தான் | விளிப்பித்தான் |
| வை | வை | வைவி | வைதான் | வைவித்தான் |
| | | வைப்பி | வைத்தான் | வைப்பித்தான் |





**(3) சில தன்வினைப் பகுதிகள் கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளுள் ஒன்று பெற்றுப் பிறவினைப் பகுதிகளாய் வரும்.**

| **விகுதி** | **வினையடி** | **தன்வினைப் பகுதி** | **பிறவினைப் பகுதி** | **தன்வினை** | **பிறவினை** |
|---|---|---|---|---|---|
| கு | போ | போ | போக்கு | போனான் | போக்கினான் |
| சு | காய் | காய் | காய்ச்சு | காய்ந்தான் | காய்ச்சினான் |
| | பாய் | பாய் | பாய்ச்சு | பாய்ந்தான் | பாய்ச்சினான் |
| டு | உருள் | உருள் | உருட்டு | உருண்டான் | உருட்டினான் |
| | தெருள் | தெருள் | தெருட்டு | தெருண்டான் | தெருட்டினான் |
| | வெருள் | வெருள் | வெருட்டு | வெருண்டான் | வெருட்டினான் |
| து | கட | கட | கடத்து | கடந்தான் | கடத்தினான் |
| | தாழ் | தாழ் | தாழ்த்து | தாழ்ந்தான் | தாழ்த்தினான் |
| | நட | நட | நடத்து | நடந்தான் | நடத்தினான் |
| | புகு | புகு | புகுத்து | புகுந்தான் | புகுத்தினான் |
| | வீழ் | வீழ் | வீழ்த்து | வீழ்ந்தான் | வீழ்த்தினான் |
| | எழு | எழு | எழுப்பு | எழுந்தான் | எழுப்பினான் |
| | அகல் | அகல் | அகற்று | அகன்றான் | அகற்றினான் |
| | பயில் | பயில் | பயிற்று | பயின்றான் | பயிற்றினான் |
| | துயில் | துயில் | துயிற்று | துயின்றான் | துயிற்றினான் |

**(4)** சில தன்வினைப் பகுதிகள் இடைமெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்து பிறவினைப் பகுதிகளாக வரும்.

| **வினையடி** | **தன்வினைப் பகுதி** | **பிறவினைப் பகுதி** | **தன்வினை** | **பிறவினை** |
|---|---|---|---|---|
| அடங்கு | அடங்கு | அடக்கு | அடங்கினான் | அடக்கினான் |
| இணங்கு | இணங்கு | இணக்கு | இணங்கினான் | இணக்கினான் |
| இயங்கு | இயங்கு | இயக்கு | இயங்கினான் | இயக்கினான் |
| ஒதுங்கு | ஒதுங்கு | ஒதுக்கு | ஒதுங்கினான் | ஒதுக்கினான் |
| திருந்து | திருந்து | திருத்து | திருந்தினான் | திருத்தினான் |
| துலங்கு | துலங்கு | துலக்கு | துலங்கினான் | துலக்கினான் |
| தூங்கு | தூங்கு | தூக்கு | தூங்கினான் | தூக்கினான் |
| தோன்று | தோன்று | தோற்று | தோன்றினான் | தோற்றினான் |
| நிரம்பு | நிரம்பு | நிரப்பு | நிரம்பினான் | நிரப்பினான் |
| பொருந்து | பொருந்து | பொருத்து | பொருந்தினான் | பொருத்தினான் |
| மடங்கு | மடங்கு | மடக்கு | மடங்கினான் | மடக்கினான் |
| வருந்து | வருந்து | வருத்து | வருந்தினான் | வருத்தினான் |
| விளங்கு | விளங்கு | விளக்கு | விளங்கினான் | விளக்கினான் |



RangaRakes tamilnavarasam.com

**(5)** சில தன்வினைப் பகுதிகள் தம்மொற்று இரட்டிப் பிறவினைப் பகுதிகளாய் வரும்.

| வினையடி | தன் வினைப் பகுதி | பிறவினைப் பகுதி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|---|
| ஆடு | ஆடு | ஆட்டு | ஆடினான் | ஆட்டினான் |
| ஓடு | ஓடு | ஓட்டு | ஓடினான் | ஓட்டினான் |
| வாடு | வாடு | வாட்டு | வாடினான் | வாட்டினான் |
| ஆறு | ஆறு | ஆற்று | ஆறினான் | ஆற்றினான் |
| ஏறு | ஏறு | ஏற்று | ஏறினான் | ஏற்றினான் |
| தேறு | தேறு | தேற்று | தேறினான் | தேற்றினான் |
| உருகு | உருகு | உருக்கு | உருகினான் | உருக்கினான் |
| பருகு | பருகு | பருக்கு | பருகினான் | பருக்கினான் |

**(6)** சில தன்வினைப் பகுதிகள் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாய் நிற்கும்.

| வினையடி | தன்வினைப் பகுதி | பிறவினைப் பகுதி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|---|
| அலை | அலை | அலை | அலைந்தான் | அலைத்தான் |
| அழி | அழி | அழி | அழிந்தான் | அழித்தான் |
| உடை | உடை | உடை | உடைந்தான் | உடைத்தான் |
| கழி | கழி | கழி | கழிந்தான் | கழித்தான் |
| கெடு | கெடு | கெடு | கெட்டான் | கெடுத்தான் |
| சேர் | சேர் | சேர் | சேர்ந்தான் | சேர்த்தான் |
| தேய் | தேய் | தேய் | தேய்ந்தான் | தேய்த்தான் |
| பதி | பதி | பதி | பதிந்தான் | பதித்தான் |
| பிரி | பிரி | பிரி | பிரிந்தான் | பிரித்தான் |
| மறை | மறை | மறை | மறைந்தான் | மறைத்தான் |
| முடி | முடி | முடி | முடிந்தான் | முடித்தான் |
| வெளு | வெளு | வெளு | வெளுத்தான் | வெளுத்தான் |

**வினா 1.** பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுமுள்ள தன்வினைக் கருத்தாவின் செய்தியைக் கூறும் வாக்கியத்தை எழுதுக:–

**(1)** ஆசிரியன் மாணாக்கரை அறநூல் கற்பித்தான்.
**(2)** தந்தை தன் மக்களை ஆசிரியருக்குப் பணிவித்தான்.
**(3)** நான் அவ்வுருளையை உருட்டினேன்.
**(4)** நீ எங்களை இணக்கினாய்.





**விடை (1)** மாணாக்கர் அறநூல் கற்றனர்.
**(2)** மக்கள் ஆசிரியருக்குப் பணிந்தனர்.
**(3)** அவ்வுருளை உருண்டது.
**(4)** நாங்கள் இணங்கினோம்.

## பயிற்சி 17

**1.** மேல்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுமுள்ள தன்வினைக் கருத்தாவின் செய்தியைக்கூறும் வாக்கியத்தைத் தருக:–

**(1)** பெற்றார் தம் மக்களைத் திருத்துவார்.
**(2)** தாய் தன் மகவைத் துயிற்றுகின்றாள்.
**(3)** கொல்லன் இரும்பைக் காய்ச்சினான்.
**(4)** அவன் பிடித்த பிடியினின்றும் அவனை விடுவித்தேன்.
**(5)** அவ்வண்டியோட்டி தன் எருதுகளைக் கடுநடை நடக்கப் பயிற்றினான்
**(6)** நீ அம் மரத்தை வீழ்த்துகின்றாய்.
**(7)** கற்பலகையில் எழுதிய எழுத்துக்கள் எல்லாவற்றையும் அவன் அழிக்கின்றான்.
**(8)** ஒரு பெண் கூலிக்காரி ஒருத்தியைக் கொண்டு மா அரிப்பிக்கின்றாள்.
**(9)** யான் அப்பொறியை இயக்கினேன்.
**(10)** அவ்வாசிரியன் மாணாக்கரைக்கொண்டு அத்தாள்களை மடிப்பிக்கின்றான்.

**2.** அடைப்புக்குட் கிடக்கும் வினையடியிற் பிறந்த சொற்கொண்டு வாக்கியம் முடிக்க:–

**(1)** தனது தம்பி தனக்குத் தீங்கிழைத்தான் என அறிந்ததும் முருகன் அவனை .... (வை)
**(2)** சென்ற ஆண்டு தொடக்கம் யான் எனது மக்களை அக்கழகத்திற் .... (படி)
**(3)** அந்நங்கை தன் பணிப்பெண்ணை நஞ்சூட்டி..... (மடி)
**(4)** தரையில் விழுந்த தாளை நீ ஏவலாளரைக் கொண்டு ..... (எடு)
**(5)** ஒருவன் செய்யாத குற்றங்களுக்கு அவனை .... நல்லறமாகாது. (பரி)



RangaRakes
tamilnavarasam.com

(6) செல்வம் பெரியாரை .... (கெடு)
(7) தந்நண்பரைவிட்டு .... துன்பந்தரும். (பிரி)
(8) நேற்றுத் தன் மகனை அவ்வரசன் சிங்காசனத்தில்.... (இரு)
(9) ஞாயிறு பட்டவுடன் இருள் .... (செறி)
(10) மூர்க்கரும் முதலையுங்கொண்டது.... (விடு)
(11) அரசன் குணத்திற்கு ஏற்ப மக்கள்.... (வாய்)
(12) நேற்று என் வேலைக்காரி குப்பைகூளம்
எல்லாவற்றையும் ஒருபுறத்தே.... (ஒதுங்கு)
(13) நீ இப்பொழுது வீமனெனும் படி .... (தோன்று)
(14) எளிய பகைவரோடு இரக்கமின்றி .... ஆண்மையாகாது. (அடு)
(15) ஒருவன் வறுமையுற்ற காலத்தில் அவனைக்
கடன் கொடுக்கும்படி .... கூடாது. (நெருங்கு)
(16) யான் அம்மலையிற் புகையைக் கண்டதும்
அங்கு தீ உண்டெனத் ...... (துணி)
(17) அவன் கடிநாய்க்குப் பயந்து ஓடி .... (எய்)
(18) அவன் அப்பொழுது அம் மரக்கொம்பை வலப் பக்கம் .... (சாய்)
(19) தன் மகன் இறந்துவிட்டானென என்
வேலைக்காரன் எனக்கு .... (அறி)
(20) என்ன செய்தாலுங் கீழ்மக்கள் .... (திருந்து)
(21) கோடரி வெட்டினால் அக்குற்றி இருதுண்டுகளாக .... (பிள)
(22) காவலனைக் கண்டதுங் கள்ளன் முகம் .... (வெளு)
(23) விறகு வெட்டி அம் மரத்தை நேற்று
மூன்று துண்டங்களாக .... (பிள)
(24) வண்ணான் எனது ஆடையை நாளைக்கு .... (வெளு)

## செயப்படுபொருள் குன்றிய வினைகளுஞ் செயப்படுபொருள் குன்றாத வினைகளும்

**98.** (1) **செயப்படுபொருள் குன்றிய வினைகளாவன** செயப்படு பொருள்களை ஏற்றுநிற்கும் இயல்பின்றிய வினைகள்.

இரு, வா, போ, நட, சா, வே, வாழ், செல், நில், முழுகு.

இவ்வினைகள் இதனை இருந்தான், இதனை வந்தான் எனச் செயப்படு பொருள்களை ஏற்று நிற்கும் இயல்பின்றியனவாதல் காண்க.

(2) **செயப்படுபொருள் குன்றாத வினைகளாவன** செயப்படுபொருள் களை ஏற்று நிற்கும் இயல்புள்ளனவாதல் காண்க.





**ந.க.** அமை, இசை, கெடு, தேய், படி, பரி, பிரி, மடி, முடி, விழு முதலியன இரண்டிற்கும் பொது வினைகளாதல் காண்க.

**99.** செயப்படுபொருள் குன்றிய வினையடிகளிலிருந்துஞ் செயப்படு பொருள் குன்றாத வினையடிகளிலிருந்துந் தோன்றிய பிறவினைகள் செயப் படுபொருள்களை ஏற்கும்.

கந்தன் அவ்விழாவை நடத்தினான்.
அவன் எனக்கு அப்பொருளைத் தருவிப்பான்.

**100.** செயப்படுபொருள் குன்றிய வினையடியாகத் தோன்றிய பிறவினை கள் இயற்றுதற் கருத்தாக்களைத் தமக்குச் செயப்படு பொருளாகக் கொள்ளும்.

கந்தன் முருகனை இருத்தினான்.
யான் ஒரு கூலிக்காரனை வருவித்தேன்.

**101.** செயப்படுபொருள் குன்றாத வினையடியாகத் தோன்றிய பிறவினை கள் இயற்றுதற் கருத்தாக்களைத் தமக்குச் செயப்படு பொருள் களாகவாதல் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாக்களாகவாதல் கொள்ளும்.

கந்தன் முருகனைச் சோறுண்பித்தான்
எனது தம்பி தச்சனால் வீடுகட்டுவித்தான்.

**102.** செயப்படுபொருள் குன்றிய வினைகளுட் சில சில அமயங்களிலே தமக்கு இனமாக தொழிற் பெயர்களைச் செயப்படு பொருள்களாகக் கொள்ளும்.

யான் கடுநடை நடந்தேன்.
நீ நல்வாழ்வு வாழ்கின்றாய்

### பயிற்சி 18

**1.** அமை, தேய், படி, முடி, கெடு என்னும் வினைச் சொற்கள் ஒவ் வொன்றுஞ் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும், செயப்படு பொருள் குன்றாத வினையாகவும் வரும் வாக்கியங்கள் எழுதுக.

**2.** பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களைத் தேர்ந் தெடுத்து அவை செயப்படுபொருள் குன்றியனவா, அன்றிச் செயப்படு பொருள் குன்றாதனவா என்று கூறுக; செயப்படுபொருள் குன்றாத வகை களிற் செயப்படுபொருள்கள் இன்ன என்றுங் கூறுக:–



RangaRakes
tamilnavarasam.com

(1) அரசன் குடிகளைக் காப்பான்.
(2) நான் வண்ணானால் ஆடை ஒலிப்பித்தேன்.
(3) அச்செய்தியைக் கேட்டதும் அப்பெண் முறுவலித்துச் சிரித்தாள்.
(4) இலக்குவன் சீதையைக் காடு காண்பித்தான்.
(5) நீ என்னோடு வருவையோ?
(6) புண்ணியஞ் செய்பவர் நற்பிறப்புப் பிறப்பர்.
(7) எனது தங்கை சமையற்காரனாற் சோறு அடுவித்தாள்.
(8) அவள் அவ்வூரிலிருந்தும் நீங்கினாள்.
(9) புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.
(10) கோழிகள் காலையிற் கூவும்.
(11) பெரியோர் தம்மை நம்பினவரை ஆதரிப்பர்.
(12) ஒருவன் செய்த நன்றியை மறக்கவேண்டாம்.
(13) கந்தன் அங்குச் செல்வதற்கு இசைந்தான்.
(14) உடையது விளம்பேல்.
(15) நீ கயிறு திரிக்கின்றனை.
(16) பாம்பொடு பழகேல்.
(17) நீ ஒரு பாட்டுப் பாடினாய்.
(18) கோபத்தை வருவித்தல் அல்லலுக்குள் ஆளாக்கும்.
(19) உடமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
(20) அரசன் குற்றஞ் செய்தோரை நாடு கடத்தினான்.
(21) நீ நாயோட்டம் ஓடுகிறாய்.
(22) அவர் தஞ்சுற்றத்தாலே துன்பம் அடைந்தார்.
(23) மேழிச் செல்வங் கோழை படாது.
(24) தோட்டி அரிச்சந்திரனாற் சுடுகாட்டைக் காப்பித்தான்.

## செய்வினையுஞ் செயப்பாட்டு வினையும்

**103.** (1) **செய்வினையாவது** எழுவாயாற் குறிக்கப்பட்ட ஆளாதல் பொருளாதல் யாதோ ஒன்றைச் செய்யுங் கர்த்தாவாகக் காட்டுவது. அது படுவிகுதி புணராத முதனிலை உடையதாய் வினைமுதலை எழுவாயாகக் கொண்ட வினையாம்.

**உ-ம்:** நடந்தான், நடத்தினான்.

(2) **செயப்பாட்டுவினையாவது** எழுவாயாற் குறிக்கப்பட்ட ஆளுக்காதல் பொருளுக்காதல் யாதோ ஒன்று செய்யப்படுவதாகக் காட்டுவது.





அது படுவிகுதி புணர்ந்த முதனிலை உடையதாய் வினைமுதலை மூன்றாம் வேற்றுமையிலுஞ் செயப்படுபொருளை எழுவாய் வேற்றுமையிலுங் கொண்ட வினையாம்.

**உ-ம்:** நடத்தப்பட்டான், அடிக்கப்பட்டான்.

**104.** செய்வினை வாக்கியத்திலுள்ள செயப்படுபொருள் செயப்பாட்டு வாக்கியத்தின் எழுவாயாய் வருதலாற் செயற்படுபொருள் குன்றாத வினைகளுக்கே ஒத்த செயப்பாட்டு வினைகள் உண்டு எனலாம். செயப்படுபொருள் குன்றாத வினைப்பகுதிகள் படு விகுதியொடு இடையே அகரச் சாரியையாதல் குச் சாரியையொடு அகரச் சாரியையாதல் பெற்றுச் செயப்பாட்டுவினைப் பகுதிகளாக வரும்.

| **செய்வினைப் பகுதி** | **செயப்பாட்டுவினைப் பகுதி** | |
|---|---|---|
| பாய்ச்சு | பாய்ச்சப்படு | அகரச்சாரியை |
| நடப்பி | நடப்பிக்கப்படு | குச்சாரியையொடு அகரச்சாரியை. |

**105.** எழுவாய்க் கருத்தாவிற்குச் சிறப்புக்கொடுக்கச் செய்வினை வாக்கியங்களுஞ், செயப்படுபொருளுக்குச் சிறப்புக் கொடுக்கச் செயப்பாட்டு வினை வாக்கியங்களும் வழங்கப்படும். எனின், கருத்தாச் சிறப்பின்றியவனாயினும் அறியப்படாதவனாயினும் இருப்பின் செயப்பாட்டுவினை வாக்கியங்கள் வழங்கப்படும்.

இப்பெண் குடமொன்றை உடைத்தாள். இப்பெண் என்னும் எழுவாய்க்குச் சிறப்பு.
இவ்வில்லம் பத்தாண்டுக்குமுன் கட்டப்பட்டது. இவ்வில்லம் என்னுஞ் செயப்படு பொருளுக்குச் சிறப்பு.

**106.** செயப்பாட்டுவினை சிலவிடத்துப் படு விகுதி தொக்கும் நிற்கும்.

இல்வாழ்வான் என்பான். இங்கு 'எனப்படுவான்' என்னுஞ் சொல் படு விகுதி தொக்கு என்பானென நின்றமை காண்க.

புலி கொன்ற யானை ஓடிற்று. இது புலியைக் கொன்ற யானை ஓடிற்று எனப் பொருள்படுதலாற் கொன்ற எனபது செய்வினை.

புலி கொன்ற யானை கிடந்தது. இது புலியாற் கொல்லப்பட்ட யானை கிடந்தது எனப் பொருள்படுதலாற் கொன்ற என்பது படுவிகுதி தொக்குநின்ற செயப்பாட்டுவினை.



RangaRakes tamilnavarasam.com

**பயிற்சி**

பின்வருவனவற்றிலுள்ள வினைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவை **செய்வினைகளா,** அன்றிச் செயப்பாட்டு வினைகளா எனக் கூறுக:–

| | | | |
|---|---|---|---|
| **(1)** | உண்ட முருகன். | **(2)** | உண்ட சோறு. |
| **(3)** | செய்பயிர். | **(4)** | செய்வினை. |
| **(5)** | செய்குன்று. | **(6)** | தேடிய பொருள். |
| **(7)** | ஆடை ஒலித்த கூலி. | **(8)** | ஆறு சென்ற வியர். |
| **(9)** | அறம் பொருதபொன். | **(10)** | எழுதிவந்த ஓலை. |

**(11)** அரன் அருச்சிக்கப்பட்டான்.
**(12)** ஆடை தரப்பட்டது.
**(13)** ஒழுக்கஞ் செய்யப்படும்.
**(14)** இன்னாது இரக்கப்படுதல்.
**(15)** இகழப் படுவாரைக் காணினும் இழுக்கே.
**(16)** ஆண்டவன் என்றல் அரற்கே தகுமே.
**(17)** மீன் விழுங்கிய மகன் இங்கு வந்தான்.
**(18)** மீன் விழுங்கிய மகன் உயிர்நீப்பன்.
**(19)** வேசி விரும்பும் மகன் பணம் பறிகொடுப்பன்.
**(20)** வேசி விரும்பும் மகன் செல்வன்.
**(21)** ஒன்னார் வணங்கிய மகன் கோழை.
**(22)** ஒன்னார் வணங்கிய மகன் சீரியோன்.

## பெயரெச்சங்கள்

**107.** **பெயரெச்சந்** தெரிநிலை வினைப் பெயரெச்சம் குறிப்பு வினைப் பெயரெச்சம் என இருவகைப் பட்டு இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

**108.** **தெரிநிலை வினைப்பெயரெச்சம்** இறப்பு, நிகழ்வு, எதிர் என்னும் இவைபற்றி மூன்று வகைப்பட்டு வினைமுதல், கருவி, நிலம், தொழில், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருளும் எஞ்சநிற்கும்.

| **இ.கா. பெ.** | **நி. கா. பெ.** | **எ.கா. பெ.** | |
|---|---|---|---|
| ஓதிய | ஓதாநின்ற | ஓதும் பார்ப்பான் | வினைமுதல் |
| வளைந்த | வளைகின்ற | வளையுந் தண்டு | கருவி |
| புக்க | புகுகின்ற | புகும் இல்லம் | நிலம் |





| | | | |
|---|---|---|---|
| உண்ட | உண்ணுகின்ற | உண்ணும் ஊண் | தொழில் |
| துயின்ற | துயிலுகின்ற | துயிலும் வேளை | காலம் |
| கற்ற | கற்கின்ற | கற்கும் நூல் | செயப்படுபொருள். |

**109.** செய்த என்னும் வாய்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சங்கள் வளைந்த, உண்ட, துயின்ற என்பன போல த்,ட், ற் என்னும் இறந்தகால இடைநிலைகளோடும், புக்க, பட்ட, பெற்ற என்பன போல விகாரப்பட்டு இறந்தகாலங் காட்டும் பகுதிகளோடும் அகர விகுதிபெற்று வரும்.

**110.** செய்கின்ற என்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சங்கள் ஆடாநின்ற, தேடுகின்ற, நடக்கிற என்பன போல ஆநின்று, கின்று, கிறு என்னும் நிகழ்கால இடைநிலைகளோடு அகர விகுதி பெற்றுவரும்.

**111.** செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்கால பெயரெச்சங்கள் ஓதும், வளையும் என்பனபோல இடைநிலையின்றித் தாமே காலங்காட்டும் உம் விகுதி பெற்றுவரும்.

**112.** எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சங்கள் ஓதாத, வளையாத என்பன போல எதிர்மறை ஆகார இடைநிலையுந் தகர எழுத்துப்பேற்றோடு கூடிய அகர விகுதியும் பெற்று மூன்று காலங்களையும் குறித்து வரும்.

**ந.க.** உண்ணாதகுதிரை, ஓடாதகுதிரை என்பன பெயரெச்ச ஈற்றுயிர் மெய்கெட்டு உண்ணாக்குதிரை, ஓடாக்குதிரை எனவும் வரலாம்.

எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சங்கள் செய்கலாத, செய்கிலாத என்பனபோல அல், இல் என்னும் எதிர்மறை இடைநிலை களையும் ஆகாரச் சாரியையும் பெற்றும் வரும்.

**113.** **குறிப்புவினைப் பெயரெச்சங்கள்** அரிய, கரிய, பெரிய, உள்ள என்பன போல அகரவிகுதி பெற்றுவரும்.

**114.** **எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சங்கள்** அல்லாத, இல்லாத என்பன போன்று அல், இல் என்னும் பண்படியாகத் தோன்றி ஆகாரச் சாரியையுந் தகர எழுத்துப் பேற்றோடு கூடிய அகரவிகுதியும் பெற்று வரும்.



RangaRakes
tamilnavarasam.com

**ந.க.** அல்லாத பொருள், இல்லாதபொருள் என்பன பெய ரெச்சத்து ஈற்றுயிர்மெய்கெட்டு அல்லாப்பொருள், இல்லாப்பொருள் எனவும் வரலாம்.

## வினையெச்சங்கள்

**115.** வினையெச்சந் தெரிநிலைவினையெச்சங் குறிப்பு வினையெச்சம் என இருவகைப்பட்டு இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

**தெரிநிலைவினையெச்சங்கள்** செய்து, செய, செயின் முதலிய வாய்பாட்டு வினையெச்சங்களாக வகுக்கப்படும்.

**116.** **செய்தெனெச்சம்** இறந்தகால இடைநிலையோடு உ, இ, ய் என்னும் விகுதிகளைப் பெற்றும், இடைநிலையும் விகுதியும் பெறாது பகுதியே விகாரம் அடைந்துந் தன் கருத்தாவின் வினையையாதல் பிறகருத்தாவின் வினையை யாதல் கொண்டு முடிவதாம்.

**உ** நடந்து வந்தான், ஞாயிறுபட்டு வந்தான்.

**இ** பாடி வருகின்றான்.

**ய்** போய் வருவான்.

**விகாரப்பட்டபகுதி** புக்குவந்தான், விட்டுவருகின்றான், பெற்றுவருவான்.

இங்கு நடந்து, பாடி, போய், புக்கு முதலிய வினைகளின் கருத்தாக்களே முறையே வந்தான், வருகின்றான், வருவான், வந்தான் முதலிய வினைகளின் கருத்தாக்களாகலான், பெயரெச்சங்கள் ஒவ்வொன்றுந் தன் கருத்தாவின் வினைகொண்டு முடிந்ததென்க. கந்தன் ஞாயிறு பட்டு வந்தான் என்பதில், பட்டு என்னும் வினையெச்சந் தன் கருத்தாவாகிய கந்தனின் ஞாயிற்றின் வினையைக் கொள்ளாது பிறகருத்தாவாகிய கந்தனின் வினை கொண்டு முடிந்தமையால், இங்கு பெயரெச்சம் பிறகருத்தாவின் வினை கொண்டு முடிந்ததென்க.

இச்செய்தெனெச்சஞ் சிலவிடத்துக் காரணப் பொருளிலும் வரும்.

கற்று வல்லன், தலைவன் பிரிந்து வருந்தினாள்.

இவை கற்ற காரணத்தால் வல்லன், தலைவன் பிரிந்த காரணத்தால் வருந்தினாள் எனப் பொருள்படுதல் காண்க. கற்று என்னும் வினையெச்சந் தன்கருத்தாவின் வினையாலும் பிரிந்து என்னும் வினையெச்சம் பிறகருத்தாவின் வினையாலும் முடிந்தமையுங் காண்க.





இச் செய்தெனெச்சஞ் சினைவினையாயின் பெரும்பான்மையாய்க் காரணப் பொருளிலே முதல்வினைகொண்டு முடியும்.

வயிறு நொந்து கிடந்தான், காலொடிந்து வீழ்ந்தான்.

இவை வயிறு நொந்த காரணத்தாலே கிடந்தான், கால் ஒடிந்த காரணத்தாலே வீழ்ந்தான் எனப் பொருள்படுதல் காண்க. நொந்து என்னும் வயிறாகிய சினையின் வினை கிடந்தான் என்னும் முதலின் வினையாலும் ஒடிந்து என்னுங் காலாகிய சினையின் வினை வீழ்ந்தான் என்னும் முதலின் வினையாலும் முடிந்தமையுங் காண்க.

**117.** **செயவெனெச்சம்** முக்காலத்திற்கும் உரியதாய் அகர விகுதியைப் பெற்றுத் தன்கருத்தாவின் வினையையாதல் பிறகருத்தாவின் வினையையாதல் கொண்டுமுடியும்.

**(1)** இச்செயவெனெச்சம் இறந்த காலத்திலே காரணப் பொருளில் வந்து தன்கருத்தாவின் வினையையாதல் பிறகருத்தாவின் வினையையாதல் கொண்டு முடியும்.

| | |
|---|---|
| மழை பெய்யப் புகழ்பெற்றது. | தன்கருத்தாவின் வினை. |
| மழை பெய்யக் குளம் நிறைந்தது. | பிறகருத்தாவின் வினை. |

இவை முறையே மழை தான் பெய்த காரணத்தாலே புகழைப் பெற்றது, மழைபெய்த காரணத்தாலே குளம் நிறைந்தது எனப் பொருள் படுதலால் இங்குச் செயவெனெச்சங் காரணப்பொருளில் வந்தமை காண்க.

**(2)** இச் செயவெனெச்சம் எதிர்காலத்திலே காரியப் பொருளில் வந்து தன்கருத்தாவின் வினையையாதல் பிற கருத்தாவின் வினையையாதல் கொண்டு முடியும்.

| | |
|---|---|
| இராமன் உண்ண வந்தான் | தன்கருத்தாவின் வினை. |
| குளம் நிறைய மழை பெய்தது | பிறகருத்தாவின் வினை. |

இவை முறையே இராமன் உண்ணுங் காரியத்திற்காக வந்தான், குளம் நிறையுங் காரியத்திற்காக மழை பெய்தது எனப் பொருள்படுதலால் இங்குச் செயவெனெச்சங் காரியப் பொருளில் வந்தமை காண்க.

**(3)** இச் செயவெனெச்சம் நிகழ்காலத்திலே இது நிகழா நிற்ப இது நிகழ்ந்தது என்னும் பொருளிற் பிற கருத்தாவின் வினைகொண்டு முடியும்.

| | |
|---|---|
| இராமன் ஞாயிறுபட வந்தான். | பிறகருத்தாவின் வினை. |



RangaRakes tamilnavarasam.com

இது ஞாயிறு படாநிற்ப இராமன் வந்தான் என்னும் பொருள் படுதலால் இங்குச் செயவெனெச்சம் இது நிகழா நிற்ப இது நிகழ்ந்தது என்னும் பொருளில் வந்தமை காண்க.

**118.** **செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்** எதிர் காலத்திலே காரணப் பொருளில் வந்து தன் கருத்தாவின் வினையையாதல் பிறகருத் தாவின் வினையையாதல் கொண்டு முடியும். முடிக்குஞ்சொல் எதிர்காலச் சொல்லாகவே இருக்கும்.

| | |
|---|---|
| கந்தன் உண்ணின் உவப்பான். | தன்கருத்தாவின் வினை. |
| கந்தன் உண்ணின் முருகன் உவப்பான் | பிறகருத்தாவின் வினை. |

இவை முறையே கந்தன் உண்ணுங் காரணத்தால் உவப்பான், கந்தன் உண்ணுங் காரணத்தாலே முருகன் உவப்பான் எனப் பொருள் படுதலால் இவ்வெச்சங் காரணப் பொருளில் வந்தமை காண்க.

**119.** செய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம் அல் என்னுஞ் சாரியையும் கு என்னும் விகுதியையும் பெற்றுக் காரியப் பொருளில் வந்து தன்கருத்தாவின் வினையையாதல் பிறகருத்தாவின் வினையையாதல் கொண்டு முடியும்.

| | |
|---|---|
| கந்தன் உணற்கு வந்தான் | தன் கருத்தாவின் வினை |
| கந்தன் உணற்கு முருகன் உணவு கொடுத்தான். | பிறகருத்தாவின் வினை. |

இவை முறையே கந்தன் உண்ணுங் காரியத்திற்காக வந்தான், கந்தன் உண்ணுங் காரியத்திற்காக முருகன் உணவு கொடுத்தான் எனப் பொருள்படுதல் காண்க.

உண்ணும்படி, உண்ணும்வகை, உண்ணும்பொருட்டு, உண்ணும் வண்ணம் என்னும் இவைபோன்ற சொற்களுஞ் செயற்கு என்னும் பொருள் படுதல் காண்க.

**120.** பின், முன், கடை, கால், வழி, இடத்து, ஆல், உம் என்னும் விகுதியீற்று வினையெச்சங்களுள்ளே பின்னீறு இறப்பும் நிகழ்வும் பற்றியும், முன்னீறுங் கடையீறுஞ் இறப்புப் பற்றியுங் காலீறும் வழியீறும் இடத்தீறும் மூன்று காலம்பற்றியும், ஆலீறு இறப்புப்பற்றியும் உம்மீறு இறப்பும் நிகழ்வும் பற்றியும் வந்து தன்கருத்தாவின் வினையையாயினும் பிறகருத்தாவின் வினையை யாயினுங் கொண்டு முடியும்.

| | | |
|---|---|---|
| **பின் இறப்பு** | நீ போனபின் என்செய்வாய்? | தன் கருத்தாவின் வினை. |
| ” | நீ போனபின் யான் என் செய்வேன்? | பிற கருத்தாவின் வினை. |





| | | |
|---|---|---|
| **நிகழ்வு** | நீ இவ்வாறு கூறுகின்றபின் என்செய்வாய்? | தன் கருத்தாவின் வினை. |
| ” | நீ இவ்வாறு கூறுகின்றபின் யான் என்செய்வேன்? | பிற கருத்தாவின் வினை. |
| **முன் இறப்பு** | கடுத்தின்னாமுன் துவர்த்தது | தன் கருத்தாவின்வினை. |
| ” | மருந்துதின்னாமுன் நோய் தீர்ந்தது. | பிற ” ” |
| **கடை இறப்பு** | நீ உண்டக்கடை உவப்பாய். | தன் ” ” |
| ” | நீ உண்டக்கடையான் உவப்பேன். | பிற கருத்தாவின் வினை. |
| **கால் இறப்பு** | நீ உண்டக்கால் உவப்பாய். | தன் கருத்தாவின் வினை. |
| ” | உண்டக்காற் பசிதீரும் | பிற கருத்தாவின் வினை. |
| நிகழ்வு | நீ உண்ணுங்கால் யான் உவப்பேன் | பிறர் கருத்தாவின் வினை. |
| ” | நீ உண்ணுங்கால் உவப்பாய். | தன் கருத்தாவின் வினை. |
| **எதிர்வு** | நீ நாடுங்கால் அதனைப் பெறுவாய் | தன் ” ” |
| “ | நீ நாடுங்கால் அது கிடைக்கும். | பிற கருத்தாவின் வினை. |
| **வழி இறப்பு** | நல்வினை உற்றவழி உதவும். | தன் கருத்தாவின் வினை. |
| இறப்பு | நல்வினை உற்றவழித் தீவினை உறாது | பிற ” ” |
| **நிகழ்வு** | அவள் ஆடுவழி அகலாள். | தன் கருத்தாவின் வினை |
| நிகழ்வு | அவள் ஆடுவழி யான் அகலேன் | பிற ” ” |
| **எதிர்வு** | நீ உரைக்கும் வழிக்கூறாய். | தன் கருத்தாவின் வினை |
| ” | நீ உரைக்கும்வழி யான் ஒன்றுங் கூறேன். | பிற ” ” |
| **இடத்து இறப்பு** | நல்வினை உற்றவிடத்து உதவும். | தன் கருத்தாவின் வினை |
| இறப்பு | நல்வினை உற்றவிடத்துத் தீவினை உறாது. | பிற கருத்தாவின் வினை |
| **நிகழ்வு** | அவள் ஆடுமிடத்து அகலாள். | தன் கருத்தாவின் வினை |
| நிகழ்வு | அவள் ஆடுமிடத்து யான் அகலேன் | பிற கருத்தாவின் வினை |
| **எதிர்வு** | நீ உரைக்குமிடத்துக் கூறாய். | தன் கருத்தாவின் வினை |
| எதிர்வு | நீ உரைக்குமிடத்து யான் ஒன்றுங் கூறேன். | பிற ” ” |
| **ஆல் இறப்பு** | நீ உண்டால் உவப்பாய். | தன் ” ” |
| இறப்பு | நீ உண்டால் யான் உவப்பேன். | பிற ” ” |
| **உம் இறப்பு** | நீ அவனைக் கண்டதுந் தலை குனிந்தாய். | தன் ” ” |
| இறப்பு | நீ அவனைக் கண்டதும் அவன் தலை குனிந்தான். | பிற கருத்தாவின் வினை |
| **நிகழ்வு** | நீ அவனைக் காண்டலும் என்ன கூறுவாய்? | தன் கருத்தாவின் வினை |
| நிகழ்வு | நீ அவனைக் காண்டலும் அவன் தலை குனிவான். | பிற கருத்தாவின் வினை. |



RangaRakes

tamilnavarasam.com

**121.** ஏல், எனின், ஆயின், எனும் என்னும் விகுதிகளை ஏற்று நிற்கின்ற தெரிநிலை வினைமுற்றுக்கள் ஒருசொன்னீர்மைப்பட்டுக் காரணப் பொருளில் வந்து தன் கருத்தாவின் வினையையாதல் பிறகருத்தாவின் வினையையாதல் கொண்டு முடியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **ஏல்** | அவன் உண்ணுமேல் வருவான். | தன் கருத்தாவின் வினை. | | |
| | அவன் உண்ணுமேற் பசிதீரும் | பிற | " | " |
| **எனின்** | அவன் உண்பானெனின் வருவான் | தன் கருத்தாவின் வினை | | |
| | அவன் உண்பானெனிற் பசிதீரும் | பிற கருத்தாவின் வினை | | |
| **ஆயின்** | அவன் உண்டானாயின் வருவான். | தன் | " | " |
| | அவன் உண்டானாயிற் பசி தீரும். | பிற | " | " |
| **ஏனும்** | நீ எள்ளுவாயேனும் வருவாய் | தன் | " | " |
| | நீ எள்ளுவாயேனும் யான் வருவேன். | பிற | " | " |

**122.** எதிர்மறைத்தெரிநிலை வினையெச்சங்கள் ஆகார எதிர்மறை இடைநிலையோடு உ, மல், மே, மை, மைக்கு, கடை, கால், வழி, இடத்து என்னும் விகுதிகளைப் பெற்று வரும்

உண்ணாது வருவான், உண்ணாமல் வருவான், உண்ணாமே வருவான், உண்ணாமை வருவான், உண்ணாமைக்கு வருவான், உண்ணாக் கடை வருவான், உண்ணாக்கால் வருவான், உண்ணாவழி வருவான், உண்ணா விடத்து வருவான்.

**123.** எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுக்கள் ஏல், எனின், ஆயின், ஏனும் என்பனவற்றோடு இயைந்து ஒரு சொன்னீர்மைப்பட்டு எதிர்மறை வினையெச்சங்களாய்வரும்.

உண்ணானேல் வருவான், உண்ணானெனின் வருவான், உண்ணானாயின் வருவான், உண்ணானேனும் வருவான்.

**124.** செய்யாது என்பது செய்தெனெச்சத்திற்கும், செய்யாமல் என்பது இறந்தகால நிகழ்காலச் செயவெனெச்சங்களுக்கும், செய்யாமல், செய்யாமே, செய்யாமை, செய்யாமைக்கு என்பன செயற்கு என்பதற்கும் எதிர் காலச் செயவெனெச்சத்திற்கும், செய்யாக்கடை, செய்யாக்கால், செய்யாவழி, செய்யாவிடத்து என்பன செயின் என்பதற்கும், அவை முறையே செய்தக் கடை, செய்தக்கால், செய்தவழி, செய்தவிடத்து என்னும் எச்சங்களுக்கும் எதிர்மறைகளாம்.

**125.** **குறிப்பு வினையெச்சங்கள்** பண்படியாகத் தோன்றி அகரவிகுதி பெற்றுத் தெரிநிலைவினை குறிப்புவினைகள் கொண்டு முடியும்.





| | |
|---|---|
| மெல்ல நடந்தான். | சாலச் சிறிது. |
| வலியப் புகுந்தான். | மாணப் பெரிது. |

**126.** **எதிர்மறைக் குறிப்புவினையெச்சங்கள்** அல், இல் என்னும் பண்படியாகத் தோன்றி றி, து, மல், மே, மை, ஆல், கடை, கால், வழி, இடத்து என்னும் விகுதிகள் பெற்றுத் தெரிநிலைவினை குறிப்புவினைகள் கொண்டு முடியும்.

| | | |
|---|---|---|
| **றி** | அன்பின்றி அடித்தான். | அருளன்றி இல்லை. |
| **து** | அன்பில்லாது அடித்தான். | அருளல்லது இல்லை. |
| **மல்** | அன்பில்லாமல் அடித்தான். | அருளில்லாமல் இல்லை. |
| **மே** | அன்பில்லாமே அடித்தான். | அருளல்லாமே இல்லை. |
| **மை** | அன்பில்லாமை அடித்தான். | அருளில்லாமை இல்லை. |
| **ஆல்** | ..... | அவனல்லால் இல்லை. |
| **கடை** | பொருளில்லாக்கடை வருந்துவான். | கந்தனல்லாக்கடை அவன் யார்? |
| **கால்** | பொருளில்லாக்கால் வருந்துவான். | கந்தனல்லாக்கால் அவன் யார்? |
| **வழி** | பொருளில்லாவழி வருந்துவான். | கந்தனல்லாவிடத்து அவன் யார்? |
| **இடத்து** | பொருளில்லாவிடத்து வருந்துவான். | கந்தனல்லாவிடத்த அவன் யார்? |

**127.** தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றும் வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும் உண்டு.

கண்டனன் வணங்கினன் – கண்டு வணங்கினன் எனப்பொருள் படுதலால், இங்குத் தெரிநிலைவினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்தமை காண்க.

கண்டான் முருகன் ஊர்க்குச் சென்றான் – கண்ட முருகன் ஊர்க்குச் சென்றான் எனப்பொருள்படுதலால், இங்குத் தெரிநிலைவினைமுற்றுப் பெய ரெச்சப்பொருளில் வந்தமை காண்க.

அவன் வில்லினன் வந்தான் – அவன் வில்லினனாய் வந்தான் எனப் பொருள்படுதலால், இங்குக் குறிப்புவினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்ததென்க.

வில்லினன் முருகன் வந்தான் – வில்லினனாகிய முருகன் வந்தான் எனப் பொருள்படுதலால் இக்குறிப்புவினைமுற்றுப் பெயரெச்சப் பொருளில் வந்ததென்க.

**வினா 1.** பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுமுள்ள வினை யெச் சத்திற்குப்பதிலாக அதன் மறைவகைகளை இட வரும் வாக்கியங்கள் எல்லாவற்றையுந் தருக.

**(i)** கண்டு வந்தேன் **(ii)** அவன் காண வந்தேன்





RangaRakes tamilnavarasam.com

(iii) கண்ணீர்வர அழு. (iv) அவன் உண்ணின் உவப்பேன்.
(v) அவன் உண்டக்கடை மகிழ்வேன்.
(vi) அவன் உண்டவழி மகிழ்வேன்.
(vii) அவன் உண்டானெனின் மகிழ்வேன்.
(viii) அவன் உண்பானாயின் மகிழ்வேன்.

**விடை** (i) காணாது வந்தேன்.
(ii) அவன் காணாமல் வந்தேன்.
(iii) கண்ணீர் வராமல் அழு, கண்ணீர்வராமே அழு, கண்ணீர் வராமை அழு, கண்ணீர்வாராமைக்கு அழு.
(iv) அவன் உண்ணாக்கடை உவப்பேன், அவன் உண்ணாக்கால் உவப்பேன், அவன் உண்ணாவழி உவப்பேன், அவன் உண்ணா விடத்து உவப்பேன், அவன் உண்ணாவிடின் உவப்பேன், அவன் உண்ணாதொழியின் உவப்பேன்.
(v) அவன் உண்ணாக்கடை மகிழ்வேன்.
(vi) அவன் உண்ணாவழி மகிழ்வேன்.
(vii) அவன் உண்டிலனெனின் மகிழ்வேன். அவன் உண்ணா வில்லையெனின் மகிழ்வேன்.
(viii) அவன் உண்ணானாயின் மகிழ்வேன்.

**வினா 2.** மேல்வரும் ஒவ்வொரு வாக்கியச் சோடியிலுமுள்ள இருவினை முற்றுக்களுள் ஒன்றைப் பெயரெச்சமாக்கி அவ்வாக்கியச் சோடியை இணைக்க:–

(i) ஆசிரியன் மாணாக்கனை அழைத்தான். மாணாக்கன் காலந் தாழ்த்தாது வந்தான்.
(ii) ஒரு மனிதன் உன்னைத் தேடினான். அவனுக்கு நீண்ட தாடி உண்டு.

**விடை** (i) ஆசிரியனால் அழைக்கப்பட்ட மாணாக்கன் காலந்தாழ்த்தாது வந்தான்.
(ii) நீண்ட தாடியுள்ள ஒரு மனிதன் உன்னைத் தேடினான்.

**3.** கீழ்க்காணும் ஒவ்வொரு வாக்கியச் சோடியிலுமுள்ள இரு வினை முற்றுக்களுள் ஒன்றை வினையெச்சமாக்கி அவ் வாக்கியச் சோடியை இணைக்க:–

(i) மழை பெய்தது; அதனாலே நெல் விளைந்தது.





(ii) அவன் பலநாள் வேலை செய்தான் அவன் நித்திரை கொள்ள வில்லை.

**விடை** (i) மழை பெய்ய நெல் விளைந்தது.
(ii) அவன் நித்திரைகொள்ளாது பலநாள் வேலை செய்தான்.

## பயிற்சி 19.

**1.** கீறிட்ட இடங்களில் இசைவான பெயரெச்சங்கள் இட்டு வாக்கியம் முடிக்க:–

(1) கோபம் .................... இடத்திற் குணம் உண்டு.
(2) முன் .................... நாழியே பின் அளக்கும்.
(3) .................... பயிர் முளையிலே தெரியும்.
(4) .................... ஓலை சலசலக்கும்.
(5) தன்னை .................... கம்மாளன் இல்லை.
(6) தான் .................... முயலுக்கு மூன்றே கால்.
(7) .................... நாய் வேட்டை பிடிக்குமா?
(8) கண்ணாடியிற் .................... பணங் கடன் தீர்க்க உதவுமா?
(9) .................... மாட்டிற்கு ஓர் அடி, – பெண்ணுக்கு ஒரு சொல்.
(10) .................... காலிலே படும், – குடியே கெடும்.

**2.** பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயரெச்சங்கள் எப் பொருள்களில் வந்தன எனக் கூறுக:–

(1) எரிகிற வீட்டிற் பிடுங்கினது இலாபம்.
(2) ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
(3) இட்டாருக்கு இட்ட பலன் உண்டு.
(4) இறக்குங் காலம் வந்தாற் பிறக்கும் ஈசலுக்குச் சிறகு முளைக்கும்.
(5) ஊன்றக் கொடுத்த தடி உச்சியை உடைக்கிறது.
(6) காய்த்த கொம்பு பணியும்.
(7) அவர் நடந்த நடை என்னே!
(8) அவர் தாம் உண்ட கலத்தை வீசி எறிந்தார்.
(9) வழிநடந்த துயர் என்னைவிட்டு நீங்கவில்லை.
(10) அவன் வாழும் இல்லத்தை இன்று நான் கண்டேன்.

**3.** கோடிட்ட இடம் ஒவ்வொன்றையுந் தந்த வினையின் வினையெச்சத் தாலே நிரப்புக:–



RangaRakes tamilnavarasam.com

(1) நான் அவனை .................... பல்லாண்டு சென்றன. (காண்)
(2) வரவுக்கு .................... செலவை வரையறு (தகு)
(3) வெள்ளம் .................... அணைகோல வேண்டும் (வா)
(4) மழை .................... புல் வளர்ந்தன. (பெய்)
(5) யான் வறுமை .................... அவ்வள்ளல் எனக்கு உதவுவார். (உறு)
(6) உணவு .................... உயிர் நீங்கும். (உண்)
(7) அவன் .................... இறந்தான். (வெட்டு)
(8) கந்தன் முருகனை .................... குத்தினான். (சா)
(9) நான் பொறுப்பு .................... அவன் கடன் கொடுக்க உடன்படுவான். (நில்)
(10) தீவினை .................... யாம் என்ன செய்யலாம். (பொருந்து)

4. பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுமுள்ள வினையெச்சத்திற்குப் பதிலாக அதன் மறைவகைகளை இட வரும் வாக்கியங்கள் எல்லாவற்றையுந் தருக:-

(1) சென்று வந்தேன்.
(2) நீ வரின் யான் போவேன்.
(3) யான் காண அவன் சென்றான்.
(4) செவிக்குக் கேட்கச் சொல்லு.
(5) நீ இறந்தக்கடை யான் என் செய்வேன்?
(6) ஊன் உணற்கு அங்குச் சென்றான்.
(7) அருள் புரியும் வண்ணம் இறைவனை வணங்குகிறாய்.
(8) அவன் உண்டானேல் நீ என்செய்வாய்?

5. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினையெச்சங்கள் எப்பொருள்களில் வந்தன எனக் கூறுக:-

(1) பீடு பெற நில்.
(2) கிட்டாதாயின் வெட்டென மற.
(3) அறஞ் செய்து புகழ் பெற்றான்.
(4) பலர் இகழப் பயனில சொல்லற்க.
(5) கோழி கூவப் பொழுது புலர்ந்தது.
(6) மழை பெய்தற்கு முழங்கும்.
(7) அவன் என்னைப் போகுமாறு வேண்டினான்.
(8) மழை பெய்ய மரங் குழைத்தது.





6. பின்வரும் ஒவ்வொரு சோடி வாக்கியங்களிலுங் கோடிட்ட இடங்களில் அடைப்புக்குட் கிடக்கும் வினைகளின் எச்சங்களை இட்டு வாக்கிய முடிக்க:-

(1) ஊன் .................... நீ கெடுவாய். கயிற்றை வலித்து .................... அது அறும். (உன்னு, உண்ணு)
(2) .................... மா பிட்டுக்கு உதவும். – ஆணி பிடுங்கல் எளிதன்று. (அரை, அறை)
(3) பிரயாணி – இடம் உடனலத்திற்கு ஆகாது. .................... துண்டுகள் ஒன்றுக்கும் பயன்படா. (இறு, இரு)
(4) அவன் அச் செய்யுளுக்குப் பொருள் .................... எண்ணினான். தனது எதிரியின் காது .................... அவனை வைதான். (உறை, உரை)
(5) .................... ஒழுகும் வஞ்சகரை அஞ்சல் வேண்டும். .................... குடிக்கும் பால் இன்சுவை தராது. (கற, கர)
(6) .................... கடலிலே மீனினம் பல உண்டு. .................... புட்கள் இனி வாரா. (பர, பற)
(7) பிறர் நெஞ்சு .................... சொன்னவன் பாவத்திற்கு உள்ளாவான். பிறர் தெருத் தெருவாய் .................... செய்தவன் பழிக்கு ஆளாவான். (உலை, உளை)
(8) புள் .................... ஓசை கேட்டுக் கண் விழித்தேன். அவன் கள்ளருக்குப் பயந்து தன்பொருளை .................... வகையைக் கண்டு அவனை வியந்தேன். (ஒளி, ஒலி)
(9) இறைவன் என்மீது .................... என்ன தவஞ் செய்யலாம். நெற்போர் – காற்று வீசியது. (பறி, பரி)
(10) .................... மனிதன் உயிரெழான். யானையை .................... மனிதன் அவ்யானையால் எற்றுண்டு இறந்தான். (மரி, மறி)
(11) தலைமயிரை .................... வெயிலிலே நின்றான். தலைமயிரை .................... மயிர் வாரி தேடினாள். (உளர், உலர்)
(12) அம்மி .................... சுரை மிதந்தது. அவ்வரசன் .................... குடிகெட்டது. (ஆள், ஆழ்)
(13) நீ எனக்குப் பரிசு .................... எண்ணினை. அவன் பகைவனது கோட்டையை .................... திட்டமிட்டான். (அழி, அளி)



RangaRakes
tamilnavarasam.com

(14) .................... நினைத்தவளை ஓரிடத்தில் இருத்தல் இயலாது. சோற்றை .................... எண்ணிய குழந்தை யைத் தடுத்தால் அது அழும். (அளை, அலை)

(15) நீ .................... கொடுமையை எவ்வாறு உரைப்பேன்? ஓடி .................... குதிரை போட்டியோட்டத்திற்கு உகந்ததன்று. (இளை, இழை)

(16) மகனை இழந்த தாய் .................... கண்ணோடு தோன்றினாள். அரசனைக்கண்ட தேவி .................... தலையினளாய் நின்றாள். (பணி, பனி)

(17) அவள் என்மீது கொண்ட வெகுளியை .................... எண்ணினேன். அவளையாருமின்றி .................... செய்தனர். (தனி, தணி)

(18) நோய்வாய்ப்பட்டு .................... நல்லோருஞ் சாதல் இயல்பு. தீயோரொடு .................... நல்லோருங் கெடுதல் இயல்பு. (இணை, இனை)

(19) அவன் கூடாவொழுக்கத்தை .................... முயன்றான். ஆசிரியர் மாணாக்கருக்குப் பாடங்களை .................... முயல்வர். (விலக்க விளக்க)

(20) ஆந்தை .................... ஓசைகேட்டு நித்திரை தெளிந்தேன். .................... தேங்காய் துருவுதற்கு இடங்கொடாது. (அளறு, அலறு)



அதிகாரம் 6.

# இடைச்சொன் மரபு

**128.** இடைச்சொல் (1) வேற்றுமையுருபுகள், (2) விகுதி யுருபுகள், (3) இடைநிலை யுருபுகள், (4) சாரியை யுருபுகள், (5) உவம வுருபுகள், (6) இசைநிறையே பொருளாக வருபவை, (7) அசைநிலையே பொருளாக வருபவை, (8) பிறவாறு தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருபவை, (9) ஒலி, அச்சம், விரைவு என்பவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவை என ஒன்பது வகைப்படும்.

(1) **வேற்றுமை யுருபுகள்** – ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பன.

(2) **விகுதி யுருபுகள்** – அன், ஆன் முதலியன.

(3) **இடைநிலை யுருபுகள்** – த், ட், ற், ஆநின்று, கின்று, கிறு, ப், வ், ஞ் முதலியன.

(4) **சாரியை யுருபுகள்** – அன், ஆன், அம், ஆம், அல், அத்து, அற்று, இற்று, இன், தன், தான், தம், தாம், நம், நும், அ, ஆ, உ,ஏ, ஐ, கு, து, ன் முதலியன.

(5) **உவமயுருபுகள்** – போல, புரைய, ஒப்ப, உறழ முதலிய வினையெச் சங்கிலுள்ள போல், புரை, ஒ, உறழ் முதலியன.

(6) **இசைநிறை** – 'ஏயே 'யிவளொருத்தி பேடியோ என்றாள்' என்பதி லுள்ள 'ஏயே' என்பதுபோன்றவை. இசை நிறையாவது செய்யுளில் வேறுபொருளின்றி இசை நிறைத்து நிற்பது.

(7) **அசைநிலை** –'என்று மேத்தித் தொழுவோமியாமே' என்பதில் ஈற்றே காரம் போன்றவை. அசைநிலையாவது வேறு பொருளின்றிப் பெய ரோடும் ஈற்றில் அசைத்து (சார்த்தி) ச் சொல்லப்படுவது.

(8) **பிறவாறு தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருபவை** – ஏ, ஓ, உம், என, என்று முதலியவை.

(9) **ஒலி, அச்சம், வீரைவு என்வனவற்றைக் குறிப்பால் உணர்த்துபவை**

| | |
|---|---|
| அம்மென, கோவென. | ஒலிக்குறிப்புப் பொருளைத் தருவன. |
| துள்ளென, திடுக்கென. | அச்சக் குறிப்புப் பொருளைத் தருவன. |
| பொள்ளென, கதுமென. | விரைவுக் குறிப்புப் பொருளைத் தருவன. |

பிறவாறு தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருபவை:–

**129.** ஏகாரவிடைச்சொல் பிரிநிலை, வினை, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறுபொருளில் வரும்.



RangaRakes
tamilnavarasam.com

(1) **பிரிநிலை** – அவருள் இவனே கள்வன். ஒரு கூட்டத்தினின்றும் ஒரு வனைப் பிரித்து நிற்றலாற் பிரிநிலை ஏகாரம்.

(2) **வினா** – நீயே கொண்டாய்? வினாப்பொருளைத் தருதலால் வினா ஏகாரம்.

(3) **எண்** – நிலனே நீரே தீயே வளியே, எண்ணி நிற்றலால் எண்ணேகாரம்.

(4) **ஈற்றசை** – என்றும் ஏத்தித் தொழுவோமியாமே. வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் ஈற்றசை ஏகாரம்.

(5) **தேற்றம்** – உண்டே மறுமை. தெளிவின் கண் வருதல் பற்றித் தேற்றேகாரம்.

(6) **இசைநிலை** – ஏயே இவளொருத்தி பேடியோ என்றாள். வேறு பொருளின்றிச் செய்யுளில் இசைநிறைத்து நிற்றலால் இசைநிறை ஏகாரம்.

**130.** ஓகாரவிடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவிரக்கம், அசைநிலை, பிரிநிலை என்னும் எட்டுப்பொருளில் வரும்.

(1) **ஒழியிசை** – படித்தற்கோ வந்தாய். படித்தற்கன்று, விளையாடுதற்கு வந்தாய் முதலாய ஒழிந்தபொருளை நோக்கி நிற்றலால் ஒழியிசை ஓகாரம்.

(2) **வினா** – குற்றியோ மகனோ? வினாப்பொருளில் வருதலால் வினா ஓகாரம்.

(3) **சிறப்பு** – ஓஒ பெரியன். ஒருவனது பெருமையாகிய உயர்வின் சிறப்பை உணர்த்துதலால் உயர்வுசிறப்போகாரம்.
ஓஒ கொடியன். ஒருவனது கொடுமையாகிய இழிவின் சிறப்பை உணர்த்துதலால் இழிவுசிறப்போகாரம்.

(4) **எதிர்மறை** – நீயோகொள்வாய். நீ கொள்ளாய் என்னும் எதிர்மறைப் பொருளை உணர்த்துதலால் எதிர்மறை ஓகாரம்.

(5) **தெரிநிலை** – இவ்வுரு ஆணோவன்று, பெண்ணோவன்று, அத்தன்மைகள் இல்லாமையைத் தெரிவித்து நிற்றல் பற்றித் தெரிநிலை ஓகாரம்.

(6) **கழிவிரக்கம்** – தமக்கு ஓர் உறுதி உணராரோ. கழிந்ததற்கு இரங்குதற் பொருளைத் தருதலாற் கழிவிரக்கவோகாரம்.

(7) **அசைநிலை** – கூறுவேன் கேண்மினோ. வேறு பொருளின்றி ஈற்றிற் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை ஓகாரம்.





(8) **பிரிநிலை** – இவனோ கொண்டான். ஒரு கூட்டத்தினின்றும் ஒருவனைப் பிரிந்து நிற்றலால் பிரிநிலை ஓகாரம்.

**131.** **உம்மையிடைச்சொல்** எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளில் வரும்.

(1) **எதிர்மறை** – முருகன் வருதற்கும் உரியன். வாராமைக்கும் உரியன் என்னும் எதிர்மறைப்பொருளை ஒழிப்பாக உணர்த்துதலால் எதிர் மறை உம்மை.

(2) **சிறப்பு** – குறவரும் மருளுங் குன்றம். குன்றினது உயர்வின் சிறப்பை, மயங்காது ஏறுதற்குரிய குறவரும் மருளுவர் என உணர்த்துதலால் உயர்வுசிறப்பும்மை.
புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை. யாக்கையினது இழிவின் சிறப்பைப் புலாலைவிரும்பி உண்ணும்புலையனும் விரும்பான் என உணர்த்துதலால் இழிவு சிறப்பும்மை.

(3) **ஐயம்** – அவன் வரினும் வரும். துணியாமைக்கண் வருதலால் ஐயவும்மை.

(4) **எச்சம்** – முருகனும் வந்தான். முன்கந்தனும் வந்தான் என்னும் எச்சப்பொருளைத் தழுவிநின்றால் இறந்தது தழீஇய எச்சவும்மை. இனிக் கந்தனும் வருவான் என்னும் எச்சப்பொருளைப் போற்றி நின்றால் எதிரது போற்றிய எச்சவும்மை.

(5) **முற்று** – தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார். எஞ்சாப் பொருளில் வருதல் பற்றி முற்றும்மை.

(6) **எண்** – நிலனும் நீருந் தீயும் வளியும் ஆகாயமுமெனப் பூதம் ஐந்து. எண்ணுதற்கண் வருதலால் எண்ணும்மை.

(7) **தெரிநிலை** – ஆணுமன்று, பெண்ணுமன்று, அத்தன்மைகள் இல்லாமையைத் தெரிவித்து நிற்றல்பற்றித் தெரிநிலை உம்மை.

(8) **ஆக்கம்** – பாலுமாயிற்று. அது மருந்துமாயிற்று என்னும் பொருளைந் தருதலால் ஆக்கவும்மை.

**132.** எச்ச வும்மையாலே தழுவப்படும் பொருளைச் குறிக்குஞ் சொல் உம்மையோடு பொருந்தாதாயின், அச்சொல் எச்சவும்மையொடு பொருந்திய சொல்லுக்கு முன்னர் நிற்கும்.

கந்தன் வந்தான்; முருகனும் வந்தான்.

**133.** முற்றும்மை எதிர்மறை வினையை அடுத்து வருமிடத்து எச்ச வும்மையாகும்.



RangaRakes
tamilnavarasam.com

எல்லாரும் வரவில்லை, அவர் பத்துங் கொடார். இங்கே, சிலர் வந்தார். சில கொடுப்பர் எனவும் பொருள் படுதலால் எச்சவும்மை.

**134.** எச்சவும்மை செவ்வெண்ணில் வருமிடத்து ஈற்றில்வரும். செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொல் தொக்கு நிற்பது.

கல்வி செல்வம் ஒழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர். இவற்றுட் சில பெறுவாரும் உளர் எனப் பொருள் படுதலால் எச்சவும்மை.

**135.** எச்சப் பொருளைத்தரும் உம்மையொடு பொருந்திய சொல்லும் எஞ்சுபொருளை உணர்த்துஞ் சொல்லும் ஒரு வினைப்பாற்படும். ஒரு வினைப்படாவாயின் வழுவாம்.

கந்தன் வந்தான், முருகனும் வந்தான் என்பன ஒருவினை கொண்டமை காண்க. கந்தன் வந்தான், முருகனும் உண்டான் என்பன ஒருவினை கொள்ளாமையால் வழுவாம்.

பைம்புதல் வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களும் ஊர்கொண் டன்றே.

இணர்விரிதலும் ஊர்கோடலும் மணஞ் செய்காலம் இது என ஒரு பொருள் உணர்த்தி நிற்றலால் ஒரு வினைப்பாற் படுதல் காண்க.

**136.** என, என்று என்னும் இரண்டு இடைச் சொற்களும் வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு என்னும் ஆறுபொருளில் வரும்.

(1) **வினை** – மைந்தன் பிறந்தானெனத் தந்தை உவந்தான்.
நரை வருமென்று எண்ணி.

(2) **பெயர்** – அழுக்காறென ஒரு பாவி.
பாரியென்று ஒருவன் உளன்.

(3) **குறிப்பு** – துண்ணெனத் துடித்தது.
விண்ணென்று இசைத்தது.

(4) **இசை** – ஒல்லென ஒலித்தது.
ஒல்லென்று ஒலித்தது.

(5) **எண்** – நிலனென நீரெனத் தீயென வளியென.
நிலனென்று நீரென்று தீயென்று வளியென்று.

(6) **பண்பு** – வெள்ளென விளர்த்தது.
பச்சென்று பசுத்தது.

**137.** ஒடு என்னும் இடைச்சொல் எண்ணுப் பொருளில் வரும்.





**138.** எண்ணிடைச் சொற்களுள் ஏயும் பெயர்ச் செவ்வெண்ணுந் தொகைச்சொற் பெற்றுவரும்; உம், என, என்று, ஒடு என்னும் நான்குந் தொகைச் சொற் பெற்றும் பெறாதும் வரும்.

**ஏகாரவெண்** – கந்தனே முருகனே இருவரும் வந்தனர்.

**பெயர்ச்செவ்வெண்** – கந்தன் முருகன் இருவரும் வந்தனர்.

**உம்மையெண்** – கந்தனும் முருகனும் இருவரும் வந்தனர். கந்தனும் முருகனும் வந்தனர்.

**எனவெனெண்** – கந்தனென முருகனென இருவர் வந்தனர். கந்தனென் முருகனென மக்களைக் கொண்ட உலகம்.

**என்றெனெண்** – கந்தனென்று முருகனென்று இருவர் வந்தனர். நிலனென்று நீரென்று தீயென்று காற்றென்று அளவறு காயமென்றாகிய உலகம்.

**ஒடுவெனெண்** – கந்தனொடு முருகனொடு இருவர் உளர். நிலனொடு நீரொடு தீயொடு காற்றொடு அளவறு காயமொடாகிய உலகம்.

**139.** என, என்று, ஒடு என்னும் இம்மூன்று இடைச்சொற்களும் எண்ணப்படும் பொருடோறும் நின்றும், ஈற்றிலே நின்று பிரிந்து மற்றைப் பொருடோறுங் கூடியும் எண்ணுப் பொருளில்வரும்.

பகையெனப் பாவமெனப் பழியென மூன்றும், பகை பாவம் பழியென மூன்றும்.

வினையென்று பகையென்று இரண்டு. வினை பகையென்று இரண்டு,
நிலத்தொடு நீரொடு தீயொடு வளியொடு ஐந்தும்,
நிலம் நீர் தீ வளி வெளியொடு ஐந்தும்.

**140.** எண்ணிடைச் சொல் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும் பற்றி வராது. வினையெச்சங்கடோறும் விரிந்துந் தொக்கும் வரும். அவ்வாறு வருமிடத்து வினையெச்சங்கள் தொகைபெறா.

கற்ற கேட்ட பெரியோர். அரிய பெரிய பொருள். – பெயரெச்சங்கள் எண்ணிடைச்சொல் இன்றி வந்தன.

கந்தன் வந்தான்; முருகன் வந்தான்; இராமன் வந்தான்; மூவரும் வந்தமையாற் கலியாணம் பொலிந்தது. – வினைமுற்றுக்கள் எண்ணிடைச் சொல் இன்றி வந்தன.

இங்கு மூவரும் என்பதாற் கந்தன் முதலாயினோர் எண்ணப் பட்டனரேயன்றி வினைமுற்றுக்கள் எண்ணப்படாமை அறிக.

கற்றுங் கேட்டுங் கற்பனை கடந்தார் – உம்மையெண் விரிந்து நின்றது.



RangaRakes
tamilnavarasam.com

உண்டு தின்று ஓடிவந்தான் - செவ்வெண்.
உண்ணவென உடுக்கவென வந்தார் - எனவெனெண்விரிந்து நின்றது.
உண்ணவென்று உடுக்கவென்று வந்தார் - என்றெனெண் விரிந்து நின்றது.
உண்ண உடுக்கவென்று வந்தார் - என்றெனெண் பிரிந்து கூடி நின்றது.

**141.** மற்று என்னும் இடைச்சொல் வினைமுற்று, பிறிது, அசைநிலை என்னும் மூன்று பொருளில் வரும்.

**வினைமாற்று** — மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது. இங்கு நல்வினையை விரைந்தறிவாம் என்னும் வினையை மாற்றி விரையாது அறிவாம் என்னும் வினையைத் தருதலால் வினைமாற்றுப் பொருளில் வந்தது.

**பிறிது** — ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந் துறும். இங்கு ஊழல்லதொன்று என்னும் பொருளைத் தருதலாற் பிறிது என்னும் பொருளில் வந்தது.

**அசைநிலை** — மற்றென்னை யாள்க. இங்கு வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலைப் பொருளில் வந்தது.

**142.** மற்றையது எனப் பெயர்க்கு முதனிலையாய்வரும் மற்றை என்னுஞ் சொல் சுட்டப்பட்டதனை ஒழித்து அதன் இனங்குறித்து நிற்கும்.

மற்றை ஆடையைக் கொண்டுவா. இங்குச் சுட்டப்பட்ட ஆடையை வேண்டாதான் அதனை ஒழித்துப் பிறிதொன்றைக் குறித்து நின்றமை காண்க.

மற்ற ஆடை என்பது இழிவழக்கு.

**143.** கொல் என்னும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் இருபொருளில் வரும்.

**ஐயம்** - இவன் முருகன்கொல் கந்தன்கொல். இங்கு முருகனோ கந்தனோ என்னும் ஐயப்பொருளில் வந்தது.

**அசைநிலை** — கற்றதனாலாய பயனென்கொல். இங்குவேறு பொரு ளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலைப் பொருளில் வந்தது.

**144.** அ, இ, உ, என்னும் மூன்று இடைச்சொற்களுஞ் சுட்டுப் பொருளில் வரும்.

அவன், இவன், உவன்.
அக்கந்தன், இக்கந்தன், உக்கந்தன்.

**145.** எ, ஆ, யா என்னும் மூன்று இடைச்சொற்களும் வினாப்பொருளில் வரும்.

எவன், எக்கந்தன், கந்தனா, யாவன்.





**146.** முன், பின் என்னும் இரண்டு இடைச்சொற்களுங் காலப் பொரு ளிலும் இடப்பொருளிலும் வரும்.

| | |
|---|---|
| மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது. | காலப்பொருளில் வந்தது. |
| கற்றார்முன் தோன்றாது கழிவிரக்கம். | இடப்பொருளில் வந்தது. |
| நீயிர் பொய்கூறியபின் மெய் கூறுவார் யார். | காலப்பொருளில் வந்தது. |
| எனது நெஞ்சங் காதலி பின் சென்றது. | இடப்பொருளில் வந்தது. |

**147.** இனி என்னும் இடைச்சொல் காலவிடங்களின் எல்லைப் பொரு ளில் வரும்.

இனிக் கூறுவேன். - காலவெல்லைப் பொருள்.
இனி எமது ஊர். - இடவெல்லைப் பொருள்.

**148.** வாளா, சும்மா என்னும் இடைச்சொற்கள் பயனின்மைப் பொருளில் வரும்.

அவன் வாளா இருக்கின்றான். அவன் அங்கு சென்று சும்மா வந்தான்.

**149.** அந்தோ என்னும் இடைச்சொல் இரக்கப்பொருளில் வரும்.

அந்தோ! அதுகெட்டு விட்டதே.

**150.** ஐயோ என்னும் இடைச்சொல் இரக்கம், அச்சம் என்னும் இரண்டு பொருளில் வரும்.

ஐயோ! அதனை இழந்துவிட்டேனே. - இரக்கப்பொருள்.
ஐயோ! புலியொன்று என்முகமாக வருகின்றதே. - அச்சப்பொருள்.

**151.** ஆ, அம்ம, ஓ, ஓகோ — என்றும் இடைச் சொற்கள் வியப்புப் பொருளில் வரும். ஆ,அம்ம, ஓகோ இக் காட்சி பார்ப்பதற்கு அமையாது

**152.** தொறும், தோறும் என்னும் இடைச்சொற்கள் இடப் பன்மைப் பொருளிலுந் தொழிற்பயில்வுப் பொருளிலும் வரும்.

| | |
|---|---|
| ஊர்தொறுஞ் சந்தை. | இடப்பன்மைப் பொருள். |
| ஊர்தோறுஞ் சந்தை. | இடப்பன்மைப் பொருள். |
| கற்குந்தொறும் அறிவு வளரும். | தொழிற்பயில்வுப் பொருள். |
| கற்குந்தோறும் அறிவு வளரும். | தொழிற்பயில்வுப் பொருள். |

**153.** ஆவது, ஆதல், ஆயினும், தான் என்னும் நான்கு இடைச் சொற் களும் விகற்பப்பொருளில் வரும்.

எண்ணாவது எழுத்தாவது கற்கப்படலாம்.
எண்ணாதல் எழுத்தாதல் கற்கப்படலாம்.
கந்தனாயினும் முருகனாயினும் இங்கு வரலாம்.
கந்தன்றான் முருகன்றான் இங்கு வரலாம்.



RangaRakes tamilnavarasam.com

**154.** ஆர் என்னும் இடைச்சொல் உயர்த்தற் பொருளிலும் அசைநிலைப் பொருளிலும் வரும்.

தந்தையார் வந்தார். – உயர்த்தற்பொருள்.
எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே – அசைநிலைப்பொருள்.

**155.** தான், தாம், அன்று, போலும் முதலிய இடைச்சொற்கள் எல்லா விடத்தும் அசைநிலைப் பொருளில் வரும்.

நான்றான், நீதான், அவன்றான், அவர்தாம்,
பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே,
வடுவென்ற கண்ணாய் வருந்தினைபோலும்.

## பயிற்சி 20

**1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உம்மையிடைச் சொல் ஒவ்வொன்றும் எப்பொருளில் வந்தது?**

(1) காமமும் வெகுளியும் மயக்கமும் எனக் குற்றம் மூன்றும் மக்களிடத்துக் காணப்படும்.
(2) எம்மூர்ப் பூனையும் புலால் உண்ணாது.
(3) அவ்வூரிலே நடந்த விழாவிற்குக் கந்தனே யன்றிப் பூதனுஞ் சென்றான்.
(4) அந்நங்கை தெய்வமகளிருள் ஒருத்தியுமன்று ; மானிட மகளிருள் ஒருத்தியு மன்று.
(5) அவன் அக்கொலையைச் செய்தாலுஞ் செய்வான்.
(6) இவ்வீரனும் போர்க்களம் புகுவான்.
(7) கந்தன் அதனைப் பெறுதற்கும் உரியன்.
(8) யானும் உம்மோடு செல்வேன்.
(9) இவ்வூர்ப் பிராமணனுங் கள்ளருந்துவன்.

**2.** மேல்வரும் வாக்கியங்களிலுள்ள ஏகார விடைச் சொற்கள் எப் பொருள்களில் வந்தன?

(1) நீயே அச்செயலைச் செய்தனை?
(2) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
(3) அக்கொடியவருள் இவனே அச்செயலைச் செய்தவன்.
(4) காமமே வெகுளியே மயங்கமே முக்குற்றமும் இவனிடம் உள
(5) ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே இருக்குமா?
(6) என்றும் ஏத்தித் தொழுவோ மியாமே.





(7) பாவஞ் செய்வார்க்கு வருமே தீங்கு.
(8) கூகூ வென்றனர் அவனைக் கண்டோரே.
(9) வெள்ளம் வருமுன்னே அணைகோல வேண்டும்.
(10) வளர்த்த கடா மார்பிலே பாயாதா?

**3.** கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள ஓகார விடைச் சொல் ஒவ்வொன்றும் எப்பொருளில் வந்ததெனக் கூறுக.

(1) இவள் திருமகளோ அல்லள்; அரமகளோ அல்லள்; இவள் யார்?
(2) காற்றில்லாமல் தூசி பறக்குமோ?
(3) இவர் தம்மைத்தாந் தேற்றாரோ?
(4) அக் கள்வருள் இவனோ கொடியவன்.
(5) ஓ ஓ உவமை உறழ்வின்றி ஒத்ததே!
(6) நீங்கினளோ என் பூங்கணாளே!
(7) நீயோ அதனைப் பெறத் தகுதியுடையை!
(8) ஓ ஓ! இவனைப்போற் பாவி உலகத்தில் இல்லை.
(9) திருட்டு வாய்த்தால் திருடமாட்டாரோ?
(10) சொல்லுவேன் கேட்பீரோ?

**4.** பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைச் சொற்களைத் தேர்ந் தெடுத்து அவற்றுள் ஒவ்வொன்றும் எப்பொருளில் வந்ததெனக் கூறுக.

(1) திடீரென வந்தான்.
(2) அவர் முழுவதுங் கொடார்.
(3) யானாதல் நீயாதல் அதனைச் செய்யவேண்டும்.
(4) யான்றான் அங்கு நின்றேன்.
(5) அவள் பாடவென ஆடவென அம்மண்டபஞ் சென்றாள்.
(6) என்னுள்ளம் இறைவன்பின் சென்றது.
(7) இறைவனை வழிபடுந்தொறும் என்னுள்ளம் பூரிக்கின்றது.
(8) எம்மூடன் இதனைக் கூறினான்?
(9) அந்தோ! எனது நண்பன் இறந்து விட்டானே.
(10) அறிவுடையார்முன் அஞ்ஞானந் தலைகாட்டாது.
(11) இனி, யான் யாது செய்வேன்?
(12) எனது தாயாரும் இறந்து விட்டனரே.
(13) அச்செய்தியைக் கேட்டதுஞ் செய்வது அறியாமல் அவன் வாளா நின்றான்.
(14) மலைகளுள்ளே இமயமலையே மிக உயர்ந்தது.
(15) அவன் சீரியானுமல்லன்; பூரியானுமல்லன்.



RangaRakes
tamilnavarasam.com

**5.** பின்வரும் வாக்கியங்களில் இடைச்சொற் பிரயோகம் பற்றி எவையேனும் வழுக்கள் இருந்தால் அவற்றைத் திருந்தி எழுதுக:–

**(1)** அவ்வேளாளனிடம் ஆடே மாடே உண்டு.
**(2)** அவன் பல கலைகளைக் கற்றுக் கேட்டும் அறிவை வளர்க்கின்றான்.
**(3)** அங்கு நின்றவன் கந்தனா முருகனா என அறிய விரும்பினேன்.
**(4)** அவனாதல் அன்றி இவனாதல் அக் காரியத்தைச் செய்யலாம்.
**(5)** அவன் மற்றப் பொருளைத்தரும்படி வேண்டி நின்றான்.
**(6)** இன்னொரு பழம் அங்கே இருக்கின்ற தென்றான்.
**(7)** நீதான் அக்கேள்வியைக் கேட்டீர்.
**(8)** கந்தனாலாயினும், அன்றி முருகனாலாயினும் இச்செயல் செய்யப்படுமா?

**156.** வழக்கிலுள்ள இடைச் சொற்கள் சில அவ்வவற்றின் குறிப்புப் பொருளோடு கீழே தரப்பட்டுள்ளன.

## I தனிச்சொற்கள்

அம்மென (ஒலி, நீர்த்தும்மல்)
இம்மென (ஒலி, விரைவு)
உம்மென (ஒலி)
எல்லென (ஒலி, அதிசயம், இரக்கம்)
ஏயென (விரைவு)
ஐயென (விரைவு, உடன்படல், வருத்தம், அதிசயம்)
ஒல்லென (விரைவு, வெளியாதல்)
கம்மென (விரைவு, மணங்கமழ்தல், ஓசையடங்கல்)
காரென (ஒளிமழுங்கல்)
குபீரென (வேகமாதல்)
கும்மென (இருளடர்ச்சி, காதடைப்பு)
கொல்லென (ஒலி)
சட்டென (விரைவு)
சடாரென (ஒலி)
சப்பென (சாரமின்மை)
சலக்கென (ஒலி)
சளாரென (ஒலி)
சிக்கென (விரைவு, உறுதி, உலோபம்)
சில்லென (ஒலி, குளிர்ச்சி, இன்பம்)
சிலீரென (குளிர்ச்சி, புளகிதம்)
சிள்ளென (விரைவு, ஆரவாரம்)
சீயென (வெறுப்பு)
சுஃறென (ஒலி)
சுறீரென (ஒலி, அச்சம், கடுத்தல்)
சுறுக்கென (விரைவு, கடுத்தல்)
சையென (இகழ்ச்சி)
ஞெரேரென (விரைவு, பொதுக்கெனல்)
ஞெரேலென (விரைவு, அச்சம், தண்மை)
ஞொள்ளென (ஒலி)
தபுக்கென (ஒலி, விரைவு)
திடீரென, திடுக்கென (ஒலி, விரைவு, எதிர்பாராத நிலையுணர்த்தல்)
திடுமென (ஒலி)
துடுக்கென (அச்சம், சிந்தனையின்றிப் பேசல்)
துண்ணென (விரைவு, அச்சம், திடுக்கிடுதல்)
துணுக்கென (அச்சம்)
தெற்றென (விரைவு, தெளிவு, உடனாதல்)





தையென (இசை)
தொப்பென (கீழ் விழுதல், அடிவிழுதல்)
கொம்மென (ஒலி)
நெறுக்கென (ஓடிதலொலி)
நைதென (ஆக்கம், மெலிதல், மனநோதல்)
நொய்தென (விரைவு)
நொய்யென (நுண்மை)
நொவ்வென (விரைவு)
பகீரென (அச்சம், சடுதி மனக்கலக்கம்)
படக்கென (எதிர்பாராதது நிகழ்தல்)
படாரென (வெடித்தலொலி)
பறாரென (ஒலி)
பிசுக்கென (பசைத்தன்மை)
புல்லென (பொலிவழிதல்)
புற்கென (ஒலி மழுங்கல், பயனின்மை, புன்மை
பையென (மெதுவாதல், வருந்துதல், ஒளிமழுங்கல்)
பொக்கென (விரைவு)
பொடுக்கென (ஒலி, விரைவு)
பொத்தென (ஒலி)
பொதுக்கென (ஒலி, நெகிழ்தல்)
மாடாரென (ஒலி)
மெத்தென (மென்மை, அமைதி, மந்தம்)
மெல்லென (மென்மை, மந்தம்)
விடேலென (ஓசை)
விண்ணென (ஓசை, விரைவு, வெளியாதல்)
வீரென (தீடீரெனக்கத்துதல்)
வெட்டென (கடுமை, மௌனமாய் இசைதல்)
வெடுக்கென (ஒடிதல் ஓசை, கடுகடுத்த பேச்சு, குத்துநோ)
வெளேரென (வெண்மையாதல், நிறம் வெளிறல்)

## II இரட்டைச் சொற்கள்

கசகசவென (ஒலி, இறுக்கம், செழிப்பு)
கடகடவென (ஒலி, விரைவு)
கணகணென (ஒலி, மிக்கெரிதல் உடற்சூடு)
கதகதென (ஒலி, சூடாதல்)
கமகமவென (வாசனை)
கரகரென (தொண்டையரித்தல்)
கலகலென (ஒலி)
களகளென (ஒலி)
கறகறென (ஒலி)
கிடுகிடென (ஒலி, விரைவு, அச்சம்)
கிண்கிணென (ஒலி)
கிலுகிலென (ஒலி)
கிளுகிளென (சிரித்தல், செழித்தல், பிரகாசித்தல்)
கிறர்கிறாவென (மயிலொலி)
கிறுகிறென (தலை சுற்றல், விரைவு)
கீச்சுக் கீச்சுக்கென (ஒலி)
கீர்கீரென (ஒலி)
குடுகுடென (ஒலி, விரைவு)
குணுகுணுவென (முணுமுணுத்தல்)
குமுகுமுவென (பேரொலி, மணம் வீசல்)
குழகுழவென (இளகியிருத்தல்)



RangaRakes
tamilnavarasam.com

கிறாகிறாவென (மயிலொலி)
கீச்சுக் கீச்சுக்கென (ஒலி)
குடுகுடென (ஒலி, விரைவு)
குமுகுமுவென (பேரொலி,
மணம் வீசல்)
குளகுளென (ஒலி, நெகிழ்ச்சி)

கொறுகொறென (கோபம்)
சடசடவென (ஒலி)

சலசலவென (ஒலி)
சளசளவென (ஒலி)
சிலுசிலுவென (ஒலி, நடுக்கம்)

சுடுசுடென (விரைவு, கடுத்தல்)

சுள்ளுச்சுள்ளென (கடுப்பு)
கடுத்தல்)சொலுசொலென

தக்குத்தக்கென (அடுக்கொலி)
தமதமவென (தீ எரியும் ஒலி)

திடுக்குத் திடுக்கென
(நடுங்கல், நெஞ்சடித்தல்)
திமிதிமியென (தாளவொலி)

நசுநசென (ஈரம், கட்டு, நெகிழ்சி,
மழைதூறல்)
நெடுநெடென (வளர்ச்சி)
நைநையென
(இகழ்ச்சி, விடாதழுதல்)

நொடுநொடென
(படபடப்பு, துடுக்கு)
நொறுநொறென (நொறுங்குதல்)

கிறுகிறென (தலை சுற்றல், விரைவு)
கீர்கீரென (ஒலி)
குணுகுணுவென (முணுமுணுத்தல்)
குழகுழவென (இளகியிருத்தல்)

குறுகுறென (விரைவு,
சுருசுருப்பு, கோபம், அச்சம்)
கொதுகொதென (நோவெடுத்தல்,
உடம்பு காய்தல்)
சட்சட்டென (விரைவு)
சரசரவென
(ஒலி, விரைவு, சுரசுரப்பு)
சள்ளுச்சள்ளென (ஒலி, கோபம்)
சிலுகுசிலுகென(இடைவிடாப்பேச்சு)
சிளுசிளுவென (ஒலி)
சீறுசீறென (அலறியழுதல்,
கோபமிகுதி)
சுருசுரென (விரைந்தெறிதல்,
வலித்தல், உடம்புசுடுதல்)
சுறுசுறென (ஒலி, விரைவு,
(இடைவிடாத் தூறலொலி,
குழைதல், சேறாதல்)
தடதடென (விரைவு, ஒலி)
தளதளென (ஒலி, ஒளிவீசல்,
இளகுதல்)
திடுதிடென (விரைவு,
நெஞ்சடித்தல்)
துகுதுகுவென (ஒலி)
தொளதொளென (நெகிழ்வு,
உளறுதல்)

நறநறென
(பற்கடித்தல், சுரசுரப்பு)
நெறுநெறென (ஓசை, முறிதல்)
நொடுக்குநொடுக்கென
(ஒலி, அலம்பல்,
படபடத்தல்)
நொதுநொதென
(பொங்குதல், நெகிழ்தல்)
பக்குப்பக்கென
(ஒலி, அச்சம்,
வெடிக்கச் சிரித்தல்)





பசபசென (தினவெடுத்தல்,
அலப்புதல், மழைதூறல்)
படபடென (துடித்தல், வெடித்தல்,
விரைந்துபேசல்)
பிசுக்குப்பிசுக்கென (பசைத்தன்மை)
பிடிபிடியென (விரைவு)

புலபுலென (விரைந்து வருதல்)

பொசுபொசென (எளிதில் எரிதல்,
(மழைபெய்தல், விரைவு)
மடக்குமடக்கென (ஒலி)
மதமதவென (மதமுறுதல்,
மரத்துப்போதல், ஒலி, விரைவு)
முசுமுசுவென (நீர் கொதித்தல்,
தினவெடுத்தல்)
மூச்மூசென (ஒலி, பெருமூச்சு
விடுதல்)
மொரமொரென (கரகரப்பு)

வழுவழென (மென்மை)

விண்விண்ணென (யாழிசைத்தல்,
நோவெடுத்தல்
வீச்சுவீச்சென (கதறுதல்)

வெளுவெளென (மிக வெண்மையாதல்,
நிறம் வெளிறல், புடைத்தல்)

படக்குப்படக்கென
(அச்சம், நாடியடித்தல்)
படார்படாரென (வெடித்தல்
ஒலி)
பிசுபிசென (ஈரப்பற்றாதல்)
பிலபிலவென, பிலுபிலுவென
(இலையுதிர்தல்)
பொக்குப்பொக்கென (ஒலி,
எரிதல்)
பொதுபொதென (மிகுதி,
அழுத்தமின்மை)
மடமடென (ஒலி, விரைவு)
மழமழென (மெத்தெனல்)

முரமுரென (நுரைத்தல்,
கரகரப்பு,
மொசுமொசென (வண்டு
மொய்த்தல், மயிர்வளர்ச்சி)
மொதுமொதென
(சனந்திரளுதல்)
விடுவிடென (சுருசுருப்பு,
நடுங்கல், கோபம்)
விறுவிறென (விரைவு, கோபம்,
குத்தெடுத்தல்)
வெடுவெடென (பெருஞ்
சிரிப்பின் ஒலி, சினம், விரைவு,
நடுக்கம்)

## III அடுக்குச் சொற்கள்

ஆவாவென (இரக்கம்)
சீச்சீயென (இகழ்ச்சி)
தொக்குத்தொக்கென (ஒலி,
தள்ளாடல்)
விடேல்விடேலென (ஒலி)

கூகூவென (பேரொலி, முறையிடுதல்)
சேச்சேயென (அருவருப்பு, அமர்த்துகை)

பொத்துப்பொத்தென (ஒலி)

## IV பிரிந்திசையா இணைச்சொற்கள்

கடபடமென (மருட்டல்)
கடுமுடென (ஒலி)
கிலுமொலென (ஒலி)

கடபடாவென (ஒலி)
கடுமொடென (ஒலி)
கீச்சுமூச்சென (கூக்குரல்)



RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| குழக்கு மழக்கென (தடித்துப் பருத்தல்) | கூகாவென (பேரொலி, முறையிடுதல்) |
| சீறுபாறென (முரண்படுதல்) | செக்கச்செவேரென (மிகச் சிவந்திருத்தல்) |
| தக்குப்பொக்கென (ஒலி) | தடபடென (ஒலி, தள்ளாடல்) |
| தடபுடென (ஒலி, விரைவு) | தித்தாவென (தாளவொலி) |
| தொந்தோமென (தாளவொலி) | நசுபிசென (ஈரம், கட்டுநெகிழ்தல், மழைதூறல்) |
| நறுகுமுறுகென (பொறாமை) | பச்சைப்பசேரென (பசுமை மிகுதி) |

## பயிற்சி 21

**1.** பின்வரும் இடைச்சொற்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் அமைக்க:- ஒல்லென, கும்மென, சையென, சளாரென, படாரென, பொத்தென, கரகரென, வழுவழென, பிசுக்குப்பிசுக்கென, தொக்குத் தொக்கென, வீச்சுவீச்சென, கடுமுடென, தொந்தோமென, கீச்சுமூச்சென, தடபடென.

**2.** மேல்வரும் வாக்கியங்களிற் குறிப்புப் பொருளில் வரும் இடைச் சொற்களின் பொருள்கள் இன்ன எனக் கூறுக.

**(1)** அவன் சங்கைக் கீர்கீரென அறுக்கின்றான்.
**(2)** என் வீட்டிற்குள்ளே திடீரெனக் கள்வர் புகுந்தனர்.
**(3)** அவ்விடலை தன் சகோதரர்களோடு சீறுபாறென வாழ்கின்றான்.
**(4)** நீரிலிட்ட வெல்லங் கதுமெனக் கரைந்தது.
**(5)** அந்நாய் சள்ளுச் சள்ளெனக் குரைக்கின்றது.
**(6)** விரிந்த மலராற் காடு கம்மென்றிருக்கின்றது.
**(7)** வண்டு சில்லென இரைகின்றது.
**(8)** அச்சுவர் படீரென வெடித்து வீழ்ந்தது.
**(9)** அவன் அவ்வமயம் விண்ணென ஓடிவந்தான்.
**(10)** அப்புண் சுள்ளுச் சுள்ளென வலிக்கின்றது.
**(11)** அப்பெண்மணி தன் அட்டில் வேலையைச் சட்டுச் சட்டெனச் செய்து முடித்தாள்.
**(12)** அங்கு மொதுமொதென மக்கள் குவிந்தனர்.
**(13)** மாமரத்தினின்றும் பிலபிலவெனச் சரகுகள் உதிர்ந்தன.
**(14)** கள்வர் நகர் காவலனைக் கண்டதுந் திடுதிடென ஓடித் தப்பினர்.





**(15)** அக்குழந்தை வீரெனக் கத்துகின்றது.
**(16)** மழை சலசலவெனத் தூறிற்று.
**(17)** அவளின் கூந்தல் மொசுமொசென வளர்கின்றது.
**(18)** பருந்து சின்னென வீழ்ந்து கோழிக்குஞ்சைப் பற்றிக் கொண்டு பறந்தது.
**(19)** அக்கடல் கொறுகொறுவென முழங்குகின்றது.
**(20)** மயில்கள் கிறாகிறாவென அகவின.
**(21)** அதனைக் கேட்டதும் அவன் சரேலென எழுந்து போனான்.
**(22)** சிளு சிளுவென நீர் கொதிக்கின்றது.
**(23)** கள்வனைக் கண்ட பணக்காரன் ஞெரேலென நடுங்கினான்.
**(24)** மழை சொலு சொலுவெனப் பொழிந்தது.
**(25)** அவன் அப்பந்தைக் குடுகுடென ஓடிப் பிடித்தான்.
**(26)** குற்றஞ்செய்தார் நெஞ்சுதிடுக்குத்திடுக்கென அடிக்கும்.
**(27)** ஆசிரியன் அழைத்ததும் அம்மாணாக்கன் அவன்முன் ஐயெனத் தோன்றினான்.
**(28)** அக்குழந்தை தக்குப்பொக்கென நடக்கின்றது.
**(29)** இறப்புப் பிறப்பை எண்ண எனது நெஞ்சு பகீரென்கிறது.
**(30)** அவன் இறக்க அவன் சுற்றத்தினர் எல்லாருங் கூடிக் கூகாவென அழுதனர்.
**(31)** கூட்டங் கலைந்தபின் அம்மண்டபம் புல்லெனத் தோன்றிற்று.
**(32)** அச்செய்தியைக் கேட்டவுடன் எனது தலை கிறு கிறென்றது.
**(33)** பிறர் சீயெனவாழ நல்லோர் உடன்படார்.
**(34)** வாழைப்பழங் குளகுளெனக் கிடக்கின்றது.
**(35)** வறிஞர் பையென்ற நெஞ்சத்தினராய் வாழ்வர்.
**(36)** எனது புண் கொதுகொதெனக் கொதிக்கின்றது.
**(37)** நேற்று எனது காலிலே தைத்த முள்ளை வெடுக்கென அசைத்தெடுத்தேன்.
**(38)** அவன் சீவன் பொடுக்கெனப் போயிற்று.
**(39)** புலபுலெனப் புதல்வர்களைப் பெற்றீர்.
**(40)** அவர்கள் ஒருவரோடு ஒருவர் நறுகுமுறுகென வாழ்கின்றார்கள்.



RangaRakes tamilnavarasam.com

# அதிகாரம் 7.

## உரிச்சொன்மரபு

**157.** உரிச்சொல்லானது ஈறுபற்றிப் பல பொருள் விளக்கலும் உரு பேற்றலுமின்றிப் பெயரையும் வினையையுஞ் சார்ந்து பொருளின் குணப் பண்பையேனுந் தொழிற் பண்பையேனும் விளக்கிப் பெயர்வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் நிற்கும். உரிச்சொற்கள் பெருமபான்மையுஞ் செய்யுள்களுக்கு உரியனவாய் வரும்.

| | | |
|---|---|---|
| **கறுப்பு, சிவப்பு** .... | .... | பெயர்ப்போலி. |
| **உறு, தவ** .... | .... | பெயர்க்கு முதனிலை. |
| **துவைத்தல், சிலைத்தல்** | .... | வினைக்கு முதனிலை. |
| **உறு** புகழ், **நனி**பேதை.... | | பெயரைச் சார்ந்தன. |
| **நனி** நின்றான், **தவச்**சென்றான் | .... | வினையைச் சார்ந்தன. |

**ஒரு பொருட் பல சொல்லாகிய உரிச்சொற்கள்**

**158.** **(1)** சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதிப் பொருளில் வரும்.

சீர்சான் முனிவன், உறுவளி தூக்கும், தவப்பல, நனி, வருந்தினை, துனிகூர் எவ்வம், காமங்கழி கண்ணோட்டம்.

**(2)** மழ, குழ என்பன இளமைப் பண்புப்பொருளில் வரும்.
மழகளிறு, குழன் கன்று,

**(3)** பேம், நாம், உரும் என்பன அச்சப் பண்புப் பொருளில் வரும்.
பேமுதிர் கடவுள், நாம நல்லார், உருமில் சுற்றம்.

**(4)** குரு, கெழு என்பன நிறப்பண்புப் பொருளில் வரும்.
குருமணித்தாலி, கேழ்கிளர் அகலம்

**(5)** தட, கய, நளி என்பன பெருமைப் பண்புப் பொருளில் வரும்.
தடக்கை, கயவாய், நளிமலைநாடன்.

**பல பொருள் ஒரு சொல்லாகிய உரிச்சொற்கள்**

**159.** **(1)** கடி என்னும் உரிச்சொல் காப்பு, கூர்மை, நாற்றம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்னும் பொருளில் வரும்.





கடிநகர், கடிகனை, கடிமாலை, கடிமார்பன், கடியர மகளிர், கடியரண், அம்புகடிவிடுதும், கடியுண்கடவுள், கடிமணம், கடிமுரசு, கடிமது, கடிவினை, கடிமிளகு.

**(2)** செழுமை என்னும் உரிச்சொல் வளன், கொழுப்பு என்னும் பொருளில் வரும்.
செழுஞ்செய் நெல்லு, செழுந்தடி தின்ற.

**ஒருபொருள் ஒரு சொல்லாகிய உரிச்சொற்கள்**

**160.** **(1)** உரு என்னும் உரிச்சொல் உட்குப் பொருளில் வரும்.
உருகெழு ஞாயிறு.

**(2)** பழுது என்னும் உரிச்சொல் பயமின்மைப் பொருளில் வரும்.
பழுதுகழி வாழ்நாள்.

**(3)** முழுது என்னும் உரிச்சொல் எஞ்சாமைப் பொருளில் வரும்.
மண்முழுதாண்ட.

**(4)** வறிது என்னும் உரிச்சொல் சிறிது என்னும் பொருளில் வரும்.
வறிது வடக்கிறைஞ்சிய.

**(5)** நன்று என்னும் உரிச்சொல் பெரிது என்னும் பொருளில் வரும்.
நன்று மரிதுற்றனையாற் பெரும.

**(6)** அரி என்னும் உரிச்சொல் ஐம்மைப் பொருளில் வரும்.
அரிமயிர்.

**(7)** வய என்னும் உரிச்சொல் வலி என்னும் பொருளில் வரும்.
வயமான்.

**(8)** வாள் என்னும் உரிச்சொல் ஒளி என்னும் பொருளில் வரும்.

**(9)** உசா என்னும் உரிச்சொல் சூழ்ச்சிப்பொருளில் வரும்.
உசாத்துணை.

**(10)** ஐ என்னும் உரிச்சொல் வியப்புப் பொருளில் வரும்.
ஐதேகாமம் யானே.

**(11)** வை என்னும் உரிச்சொல் கூர்மைப் பொருளில் வரும்.
வைநுனைப்பகழி.



RangaRakes tamilnavarasam.com

### பயிற்சி 22

கீழ்க்காணுஞ் சொற்றொடர்களிலே உள்ள உரிச் சொற்களின் பொருள்களை எழுதுக:-

| | | | |
|---|---|---|---|
| (1) | கடிநுனைப் பகழி. | (2) | நளிகடற் றண்சேர்ப்பன். |
| (3) | தடமருப் பெருமை. | (4) | கடுமான். |
| (5) | செங்கேழ்மென்கொடி. | (6) | செழும்பல் குன்றம். |
| (7) | கயந்தலை மடப்பிடி. | (8) | தடங்கோட் டெருமை. |
| (9) | கடிமாரந் தடியுமோசை. | (10) | நாமநீர் வைப்பு. |

# பகுதி II. உரையமைப்பு

## அதிகாரம் 8

## வாக்கிய வகுப்பு

**161.** **வாக்கியமாவது** முடிந்த கருத்துக்கொண்ட தொடர் மொழியாமென முன் கூறப்பட்டது. வாக்கியங்களுள்ளே கூற்றை உணர்த்துவது கூற்று வாக்கியம் என்றும், வினாவை உணர்த்துவது வினாவாக்கியம் என்றும், ஏவலை உணர்த்துவது ஏவல்வாக்கியம் என்றும், வியங்கோளை உணர்த்துவது வியங்கோள் வாக்கியம் என்றும், உணர்ச்சிமிகுதியை உணர்த்துவது உணர்ச்சிமிகுதி வாக்கியம் என்றுங் கூறப்படும்.

| | | |
|---|---|---|
| (1) | கடவுள் எம்மைக் காக்கின்றார். | கூற்று வாக்கியம். |
| (2) | நீர் எங்குச் சென்றீர்? | வினாவாக்கியம் |
| (3) | அதனைச் செய். | ஏவல் வாக்கியம். |
| (4) | இறைவன் என்மீது கருணைசெய்க | வியங்கோள் வாக்கியம். |
| (5) | இதன் புதுமை என்னே! | உணர்ச்சிமிகுதி வாக்கியம். |

**162.** ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை என்னும் இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்றனைப்பற்றிப் பேச்சு எழுந்தால், அது எழுவாய் என்றும், அவ்வெழுவாயைப்பற்றி யாதுங் கூறினால், அக்கூறும் பகுதி பயனிலை என்றுங் கூறப்படும்.

ஒரு வாக்கியத்தில் எழுவாய் முன்னும் பயனிலை பின்னுமாய் வருதல் இயல்பு. சிலவாக்கியங்களில் அவை முறைமாறியும் வரும்.





சிலவாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாய் நில்லாது தொக்குநிற்கும். அவ்வாறு தொக்கு நிற்கும் எழுவாய் **தோன்றா எழுவாய்** எனப்படும்.

மேலுள்ள பிரிவில்,

(1) இல், 'கடவுள்' எழுவாய், 'எம்மைக் காக்கின்றார்' பயனிலை.
(2) இல், 'நீர்' எழுவாய், 'எங்குச் சென்றீர்' பயனிலை.
(3) இல், (நீ) தோன்றா எழுவாய், 'அதனைச் செய்' பயனிலை.
(4) இல், 'இறைவன்' எழுவாய், 'என்மீது கருணைசெய்க' பயனிலை.
(5) இல், 'இதன் புதுமை' எழுவாய், 'என்னே' பயனிலை.

**163.** வாக்கியங்கள் தனிவாக்கியம், கலப்பு வாக்கியம், தொடர் வாக்கியம் என்னும் மூன்று வகைகளாக வகுக்கப்படும்.

(1) **தனிவாக்கிய**மாவது வினையெச்சங் கொள்ளாதுங் கொண்டும் ஒரு பயனிலையாலே முடியும் வாக்கியமாம்.

| | |
|---|---|
| அவன் வந்தான். | வினையெச்சங் கொள்ளாது முடிந்தது. |
| அவன் நடந்து போனான். | வினையெச்சங் கொண்டு முடிந்தது. |
| அவன் வர யான் சென்றேன் | " " " |

(2) கலப்பு வாக்கியமாவது தலைமைத்தொடர் ஒன்றோடு துணைத் தொடர் ஒன்றோ பலவோ உள்ளவாக்கியம். அத் துணைத்தொடர் பெயர்ப் பொருட்டொடர், பெயரெச்சப் பொருட்டொடர். வினையெச்சப் பொருட் டொடர் எனமூன்று வகைப்படும். பெயரெச்சப் பொருட்டொடர் தலைமைத் தொடரிலுள்ள யாதாயினும் ஒருபெயர்க்கு அடையாயும், வினையெச்சப் பொருட்டொடர் அதன்கண்ணுள்ள யாதாயினும் ஒருவினைக்கு அடை யாயும் நிற்கும்.

(i) தமிழ் கற்றார் மாண்புறுவர் என்பது எல்லாரும் அறிந்ததொரு விடயம். இங்கு, 'தமிழ்கற்றார் மாண்புறுவர் என்பது' என்னுந் துணைத்தொடர் பெயர்ப்பொருளில் 'எல்லாரும் அறிந்த தொரு விடயம்' என்னுந் தலைமைத்தொடர்ப் பயனிலைக்கு எழுவாயாய் நிற்றல் காண்க.

(ii) கம்பர் கல்வியிற் பெரியர் என்பதை அறியாதார் இல்லை. இங்கு, 'கம்பர் கல்வியிற் பெரியர் என்பது' என்னுந் துணைத் தொடர் பெயர்ப் பொருளிலே தலைமைத் தொடரிலுள்ள அறியா என்னும் வினைக்குச் செயப்படுபொருளாய் நிற்றல் காண்க.

(iii) அவர் தமிழ் கற்றார் என்ற கூற்றை நீ நம்பவில்லை. இங்கு, 'அவர் தமிழ் கற்றார் என்ற' என்னுந் துணைந்தொடர் பெயரெச்சப் பொருளிலே தலைமைத் தொடரிலுள்ள 'கூற்று' என்னும் பெயர்க்கு அடையாய் நிற்றல் காண்க.

(iv) மகன் வந்தானெனத் தந்தை உவந்தான். இங்கு, "மகன் வந்தான் என" என்னுந் துணைத்தொடர் வினையெச்சப் பொருளிலே தலைமைத்தொடரிலுள்ள 'உவந்தான்' என்னும் வினைக்கு அடையாய் நிற்றல் காண்க.



RangaRakes
tamilnavarasam.com

**(3)** **தொடர் வாக்கிய**மாவது ஒத்த தொடர்கள் பல தொடர்ந்து முடியும் வாக்கியம். அது கூட்டுப்பொருளையாதல், முரண்பொருளையாதல், உறழ்ச்சிப்பொருளையாதல், அனுமானப்பொருளையாதல் கூறும்.

**(i)** கந்தன் அரிசி முதலியன கொணர்ந்தான்; முருகன் பூ முதலியன கொணர்ந்தான்; வேலன் கூறை முதலியன கொணர்ந்தான்; மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டினான். (கூ.பொ.)

**(ii)** அவன் எனக்குப் பிழைசெய்து வெகுளச் செய்தான் ; எனினும், யான் அவன் பிழைகளைப் பொறுத்தேன். (மு.பொ.)

**(iii)** உள்ளே வா; அல்லது, வெளியே போ. ( உ.பொ.)

**(iv)** அவன் பிடிவாதமாய் நின்றான் ; ஆகையால் அவன்கடியப்பட்டான். (அ.பொ.)

**164.** ஒரு வாக்கியத்தின் எழுவாய் பல சொற்களால் ஆயதெனின், அதன்கண்ணுள்ள சிறப்புச்சொல் **எழுவாய்ச் சொல்** எனப்படும். அவ்வெழுவாய்ச்சொல் பெயர்ச்சொல்லாயாதல் பெயர்ப்பொருள்பட வருஞ் சொற்கூட்டமாயாதல் இருக்கும்.

**(i)** அடியாத மாடு பணியாது. அடியாத மாடு என்னும் எழுவாயில், மாடு என்னுஞ் சொல் சிறப்புச் சொல்லாதல்பற்றி எழுவாய்ச் சொல்.

**(ii)** ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டும். 'ஆக்கப் பொறுத்தவன்' என்பது பெயர்ப்பொருள்பட வருஞ் சொற்கூட்டமாதல் பற்றி எழுவாய்ச்சொல்.

**(iii)** இட்டுக்கெட்டார் எங்குமே இல்லை. 'இட்டுக்கெட்டார்' என்பது பெயர்ப் பொருள்பட வருஞ் சொற்கூட்டமாதல்பற்றி எழுவாய்ச்சொல்.

**165.** ஒரு வாக்கியத்தின் எழுவாய்ச்சொல்லை விசேடித்து நிற்குஞ் சொற்கள் எல்லாம் அதன் விசேடணம் எனப்படும்; அதன் அடை எனினும் ஒக்கும். அவ்வெழுவாய்ச் சொல்லிற்குப் பெயரெச்சமாதல், பெயரெச்சப் பொருளில்வந்த சொற்கூட்டமாதல், அ,இ,உ மற்றை முதலிய இடைச் சொற்களாதல், உறு, தவ முதலிய உரிச் சொற்களாதல் அடையாகும்.

**(i)** அழுதபிள்ளை பால் குடிக்கும். அழுத என்னும் பெயரெச்சம் எ. அடையாயிற்று

**(ii)** பதறிச்செய்கிற காரியஞ் சிதறிக் கெட்டுப்போகும். 'பதறிச் செய்கிற' என்னும் பெயரெச்சப் பொருளில் வந்த சொற்கூட்டம் எ. அடை யாயிற்று.

**(iii)** அக்கந்தன் வந்தான். அ என்னும் இடைச்சொல் எ. அடையாயிற்று.

**(iv)** தவப்பல வந்தன. தவ என்னும் உரிச்சொல் எ. அடையாயிற்று.

**166.** ஒரு வாக்கியத்திற்கு ஒரு சொல்லாதல் பல சொல்லாதல் பயனிலையாக வரும். ஒரு சொற் பயனிலைகள் பெயர்ப்பயனிலை, வினைப் பயனிலை என இருவகைப்படும்.

**(i)** அவன் கந்தன், கந்தன் என்பது என்பது பெயர்ப்பயனிலை





**(ii)** கந்தன் வந்தான். வந்தான் என்பது வினைப்பயனிலை

**(iii)** முருகன் கழகத்திற்குப் போகவில்லை. கழகத்திற்குப் போகவில்லை என்பது பலசொற் பயனிலை.

**167.** பலசொற் பயனிலைகளிற் சிறந்த சொல் பயனிலைச் சொல் எனப்படும். அது பெயராயாதல் வினையாயாதல் வரும்.

**(i)** அங்கு வாழ்ந்த குடிகள் சாலப்பல. 'சாலப்பல' என்னும் பல சொற் பயனிலையிற் பல என்பது பெயர்ப்பயனிலைச் சொல்.

**(ii)** அவன் விரைந்து ஏகினான். 'விரைந்து ஏகினான்' என்னும் பலசொற் பயனிலையில் ஏகினான் என்பது வினைப்பயனிலைச் சொல்.

**168.** ஒரு வாக்கியத்தின் பயனிலைச் சொல்லை விசேடித்து நிற்குஞ் சொற்கள் எல்லாம் அதன் விசேடணம் எனப்படும் அதன் அடை எனினும் ஒக்கும். அப்பயனிலைச் சொல்லிற்கு வினையெச்சமாதல் வினையெச்சப் பொருளில் வந்த சொற்கூட்டமாதல் மூன்று, நான்கு, ஐந்து, ஏழு என்னும் வேற்றுமையுருபு ஏற்ற பெயர்ச்சொற்களாதல், அவ்வுருபுகளை ஏற்ற சொற் கூட்டங்களாதல் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் காலப் பொருள்களை உணர்த்தும் இடைச் சொற்களாதல், நனி முதலிய உரிச் சொற்களாதல் அடையாகும்.

| | | |
|---|---|---|
| **(i)** | எனது தம்பி நடந்து போனான் | நடந்து என்னும் வினையெச்சம் ப. அடை. |
| **(ii)** | மழை பெய்யக்குளம் நிறைந்தது. | மழைபெய்ய என்னும் வினையெச்சப் பொருளில் வந்த சொற்கூட்டம் ப. அடை. |
| **(iii)** | அவன் வாளால் வெட்டினான். | வாளால் என்னும் மூன்றனுருபேற்ற பெயர்ச்சொல் ப. அடை. |
| **(vi)** | அவன் கந்தனுக்குக் கொடுத்தான். | கந்தனுக்கு என்னும் நான்கனுரு பேற்ற பெயர்ச்சொல் ப. அடை. |
| **(v)** | அவன் முருகனிற் பெரியன். | முருகனில் என்னும் ஐந்தனுருபேற்ற யெர்ச்சொல் ப. அடை. |
| **(vi)** | அவன் அதன்கட்சார்ந்தான். | அதன்கண் என்னும் ஏழனுரு பேற்ற பெயர்ச்சொல் ப. அடை. |
| **(vii)** | அவன் கரிய கந்தனிற்பெரியன். | கரிய கந்தனில் என்னும் ஐந்தனுரு பேற்ற சொற்கூட்டம் ப.அடை. |
| **(viii)** | அவன் அங்குச் சென்றான். | அங்கு என்னும் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் ப.அடை. |
| **(ix)** | எனது தாய் நனி வருந்தினாள் | நனி என்னும் உரிச்சொல் ப. அடை. |



RangaRakes
tamilnavarasam.com

**169.** செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களுட் சில பொருள் முற்றிய பயனிலைகளாயுஞ் சில பொருள் பயனிலைகளோடு சில பெயர்ச் சொற்கள் எழுவாயாய் நின்று இயைந்து ஒரு சொன்னீர்மைப்பட்டுப் பயனிலை முற்றிநிற்கும். அப் பெயர்சொல் **இயைபெயர்** எனப்படும்.

| | | |
|---|---|---|
| **(i)** | யான் வந்தேன். | வந்தேன் என்பது பொருள் முற்றி நின்ற வினைச்சொல். |
| **(ii)** | யான் அல்லன் | அல்லன் என்பது பொருள் முற்றாது நின்ற வினைச்சொல். |
| **(iii)** | யான் நீ அல்லன் | இங்கு நீ என்னும் பெயர்ச்சொல் எழுவா யாய் நின்று அல்லன் என்பதனோடு இயைந்து ஒரு சொன்னீர்மைப்பட்டு யான் என்னும் எழுவாய்க்குப் பொருள்முற்றி நின்ற பயனிலையாகும். |

**170.** செயப்படுபொருள் குன்றாத வினைச் சொற்கள் செயப்படுபொருள் களை ஏற்றே பொருள் முற்றிநிற்கும். செயப்படுபொருள் பெயர்ச்சொல் லாயாதல் பெயர்ப் பொருள்படவருஞ் சொற்கூட்டமாயாதல் இருக்கும்.

**(i)** யான் அவனைக் கண்டேன். "அவன்" என்னும் பெயர்ச்சொல் செயப்படுபொருள்.

**(ii)** யான் விரைந்து ஓடினவனைக் கண்டேன். விரைந்து ஓடினவன்' என்னும் பெயர்ப் பொருள்பட வருஞ் சொற்கூட்டஞ் செய்யப்படு பொருள்

**171.** ஒரு வாக்கியத்திலுள்ள செயப்படுபொருளை விசேடித்து நிற்குஞ் சொற்கள் எல்லாம் அதன் விசேடணம் எனப்படும்: அதன் அடை எனினும் ஒக்கும். அச்செயற்படு பொருளுக்கு எழுவாய்க்குப்போலப் பெயரெச்ச மாதல், பெயரெச்சப் பொருளில் வந்த் சொற்கூட்டமாதல், அ,இ, உ, மற்றை போன்ற இடைச் சொற்களாதல் உறு, தவ முதலிய உரிச்சொற் களாதல் அடையாய் வரும்.

**(i)** அவன் ஓடம் எருதைக் கலைக்கின்றான். "ஓடும்" என்னும் பெயரெச்சஞ் செ.அடை.

**(ii)** அவன் பாய்ந்து ஓடும் எருதைக் கலைக்கின்றான். 'பாய்ந்து ஓடும்' என்னும் பெயரெச்சப் பொருளில் வந்த சொற்கூட்டஞ் செ.அடை.

**(iii)** அவன் அந்நூலைக் கற்றான். அ என்னும் இடைச்சொல் செ.அடை.





**(iv)** அந்நங்கை நளிகடலை நீத்தினாள். நளி என்னும் உரிச்சொல் செ.அடை.

**172. தனி வாக்கிய வகுப்பு**

**வினா** பின்வருந் தனி வாக்கியங்களை வகுக்க:-

**(1)** தன் முதுகு தனக்குத் தெரியாது.
**(2)** ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
**(3)** இறைவன் எல்லாமானான்.
**(4)** சின்னப்பாம்பையும் பெரிய தடிகொண்டடி .
**(5)** சென்மத்திற் பிறந்தது செருப்பால் அடித்தாலும் போகாது.
**(6)** அவன் வாயில் வரும் பொய் தவப்பல.
**(7)** ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும்.



RangaRakes
tamilnavarasam.com

| எண் | எழுவாய் | | பயனிலை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எழுவாய்ச் சொல் | அடை | பயனிலைச்சொல் வினை | பெயர் | செயப்படு பொருள் | செ. பொ அடை | இயை பெயர் | பயனிலைச் சொல்லின் அடை | |
| (1) | தன் முதுகு | | தெரியாது | | | | | தனக்கு | |
| (2) | கண்ணீர் | ஏழை அழுத | ஒக்கும் | | வாள் | கூரிய | | | |
| (3) | இறைவன் | | ஆனான் | | | | எல்லாம் | | |
| (4) | (நீ) | | அடி | | பாம்பு | சின்ன | | பெரிய தடி கொண்டு | |
| (5) | செம்மைத்திற் பிறந்தது | | போகாது | | | | | செருப்பால் அடித்தாலும் | |
| (6) | பொய் | அவன் வாயில் வரும் | | பல | | | | தவ | |
| (7) | (ஒருவன்) | | சொல்ல வேண்டும் | | ஒன்பது பொய் | | | ஒரு பொய்யை மறைக்க | |





## கலப்பு வாக்கிய வகுப்பு

**173.** ஒரு கலப்பு வாக்கியத்தை வகுக்கும் போது தலைமைத் தொடரையுந் துணைத்தொடரையுங்கண்டு அத்துணைத் தொடர் அத்தலைமைத் தொடரோடு என்ன தொடர்பில் இருக்கின்றன தெனத் துணிதல் வேண்டும். அதன்பின், தனி வாக்கியங்களை வகுப்பதுபோல் அத்தொடர்கள் இரண்டையுந் தனித்தனி வகுக்கலாம். அத்தொடர்களைத் தொடுக்கும் இடைச்சொல் **தொடுசொல்** எனப்படும்.

**வினா** பின்வருங் கலப்பு வாக்கியங்களை வகுக்க:

**(1)** அறஞ் செயவிரும்பு என்பதை நீ பேணுகின்றிலை.

**(2)** மகன் இறந்தானெத் தந்தை கவன்றான்.

**விடை (1)** **(i)** நீ பேணுகின்றிலை – தலைமைத்தொடர்

**(ii)** அறஞ் செயவிரும்பு என்பது. – தலைமைத்தொடரிலுள்ள பேணுகின்றிலை என்னும் வினைக்குச் செயப்படுபொருளாய் நிற்கின்றது.

**(2)** **(i)** தந்தை கவன்றான் .– தலமைத்தொடர்

**(ii)** மகன் இறந்தானென – தலைமைத் தொடரிலுள்ள "கவன்றான்" என்னும் வினைக்கு அடையாய் நிற்கின்றது.

இக்கலப்பு வாக்கியங்களினுடைய தொடர்களின் வகுப்புப் பின்வருமாறு:–

| எண் | எழுவாய் | | | பயனிலை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடு சொ. | எ. சொ. | எ. அ. | ப. சொ. வினை | ப. சொ. பெய | செ. பொ. | செ. பொ. அடை | இ. பெ. | ப. சொ அடை |
| 1,(i) | | நீ | | பேணு கின்றிலை | | | | | |
| (ii) | என்பது | (நீ) | | விரும்பு | | | | | அறஞ் செய |
| 2,(i) | | தந்தை | | கவன்றான் | | | | | |
| (ii) | என் | மகன் | | இறந்தான் | | | | | |



RangaRakes
tamilnavarasam.com

## தொடர்வாக்கிய வகுப்பு

**174.** ஒரு தொடர்வாக்கியத்தை வகுக்கும்போது அதன் கண்ணுள்ள ஒத்த தொடர்களைக்கண்டு அவற்றைத் தனித்தனி வகுக்கலாம். அவற்றைத் தொடுக்கும் இடைச் சொல் **தொடுசொல்** எனப்படும்.

**வினா:-** பின்வருந் தொடர் வாக்கியங்களை வகுக்க:-

(1) ஆங்கிலேயன் ஒருவன் காட்டகத்துச் சென்று வழிதவறினான்; எனினும் மனஞ் சோர்ந்தானல்லன்.

(2) அவனாதல் இவனாதல் இதனைச் செய்திலன்

**1.** ஆம் வாக்கியம்

(i) ஆங்கிலேயன் ஒருவன் காட்டகத்துச் சென்று வழி தவறினான்;

(ii) எனினும் அவன் மனஞ் சோர்ந்தானல்லன் என்னும் இரண்டு தொடர்களாலாயது.

**விடை** 2 ஆம் வாக்கியம்

(i) அவன் இதனைச் செய்திலன்,

(ii) இவன் இதனைச் செய்திலன் என்னும் இரண்டு தொடர்களாலாயது.

அவற்றின் வகுப்புப் பின்வருமாறு:-

| எண் | எழுவாய் | | | பயனிலை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடு சொ. | எ. சொ. | எ. அ. | பயனிலைச்சொல். வினை | பயனிலைச்சொல். பெயர் | செ. பொ | செ. அ | இயைபெ. | ப.சொ. அ. |
| 1,(i) | | ஆங்கிலேயன் ஒருவன் | | வழி தவறினான் | | | | | காட்டகத்துச் சென்று |
| (ii) | எனினும் | (அவன்) | | மனஞ் சோர்ந்தானல்லன் | | | | | |
| 2,(i) | ஆதல் | அவன் | | செய்திலன் | | இது | | | |
| (ii) | ஆதல் | இவன் | | செய்திலன் | | இது | | | |





### பயிற்சி 23

**பின்வரும் வாக்கியங்களை வகுக்க**

(1) கருப்பங் கட்டியிலுங் கல் இருக்கும்.

(2) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமா?

(3) அவர் தம்முடைய கடமைகளைச் செவ்வெனவே செய்தார்.

(4) அவர் நோய் தீர்ந்தார் என்பதை அறிந்து யான் மகிழ்ச்சி அடைந்தேன்.

(5) கந்தனாதல் முருகனாதல் இங்கு வரலாம்.

(6) அவர் குற்றம் யாதுஞ் செய்யவில்லை என்பதை நம்புகிறாயில்லை.

(7) அக் குற்றவாளி யாதுங் கூறாதிருந்தான்: அதனாலே அவன் தண்டிக்கப்பட்டான்.

(8) உனது நெஞ்சு கல்லானதென்பதை யார் அறியார்?

(9) வழிப்போக்கன் ஒருவன் அவ்வீதியில் விழுந்து பல்லுடைந்தான்: எனினும் மயக்கங் கொள்ளவில்லை.

(10) அப் பெரியமனிதன் வேலையில்லாது வருந்தும் அவ்விளைஞனைக் கூவி அழைத்து, "நீ பல்கலைக்கழகஞ் சென்று பட்டம் பெற்று வருவாயாயின், யான் உனக்கு நல்லவேலை தருவேன்" என்றார்.

(11) அவர் சட்டென வெகுளும் இயல்புடையவர் என்பதை அறியாது அவரிடம் சென்று வார்த்தை ஆடியபோது அவள் அவரால் அடிக்கப் பட்டாள்.

(12) தனதுதந்தை தன்மீது அன்பு குறையான் எனக் கண்ட மைந்தன் புகைப்படம் பார்த்து வருதற்கு அனுமதி கேட்டான்

(13) கம்பர் கல்விச்செல்வம் பெற்றும் பொருட் செல்வம் இல்லாது வருந்தினார்; அதனை அறிந்த சடையப்பர் என்னும் பெருவள்ளல் அவருக்குப் பெருநிதி வழங்கினார்.

(14) இராமாயணம் என்னும் நூல் தமிழரின் பழக்கவழக்கங்களைக் கூறுகின்றது; ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கம்பர் என்னும் புலவராற் செய்யப்பட்டது; எனினும், அதனைக் கல்லாதாரும் எமது தமிழ்நாட்டில் உளர்.

(15) அவன் இதற்குமுன் மரணசாதனவுறுதி எழுதி வைத்தான் என்பது எல்லாரும் அறிந்தொரு விடயம்.

(16) நீயோ அவனோ யாவன் இதனைச் செய்தவன்?

(17) ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப் பட்ட பிரமசாரியம் முதலிய நிலைகளினின்று அவ்வற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.





RangaRakes

tamilnavarasam.com

(18) துறவறமாவது இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம்.

(19) செவ்விபெற மலர்ந்து வைத்தும் நாற்றமில்லாத பூச்சூட்டப் படாத வாறு போல நூலைக் கற்றுவைத்துஞ் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப்படார்.

(20) ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சி உண்டாம்; அது ஒழிதற்குக் காரணமாகிய ஊழான் மடி உண்டாம்.

(21) பிறர்க்குக் குற்றந்தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம்.

(22) தம் மக்களது சிறு கையாலே அளாவப்பட்ட சோறு சுவையான அமிழ்தத்திலும் மிக்க இனிமையுடைத்து.

(23) இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை.

(24) தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான் எங்ஙன மாளு மருள்.

(25) உடன் பிறந்தார் சுற்றத்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி – உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

(26) பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள் – கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

(27) உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங் கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே – வண்டுமலர்ச்
சேர்க்கை விரும்புஞ் செழும் பொழில்வாய்
வேம்பன்றோ காக்கை விரும்புங் கனி.

(28) ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகடாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிகளாடி
ஏழிரண்டாண்டின் வாவென்றே வினவினனரச னென்றான்.



## அதிகாரம் 9.

# வாக்கிய மாற்றம்

**175.** வாக்கிய மாற்றங் கட்டுரை எழுதுதற்குப் பலவகைக் கூற்றுக் களைக் கற்பிக்குமாகையாற் சிறந்த பயிற்சியாகும்.

### 1. பொருவுப் பொருளில்வரும் வாக்கியங் களின் மாற்றம்

**176.** பொருவுப் பொருளை (1) I என்னும் இரண்டனுருபின்மேற் போல் என்னுஞ் சொல்லுருபு கொடுத்தும், (2) இல், இன் என்னும் ஐந்தனு ருபுகளின்மேல் உம் என்னும் இடைச்சொல் கொடுத்துங் கொடாதும் , (3) இல், உள் என்னுங் கூட்டிப் பிரிக்கும் பொருள்கொண்ட ஏழனுருபுகள் கொடுத்தும் பலவாறு உணர்த்தலாம்.

**வினா** பின்வரும் வாக்கியங்களின் பொருளை மாற்றாது பொருவு வகையை மாற்றுக:–

(1) மைசூர் சிதம்பரத்திலுங் குளிர் மிக்கது.
(2) சிலப்பதிகாரந் தமிழ்நூல்களுட் சிறந்த காவியம் .
(3) ஈயம் எல்லா உலோகங்களுள்ளும் பாரம் மிக்கது.
(4) கந்தன் முருகனைப்போல நுண்ணறிவு உள்ளவன்.
(5) சென்னை இந்தியாவிலுள்ள பெருநகரங்களுள் ஒன்று.
(6) புலவர் சிலர் கம்பரைப் போலாயினும் பெரியர்,

**விடை** (1) சிதம்பரம் மைசூரைப்போற் குளிர் மிக்கதன்று
(2) சிலப்பதிகாரம் பிறிதுயாதுந் தமிழ்க் காவியத்திலுஞ் சிறந்தது, தமிழிலுள்ள பிறிது காவியம் யாதுஞ் சிலப்பதிகாரம் போற் சிறந்த தன்று.
தமிழிலுள்ள காவியங்களுட் சிலப்பதிகாரமே சிறந்தது.
(3) ஈயம் பிற உலோகங்கள் எல்லாவற்றிலும் பாரம் மிக்கது, ஈயம்போற் பிறிது உலோகம் யாதும் பாரமிக்க தன்று. ஈயம்போற் பிற உலோகங்களுள் யாதும் பாரமிக்க தன்று.
(4) கந்தன் முருகனிலும் நுண்ணறிவுள்ளவன் அல்லன்.
(5) சென்னை வேறுபல இந்திய நகரங்களிலும் பெரிது. மிகச் சில இந்திய நகரங்களே சென்னையைப்போற் பெரியன.
(6) கம்பர் வேறுபுலவர் சிலரினுதும் பெரியரல்லர்.
கம்பர் எல்லாப் புலவருள்ளும் பெரியரல்லர்



RangaRakes tamilnavarasam.com

**பயிற்சி 2**

கீழ்க்காணும் வாக்கியங்களின் பொருளை மாற்றாது பொருவை மாற்றதக்க வகைகளிலே மாற்றி எழுதுக:–

(1) இலங்கையில் அம்பலவி மாம்பழமே சிறந்தது.
(2) உலகில் அமெரிக்காவிற்கே மிகப் பெரிய கடற்படை உண்டு.
(3) அருச்சுனனைப்போல் வில்வீரன் உலகில் ஒரு போதும் இருக்க வில்லை.
(4) வழுவழுத்த உறவிலும் வயிரம்பற்றிய பகை நன்று.
(5) புகழேந்தி வேறு புலவர் சிலரிலும் பெரியரல்லர்.
(6) யாழ்ப்பாணம் இலங்கையிலுள்ள பெரும் பட்டினங்களுள் ஒன்று.
(7) நீ அறிந்த அளவு நான் அவனை அறிவேன்.
(8) நாயிலும் இழிந்த விலங்கு இல்லை.
(9) இம்மரம் அம்மரத்திலும் இளைது.
(10) உலோகங்களுள் இரும்பே பயன்மிக்கது.
(11) மாணாக்கருள்ளே மிகச்சிலரே அக்கூட்டத்திற் கலந்தனர்.
(12) நேரேச்சு மறையன்பிலுஞ் சிறந்தது.
(13) வடமொழியிற் சகுந்தலைபோற் சிறந்த நாடகம் யாதும் இல்லை
(14) மக்கள் சிலரிடத்துக் கல்விச்செல்வத்திலும் பொருட் செல்வங் கூடுதலாகக் காணப்படும்.
(15) கந்தனிலும் முருகன் பொருளிலன்.
(16) தமிழர் சிங்களவரிலுங் குணங் கெட்டவரல்லர்.
(17) உலகத்திற் பேசும் மொழிகளுள்ளே தமிழே பழையது.
(18) இந்நீர் அந்நீரைப்போலத் தண்ணிது.
(19) வீமன்போல் உடனலஞ் சிறந்தவன் உலகில் இருக்க வில்லை.
(20) கோணிக் கொடுப்பதிலுங் கோணாமைக் கொடுப்பது மேல்.

### 2. உடன்பாட்டெதிர்மறை வாக்கியங்களுள் ஒன்றை ஒன்றாக மாற்றுதல்

**177.** உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாகவும் எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாகவும் மாற்றும் வகைகள் கீழ்க் காணப்படும்:–

**வினா 1.** மேல்வரும் உடன்பாட்டு வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக:–





(1) முயற்சி திருவினை ஆக்கும்.
(2) மழை பெய்தாற் பயிர் வளரும்.
(3) கோலாடக் குரங்கு ஆடும்.
(4) அவன் என்னிலுஞ் சிறந்தவன்.
(5) தமிழ்ப் புலவர்களுட் கம்பரே சிறந்தவர்.

**விடை**

(1) முயற்சி திருவினை ஆக்காதொழியாது.
(2) மழை பெய்யாக்காற் பயிர் வளரா; மழை பெய்யாக் கடைப்பயிர் வளரா; மழை பெய்யாவழிப் பயிர்வளரா; மழை பெய்யாவிடத்துப் பயிர் வளரா; மழை பெய்தாற் பயிர் வளராதொழியா.
(3) கோலாடக் குரங்கு ஆடா தொழியாது: கோல் ஆடாமற் குரங்கு ஆடாது: கோல் ஆடாமே குரங்கு ஆடாது " கோல் ஆடாமை குரங்கு ஆடாது" கோல் ஆடாமைக்குக் குரங்கு ஆடாது.
(4) அவன் என்னிலுஞ் சிறந்திலனல்லன்" நான் அவனைப்போற் சிறந்த வனல்லன்.
(5) தமிழ்ப் புலவர்களுட் கம்பரைப்போற் சிறந்தவர் வேறொருவரும் இல்லை.

**வினா 2.** பின்வரும் எதிர்மறை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றுக:–

(1) அவன் அவ்வீட்டிற் பல ஆண்டுகளுக்கு வசிக்கவில்லை.
(2) நெருப்பில்லாமற் புகை இல்லை.
(3) இதனிற் சிறப்பாய் ஒருவருஞ் செய்யமாட்டார்,
(4) முதலிலார்க்கு ஊதியம் இல்லை.

**விடை**

(1) அவன் அவ்வீட்டிட் சில ஆண்டுகளுக்கு வசித்தான்.
(2) புகை உண்டெனில், நெருப்பு உண்டு.
(3) இதனில் இழிந்ததாய் எவருஞ் செய்வர்.
(4) ஊதியம் உள்ளவர் முதல் உள்ளவர்.



RangaRakes
tamilnavarasam.com

## பயிற்சி 25

**1.** கீழ்காணும் உடன்பாட்டு வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுவாக:–

**(1)** ஐயம் இட்டு உண்.
**(2)** உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
**(3)** உயிர்களைக் கொல்லுதல் பாவம் பயக்கும்.
**(4)** வெள்ளம் பள்ளத்தை நாடும்.
**(5)** நீ வந்தால், யான் செல்வேன்.
**(6)** கல்லின் மீது விழுந்தால், மண்டை உடையலாம்.
**(7)** ஒரு பணக்காரனே அத்தகைச் செலவைச் செய்யலாம்.
**(8)** அவன் சிலவேளைகளிலே தன் மூடத்தன்மையைக் காட்டுகின்றான்.
**(9)** கந்தன் வேலனிலும் பெரியவன்.
**(10)** தென்னிந்தியாவிற் சென்னையே மிகப் பெரிய நகரம்.
**(11)** என்னிடம் உள்ளவை இப்பொருள்களே.
**(12)** அவன் மேடையில் ஏறியதும் அவையினர் கை கொட்டினர்.
**(13)** அவன் குற்றஞ் செய்தவன் என்பதை எல்லாரும் உடன்பட்டனர்.
**(14)** அவனுக்கு அவன்மேற் பிரியம் என்பது எல்லாரும் அறிந்ததொரு செய்தி.

**2.** பின்வரும் எதிர்மறை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றுக:–
**(1)** பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்.
**(2)** பிறன்மனை புகாமை மறமெனத் தகாது.
**(3)** நல்லிணக்கமல்லது இன்பப் படுத்தாது.
**(4)** பெற்றோர்க்கு இல்லை சுற்றமுஞ் சினமும்.
**(5)** அவனை புகழாதார் ஒருவருமில்லை.
**(6)** யான் சிறிதும்மனங் கோணினே னல்லேன்
**(7)** என் வாழ்க்கையில் இதனில் இழிவான செயலை யான் காண வில்லை.
**(8)** இறைவன் அடியாரின் வேண்டுகோள்களுக்கு இரங்காது விடார்.
**(9)** அவன் எப்பொழுதாயினும் என்னிடம் வருவானென்று யான் நம்ப வில்லை,





**(10)** வழிதவறினோம் என்பதை நாம் உணரவில்லை.
**(11)** மழையில்லாமற் பயிர் வளராது.
**(12)** கந்தன் முருகனிற் சிறியனல்லன்.

### 3. தன்வினை பிறவினை வாக்கியங்களுள் ஒன்றை ஒன்றாக மாற்றுதல்

**178.** தன்வினை வாக்கியங்களைப் பிறவினை வாக்கியங்களாகவும் பிறவினை வாக்கியங்களைத் தன்வினை வாக்கியங்களாகவும் மாற்றும் வகைகள் கீழ்க் காணப்படும்:–

**வினா 1.** மேல்வரும் தன்வினை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு பிறவினை வாக்கியங்களாக மாற்றுக:
**(1)** பெண் ஒருத்தி தன் குழந்தையைச் சோறு உண்ணச் செய்தாள்.
**(2)** நான் அம்மானை வெருளுமாறு ஏவினேன்.
**(3)** நீ உன் எருதுகளை அடக்கும் வண்ணஞ் செய்தாய்.
**(4)** அந்நங்கை தன்யாழை ஆசிரியரால் இசைக்கச் செய்தாள்.
**(5)** குதிரைகளை ஓடச் செய்தற்குக் குதிரையுடையார் ஊழியரைக் கொண்டு பயிற்சி அளித்தனர்.

**விடை** **(1)** பெண் ஒருத்தி தன் குழந்தையைச் சோறுண்பித்தாள்.
**(2)** நான் அம்மானை வெருட்டினேன்.
**(3)** நீ உன் எருதுகளை அடக்கினாய்.
**(4)** அந்நங்கை தன்யாழை ஆசிரியரால் இசைப்பித்தாள்.
**(5)** குதிரைகளை ஓட்டுதற்குக் குதிரையுடையார் ஊழியரைக் கொண்டு பயிற்றுவித்தார்.

**வினா 2.** பின்வரும் பிறவினை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு தன்வினை வாக்கியங்களாக மாற்றுக.
**(1)** அவள் அப்பாவையை ஆட்டினாள்.
**(2)** அவன் அம்மரக்கொம்பைத் தாழ்த்தினான்.
**(3)** கந்தன் அக்கொடியவனைத் தன்னில்லத்திலிருந்து அகற்றினான்.
**(4)** அவள் அப்பணிப்பெண்ணைக்கொண்டு மா அரிப்பித்தாள்.
**(5)** குணங் குலத்தை அறிவிக்கும்.

**விடை** **(1)** அவள் அப்பாவையை ஆடச்செய்தாள்.
**(2)** அவன் அம்மரக்கொம்பைத் தாழச்செய்தான்.



RangaRakes tamilnavarasam.com

(3) கந்தன் அக் கொடியவனைத் தன்னில்லத்தி லிருந்து அகலச் செய்தான்.
(4) அவள் அப்பணிப்பெண்ணை மா அரிக்க ஏவினாள்.
(5) குணங்குலத்தை அறியச் செய்யும்.

**பயிற்சி 2**

**1.** பின்வருந் தன்வினை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு பிறவினை வாக்கியங்களாக மாற்றுக:-

(1) அவன் கரும்பலகையில் உள்ள எழுத்துக்களை அழியச் செய்தான்.
(2) அவன் வெல்லத்தை நீரிற் கரையச் செய்தான்.
(3) தாய் தன் குழந்தையைத் துயிலுமாறு ஏவினாள்.
(4) கொல்லன் இரும்பை உலையில் உருகச் செய்தான்.
(5) அவ்வாசிரியன் பிள்ளைகளைத் திருந்தும்படி ஏவினான்.
(6) அவன் அப் பம்பரத்தை இயக்கச் செய்தான்.
(7) அக்கொடியவன் மனைவி மக்களைப் பிரியும்படி ஏவினான்.
(8) அச்சிறுவன் ஒரு பந்தைத் தரையில் உருளுமாறு செய்தான்.
(9) அரசன் அப்பிராமணனைத் தன் பகைவனிடம் தூது போகுமாறு ஏவினான்.
(10) அவன் என்னை இந்தியாவிலிருந்து ஒரு பட்டை வாங்கும்படி ஏவினான்.
(11) அவன் ஓர் இலையை வெயிலிலிட்டு வாடச் செய்தான்.
(12) தலைமையாசிரியர் பிள்ளைகளைப் படிக்கச் செய்தார்,

**2.** மேல்வரும் பிறவினை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு தன்வினை வாக்கியங்களாக மாற்றுக:

(1) யானே அச்சபையை நடத்தினேன்.
(2) அவன் என்னைத் துயிலெழுப்பினான்.
(3) கந்தன் மகனுக்கு ஆசிரியனால் அடிப்பித்தான்.
(4) அப் பணிப்பெண் அவ்விளக்கைத் துலக்கினாள்.
(5) தனக்கு ஓர் இல்லந் தச்சனைக்கொண்டு அவன் அமைப்பித்தான்.
(6) அவன் வண்ணானைக்கொண்டு தன்னாடைகளை வெளுப்பித்தான்.
(7) அச்சீமாட்டி தன்னாடை யாபரணங்களை யெல்லாம் ஒரு பொந்திற் குள்ளே மறைத்தாள்.





(8) நீயிர் எல்லீரையும் அவள் தன் தாயைக்கொண்டு வைவிப்பாள்.
(9) அரசன் கள்ளரை நகர்காவலரைக் கொண்டு பிடிப்பித்தான்.
(10) அப்பெருமாட்டி தட்டானைக் கொண்டு தன் வளையலில் வைரம் பதிப்பித்தாள்.
(11) முகம் மனத்தில் உள்ளதை அறிவிக்கும்.
(12) அவள் கஞ்சியை ஆற்றினாள்.

## 4. செய்வினை செய்யப்பாட்டு வினை வாக்கியங்களுள் ஒன்றை ஒன்றாக மாற்றுதல்.

**179.** செய்யப்படுபொருள் குன்றாத வினையடிகள் பற்றித் தோன்றிய செய்வினைகளுக்கே ஒத்த செயப்பாட்டு வினைகள் உண்டு என்பதால், அத்தகைச் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங் களாக மாற்றும்போது, அச் செய்வினை வாக்கியத்திலுள்ள செயப்படு பொருளும் எழுவாய்க் கருத்தாவுஞ் செயப்பாட்டுவினை வாக்கியத்திற்கு முறையே எழுவாயாகவும் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாகவும் வரும்.

| **செய்வினை வாக்கியங்கள்** | **செயப்பாட்டுவினை வாக்கியங்கள்** |
|---|---|
| பூனை பால் குடிக்கும். | பால் பூனையாற் குடிக்கப்படும். |
| இதனை யார் செய்தார்? | இது யாராற் செய்யப்பட்டது? |
| காவற்காரன் கதவை திறந்தான். | கதவுகாவற்காரனாலே திறக்கப்பட்டது. |

**180.** செய்ப்படுபொருள் குன்றாத வினையடிகள் பற்றித் தோன்றிய பிற வினைகளுள்ளே சில இரண்டு செயப்படுபொருள்களை ஏற்கும். அத் தகைப் பிறவினைகளையே செய்வினைகளாகவுள்ள வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றும்போது உயிர்ப்பொருளைக் குறிக்குஞ் செயப்படுபொருள் எழுவாயாக வரின் உயிரில் பொருளைக் குறிக்குஞ் செயப்படுபொருள் எழுவாயாக நின்று வினையொடு சேர்ந்து ஒரு சொல்லாய் நிற்கும்" உயிரில் பொருளைக் குறிப்பது எழுவாயாக வரின், உயிர்ப்பொருளைக் குறிப்பது பெரும்பான்மை நான்கனுருபை ஏற்கும்.

| **செய்வினை வாக்கியங்கள்** | **செயப்பாட்டுவினை வாக்கியங்கள்** |
|---|---|
| அவன் முருகனைச் சோற்றை உண்பித்தான். | முருகன் அவனாற் சோறுண்பிக்கப்பட்டான்.<br>சோறு அவனாலே முருகனுக்கு உண்பிக்கப்பட்டது |



RangaRakes
tamilnavarasam.com

| | |
|---|---|
| அவன் பகைவரைச் சிறைச்சாலையை அடைவித்தான். | பகைவர் அவனாற் சிறைச்சாலை அடைவிக்கப்பட்டனர். சிறைச்சாலை அவனாற் பகைவருக்கு அடைவிக்கப்பட்டது. |
| அவன் பசுவைப் பாலைக் கறந்தான். | பசு அவனாற் பால் கறக்கப் பட்டது. பால் அவனாற் பசு விலிருந்து கறக்கப்பட்டது. |

**181.** செயப்பாட்டுவினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங் களாக மாற்றும்போது அச்செயப்பாட்டுவினை வாக்கியத்திலுள்ள மூன்றாம் வேற்றுமைக் கருத்தாகவும் எழுவாயுஞ் செய்வினை வாக்கியத்திற்கு முறையே எழுவாயாயுஞ் செயப்படுபொருளாயும் வரும்.

| **செயப்பாட்டுவினை வாக்கியங்கள்** | **செய்வினை வாக்கியங்கள்** |
|---|---|
| சோறு அவனால் அடப்பட்டது. | அவன் சோற்றை அட்டான். |
| முருகன் கந்தனால் வருவிக்கப்பட்டான். | கந்தன் முருகனை வருவித்தான் |

## பயிற்சி 27

**1.** பின்வருஞ் செய்வினை வாக்கியங்களைப் பொருள் மாறாதவாறு செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றுக:

**(1)** பூனை எலி பிடிக்கும்.
**(2)** கந்தன் ஒருவீடு கட்டுவிக்கின்றான்.
**(3)** அவன் அம்மரத்தில் ஓராணி பாய்ச்சினான்.
**(4)** முருகன் வண்டி ஓட்டுகின்றான்.
**(5)** எனது மருமகன் அச்செயலைச் செய்திலன்.
**(6)** எல்லாரும் அவனை வெறுக்கின்றனர்.
**(7)** எனது தந்தையார் எனக்கு ஒரு கடிதம் எழுதுவர்.
**(8)** இறைவன் பெருமையை யார் அறிவர்?
**(9)** அவன் யானையைக் காலை வெட்டினான் .
**(10)** மெலியாரை நலியற்க.
**(11)** எல்லாரும் பொருட்செல்வத்தை விரும்புவர்: சிலரே அதனை அடைவர்.
**(12)** நாம் அங்கு உன்னையும் அவனையுங் கண்டோம்.
**(13)** அவர்கள் என்னை என் பெயர் கேட்டார்கள்.
**(14)** ஒருவரும் அவனைக் கடிந்திலர்.





**(15)** முருகன் பத்து அணாப் பரிசுபெற்றான்.
**(16)** அவன் புதியவனை விருந்துண்பித்தான்.
**(17)** குணங் குலத்தை அறிவிக்கும்.
**(18)** தம்மாலே முடிவதைத் தாமே செய்தல் வேண்டும்.
**(19)** பூர்வபுண்ணியத்தாற் பொல்லாரும் பொருள்பெறுவர்.
**(20)** தம் வலியில்லோர் புகழ் எய்தார்.
**(21)** நீ அவ்விழாவை நடத்துவாயா?
**(22)** யான் என்மகனை ஓர் ஆசனத்தில் இருத்தினேன்.
**(23)** நாம் அவனுடைய சொற்பொலிவைக் கேட்க வேண்டும்.
**(24)** கல்விச் செருக்கு விடுக.
**(25)** தன்னை அறிந்தால், தலைவனை அறியலாம்.
**(26)** ஆசிரியன் மாணக்கனை இலக்கணங் கற்பித்தான்.
**(27)** தாய் குழந்தையைச் சோறுண்பித்தாள்.
**(28)** யார் உன்னைத் தமிழ்கற்பித்தார்?
**(29)** அவன் முருகனாற் கந்தனைக் கொல்வித்தான்.
**(30)** அவன் கந்தனாற் சுவைப் புரப்பித்தான்.

**2.** பின்வருஞ் செயட்பாட்டு வினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றுக:–

**(1)** இம்மரம் ஐந்தாண்டுக்கு முன்னரே நடப்பட்டது.
**(2)** . அவன் பகைவரால் இகழப்படுகின்றான்.
**(3)** அவனது தோற்றப் பொலிவால் எனது உள்ளம் ஈர்க்கப்படுகின்றது.
**(4)** யாரால் இப்பானை உடைக்கப்பட்டது?
**(5)** ஒரு சொல்லாயினும் அவனால் உரைக்கப்படவில்லை.
**(6)** பாண்டியன் கடற்படை சேரன் கடற்படையால் வெல்லப்பட்டது.
**(7)** அவ்வீடு தீயால் அழிக்கப்பட்டது.
**(8)** நாம் எல்லோராலுங் குறை கூறப்படுவோம்.
**(9)** சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.
**(10)** இக்கதவால் உட்புகும்படி வேண்டப் படுகின்றீர்.
**(11)** ஈயம் அவனால் உருக்கப்பட்டது
**(12)** நோயாளிக்கு மருந்து பருக்கப்பட்டது.
**(13)** அவ்வண்டியில் யாதொன்றும் என்னால் ஏற்றப் படவில்லை
**(14)** நாம் இருவேமும் உம்மாலேயே இணக்கப்படுவோம்.
**(15)** அவ்வளைகள் ஒரு தச்சனாற் பொருத்தப்பட்டன.
**(16)** கட்டளை இடப்படுக.



RangaRakes tamilnavarasam.com

(17) என்வீடு கொள்ளை யடிக்கப்பட்டது.
(18) தந்திகள் கம்பிகள் அறுக்கப்பட்டன .
(19) முயற்சியின்றி யாதொன்றும் பெறப்படாது.
(20) யான் அச்சங்கத்திற்குத் தலைவனாகத் தேரப்பட்டேன்.

### 5. கூற்று வினா வாக்கியங்களுள் ஒன்றை ஒன்றாக மாற்றுதல்

**182.** கூற்று வாக்கியங்களை வினா வாக்கியங்களாகவும் வினா வாக்கியங்களைக் கூற்றுவாக்கியங்களாகவும் மாற்றும் வகைகள் கீழ் காணப்படும்: –

**வினா 1.** பின்வருங் கூற்று வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக:

(1) முயற்சியுள்ள வாழ்கையிலுஞ் சிறந்ததொன்று இல்லை.
(2) முற்றிலும் நனைந்தவனுக்கு ஈரம் இல்லை.
(3) கற்கப்படாதனவற்றைக் கற்றலிற் காலங்கழித்தல் அறிவீனம்.
(4) ஊழிற் பெருவலி ஒன்றுமில்லை.

**விடை** (1) முயற்சியுள்ள வாழ்க்கையினுஞ் சிறந்ததொன்று உண்டா?
(2) முற்றிலிலும் நனைந்தவனுக்கு ஈரம் ஏது?
(3) கற்கப்படாதவற்றைக் கற்றலிற் காலங்கழிக்கலாமா?
(4) ஊழிற் பெருவலி ஒன்றுண்டா?

**2.** மேல்வரும் வினா வாக்கியங்களைக் கூற்றுவாக்கியங்களாக மாற்றுக: –

(1) உழுகிற மாடானால் உள்ளூரில் விலையாகாதா?
(2) நாம் பொருள் உண்டாக்குதற்கு மாத்திரம் இவ்வுலகிற் பிறந்தோமா?
(3) யான் இன்புற்றிருந்த அந்நாள்களை எப்போதாயினும் மறப்பேனா?
(4) அச் செய்கைசெய்தவன் பேடியல்லனோ?

**விடை** (1) உழுகிற மாடானால் உள்ளூரிலேயே விலையாகும்.
(2) நாம் பொருள் உண்டாக்குதற்கு மாத்திரம் இவ்வுலகிற் பிறக்கவில்லை.
(3) யான் இன்புற்றிருந்த அந்நாள்களை ஒரு போதும் மறவேன்.
(4) அச் செய்கைசெய்தவன் பேடியாவன்.





**பயிற்சி 28**

**1.** மேல்வருங் கூற்றுவாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக: –

(1) தன் வீட்டு விளக்கென்று முத்தமிடல் அறிவீனம்.
(2) தடி எடுத்தவரெல்லாம் வேட்டைக்காரராகார்.
(3) புலிக்குப் பிறந்தது பூனையாக மாட்டாது.
(4) வேலியே பயிரை மேய்ந்தால் விளைவை எதிர்பார்த்தல் அறிவீனம்.
(5) ஐயர் வருகிற வரையில் அமாவாசை காக்காது.
(6) ஓர் ஊருக்குப் பல வழி உண்டு.
(7) சருகைக் கண்டு தணல் அஞ்சாது.
(8) சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.

**2.** பின்வரும் வினா வாக்கியங்களைக் கூற்றுவாக்கியங்களாக மாற்றுக: –

(1) எட்டாப் பழக்கத்துக்குக் கொட்டாவி விட்டென்ன?
(2) எல்லாரும் நல்லரா; கல் எல்லாம் மாணிக்கமா?
(3) வியாதிக்கு மருந்துண்டு; விதிக்கு மருந்துண்டா?
(4) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமா?
(5) பிள்ளை பெற்றபின் அன்றோ பேரிட வேண்டும்?
(6) பசுக் கறுப்பானாற் பாலுங் கறுப்பா?
(7) நீர் விடாயால் இறப்பவனுக்குச் சோறு கொடுக்கலாமா?
(8) தானே கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தாற் கனியுமா?

### 6. கூற்று உணர்ச்சிமிகுதி வாக்கியங்களுள் ஒன்றை ஒன்றாக மாற்றுதல்

**183.** கூற்று வாக்கியங்களை உணர்ச்சிமிகுதி வாக்கியங்களாகவும் உணர்ச்சிமிகுதி வாக்கியங்களைக் கூற்றுவாக்கியங்களாகவும் மாற்றும் வகைகள் கீழ்காணப்படும்:

**வினா 1.** பின்வருங் கூற்றுவாக்கியங்களை உணர்ச்சிமிகுதி வாக்கியங்களாக மாற்றுக:

(1) இக்காட்சியின் அழகு வியக்கத்தக்கது.
(2) எம்மூர்ப்பிராமணர் கள்ளுண்கின்றார் என்பது எனக்கு இகழ்ச்சியாகும்.
(3) யான் அச்சொல்லின் பொருளைக் கூறாதுவிட்டது என் அறிவீனம்.



RangaRakes tamilnavarasam.com

விடை (1) இக்காட்சியின் அழகு என்னே!
(2) சை, எம்மூர்ப் பிராமணர் கள்ளுண்ணுகின்றாரே!
(3) யான் அச்சொல்லின் பொருளைக் கூறாதுவிட்டேனே!

**வினா 2.** பின்வரும் உணர்ச்சிமிகுதி வாக்கியங்களைக் கூற்றுவாக்கியங்களாக மாற்றுக:

(1) ஐயோ, எனது அண்ணன் இறந்தனனே!
(2) சை, இவன் வேகிறவீட்டிற் பிடுங்கினது இலாபம் என வாழ்கின்றானே!
(3) எனது இல்லத்திற் பாம்பு குடிகொண்டுவிட்டதே!

**விடை** (1) எனது அண்ணன் இறந்தனன் என்பது இரக்கத்தைத் தருகின்றது.
(2) இவள் வேகிற வீட்டிற் பிடுங்கினது இலாபம் என வாழ்கின்றமை இகழ்ச்சியைத் தருகின்றது.
(3) எனது இல்லத்திற் பாம்பு குடிக்கொண்டுவிட்டதென அஞ்சுகின்றேன்.

## பயிற்சி 29

**1.** மேல்வருங் கூற்றுவாக்கியங்களை உணர்ச்சி மிகுதி வாக்கியங்களாக மாற்றுக:–

(1) அவன் அத்தகைய செயல்களைச் செய்தான் என்பது நம்பத்தக்கதன்று.
(2) அவன் மிக்க அல்லல் பொருந்திய வாழ்க்கையைச் செலுத்துகின்றான்.
(3) உன்னைப் பத்தாண்டுகட்குமுன் சந்திக்கவில்லையே என வருந்துகின்றேன்.
(4) அவன் விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் இறங்கியவனானான்.
(5) இதன் புதுமை சொல்லும் வகையினதன்று.
(6) இவள் மீன்குஞ்சுக்கு நீச்சுப்பழக்க நினைந்தது வியப்பாகும்.
(7) அவள் வயிற்றுப்பிள்ளையைப் பறிகொடுத்தது இரங்கத்தக்கது.
(8) புலியொன்று என் கண்முன் வந்துநிற்கின்றது அச்சத்தைத் தருகின்றது.





கீழ்வரும் உணர்ச்சிமிகுதி வாக்கியங்களைக் கூற்று வாக்கியங்களாக மாற்றுக:

(1) அம்மா, இத்தகைப் பாவத்தைசெய்த நீயும் என்னைக் கண்டிக்கின்றாயே!
(2) அந்தோ, இப்பிணியாள் பிழையாளே!
(3) என்னைத் தாங்குவாரும் இல்லையே; என்னைத் தூக்குவாரும் இல்லையே!
(4) நாயேனையும் ஒரு பொருளாகக்கொண்டு ஆட்கொண்டனையே!
(5) உறங்கின நரிக்கு உணவு கிட்டாதென்பதை மறந்தேனே!
(6) ஐயோ, காலத்திற்கு ஏற்ற கோலங் கொள்ளாமல் வாழ்ந்து கேடுற்றேனே!
(7) இதனைச் செய்து முடித்து மகிழ்ச்சி பெறுதற்குக் காலந் தாழ்த்தி நின்றேனே!
(8) அவன் உடம்பைப் பொருளென்று கொண்டு அழிவு எய்தினானே!

### 7. பெயர்ச்சொல் வினைச்சொற்களுள் ஒன்றுக்குப் பதிலாக ஒன்றை இட்டு வாக்கியம் மாற்றுதல்

**184.** வாக்கியங்களிற் பெயர்ச்சொல் வினைச்சொல் வகைகளில் ஒரு வகைக்குப் பதிலாக ஒருவகையை இட்டு வாக்கியம் மாற்றுதல் கீழ்க் காணப்படும்.

**வினா** பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்கள் பெயர்ச்சொற்களாயின் வினைச் சொற்களாலும் வினைச்சொற்களாயின் பெயர்ச்சொற்களாலும் இடம் பெயர்த்து வாக்கியம் பொருள் மாறாதவாறு அவ்வாக்கியங்களை மாற்றுக:–

(1) மாடு ஓடிக் **களைத்தது.**
(2) அதன் **விலை** மூன்று அணா.

**விடை** (1) மாடு ஓடிக் களைப்பு அடைந்தது.
(2) அது மூன்று அணாவிற்கு விற்கப்படும்.



RangaRakes
tamilnavarasam.com

## பயிற்சி 30

1. மேல்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களிலுள்ள பெயர்ச் சொற்களை வினைச்சொற்களாலும் வினைச்சொற்களைப் பெயர்ச் சொற்களாலும் இடம்பெயர்த்து வாக்கியப் பொருள் மாறாதவாறு அவ் வாக்கியங் களை மாற்றி அமைக்க:–

(1) அவனுக்குக் கோயிலுக்குப் போக **விருப்பம்** இல்லை.
(2) எனது தம்பி தனது நடையால் எங் குலத்தைத் **தாழ்த்துகின்றான்.**
(3) நீ அங்குச்செல்ல யான் மனம் **ஒருப்படேன்.**
(4) அவனிடம் **உள்ளவை** நான்கு அணா.
(5) அவன் **பொரிக்கறி** தின்றான்.
(6) அவன் அக் கம்பத்தை **அசைத்தான்.**
(7) பறவைகள் **ஒழிக்கின்றன** எனச் செவியால் உணர்ந்து நின்றேன்.
(8) தன்மகன் **மரித்தமை** கேட்ட தந்தை மயங்கினான்.
(9) தன்மயிர் **நரைத்தன**வெனக் கண்ட தசரதன் துறவறம் பூண நினைந்தான்.
(10) அத்தாரு **ஏறிஇறங்கக்** கண்டு நின்றேன்.

### 8. தனி வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றுதல்.

**185.** தனி வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றும் முறைகள் பின்வரும் வினாவிடைகளால் அறியப்படும்:–

**வினா** மேல் வருந் தனி வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றுக:–

(1) அவனது சாந்தம் அவன் பெருமையைக் காட்டுகின்றது.
(2) அவனது மௌனம் அவன் குற்றத்தை நிறுவுகின்றது.
(3) என் நண்பர் எஞ்சித்தியைக் கேள்விப்படுவார்கள்.
(4) அவனது ஒளிப்பிடம் இன்னும் அறியப்படவில்லை.

**விடை** (1) அவன் சாந்தமாய் இருக்கின்றான் என்பது அவன் பெருமையைக் காட்டுகின்றது.
(2) அவனது மௌனம் அவன் குற்றஞ் செய்தான் என்பதை நிறுவுகின்றது.





(3) எந் நண்பர் நாஞ்சித்தி அடைந்தோமெனக் கேள்விப்படுவார்கள்.
(4) அவன் எங்கு ஒளித்திருக்கின்றான் என்பது இன்னும் அறியப்படவில்லை.

ந. க. இங்கு, தந்த தனி வாக்கியத்திலுள்ள ஒரு சொல்லையாதல் ஒரு சொற் கூட்டத்தையாதல் ஒரு துணைத்தொடராக விரித்துக் கலப்பு வாக்கியமாக மாற்றியமை காண்க.

## பயிற்சி 31

பின்வருந் தனி வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றுக:–

(1) பயிற்சியின் பெறுமானத்தை அறியாதார் இல்லை.
(2) எனது தம்பி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.
(3) இவை வியாபார முறைகள் ஆகாது.
(4) அவன் கூறிய கூற்றுக்கள் எல்லாவற்றையும் யான் மறைவிலே நின்று கேட்டேன்.
(5) நெடு நாளாக அவன் வறுமையை எதிர்பார்த்தேன்.
(6) அவன் வரும் நேரத்தை எனக்கு அறிவிப்பீரா?
(7) வள்ளுவர் பிறந்த காலந் தெளிவாய்த் துணியப்படவில்லை.
(8) பொருளின்மையே அவனது கல்வியின்மைக்குக் காரணம்.
(9) உமது பெயரைக் கூறுக.
(10) உனது ஊக்கமே உன் பெருமைக்குக் காரணம்.
(11) விவேகி எதிர்காலத்தை நோக்கி நிற்பான்.
(12) அவனது அறிவீனத்தைப்பற்றி நீ குறை கூறினாய்.
(13) அவன் இங்கு வந்ததன் காரணத்தை அவனிடம் வினவினேன்.
(14) நீர் வாழும் இடத்தைக் கூறுக.
(15) எனது தம்பி தான்படுந் துன்பங்கள் கூறி வருந்துகின்றான்.

### 9. கலப்புவாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக மாற்றுதல்.

**186.** கலப்பு வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக மாற்றும் முறைகள் பின்வரும் வினாவிடைகளால் அறியப்படும்:–

**வினா** மேல்வருங் கலப்புவாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக மாற்றுக:–



RangaRakes tamilnavarasam.com

(1) நீ எங்கே வாழ்கின்றாய் என்பதைக் கூறுக.
(2) நீ செல்கிறாய் என்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.
(3) யான் பல்லாண்டுகளுக்கு உயிரோடு இருப்பேன் என்பதில் எனக்கு ஐயம் உண்டு.

**விடை** (1) உனது மேல்விலாசத்தைக் கூறுக.
(2) நினது செல்கை எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.
(3) யான் பல்லாண்டுக்களுக்கு உயிரோடு இருப்பதில் என ஐயம் உண்டு.

**பயிற்சி 32**

பின்வருங் கலப்பு வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக மாற்றுக:
(1) அக்குற்றவாளி தான் குற்றம் யாதுஞ் செய்யவில்லை எனச் சாதிக்க முயன்றான்.
(2) நினது தந்தைபெயர் இன்னதெனக் கூறுக.
(3) பிறந்தபிள்ளை குருடென அறிந்ததுந் தந்தை உளம் நொந்தான்.
(4) இறைவன் உண்டு என்பதிற் சிலருக்கு ஐயம் உண்டு.
(5) திருவாசகம் இன்னகாலத்திற் பாடப்பட்டது என்பது இன்னுந் தெளிவாய்த் துணியப்பட வில்லை.
(6) யான் இழந்த புத்தகம் இன்னதெனத் தெரியவில்லை,
(7) இராவணன் பேசிய மொழி இன்னதென அறியப்படவில்லை.
(8) பகைவர் அரண் உடைத்தார் என்னுஞ் செய்தி ஊரெங்கும் பரவிற்று.
(9) அவனது முகமலர்ச்சி அவனது உள்ளந் தெளிவாய் இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.
(10) அவனுடைய பெற்றோர் அவன் காயமுற்றானெனக் கேள்விப்பட்டனர்.
(11) யான் எப்பொழுது திரும்புவேனெனக் கூறமாட்டேன்.
(12) இவனது அறிவு என்னே என அவன் இகழ்ந்தான்,
(13) எவ்வளவு காலத்திற்கு இங்கு இருப்பேன் என்பதை யான் நிச்சயிக்க வில்லை.
(14) தான் குற்றஞ் செய்திலனென மறுத்தான்.
(15) வெள்ளம் பள்ளத்தை நாடும் என்பதை வியப்பார் இல்லை.
(16) கள்வன் எங்கு ஒளித்திருக்கிறான் என்பது இன்னுந் தேரப்பட வில்லையா?
(17) யான் சித்தி அடைந்தேன் என்பது எனக்குப் பெரு மகிழ்ச்சி தர வில்லை.





(18) மகன் பரீட்சையிற் சித்தியடைந்தானெனக் கேள்வியுற்ற தந்தை உளங் குளிர்ந்தான்.

## 10. தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக மாற்றுதல்.

**187.** தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக மாற்றும் முறைகள் பின்வரும் வினாவிடைகளால் அறியப்படும்:–

**வினா** மேல்வருந் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக மாற்றி எழுதுக:–
(1) ஆசிரியனின் காலடியோசை கேட்டதும் மாணாக்கர் தம்வகுப்புக்கு விரைந்தோடினர்.
(2) அவன் சோதனையிற் சித்தியடைய விரும்பினானாயின் இராப் பகலாகத் தன் பாடங்களைப் படிக்கவேண்டும்.
(3) கள்வர் அவ்வீட்டைக் கொள்ளையடித்ததோடாமையாது அங்கு வாழ்ந்த அனைவரையுங் கொன்றனர்.
(4) அவன் இடைவிடாது வேலைசெய்தும் எடுத்தக் கருமம் முடிக்க வில்லை.
(5) கீழ்ப்படியாமை காரணமாக அப்பிள்ளை தகப்பனாற் கண்டிக்கப் பட்டது.
(6) கந்தனும் முருகனும் வந்து எமக்கு உதவிசெய்தனர்.
(7) திருவள்ளுவர் மயிலாப்பூரிற் பிறந்து வள்ளுவர் குடியில்வாழ்ந்து திருக்குறளை இயற்றித் தமிழ்நாட்டிற் புகழ் பெற்றார்.
(8) யான் கந்தனை முன் இகழ்ந்தமையால் இப்பொழுது அவன் எனக்குத் துணைநில்லான்.

**விடை**
(1) மாணாக்கர் ஆசிரியனின் காலடியோசை கேட்டனர்; உடனே தம் வகுப்பிற்கு விரைந்தோடினர்.
(2) அவன் சோதனையிற் சித்தி அடைய விரும்புகின்றான்; ஆயின், இராப்பகலாகத் தன்பாடங்களைப் படிக்க வேண்டும்.
(3) கள்வர் அவ்வீட்டைக் கொள்ளை யடித்தனர்; அதனோடு, அங்கு வாழ்ந்த அனைவரையுங் கொன்றனர்.



RangaRakes tamilnavarasam.com

(4) அவன் இடைவிடாது வேலைசெய்தான்: எனினும் எடுத்தகருமம் முடிக்கவில்லை.
(5) அப்பிள்ளை தகப்பனுக்குக் கீழ்படியவில்லை; அது காரணமாகத் தகப்பனாற் கண்டிக்கப்பட்டது.
(6) கந்தன் வந்தான்: முருகன் வந்தான்; இருவரும் எமக்கு உதவி செய்தனர்.
(7) திருவள்ளுவர் மயிலாப்பூரிற் பிறந்தார்; வள்ளுவர் குடியில் வாழ்ந்தார்; திருக்குறளை இயற்றினார்; அதனாலே தமிழ்நாட்டிற் புகழ்பெற்றார்.
(8) யான் கந்தனை முன் இகழ்ந்தேன்: இப்பொழுது அவன் எனக்குத் துணை நில்லான்.

### பயிற்சி 33

பின்வருந் தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக மாற்றி எழுதுக:-
(1) அவன் எனக்குத்தந்த மாம்பழம் இனிமையானவை.
(2) கபிலன், பரணன் என்னும் புலவர் இருவரும் பல தமிழ் செய்யுள்கள் இயற்றிப் புகழ்பெற்றனர்.
(3) தமிழ்க் காவியங்களுட் சிறந்ததாகிய சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது.
(4) மகனது பிரிவால் வருந்தியிருந்த தாய்தந்தையர் அவனைக் கண்டதும் மகிழ்ச்சியுற்றனர்.
(5) கள்வனைக்கண்ட அம்மனிதன் அவனுக்குப் பயந்து ஓட நினைந்து காலடியெடுத்து வைக்கமுன் அவனிடத்துச் சிக்கிக் கொண்டான்.
(6) யான் அத்தெருவிற்கண்ட அணங்கு முகமலர்ச்சி காட்டி நின்றாள்.
(7) மருந்து தின்னாமுன் அவனது நோய் தீர்ந்தது.
(8) கைக்கெட்டினது வாய்க் கெட்டவில்லை.
(9) இவ்வீடு பத்தாண்டுக்குமுன் கட்டப்பட்ட போதிலுஞ் சுவரெல்லாம் வெடிப்புற்றுப் பழுதடைந்து இருக்கின்றது.
(10) நீ கூறிய கூற்று ஒன்றையும் யான் நம்பவில்லை.
(11) இராவணன் போருக்கு அனுப்பிய அரக்கவீரருள் ஒருவனாதல் உயிர் மேலாசை வைத்து முதுகிட்டு ஓடவில்லை.
(12) நன்மகளிர் மனங்கெடாது உறுதியாய் இருப்பதற்கு அவர்கள் கற்பே கருவி.
(13) அரக்கியரால் வருத்தப்பட்டு மனக்கலக்கம் அடைந்த சீதை திரிசடையாற் சிறிது தேறினாள்.





(14) அவ்வரசன் தன்குடிகளிடத்து வரம்புமீறி இறை வாங்கிப் பாதகஞ் செய்தான்.
(15) தன் பிழையாலன்றிப் பிறர்பிழையால் அவன் வறுமையடைந்தான்.
(16) தன் முயற்சியினால் அவன் பெரும்நிலையை அடைந்தான்.
(17) வெள்ளத்தாலே தாக்குண்டு அச்சுவர் விழுந்தது.
(18) அவனது கவலையீனங் காரணமாக அச்சங்கம் பெரு நட்டம் அடைந்தது.
(19) அவ்வவையில் ஓர் இடம் பெறுதற்கு நீ பெறுமுயற்சி எடுக்க வேண்டும்.
(20) கைவாள் ஒடிந்துபோக அவன் பாதுகாப்பு இல்லாதவன் ஆனான்.

## 11. தொடர்வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக மாற்றுதல்.

**188.** தொடர்வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக மாற்றும் முறைகள் பின்வரும் வினாவிடைகளால் அறியப்படும்.

**வினா** மேல்வருந் தொடர்வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக மாற்றுக:-
(1) நாம் ஊண் உண்ணவேண்டும்; அன்றெனின், வாழ மாட்டோம் .
(2) அவன் சகோதரன் அவனுக்குப் பணங் கொடுத்தான்; அவன் சகோதரியும் அவனுக்குப் பணங் கொடுத்தாள்.
(3) கந்தன் சிறியன்: முருகன் அவனிற்பெரியன்; எனினுங் கந்தன் முருகனொடு பொருதான்.
(4) பற்றுசீட்டை உடனே தரவேண்டும்; தராதுவிடின், பொருளைத் திரும்பத் தருக.
(5) அவன் இதனைச் செய்தான்; அதனாற் குற்றத்திற்கு ஆளானான்.
(6) அவளின் கணவன் இறந்தான்; அதனால் அவள் பெருந்துயர் அடைந்தாள்.

**விடை**
(1) நாம் வாழ ஊண் உண்ண வேண்டும்.
(2) அவன் சகோதரனுஞ் சகோதரியும் அவனுக்குப் பணங் கொடுத்தனர்.
(3) சிறியன் கந்தன் தன்னிற்பெரிய முருகனொடு பொருதான்.
(4) பற்றுசீற்றை உடனே தராவிட்டாற் பொருளைத் திரும்பத் தருக.
(5) அவன் இதனைச் செய்தமையாற் குற்றத்திற்கு ஆளானான்.
(6) தன் கணவன் இறந்தமையால் அவள் பெருந்துயர் அடைந்தாள்.



RangaRakes tamilnavarasam.com

## பயிற்சி 34

பின்வருந் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுக:-

(1) அவன் நன்கு கற்றவன்; எனினும், உலகியல் விடயங்களில் அசமர்த்தன்.
(2) அவன் பொருள்களையாதல் பற்றுசீட்டையாதல் தந்தானல்லன்.
(3) கீழ்ச்சபை அச்சட்டத்தை அங்கீகரித்தது; அதனால் மேற்சபை அதனைத் தள்ளிவிட்டது,
(4) அவன் ஒருபோதுங் கலாசாலை புகவில்லை; அதனால், எழுத வாசிக்கக் கற்கும் அமயம் இல்லாதவனானான்,
(5) நாங் கல்விகற்க வேண்டும்; அன்றெனின், அறிவிலிகளாவோம்.
(6) எனது தங்கை விளக்கைக் கொணர்ந்தாள்; உடனே, நான் எனது பாடம் படிக்கத் தொடங்கினேன்.
(7) விரைவாய் நட; அவ்வாறு செய்யாதொழியின், பிந்தி விடுவாய்.
(8) அவன் பல தொழில் செய்தான்; ஆனால், ஒன்றாலுஞ் செவ்விய வருவாய் பெறவில்லை.
(9) அவன் என்மீது இரங்கினான்; அதனோடு எனக்கு உதவினான்.
(10) எனக்குப் பல கடமைகள் உண்டு; யான் அவற்றைச் செய்ய வேண்டும்.
(11) அம் மாணாக்கன் இக் குற்றத்தைச் செய்தான்; அதனாலே தன் ஆசிரியனை வெகுளச் செய்தான்.
(12) யான் அவனை உரத்த குரலில் அழைத்தேன்; அதற்கு அவன் விடையாதுந் தரவில்லை.
(13) குதிரை தாவிப்பாய்ந்தது; அதனாற் சாரதி தலைகீழாக வீழ்ந்தான்.
(14) அவன் செல்வம் மிக்கவன்; எனினும், அவனுக்குத் திருத்தி இல்லை.
(15) அவைத்தலைவர் மண்டபம் புகுந்தனர்; உடனே, எல்லாருந் தந்தம் இருப்பிடத்திலிருந்து எழுந்து நின்றனர்.
(16) அவன் படிப்படியாக நிறை குறைந்தான்; ஆனமையால், வைத்தியனோடு ஆலோசித்தனர்.
(17) பிறவுயிர்களை ஓம்பு; அவ்வாறு செய்தால், நீ இன்பம் பெறுவாய்.
(18) அப்போது என்னிடம் பணம் இல்லை; அதனால் இரப்பவனுக்கு யாதுங் கொடுக்க இயலாது நின்றேன்.
(19) நீயாதல் நின் உடன்பிறந்தானாதல் வரவேண்டும்.
(20) யான் அவனை ஓடாது நிற்குமாறு கட்டளை இட்டேன்; அவன் அதனைப் பொருட்படுத்தவில்லை.





## 12. கலப்பு வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றுதல்.

**189.** கலப்பு வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றும் முறைகள் பின்வரும் வினாவிடைகளால் அறியப்படும்.

**வினா** மேல் வருங் கலப்பு வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றுக:-

(1) யான் எனது கடிகாரத்தை இழந்துவிட்டேனென அறிந்தேன்.
(2) நீர் பரிசுபெற்றீர் என்பதை யான் உணர்ந்தேன்.
(3) நீர் எனக்குப் பிழைசெய்தீர் என்பதில் எனக்கு ஐயம் யாதும் இல்லை.

**விடை** (1) யான் எனது கடிகாரத்தை இழந்து விட்டேன்;
(2) நீர் பரிசுபெற்றீர்; அதனை யான் உணர்ந்தேன்.
(3) நீர் எனக்குப் பிழை செய்தீர்; அதனைப்பற்றி எனக்கு யாதும் ஐய மில்லை.

## பயிற்சி 35

பின்வருங் கலப்பு வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றுக:-

(1) நீ நேற்றுக் கண்டவன்றான் இவனென நம்புகின்றாயா?
(2) எறும்பூரக் கற்றேயும் என்பதை நீ அறியவில்லையா?
(3) ஆயிரம் வேள்வி வேட்டலிலும் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று என்பதை அறி.
(4) நீ தனக்குப் பிழை செய்தாயென்று அவன் எனக்குக் கூறினான்.
(5) பூமி உருண்டை வடிவமானதென யாம் நிறுவுவோம்.
(6) நீ அக்காரியத்தில் அனுகூலப்படவில்லை என்பது எனக்கு வியப்பை விளைக்கின்றது.
(7) கந்தனும் வேலனும் நேற்றுக் கோயிலுக்குப் போனார்கள் என்ற செய்தி என் காதிற் கேட்டது.
(8) யார் குற்றினாலும் அரிசியாதல் வேண்டும் என்பதே யான் கொண்ட கோட்பாடு.
(9) ஆறழிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு என்பதை உணர்ந்தீராயின், இது செய்யமாட்டீர்.
(10) இனி என்ன செய்யலாம் என ஏங்கி நிற்றல் உனது உள நலனுக்கு ஒவ்வாமை காண்க.



RangaRakes tamilnavarasam.com

(11) தானே தனக்குக் கூற்றம் என்பதை எம் ஆசிரியர் எடுத்துக்காட்டு மூலம் எமக்கு விளக்கினார்.
(12) அறிவிலிகளின் உள்ளம் ஒரு நிலை நில்லா என்னுங்கூற்றின் மெய்ம்மையை இன்றுதான் உணர்ந்தேன்.
(13) அவன் பொய் சொல்லவில்லையென நிறுவுவாயா?
(14) இச்செய்தி உண்மையானதெனச் சாதிப்பதற்கு என்ன சான்று தருவீர்?
(15) கந்தன் ஆட, முருகன் பாட, வேலன் மத்தளங் கொட்ட, அவையினர் யாவருங் கண்டுங் கேட்டுங் களிப்பெய்தினர் என அறிந்தேன்.
(16) நீர் என் மகனுக்கு உதவி செய்தீர் என்பதிற் சிறிதாயினும் யான் ஐயங்கொள்ளவில்லை.
(17) தன் முயற்சியாலே தான் பெருமை அடையலாம் என்பது யாரும் அறிந்ததொரு விடயம்.
(18) தன்னம்பிக்கையற்றோர் வாழமாட்டார் என்பதை நீ ஒருபோதுங் கேட்டிலையோ?

**13. தொடர்வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றுதல்.**

**190.** தொடர் வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றும் முறைகள் பின்வரும் வினாவிடைகளால் அறியப்படும்.

**வினா** மேல்வருந் தொடர் வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றுக :-

(1) மூத்தமகன் பரீட்சையிற் சித்தி எய்தினான்; இளையமகன் வகுப்பிற் பரிசு பெற்றான் ; இச் செய்திகளைக் கேட்ட பெற்றோர் களிப் படைந்தனர்.
(2) கந்தன் வாள், உளி முதலியன கொணர்ந்தான் ; முருகன் மரம், ஆணி முதலியன கொணர்ந்தான் ; இவற்றை அறிந்த தச்சர் அவ் விடஞ் சென்று அவ்வீட்டிற்குக் கூரை இட்டனர்.
(3) வேலன் படுகாயப்பட்டான்; இச்செய்தியைக் கேட்ட அவன் நண்பன் உயிர்நீத்தான்.

**விடை**

(1) மூத்தமகன் பரீட்சையிற் சித்தி எய்தினானென்றும் இளையமகன் வகுப்பிற் பரிசு பெற்றானென்றுங் கேள்வியுற்ற பெற்றோர் களிப் படைந்தனர்.





(2) கந்தன் வாள், உளி முதலியன கொணர்ந்தானென்றும் முருகன் மரம், ஆணி கொணர்ந்தானென்றும் அறிந்த தச்சர் அவ்விடஞ் சென்று அவ்வீட்டிற்குக் கூரை இட்டனர்.
(3) வேலன் படுகாயப்பட்டான் என்பதைக் கேட்ட நண்பன் உயிர்நீத்தான்.

**பயிற்சி 3**

பின்வருந் தொடர் வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக மாற்றுக:-

(1) குறை குடங் கூத்தாடும்; இதனை நீ அறியாயோ?
(2) தம்வலி இல்லாதார் புகழ் எய்தார்; இது பெரியோர் கூற்று.
(3) பூனை எலி பிடிக்கும்; இதனை மறந்து உனது எதிரியை நம்பி மோசம் போனாயே!
(4) அருளாள்வார்க்கு அல்லல் இல்லை; இக்கூற்றை நின்மனத்திற் கொள்வாயாயின், கவலையின்றிய வாழ்க்கை பெறுவாய்.
(5) கையைவிட்டுப்போன பொருள் திரும்பிவராது; இதனை அறியாதார் இவ்வுலகில் இல்லை.
(6) தவநெறியிலும் அறநெறி பெருமை திரும்பிவராது; இதற்குச் சான்று தருவாயா?
(7) கந்தன் சுவர்க்கம் புக்கான்; இக்கூற்றை முருகன் வேலனுக்குச் சொன்னான்.
(8) இன்சொல் ஒருவரையும் இடர்ப்படுத்தாது; இதன் மெய்ம்மையை உணர்ந்தோர் மக்களாற் பெரிதும் மதிக்கப்படுவர்.
(9) அரசர்க்கு அமைச்சர் கண்களாவர் ; இதனை உடம்படாத அரசர் இடர்ப்படுவர்.
(10) கறவை வயலிலிருந்து வந்துவிட்டது; மனைவி அதனைப் பிடித்துத் தொழுவத்திற் கட்டிவிட்டாள்; இவற்றைக் கண்ட இடையன் பால் கறக்கத் தொடங்கினான்.
(11) ஓராடை நல்லது; ஓராடை கூடாது; இச்செய்திகளைத் தலைவன் கூறக்கேட்ட தலைவி நல்லாடை தெரிதற்கு ஏலாதவளாய் மயங்கி நின்றாள்.
(12) நன்மை இன்னது ; தீமை இன்னது ; இவற்றை அறியாதார் உலகி லிருந்துந் தமக்காதல் பிறருக்காதல் பயன்படார்.



RangaRakes tamilnavarasam.com

# அதிகாரம் 10.

## வாக்கியத் தொகுப்பு

**191.** வாக்கியத் தொகுப்பு என்பது தனி வாக்கியத் தொகுதிகளைத் தனி வாக்கியங்களாகவேனும் கலப்பு வாக்கியங்களாகவேனுந் தொடர் வாக்கியங்களாகவேனுந் தொகுத்தலாம்.

### 1. தனிவாக்கியத் தொகுதிகளைத் தனிவாக்கியங்களாகத் தொகுத்தல்.

**192.** தனிவாக்கியத் தொகுதிகளைத் தனிவாக்கியங்களாகத் தொகுக்கும் முறைகள் பின்வருவாறு:–

**(i)** தனிவாக்கியங்களின் எழுவாய்களோடு எண்ணும்மையைச் சேர்த்தல்.
கந்தன் அந் நாடகத்திலே நடித்தான். வேலன் அந்நாடகத்திலே நடித்தான்.
கந்தனும் வேலனும் அந்நாடகத்திலே நடித்தனர்.

**(ii)** தனிவாக்கியங்களின் எழுவாய்களை உம்மைத் தொகையாக்கல், அல்லது தொகுதிப் பெயராக்கல்.

| | | |
|---|---|---|
| சேரன் வந்தான். | சோழவந்தான். | பாண்டியன் வந்தான். |
| சேர சோழ பாண்டியர் | வந்தனர். | மூவேந்தரும் வந்தனர். |

**(iii)** செயற்கு என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தை வழங்கல்.
எனக்குச் சில கடமைகள் உண்டு. யான் என் கடமைகளைச் செய்ய வேண்டும்.
செய்தற்குச் சில கடமைகள் எனக்கு உண்டு.
செய்தற்கு உள்ள கடமைகளை யான் செய்யவேண்டும்.

**(iv)** ஒரு வினைமுற்றுக் கிடப்ப ஏனைய வினைமுற்றுகளைப் பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் வழங்கல்.

அவ்வீரன் அமர்க்களம் புகுந்தான். அவ்வீரன் தன் பகைவனைக் கண்டான்.
அவ்வீரன் தன்பகைவனொடு பொருதான்.
அவ்வீரன் அமர்க்களம்புகுந்து தன்பகைவனைக்கண்டு அவனொடு பொருதான்.
அமர்க்களம் புகுந்து தன் பகைவனைக்கண்ட அவ்வீரன் அவனொடு பொருதான்.





**(v)** ஒரு வினைமுற்றுக் கிப்ப ஏனைய வினைமுற்றுக்களைத் தொழிற் பெயராக்கல்.
யான் கந்தனை முன் இகழ்ந்தேன். இப்பொழுது கந்தன் எனக்கு உதவி செய்யான்.
யான் கந்தனை முன் இகழ்ந்தமையால், அவன் இப்பொழுது எனக்கு உதவி செய்யான்.

**பயிற்சி**

பின்வருந் தனிவாக்கியத்தொகுதி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிவாக்கியமாகத் தொகுக்க:–

**(1)** அரசன் இறந்தான். இளவரசன் அரசுகட்டில் ஏறினான்.
**(2)** மழை பெய்தது. பயிர்வளர்ந்தன.
**(3)** அவன் விடை இறுத்தான். அவனது விடைவாய்ப்பானது.
**(4)** கந்தன் இங்கு வந்தான். வேலன் இங்கு வந்தான்.
**(5)** யான் உண்மை பேசுவேன். விளைவைப் பற்றி எனக்குப் பயம் யாதுமில்லை.
**(6)** அவனுக்கு மக்கள் ஐவர் உளர். அவருக்காக அவன் உழைக்க வேண்டும்.
**(7)** சூரியன் உதித்தது புகார் மறைந்தது. கலங்கரை விளக்கம் ஆயிரம் யாருக்குள்ளே புலப்பட்டது.
**(8)** அவன் மன்னிப்புக் கேட்கவேண்டும். அவன் கடியப்படுவான்.
**(9)** தொல்காப்பியனார் பெரிய புலவர். தொல்காப்பியனார் யாதோ ஓர் ஊரிற் பிறந்தார். தொல்காப்பியனார் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை இயற்றினார்.
**(10)** சங்கிலி யாழ்ப்பாணத்து அரசருள் ஒருவன். சங்கிலி போத்துக் கேயராலே தோற்கடிக்கப்பட்டான்.
**(11)** அவ்வேலை செய்யப்படவேண்டும். வேலை செய்தற்குரிய செலவு கொடுக்கப்படும்.
**(12)** பணந் தளர்வு வந்தகாலத்து உதவும். உழைக்கும் பணத்தில் ஒரு பகுதி தளர்வுக் காலத்திற்காக ஒதுக்கப்பட வேண்டும்.
**(13)** குளந்தோண்டினால் அதுபோதும். தவளை தானேவந்து சேரும்.
**(14)** பூவைக் காட்டவேண்டியதில்லை. வண்டு பூ இருக்கும் இடந்தேடி வரும்.
**(15)** எருது வலிது. அதன் கொம்பு கூரியதாய் இருக்கும்.



RangaRakes
tamilnavarasam.com

(16) பறித்த குவளை மலரை மாலையாக்க வேண்டும். நாருக்கு அலையத்தேவையில்லை. குவளையினது தண்டிலுள்ள நாரே அமையும்.
(17) இந்த ஆடையை இரண்டு ஆண்டுக்குமுன் விலையாகக் கொண்டேன். இந்த ஆடை இன்னும் புத்தம் புதிதாய் இருக்கிறது. இந்த ஆடை அணிதற்குத் தக்கது.
(18) வாள் போன்ற பகைவரை அஞ்சற்க, கேள் போன்ற பகைவரை அஞ்சுக.
(19) நஞ்சிட்ட ஊணிற் சிறிதும் யான் உண்ணவில்லை. யான் பாக்கியவான்.
(20) யான் சிலப்பதிகாரங் கற்றேன். சிலப்பதிகாரக்கல்வி எனக்குப் பெரும் பயன் அளித்தது.
(21) பகைவரைச் சொல்லால் அடாதொழிக. பகைவரைச் செயலாலே அடுக.
(22) பொருட்செல்வம் நிலையாது. கல்விச்செல்வம் நிலைக்கும். ஒருவன் பொருட்செல்வத்தை அன்றிக் கல்விச் செல்வத்தைத் தேட வேண்டும்.
(23) அவனுக்குக் கல்லடித்தது. அவன் நிலத்தின் வீழ்ந்தான். அவனுடைய ஆடைகள் அழுக்கடைந்தன.
(24) அவன் இராப்பகலாய்ப் பொதுநலச் சேவை செய்தான். அவன் ஒரு நாளும் ஓய்வு கொள்ளவில்லை. அவன் இருபதாண்டிற்குப் பிறருடன் ஒத்துழைத்தான்.
(25) நாம் அறஞ் செய்ய வேண்டும். நாந் துறவு பூணவேண்டும். நாம் மேற்கதிவீடுபேறுகள் பெறோம்.
(26) அவன் ஒரு தலைவன். அவன் ஒருவரையாதல் பின்பற்றி நடவான். ஒருவரையும் பின்பற்றாமைதான் அவன் இயல்பு.
(27) தமிழ்மொழி புராதன மொழிகளுள் ஒன்று. தமிழ் மொழியிற் பல இலக்கியங்கள் உண்டு. தமிழ் இலக்கியங்கள் கற்குந் தோறும் இன்பம் பயக்கும்.
(28) யான் நித்திரை தெளிந்து எழுந்தேன். யான் நாற்றிசையும் பார்த்தேன். என்னுடைய நண்பருள் ஒருவருந் தோற்றமளிக்கவில்லை.
(29) யான் உன்னைக் காணவில்லை. உனக்கு ஒரு செய்தி சொல்ல விரும்பினேன். தாமதம் பேரல்லலைத்தந்து விடும்.
(30) நீ பிழை செய்திருக்கலாம். அவன் பிழை செய்திருக்கலாம். நீயும் அவனும் பிழையிலீராகீர்.
(31) நாம் இருவேமும் யாழ்ப்பாணம் வரைக்கும் ஒருங்கு சென்றோம். நாம் இருவேமும் யாழ்ப்பாணத்திற் பிரிந்தேம்.





(32) அவன் படிப்படியாக மெலிந்தான். அவன் இறந்தான்.
(33) அவன் சிலப்பதிகாரங் கற்றான். அவன் சிலப்பதிகாரங்கற்ற வயது பதினாறு.
(34) நீ உடனலம் படைத்தாயல்லை. காரணங் கூறுவாயா?
(35) நீ பெருஞ் சத்தமிடுகிறாய். யான் என் பாடங்களைப் படிக்க முடியாது துன்புறுகின்றேன்.
(36) அவன் தன்பயிரைமேய்ந்த மாடுகளைத் துரத்தினான். மாடுகள் ஓடின.
(37) அவன் தன் வேலை முடித்தான். அப்பொழுது மணி பன்னிரண்டு அடித்தது.
(38) கந்தன் முருகனுக்கு நிகர்த்தவன், முருகன் வேலனுக்கு நிகர்த்தவன். கந்தன் வேலனுக்கு நிகர்த்தவன்.
(39) நாம் எட்டுமணிப் புகைவண்டியாற் செல்ல வேண்டும். இன்னும் ஒருமணிநேரந்தான் கிடக்கிறது. நாம் விரைவிற் புறப்படவேண்டும்.
(40) நீ ஒழுக்கங் குன்றி இருக்கின்றாய். நீ ஓர் இழிவான செயலைச் செய்துவிட்டாய். யான் உன்னைத்தண்டிக்க விரும்பவில்லை. இனியாயினும், நீ பிழையின்றிநட.
(41) கந்தன் வந்தான். முருகன் வந்தான். கந்தனும் முருகனும் எமது இல்லத்தில் விருந்து அயர்ந்தனர்.
(42) மாப் பூத்தன. பெருமழை பெய்தது. மாப்பூக்கொட்டின. நாம் பழமின்றி வருந்தினோம்.
(43) கங்கை பெருக்கெடுத்தது. வயல்கள் எல்லாம் நீராலே நிரம்பின. நெற்பயிர் அழுகின. ஊர் பஞ்சமுற்றது.
(44) அவன் வாதத்தில் என்னை வென்றான். அவன் என்னிலும் ஒரு வகுப்புக் கூடியவன். அவன் பேச்சில் வல்லவன். மற்றையாண்டு யான் சிறப்பாகச் செய்யலாம்.

## 2. தனிவாக்கியத் தொகுதிகளைக் கலப்பு வாக்கியங்களாகத் தொகுத்தல்.

**193.** தனிவாக்கியத் தொகுதிகளைக் கலப்பு வாக்கியங்களாகத் தொகுக்கும் முறைகள் பின்வரும் உதாரணங்களால் அறியப்படும்.

(i) நீ என்மீது அன்பு கொண்டாய். நான் அதனை மறவேன்.
நீ என் மீது அன்பு கொண்டாய் என்பதனை மறவேன்.

(ii) நீ எனக்குப் பிழை செய்தாய். அது நிச்சயம்.
நீ எனக்குப் பிழை செய்தாய் என்பது நிச்சயம்.



RangaRakes tamilnavarasam.com

(iii) அவன் குற்றஞ் செய்தவனாய் இருக்கலாம். நான் அறியேன்.
அவன் குற்றஞ் செய்தானோ என நான் அறியேன்.

(iv) நண்பர் இருவர் ஒருவரோடு ஒருவர் என கைகலந்தனர். காரணமறிய விரும்புகின்றேன்.
நண்பர் இருவர் ஒருவரோடு ஒருவர் ஏன் கைகலந்தனர் என அறிய விரும்புகிறேன்.

(v) யான் இவரை முன் யாதோ ஓர் இடத்திற் சந்தித்தேன். அவ்விடத்தின் பெயரை நினைவு கூர்கின்றிலேன்.
யான் இவரை முன் சந்தித்த இடம் இன்னதுஎன நினைவு கூர் கின்றிலேன்.

(vi) உமது ஊரைக்கூறுக. உமது பெயரைக் கூறுக.
உம்முடைய ஊர் பெயர்கள் இன்ன எனக் கூறுக.

## பயிற்சி 3

பின்வருந் தனிவாக்கியத் தொகுதி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கலப்பு வாக்கியமாகத் தொகுக்க:

(1) நீ என்னைப் புறக்கணிக்கின்றாய். நான் அதனை அறிவேன்.
(2) தமிழ்ப்புலவர்களுள் யார் சிறந்தவர்? விடை இறுப்பாயா?
(3) நீ பரீட்சையிற் சித்தி அடைவாய். இதில் எனக்கு ஐயமில்லை.
(4) நேற்று இங்குவந்தவன் இவன்றான். இதனை நான் சாதிப்பேன்.
(5) யான் அங்குச் செல்லவில்லை. இது என் உறுதிமொழி.
(6) நீ வெறி கொண்டனை. அது உன்குற்றத்தை மிகுவிக்கின்றது.
(7) அவன் செய்ந்நன்றி அறிந்தவனாய் இருக்கலாம். யான் அறியேன்.
(8) அவன் என்மீது கறுக்கொண்டு இருக்கிறான். காரணந் தெரியவில்லை.
(9) சோழன் பாண்டியனோடு பொருது தோல்வியுற்றான். இதற்குக் காரணம் அவனது கவலையீனம்.
(10) மணமகன் காலந்தாழ்த்தியே மணமகள் இல்லத்திற்கு வருவான். இது நிச்சியம்.
(11) அவன் வராதொழியலாம். யான் அறியேன்.
(12) அவன் பத்துமணிக்குப் பின்னரே வருவான். இச் செய்தி அவன் கூறக் கேட்டேன்.
(13) ஆறோடு ஐந்தைக் கூட்ட வருவது பதினொன்று. இதனை நிறுவு வாயா?
(14) நீர் நிரபராதியாய் இருக்கலாம். யான் அறியேன்.





(15) நீ என்ன செய்தனை? எனக்குக் கூறுவாயா?
(16) யார் மணிமேகலையை எழுதியவர்? உன்னால் இக் கேள்விக்கு விடையிறுத்தல் இயலுமா?
(17) தந்தையார் இறந்தார். தமையனார் இறந்தார். இச் செய்திகளைக் கேட்ட இளைஞன் மயங்கி நிலத்தில் வீழ்ந்தான்.
(18) யான் கொடுத்த புத்தகத்தை எங்கே வைத்தாய்? நீ எனக்குச் சொல்வாயா?
(19) நீ என் குடையைத் திருடினாய். நீ அதனை மறுக்கின்றாயா?
(20) நாம் ஒரு கடற்கரையை அணுகுகின்றோம். அலையோசையால் உணருகின்றோம்.
(21) அப்பெரியார் தம்மக்களை நம்புகின்றாரில்லை. காரணந் தெரியவில்லை.
(22) பாண்டியன் சேனை வலி மிக்கதன்று. இது யாவரும் அறிந்த விடயம்.
(23) நீர் எஞ்சங்கத்திற்குத் தலைவனாதல் வேண்டும். இது தான் எனது வேண்டுகோள்.
(24) நாம் அறிய விரும்புகின்றோம். நாம் யாதோ ஓரிடத்திற்குப் போகின்றோம்.
(25) நாம் அவனிடத்துச் சிக்கிக் கொண்டோம். உண்மை அது தான்.
(26) மகன் சான்றான். இதனைக் கேட்ட தாய் மனம் பூரித்தாள்.
(27) அவன் எனக்குப்பிழை செய்யலாம். நான் அவனை நம்புவேன்.
(28) அவன் சகுந்தலை கற்றவன். அவனே இதனை எனக்குச் சொன்னான்.
(29) அவன் ஒரு புத்தகத்தை இழந்தான். அதில் அவன் பெயர் உண்டு. நான் இவ்வாறு அறிவிக்கப்பட்டேன்.
(30) ஒரு மனிதன் இக்கொலையைச் செய்தான். அவன் இரக்கமிலியாய் இருத்தல் வேண்டும். அதில் ஐயம் யாதுமில்லை. எனது தந்தையார் இவ்வாறு சொன்னார்.
(31) நின் குலம் பெரிது. நின் கோத்திரம் பெரிது. இச் செய்திகள் எனது தந்தையாரின் காதுகளுக்கு எட்டின.
(32) அவன் பேச்சிலே உயர்ந்தவன். அவன் செய்கையிலே தாழ்ந்தவன். இக்கூற்றுக்களை எமது ஆசிரியர் கூறினார்.
(33) மகன் வந்தான். மகள் வந்தாள். தந்தை உவந்தான்.
(34) உற்றுழி உதவாதார் இருந்தென்ன! இவ்வாறு என் சகோதரன் கூறினான்.



RangaRakes tamilnavarasam.com

(35) பிறர் உரைக்கும் நல்லுரையை இகழற்க. இது எமது ஆசிரியர் கூற்று.
(36) பகைவரிற் சிலர் தப்பி ஓடினர். ஓடியபேரினுடைய தொகையை நாம் அறியோம்.
(37) அவன் உண்மையான தொண்டன். இதில் ஐயம் கொள்ளுவதற்கு இடமில்லை.
(38) வைரத்தை வைரத்தால் அறுக்கலாம். இதனை நீ அறியாயோ?
(39) அவன் சோதனையிற் சித்தியடைவான். நாம் அதனை எதிர்பார்க் கிறோம்.
(40) நீ எழுதப்படிக்கக் கற்கவில்லை. நான் அவ்வாறு எண்ணுகின்றேன்.
(41) சோம்பலுள்ளத்தவர் தம் வாழ்நாளை வாளா கழிப்பர். அதில் ஐயம் இல்லை.
(42) அப்பெண்மணி ஏனைப் பெண்களிலுஞ் சிறந்தவளல்லள். இது எல் லாரும் அறிந்ததொரு விடயம்.
(43) யான் காந்தியை யாதோ ஓர் இடத்திற் கண்டேன். அவ்விடம் என் ஞாபத்தில் இல்லை.
(44) அவன் அளவாய்க் கதைப்பான். அவன் பெருமுயற்சிக்காரன். எமது தாயார் இவ்வாறு சொன்னார்.
(45) அவன் என்னைக்கடியலாம். அவன் என்னைக்கடியாது விடலாம். யான் அறியேன்.

## 3. தனிவாக்கியத் தொகுதிகளைத் தொடர்வாக்கியங்களாகத் தொகுத்தல்.

**194.** தனிவாக்கியத் தொகுதிகளைத் தொடர்வாக்கியங்களாகத் தொகுக்கும் முறைகள் பின்வரும் உதாரணங்களால் அறியப்படும்:–

(i) வேலன் கலாசாலைக்குச் சென்றான். வேலன் வழியிலே தனது நண்பனைக் கண்டான். வேலன் தனது நண்பனோடு அளவளாவினான்.
வேலன் கலாசாலைக்குச் சென்றான்; தனது நண்பனை வழியிற் கண்டான்; அவனோடு அளவளாவினான்.

(ii) அவன் மூடன். அவன் கோழையன்.
அவன் மூடன்; கோழையன்.

(iii) நீர் செய்த செயல் எனக்கு வெறுப்பை மிகுத்தது. யான் மௌனமாய் இருந்தேன்.
நீர் செய்த செயல் எனக்கு வெறுப்பை மிகுத்தது; எனினும், யான் மௌனமாய் இருந்தேன்.

(iv) கடன் கொடேல். கடன்படேல்.
கடன் கொடுப்பவனாயாதல், கடன்படுபவனாயாதல் இரேல்.
(அல்லது) கடன்கொடுக்கவும் வேண்டாம்; கடன்படவும் வேண்டாம்.

(v) மழை பருவகாலத்திற் பெய்கின்றது. பயிர் வளரும்.
மழை பருவகாலத்திற் பெய்கின்றது; ஆகவே, பயிர் வளரும்.

### பயிற்சி 39

பின்வருந் தனிவாக்கியத் தொகுதி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடர்வாக்கியமாகத் தொகுக்க:

(1) மழை தூறுகின்றது. நான் ஒருகுடை கொண்டு செல்வேன்.
(2) எனக்குத் துன்பந் தருகின்றாய். நான் உளங் கோணாதிருப்பேன்.
(3) அவன் கந்தனை வடக்கே அனுப்பினான். அவன் முருகனைத் தெற்கே போக்கினான்.
(4) விரைவாய்ச்செய். நின்வேலை முடியாது.
(5) யான் வாய்ப்பான விடைகொடுத்தேன். நீ வாய்ப்பில்லாத விடை கொடுத்தாய்.
(6) வண்டி கவிழ்ந்து வீழ்ந்தது. ஒருவருங் காயப்படவில்லை.
(7) ஐயம் இட்டு உண்க. ஐயம் பெற்று உண்ணற்க.
(8) அவன் பரீட்சையிற் சித்தி அடையவில்லை. அவன் முகமலர்ச்சிக்குப் பழுதில்லை.
(9) இக்கடல் ஆழமானது. நீந்தப் பயப்படுகின்றேன்.
(10) நீ எனக்கு ஆபத்தில் உதவவில்லை. உன்மீது நான் வைத்த அன்பு குறையவில்லை.
(11) நீ உண்மை பேசுகின்றாய். நீ பொய் பேசவில்லை.
(12) கந்தன் முருகனிற் பெரியன். கந்தன் வேலனிற் சிறியன். கந்தன் முருகனுக்கும் வேலனுக்கும் இடையுயரமானவன்.
(13) அவன் மரத்தினின்றும் விழுந்தான். அவன் பெருங் காயமுற்றான். அவன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அவன் அங்கு இறந்தான்.
(14) அவன் என்னோடு ஒருசாலை மாணாக்கன். அவன்பெரும் பட்டம் பெற்றிருக்கின்றான். அவன் என்னை மறந்திட்டான்.





RangaRakes
tamilnavarasam.com

(15) விரைவாய்ப் புறப்படு. நீ பிந்திவிடுவை. பொழுதுபடும் வரைக்கும் வேறு புகைவண்டி ஒன்றும் ஓடாது.
(16) பருவமழை பெய்யவில்லை. பயிர்களெல்லாம் வாடுகின்றன. இம் முறை நாம் பெரும்விளைவு பெறமாட்டோம்.
(17) புண்ணியஞ் செய். பாவஞ் செய்யற்க.
(18) பெருமழை பொழிகின்றது. நாம் வெளியே போவோம்.
(19) அவன் பொய் சொல்லாதவன். அவன் களவெடாதவன்.
(20) எல்லா மனிதருஞ் சாதற்றன்மையினர். முருகன் ஒரு மனிதன். முருகன் சாதற்றன்மையினன்.
(21) தாய் தன் மகனைத் தேடினாள். தாய் தெருத்தெருவாய் அலைந்தாள். தாய் மகனைக் காணவில்லை. தாய் மிக வருந்தினாள்.
(22) அவன் ஓர் ஏழை. அவன் கல்லூரியிற் கற்கவில்லை. அவன் விவேகத்திற் குறைந்தவன் அல்லன்.
(23) தொழிலாளர் சங்கங் கூலியேற்றங் கேட்டது. முதலாளிவருக்கங் கூலியேற்றம் மறுத்தது. தொழிலாளர் சங்கம் வேலைநிறுத்தஞ் செய்தது.
(24) நீ இக் கணக்கைச் செய்யலாம். நீ அக்கணக்கைச் செய்யலாம். நீ இரண்டில் ஒன்று செய்ய வேண்டும்.
(25) நீ கல்லூரியிற் படிக்கின்றாயில்லை. நீ வீட்டிற் படிக்கின்றாயில்லை. பரீட்சையிற் சித்தி எய்துவாயா?
(26) அவன் அக்கரையில் இல்லை. அவன் இக்கரையில் இல்லை. அவன் இடையில் இருக்கின்றான்.
(27) அவன் பெரும்பணம் உள்ளவன். அவன் அப்பணத்தைத் தானாக உழைக்கவில்லை. அவன் பணத்தின் அருமை தெரியாதவன். அவன் பணத்தை வீண்செலவு செய்கின்றான்.
(28) நீ காமம் வெகுளி மயக்கங்களின்றுந் தீர்ந்தாயல்லை. நீ தவஞ்செய்கிலை. முத்தி உனக்குக் கிடைக்குமா?

## அதிகாரம் 11.

## தன்கூற்றும் பிறன் கூற்றும்

**195.** ஒருவன் கூறிய கூற்றை இரண்டு முறையில் அறிவிக்கலாம்:-

(1) அவன் கூறிய சொற்றொடரை உடுத்துச் சொல்வது ஒருமுறை; இது **தன்கூற்று** எனப்படும்.

(2) அவன் கூறிய சொற்றொடரை எடுத்துச் சொல்லாது வேறு ஓராற்றால் அறிவிப்பது மற்றைமுறை; இது **பிறன் கூற்று** எனப்படும்.

**தன்கூற்று:-** "யான் இன்று விழிப்பாய் இருக்கின்றேன்", எனக் கந்தன் சொன்னான்.

**பிறன்கூற்று:-** தான் அன்று விழிப்பாய் இருந்தான் எனக் கந்தன் சொன்னான்.

இக்கூற்றுக்களை ஆராயுமிடத்து, இவை இரண்டுங் கலப்பு வாக்கியங்களாய் இருத்தலும், தன் கூற்றிலே பேசுதற் கருத்தாவின் சொற்றொடர் மேற்கோட் குறிகளுக்குள் வழங்கப்பட்டிருத்தலும், பிறன் கூற்றிலே மேற்கோட்குறி வழங்கப்படாதிருத்தலுங் காணப்படும்.

இன்னுந் தன் கூற்றைப் பிறன்கூற்றாக மாற்றியபொழுது சில மாற்றங்கள் செய்யப்பட்டிருத்தலுங் காணப்படும்.

**மேலுள்ள உதாரணத்தில்,**

(i) யான் என்னுந் தன்மைப் பெயர் தான் என்னும் படர்க்கைப் பெயராயிற்று.

(ii) இருக்கின்றேன் என்னும் நிகழ்காலத் தன்மை ஒருமை வினை இருந்தான் என்னும் இறந்தகாலப் படர்க்கை ஒருமை வினையாயிற்று.

(iii) இன்று என்னும் அண்மைச் சொல் அன்று என்னுஞ் சேய்மைச் சொல்லாயிற்று.



RangaRakes tamilnavarasam.com

## 1. தன்கூற்றைப் பிறன்கூற்றாக மாற்றுதற்குரிய விதிகள்.

**196.** தலைமைத் தொடரிலுள்ள வினை இறந்தகாலப் படர்க்கைச் சொல்லாயின், துணைத் தொடரிலுள்ள சொற்கள் பற்றிப் பின்வரும் விதிகள் கொள்ளப்படும்:–

**(1)** தன் கூற்றிலுள்ள நிகழ்கால வினைச்சொற்கள் எல்லாம் பிறன் கூற்றில் இறந்தகால வினைச் சொற்களாக மாற்றப்பட வேண்டும்.

**தன்கூற்று.** " யான் கவலையின்றி **வாழ்கின்றேன்,**" என்று முருகன் கூறினான். நி.கா.

**பிறர்கூற்று.** தான் கவலையின்றி **வாழ்ந்தான்** என்று முருகன் கூறினான். இ.கா.

**(2)** தன்கூற்றிலுள்ள எதிர்கால வினைச் சொற்களையும் இறந்தகால வினைச் சொற்களையும் பிறன்கூற்றிற் காலம் மாற்றாது நிறுத்தல் வேண்டும்.

**(i)** **தன்கூற்று.** "யான் நோயின்றி **இருப்பேன்,**" என அவன் **உரைத்தான். எ.கா.**
**பிறன் கூற்று.** தான் நோயின்றி **இருப்பான்** என அவன் உரைத்தான். **எ.கா.**

**(ii)** **தன்கூற்று.** "யான் அங்கு **சென்றேன்** என அவன் புகன்றான். இ.கா.
**பிறன்கூற்று.** தான் அங்கு **சென்றான்** என அவன் புகன்றான்.**இ. கா.**

**(3)** தன்கூற்றிலுள்ள தன்மையிடச் சொற்களும் முன்னிலையிடச் சொற்களும் பிறன்கூற்றிற் படர்க்கையிடச் சொற்களாக மாற்றப்பட வேண்டும்.

**(i)** **தன்கூற்று.** "**யான்** யாதொன்றாலுங் **குறையீலேன்,**" என அவன் கூறினான். (த.இ.)
**பிறன்கூற்று. தான்** யாதொன்றாலுங் **குறையிலன்** என அவன் கூறினான். (ப. இ.)

**(ii)** **தன்கூற்று.** ஈவோன் இரப்போனைப் பார்த்து, யான் **உன்னை** அறிவேன், " என்றனன். (மு.இ.)
**பிறன்கூற்று.** "ஈவோன் இரப்போனைப் பார்த்துத் தான் **அவனை** அறிவான், " என்றனன். (ப.இ.)

**(4)** முன்னிலை ஆக்கப்பட்டவனே கூற்றை அறிவிப்பானாயின், தன் கூற்றிலுள்ள முன்னிலையிடச் சொற்கள் பிறன்கூற்றிலே தன்மையிடச் சொற்களாக மாற்றப்பட வேண்டும்.





**தன்கூற்று.** அவன் என்னைப் பார்த்து, "**நீ** அதனைச் செய்யவில்லை," என்றான். (மு.இ.)
**பிறன்கூற்று.** அவன் என்னைப்பார்த்து **யான்** அதனைச் செய்யவில்லை என்றான். **(த. இ.)**

**(5)** தன்கூற்றிலுள்ள அண்மைச் சொற்கள் பிறன் கூற்றிற் பெரும் பான்மையாகச் சேய்மைச் சொற்களாக மாற்றப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| இப்பொழுது | என்பது | அப்பொழுது | என | மாற்றப்படும். |
| இது | " | அது | " | " |
| இங்கு | " | அங்கு | " | " |
| இங்ஙனம் | " | அங்ஙனம் | " | " |
| நாளை | " | அடுத்தநாள் | " | " |
| இற்றைநாள் | " | அற்றைநாள் | " | " |
| வருதல் | " | செல்லுதல் | " | " |
| இன்னும் | " | பின்னும், மேலும் | " | " |
| இப்போது | " | அப்போது | " | " |
| இவை | " | அவை | " | " |
| இன்று | " | அன்று | " | " |
| இவ்வண்ணம் | " | அவ்வண்ணம் | " | " |
| நேற்று | " | முதனாள் | " | " |
| சென்ற இரவு | " | முந்தியஇரவு | " | " |
| தருதல் | " | கொடுத்தல் | " | " |

i) **தன்கூற்று.** கந்தன் முருகனை நோக்கி, "**இங்கே இப்பொழுது** நீர் செய்கின்ற வேலை நல்லதன்று," என்றான்.
**பிறன்கூற்று.** கந்தன் முருகனை நோக்கி, **அங்கே அப்பொழுது** அவன் செய்த வேலை நல்லதன்று என்றான்.

i) **தன் கூற்று.** கந்தன் உன்னைப் பார்த்து, "யான் **இன்று இங்ஙனம்** நோயால் வருந்துகின்றேன்." என்றான்.
**பிறன்கூற்று.** கந்தன் உன்னைப் பார்த்துத்தான் **அன்று அங்ஙனம்** நோயால் வருந்தினான் என்றான்.



RangaRakes tamilnavarasam.com

**(iii)** **தன்கூற்று.** கந்தன் முருகனை நோக்கி, "**நான் உன்னிடம் நேற்று வந்தேன்**, " என்றான்.

**பிறன்கூற்று.** கந்தன் முருகனை நோக்கித் **தான் அவனிடம் முதனாட் சென்றான்** என்றான்.

**பயிற்சி 40**

**பின்வரும் வாக்கியங்களைப் பிறன் கூற்றிலே அறிவிக்க:**

**(1)** அவன் "எனக்கு ஒரு துன்பமும் இல்லை," என்றான்.

**(2)** கந்தன் "நான் கொழுத்து இருக்கின்றேன்," என்று கூறினான்.

**(3)** "நீயிர் எல்லீருங் கணிதத்திற் குறைந்த புள்ளி எடுத்தீர்கள்" என ஆசிரியர் கூறினார்.

**(4)** எனது தந்தையார் என்னைப் பார்த்து, "நீ முன் செய்த வினையின் பயனாக இப்பிள்ளையைப் பெற்றாய்," எனக் கடிந்து கூறினார்.

**(5)** "யான் பல்லாண்டுகளாக என் மகனது வரவை எதிர் பார்த்த வண்ணம் இருக்கின்றேன்," என அவன் எழுதினான்.

**(6)** "யான் இழந்த பொருள் அதுதான்; இதனை நிறுவாது விட்டேனாயின், யான் உரிமை கோராது விடுவேன்," என்று அவன் கூறினான்.

**(7)** ஆசிரியர் என்னைப்பார்த்து, நீ நாளைக்கு இங்கு வருவாயாயின், யான் இக்கணக்கை உனக்கு விளக்குவேன், " என வாக்களித்தார்.

**(8)** "பழிக்குப் பழி செய்யாது விடேன்," எனச் சிறைச்சாலை செல்பவன் கூறினான்; அதனைக்கேட்ட அவன் பகைவன், நீ செய்வதை நானுங் காணத்தான் இருக்கின்றேன்," என்றனன்.

**(9)** "கள்ளங் கபடம் இல்லாத நீ இக் கொடியவரின் சிந்தையைத் துருவி அறியமாட்டாய்," என எனது தந்தையார் எனக்குச் சொன்னார்.

**(10)** "நீ கட்டையனுமல்லை; நெட்டையனுமல்லை ; இடையுயரத்தவனானாய், " என எனது தாயார் எனக்குக் கூறினார்.

**(11)** ஆசிரியர் என்னை நோக்கி, "நீ நேற்று இங்கு வந்திருந்தால், யான் உன்னைத் தண்டித்திருப்பேன்," எனப் பயமுறுத்தினார்.

**(12)** "தந்தவன் கொண்டுபோய் விட்டான் ; நாஞ் செய்வதற்கு யாதுமில்லை," என வாய்விட்டு அரற்றினார் எனது தந்தையார்.

**(13)** "செய்வது இன்னதென அறியாது விளிக்கின்றனை; இது உனது இயல்பிற்குப் பொருத்தமன்று," எனக் கூறி நகைத்தாள் என் சகோதரி.





**(14)** நீ என்னைப்பார்த்து, "நீ இவ் வண்ணம் நடந்தால் அடிப்பேன்," என்றாய்.

**(15)** "நான் இங்ஙனம் நடந்தேனாயின், உலகம் என்னைப் பொருட்படுத்தாது," என எனது நண்பன் கூறினான்.

**(16)** "இப்பொழுது நான் இங்கு வாழ்கின்றேன்," என என் சினேகிதன் சொன்னான்.

**(17)** "யான் நாளைக்கு உன்னைச் சந்திக்கவருவேன்," என்று எனது நண்பன் என்னைநோக்கிச் சொன்னான்.

**(18)** அம்மனிதன் அப்பெண்ணைப் பார்த்து, "யான் நின்னையும் நின் மருமகளையும் அறிவேன்," எனக் கூறினான்.

**(19)** ஒருநாள் எனது தந்தையார் என்னை அழைத்து, "நீ பணம் உழைத்தற்குத் தக்க வயதை அடைந்தனை; காலந்தாழ்த்தாது யாதேனும் ஒரு வேலையில் அமர்தல் நன்று," என்றார்.

**(20)** "யான் இப்போது நடும் இம்மரங்கள் வளர்ந்து பழந்தருங் காலத்தைக் காணமாட்டேன்," என அக் கமக்காரன் முணுமுணுத்தான்.

**வினாக்கள்**

**197.** வினாக்களை அறிவித்தற்கண் வினவுதல், கேட்டல் முதலிய சொற்களை முன்னிட்டுப் பிறன் கூற்று ஆக்கப்படும்.

**(i)** **தன்கூற்று.** "நீ எங்கே செல்கிறாய்?" என அவன் என்னைக் கேட்டான்.

**பிறன்கூற்று.** அவன் என்னை யான் எங்கே சென்றேனென விசாரித்தான்.

**(ii)** **தன்கூற்று.** அச்சன்னியாசி கமலத்திடம், "நீ எங்கே வாழ்கின்றாய்?" என வினவினன்.

**பிறன்கூற்று.** அச்சன்னியாசி கமலத்திடம் அவள் எங்கே வாழ்ந்தாள் என உசாவினான்.

**(iii)** **தன்கூற்று.** "யான் கோவலனைத் தண்டித்தது நீதியாகுமா?" எனப் பாண்டியன் சிந்தித்தான்.

**பிறன்கூற்று.** தான் கோவலனைத் தண்டித்தது நீதியாகுமாவெனப் பாண்டியன் ஆராய்ந்தான்.



RangaRakes

tamilnavarasam.com

(iv) **தன்கூற்று.** "இத்தகை மனிதன் பேச்சிற்குச் செவிசாய்க்கின்றீரா?" என அவன் கேட்டான்.

**பிறன்கூற்று.** அத்தகை மனிதன் பேச்சிற்கு அவர்கள் செவி சாய்த்தனரா என அவன் அவர்களை விசாரித்தான்.

(v) **தன்கூற்று.** "இப்பரிசோதனை ஒரு முடிபுக்கும் என்னை உய்க் காததற்குக் காரணம் யாது?" எனத் தன்னைத் தானே கேட்டான்.

**பிறன்கூற்று.** அப்பரிசோதனை ஒரு முடிபுக்குந் தன்னை உய்க் காததற்குக் காரணம் யாதென ஆராய்ந்தான்.

(vi) **தன்கூற்று.** ஆசிரியர், "நீ ஏன் கலாசாலைக்கு நேற்று வரவில்லை?" என என்னைக் கேட்டார்.

**பிறன்கூற்று.** ஆசிரியர் நான் ஏன் கலாசாலைக்கு முதனாட் செல்ல வில்லை என விசாரித்தார்.

(vii) **தன்கூற்று.** "நீ நினது தந்தையிலும் அறிவு மிக்கவனானாய் என எண்ணுகின்றனையோ?" என்று அவனது தாய் வெகுண்டு நகைத்தாள்.

**பிறன்கூற்று.** தனது தந்தையிலுந் தான் அறிவுமிக்கவன் என அவன் எண்ணினனோ என்று அவனது தாய் வெகுண்டு நகைத்தாள்.

## பயிற்சி 41

**பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றையும் பிறன்கூற்றிலே அறிவிக்க:-**

1. "நீ என்ன செய்கிறாய்?" என எனது ஆசிரியர் என்னைக் கேட்டார்.
2. அக்குழந்தை தனது தாயாரைப் பார்த்து, "சோறு தரமாட்டீரா?" என்றாற்போல் அழுதது.
3. "உங்களுள் எத்தனைபேர் சிலப்பதிகாரங் கற்றவர்?" என ஆசிரியன் மாணாக்கரைக் கேட்டான்.
4. சொற்பொழிவு செய்தவன் அவையினரைநோக்கி, "நாம் எல்லாம் இறைவன் அடியவர் அல்லோமோ?" என்றனன்.
5. "நீயீர் எல்லீரும் எங்கு செல்கின்றீர்?" என வழிப்போக்கன் ஒருவன் எம்மைக் கேட்டான்.





6. "நாய் வாலை ஆட்டுவது எதற்கெனத் தெரியுமா?" என்று எமது ஆசிரியர் எம்மைப் பரிகாசஞ் செய்தார்.
7. தந்தை மகனை அழைத்து, "நீ நேற்று என்ன பிழை செய்தாய்?" என வினவினன்.
8. என் மனைவி, "எங் குழந்தைக்கு வன்சொற் சொன்னீரா?" என என்னைக் கடிந்தனள்.
9. "எடுத்தகாரியத்தை முடியாது விடுதல் நின் பெருமைக்கு இழுக் காகாதா?" என என்னை ஊக்கப்படுத்தினான் எனது நண்பன்.
10. "நீ ஏன் அந்த ஏழையைத் துன்புறுத்துகிறாய்? ஏழை அழுதகண்ணீர் கூரியவாளை ஒக்கும் என்பதை நீ அறியாயா?" என்று தந்தை மக னுக்குப் புத்தி புகட்டினன்.
11. அவ்வறிஞன் தன் மக்களை அழைத்து, "நீங்கள் ஏன் ஒருவீரோடு ஒருவீர் பகைக்கின்றீர்? எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் என்னும் பழமொழியை மறந்தீரா? என்றனன்.
12. "நீங்கள் ஏன் உங்கள் வாழ்நாள்களை வாளா கழிக்கின்றீர்கள்?" என அவன் எம்மை விசாரித்தான்.
13. ஆலோசனையிலே மூழ்கி இருந்த தந்தையைப் பார்த்து மகன், "இப்பொழுது எம்மிடையே உள்ள மொழிப் பிரச்சினை எப்பொழுது தீரும்?" என வினவினன்.
14. "நிலத்திலே உள்ள நீருக்குங் கடலிலே உள்ள நீருக்கும் வானிலே உள்ள நீருக்கும் யாதுந் தொடர்பு உண்டா?" என மாணாக்கன் ஆசிரியனைக் கேட்டான்.
15. "பெரியீர், நீர் யார்? ஏன் இங்கு வந்தீர்?" என அவர்கள் கத்தினார்கள்.
16. வினாப்பத்திரம் பெற்றதும் அவ்விளைஞன், "இவ்வினாவிற்கு எவ்வாறு யான் விடையிறுப்பேன்?" என ஆலோசித்தனன்.
17. பசுக்கன்றைச் சுமந்த அந்தணன் தம்மை அணுகியதும் முதலாங் கள்வன், "நீர் ஏன் ஒரு நாய்க்குட்டியை முதுகிற் சுமக்கின்றீர்? உமக்கு வெட்கமில்லையா?" என்றனன்.
18. பேரரசன் சிற்றரசரைப்பார்த்து, "நீயிர் திறைசெலுத்தத் தவறினால் யான் உம்மைத் தண்டிப்பேன் என்பதை அறியீரோ? என்றனன்.
19. நோய்வாய்ப்பட்டுக்கிடந்த கணவன் மனைவியை நோக்கி, "எனக்கு மரணகாலங் கிட்டிவிட்டது ; யான் மரித்த பின் நீ புனர்விவாகஞ் செய்வாயோ?" எனக்கேட்டான்.
20. விஞ்ஞானவறிஞன் ஒருவன் சொற்பொழிவு ஆற்றும்போது அவை



RangaRakes
tamilnavarasam.com

யினரைப் பார்த்து, "அணுக்குண்டின் ஆற்றல் இத்துணையென நீங்கள் அறிவீரா?" என வினவினன்.

21. கிணற்றுக்குள் வீழ்ந்த ஒருத்தி, "என்னை மீட்டற்கு ஒருவரும் இங்கு இல்லையோ?" எனக் கதறினாள்.

22. காட்டிற்குள்ளே வழிதவறிய ஒருவன் உரத்த குரலில், "வழிதவறி அலையும் எனக்கு வழிகாட்டுவார் யாரும் இவ்விடத்து இலரோ?" எனச் சத்தமிட்டான்.

23. யான் மெல்ல நடந்து போனதைக்கண்ட நண்பன், "என்னோடு விரைந்து நடக்கமாட்டாயா?" என என்னை அன்போடு வினவினான்.

24. "நீ என்னோடு இன்று வீட்டிற்கு வருகின்றாயா?" என எனது அண்ணன் என்னைக் கேட்டான்.

**ஏவல்** (கட்டளை, வாழ்த்து, வேண்டிக்கோடல், விதி, வைதல்)

**198.** ஏவலை அறிவித்தற்கண்ணே கட்டளை, வாழ்த்தல் முதலிய னவற்றை உணர்த்துஞ் சொற்களை முன்னிட்டுப் பிறன்கூற்று ஆக்கப்படும்; ஏவல்வினைமுற்றும் வியங்கோள் வினைமுற்றுஞ் செயற்கு என்னும் பொருள் பட வருஞ் சொற்களாக மாற்றப்படும்.

**(i) தன்கூற்று.** "நீ இங்கேவா," என்று அவன் எனக்குச் சொன்னான்.

**பிறன்கூற்று.** அவன் என்னை அங்கே செல்லுமாறு கட்டளை யிட்டான்.

**(ii) தன்கூற்று.** மாணாக்கன் ஆசிரியனுக்கு, "எனக்குக் பாடஞ் சொல்லித்தருக," என்றான்.

**பிறன்கூற்று.** மாணாக்கன் ஆசிரியனைத் தனக்குப் பாடஞ் சொல்லித் தரும்படி வேண்டினான்.

**(iii) தன்கூற்று.** அந்தணன் அரசனுக்கு, "நின் செங்கோல் ஓங்குக," என்றான்.

**பிறன்கூற்று.** அந்தணன் அரசனது செங்கோல் ஓங்கும் வண்ணம் வாழ்த்தினான்.

**(iv) தன்கூற்று.** ஆசிரியன் மாணாக்கருக்கு, "நாடோறுங் காலை ஐந்து மணிக்கு நித்திரை விட்டெழுந்து நும் பாடம் படிக்க வேண்டும்," எனக் கூறினான்.





**பிறன்கூற்று.** ஆசிரியன் மாணாக்கரை நாடோறுங் காலை ஐந்து மணிக்கு நித்திரை விட்டெழுந்து தம் பாடங்களைப் படிக்குமாறு விதித்தான்.

**(v) தன்கூற்று.** தன்னை ஏசியவனை அவன், "நீ கெடுக," என்றான்.

**பிறன்கூற்று.** தன்னை ஏசியவனை அவன் கெடும்படி வைதான்.

**(vi) தன்கூற்று.** எனது அண்ணன், "மூர்க்கரொடு இணங்கேல்," என எனக்கு அறிவுரை கூறினான்.

**பிறன்கூற்று.** எனது அண்ணன் என்னை மூர்க்கரொடு இணங்காது நிற்குமாறு அறிவுரை புகட்டினான்.

**(vii) தன்கூற்று.** அப்பெரியவர் கலகம் விளைத்துநின்ற எனக்கு "போர்த்தொழில் புரியேல்," எனக் கூறினார்.

**பிறன்கூற்று** அப்பெரியவர் கலகம் விளைத்து நின்ற என்னைப் போர்த்தொழில் புரியாமே பணித்தார்.

## பயிற்சி 42

**பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றையும் பிறன் கூற்றிலே அறிவிக்க:**

(1) சேனைத்தலைவன் காலாட் படைகளுக்கு, "அணிநடை நடமின்," என்றான்.

(2) பேராசிரியர் ஒருவர் தம் மாணாக்கரை நோக்கி, "யாம் சொல்வதைக் கேளுங்கள்", என்றார்.

(3) "நீ இங்கே வராதொழிக," என்று எனது தாயார் எனக்குக் கூறினார்.

(4) "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்," என்று அறிஞர் ஒருவர் என்னிடஞ் சொன்னார்.

(5) எனது தந்தையார், "குறையச் சொல்லி நிறைய அள," என எனக்கு அறிவுரை கூறினார்.

(6) புலவன் ஒருவன் என்னைப்பார்த்து, "பிழைபடச் சொல்லேல்," என்றனன்.

(7) பெண் ஒருத்தி தன்னைத் தூற்றியவனுக்கு, "நின் செல்வங் குன்றுக," என்று கூறினாள்.

(8) கொடியவருடன் சகவாசஞ் செய்யும் மகனை விளித்து, "பாம்பொடு பழகேல்," எனத் தந்தை கூறினான்.



RangaRakes
tamilnavarasam.com

(9) நாட்டுத்தொண்டன் ஒருவன், "எந்நாடு சிறக்க", என்றனன்.
(10) அப்புலவன் அரசனை நோக்கி, "நின்புகழ் ஓங்குக," என்றனன்.
(11) யாருந் துணையின்றி வருந்தும் அவ்விளைஞனைப்பார்த்து, "பெரியாரைத் துணைக்கொள்," என அவ்வறிஞன் கூறினான்.
(12) அப்புலவன் வள்ளலை நோக்கி, "நீ குணஞ் சிறக்க," என்றனன்.
(13) அரசன் போர்முனை புகுந்து குதிரைப்படையை விளித்து, "கடும் போர் புரியுங்கள்," என்றான்.
(14) "யான் இவ்வாறு நடந்தேனாயின், கெடுக என் வாழ்நாள்," என்று அரசனுக்கு அமைச்சன் சொன்னான்.
(15) சேனைத்தலைவன் முதுகிட்டோடுந் தன் படைகளைக் கூவி அழைத்து, "நீர் இவ்வாறு ஓடாதீர்," என்றான்.
(16) தன்னிடம் வந்த விருந்தினனை "வருக," என அவன் அழைத்து ஓர் ஆசனத்தில் அமர்த்தினான்.
(17) "யான் உனக்கு நேற்றுக் கொடுத்த பொருளை இன்று எனக்குத் தர வேண்டாம்," என்று அவன் தனது நண்பனுக்குச் சொன்னான்.
(18) "என்னைப் போகவிடுங்கள்," என்று அவன் சத்தமிட்டான்.
(19) "சமாதானமா யிருந்து யான் சொல்லும் நற்புத்திகளைக் கேட்கக் கடவீர்,' என அப்பெரியவர் அவர்களுக்குக் கூறினார்.
(20) "பேதமை அகற்று," என ஞானி ஒருவன் தனது சீடனுக்குச் சொன்னான்.

**உணர்ச்சி மிகுதி** (வியப்பு , இரக்கம், இகழ்ச்சி, அச்சம், அதிசயம்)

**199.** உணர்ச்சி மிகுதியை அறிவித்தற்கண் வியப்பு, இரக்கம் முதலிய வற்றை உணர்த்துஞ் சொற்களை முன்னிட்டுப் பிறன்கூற்று ஆக்கப்படும்.

(1) **தன்கூற்று.** "இக்காட்சியின் அழகு என்னே!" என அவன் கூறினான்.
**பிறன்கூற்று.** அவன் அக்காட்சி மிக்க அழகுள்ளது என வியந்தான்.

(2) **தன்கூற்று.** "ஐயோ! பாம்பு ஒன்று என்னைத் துரத்துகின்றது," என்று அவன் அலறினான்.
**பிறன்கூற்று.** பாம்பு ஒன்று தன்னைத் துரத்தினதென அவன் அஞ்சி அலறினான்.





(3) **தன்கூற்று.** என் பாடத்தைப் பிழையின்றி யான் ஒப்பித் தமையைக் கண்ட ஆசிரியர், "ஓ! நீ நன்கு படித்தாய்," என்றனர்.
**பிறன்கூற்று.** என்பாடத்தைப் பிழையின்றி யான் ஒப்பித்தமையைக் கண்ட ஆசிரியர் யான் நன்கு படித்தேனெனக் கூறி மெச்சினார்.

(4) **தன்கூற்று.** மாணாக்கன் ஒருவன் எழுதியகட்டுரை எழுத்துச் சொற்பிழைகளோடு கூடியிருத்தலைக்கண்ட ஆசிரியர், "சீ! உன் கட்டுரை அருவருக்கத் தக்கது," என்றார்.
**பிறன்கூற்று.** மாணாக்கன் ஒருவன் எழுதிய கட்டுரை எழுத்துச் சொற்பிழைகளோடுகூடி யிருத்தலைக்கண்ட ஆசிரியர் அவன் கட்டுரை அருவருக்கத்தக்க தெனக் கூறி இகழ்ந்தார்.

(5) **தன்கூற்று.** "கடவுளே! எனக்குத் துணைநில். யான் ஒருபோதுங் களவெடேன்," என அவ்வேழை கூறினான்.
**பிறன்கூற்று.** தான் களவெடுப்பதில்லையென உறுதி கொண்ட தற்குத் துணையாக இருக்குமாறு அவ்வேழை கடவுளைப் பிரார்த்தித்தான்.

(6) **தன்கூற்று.** "ஐயோ! நான் அழிகின்றேன்," என அவன் சொன்னான்.
**பிறன்கூற்று.** தான் அழிந்தானென அவன் இரங்கினான்.

**பயிற்சி 43.**

**பின்வரும் வாக்கியங்களைப் பிறன்கூற்றிலே அறிவிக்க:**

(1) "ஓகோ! நீயுந் தலை வீங்கிவிட்டாய்," எனக் கந்தன் முருகனுக்குச் சொன்னான்.
(2) "ஐயோ! அவ்வேழைக்கு இத்துன்பமும் நேர்ந்ததே," என எனது அண்ணன் எனக்குச் சொன்னான்.
(3) "கூகூ! யானை ஒன்று என்னைநோக்கி வருகின்றது," என யான் கதறினேன்.
(4) "சீச்சீ! என்மகன் இக்கொடுமைகளையுஞ் செய்தானே," என அவ் வறிஞன் கூறினான்.



RangaRakes
tamilnavarasam.com

(5) "என் செய்யலாம்! உனக்கும் வால் முளைத்துவிட்டது," என அவன் மாமன் அவனுக்குச் சொன்னான்.

(6) "அம்ம! இத்துணைப் பாரங்கொண்ட பொருளை உயர்த்தினாயே," எனத் தந்தை மகனுக்குச் சொன்னான்.

(7) "அந்தோ! பொருள் எல்லாம் இழந்து கெட்டுநின்கின்றாய்," என எனது நண்பன் எனக்குக் கூறினான்.

(8) "ஆ! இச்சிறியவன் அப்பெரிய காரியத்தைச் செய்தானே," என ஆசிரியர் கூறினார்.

(9) "ஆருமற்ற பாவிக்குக் கடவுளே துணை யென்பர். இவ்வாக்கியம் என்மாட்டுப் பொய்த்துவிட்டதே," என அவ்வேழைப்பெண் கூறினாள்.

(10) "ஓ ஓ! இவர் பெரியவர்," என ஒருவன் கூறினான்.

(11) "நீ செய்த செயல் உறியிலே வெண்ணெயிருக்க நெய்க்கலைந்தது போலாயிற்றே! என எனது மைத்துனன் எனக்குக் கூறினான்.

(12) "அன்று தின்னும் பலாக்காயினும் இன்று தின்னுங் களாக்காய் மேல் என்பதை மறந்து கைப்பொருள் எல்லாம் இழந்து நிற்கின்றனையே," என ஒருவன் தனது நண்பனுக்குக் கூறினான்.

### பிறன்கூற்றைத் தன்கூற்றாக்கல்

**200.** பிறன் கூற்றைத் தன்கூற்றாக்கும் முறைகள் பின்வரும் உதாரணங்கள் பற்றி அறியப்படும்:

(i) **பிறன்கூற்று.** தான் நோயின்றி வாழ்கின்றானென அவன் கூறினான்.

**தன்கூற்று.** அவன், "நான் நோயின்றி வாழ்கிறேன்," எனக் கூறினான்.

(ii) **பிறன்கூற்று.** தான் முதனாள் அங்கு செல்லவில்லை யென அவன் உரைத்தான்.

**தன்கூற்று.** "நான் நேற்று இங்கு வரவில்லை," என அவன் உரைத்தான்.

(iii) **பிறன்கூற்று.** முருகன் கந்தனை அவன் வாழ்ந்த ஊர் நல்லூரன்றோ என விசாரித்தான்.

**தன்கூற்று.** "நீ வாழ்கின்ற ஊர் நல்லூரன்றோ?" எனக்கந்தனை முருகன் கேட்டான்.





(iv) **பிறன்கூற்று.** அப்பெரியவர் ஆழமான நீரிலே நீந்திநின்ற என்னை நீர் விளையாடாமே பணித்தார்.

**தன்கூற்று.** அப்பெரியவர் ஆழமான நீரிலே நீந்திநின்ற எனக்கு, "நீர் விளையாடேல்,' எனக் கூறினார்.

(v) **பிறன்கூற்று.** பிறர் செல்வங்கண்டு பொறாமை கொண்ட ஒருவனைக் கண்ட அப்பெருமாட்டி அவன் அழுக்காற்றை இகழ்ந்தாள்.

**தன்கூற்று.** பிறர் செல்வங்கண்டு பொறாமை கொண்ட ஒருவனைக் கண்ட அப்பெருமாட்டி, "சீ! நீ அழுக்காறு உற்றாய்," என்றாள்.

## பயிற்சி 44

**பின்வரும் வாக்கியங்களைத் தன்கூற்றிலே அறிவிக்க:-**

(1) சென்ற இருபது நாள்களாகத் தான் அவனைக் காணவில்லையென அவன் எனக்குச் சொன்னான்.

(2) அவ்விளைஞன் என்னோடு தான் செல்வான் என எனக்குச் சொல்கின்றான்.

(3) என் பெயர் யாதென அவன் என்னைக் கேட்டான்.

(4) சூரியன் பூமியைச்சுற்றிச் செல்கின்றதென அவன் கூறினான்.

(5) முருகன் அவனை அவன் பெயர் கந்தனன்றோவென விசாரித்தான்.

(6) அவர் என்னைத் திரைகடல் ஓடியுந் திரவியந் தேடுமாறு பணித்தார்.

(7) புலியைத் தன் முன்னிலையிற்கண்ட சிறுவன் ஒருவன் தன்னுயிர் போயிற்றென அஞ்சிக் குளறினான்.

(8) அவன் என்னை எனக்கு வேண்டியது யாதெனக் கேட்டான்.

(9) அவர் தாங் கடும்வேலை செய்தமையாலே இளைத்து விட்டாரெனக் கூறினார்.

(10) அச் சன்னியாசி தனக்கு ஓர் ஆடை வேண்டுமெனக் கூறினான்.

(11) தச்சன் ஒருவன் தனக்கு ஒரு வேப்பமரம் விலைக்குக் கொடுக்குமாறு என்னைக் கேட்டான்.

(12) யான் அன்று எவ்வாறு இருந்தேனென அவன் என்னைக் கேட்டான்.

(13) தான் அடுத்த நாட்சென்று அச் சபையிற் சொற்பொழிவு ஆற்றுவான் என அவன் எனக்குக் கூறினான்.

(14) தான் உளம் ஒருப்படாதே. அச் செயலைச் செய்தானென அவன் எனக்குச் சொன்னான்.



RangaRakes
tamilnavarasam.com

**(15)** தம் மாணாக்கரை அமைதியாய் இருக்குமாறு ஆசிரியர் கட்டளை இட்டார்.

**(16)** நாமெல்லாம் இறைவன் அடிமைகளென அவர் கூறினார்.

**(17)** மிகக் கூடிய புள்ளி பெற்றவனுக்கே தாம் பரிசு கொடுப்பாரென ஆசிரியர் தம் மாணாக்கருக்குச் சொன்னார்.

**(18)** தாம் இறந்ததன்பின் அவர்கள் சண்டையிடாது ஒற்றுமையாக வாழ வேண்டுமெனத் தந்தையார் தம் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

**(19)** யான் பெருங் குணமுள்ளேனென எனது தாயார் என்னைப் பாராட்டினார்.

**(20)** தான் அவ்வாறு செய்யாதுவிட்டால் அவனுக்குப் பேராபத்து விளைந் திருக்குமென எனது நண்பன் கூறினான்.

**(21)** தான் அடுத்த நாள் என்னைக்கண்டு பேசுவானென எனக்கு அவன் கடிதம் எழுதினான்.

**(22)** எண்ணெழுத்து இகழாது வாழுமாறு ஆசிரியர் தமது மாணாக் கருக்குப் புத்திபுகட்டினார்.

**(23)** தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும் என்பதை அறியாது இல் வாழ்க்கை நடத்துகின்றேனென என்னை அவர் இகழ்கின்றார்.

**(24)** வாள் பிடிக்கத் தெரியாத தான் எவ்வாறு கள்வரை எதிர்க்கலாமெனத் தந்தையை மகன் கேட்டான்.

**(25)** எனது தம்பி தான் ஒருவருக்கும் ஒரு பிழையுஞ் செய்யவில்லை எனப் பிடிவாதமாய் நின்றான்.

**(26)** பெற்ற தாயைப் பேணாத தன் மகன் தன்னைப் பேணானென நினைந்து தந்தை வருந்தினான்.

**(27)** தன்மீது இரக்கங் காட்டுமாறு அக் குற்றவாளி நீதிபதியை வேண்டினான்.

**(28)** அம் முனிவன் அவன் குலம் அழிந்து போகுமாறு சபித்தான்.

**(29)** சூரியன் உதயமானதைக் கண்ட புலவன் அதன் மிக்க வனப்பை வியந்தான்.

**(30)** தெருவிற் கிடந்து வருந்தும் ஒருவனை அவன் ஏன் அவ்வாறு கிடந்தானென யான் கேட்டபோது மூன்று நாள்களாய்த் தான் உண வின்றிக் கிடந்தமையே அதற்குக் காரணம் என்றான்.



## அதிகாரம் 12.

# வழாநிலையும் வழுவமைதியும்

**201.** ஒரு சொற்றொடர் இலக்கணக் குற்றமின்றி நின்றால் **வழா நிலையாம்**; இலக்கணக் குற்றம் உடையதாயின் **வழுவாம்**; இலக்கணக் குற்றம் உடைய தாயினும் முன்னோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயின் **வழுவமைதியாம்.**

### I. வழா நிலை

**202.** ஒரு சொற்றொடரிலே திணை, பால், இடம், காலம் என்பன மயங்கி வரின் வழுவாம்; மயங்காது வரின் வழா நிலையாம்.

**(i)** அவன் வந்தது. இங்கு, உயர்திணைச் சொல் அஃறிணைச் சொல் லோடு மயங்கி வந்தமையாலே திணைவழு. அவன் வந்தான் என்பது வழா நிலை.

**(ii)** அவர் வந்தாள். இங்கு, பலர்பாற் சொல் பெண்பாற் சொல்லொடு மயங்கி வந்தமையாலே பால் வழு. அவர் வந்தார் என்பது வழா நிலை.

**(iii)** நான் வருவாய். இங்கு, தன்மையிடச் சொல் முன்னிலையிடச் சொல் லொடு மயங்கி வந்தமையாலே இட வழு. நான் வருவேன் என்பது வழாநிலை.

**(iv)** நேற்று வருவான். இங்கு, இறந்தகாலச் சொல் எதிர்காலச் சொல் லொடு மயங்கி வந்தமையாலே கால வழு. நேற்று வந்தான் என்பது வழா நிலை.

**203.** வினாவுமிடத்தும் விடையிறுக்குமிடத்தும் முதல் சினைகள் விரவி வரின் வழுவாம்; விரவாது வரின் வழாநிலையாம்.

**(i)** இவள் கெட்டாளோ, இவள் கண் கெட்டதோ? இது முதலுஞ் சினையும் விரவி வந்தமையால் வினா வழு. இவள் கெட்டாளோ, இவன் கெட்டானோ? இது வாழா நிலை.





RangaRakes
tamilnavarasam.com

**(ii)** மேலே தந்த வினாவிற்கு விடையாக,
இவள் கெட்டாள், இவள் கண் கெட்டது என்பது முதலுஞ் சினையும் விரவி வந்தமையால் விடை வழு. இவள் கெட்டாள் என்பது வழா நிலை.

**204.** தன்கூற்றிலுள்ள அண்மைச் சொற்கள் பிறன் கூற்றிற் சேய்மைச் சொற்களாக மாற்றப்பட வேண்டிய விடத்து மாற்றப்படாது நின்றாற் கூற்று வழுவாம் மாற்றப்பட்டு நின்றால் வழா நிலையாம்.

வேலன் இராமனைநோக்கி, "நீ நேற்று இங்கு வந்து என்ன செய்தாய்" என்றனன். இவ்வாக்கியத்தைப் பிறன் கூற்றில் அறிவித்தற்கண், வேலன் இராமனை அவன் நேற்று இங்கு வந்து என்ன செய்தான் என்றனன்' எனக் கூறின் கூற்றுவழுவாம்; நேற்று என்பது கூற்றுக்காலம் பற்றி வந்தவழு; இங்கு, வந்த என்பன கூற்றிடம்பற்றி வந்த வழுக்கள்; என்றனன் என்பது கேட்டல் முதலிய சொற்களைப் பிறன்கூற்றில் முன்னிடாமையால் வந்தவழு. இதனை 'வேலன் இராமனை அவன் முதனாள் அங்குச் சென்று என்ன செய்தான் என விசாரித்தான்' என்று கூறின் வழாநிலையாம்.

**205.** பலபொருள்களை எண்ணுமிடத்து இனமில்லாப் பொருள்களை எண்ணுதல் மரபுவழுவாம்; இனமாய பொருள்களை எண்ணுதல் மரபாம்.

| | |
|---|---|
| பொன்னுந் துகிரும் முத்தும் நல்லூருங் கண்டேன். | மரபுவழு. |
| பொன்னுந் துகிரும் முத்தும் நல்லூரிற் கண்டேன். | மரபு. |

**206.** ஒருபொருளைக் குறித்துப் பல பெயர்கள் வருமிடத்து ஒரு முடிக்குஞ் சொல்லாற் பொருள் ஒன்றெனக் காட்டாமை மரபுவழுவாம்; காட்டுதல் மரபாம்.

| | |
|---|---|
| ஆசிரியன் மதுரையான் முருகன். | மரபுவழு. |
| ஆசிரியன் மதுரையான் முருகன் வந்தான். | மரபு. |

பொருள் ஒன்றெனத் தெளியநின்ற விடத்துப் பெயர்தொறும் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொடுத்துக் கூறுதல் மரபாம்.

மூவர்கண் முதல்வன் வந்தான்; முக்கணான் குமரன் வந்தான்; வேற்படை வீரன்வந்தான். இங்கு, முதல்வன், குமரன், வீரன் என்பன முருகன் என்னும் ஒருபொருளே என்பது தெளிய நின்றமையால் மரபாகும்.





**207.** வழக்கிற் படர்க்கைப் பெயரொடு சுட்டுப்பெயர் சேருமிடத்து, முடிக்குஞ் சொல் வினையெனின் சுட்டுப்பெயர் முன்வருதல் வழுவாம் ; பின்வருதல் வழாநிலையாம் ; முடிக்குஞ் சொல் பெயரெனின் சுட்டுப்பெயர் முன்னாதல் பின்னாதல் வரலாம்.

| | | |
|---|---|---|
| **(i)** | அவன் வந்தான்; கந்தனுக்கு உணவு கொடுக்க. | மரபுவழு. |
| | கந்தன் வந்தான்; அவனுக்கு உணவு கொடுக்க. | மரபுவழாநிலை. |
| **(ii)** | அவன் கந்தன். | மரபு வழாநிலை. |
| | கந்தன் அவன். | மரபு வழாநிலை. |

**208.** பலபொருளொருசொற்களைச் சிறப்புச் சொற்களோடு கூட்டிப் பொருள் விளக்குமாறு செய்யாமை மரபு வழுவாம்; விளக்குமாறு செய்யின் மரபாம்.

| | |
|---|---|
| மா நின்றது. | மரபு வழு. |
| மாமரம் நின்றது, பாய்மா நின்றதுஎன்பன | மரபு வழாநிலை. |

**209.** வழக்கில் அடை, சினை, முதல் என்பன இம் முறையானன்றிப் பிறமுறையால் வந்தால் மரபு வழுவாம் ; இம்முறையால் வந்தால் வழா நிலையாம்.

கைவிற்கந்தன் என்பது அடை, சினை, முதல் என்னும் முறையானன்றிச் சினை, அடை, முதல் என்னும் முறையால் வந்தமையாலே மரபு வழு.

விற்கைக்கந்தன் என்பது அடை, சினை, முதல் என்னும் முறையால் வந்தமையால் வழாநிலை.

**210.** இவ்வளவினது என்று அறியப்பட்ட பொருளையும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளையும் முடிக்குஞ் சொல்லோடு கூட்டிச் சொல்லுமிடத்து முற்றும்மை கொடாது முடித்தல் வழுவாம்; கொடுத்து முடித்தல் மரபாம்.

| | | |
|---|---|---|
| **(i)** | தமிழ்நாட்டு மூவேந்தர் வந்தனர். | வழு. |
| | தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தனர். | வழாநிலை. |



RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| **(ii)** | புலி புற்றின்னல் ஓரிடத்தில்லை. | வழு. |
| | புலி புற்றின்னல் ஓரிடத்துமில்லை. | வழாநிலை. |

**211.** ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் முறையே இழிந்தவன், ஒப்பவன், உயர்ந்தவன் இரத்தற்கு வழங்குஞ் சொற்களாகாதுவிடின் வழுவாம்; ஆகின் வழாநிலையாம்.

| | | |
|---|---|---|
| **(i)** | ஆண்டானே தா. | வழு. |
| | ஆண்டானே ஈ. | வழாநிலை. (இழிந்தோன் இரப்பு) |
| **(ii)** | தோழனே கொடு. | வழு. |
| | தோழனே தா. | வழாநிலை. (ஒப்பவன் இரப்பு) |
| **(iii)** | அடிமையே ஈ. | வழு. |
| | அடிமையே கொடு. | வழாநிலை. (உயர்ந்தவன் இரப்பு) |

## பொது வழுக்களும் அவற்றினுடைய திருத்தங்களும்

**212.** தமிழ் எழுத்தாளர் பலர் எழுவாய் பயனிலைகளை இயையச் செய்யாமை பற்றியும், சில சொற்களின் பிரயோகங்களை அறியாமைபற்றியுந் தங்கட்டுரைகளிற் புணர்க்கும் வழுவகைகளும் அவற்றினுடைய திருத்தங்களும் பின்வரும் உதாரணங்களால் அறியப்படும்:

### 1. எழுவாய் பயனிலை இயைபு

**(1)** நீ அங்குப் போகக்கூடாது. (நீ என்னும் முன்னிலையிடச்சொல் போகக்கூடாது என்னும் படர்க்கையிடச் சொல்லோடு இயையாமை காண்க; நீ அங்குப் போதல் கூடாது எனத் திருத்துக.)

**(2)** எனக்குப் பாடத்தெரியாது. (தெரியாது என்னும் பயனிலைக்குரிய எழுவாய் தொக்காயினும் இல்லாமை காண்க. எனக்குப் பாடுதல் தெரியாது எனத் திருத்துக.)

**(3)** நீ வந்தால் நல்லது. (நல்லது என்னும் பயனிலைக்குரிய எழுவாய் அது என்பது தொக்கு நின்றதெனக் கொள்ளலாம் அது என்பது வருதலைக குறித்து நின்றது. எனினும், நீ வருவது நல்லது எனக் கூறலே சிறப்பு)





**(4)** நீர் அன்று கலாசாலைக்குச் சென்றீரல்லவா? (இடவழு. நீர் என்னும் முன்னிலைச்சொல் அல்லவா என்னும் படர்க்கைச் சொல்லோடு இயையாமை காண்க; நீர் அன்று கலாசாலைக்குச் சென்றீரல்லீரா? எனத்திருத்துக. நீர் அன்று காலாசாலைக்குச் சென்றீரன்றோ? என்றுந் திருத்தலாம்; இங்கு, நீர் அன்று கலாசாலைக்குச் சென்றீர் என்னுந் தொடர் எழுவாயாயும் அன்றா என்பது பயனிலையாயும் நிற்கின்றன வெனக் கொள்க.)

**(5)** நான்றான் அதனைச் செய்தது. (இடவழு. நான் என்னும் முன்னிலைச் சொல் செய்தது என்னும் படர்க்கைச் சொல்லோடு இயையாமை காண்க. நான்றான் அதனைச் செய்தேன் எனத் திருத்துக. நான்றான் அதனைச் செய்தவன் என்றாலும் அமையும். இங்கு 'ஆனேன்' என்னுஞ் சொல் ஈற்றிலே தொக்கு நிற்கின்றதெனக் கொள்க.

**(6)** அவன் தனது மாமனாரிடஞ் சென்று யாரோ ஒருவர் அவரைத் தேடுவதாகச் சொன்னான். இங்கு, ஒருவர் என்னும் எழுவாய் தேடுவது என்னுந் தொழிற் பெயராற் பயனிலை முற்றி நில்லாமை காண்க. ஒருவர் தேடுவது நன்று, அல்லது தீது என இவ்வகைகளிற் சொன்னால், பயனிலை முற்றிநிற்கும். ஒருவர் தேடுவதுஆக என்பதில், ஆக என்பதை என வென்னும் பொருளில் வரும் இடைச் சொல்லாகக் கொண்டாலும் பயனிலை முற்றாமைகாண்க ; ஆக என்பதைக் காரணப்பொருளில் வருஞ்செயவெனச்சமாகக் கொண்டால் ஒருவர் தேடுவது ஆகுமாறு எனப்பொருள் வேறுபடுதல் காண்க. செயவெனெச்சத்துப் பிற பொருள்களும் பொருந்தாமை காண்க. அவன் தனது மாமனாரிடஞ்சென்று யாரோ ஒருவர் அவரைத் தேடுகின்றாரெனச் சொன்னான் எனத் திருத்துக.)

### 2. தான், தாம் என்பனவற்றின் பிரயோகங்கள்

**(7)** அவர் தான் அங்கு நின்றார். (அவர் என்னும் பன்மைப் பெயர்ச்சொல் தான் என்னும் இடைச்சொல்லோடு இயையாமைகாண்க. அவர்தாம் அங்கு நின்றார் எனத் திருத்துக.)

**(8)** அவர் தான் அதனைச் செய்வில்லை எனக்கூறினார்.(அவர் என்னும் பன்மைப் பெயர்ச்சொல் தான் என்னும் ஒருமைப் பெயர்ச் சொல்லோடு இயையாமை காண்க. இது பன்மையொருமை மயக்கம், இதனை அவர் தாம் அதனைச் செய்யவில்லையெனக் கூறினார் எனத் திருத்துக.)



RangaRakes
tamilnavarasam.com

(9) அவர்தான் இவர் தான் வந்தாரா? (அவர், இவர் என்னும் பன்மைச் பெயர்ச்சொற்கள் உறழ்ச்சிப்பொருள் தரும் தான் – தான் என்னும் இடைச்சொல்லொடு இயையாமை காண்க. இதனை அவர்தாம் இவர் தாம் வந்தாரா? எனத் திருத்துக.)

### 3. எல்லாரும், அனைவரும் என்பனவற்றின் பிரயோகங்கள்

(10) நாம் எல்லாரும் அம் மைதானத்தில் விளையாடினோம். (இது இடவழு. நாம் என்னுந் தன்மையிடச்சொல் எல்லாரும் என்னும் படர்க்கை யிடச்சொல்லோடு இயையாமைகாண்க. இதனை நாம் எல்லாம் என்று திருத்துக.)

(11) நாம் அனைவரும் அவ்விழாவிற் பங்குபற்றுவோம். (இது இடவழு. நாம் அனைவேமும் எனத் திருத்துக.)

(12) நீர் எல்லாரும் நேற்று எங்கே போனீர்? (இது இடவழு. நீர் எல்லீரும் நேற்று எங்கேபோனீர் எனத் திருத்துக; நீரெல்லாம் நேற்று எங்கே போனீர் என்றுந் திருத்தலாம்.)

(13) அவன் எங்கள் எல்லாரையுங் குறை கூறினான். (எங்கள் எல்லாரையும் என்பது தன்மைப்படர்க்கை மயக்கம்; வழுவமைதி யெனக் கொள்ளலாம் ; எங்களுள் எல்லாரையும் என்பதே அதன் கருத்து; வழாநிலையாக்க விரும்பின் அவன் எல்லா நம்மையுங் குறை கூறினான் எனத் திருத்துக.)

(14) யான் உங்கள் எல்லாராலுங் கடியப்பட்டேன். (உங்கள் எல்லாராலும் என்பது முன்னிலைப் படர்க்கை மயக்கம்; வழுவமைதியெனக் கொள் ளலாம் ; உங்களுள் எல்லாராலும் என்பதே அதன்கருத்து; வழா நிலையாக்க விரும்பின் நீவிர் எல்லீராலும் எனத் திருத்துக.)

(15) அவன் நம் அனைவரையும் வைதான். (இது தன்மைப் படர்க்கை மயக்கம்; வழுவமைதியெனக் கொள்ளலாம். வழாநிலை யாக்க விரும்பின் நம் அனைவேமையும் எனத்திருத்துக.)

(16) யான் நும் அனைவரொடுங் கோயிலுக்கு வருவேன். (இது முன் னிலைப் படர்க்கை மயக்கம்; வழுவமைதியெனக் கொள்ளலாம்; வழாநிலையாக்க விரும்பின், நீவீர் அனைவீரொடும் எனத் திருத்துக.)

### 4. ஒருவன், ஒருவர், இருவர் முதலியனவற்றின் பிரயோகங்கள்

(17) யான் ஒருவன் உன்னைத்தேடி அலைகின்றேன் என்பதனை அறி கிலையோ? (யான் ஒருவன் அலைகின்றேன் என்பது தன்மைப்





படர்க்கை மயக்கமாகையால் இட வழு. இதனை ஒருவன் யான் அலைகின்றேன் எனத் திருத்தி வழுவமைதியாக்குக; ஒருவனாகிய யான் என்பதே இதன் பொருள்.)

8) நீர் ஒருவரே என்னைத் துன்புறுத்துகின்றீர். (நீர் ஒருவரே என்பது முன்னிலைப் படர்க்கை மயக்கமாகையால் இடவழு. இதனை நீர் ஒருவீரே எனத் திருத்துக. நீராகிய ஒருவீரே என்பதே இதன் பொருள். இது வழாநிலை.)

(19) நாம் ஐவரும் அது செய்தற்கு உடன்பட்டோம். (நாம் ஐவரும் என்பது தன்மைப் படர்க்கை மயக்கமாதலால் இடவழு. இதனை நாம் ஐவேமும் எனத் திருத்தினால் வழா நிலையாகும்.)

(20) நீங்கள் அனைவரும் இருவர் இருவராக அங்குச் செல்லுங்கள். (நீங்கள் அனைவரும் இருவர் இருவராக என்பது முன்னிலைப் படர்க்கை மயக்கமாதலால் இடவழு. இதனை நீங்கள் அனைவீரும் இருவீர் இருவீராக எனத் திருந்தினால் வழா நிலையாகும்.)

### 5. ஒவ்வொன்று, ஒவ்வொருவர், ஒவ்வொன்றும், ஒவ்வொருவரும் என்பவற்றின் பிரயோகங்கள்.

(21) அப்பழம் ஒவ்வொன்றாய் அழுகினது. (ஒவ்வொன்றாய் என்பது ஒன்றன்பின் ஒன்றாய் என்று பொருள்படுதலினாலே பழம் பலவாகும். ஆயின், பழம் என்னும் பலவின்பாற் சொல் அழுகினது என்னும் ஒன்றன்பாற் சொல்லொடு மயங்கியதாகும். இது பால் வழு. அப்பழம் ஒவ்வொன்றாய் அழுகின எனத் திருத்தினால் வழா நிலையாகும். அப்பழம் ஒன்றொன்றாய் அழுகின என்றாலும் அமையும்.)

(22) அப் பொருள்கள் ஒவ்வொன்றும் பழுதடைந்தன. (ஒவ்வொன்றும் பழுதடைந்தன என்பது ஒருமைப்பன்மை மயக்கமாதலாற் பால் வழு. அப்பொருள்கள் ஒவ்வொன்றும் பழுதடைந்தது எனத் திருந் தினால் வழா நிலையாகும். அப்பொருள்களுள் ஒவ்வொன்றும் பழு தடைந்தது என்பதே இதன் பொருள்.)

(23) நீர் அனைவரும் ஒவ்வொருவராக அவ்வறைக்குட் புகுந்தீர். (நீர் அனைவரும் ஒவ்வொருவராக என்பது முன்னிலைப் படர்க்கை மயக்கமாதலால் இடவழு. நீர் அனைவீரும் ஒருவீர் ஒருவீராக அவ்வறைக்குட் புகுந்தீர் எனத் திருத்தினால் வழாநிலையாகும்.)

(24) நீங்கள் ஒவ்வொருவரும் நாளை இங்கு வரல் வேண்டும். (நீங்கள் ஒவ்வொருவரும் என்பது முன்னிலைப் படர்க்கை மயக்கமாதலால்



RangaRakes
tamilnavarasam.com

இடவழு. நீங்கள் எல்லீரும் நாளை இங்கு வரல்வேண்டும் எனத் திருந்தினால் வழாநிலையாகும். நீங்கள் எல்லீருந் தனியீர் தனியீராய் நாளை இங்கு வரல்வேண்டும் என்றாலும் அமையும்.)

### 6. பிற சொற்களின் பிரயோகங்கள்

**(25)** அவர் தான் நாளைக்கு வருவதாகச் சொன்னார். (அவர் தான் என்பது பன்மையொருமை மயக்கம் ; தான் நாளைக்கு என்பது கூற்றுவழு; தான் வருவது என்பது வாக்கியம் முடியாமை வழு. இதனை அவர் தாம் அடுத்த நாள் வருவாரெனச் சொன்னார் எனத் திருத்துக.)

**(26)** சில மக்கள் தம் அரசனை ஓர் துரும்பென்றாதல் மதிக்கின்றாரல்ல. (சில மக்கள் என்பது திணைவழு ஓர் துரும்பு என்பது சொல்வழு; மக்கள் மதிக்கின்றாரல்ல என்பது திணைவழு; இதனை மக்கள் சிலர் தம்மரசனை ஒரு துரும்பென்றாதல் மதிக்கின்றாரல்லர் எனத் திருத்துக.)

**(27)** அவர்களுள் யார் அக்குற்றத்தைச் செய்தான்; செய்தவன் யாரென அறிந்தால் அவரைத் தண்டிக்காது விடேன். (யார் செய்தான் என்பது பலர்பாற் பெயர்ச்சொல் ஆண்பால் வினைச்சொல்லோடு மயங்கிய மையாற் பால் வழு. செய்தவன் யார் என்பதில், யார் என்னும் இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்று ஆண்பால் குறித்து நின்றமையில் வழா நிலையாகும்; அவர் என்னும் பலர்பாற் சுட்டுப்பெயர் செய்தவன் என்னும் ஆண்பாற் சொல்லைச் சுட்டி நின்றமையாற் பால் வழு. இதனை அவர்களுள் யாவன் அக் குற்றத்தைச் செய்தான்; செய்தவனை யாரென அறிந்தால் அவனைத் தண்டிக்காது விடேன் எனத் திருத்துக.)

**(28)** யாதும் பிற காரணங்களின்றி அவன் என்மீது வெகுண்டான். (யாதும் என்பது ஒருமைச் சொல்; பிற என்பது பன்மைச்சொல்; ஆயின், ஒருமைப்பன்மை மயக்கமாய்ப் பால்வழுவாயிற்று. இதனைப் பிற காரணம் யாதுமின்றி எனத் திருத்துக ; பிற காரணங்களுள் யாது மின்றி என்பதே இதன் பொருள். பிறிது யாதுங் காரணமின்றி என்றுந் திருத்தலாம்.)





## பயிற்சி 45

**பின்வரும் வாக்கியங்களில் வழுக்கள் எவையேனும் இருந்தால் அவற்றைக் காரணங்கூறித் திருத்துக:-**

**(1)** ஆசிரியன் மாணாக்கனை நோக்கி அப்பொருளைத் தமக்கு ஈயுமாறு கேட்டான்.

**(2)** அவனுக்குக் காது இரண்டு செவிடு.

**(3)** நீ அதனைச் செய்யக்கூடாது.

**(4)** எம்புலவன் அரசனது அவையிற் பாடிப் பொன்னும் முத்தும் யானை யும் பரிசிலாகப் பெற்றான்.

**(5)** அவர் தனது தாயாரிடம் ஓடிச்சென்று யாரோ சிவனடியான் ஒருவன் வாயிலில் நிற்பதாகச் சொன்னார்.

**(6)** இவன் பெரியனோ? இவன் கண் பெரிதோ?

**(7)** நாம் இறைவனுடைய பிள்ளைகளல்லரோ?

**(8)** மாவேறி நின்ற என்மகனைப் பார்த்து, "நீ என்செய்கின்றாய்," என்றேன்.

**(9)** நீர் நேற்று அத்தோட்டத்திற்குப் போனீர் அல்லவா?

**(10)** அதனை வாசிக்க எனக்குத் தெரியாது.

**(11)** பரீட்சகன் மாணாக்கரைப் பார்த்து, "ஐந்து வினாக்களுக்கே விடை தா," என்றான்.

**(12)** துரியோதனன் ஐந்தலைநாகம்போற் சீறுவதைப் பாண்டவர் ஐவர் கண்டனர்.

**(13)** நாம் அனைவரும் அக்கூட்டத்திற்குச் சென்றோமல்லவா?

**(14)** நீவீர் மூவரும் அவ்வயலுக்குப் போனீரல்லரா?

**(15)** அவர் தான் அப்பொருளை மறுநாளே தருவதாகச் சொன்னார். (மறுநாள் என்பது இழிவழக்கு)

**(16)** ஒருவரும் இங்கு வரப்படாது.

**(17)** இது இலை நெடுந்தெங்கு.

**(18)** இவ்வடிசில் சுவையாறு உடைத்து.

**(19)** மறுநாள் இவருடைய மாமியாராகிய சுந்தரி என்பவள் இவரை மதுரைக்கு அழைத்துச் சென்றார்.

**(20)** இவர் சங்கவிலக்கியங்களை நன்கு கற்றவரென்று தெரிகிறது.

**(21)** சில அதிகாரிகள் உட்கார்ந்தவண்ணம் பல மக்களோடு பேசுவார். (உட்காருதல் என்பது இழிவழக்கு)



RangaRakes tamilnavarasam.com

(22) ஆ! எனது நண்பனா பொய்சொன்னான்? அவன் நல்லவனாயிற்றே; நீ கூறுவதில் எனக்கு நம்பிக்கை இல்லை.
(23) அவர் தேசத்தொண்டு ஆற்ற மிக ஆர்வமுடன் இருந்தார்.
(24) இக்காட்சியை இங்கன்றி வேறோரிடத்தும் நாங்காண முடியாது.
(25) அவ் வாக்கியத்தில் ஒருவனைப் படர்க்கையாக்கிக் கூறியிருக்கிறது.
(26) அவன் உங்கள் எல்லாரையும் மூவர் மூவராகத் தன்னிடம் வருமாறு கட்டளையிட்டான்.
(27) அவர் தான் நேற்று உம்மிடம் வந்து அப்பொருளை விலைக்குக் கொண்டதாகச் சொன்னார்.
(28) அவர் தான் இதனைச் செய்வாரா? இவர்தான் இதனைச் செய்வாரா?
(29) அவர்தான், அன்றி இவர்தான் இங்கு வருவாரா?
(30) ஒருநாட்காலை பிங்கலகன் என்னும் விலங்குகட்கு அரசனாகிய சிங்கம் நீரருந்தத் தனக்கு அருகாமையிலிருந்த ஆற்றுக்குச் சென்றது. (அருகாமை என்பது இழிவழக்கு)
(31) விரும்பின், நின்னை நீ குறை கூறலாம்; பிறமனிதரைத் தூற்றா தொழிக.
(32) அவர் தான் அவரிடம் நேற்று வந்ததாகச் சொன்னான்.
(33) நம் எல்லோரையும் அவன் வைதானென்னு யான் அறிந்தேன்.
(34) அக் கடற்கரையிற் கோயிலும் பறைகளினது தோற்றமும் அலைகளின் வருகையும் என் கண்களைக் கவர்ந்தன.
(35) வயிற்றுவலி யொன்றன்றி யாதும் பிறநோயின்றி அவன் நல்வாழ்வு வாழ்கின்றான்.
(36) நீதான் அவர்தான் அதனைச் செய்துமுடித்தால் எந்தந்தை உவப்பன். (தான் என்பதை ஈரிடத்தும் ஆதல், ஆயினும் என்பனவற்றுள் ஒன்றால் இடம் பெயர்க்க.)
(37) அவன் குற்றம் யாதுஞ் செய்திலன் என்று உனக்கு எப்படித் தெரிகின்றது.
(38) ஆறொன்று பல அருவிகளாக மாறி நீர் வீழ்ச்சிகளாக விழுகின்றன.
(39) நாம் அனைவரும் ஒவ்வொருவராக அக்குடைக்குட் சென்றோம்.
(40) அடியவனுக்கு உத்தரவு கொடுத்தால் அதனைச்செய்து முடிப்பேன். (உத்தரவு இழிவழக்கு)
(41) எங்கலாசாலையிற் பரிசளிப்புவிழா நடக்குங்காற் சொற் பொழிவுகள் பல நிகழ்ந்தன.





(42) அவருள் யார் இங்கு வந்தான்! அவன் யாரென நீ கூறுவையாயின், நின்னை யான் பேணாதுவிடேன்.
(43) யான் அங்குச் செல்லக்கூடாதென அவர் எனக்குச் சொன்னார்.
(44) நீயாயினும் அவனாயினும் அதனைச் செய்தால் நல்லது.
(45) குழந்தைப்பிள்ளைக்கும் நாய்க்குட்டிக்கும் இடங்கொடுக்காதே என்று பெரியோர் வார்த்தையைக் கேட்டிலையா?
(46) அவர் உங்களை ஒருவர் ஒருவராக அவ்வேலையைச் செய்து முடிக்கும்படி பணித்தார்.
(47) அவர் என்னிடந் தான் விலைக்குக் கொண்ட கோழிகள் ஒவ்வொன்றும் பப்பத்து ரூபா முடிந்தன என்றார்.
(48) அந்நூலில் ஆசை வெட்கம் அறியாதென்று கூறப்பட்டிருக்கின்றது.

**213.** எப்பொருளையாயினும் உயர்ந்தோர் யாதொரு சொல்லாற் சொன்னாரோ அப்பொருளை அச் சொல்லாற் சொல்லாது மாறிச்சொல்வது மரபுவழுவாம்; மாறாமற் சொல்வது வழாநிலையாம்.

(i) யானை மேய்ப்பானை இடையன் எனல் மரபுவழு ; பாகன் எனல் வழாநிலை.

(ii) ஆடு மேய்ப்பானைப் பாகன் எனல் மரபுவழு ; இடையன் எனல் வழாநிலை.

(iii) யானையின் மலத்தைச் சாணம் எனல் மரபுவழு; இலத்தி எனல் வழாநிலை.

(iv) ஆடு, எலி முதலியனவற்றின் மலத்தை இலத்தி எனல் மரபுவழு; பிழுக்கை எனல் வழாநிலை.

(v) மாடு, எருமை என்பவற்றின் மலத்தைப் பிழுக்கை எனல் மரபுவழு; சாணம் எனல் வழாநிலை.

விலங்கு, புள் முதலியனவற்றின் ஆண்பெண்களைக் குறிக்கும் பெயர்களும், இளமைப் பெயர்களும், ஓரறிவுயிர்களின் பகுதிகளின் பெயர்களுங் கீழ்க்காணப்படும்:–



RangaRakes tamilnavarasam.com

### (1) ஆணைக் குறிக்கும் பெயர்கள்

| | |
|---|---|
| அலவன் என்பது | நண்டின் ஆண். |
| இரலை என்பது | மானின் ஆண். |
| உதள், மொத்தை, செச்சை என்பன | ஆட்டின் ஆண். |
| உம்பல் என்பது | யானை, ஆடு என்பவற்றின் ஆண். |
| ஏறு என்பது | பன்றி, மான், மரை, பசு, எருமை, சுறா என்பவற்றின் ஆண். |
| ஒருத்தல் என்பது | மான், மரை, புலி, கரடி, எருமை, யானை, பன்றி, முதலை என்பனவற்றின் ஆண். |
| ஓரி என்பது | நரி, முசு என்பவற்றின் ஆண். |
| கடுவன் என்பது | குரங்கு, பூனை என்பவற்றின் ஆண். |
| கண்டி என்பது | எருமையின் ஆண். |
| கராம் என்பது | முதலையின் ஆண். |
| கலை என்பது | மான், முசு, சுறா என்பவற்றின் ஆண். |
| களிறு என்பது | யானை, பன்றி, சுறா என்பனவற்றின் ஆண். |
| கவரி என்பது | மான், எருமை என்பவற்றின் ஆண். |
| கிடாய் என்பது | ஆடு, பசு, மான் என்பவற்றின் ஆண். |
| சுரும்பு என்பது | வண்டின் ஆண். |
| சே என்பது | பசு, குதிரை என்பனவற்றின் ஆண். |
| தகர் என்பது | சுறா, ஆடு, ஆளி என்பனவற்றின் ஆண். |
| பகடு என்பது | பசு, எருமை, யானை என்பனவற்றின் ஆண். |
| போத்து என்பது | பசு, எருமை, புலி, மான், மரை, பன்றி, குதிரை, பூனை, சுறா, ஓந்தி, முதலை,வரால், வாளை, நாரை, மயில் என்பவற்றின் ஆண். |
| மா என்பது | குதிரை, பன்றி, யானை என்பவற்றின் ஆண். |
| வெருகு என்பது | பூனையின் ஆண். |

### (2) பெண்ணைக் குறிக்கும் பெயர்கள்

| | |
|---|---|
| அளகு என்பது | கோழி, கூகை, மயில் என்பனவற்றின் பெண். |
| ஆ, ஆன் என்பன | பசு, எருமை, மரை என்பனவற்றின் பெண். |
| கடமை என்பது | ஆட்டின் பெண். |
| துளி என்பது | ஆமையின் பெண். |





| | |
|---|---|
| நாகு என்பது | பசு, எருமை, மரை, நந்து என்பனவற்றின் பெண் |
| பாட்டி என்பது | பன்றி, நாய், நரி என்பவற்றின் பெண் |
| பிடி, கரேணு என்பன | யானையின் பெண். |
| பிணவல், பிணா என்பன | பன்றி, மான், நாய் என்பனவற்றின் பெண். |
| பிணவு என்பது | புலி, மான், பன்றி என்பனவற்றின் பெண். |
| பிணை என்பது | புலி, மான், யானை, குதிரை, ஒட்டகம், கழுதை என்பனவற்றின் பெண். |
| பெட்டை என்பது | ஒட்டகம், குதிரை, கழுதை, மரை என்பவற்றின் பெண். |
| பெடை, பேடை, பேடு, பெட்டை என்பன | புட்களின் பெண். |
| மந்தி என்பது | குரங்கு, முசு என்பனவற்றின் பெண். |
| முடுவல் என்பது | நாயின் பெண். |
| மூடு என்பது | ஆட்டின் பெண். |

### (3) புள் விலங்குகளின் இளமைப் பெயர்

| | |
|---|---|
| கன்று என்பது | யானை, குதிரை, கழுதை, மான், எருமை, மரை, முதலை, பசு, ஒட்டகம் என்பவற்றின் இளமைப் பெயர். |
| குட்டி என்பது | கீரி, பூனை, எலி, அணில், தவளை, பாம்பு, நாவி, நாய், பன்றி, புலி, முயல், நரி, குரங்கு என்பனவற்றின் இளமைப் பெயர். |
| குருளை என்பது | நாய், பன்றி, புலி, முயல், நரி, முசு சிங்கம் என்பனவற்றின் இளமைப் பெயர். |
| குழவி என்பது | யானை, எருமை, மரை, குரங்கு, முசு என்பனவற்றின் இளமைப் பெயர். |
| நாகு என்பது | பசுவின் இளமைப் பெயர். |
| பறழ் என்பது | கீரி, பூனை, எலி, அணில், குரங்கு, நாய் , பன்றி, புலி, முயல்,நரி என்பனவற்றின் இளமைப்பெயர். |
| பார்ப்பு என்பது | பருந்து, ஊர்க்குருவி, கிளி, ஆமை, உடும்பு, ஓந்தி, முதலை, பாம்பு, பூனை, குரங்கு என்பவற்றின் இளமைப்பெயர். |



RangaRakes

tamilnavarasam.com

பிள்ளை என்பது நரி, குரங்கு பருந்து, ஊர்க்குருவி, கிளி, ஆமை, உடும்பு, ஓந்தி, முதலை, பாம்பு, பூனை என்பன வற்றின் இளமைப் பெயர்.
போதகம், துடியடி கயமுனி என்பன யானையின் இளமைப் பெயர்.
மகவு என்பது குரங்கின் இளமைப் பெயர்.
மறி என்பது ஆடு, குதிரை, மான் என்பனவற்றின் இளமைப்பெயர்.

**(4) ஓரறிவுயிரின் இளமைப்பெயர்**

சட்டம் என்பது புல்லின் இளமைப் பெயர்.
பிள்ளை என்பது நெல்புல்லொழிந்த ஓரறிவுயிரின் இளமைப்பெயர்.
குழவி, போத்து என்பன ஓரறிவுயிரின் இளமைப் பெயர்.
கன்று, நாகு என்பன மரங்களின் இளமைப் பெயர்.

**(5) இலைப்பெயர்**

இலை என்பது வாழை, மா முதலியவற்றின் இலை.
ஓலை என்பது தென்னை, பனை முதலியனவற்றின் இலை.

**(6) இலைப் பகுதிப்பெயர்**

அருவி, இருவி, தாள் என்பன நெல், புல், தினை என்பனவற்றின் தாள்.
தோகை, குரல் என்பன சோளம், கரும்பு, தினை, வாழை என்பன வற்றின் தாள்.
வை என்பது நெல்லினது தாள்.

**(7) வித்துப்பெயர்**

விதை என்பது மிளகாய், கத்தரி முதலியனவற்றின் வித்து.
அரிசி என்பது மூங்கிலின் வித்து.
காழ், பரல் என்பன காஞ்சிரம், ஈந்து முதலியனவற்றின் வித்து.
மணி என்பது தினையின் வித்து.
முத்து என்பது ஆமணக்கு, மாதுளை என்பனவற்றின் வித்து.
கொட்டை என்பது பலா,மா, தாமரை, ஆமணக்கு முதலியனவற்றின் வித்து.
பொகுட்டு என்பது தாமரை, ஆமணக்கு முதலியனவற்றின் வித்து.





**(8) உள்ளீட்டுப்பெயர்**

அரிசி என்பது நெல், தினை முதலியனவற்றின் உள்ளீடு.
சதை என்பது வாழை, மா என்பனவற்றின் உள்ளீடு.
சுளை என்பது பலா,தோடை என்பனவற்றின் உள்ளீடு.
சோறு என்பது முருங்கை, கற்றாளை என்பனவற்றின் உள்ளீடு.
பருப்பு என்பது அவரை, துவரை, பயறு, கடலை வாதுமை என்பன வற்றின் உள்ளீடு.

**(9) இளங்காயின்பெயர்**

பிஞ்சு என்பது மா, பலா முதலியனவற்றின் இளங்காய்.
குரும்பை என்பது தென்னை, பனை முதலியவற்றின் இளங்காய்.
வடு என்பது மாவின் இளங்காய்.

**(10) குலையின்பெயர்**

குலை என்பது காந்தள், முந்திரி, ஈந்து என்பனவற்றின் குலை.
கொத்து என்பது மா, புளி முதலியனவற்றின் குலை.
கதிர் என்பது நெல், தினை, வரகு, சோளம் முதலியனவற்றின் குலை.
குரல் என்பது நெல், தினை, வரகு, புல் முதலியனவற்றின் குலை.

**பயிற்சி 46.**

1. **பின்வருஞ் சொற்கள் குறிக்கும் பொருள்களைக் கூறுக:-**

   தாள், நாகு, பிடி, களிறு, போத்து, பகடு, தோகை, கலை, கன்று, பிள்ளை, மறி, மணி, சோறு, பார்ப்பு, சுரும்பு.
2. ஆண் பன்றியைக் குறிக்கும் ஐந்து சொற்கள் கூறுக.
3. ஆண்மானைக் குறிக்குஞ் சொற்கள் எல்லாவற்றையுந் தருக.
4. பெண்புலியைக் குறிக்கும் இரண்டு சொற்கள் எழுதுக.
5. நெல்லினது தாளைக் குறிக்குஞ் சொற்கள் எல்லாவற்றையுங் கூறுக.
6. **மேல்வரும் வாக்கியங்களைத் திருத்தி அமைக்க:-**

   **(i)** வாழையோலையுந் தென்னையிலையுந் தொன்னை தைத்தற்கு உதவும்.

   **(ii)** புலிநாகு தினையருவி தின்னும்.



RangaRakes tamilnavarasam.com

**(iii)** நரிக்குழவி யானைப்பிள்ளையை வஞ்சித்தது.
**(iv)** தாமரை மணியிலுந் தினைப்பொகுட்டுப் பெரிது.
**(v)** நெல்லரிசி முளைக்கும்; மூங்கிலரிசி முளைக்காது.
**(vi)** திண்ணை மெழுகுதற்கு யானைப் பிழுக்கையும் எலிச்சாண முமன்றி பசுவிலத்தியே உதவும்.
**(vii)** தென்னம் வடுவேயன்றி மாவின் குரும்பையும் ஊறுகாய்க்கு உதவும்.
**(viii)** பலாச்சுதைக் கறியுந் துவரஞ்சுளைக் கறியுந் தின்றேன்.
**(ix)** பசுப்போதகம் புற்பிள்ளையை மேய்ந்தது.
**(x)** ஆமணக்கமணி மிளகாய்க் காழிலுஞ் சிறிது.

**214.** இரட்டைச் சொற்களை வலிந்து பிரித்துக்கூறினால், அவை பொருள்படாவாகையால் வழுவாம்; வலிந்து பிரித்துக் கூறாதுவிடின் வழாநிலையாம்.

| | | |
|---|---|---|
| **(i)** | வற்றிய ஓலை கலக்கும். | வழு. |
| | வற்றிய ஓலை கலகலக்கும் | வழாநிலை. |
| **(ii)** | அப்பிள்ளை குறு நடந்து வந்தது | வழு. |
| | அப்பிள்ளை குறுகுறு நடந்து வந்தது | வழாநிலை. |

கலகல, குறுகுறு முதலிய **இரட்டைச் சொற்கள்** பிரியாது நின்று பொருளுணர்த்துவனவாதலாற் பிரிந்து பொருளுணர்த்தும் **அடுக்குச் சொற்களாகா** என்பதறிக.

**இரட்டைச் சொற்களுட் சில அவற்றின் பொருளோடு கீழ்க் காணப்படும்:-**

கசகசத்தல் – இறுக்கத்தால் உடல் வியர்த்தல்.
கடகடத்தல் – நெகிழ்வடைதல், ஆட்டங் கொடுத்தல்.
கடுகடுத்தல் – சினக்குறிப்புக்காட்டல், விறுவிறுத்து வலித்தல், உறைத்தல்.
கணகணத்தல் – உடம்பு சூடுறுதல்.
கமகமத்தல் – மிகமணத்தல்.
கரகரத்தல் – உறுத்துதல், அரிப்புண்டாதல்.
கலகலத்தல் – கலகலவென்று ஒலித்தல், கட்டுக்குலைதல்.
களகளத்தல் – ஒலியெழுதல்.
கறகறத்தல் – கடித்தற்கு நறுமுறென்றிருத்தல்.





கிடுகிடுத்தல் – நடுங்குதல், பல்லோடு பல் கொட்டுதல்.
கிலுகிலுத்தல் – கிலுகிலென்று ஒலித்தல், ஆரவாரித்தல்.
கிளுகிளுத்தல் – மகிழ்தல்.
கிறுகிறுத்தல் – மயக்கமாதல்.
குடுகுடுத்தல் – அவசரப்படுதல்.
குணுகுணுத்தல் – மூக்காற் பேசுதல், முணுமுணுத்தல்.
குமுகுமுத்தல் – மணம் மிக வீசுதல்
குருகுருத்தல் – வேர்க்குரு உண்டாதல், நெஞ்சை உறுத்துதல்
குலுகுலுத்தல் – குலுகுலுவென்று செல்லுதல், குடுகுடென் றொலித்தல்.
குழகுழத்தல் – நெகிழ்ந்திருத்தல், மனவுறுதியறுதல்.
குளகுளத்தல் – நெகிழ்ந்திருத்தல்.
குளுகுளுத்தல் – செழித்துவளர்தல்.
குறுகுறுத்தல் – வெறுப்புத்தோன்ற முருமுருத்தல், மனம் உறுத்திக் கொண்டிருத்தல், தினவுறுதல்.
குறுகுறுநடத்தல் – குறுகக்குறுக நடந்து செல்லுதல்.
கொடுகொடுத்தல் – குளிராலே நடுங்குதல்.
கொறுகொறுத்தல் – கலகலத்தல், மட்கிப்போதல், வாதத்திலே தோற்றல்.
சரசரத்தல் – சருகு முதலியவை ஒலித்தல்.
சலசலத்தல் – சலசலவென ஒலித்தல், ஓயாமற் பேசுதல்.
சளசளத்தல் – சேறாயிருத்தல், குழைதல், தளர்ச்சியடைதல்.
சிலிர்சிலிர்த்தல் – உடல் புளகித்தல்.
சிலுசிலுத்தல் – படபடவென்று பேசுதல், குளிர்ந்திருத்தல், தூறுதல்.
சிளுசிளுத்தல் – இரைச்சலிடுதல், பதனழிதல்.
சுருசுருத்தல் – ஒலித்தல், ஊக்கமாதல்.
சுறுசுறுத்தல் – தீவிரப்படுதல்.
தடதடத்தல் – தள்ளாடுதல், தளர்வாதல், குழறுதல்.
தளதளத்தல் – பிரகாசித்தல், நெகிழ்தல்.
திடுதிடுத்தல் – நெஞ்சு துடித்தல், இடைவிடாது ஒலித்தல்.
துடிதுடித்தல் – மனம் பதைத்தல், கடுகடுத்தல்.
நசுநசுத்தல் – விடாது தூறிக்கொண்டிருத்தல், ஈரமாயிருத்தல், தொடக் குழைதல்.



RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| நடுநடுங்குதல் | – | பயத்தால் உடல் பதறுதல், குரல்கம்பித்தல். |
| நெடுநெடுத்தல் | – | மிக நீண்டிருத்தல். |
| நெருநெருத்தல் | – | வயிறு வலித்தல் |
| நெறுநெறுத்தல் | – | பல்லைக் கடித்தல். உறுமுதல், நெரிந் தொலித்தல். |
| நொடுநொடுத்தல் | – | துடித்தல், துடுக்காயிருத்தல். |
| நொதுநொதுத்தல் | – | குழைதல். |
| நொளநொளத்தல் | – | குழைதல், வழுவழுப்பாதல். |
| நொறுநொறுத்தல் | – | உடையுந்தன்மையாதல். |
| பசபசத்தல் | – | முறுமுறுத்தல், தினவெடுத்தல். |
| படபடத்தல் | – | பேச்சில் விரைதல், குளிராலே நடுங்குதல், கோபத்தாற் கலங்குதல். |
| பரபரத்தல் | – | துரிதப்படுதல், தன்வசமழிதல், சுருசுருப்பாதல். |
| பளபளத்தல் | – | பிரகாசித்தல் |
| பறபறத்தல் | – | மிக விரைதல். |
| பிசுபிசுத்தல் | – | பசைத்தன்மையாதல். |
| பொசுபொசுத்தல் | – | இரகசியம் பேசுதல், மெதுவாகக் கசிதல், மழை துளித்தல். |
| பொடுபொடுத்தல் | – | வெடித்தல், விரைவாய்ப் பேசுதல், வயிறிரைதல். |
| பொருபொருத்தல் | – | அறத்தீய்தல். |
| மதமதர்த்தல் | – | களிப்பு மிகுதல். |
| மினுமினுத்தல் | – | தானே தனக்கு வாய்க்குட் சொல்லுதல், இரகசியம் பேசுதல். |
| முசுமுசுத்தல் | – | நீர் கொதித்தல், தினவெடுத்தல். |
| முணுமுணுத்தல், முறுமுறுத்தல் | – | வாய்க்குட் பேசுதல். |
| மெதுமெதுத்தல் | – | மிருதுவாயிருத்தல். |
| மொசுமொசுத்தல் | – | தினவெடுத்தல். |
| மொடுமொடுத்தல் | – | பசையுள்ள ஆடை முதலியன ஒலித்தல், வயிறு இரைதல், விரைதல். |
| மொரமொரத்தல் | – | முறுக்காய் ஒலித்தல். |
| மொருமொருத்தல் | – | வாய்க்குட் பேசுதல், முறுக்காய் ஒலித்தல். |
| மொறுமொறுத்தல் | – | வாய்க்குட் பேசுதல், விடாது பேசுதல், இரைதல். |





| | | |
|---|---|---|
| வழவழத்தல் | – | வழுக்குந் தன்மையதாதல் உறுதியற்றிருத்தல், தெளிவின்றிப் பேசுதல். |
| வழுவழுத்தல் | – | வழுக்குதல், உறுதியறுதல். |
| விதுவிதுத்தல் | – | மகிழ்ச்சியுறுதல். |
| விறுவிருத்தல் | – | கடுத்தல், காமம்பற்றி உடலூருதல், சினத்தாற் பரபரத்தல், விரைதல். |
| விறுவிறுத்தல் | – | உறைத்தல், புண் குத்தெடுத்தல், கோபம் பொங்குதல், விறுவிறென்றிழுத்தல். |
| வெடுவெடுத்தல் | – | கோபத்தாற் படபடத்தல், கடுகடுப்பாய் பேசுதல். |
| வெதுவெதுத்தல் | – | அரைகுறையாக வேதல், இளஞ்சூடாயிருத்தல், சிறிது வாடுதல். |
| வெருவெருத்தல் | – | பயப்படுதல். |
| வெளுவெளுத்தல் | – | வெண்மையாதல், நிறங்கெடுதல். |

## பயிற்சி 47.

**1. பின்வரும் வாக்கியங்களில் இரட்டைச் சொற்களுக்குப் பதிலாகப் பிற சொற்களிடுக:-**

(1) நெடுநாள் வழங்கியமையால் அவன் வண்டி கலகலக்கின்றது.
(2) அவர் இருவரும் ஒருவருக்குங் கேட்காதவாறு மினுமினுக்கின்றனர்.
(3) அவன் ஏசிய ஏச்சு எனது நெஞ்சிற் குருகுருக்கின்றது.
(4) தூசி விழுந்து என் கண்கள் கரகரக்கின்றன.
(5) அப்பாறையிலிருந்து நீர் பொசுபொசுக்கின்றது.
(6) அத் தொண்டன் உடல் பரபரத்து உளங்களித்தான்.
(7) அப்பிணம் பலநாட் கிடந்தமையாற் கொலுகொலுத்துவிட்டது.
(8) ஆசிரியனாலே தண்டிக்கப்பட்ட மாணாக்கன் பசபசக்கின்றான்.
(9) கோழி கிளறினாற் சருகு சரசரத்தல் வியப்பன்று.
(10) ஒரு மணி நேரத்திற்குள்ளே தான் அவ் வேலையை முடிப்பானென அவன் பரபரக்கின்றான்.
(11) பச்சோலை சலசலக்கும்.
(12) குளிர் காரணமாக எனது உடம்பு படபடக்கின்றது.
(13) அம்மாம்பழம் அறக்கனிந்து நொளநொளக்கின்றது.
(14) மழை பெய்தமையாலே நிலஞ் சளசளக்கின்றது.



RangaRakes tamilnavarasam.com

(15) எனது தம்பி தவங்கிடந்து நொடுநொடுத்த பிள்ளை ஒருவனையா பெற்றெடுத்தான்?
(16) இந் நசுநசுத்த மழை என் வேலையைச் செய்து முடிக்க விடுகின்றதில்லை.
(17) சிற்றுணர்வினோர் என்றுஞ் சிலுசிலுப்பர்.
(18) துரியோதனனைத் தன்னெதிரிற் கண்ட வீமன் துடிதுடித்து விழி சிவத்துக் கணை தொடுத்தான்.
(19) அக்கோலை முறிக்க அது நெறுநெறுத்தது.
(20) அவன் முகங் கடுகடுத்துப் பேசுகின்றான்.
(21) சருகுகள் சுருசுருத்து எரிகின்றன.
(22) கள்வனைக் கண்ட செட்டியார் நடுநடுங்கி நின்றார்.
(23) புலியைத் தன் முன்னிலையிற் கண்ட பெண் ஒருத்தி நெஞ்சு திடுதிடுத்து நின்றாள்.
(24) குற்றஞ் செய்தமையால் அவ் விடலை தடதடத்துப் பேசுகின்றான்.
(25) அவனுடைய பல்லெல்லாங் கடகடத்துப்போயின.

**2. தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களுக்குப் பதிலாக இரட்டைச் சொற்கள் இடுக:-**

(1) நகர்காவலனைக் கண்ட கள்வர் நெஞ்சு **துடித்தனர்.**
(2) இன்று யான் உண்ட உணவு சமியாமையினால் என் வயிறு **வலிக்கின்றது.**
(3) அதனைக் கண்டதும் எனது தம்பி தலை சுழன்று **மயக்கமடைந்தான்.**
(4) அச் செய்தியைக்கேட்டவுடன் அவன் **மிக விரைந்து** ஓடி வந்தான்.
(5) முறுக்குக் கடிக்கும்போது **நறுமுறென்றிருக்கும்.**
(6) அம் முறுக்கைக் கடிக்க அது **நெரிந்தொலித்தது.**
(7) விவேகமில்லாதோர் **ஓயாமற் பேசுவர்.**
(8) தன் வாயை மூடிக்கொண்டு அவன் **மூக்காற் பேசினான்.**
(9) பிள்ளை இறந்ததைக் கண்ட தாய் **மனம் பதைத்துக் கதறினாள்.**
(10) தன் பகைவனைக் கண்டு வெகுண்டு அவன் **பல்லைக் கடித்தான்.**
(11) அவன் **குறட்டைவிட்டு** நித்திரை கொண்டான்.
(12) துன்னீர் நிமித்தமாக என்னுடம்பு **தினவெடுக்கின்றது.**
(13) பத்தி மேலீட்டினால் அவன் **மெய் புளகிதமானான்.**
(14) அவ் யாசகன் ஒரு பொருளுந் தனக்குக் கிடைக்க வில்லையெனத் **தன் வாய்க்குட் பேசினான்.**





(15) சந்தையிற் சனத்திரள் **இரைச்சலிடும்** ஓசை கேட்கும்.
(16) மினுக்கப்பட்ட செப்புப் பாத்திரம் **பிரகாசிக்கும்.**
(17) அவ்வாடை காயாமற் **பசைத்தன்மையினதாய்** இருக்கின்றது.
(18) **உறுதியற்ற** உறவிலும் வைரம்பற்றிய பகை நன்று.
(19) பரிசு பெற்றதும் அவர் தம்முள்ளே **மகிழ்ந்தனர்.**
(20) தன்காலிற் புண் **குத்தெடுக்கின்றதென** அவன் அரற்றுகின்றான்.
(21) அப்பேச்சுப் போட்டியில் எனது தங்கை **தோல்வியுற்றாள்.**
(22) அவன் அங்கு செல்வதற்குத் **தீவிரப்படுகின்றான்.**
(23) அக்கிழவி **தள்ளாடி** நடக்கின்றாள்.
(24) அவன் அங்கு சென்று தனது மாமனைக் காணத் **தீவிரப்படுகின்றான்.**
(25) நேற்று விலைக்குக் கொண்ட கத்தரிக்காய் **பதனழிந்து விட்டது.**

## II. வழுவமைதி

**215.** உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து தாமும் எழுவாயாய் நிற்கின்ற பொருள், இடம் முதலிய ஆறும் அவ்வுயர்திணைச் சொல்லோடு சேர்த்து முடிக்கப்பட்டால் உயர்திணை முடிபைப் பெறுவனவாம்; அஃறிணை எழுவாயைத் தொடர்ந்து வருவன அஃறிணை முடிபைப் பெறுவனவாம்.

| | | |
|---|---|---|
| பொருள்: | நம்பி பொன் பெரியன். | கிணறு நீர் ஊறிற்று. |
| இடம்: | நம்பி நாடு பெரியன். | மாடு பிறந்த இடம் நல்லது. |
| காலம்: | நம்பி வாழ்நாள் பெரியன். | மாடு பிறந்தகாலம் நல்லது. |
| சினை: | நம்பி மூக்குக் கூரியன். | மாடு கோடு கூரிது. |
| குணம்: | நம்பி குடிமை நல்லன். | மாடு சாதி நல்லது. |
| தொழில்: | நம்பி நடை கடியன். | மாடு நடை கடிது. |

நம்பி பொன் பெரியன் என்பதில், பொன் என்பது எழுவாயாய் நின்று பெரியன் என்பதனோடு இயைந்து பொன்பெரியனென ஒரு சொன்னீர்மைப்பட்டு நின்று நம்பி என்பதற்குப் பயனிலையாயினமை காண்க.

**216.** வினாவிடைகளிலே திணைபால்களில் ஐயந் தோன்றுமாயின், முறையே அத் திணைபால்களுக்குப் பொதுச்சொல்லால் வினாவுதலுந் துணிந்த பொருளின் மேல் அன்மைத்தன்மையை வைத்து விடையிறுப்பதும் மரபு.



RangaRakes tamilnavarasam.com

**வினா:**

(i) **திணை ஐயம்.** குற்றியோ மகனோ அங்குத் தோன்றுகின்ற உரு? உரு என்பது பொதுச் சொல்.

(ii) **உயர்திணைப்பால் ஐயம்.** ஆண்மகனோ பெண்மகளோ அங்குத் தோன்றுகின்றவர்? தோன்றுகின்றவர் என்பது பொதுச்சொல்.

(iii) **அஃறிணைப்பால் ஐயம்.** ஒன்றோ பலவோ இவ்வயலிற் புகுந்த பெற்றம்? பெற்றம் என்பது பொதுச்சொல்.

**விடை:** (i) துணிந்த பொருள் குற்றியெனின், இவ்வுரு மகனன்று குற்றி என்பதே விடை.
துணிந்த பொருள் மகன் எனின், இவன் குற்றியல்லன் மகன் என்பதே விடை

(ii) துணிந்த பொருள் ஆண்மகனெனின், இவன் பெண் மகளல்லன் ஆண்மகன் என்பதே விடை.
துணிந்த பொருள் பெண்மகளெனின், இவள் ஆண் மகனல்லள் பெண்மகள் என்பதே விடை.

(iii) துணிந்த பொருள் ஒன்றெனின், இப்பெற்றம் பலவன்று ஒன்று என்பதே விடை.
துணிந்த பொருள் பலவெனின், இப்பெற்றம் ஒன்றல்ல பல என்பதே விடை.

இவன் குற்றியல்லன் என்பதில், குற்றி என்பது எழுவாயாய் நின்று அல்லன் என்பதனோடு இயைந்து ஒரு சொன்னீர்மைப்பட்டு இவன் என் பதற்குப் பயனிலையாய் நின்றமை காண்க.

**217.** வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கின்ற ஒரு பொதுச் சொல்லும் அப்பொருள்களை எண்ணி நிற்குஞ் சிறப்புச் சொற்களும் தம்முள் ஒன்றற்குரிய சிறப்பு வினையை வேண்டாது ஒரு பொது வினையைக் கொண்டு முடியும்.

(i) அடிசில் என்பது உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பன என்பன வற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அடிசில் அயின்றார். அடிசில் மிசைந்தார், அடிசில் கைதொட்டார் எனப் பொது வினை களாலே முடிக்க.

(ii) அணி என்பது கவிப்பன, கட்டுவன, செறிப்பன, இடுவன, பூண்பன என்பவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலால், அணி அணிந்தார், அணி தாங்கினார், அணிமெய்ப்படுத்தினார் எனப் பொது வினை களாலே முடிக்க.

(iii) படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன என்பன வற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலால், படை வழங்கினார், படை தொட்டார் எனப் பொது வினைகளாலே முடிக்க.

(iv) இயம் என்பது கொட்டுவன, ஊதுவன, எழுப்புவன என்பனவற்றிற் கெல்லாம் பொதுச் சொல்லாதலால், இயம் இயம்பினார், இயம் படுத்தார் எனப் பொதுவினைகளாலே முடிக்க.

(v) சிறப்புச் சொற்களை எண்ணும்போது, சில நாட்சோறுஞ் சிலநாட் பாலுஞ் சிலநாட் சருகும் அயின்றார் என்றும், முடியுங்குழையும் அணிந்தார் என்றும், வாளும் வேலும் வழங்கினார் என்றும், யாழுங் குழலும் பறையும் இயம்பினார் என்றும் பொதுவினைகளாலே முடிக்க.

**218.** திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களுங் கலந்து ஒரு சொற்றொடரில் வந்தால், அவை சிறப்பு, மிகுதி, இழிவு என்பனபற்றி ஒரு முடிபைப் பெறுவனவாம்.

**திணை**

(i) பாரிக்குத் திங்களுஞ் சான்றோரும் ஒப்பர். – சிறப்பினால் உயர்திணை முடிபு.

(ii) பார்ப்பார், தவரே, சுமந்தார், பிணிப்பட்டார், மூத்தார், இளையார், பசு, பெண்டிர் என்ற இவர்கட்கு – மிகுதியால் உயர்திணைமுடிபு.

(iii) மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா. – இழிவினால் அஃறிணை முடிபு.

**பால்** தானுந் தன் தையலுந் தாழ்சடையோன் ஆண்டிலனேல் – சிறப்பினால் ஆண்பால் முடிபு.

**மரபு** கறியுஞ் சோறும் உண்டான். – சிறப்பினால் ஒரு பொருட்குரிய வினைமுடிபு.

உண்டல் என்னும் வினைக்குரிய சோறு தின்றல் என்னும் வினைக் குரிய கறியினுந் தலைமையுடைமை இங்கே சிறப்பு.

**219.** உவப்பு, உயர்வு, சிறப்பு, செறல், இழிப்பு என்பனபற்றிப் பாலுந் திணையும் வழுவி வந்தாலும் அது வழுவமைதியாம்.







RangaRakes tamilnavarasam.com

**பால்**

**(i)** தன் புதல்வனை 'என்னம்மை வந்தாள்' எனின், உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

**(ii)** ஒருவனை 'அவர் வந்தார்' எனின், உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

**(iii)** 'தாதாய் மூவேழுலகுக்குந் தாயே' எனின், சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

**(iv)** 'எனைத்துணையராயினும் என்னாந் தினைத் துணையுந்தேரான் பிறனில் புகல்' எனின், செறலினாற் பன்மைப்பால் ஒருமைப் பாலாயிற்று.

**(v)** பெண்வழிச் செல்பவனை நோக்கி, 'இவன் பெண்' என்று கூறின், இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

**திணை**

**(i)** ஒரு பசுவை 'என்னம்மை வந்தாள்' எனின், உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

**(ii)** 'பசுங்கிளியார் சென்றார்க்கு ஓர் இன்னுரை தந்தார்' எனின் உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

**(iii)** 'தம் பொருளென்ப தம் மக்கள்' எனின், சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

**(iv)** ஏவவுஞ் செய்கலான் தான் தேரான் அவ்வுயிர் போமளவும் ஓர் நோய் எனின், செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

**(v)** 'நாம் அரனுடைமை' எனின் இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

**220.** ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்திற் பிறிதிடச் சொல்லையுந் தழுவிக்கூறல் வழுவமைதியாம்.

**பால்**

**(i)** வெயிலெல்லாம் மறைத்தது மேகம். ஒருமைப் பன்மை மயக்கம். எல்லாம் என்பது முழுவதும் என்னும் பொருளது.

**(ii)** இரண்டு கண்ணுஞ் சிவந்தது. பன்மையொருமை மயக்கம். இரண்டு கண்ணுமாகிய தொகுதி தனித்தனி சிவந்தது என்னும் பொருளது.





**இடம்**

**(iii)** கந்தன்றாய் இவை செய்வேனோ. படர்க்கைத்தன்மை மயக்கம். கந்தன் றாயாகிய யான் இவை செய்வேனோ என்னும் பொருளது.

**221.** மூன்று காலங்களிலுந் தந்தொழில் இடையறாமல் ஒரு தன்மையாக நடக்கின்ற பொருள்களை நிகழ்காலத்தினாற் கூறுதல் மரபு. மலைநிற்கின்றது; தெய்வம் இருக்கின்றது; கடவுள் அளிக்கின்றார்.

**222.** விரைவு, மிகுதி, தெளிவு என்னுங் காரணங்களாலும், இக்காரணங்களின்றி இயல்பினாலும் ஏற்குமிடத்து மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படலாம்.

**(i)** சோறு உண்டுபோதற்கு இருப்பானை விரைவாக அழைத்துக் கொண்டுபோக விரும்பிய மற்றொருவன் இன்னும் உண்டிலையோ என்று வினவ, அவன் 'உண்டேன், உண்டேன்', என்பான்; உண்கின்றவனையும் அவ்வாறு வினவ அவனும் 'உண்டேன், உண்டேன்; என்பான். இங்கு, விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்படுதல் காண்க.

**(ii)** களவுசெய்தாற் கையறுப்புண்டான். இங்கு, மிகுதி பற்றி எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.

**(iii)** அறஞ் செய்யிற் சுவர்க்கம் புக்கான். இங்கு, தெளிவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது.

**(iv)** யாம் பண்டு விளையாடுவது இச்சோலை. இங்கு, இயல்பினால் இறந்தகாலம் நிகழ்காலமாகச் சொல்லப்பட்டது.

**223.** தம்மிடத்து இல்லாத பொருளை வினவியவிடத்து வினவப்பட்ட பொருளுக்கு இனமாய்த் தம்மிடத்து உள்ள பொருளைக்கூறி அவ்வினவிய பொருளை இல்லையென்று கூறுதல் சுருங்கச் சொல்லல் என்னும் அழகு பற்றி வழுவமைதியாம் ; தம்மிடத்து உள்ள பொருளை வினவியவிடத்து அதனில் இவ்வளவு உண்டு என்று கூறுதலும் அவ்வழகு பற்றி வழுவமைதியாம்.

**(i)** 'பயறுண்டோ வணிகரே? என்றவருக்கு அது இல்லை என்பவர் உழுந்துண்டு என அதனினத்தைச் சொல்லிப் பயறில்லை எனக் குறிப்பால் உணரவைக்கலாம். இது பயறில்லை என்னும் விடை



RangaRakes
tamilnavarasam.com

யைத் தந்து நிற்றலேயன்றி, உழுந்துண்டோ என்னும் வினாவிற்கும் விடை தந்து நிற்றலாற் சுருங்கச் சொல்லல் என்னும் அழகொடு பொருந்தி நிற்றல் காண்க.

**(ii)** 'பயறுண்டோ வணிகரே' என்றவருக்கு அது உண்டு என்பவர் இரண்டு இறாத்தல் உண்டு என அதன் அளவைச் சொல்லி நிற்கலாம். இது பயறுண்டு என்னும் விடையைத் தந்து நிற்றலேயன்றி எவ்வளவு உண்டு என்னும் வினாவிற்கும் விடை தந்து நிற்றலாற் சுருங்கச் சொல்லல் என்னும் அழகொடு பொருந்தி நிற்றல் காண்க.

**224.** ஒரு பொருளைக்குறித்து நிற்கும் பல சொற்கள் அவ்வாறு நிற்றற்குக் காரணம் இன்றாயினுஞ் செவிக்குச் சொல்லின்பந் தோன்ற நிற்றலால் வழுவமைதியாம்.

மீமிசை ஞாயிறு; நாகிளங்கன்று; உயர்ந்தோங்கு பெருவரை.
மீ. மிசை என்பன மேல் என்னும் பொருளையும், நாகு, இளம் என்பன இளமை என்னும் பொருளையும், உயர்ந்து, ஓங்கு என்பன உயர்ச்சிப் பொருளையுங் குறித்தல் காண்க.

**225.** ஈரடை முதலை விசேடித்து வருதல் வழக்கிற்குரிய வழுவமைதி; ஈரடை சினையை விசேடித்து வருதலும் இவ்வரம்பு கடந்து வருதலுஞ் செய்யுளுக்குரிய வழுவமைதி.

**(i)** சிறு கருங்காக்கை.
வழக்கில் ஈரடை முதலை விசேடித்து நின்றன.
**(ii)** கரு நெடுங்கண்.
செய்யுளில் ஈரடை சினையை விசேடித்து நின்றன.
**(iii)** பெருந்தோட் சிறுமருங்கிற் பேரமர்க்கட் பேதை.
செய்யுளில் வரம்பு கடந்து நின்றன.

**226.** இயற்கைப் பொருளை இத் தன்மைத்தெனச் சொல்லுதல் வழுவமைதியாம்.

நிலம் வலிது ; நீர் தண்ணிது; தீவெய்து.

**227.** செயற்கைப் பொருளைக் காரணச்சொல் முன்னும் ஆக்கச்சொல் பின்னும் வரச் சொல்லுதல் மரபு; இவ்விருவகைச் சொற்களுள் ஒன்று தொக்குநிற்கச் சொல்லுதலும் அவை இரண்டுந் தொக்குநிற்கச் சொல்லுதலும் வழுவமைதியாகும்.





**(i)** நீர்ப்பாய்ச்சியமையாற் பயிர் நல்லவாயின. – காரணச் சொல் முன்னும் ஆக்கச்சொற் பின்னுமாகவந்தமையால் இது வழாநிலை.
**(ii)** மயிர் நல்லவாயின.
– காரணச் சொல்லின்றி வந்தமையால் இது வழுவமைதி.
**(iii)** நீர்பாய்ச்சியமையினாற் பயிர் நல்ல.
– ஆக்கச் சொல்லின்றி வந்தமையால் இது வழுவமைதி.
**(iv)** பயிர் நல்ல.
- காரணச் சொல், ஆக்கச்சொல் என்னும் இரண்டுமின்றி வந்தமையால் இது வழுவமைதி.

**228.** கேளாதது கேட்பது போலவும் பேசாதது பேசுவது போலவும் நடவாதது நடப்பது போலவுஞ் செய்யாதது செய்தது போலவும் அஃறிணையிடத்துச் சொல்லப்படுதல் வழுவமைதியாம்.

**(i)** நன்னீரை வாழி அனிச்சமே.
**(ii)** பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்.
**(iii)** இவ்வழி அவ்வூருக்குப் போகும்.
**(iv)** தன்னெஞ்சே தன்னைச்சுடும்.

**229.** இசையெச்சமுங் குறிப்பெச்சமுஞ் சொல்லெச்சமுஞ் சொல்லுவார் குறிப்பால் எஞ்சி நின்ற பொருளை உணர்த்துதல் வழுவமைதியாம்.

**(i)** அந்தாமரை அன்னமே நின்னை யான் அகன்று ஆற்றுவனோ என்பதில், 'உயிரினுஞ் சிறந்த நின்னை' என்பது இசையெச்சமாய் நிற்கின்றது.
**(ii)** 'அகர முதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே உலகு' என்பதில் அதுபோல் என்பது குறிப்பெச்சமாய் நிற்கின்றது.
**(iii)** 'உயர்திணை என்மனார்' என்பதில் ஆசிரியர் என்பது சொல்லெச்சமாய் நிற்கின்றது.

**230.** கேட்பவர்க்கு வெளிப்படையானன்றிக் குறிப்பினாற் பொருள் விளக்குமாறு சொல்லல் வழுவமைதியாம்.

குழைகொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் இவர்.
பெருஞ் செல்வ வாழ்க்கையர் இவர் என்பது குறிப்பினால் உணரப்படும் பொருளாகும்.



RangaRakes
tamilnavarasam.com

**231.** திணை, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி என்னும் இவற்றைப் பற்றிவருஞ் சிறப்புப் பெயரோடு இயற்பெயரை ஒரு பொருள் ஒருங்கு ஏற்குமாயின், அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம்; முன்வருதல் வழுவமைதியாம்.

| | **சிறந்தமரபு** | **வழுவமைதி** |
|---|---|---|
| **திணை** | குன்றவன் முருகன். | முருகன் குன்றவன். |
| **நிலம்** | நல்லூரான் முருகன். | முருகன் நல்லூரான். |
| **சாதி** | வேளாளன் முருகன். | முருகன் வேளாளன். |
| **குடி** | பாண்டியன் குலசேகரன் | குலசேகரன் பாண்டியன். |
| **உடைமை** | பொன்னினன் முருகன். | முருகன் பொன்னினன். |
| **குணம்** | கரியன் முருகன். | முருகன் கரியன். |
| **தொழில்** | கடுநடையன் முருகன் | முருகன் கடுநடையன். |
| **கல்வி** | ஆசிரியன் முருகன் | முருகன் ஆசிரியன். |

இயற்பெயர் முன்வருமிடத்து குலசேகர பாண்டியன், கச்சியப்பப் புலவன் என இறுதி விகாரப்பட்டு வருவனவுங் கொள்க.

**232.** ஒரு சொல்லானது அசைநிலைக்கும், விரைவு, வெகுளி, உவகை, அச்சம் முதலிய பொருணிலைக்கும், இசை நிறைக்கும் முறையே இரண்டு, மூன்று, நான்கு என்னும் அளவிற்கு அடுக்கும்.

| | | |
|---|---|---|
| **(i)** | அன்றே, அன்றே. | அசைநிலை. |
| **(ii)** | உண்டேன் உண்டேன் ; போ போ போ. | விரைவு. |
| | எய்யெய்; எறி எறி எறி. | வெகுளி. |
| | வருக வருக; பொலிக பொலிக பொலிக | உவகை. |
| | பாம்பு பாம்பு. தீத்தீத்தீ. | அச்சம். |
| | உய்யேன் உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன். | அவலம் |
| **(iii)** | நல்குமே நல்குமே நல்குமே நாமகள். | இசைநிறை. |
| | பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ. | இசைநிறை. |

ஒரு சொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும் இன்ன பொருளில் இன்ன எல்லை கடவாமற் சொல்லுதல் வழுவமைதியென வரையறுத்தவாறு காண்க.





**233.** உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை யஃறிணைகள் ஒன்றோடொன்று மயங்குதலுஞ் சினைமுதல்கள் ஒன்றோடொன்று மயங்குதலும் வழுவமைதிகளாம்.

**உருவகம்**

**(i)** நம் அரசனாகிய சிங்கம். உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.

**(ii)** கல்விமங்கை. அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.

**உவமை**

**(i)** மங்கை அன்னம்போல நடந்தாள். – உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.

**(ii)** நெற்பயிர்கள் கல்வியுடையார்போல் இறைஞ்சின. – அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.

**(iii)** கண் கயல்போற் பிறழ்ந்தது. – உயர்திணைச்சினை அஃறிணைச் சினையோடு மயங்கிற்று.

**(iv)** மேனி தளிர்போன்றது. – உயர்திணைமுதல் அஃறிணைச் சினையோடு மயங்கிற்று

## பயிற்சி 48

**1. பின்வரும் வாக்கியங்களில் வழுக்கள் எவையேனும் இருந்தால் அவற்றை எடுத்துக்காட்டி அவ் வாக்கியங்களைத் திருத்தி அமைக்க:-**

(1) நின் முன்னர் நின்றது பேயோ மனிதனோ?
(2) அவர் யாழுங் குழலும் ஊதினார்.
(3) யான் கண்டது மனிதனல்லன் பேய்.
(4) சோறுங் கறியும் நன்றென்று எனது தம்பி தின்றான்.
(5) எம்மைக்கண்டு ஓடினவை ஒன்றன்று பல.
(6) அவ்வீரர் தம் பகைவர்மீது படை எறிந்து வெற்றிகண்டு ஆரவாரித்தனர்.
(7) பாம்பைக்கண்ட தாய் தன் மகனைப் பார்த்து ஓடு ஓடு ஓடு ஓடு என்றனள்.
(8) அங்கே நிற்கின்றவள் தெய்வமகனோ மானிடப் பெண்ணோ,



RangaRakes tamilnavarasam.com

(9) அப் பெண்களெல்லாம் அணிபூண்டு நின்றனர்.
(10) சிலர் அவ்வமயத்தில் யாழும் பறையுங் கொட்டினர்.

**2. பின்வருவனவற்றை வழுவமைதிகளெனக் காரணங் கூறிச் சாதிக்க:-**

(1) யான் ஒருவரிடம் அப்பொருளைப் பெற்றேன்.
(2) இந்நெறி முத்தியை அடைவிக்கும்.
(3) வடுகர் அருவாளர் வான்கருநாடர் சுடுகாடு பேய் எருமை என்றிவை யாறும் உடையது இவ்வூர்.
(4) யாழுங் குழலும் பறையும் இயம்பினார்.
(5) யானையும் பாகனும் வருக.
(6) கழிபேரிரையான் இன்பமெய்தான்.
(7) அவனுடைய மேனி எல்லாம் பசலையாயிற்று.
(8) தன்மனமே தன் குற்றத்திற்குச் சான்று பகரும்.
(9) வாழி என் விதியே.
(10) பொச்சாப்புப் புகழைக் கொல்லும்.
(11) மலை நிற்கும்.
(12) ஆவும் ஆயனுஞ் செல்க.
(13) நீயோ அவனோ யாரிது செய்தார்?
(14) சோம்பல் பல துன்பங்களைத் தரும்.
(15) பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப்பெண்டிர் மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டனன்.
(16) பெருவிறல் வந்தது.
(17) சோறுங்கறியும் அயின்றார்.
(18) அவன் முகமெல்லாம் வெளுத்து நின்றான்.
(19) தன்மனமே தனக்குப் பகைவன்.
(20) இழிவு அறிந்து உண்பான் இன்பம் எய்தும்.
(21) நரியார் வந்தார்.
(22) அவள் கண்ணொந்தாள்.
(23) மயிர் நல்ல.
(24) ஒட்டக்கூத்தப் புலவன் புகழேந்திப் புலவனைச் சிறைப்படுத்தினான்.
(25) பயறு விலைக்குக்கேட்ட ஒருவனுக்கு அவ்வியாபாரி உழுந்தல்ல தில்லை என்றான்.





(26) நாகிளங்கமுகு நட்டேன்.
(27) நீயோ அவனோ யானோ யாரிது செய்தார்?
(28) கொடிறும் பேதையுங் கொண்டது விடா.
(29) தன் பசுவை முன்றிலிற்கண்ட அம் மூதாட்டி தன் அம்மை வந்த தென்றாள்.
(30) யான் பண்டு படிப்பது இக்கலாசாலை.
(31) எம்பியை இங்குப் பெற்றேன்.
(32) மழை பெய்தமையாற் பயிர் நல்ல.
(33) தானுந் தன் புரவியுந் தோன்றா நின்றனன்.
(34) இளம் பெருங் கூத்தன் ஒருவன் வந்தான்.
(35) சேரனாகிய சிங்கத்திற்கு முன் பாண்டியனாகிய யானை எவ்வாறு நிற்கும்?
(36) மரகதச் செவ்வாயை உடையான் இவள்.
(37) என்னுடைய தந்தையோ ஆசிரியரோ அங்கு செல்கின்றவர்?
(38) பாரிக்கு மழையுங் கன்னனும் ஒப்பர்.
(39) நானும் அவனும் அங்குச் சென்றோம்.
(40) ஒருநாட் பாலும் ஒருநாட் புற்கையும் அயின்றேன்.
(41) அக் காட்டிடைப் புகுந்த களிறு பலவன்று ஒன்று.
(42) சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்தார்.
(43) நீயும் அவனும் அங்கு இருந்தீர்.
(44) காய்த்த கொம்பு பணியும்.
(45) தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்.
(46) நஞ்சுண்டான் சாம்.
(47) அவ்வேளாளன் பார்ப்பனச்சேரியில் வாழ்கின்றான்.
(48) அவ்வழி ஈண்டு வந்து கிடந்தது.
(49) நீயும் அவனும் ஒருசாலை மாணாக்கரல்லீரோ?
(50) நானும் நீயும் நாளையிரவு புகைப்படம் பார்ப்போம்.



RangaRakes
tamilnavarasam.com

# அதிகாரம் 13.

# இலக்கணைச் சொற்களும் இலக்கணைத் தொடர்களும்

**234.** இலக்கணைச் சொற்களானவை தமக்குரிய பொருளை விடுத்தும் விடாதும் பிறவற்றிற்குரிய பொருளைத் தந்து நிற்பனவாம். இலக்கணைத் தொடர்களானவை தாங் கொண்ட சொற்களின் பொருளை ஏற்றும் ஏலாதும் நின்று வேறு பொருளைத் தருவனவாம்:-

## I இலக்கணைப் பொருளில் வழங்குஞ் சில வினைச்சொற்கள்

**235.** இலக்கணைப் பொருளுடைய சில வினைச் சொற்களை வழங்கும் முறைகள் கீழ்க்காணும் வினாவிடைகள் பற்றி அறியப்படும்.

### பயிற்சி 49

**பின்வரும் வாக்கியச் சோடிகள் ஒவ்வொன்றையும் அடைப்புக்குட் கிடக்குஞ் சொற்கள் கொண்டு முடிக்க:-**

(1) இடையன் ஒருவன் தன் பசுக்களெல்லாம் மேய்ச்சல் ஒழிந்து – எனக் கண்டான். அவன் – ஒருமரநிழலை அடைந்தான். (**அசை விடுதல்** – இளைப்பாறுதல், இரைமீட்டு மெல்லுதல்; **அசை போடுதல்** – இரைமீட்டு மெல்லுதல்.)

(2) அச் சேனைத்தலைவன் அரசனுக்குத் தான் அழியப் போக வில்லை என – நகர்காவலன் அரசனைக் கண்டதும் அவன் முன்னர் – நின்றான். (**அடிபணிதல்** – தண்டனிடல்; **அடிதொடுதல்** – பிறரடி தொட்டுச் சபதம் பண்ணல்.)

(3) சன்னியாசியார் ஒருவர் தன்வாயிலிலே நின்கின்றதைக்கண்ட தொண்டன் ஒருவன் அவருக்கு நீர் கொண்டு – உணவளித்தான். அச்சேனைத்தலைவன் – ஓடுந் தன் சேனைகளைக் கூவி அழைத்தான். (**அடி விளக்குதல்** – கால்கழுவி உபசரித்தல்; **அடி பிறக்கிடுதல்** – பின்வாங்குதல்.)





(4) அவ்வரசன் மாற்றரசனைப் போரில் வென்று அவனது நாட்டைத் தனக்குக்கீழ் – தான் அம்புகொண்டு எய்தமான் ஓடினதிசை தெரியாது நின்றவேடன் – சென்று அதுவீழ்ந்துகிடந்த இடத்தை அடைந்தனன். (**அடிப்பிடித்தல்** – காற்சுவடு காணல், காலைப் பிடித்து வேண்டல், பின்றொடர்தல்; **அடிப்படுத்துதல்** – கீழ்ப்படுத்துதல்.)

(5) செல்வரை – வாழ்தலிலும் உலகத்தில் இன்னாதது இல்லை. என் குழந்தை மூன்று வயதாகியும் – பயப்படுகின்றது. (**அடியொற்றுதல்** – பின்பற்றுதல் ; **அடிவைத்தல்** – தொடங்குதல், நடக்கப் பயிலுதல்.)

(6) – சான்றோர் வழக்கு இது என எமது ஆசிரியர் கூறினார். அவன் கண்மூடிக்கொண்டு ஓடினமையால் எதிரே நின்ற சுவரில் – வீழ்ந்தான். (**அடிபடுதல்** – அடிக்கப்படுதல் ; **அடிப்படுதல்** – அடிச்சுவடு படுதல், கீழ்ப்படிதல், பழகுதல், பழமையாகவருதல்.)

(7) தனக்கென ஓர் இல்லம் அமைத்தற்கு ஓராண்டுக்கு முன் அவன் கல்லுஞ் சாந்துங்கொண்டு – நல்லகாலம் – அவர்தொட்டவை எல்லாம் பொன்னாயின. (**அடிப்படர்தல்** – கீழ்ப்பரவுதல், இசைந்து வருதல்; **அடிக்கோலுதல்** – அத்திவாரமிடுதல், ஆரம்பித்தல்)

(8) யான் இருபதுவயதினனாகு முன்னரே ஆசிரியனாய் வரவேண்டுமென்று படிக்குங் காலத்திலே – திட்டம் நிறைவேறிற்று. நீர்க்குறைவாற் சோறு –(**அடிப்பற்றுதல்** – அடியிற்றீந்து போதல்; **அடிப்போடுதல்**– தொடங்குதல், கால்பிடித்து வேண்டல், பின்றொடர்தல்).

(9) தன் முன்னிலையிற் புலி ஒன்றைக்கண்ட பெண் ஒருத்தி – இயலாது மயங்கிவீழ்ந்தாள். அக் கிழவி முறம் ஒன்று இழைத்தற்குப் பனையீர்க்குக் கொண்டு நேற்று – தொடங்கினாள். (**அடிபெயர்த்தல்** – காலெடுத்து வைத்தல்; **அடியிடுதல்** – தொடங்குதல், அடியமைத்தல்.)

(10) தன்னை அனுமன் அவ்விடத்தினின்றும் – விடாவென்றுகண்ட வீமன் அவனொடு சொற்போர் நிகழ்த்தினான். ஒருவன் ஒருவனை – வணங்குதல் நற்பழக்கமாகாது. (**அடிவீழ்தல்** – தண்டனிடல்; **அடியெடுத்தல்** – அப்பாற் போதல், அடிவைத்து நடத்தல்.)

(11) அவர் தமது எதிரியைப் போருக்கு – அழைத்தார். கையுமெய்யுமாகப் பிடிபட்ட கள்வன் அறிவு – நெஞ்சத்தனானான். (**அறைகூவுதல்** – போருக்கழைத்தல் ; **அறைபோதல்** – கீழறுக்கப்படுதல், கெட்டழிதல்.)



RangaRakes tamilnavarasam.com

(12) தனக்கு – தொண்டனுக்கு இறைவன் அருள் செய்வன். தான் – அடியவன் மீது இறைவன் கருணை பொழிந்தான். (**ஆட்கொள்ளுதல்** – அடிமை கொள்ளுதல்; **ஆட்படுதல்** – அடிமையாதல், உயர் நிலையடைதல்.)

(13) கூற்றுவன் அருள் யாதுமின்றி – திரிகின்றான். அவர் தம் மக்களை – எத்துணை முயன்றும் பயன் யாதும் பெறவில்லை. (**ஆட்பார்த்தல்** – ஆள் தேடுதல்; **ஆட்படுத்துதல்** – வளர்த்து ஆளாக்குதல்.)

(14) குட்டிநாய்க்கு – அது தலைமேல் ஏறும். சாது மருண்டாற் காடு – (**இடங்கொடுத்தல்** – கண்டிப்பின்றி நடக்க விடுதல், பிடிகொடுத்தல்; **இடங்கொள்ளுதல்** – வியாபித்தல், இடம் பற்றுதல், வசிக்கும் இடமாகக் கொள்ளுதல்.)

(15) கோவலன் கொலையுண்டதற்கு அறிகுறியாகக் கண்ணகி – நின்றாள். அவன் கல்வியதிகாரியுடன் பேசுதற்கு – நின்றான். (**இடம்பார்த்தல்** – இடந்தேடுதல், சமயமறிதல்; **இடந்துடித்தல்** – இடத்தோள் இடக்கண் துடித்தல்.)

(16) அவன் அவ்வவையிற் பேசுதற்கு – நின்றான். இவன் பணமுள்ள வனுமல்லன் இல்லாதவனுமல்லன்– (**இடைதெரிதல்** – செவ்வி யறிதல்; **இடைநிகராதல்** – நடுத்தரமான நிலையிலிருத்தல்.)

(17) இவ்விடயஞ் செய்தி நிரலில் – கிடக்கின்றது. அவன் கூற்றிற் பொய் மெய்யொடு – கிடக்கின்றது. (**இடைப்படுதல்** – மத்தியமாதல், இடையிற் சம்பவித்தல்; **இடைமிடைதல்** – நடுவே கலத்தல்.)

(18) ஞானிக்குப் பேரின்பம் – பெருகும். நேற்று மழை – பெய்தது. (**இடையறுதல்** – தடைப்படுதல்; **இடையிடுதல்** – இடையில் நிகழ்தல், இடையில் ஒழிதல், நடுவிலிடுதல், மறித்தல்.)

(19) வாயிலை – கொண்டு நிற்குமாறு அவன் வேலைக்காரனை ஏவினான். நேற்று மழை – பெய்தமையால் யான் என் வீட்டைவிட்டு நகர வில்லை. (**இடைவிடுதல்** – இடையில் ஒழிதல்; **இடையிடுதல்** – இடையில் நிகழ்தல், மறித்தல்.)

(20) அம் மருத்துவன் காயத்திற்கு –. அத்தையற்காரி –தொழிலில் வல்லுநள். (இழை பிடித்தல் – காயந்தைத்தல்; **இழையாடுதல்**, **இழைபோடுதல்** – இழையிட்டுத் தைத்தல்.)

(21) அவன் பாலை – செருக்கால் என்னை வைதான். அம்மருத்துவன் ஊசியூடாக நோயாளிக்கு மருந்தை –. (**உட்செலுத்துதல்** – உள்ளே புகுவித்தல் ; **உட்கொள்ளுதல்** – தன்னகத்துக் கொள்ளுதல், உட் கருதுதல், உண்ணுதல்.)





(22) அது செய்தற்கு அரசன் – என அமைச்சன் உணர்ந்தான். இறைவன் அடியார் உள்ளத்தே – மன்னி நிற்பான். (**உட்புகுதல்** – உள்ளே புகுதல், ஆழ்ந்து கவனித்தல் ; **உட்படுதல்** – உள்ளாதல், அகப் படுதல், உடன்படுதல், சேர்தல்.)

(23) அவள் கணவன் இறந்தானெனக் கண்டதும் – துணிந்தாள். சீதை இராவணனது வேண்டுகோளுக்கு –. (**உடன்படுதல்** – இசைதல்; **உடன்கட்டை யேறுதல்** – சககமனஞ் செய்தல்.)

(24) தன் கணவனுக்கு உணவளிக்குமுன்னர் தன் கறிகளை –. அவன் மேனியெல்லாம் – இருக்கின்றது. (**உப்புப்பார்த்தல்** – உருசி பார்த்தல்; **உப்புப்பூத்தல்** – சரீரத்தில் உப்புப்படர்தல், உப்பங் காற்றால் இற்றுப் போதல்.

(25) பத்தருக்கு முன் மாயவன் சென்று –. ஒரு பெண் கருப்பவதியாகிய ஆறாம் மாதத்திற் கரு – என மருத்துவர் கூறுவர். (**உருக் காட்டுதல்** – உரு வெளியாகத் தோன்றுதல் ; **உருக்கொள்ளுதல்** – வடிவெடுத்தல், ஆவேசங்கொள்ளுதல், கருவிலுருவாதல்.)

(26) மந்திரவாதி தன் மந்திரத்தை நூறுமுறை –. மந்திரவாதி ஒருவன் அப் பெண்ணுக்குத் தன் மந்திரங்களால் –. (**உருச்செபித்தல்** – மந்திரத்தைக் கணக்கிட்டு அனுசந்தித்தல்; **உருவேற்றுதல்** – ஆவேசமேற்றுதல், நெட்டுருப்பண்ணுதல், மந்திரத்தைப் பலமுறை செபித்தல்.)

(27) ஒற்றர் வேற்றுப் புலத்தில் – வேவுபார்ப்பர். அவன் பல நாள்களாக நோய்வாய்ப்பட்டுக் கிடந்தமையால் – இருக்கின்றான். (**உருமாறுதல்** – வேற்றுருக்கொள்ளுதல்; **உருத்திரிதல்** – தோற்றம் வேறாதல்.

(28) தந்தை தன்மகனைப் பல வழிகளாலும் – முயன்றும் பயன் பெற வில்லை. தன்மகன் –எனக்கந்தன் மனம் வருந்தினான். (**உருப் படுத்தல்** – சீர்ப்படுத்துதல், உருவாக்குதல்; **உருவாதல்** – சீர்ப் படுதல், வடிவுறுதல்.)

(29) இந்நிலத்திற்கு நீரை – இயல்பு இன்று. இவன் வஞ்சகன்; – பேசும் இயல்பினன். (**உள்வாங்குதல்** – உள்ளுக்கிழுத்தல் ; **உள் விழுதல்** – காரியார்த்தமாய்ச் சினேகித்தல்.)

(30) அவரை – எல்லாரும் இவ்வாறே கூறினர். அதிகாரம் பெற்றதுங் கந்தன் தன்கண்ணே – கிடந்த தீக்குணங்கள் எல்லாவற்றையுந் தோற்றுவித்தான். (**உள்ளிடுதல்**, உள்ளடக்குதல்; **உள்ளடங்குதல்** – மறைதல், உட்படுதல்.)



RangaRakes tamilnavarasam.com

(31) அத்தொண்டன் இறைவன் பாலுள்ள பேரன்பால் – நின்றான். அவர் அளவில்லாத துன்பத்திற்கு –. (**உள்ளாதல்** – வசப்படுதல், உட்படுதல்; **உள்ளுருகுதல்** – மனங்கரைதல்.)

(32) அவன் என்னைப்பற்றிப் பல கதைகளை – என் புகழைக் கொல்லுகின்றான். இவன் பொல்லாதவன் ; பிறர்குற்றங்களை – இயல்பினன். (**எடுத்துக்கட்டுதல்** – இல்லாத காரியத்தைத்தொடுத்தல், உயர்த்துக்கட்டுதல்; **எடுத்துப்பேசுதல்** – தூற்றுதல், புகழ்ந்து கூறுதல்.)

(33) நீ கொடியை ; நினது நண்பன் செய்த சிறு குற்றத்தையும் –. நீ நல்லை; நின் பகைவனது குணத்தையும் –. (**எடுத்துச்சொல்லுதல்** – விளக்கமாகக் கூறுதல், சிறப்பித்துச் சொல்லுதல்; **எடுத்துப் பிடித்தல்** – குற்றத்தைப் பெரிதாக்கித் தூற்றுதல், திடப்படுத்துதல்.)

(34) யான் கூறிய நற்புத்திகள் எல்லாவற்றையும் அவன் – விட்டான். யான் கூறிய நற்புத்திகளுள் ஒன்றையாதல் அவன் –. (**எடுத்தெறிதல்** – பறைமுழக்குதல், அலட்சியம்பண்ணுதல்; **எடுத்துக் கொள்ளுதல்** – ஏற்றுக் கொள்ளுதல்.)

35) அவ்வறிஞன் அச்செய்யுளின் பொருளை எமக்கு –. தன்னிற் குற்றம் யாதுமில்லையென்று சாதிப்பதற்கு அவள் பல கதைகளை –. (**எடுத்துரைத்தல்** – விளங்கச் சொல்லுதல் ; **எடுத்துத்தொடுத்தல்** – இல்லாதவைகளைக் கட்டிக்கூறுதல்.)

36) பிள்ளைப்பேறில்லாத ஒருவன் பிறன் குழந்தை ஒன்றை–. அவன் பேச்சு நிகழ்த்தும்போது பல மேற்கோள்களை –. (**எடுத்து வளர்த்தல்** – பிறர் குழந்தையை ஊட்டி வளர்த்தல்; **எடுத்தாளுதல்** – வழங்குதல்.)

(37) தன்னிடம் வந்த விருந்தினரை எல்லாம் அவன் – உபசரித்தான். அவன் தன் பகைவனுக்கு முன் – ஆற்றாது புறங்கொடுத்தோடினான். (**எதிர்கொள்ளுதல்** – வரவேற்றல், ஏற்றுக்கொள்ளுதல்; **எதிர்நிற்றல்** – முன்னிற்றல், எதிர்த்து நிற்றல்.)

(38) தனக்கு எப்பொழுது நல்ல காலம் வருமென்று – நின்றான். யான் கூறிய வெகுளிச் சொற்களைப் பொறாது என் மகன் என்னோடு –. (**எதிருரைத்தல்** – எதிர்த்துப்பேசுதல் ; **எதிர்பார்த்தல்** – ஒன்றை நோக்கி இருத்தல்.)

(39) அனுமன் இலங்கைமாநகரத்திற்கு –. சிவன் முப்புரங்களையும் – நீறாக்கினான். (**எரி விழித்தல்** – கோபித்துப் பார்த்தல்; **எரியூட்டுதல்** – தீக்கொளுத்துதல்.)





(40) கமக்காரர் தம் வயல்களை – பண்படுத்துவர். சிலர் தம் வயலை – உழுவர். (**எருக்கட்டுதல்** – கிடைவைத்தல்; **எருப்போடுதல்** – உரமிடுதல், மாடு சாணமிடுதல்.)

(41) வாதத்திலே தோல்வியுற்றவன் – பேச ஆரம்பித்தான். பெரியோர் தந் தீக்குணங்கள் மேற்கொள்ளாதவாறு – நற்குணங்களை மேம்படச் செய்வர். (**எல்லைகட்டுதல்** – கட்டுப்படுதல்; **எல்லைகடத்தல்** – நியாயமீறுதல், அளவிறத்தல், வரம்பு மீறுதல்.)

(42) ஒப்பந்தம் – பின்னரே வேலை பார்க்கலாமென முதலாளி தொழிலாளருக்குச் சொன்னான். எனது தந்தையார் தாம் இறந்தபின்னர் தஞ் சொத்துக்கள் எல்லாம் தம் மூத்தபிள்ளைக்கே உரியன வாகுமென – இறந்தார். (**எழுதி வைத்தல்** – சாசனஞ் செய்து வைத்தல்; **எழுதிக் கொடுத்தல்** – எழுத்துமூலம் ஆதரவு கொடுத்தல்.)

(43) எனது தம்பி தன்னைத்தானே – நோயுழைத்தான். அவன் இரு கோழிகளை ஒன்றோடொன்று –. (**ஒட்டவிடுதல்** – பொரவிடுதல் ; **ஒட்டப்போடுதல்** – பட்டினி கிடக்கச் செய்தல்.)

(44) நல்லோர் தீயோரெனப் பாராது அவன் எல்லாரொடும் – இயல்பினன். அவன் எங்கூற்றை ஆமோதித்தானென நம்பற்க; அவன் எல்லாரொடும் – இயல்பினன் (**ஒத்து நடத்தல்** – இசைந்தொழுகுதல்; **ஒத்துப்பாடுதல்** – பிறர் சொல்லுவன எல்லாவற்றையும் ஆமோதித்தல்.)

(45) அவர் தாமே அச் செயலை முடிப்பாரென –. இப் போட்டியில் உனக்குப் புகழ்படுமாறு – வாளாவிருத்தல் அழகாகுமா? (**ஒரு காலினிற்றல்** – உறுதியாயிருத்தல்; **ஒருகை பார்த்தல்** – வெல்ல முயலுதல்.)

(46) அவர்கள் அனைவரும் எதிர்க்கட்சிக்கு விரோதமாக –. அவர்கள் எல்லாரும் – முடிந்தவுடன் சிற்றுண்டி அருந்தினர். (**ஒருகை விளையாடுதல்** –எல்லாருக்கும் ஒருமுறைவர ஆடுதல்; **ஒருகையாயிருத்தல்** – ஒற்றுமையாக இருத்தல்.)

(47) அவர்கள் இருவரும் – அவ்வேலையைச் செய்து முடித்தார்கள் மாறுபட்டவர் எல்லாரும் இப்பொழுது – நின்றனர். (**ஒருமனப்படுதல்** – மனத்தை ஒன்றிலே செலுத்துதல் ; **ஒருவழிப்படுதல்** – ஐக்கியப்படுதல், ஒருமுகப்படுதல்.)

(48) அவர் தந் நிலம்புலம் எல்லாவற்றையும் –. உனது புண்ணிலிருக்கும் ஈரப்பற்றை – பஞ்சுதேடி அலைகின்றாய். (**ஒற்றிவைத்தல்** – தவணை



RangaRakes
tamilnavarasam.com

தள்ளிவைத்தல், தூரவைத்தல், அடைமானம் வைத்தல்; ஒற்றி யெடுத்தல் – ஒற்றி ஈரம்வாங்குதல்.)

**(49)** அவர்கள் இருவரும் – இல்வாழ்க்கை செலுத்துகின்றனர். மாறுபட்ட இருபாலாரும் – அச் சபையை நடத்துகின்றனர். (**ஒன்று கூடுதல்** – ஐக்கியப்படுதல், ஒன்றாய்ச்சேர்த்தல்; **ஒன்றுபடுதல்** – ஒரு தன்மையாதல், இணக்கமாதல்.)

**(50)** அவன் அக்காரியத்தை முடித்தற்கு – பயன்பெறவில்லை. இளம் பிள்ளைகள் – இயக்கத்தில் ஈடுபடுதலிற் புதுமை இல்லை. (ஓடி யாடிப்பார்த்தல் – பெருமுயற்சி எடுத்தல்; ஓடியாடுதல் – ஓட்டமும் ஆட்டமுமாய் இருத்தல்.)

**(51)** பிரையிட்ட பால் –. இமயமலையினுச்சியை அடைந்தால் உடம்பு முழுவதும் –. (**ஓடியுறைதல்** – படிப்படியாய் இறுகுதல்; **ஓடி விறைத்தல்** – உடம்பு முழுவதும் விறைத்தல்.)

**(52)** அவருடைய வஞ்சனை முழுவதும் –. அவன் பாராளுமன்றத்து அங்கத்தினனாய் வருதற்கு –. (**ஓடித்திரிதல்** – பெருமுயற்சி எடுத்தல்; **ஓடிவெளித்தல்** – வெளிவாங்குதல், நன்கு வெளிப்படுதல்.)

**(53)** யான் நோயுற்றிருந்தபோது என்னைக் – சுற்றத்தினர் எங்கே? பல ஆண்டுகளாகப் பிரிந்திருந்து வந்தமகளைத் தாய் – கொஞ்சினாள். (**கட்டிக்காத்தல்** – கவனித்துப் பாதுகாத்தல்;) **கட்டிப்பிடித்தல்** – இறுகத்தழுவுதல்.)

**(54)** அவள் உழைப்பில்லாதவனைக் – அல்லற்படுகின்றாள். – பெண் வீட்டிற்குவந்து உதவுவாள் என்று எதிர்பார்த்தல் ஆகாது. (**கட்டிக் கொள்ளுதல்** – கலியாணஞ் செய்து கொள்ளுதல்; **கட்டிக் கொடுத்தல்** – கலியாணஞ் செய்வித்தல்.)

**(55)** முன்பட்ட அல்லலைமறந்து –எண்ணும் இப் பெண்ணின் மதி என்னே! இம் மூளியலங்காரியை – அவன்றான் என்ன செய்வான்? (**கட்டிமேய்த்தல்** – அடக்கி நடத்துதல்; **கட்டிப்புகுதல்** – புனர் விவாகஞ் செய்தல்.)

**(56)** தான் கொடுக்கவேண்டிய கடனை–. அக்கருப்பவதி – அவத்தைப் படுகின்றாள். (**கட்டிவிடுதல்** – செலுத்துதல்; **கட்டிவீழுதல்** –கரு வழிந்து விழுதல்.)

**(57)** – ஏமாற்றுவார் பலர் இவ்வுலகில் உளர். மகன் – நடப்பதைக்கண்ட தந்தை அவனை வெகுண்டு பார்த்தான். (**கட்டுக்கட்டுதல்** – பொய் யாகக் கட்டியுரைத்தல்; **கட்டுக்கடத்தல்** – வரம்புமீறுதல்)





**(58)** வருங்கால நிகழ்ச்சிபற்றி – மகிழ்வார் இன்றும் உளர். அவன் எதிர்கால நிகழ்ச்சிபற்றி – பிழைக்கின்றான். (**கட்டுச் சொல்லுதல்** – குறி சொல்லுதல் ; **கட்டுக்கேட்டல்** – குறிகேட்டல்.)

**(59)** அக் கானகத்து மலர்கள் எல்லாம் – மணம் வீசின. வெள்ளம் – பெருகிற்று. (**கட்டுடைதல்** – உடம்புதளர்வுறுதல், பூமுறுக்கவிழ்தல்; **கட்டுடைத்தல்** – கருத்தை வெளிப்படுத்தல், கரைகடத்தல்.)

**(60)** அவர் அச்சாதனத்தின் பயன் இன்னதென நேற்று –. ஒருவன் சாகும்போது அவனது உடற் பொருத்துக்கள் – எனக் கூறினன் மருத்துவன். (**கட்டுவிடுதல்** – உடற்பொருத்து விடுதல், கட்ட விழ்தல்; **கட்டுரைத்தல்** – உறுதியாகச் சொல்லுதல்.)

**(61)** மாடுகளைக் கட்டுதற்கு அவன் நேற்று –. அறிவுடையோர் தன்னை நம்புவரென்று நினைந்தா இவன் –? (**கட்டையடித்தல்** – முளை கடாவுதல்; **கட்டையவிழ்த்தல்** – பொய்கூறத் தொடங்குதல்.)

**(62)** அடியார் பிறப்பறுக்க இறைவன் – நிற்பன். அச் சேனைத்தலைவன் விறல்வீரரை – போர்க்களம் புகுந்தான். (**கடைக்கொள்ளுதல்** – உறுதியாகக் கொள்ளுதல், சேர்த்தல், முடிபுபெறுதல்; **கடைக் கணித்தல்** – கடாட்சித்தல், கடைக்கண்ணாற் பார்த்தல்.)

**(63)** அவ்வேழை அன்றாட உணவிற்குப் பொருள் – பெரிதும் பாடுபடு கின்றான். அவர்கள் எல்லாரும் அக்காரியத்தைச் செய்தற்கு – நின்றனர். (**கடைக்கூடுதல்** – சம்மதித்தல்; **கடைக்கூட்டுதல்** – செய்துமுடித்தல், ஒருப்படுத்துதல், சம்பாதித்தல், இறுதியடை வித்தல்.)

**(64)** அவன் பிறப்பிறப்பினின்றும் – வழிகாணாது தயங்கி நின்றான். அவன் பத்திநெறி – உய்தி கூடினான். (**கடைத்தேறுதல்** – ஈடேறுதல்; **கடைப்பிடித்தல்** – உறுதியாகப்பற்றுதல், தெளிவுறவறிதல், சேர்த்து வைத்தல்.)

**(65)** – செல்வம் உய்த்தவர் இவ்வுலகில் இல்லை. ஒருவன் முயன்றால் – இருக்கும் பொருள் யாதும் இல்லை. (**கடைபோதல்** – முற்றுப்பெறுதல், நிலைநிற்றல் ; **கடைகூடுதல்** – கைகூடுதல்.)

**(66)** இம் மந்திரவாதி – எம்மை மயக்குகின்றான். தலைவனுந் தலைவி யும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டதும் – நின்றனர். (**கண் கட்டுதல்**– மந்திரத்தாற் கண்ணை மறைத்தல்; **கண்கலத்தல்** – ஒருவரை ஒருவர் பார்த்தல், எதிர்ப்படுதல்.)



RangaRakes
tamilnavarasam.com

(67) எனது தம்பி தன்னையுங் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு போகுமாறு – நின்றான். என்பகைவனை என்மேல் – ஆண்மகன் இவனே. (**கண்காட்டுதல்** – குறிப்பாகக் கண் சிமிட்டுதல் ; **கண்காட்டிவிடுதல்** – சாடையாய் ஏவிவிடுதல்.)

(68) தன்மக்கள் எல்லாம் நல்லாய் இருக்கிறார்களெனக் கண்டு தாய் – . தன்மகனைப் பிறனொருவன் அடிப்பதைக்கண்டு தந்தை –. (**கண்குளிர்தல்** – கண்களித்தல்; **கண்கனலுதல்** – கண் சிவத்தல்.)

(69) அவள் புகழ் – அருந்ததிக் கற்பினை உடையவள். தந்தையென்றுந் தாயென்றும் பாராது அவள் – பேச்சுப்பேசுகின்றாள். (கண்கூடுதல் – ஒன்று கூடுதல், நெருங்குதல்; **கண்கெடுதல்** – பார்வை அழிதல், அறிவழிதல்.)

(70) இறைவன் அடியவன் மீது – நிற்பன். கள்ளை மறைந்து உண்டு – நிற்பவர் பிறர் நகைக்கு ஆளாவர். (**கண் சாய்தல்** – அறிவு தளர்தல், அன்பு குறைதல்; **கண் சாத்துதல்** – அன்பொடு நோக்குதல்.)

(71) அவர் அடித்த அடியினால் அவன் – வீழ்ந்தான். இரவு முழுவதுந் தூங்காது இருந்தமையால் அவன் ஆசனத்தில் இருந்தபடியே – சாய்ந்தான். (**கண் சுழலுதல்**– அடி முதலியவற்றாற் கண் மயங்குதல்; **கண் சொக்குதல்**– தூக்க முதலியவற்றாற் கண் மயங்குதல்.)

(72) – வாழைக்குருத்தை அவன் அரிந்தெறிந்தான். அறுகும் நெருஞ்சியும் – வழிபற்றிச் சென்றேன். (**கண்ணடைதல்** – துவாரம் அடைபடுதல், குருத்து வளராதொழிதல் ; **கண்ணடைத்தல்** – துவாரமடைத்தல், வழியடைத்தல், தூங்குதல்.)

(73) எமது ஆசிரியர் அச்செய்யுளுக்கு – உரை கூறினார். அவன் ஏழை என்று பாராது எதிர் நின்று – சொன்னான். (**கண்ணறுதல்** – கண்ணோட்டமறுதல், நட்புக் குலைதல்; **கண்ணழித்தல்** – பதம்பதமாகப் பொருளுரைத்தல்.)

(74) அந்நங்கை தன் காரியத்தில் –. என் மகனின் அழகைக்கண்டு பொறாது அவள் – (**கண்ணாயிருத்தல்** – விழிப்பாய் இருத்தல், அருமையாயிருத்தல்; **கண்ணாற் சுடுதல்**– கண்ணேறுபடப் பார்த்தல்.)

(75) அவன் ஏழைகளுக்கு முன் – கண்ணேட்டமற வன்சொற் சொல்லும் இயல்பினன். பத்தர்மீது தெய்வம் –. (**கண்ணிரங்குதல்** – ஒலித்தல், அருள் செய்தல், **கண்ணிற்றல்** – எதிர் நிற்றல்.)

(76) கந்தனும் அவன் மனைவியும் – தந் தனிமகளை இழந்து துக்கக் கடலுள் அமிழ்ந்தினார்கள் . – அக்காட்சியை விட்டுவிலக மனமின்றி அவன் அங்கேயே நின்றான். (**கண்ணுக்குக் கண்ணாதல்** – மிகப் பாராட்டப்படுதல்; **கண்ணுக்குத்தைத்தல்** – கண் கவரப்படுதல்.)





(77) என் மகனுக்கு – வைத்த ஆசிரியன் இவனே. – முன்னர் நாம் கற்கவேண்டியவற்றைக் கற்க வேண்டும். (கண்பஞ்சடைதல் – மரணக்குறியாய் கண் ஒளியறுதல்; **கண்டிறத்தல்** – அறிவு உண்டாக்கல், கல்விகற்பித்தல், அருள்செய்தல்.)

(78) பறவைகள் – பல வயல்களைத் தாண்டிச் சென்றேன். – மாந்தர்க்கும் பெருமை உண்டோ? (**கண்படுதல்** – நித்திரை செய்தல், திருட்டிபடுதல்; **கண்புதைதல்** – அறிவுகெடுதல், மூடப்பட்டு மறைதல்.)

(79) தூங்கிக்கொண்டிருந்த எனது நண்பன் – என்னைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்; பிறந்தவர் எல்லாம் – என்பது உண்மை. (**கண்மூடுதல்** – இமைகுவித்தல், தூங்குதல், சாதல்; **கண்மலர்தல்**– விழித்தல்.)

(80) குவளை மலர் – கழனி இது. – ஊசிகொண்டு எவ்வாறு ஆடை பொருத்தலாம்? (**கண்வளர்தல்** – தூங்குதல், குவிதல்; **கண்விடுதல்**– ஊசி முதலியன காதொடிதல்.)

(81) மழைபெய்ய – பயிரைக்கண்டு கமக்காரன் பெருமகிழ்ச்சி உற்றான். அப்பொருளின்மீது பலநாள்களாக – ஈற்றிற் களவாடிய திருடன் இவனே. (**கண் வைத்தல்** – கிருபைவைத்தல், இச்சைவைத்தல், கண்ணூறு படுத்துதல், புண்ணிலே துவாரம் உண்டாதல் ; **கண்விழித்தல்** – தூங்காதிருத்தல், நித்திரை நீங்குதல்; மீண்டுஞ் செழித்தல்.)

(82) அவன் உலகத்துப் போகபோக்கியங்கள் எல்லாவற்றையும் – பின்னர்த் துறவு பூண்டான். உய்யும் நெறியைத்தான் – என அவன் கூறினான். (**கண்டுகழித்தல்** – அனுபவித்துக் கழித்தல்; **கண்டு கொள்ளுதல்** – பேட்டி செய்தல், அறிந்து கொள்ளுதல்.)

(83) அவனை நம்பற்க; அவன் – இயல்பினன். – கதை பிடுங்குவதில் அவன் கெட்டிக்காரன். (**கதைகட்டுதல்** – கதை உண்டாக்குதல், பொய்ச்செய்தி கிளப்புதல் ; **கதைவிடுதல்**– பொய்வதந்தி எழுப்புதல்.)

(84) அவன் அச்சபையில் – அல்லலுற்றான். கதைகட்டி – திரிவார் எம்மிடையே பலர் உளர். (**கதைவளர்த்தல்** – பேச்சைவிரித்தல் ; **கதைபிடுங்குதல்** – பிறர் வாயினின்றும் இரகசியம் வெளிவரச் செய்தல்.)

(85) அவன் – பருவத்தை அடைந்தவுடன் நன்பெற்றேரை மதியாது நடந்தான். இராமன் இராக்கதரை – முயன்றான். (**கருவறிதல்** – பகுத்தறியும் பருவமடைதல்; **கருவறுத்தல்** – நிர்மூலமாக்குதல்.)



RangaRakes tamilnavarasam.com

(86) அவன் தன் பெற்றோர்மீது – அன்பு கொண்டான். இறைவன் பெருமையினை – இவ்வளவிற்று என ஞானிகளுஞ் சொல்லமாட்டார். (கரை கடத்தல் – எல்லைமீறுதல்; கரைகாணுதல் – எல்லையறிதல்.)

(87) அவன் அவள்மாட்டு – ஓடுங்காதல் கொண்டான். நீ உலக பந்தத்தினின்றும் நீங்கி – விரும்பின், சற்குருவை அடையவேண்டும். (**கரையேறுதல்** – நற்கதி அடைதல்; **கரைபுரளுதல்** – பெருக்கெடுத்தல், மிகுதல்.)

(88) அவன் நண்பன்போலத் தன்னைக்காட்டி – பெற்றியன். அவன் யாவர்க்கும் ஆபத்தில் – உதவும் தன்மை வாய்ந்தவன். (**கழுத்துக் கொடுத்தல்** – தன் வருத்தம் பாராது பிறர் காரியத்தை ஏற்று நிற்றல்; **கழுத்தறுத்தல்** – பெருந்துன்பத்துக்கு உள்ளாக்குதல்.)

(89) அவள் – ஞான்று மணப்பந்தரிற் பெரியோர் பலர் கூடி இருந்தனர். அவள் – நாள் முதலாக உடனலமின்றி வாழ்கின்றாள். (**கன்னிகழிதல்**– மணம்புரியப் பெறுதல்; **கன்னியழிதல்** – கன்னிமை கெடுதல்.)

(90) அவள் அத்துறவிக்கு – நல்லுணவு அளித்தான். அவன் அன்னியன் மனைக்குட்புக – நின்றான். (**கால் கூசுதல்** – மனங்கூசுதல், **கால் கழுவுதல்** – பாத்திய மளித்து உபசரித்தல்.)

(91) அக்கல்லூரி மாணக்கர் பரிசளிப்பு விழா ஒன்று நடத்துதற்கு – நின்றனர். தங்குலமுழுதும் – பார்த்திருப்பாரும் உலகில் உளரோ? (**கால்சாய்தல்** – அடியோடழிதல்; **கால்கொள்ளுதல்** – திருவிழா முதலியவற்றுக்கு ஆரம்பஞ்செய்தல், இடங்கொள்ளுதல்.)

(92) அச்சுமையைத் தாங்காது கயிறு–. பால் குடிக்க – வேண்டிய நிலைமை ஏற்பட்டது. (**கால்பரிதல்** – அறுபடுதல்; **கால்பிடித்தல்** – அடிவருடுதல், காலைப்பற்றிக் கெஞ்சுதல், தொண்டுபுரிதல்.)

(93) அவர் நெடுந்தூரம் நடந்தமையால் – மர நிழலில் இளைப்பாறினார். – மேகம் மழை வெள்ளத்தைத் தரும். (**கால்விழுதல்** – மழைக்கால் இறங்குதல்; கால் விடுதல் – கால்கள் செயலறுதல்.)

(94) – போது கிளைஞர் பலர் வந்து சேர்வர். நெடுந்தூரம் நடந்து – நின்ற ஒருவனைப் புலியொன்று தாக்கிற்று. (**காலாடுதல்** – முயற்சியாற் செல்வஞ் செழித்திருத்தல்; **காலாறுதல்** – நடை ஓய்ந்திருத்தல்.)

(95) அவன் – வகையறியாது தற்கொலை புரிந்தான். அவன் – என்பதை அறியாது அவன் வீட்டிற்குச் சென்று அவனைக் காணலாமாவென விசாரித்தேன். (**காலங்கழித்தல்** – வாழ்நாள் போக்குதல், சீவனம் பண்ணுதல் ; **காலஞ்செல்லுதல்** – இறந்துபோதல், தாமதப்படுதல்.)

(96) முயற்சி யாதுமின்றி – நிற்பவர் அறிவுடையோரால் இகழப்படுவர். காரியம்பார்ப்பவர் – செய்தாற் பயன் பெறுவர். (**காலமறிதல்** – வினைசெயற்கேற்ற காலத்தை அறிதல் ; **காலந்தள்ளுதல்** – சீவனஞ்செய்தல், வீண்காலம் போக்குதல்.)

(97) கடன்காரர் எல்லாம் அவனை – அவன் கடனிறுக்கும் வழிதெரியாது திகைத்து நின்றான். – பிள்ளைகளுள் ஒருவன் சிறிதுகாயப்பட்டான். (**கிட்டியடித்தல்** – கிட்டி விளையாடுதல் ; **கிட்டிகட்டுதல்** – நெருக்கி வருத்துதல்.)

(98) ஆசிரியர் என்மீது கறுக்கொண்டிருக்கிறாரென்று நண்பன் –. அவன் பிச்சைக்காரருக்கேனும் ஒன்றும் – என அறிந்தேன். (**கிள்ளித் தெளித்தல்** – சிறிது கொடுத்தல்; **கிள்ளிக்காட்டுதல்** – சிறிதளவு பரிமாறுதல், குறிப்புக் காட்டுதல்.)

(99) அச்சேனைகளின் மனப்போக்குப் பகைவரால் –. தளர்ச்சி வந்தவிடத்து உட்பகையானது பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே –. (**கீழறுதல்** – பேதிக்கப்படுதல் ; **கீழறுத்தல்** – சதிசெய்தல்.)

(100) நோயாளியினது நாடி – என வைத்தியன் கூறினான். என்மகன் உடனலம்பெற்று – இருக்கின்றா னென யான் அறிந்தேன். (**குணமாதல்** – சௌக்கியமாதல் ; **குணங்காட்டுதல்** – வியாதி நீங்கியமை காட்டல்.)

(101) அவன் நண்பருக்கு ஆபத்தில் – நீர்மையன். அவர் அறத்தை – நடக்கிறார். (**கைக்குதவுதல்** – சமயத்திற்கு உதவுதல் ; **கைக் கொள்ளுதல்** – பேணிக்கொள்ளுதல், அங்கீகரித்தல், கவர்தல்.)

(102) நின்னை – நின்முகமே நினது துக்கத்தை எனக்கு அறிவிக்கின்றது. இரு படைகளும் – போதினும் வெற்றி ஒரு பக்கத்திற்குங் கிடைக்கவில்லை. (**கை கலத்தல்** – நெருங்கிப்பொருதல்; **கைகடத்தல்** – வசப்படாது மீறுதல்.)

(103) தன்மகன் ஒழுங்கீனமாய் நடக்கின்றானென்று தந்தை அவனை – விட்டான். தன்காரியங்கள் எல்லாம் – என அவன் மகிழ்ச்சி அடைந்தான். (**கை கழுவுதல்** – விட்டு விடுதல்; **கைகூடுதல்** – சித்தியாதல், கிட்டுதல்.)

(104) அவர் எனது நலன்கருதி வந்தவரல்லரென்று அவன் எனக்கு –. இதனைப்போல் – மருந்து வேறில்லை. (**கைகாணுதல்** –







RangaRakes

tamilnavarasam.com

அனுபவத்தில் அறிதல், **கைகாட்டுதல்** – சைகைகாட்டுதல், அபிநயம் பிடித்தல், சிறிது கொடுத்தல்.)

**(105)** தருமஞ் செய்தற்கு அவன் – நிற்பான். துறவிகளைக் கண்டவிடத்து அவன் – நிற்பான். (**கைகூப்புதல்** – கைகளைக் குவித்துக் கும்பிடு தல்; **கைகூசுதல்** – பின்னடைதல், உலோபத்தனங் கொள்ளுதல்.)

**(106)** எனது நண்பன் உற்றுழி – இயல்பினன். அவ்வேழைக்கு உதவாது கடவுளும் – விட்டாரே. (**கை கொடுத்தல்** – உதவிசெய்தல்; **கை சலித்தல்** – கையோய்தல்.)

**(107)** மெய் வருத்தி – உய்யுங்கள். யான் வறுமையுற்ற போது எனக்கு – வாழ வைத்தவர் இவரன்றே. (**கை செய்தல்** – தொழில்செய்தல், அலங்கரித்தல்; **கை தருதல்** – உதவிபுரிதல், மணம்புரிதல்.)

**(108)** பெற்ற பிள்ளைகளைக் கூடாதவரென – பெற்றோர் மூப்பு வந்த காலத்தில் உள்ளம் நோவர். அப்பெரியவன் யான் வறுமையுற்ற பொழுது என்னை – நின்றான். (**கைதூக்குதல்** – வறுமை முதலிய வற்றினின்று காத்தல்; **கைதுடைத்தல்** – விட்டொழிதல்.)

**(109)** அவர் தாம் பெற்ற உணவை – மகிழ்ந்தார். செல்வரிடஞ் சென்று – வாழ்தலிலும் இன்னாததொன்றில்லை. (**கைநீட்டுதல்** – இரத்தல், திருடுதல், அடிக்கக் கையோங்குதல்; **கைதொடுதல்** – சபதஞ் செய்தல், உண்ணுதல்.)

**(110)** பகையரசன் – நாடு தழைத்தோங்கல் அரிது. கள்வர் – பொருளை மீட்டல் எளிதன்று. (**கைப்படுதல்** – கைவசமாதல்; **கைப்பற்றுதல்** – அபகரித்தல், மணம்புரிதல்.)

**(111)** கல்வித்துறைகள் எல்லாவற்றிலும் – ஒருவனைக் காண்டல் அரிது. அவள்பாற் கொண்ட காதல் – அவன் கடுந்துயர் எய்தினான். (**கைம்மிகுதல்** – அளவு கடத்தல்; **கைபோதல்** – முற்றும் வல்ல வனாதல், கடந்துசெல்லுதல்.)

**(112)** மாநிலம் – என்பது பொய்யாகாது. செல்வம் ஒரு நிலையாக நில்லாது – என்பது எல்லாரும் அறிந்ததொரு விடயம். (**கையகப் படுதல்** – வசப்படுதல், **கையடிப்படுதல்** – பல கைகளிற் கடந்து செல்லல்.)

**(113)** – பேதை ஒரு கருமத்தை மேற்கொண்டானாயின் புரைபடுவன். மகள் இறந்தமை கண்டு தாய் – இன்னல் எய்தினாள். (**கையறுதல்** – செயலற்றுப்போதல், அளவுகடத்தல், இறத்தல்; **கையறிதல்** – பழக்கமாதல், செய்யுமுறை அறிதல்.)





**(114)** தான் புதிதாகக்கண்ட சூத்திரத்தை – அவன் எல்லாக் கணக்குக் களையுஞ் செய்தான். மூன்றுமாத காலத்திற்கு இராப்பகலாகக் கற்ற மாணாக்கன் பத்து நாள்களுக்கு – விரும்பினான். (**கையாளுதல்** – வழக்கத்திற்குக் கொண்டுவருதல், அபகரித்தல்; **கையாறுதல்** – இளைப்பாறுதல்.)

**(115)** – தண்டத்தால் அரசன் நாட்டைக் கெடுப்பான். அவள் – அவனை மணம்புரிந்தாள். (**கையிகத்தல்** – அளவிற்கு மேற்படுதல், மீறுதல்; **கையிசைதல்** – மனம் இணங்குதல்.)

**(116)** கள்வன் தன்னைத் தண்டிக்கவேண்டாமென்று நீதிபதியை – மன்றாடி னான். அவன் பேசிய பேச்சைக் கேட்டு அவர்கள் – சிரித்தனர். (**கையெறிதல்** – கைகொட்டுதல், உறுதிகூறிக் கையடித்தல்; **கையெடுத்தல்** – கும்பிடுதல், யாசித்தல்.)

**(117)** அவர் தம்பிள்ளைகளின்மீது – அன்புகொண்டு அவர்களைக் கெடுத்தார். அவன் அச்சொற்பொழிவைக் கேட்டபின்னர் தனது தீக்குணங்கள் எல்லாவற்றையும் – வாழ்ந்தான். (**கைவிடுதல்** – விட்டொழிதல்; **கைவிஞ்சுதல்** – அளவு கடத்தல்.)

**(118)** எவர் அளித்தாலும் அவ்யாசகன் – வாங்குவான். அவன் – வேலை முடியாமற் போவதில்லை. (**கைவிரித்தல்** – யாசித்தற்காகக் கை நீட்டுதல்; **கை வைத்தல்** – பிரவேசித்தல்.)

**(119)** அவன் யாதொன்றையும் – கேளான். அறிவுரைகள் பல பகர்ந்தாலும் இவன் –. (**செவிகொடுத்தல்** – கேட்டற்குக் காதுகொடுத்தல்; **செவிகொள்ளுதல்** – கேட்டல்.)

**(120)** தனது ஆசிரியன் அச்செய்யுளுக்குப் பொருள் கூற அவன் அதனை – இன்புற்றான். தான் கற்ற எல்லாவற்றையுங் கல்லார் – நிற்றலே அவன் இயல்பு. (**செவி மடுத்தல்** – கேட்டல்; **செவிமாட்டுதல்** – பிறர்காதில்வலிய நுழைத்தல்.)

**(121)** அவன் யாதொன்றும் – எனினும் எல்லாங்கேட்டவன் போல நடிப்பான். அவன் அறிவுரைகள் எல்லாவற்றிற்கும் – நிற்கும் இயல் பினன். (**செவியுறுதல்** – காது கொடுத்துக் கேட்டல் ; **செவிசாய்த்தல்** – இணங்கிக் கேட்டல்.)

**(122)** அவன் கற்றார்முன் – மதிப்புக்கெட்டான். தந்தலைவி ஆண்மகவு ஒன்றைப் பெற்றாளெனத் தோழியர் –. (**சொல்லாடுதல்** – பேசுதல்; **சொல்வளர்த்தல்** – செய்தியைப் பலரறியச் செய்தல்.)

**(123)** அம்மாணாக்கன் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் அவன்



RangaRakes
tamilnavarasam.com

ஞாபகத்திற்கு வரும்படி ஆசிரியன் –. ஆசிரியன் – பாடங்கள் எல்லாவற்றையும் என்மகன் எனக்கு ஒப்பித்தான். (**சொல்லிக் கொடுத்தல்** – படிப்பித்தல், அறிவித்தல், தூண்டிவிடுதல்; **சொல்லிக் காட்டுதல்** – பாடம் ஒப்பித்தல், விளக்கியறிவித்தல், குத்திக் காட்டல்.)

**(124)** ஒட்டிக்கொண்டு போனாலும் –. – ஆளில்லாமற் போனால், தம்பி சண்டப்பிரசண்டம் பண்ணுவான். (**தட்டிக்கேட்டல்** – அடக்கி யாளுதல் ; **தட்டிக் கழித்தல்** – விலக்குதல்.)

**(125)** அவன் என்பொருளைத் தந்திரமாக –. அவன் அப் பாடத்தை – வாசிக்கின்றான். (**தட்டித் தடவுதல்** – தடுமாறுதல்; **தட்டிக் கொள்ளுதல்** – அபகரித்தல், மோதிக் கொள்ளுதல்.)

**(126)** தந்தை சொல்லை – மக்கள் பிற்காலம் வருந்துவர். அம்முரனை – கூத்துப் பார்க்கிறாயா? (**தட்டிப் பேசுதல்** – மறுத்துரைத்தல் ; **தட்டிவிடுதல்** – உற்சாகப்படுத்துதல், குலையச்செய்தல், வெட்டி விடுதல்.)

**(127)** தான் எடுத்த காரியம் – என அவன் எண்ணினான். நண்பன் பிழை செய்தாலும் அவனை – நிற்பவன் பகைவராலும் போற்றப்படுவான். (**தலைகூடுதல்** – நிறைவேறுதல், ஒன்றுசேர்தல்; **தலைப்பிரிதல்** – நீங்குதல்.)

**(128)** காமத்தீ – அவன் உடல் சாம்பியது. அம்முனிவன் இன்பம் – தவஞ்செய்தான். (**தலைக்கொள்ளுதல்** – மிகுதல், இறத்தல், மேற் கொள்ளுதல், கிட்டுதல், கைப்பற்றுதல், தொடங்குதல்; **தலைச் சிறத்தல்** – மிகப் பெருகுதல், மேன்மையுறுதல்.)

**(129)** ஏதிலார் – யான் உய்யுமாறு உரையாய். அப்போர்க் களத்தில் அள விறந்த தொகையினர் – கிடந்தனர். (**தலைசாய்தல்** – நாணுதல்; **தலைமடிதல்** – இறத்தல், கதிர் முதலியன சாய்தல்.)

**(130)** அவன் பிறர் காரியங்களிலே – அவமதிப்பைப் பெறுபவன். அவ்வரசன் அறம் – தனது நாட்டைப் புரந்தனன். (**தலையிடுதல்** – கூட்டுதல், பிரவேசித்தல்; **தலையெடுத்தல்** – விருத்தியடைதல், பிரசித்த மாதல், இழந்த நிலைமையை மீளப்பெறுதல்.)

**(131)** அவர்கள் எல்லாருங் கங்கையாற்றிலே – போயினர். எண்ணியவை எல்லாம் – என்றிருத்தல் பொருந்துமோ? (**துறைபடிதல்** – நீர் நிலைகளிலே நீராடுதல்; **துறைபோதல்** – காரியம் முடிவுபெறுதல், நிரம்புதல்.)





**(132)** யான்படாக் கடன்பட்டு – முயன்றும் பயன் பெறவில்லை. அவ் வியாபாரி – என்னைக் கடன்காரனாக்கி விட்டான். (**தொகை யிறக்குதல்** – சிறிது சிறிதாகக் கொடுத்துக் கடனைக் குறைத்தல்; **தொகையேற்றுதல்** – சிறுகச்சிறுகக் கொடுத்துக் கடனேற்றுதல்.)

**(133)** அவ்வரங்கிற் சென்றதுந் தன்னெதிரியைக்கண்டு அம்மல்லன் – நின்றான். யான் வறுமையுற்றபோது – என்னை வாழவைத்தவரை ஒருபோதும் மறவேன். (**தோள் கொடுத்தல்** – உதவி செய்தல் ; **தோள்கொட்டுதல்** – வீரக்குறியாகப் புயங்களைத் தட்டுதல்.)

**(134)** அவன் கடனிறுக்குந்தவணை தப்பி –. அப் பணிப் பெண் தனது எச மாட்டியின் முன்னிலையிலே –. (**நாக்குத்தெறிக்கப் பேசுதல்** – பெரியோரை நிந்தித்தல் ; **நாக்குத்தவறுதல்**, **நாக்குப்புரளுதல்** – பேச்சுறுதி தவறுதல்.)

**(135)** அக்கிழவி தன் குடும்ப இரகசியங்கள் எல்லாவற்றையும் – தன் மதிப்பைக் கெடுத்தாள். அவள் எப்பொருளைக் கண்டாலும் – ஆனால் அப்பொருளைப் பெறும் ஆற்றலிலள். (**நாக்குநீட்டுதல்** – அளவு கடந்து பேசுதல் ; **நாக்கு நீளுதல்** – விருப்பம் மிகுதல், கடுமையாய்ப் பேசுதல்.)

**(136)** அவர் – வியாதியால் வருந்துகின்றார். அவன் கலியாணஞ் செய்தற்கு – சோதிடனிடஞ் சென்றான். (**நாட்படுதல்** – நெடுங் காலந்தங்குதல், பழமையாதல்; **நாட்பார்த்தல்** – சுபதினங் குறித்தல்.)

**(137)** அவன் ஐந்து புலனும் – அம்மரத்தோடு அடியுண்டு விழுந்தான். நோய் நீங்கி எட்டுநாட் சென்றபின்னரே அவர் –. (**நிலைகொள்ளுதல்** – உறுதியாதல், தன்னிலை யடைதல்; **நிலைகலங்குதல்** – நிலைமை தவறுதல்.)

**(138)** – பாவஞ் செய்வார் நரகம் புகுவர். தனது நண்பனுக்கு – சென்றவன் ஒரு விபத்திற்கு ஆளானான். (**நிலைகோலுதல்** – இடந் தேடுதல்; **நிலைகுலைதல்** – நிலைமை தவறுதல், நெறிவழுவுதல், நிலைமை தளர்தல்.)

**(139)** நாட்டிற் பல கலகங்கள் விளைந்தமையால் அரசாட்சி –. தன் ஒழுக்கத்தினின்றும் – நடப்பவன் எல்லாராலும் புகழப்படுவான். (**நிலைதிரிதல்** – முறை கெடுதல் ; **நிலைதளம்புதல்** – கலக்கமுற் றிருத்தல், நிலை குலைதல்.)

**(140)** தாம் பொய் சொல்லவில்லையென அவர் – விட்டார். அது பொய்யோ மெய்யோவென அவன் ஐயுற்று ஈற்றில் அது



RangaRakes
tamilnavarasam.com

மெய்யென – விட்டான். (**நிலைநிறுத்துதல்** – தாபித்தல் ; **நிலைப் படுத்துதல்** – தாபித்தல், நிச்சயப் படுத்துதல்.)

**(141)** சிலர் காயகற்பந் தேடி –. அப்பத்தன் – கண்பனிப்ப நின்றான். (**நெஞ்சுருகுதல்** – மனமிளகுதல்; **நெஞ்சு புண்ணாதல்** – மன நோதல்.)

**(142)** தான் செய்த குற்றம்பற்றித் தன்னை எசமாட்டி கடிவாளென அஞ்சி அவள் – நின்றான். அவன் தன்னை எல்லாரும் மன்னிக்குமாறு – நின்றான். (**பல் லிளித்தல்** – பல்லை வெளிக்காட்டுதல்; **பல்லுக் காட்டுதல்** – வெளிப்படச் சிரித்தல், கெஞ்சுதல்.)

**(143)** அவன் பகைவனைக் கண்டதுஞ் செங்கண் சிவந்து நெஞ்சு – நின்றான். அந்நங்கை தன் கூந்தலுக்கு –. (**புகையூட்டல்** – வாசனைப்புகை ஊட்டுதல் ; **புகையுயிர்த்தல்** – கொதிப்படைதல்.)

**(144)** அப்போர்க்களத்திற் பாண்டியன் சேனை சேரன் சேனையை – நின்றது. அவ்வீரர் எல்லாம் போர்முனையிலே – அவர் தலைவன் அவர்களை வெகுண்டு பார்த்தான். (**புறங்காணுதல்** – முறியடித்தல்; **புறங்காட்டல்** – தோற்றோடுதல்)

**(145)** – வாழ்தலினுஞ் சாதல் நன்று. அந்நங்கை மாலை முதலியன கொண்டு தன்னுடம்பை – எண்ணினாள். (**புறங்கூறுதல்** – காணா விடத்துப் பிறரைக் குற்றங்கூறுதல்; **புறஞ்செய்தல்** – அலங்கரித்தல்.)

**(146)** தன் பகைவர்சேனையைப் – வேந்தன் உவகைபூத்தான். அறிவு – ஞான்று தருமமே பின்செல்லும். (**புறம்போதல்** – விட்டு நீங்குதல்; **புறம்பெறுதல்** – புறக்கொடையைக் காணுதல்.)

**(147)** தன் பகைவனிடம் – அவனுடைய இரகசியம் எல்லாம் அறிந்தான். தன் பகைவனோடு – முடிவில் அவனை வெட்டும்படி செய்தான். (**பேச்சுக் கொடுத்தல்** – இரகசியமறிய வார்த்தையாடு தல், பேச்சு நீடித்தல்; **பேச்சு வளர்த்தல்** – பேச்சு நீடித்தல், வாய்ச்சண்டை யிடுதல்.)

**(148)** அவன் புலன் ஐந்தும் – நெறிமயங்கித் திரிந்தான். அவன் தன்னெதிரே வந்த பகைவனைப் – பார்த்தான். (**பொறிகலங்குதல்** – அறிவு மயங்குதல்; **பொறிபறத்தல்** – மிகவெகுளல்.)

**(149)** என்மக்கள் ஐவரையும் மதுரைக்கு – ஐந்தாண்டு சென்றன. சந்திரமதி தன்மகனை – துக்கத்தால் உயிர் நீத்தாள். (**போக்கடித்தல்** – இழத்தல்; **போக்காட்டுதல்** – அனுப்பிவிடுதல்.)





**(150)** அவர் துப்பாக்கிகொண்டு தமது பகைவரை – செய்தார். அவள் எங்கள் காரியங்கள் எல்லாவற்றிற்குந் தடையாய்நின்று –. (**மண்ணுண்ணுதல்** – தோற்று விழுதல் ; **மண்போடல்** – கேடுசெய்தல்.)

**151)** அவள் அவ்வேழையினது நிலைமைகண்டு – அன்னங் கொடுத்தாள். அவ்விடலை தனக்கு யாதுந் தனது தந்தை கொடுக்கவில்லையென – அவ்விடத்தினின்றும் நீங்கினான். (**மனங்கசிதல்** – மனமிரங்குதல்; மனங்கருகுதல் – வெறுப்படைதல்.)

**(152)** தான் முன்செய்த தீவினை காரணமாகத் தனக்கு அது நிகழ்ந்ததென அவன் – கூறினான். அவன் பாவஞ் செய்தற்கு – நிற்பான். (**மனங் கூசுதல்** – மனம் பின்னிடைதல் ; **மனங்கரைதல்** – நெஞ்சிளகுதல், பின்னிரங்குதல், துக்கப்படுதல்.)

**(153)** தன்பிள்ளையை அடித்தவனை அவள் – ஏசினாள். தான் – பெண்ணை மணந்து அவன் இல்வாழ்க்கை நடத்துகிறான். (**மனங் கொதித்தல்** – கோபங்கொள்ளுதல்; **மனங்கொள்ளுதல்** – விரும் புதல்.)

**(154)** நேற்று என்பக்கமாக நின்றவன் இன்று என்மீது – நிற்றற்கு நியாயம் என்ன? நேற்றுத்தானே அச்செயலைச் செய்து முடிப்பானென உறுதி கொண்டு நின்றவன் இன்று – நிற்றல் எனக்கு ஆச்சரியத்தை விளைக்கின்றது. (**மனங்கோணுதல்** – மனம்மாறுதல், வெறுப் படைதல்; **மனங்கூம்புதல்** – உற்சாகங்குன்றல், மனவமைதி கொள்ளல்.)

**(155)** வன்சொற் கேட்டதும் அதனைப்பொறாது அவன் – எழுந்தான். அப்பெண்ணை மணமுடித்தற்கு அவன் – வாக்குறுதி செய்தான். (**மனம் பொங்குதல்** – மனம் அலைவுறுதல், சினங்கொள்ளுதல் ; மனம்பொருந்துதல் – சம்மதித்தல், அங்கீகரித்தல்.)

**(156)** பசிக்கொடுமையால் அழுதபிள்ளையைப் பார்த்துத் தாய் – உணவு அளித்தாள். தன்மகள் கூடாதவொழுக்கத்தினள் எனக் கேட்டறிந்த தந்தை – அவளுக்கு யாதொரு சொத்தும் எழுதிவையாது உயிர் நீத்தான். (**மனமிளகுதல்** – மனமிரங்குதல்; **மனமிறுகுதல்** – கடின மனமாதல், உலோபகுணங்கொள்ளுதல்.)

**(157)** தான் விரும்பிய பொருளைத் தனக்கு யான் கொடுக்கவில்லையென்று அவள் – நின்றாள். மகன் தன்னைக் காண வந்தானெனத் தாய் அவனை – உபசரித்தாள். (**முகங்கருகுதல், முகங்கோணுதல்** – முகங்கன்றுதல்; **முகமலர்தல்** – முகப்பொலிவு கொள்ளுதல்.)





RangaRakes

tamilnavarasam.com

**(158)** அரசன் அன்று தன் குடிகளுக்கு – அவர்கள் பெருங்களிப்புற்றார்கள். அக்குற்றவாளி தான் செய்த குற்றத்தை நினைந்து – நின்றான். (**முகங்குறாவுதல்** – துன்பத்தால் முகப்பொலிவிழத்தல்; **முகங் காட்டுதல்** – காட்சி கொடுத்தல்.)

**(159)** தனக்கு – நீதிபதி சிறைத்தண்டனை விதியானென அக்குற்றவாளி உணர்ந்தான். தந்தையிடம் – மகன் புகைப்படம் பார்க்கச் சென்றான். (**முகங்கொள்ளுதல்** – சம்மதம் பெறுதல், சம்மதக்குறிகாட்டுதல்; **முகங்கொடுத்தல்** – இன்முகங்காட்டுதல், காட்சிகொடுத்தல்.)

**(160)** ஒருவன் – நோக்கினால் அவனிடம் வரும் விருந்தினர் குறைவர். தலைவனுந் தலைவியும் – நின்றனர். (**முக நோக்குதல்** – நோக்கெதிர்நோக்குதல்; **முகந்திரிதல்** – முகங்கோணுதல்.)

**(161)** அறிவுடையோரை – நடத்தல் நன்மைதரும். தன்னிடம் – இரவலனுக்கு அவ்வள்ளல் பரிசில் ஈந்தான். (**முகம் பார்த்தல்** – நன்கு மதித்தல், அன்பு செய்தல் ; **முகம் புகுதல்** – தயவிற்காக எதிர்சென்று நிற்றல், முக மலர்தல்.)

**(162)** அவன் வடதிசை – நின்றபோது புலவன் ஒருவன் அவலமுறுவதைக் கண்டான். அவன் பெரியார் சிறியாரெனப்பாராது – பேசுவதிற் சமர்த்தன். (**முகமுறிதல்** – மனநோதல், தாட்சணியமறுதல்; **முகஞ் செய்தல்** – நோக்குதல், தோன்றுதல்.)

**(163)** இற்றைக்குப் பன்னிரண்டு நாள்களுக்கு முன் அவன் –. தன்னை முனிந்தருள வேண்டாமென்று அவன் –. (**முடிசாய்தல்** – இறத்தல், **முடிசாய்த்தல்** – படுத்துக்கொள்ளுதல், தலைவணங்குதல்.)

**(164)** அந்நீதிபதி ஒருமணி நேரஞ் சிந்தித்தபின் அவ்வழக்கிற்கு –. தான் எடுத்தகாரியம் – வரைக்கும் அவன் சோறுண்ணாதிருந்தான். (**முடிவு போதல்** – நிறைவேறுதல்; **முடிபுசொல்லல்** – தீர்ப்புச்சொல்லுதல்.)

**(165)** பாண்டியன் படை சேரன் படையை–. அவன் எனக்கு – ஆயின், அவ்வேலையை ஒருமணி நேரத்திற்குள்ளே முடிப்பேன். (**முதுகு காணுதல்** – தோல்வியுறச் செய்தல் ; **முதுகு கொடுத்தல்** – முதுகிடுதல், துணை செய்தல்.)

**(166)** தன்னை அவன் அவதூறாய்ப் பேசி – என்று கந்தன் முணுமுணுத்தான். அவனைக் குற்றங்கூறியமையால் அவன் – நிற்கின்றான். ) **மூக்கறுத்தல்** – அவமானஞ் செய்தல்; **மூக்குச்சுழித்தல்** இகழ்ச்சிக்குறியாக மூக்கைத் திருப்புதல்)





**(167)** பிறராற் செய்ய முடியாத அவ் வேலையைத் தான் செய்து முடிப்பானென அவன் – நின்றான். ஓடும் பழக்கத்தைக் கைவிட்டவன் இன்று ஓடி –. (**மூச்சுப் பிடித்தல்** – மூச்சுத் திணறுதல்; **மூச்சுக் காட்டுதல்** – ஆண்மை காட்டுதல், ஆளரவஞ்செய்தல்.)

**(168)** அவன் இறைவனை வணங்கி – நின்றான். தசரதன் – அயோத்தி மாநகர் துக்கக்கடலுள் ஆழ்ந்தது. (**மெய்விடுதல்** – இறத்தல்; **மெய்ம்மறத்தல்** – அறிவு நீங்குதல், தன்னை மறத்தல்.)

**(169)** அக் கணக்கன் கணக்கைப்பற்றி – அறியாது விழிக்கின்றனன். எக்காரியத்தையும் – செய்பவனே நன்கு மதிக்கப்படுவான். (**வகையறிதல்** – செய்யும் முறை தெரிதல், கூறுபாடறிதல்; **வகைசொல்லுதல்** – விவரஞ் சொல்லுதல், கணக்குக்காட்டடல்.)

**(170)** அடுத்த வீட்டிலே நடந்த கலியாணத்தை நினைந்து அவள் –. அவள் – ஓர் ஆண்மகவைப் பெற்றாள். (**வயிறெரிதல்** – பொறாமை கொள்ளுதல்; **வயிறுநோதல்** – பிரசவவேதனையுண்டாதல்.)

**(171)** அவள் – வழியறியாது தெருத் தெருவாய்த் திரிகின்றாள். அவன் ஐந்து நாள்களாக – இன்று தான் உணவு உட்கொள்ளுகிறான். (**வயிறு கழுவுதல்** – பாடுபட்டு உணவுதேடி வாழ்தல்; **வயிறுகாய்தல்** – பட்டினியிருத்தல்.)

**(172)** அப்பெரியவன் அவ்வறியவனுக்கு – உணவு ஈந்தான். அவன் – வழிதெரியாது விழிக்கின்றான். (**வயிறுவளர்த்தல்** – வயிறுகழுவுதல்; **வயிறுகுளிர்தல்** – திருத்தியடைதல்.)

**(173)** அவன் ஒரு சொல்லாலே தன் பகைவனை – விட்டான். அவன் – நின்ற அப்பேதையை நன்கு புடைத்து வாய்பேசாதிருக்கச் செய்தான். (**வாய்காட்டுதல்** – பிரசங்கமாய்ப் பேசுதல்; **வாய்கட்டுதல்** – பேசாதிருக்கச் செய்தல்.)

**(174)** அம்மலர் – மணம் வீசிற்று. ஆம்பற்பூவெல்லாம் –. (**வாய்கூம்புதல்** – குவிதல்; **வாய்திறத்தல்** – மலர்தல், புண்கட்டி உடைதல், மலர்த்துதல், பேசுதல்.)

**(175)** அவன் என் காரியங்கள் எல்லாவற்றிலும் –. நம்மிருவருக்கும் இடையே நடந்த பேச்சை ஒருவருக்கும் – வேண்டாம். (**வாய் வைத்தல்** – புசித்தல், தலையிடுதல், சிறிது பயிலுதல்; **வாய்விடுதல்** – பேசுதல், மலர்தல், வெளிப்படுத்துதல்.)

**(176)** மடமை காரணமாகத் தன் பங்காளிகள் எல்லாருக்கும் அவன் – விட்டான். தன் மனைவியின் மூடச்செய்கை காரணமாக – பெற்ற



RangaRakes tamilnavarasam.com

கந்தன் இன்று காலை இறந்தனன். (**வாயில் மண் போடுதல்** – கேடு விளைத்தல்; **வாயில் மண் விழுதல்** – முற்றுங் கேடுறுதல்.)

(177) அவ்வியாபாரி தன் கடையிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் – பின்னரே விற்கத் தொடங்கினான். – தக்க பொருள்களே அவன் கடையிற் கிடக்கின்றன. (**விலைபெறுதல்** – தக்க கிரயம் பெறுதல்; **விலைகட்டுதல்** – பெறுமானத் தொகையை நிச்சயப்படுத்துதல்.)

(178) சோழன் தன் படைகளாலே தன்னை எதிர்த்த வீரர் பலரை –. நேற்று அவன் – அத்திவாரமிட்டான். (**வீடெடுத்தல்** –வீடுகட்டுதல்; **வீடுசேர்த்தல்** – அழித்தல்.)

(179) தன்னைப் பழித்துக் கூறிய ஒருவனை அப்புலவன் –. தன்னை அவன் ஏசுகின்றானென நினைத்து முருகன் அவனை –. (**வெட்டிப் பாடுதல்** – பழித்துப் பாடுதல்; **வெட்டிப்பேசுதல்** – எதிர்த்துச் சொல்லுதல், கண்டித்துப் பேசுதல்.)

(180) தன் பகைவனது வமிசத்தை அவன் – முயன்றான். சிதம்பரத்திற்கு யாத்திரையாகச் சென்ற அவன் அங்கேயே – விட்டான். (**வேரறுத்தல்** – நிர்மூலமாக்குதல்; **வேரூன்றுதல்** – உறுதியாகத் தாபிக்கப் பெறுதல்.)

## II. இலக்கணைச் சொற்றொடர்கள்

**236. சிலசொற்றொடர்களை உலக வழக்கில் இலக்கணைப் பொருளில் வழங்கும் முறைகள் கீழ்க்காணும் வாக்கியங்களால் அறியப்படும்:**

(1) இரகசியம் பேசும்போது **அக்கம்பக்கம்** (அண்டையயல்) பார்த்துப் பேசவேண்டும்.

(2) **அக்குத்தொக்கு** (ஒட்டுப்பற்று) இல்லாதவனுக்குச் சுற்றத்தினர் பற்றிக் கவலையில்லை.

(3) அவன் **அகட விகடமாய்ப்** (கேலியாய்ப்) பேசுவதிற் சமர்த்தன்.

(4) அவனது **அதிக்குதி** (செருக்குநடை) எங்களாலே தாங்கக்கூடிய தொன்றன்று.

(5) அக்கலியாண வீட்டில் உண்டான **அமளிகுமளி** (பேராரவாரம்) இங்குங் கேட்டது.

(6) **அரட்டுப்புரட்டு** (பொய்ப்புரட்டு) இன்றித் தொழில் செய்யும் வியாபாரிகள் செல்வத்தாற் பொலிவர்.





(7) அவன் உழைக்கும் பணம் அவனது வாழ்க்கைக்கு **அராட்டுப் பிராட்டாய்** (போதியதும் போதாதுமாய்) இருக்கின்றது.

(8) **அரைகுறையாக** (முற்றுப்பெறா வகையாக) வேலை செய்பவன் வேலைப்பயன் பெறான்.

(9) அவன் கடன்காரர்களால் **அல்லைதொல்லைப்** (மிக்க துன்பப்) படுகின்றான்.

(10) திடீரென மணமகன் இறந்தமையால் அம்மணச்சபை **அல்லோல கல்லோலப்** (ஆரவாரப்) பட்டது.

(11) **அற்றகுற்றம்** (நட்டம்) பார்க்கின்றவனுக்கு வியாபாரஞ் செய்தல் எளிதன்று.

(12) தன்னோடு ஒப்ப **ஆறல்பீறலாய்** (உபயோகமில்லாது) இருக்கும் ஒருவனை அவன் தனது நண்பனாய்க் கொண்டான்.

(13) **இசகுபிசகாக** (முறைகேடாக) நடப்பவர் பெரியோரால் இகழப்படுவர்.

(14) கடனிறுத்தற்குப் பொருளில்லாமையால் அவன் **இடக்குமுடக்குப்** (சங்கடப்) பட்டான்.

(15) அவள் குத்திய அரிசி **இருவல்நொறுவலாக** (இடிந்தும் இடியாதது மாக) இருக்கின்றது.

(16) **ஈவுசோர்வு** (சந்தர்ப்பாசந்தர்ப்பம்) பார்த்தே கடன் காரரிடங் கடன் அறவிடவேண்டும்.

(17) தன் சகோதரரோடு ஒற்றுமையின்றி அவன் எந்நாளும் **இராட்டுப் பிராட்டாய்க்** (எதிரிடையாய்க்) காலங் கழிக்கின்றான்.

(18) அவன் கள்வர் கூட்டத்தில் **எச்சுச்சக்கமாய்** (இசகுபிசகாய்) அகப் பட்டுக்கொண்டான்.

(19) அவனிடத்திற் குலத்திற்கேற்ற எடுப்புச்சாய்ப்பு (ஒப்புரவான நடை) இருந்தமையால் அவன் ஒருவராலும் இகழப்படவில்லை.

(20) அவன் **ஏறுமாறாய்** (தாறுமாறாய்) நடந்தமையால் எல்லாராலும் இகழப்பட்டான்.

(21) இவ்வழி **ஒப்பசெப்பம்** (சமம்) இன்றிச் செல்கின்றது.

(22) அவர் தம் பிள்ளைகளைக் **கட்டுமுட்டாய்** (அமைதியாய்) வளர்த்தார்.

(23) அவன் அம்மரத்தைக் **கண்டதுண்டமாக** (பல துண்டமாக) வெட்டி யெறிந்தான்.

(24) என் மகன் அக்காரியத்தில் ஈடுபட்டிருப்பது எனக்குக் **கழுத்தறுப்பாய்** (பெருந் துன்பமாய்) இருக்கின்றது.

(25) அதனைக் **கிட்டமுட்ட** (ஏறக்குறைய) எவ்விலைக்குக் கொள்ளலாம்?



RangaRakes

tamilnavarasam.com

(26) அவன் நோய்வாய்ப்பட்டுக் **கிடந்தகிடையாய்** (படுத்த படுக்கையாய்) எட்டுமாதங் கழித்தான்.
(27) அவன் தன் பகைவனது காரியங்களிற் **கிண்டல்கிளறல்** (உட்புகுந்து கிளறுகை) செய்து எல்லா இரகசியங்களையும் அறிந்தான்.
(28) **குறுமுட்டாய்ச்** (அவசரமாய்ச்) செய்யும் வேலை நற்பயன் அளிக்காது.
(29) புலியைக் கண்ட அக்கூட்டத்தினர் **கூட்டாக்குழப்பமாய்** (தாதுமாறாய்) ஓடினர்.
(30) அக்கள்வன் **கைமெய்யாகப்** (குற்றஞ்செய்து நிற்கையிலே) பிடிபட்டான்.
(31) **கையுங்கணக்கும்** (வரையறை) இல்லாத் தொகையினர் அக் கூட்டத்திற்குச் சென்றனர்.
(32) **கையுங்களவுமாய்ப்** (குற்றஞ்செய்து நிற்கையில்) பிடிபட்ட கள்வன் சிறைப்பட்டான்.
(33) **கையோடுகையாய்** (காரியத்துடன் காரியமாக) அக்காரியத்தை அவன் முடித்துவிட்டான்.
(34) அவன் அந்நண்பர் இருவரையும் பிரித்தற்குக் **கொடு முடிச்சுப்** (கேடுதருஞ் சூழ்ச்சி) போட்டுவிட்டான்.
(35) அவன் **கொள்ளாகொள்ளையாக** (மிகுதியாக) யாசகருக்குத் தன் பொருள்களை வாரிக் கொடுத்தான்.
(36) அவன் அம்மரத்தின் **கோணல்குணங்கலை** (வளைவை) நீக்குதற்கு உபாயந் தேடினான்.
(37) யான் செய்த குற்றங்காரணமாக அவன் என்னோடு **கோபதாபங்** (மிக்கசினங்) கொள்ளவில்லை.
(38) அவன் **கோணல்மாணலாய்** (தாறுமாறாய்) நடக்கின்றானென்று நான் கேள்விப்பட்டேன்.
(39) அவனைத் தேடிச் **சந்துபொந்து** (மூலைமுடுக்கு) எல்லாம் அலைந்தேன்.
(40) அவன் முற்றத்திற் கிடந்த **சப்புச்சவறு** (உபயோகமின்றிக் கழிக்கப் பட்ட பொருள்) எல்லாவற்றையும் ஒரு கூடையிற்குட் போட்டான்.
(41) அச்செப்புப்பாத்திரத்திலுள்ள **சுழிவுநெளிவுகள்** (வளைவுகள்) எல்லா வற்றையுந் தட்டி நிமிர்த்தினான்.
(42) அவன் அதனைச் **சன்னபின்னமாய்** (கண்டதுண்டமாய்) நொறுக் கினான்.
(43) அவன் செய்தகுற்றத்தைச் **சாடைமாடையாய்** (பார்த்தும் பாராமல்) விட்டுவிட்டார்.





(44) அவன் அச் **சிக்கடிமுக்கடிக்குள்** (சிக்கலுக்குள்) அகப்பட்டு மீள இயலாலு தயங்குகின்றான்.
(45) இவர்களுக்கு இடையேயுள்ள **சிக்கல்பிக்கலை** (சிக்கலை) நீக்க நீயும் மனங்கோணுவாய்.
(46) அவர்களுக்கு இடையே உள்ள தொடர்பு **சிக்குப்பிக்காய்** (சிக்கலாய்) இருப்பதை யான் அறிவேன்.
(47) அம்மனிதனின் ஆடை **சிம்பல்சிலும்பலாய்** (கந்தையாய்) இருப் பதைக் காண்பாய்.
(48) அவ்வீரன் தன்பகைவனைச் **சின்னபின்னமாக** (கண்ட துண்டமாக) வெட்டினான்.
(49) இக்குவியலிற் பலகற்கள் **சின்னன் பின்னனாகக்** (சிறியதும் பெரியதுமாகக்) கிடக்கின்றன.
(50) அப்பெருமாட்டி தன் பணிப்பெண்ணைச் **சீறுமாறாய்** (அபசரிக்கை யாய்) நடத்துகின்றாள்.
(51) திருடன் ஒருவன் **சுற்றுமுற்றும்** (நான்கு பக்கமும்) பார்த்துவிட்டு அவ்வீட்டிற்குள்ளே நுழைந்தான்.
(52) அவன் **தட்டுத்தடக்கு** (தடை) யாதுமின்றி அவ்வேலையைச் செய்து முடித்தான்.
(53) அவன் தனது **தட்டுமுட்டுக்கள்** (வீட்டுப் பொருள்கள்) எல்லா வற்றையும் விற்றுத் தன் கடன்களைத் தீர்த்தான்.
(54) எனது தம்பி தன் மேலதிகாரியோடு **தண்டுமிண்டாய்** (மூர்க்கத் தனமாய்) நின்றான்.
(55) அவர்கள் இருவருந் **தல்லுமெல்லுப்** (இழுவறிப்) பட்டனர்.
(56) அவன் **தாறுமாறாய்** (அதிக்கிரமமாய்) நடந்தமையாலே தந்தையாற் கடியப்பட்டான்.
(57) கிணற்றுக்குள் விழுந்து **திக்குமுக்கு** (மூச்சுமுட்டுகை) உற்றபிள்ளை நீர்க்குவெளியால் எடுக்கப்பட்டது.
(58) தொய்வுநோயாலே **திகரடி** (மூச்சடைப்பு) உற்ற மனிதன் ஊசிபற்றி ஏற்றிய மருந்தாற் பிழைத்தான்.
(59) கற்ற பெண்களுக்கிடையிலே **திட்டுமுட்டு** (எதிர்நிந்தனை) நிகழ்தல் அரிது.
(60) தந்தையொடு மகன் **திண்டுமுண்டு** (எதிரிடைப் பேச்சு) நிகழ்த்தல் கூடாது.
(61) **திருகுதாளம்** (புரட்டு) போடுபவனை ஒருவரும் நம்பார்.



RangaRakes

tamilnavarasam.com

(62) **தில்லுமுல்லுப்** (பொய்புரட்டுப்) பேசி அவன் தனது மதிப்பை இழந்தான்.

(63) அவன் அப்பொருளை விலைக்குக் கொள்ளத் தக்கவன்; அவனிடந் **துட்டுத்துக்காணி** (பணம்) உண்டு.

(64) அவன் தன்னெதிரியைத் **துண்டதுண்டமாக** (சின்ன பின்னமாக) அறுத்தெறிந்தான்.

(65) அவள் அவ்வாடையைத் **துண்டுதுடக்காகக்** (சிறு துணுக்குக் களாகக்) கத்தரித்தாள்.

(66) குருதி **துண்டுந்துணியுமாகக்** (துண்டுதுண்டாகக்) கிடக்கின்றது.

(67) அவ்வேழை **தேடாக்கூறாய்க்** (பராமரிப் பின்றிக்) கிடந்து செத்தான்.

(68) தந்தையினது **தேடாத்தேட்டத்தை** (பெருமுயற்சி, அல்லது தீய வழியாற் சம்பாதிக்கப்பட்ட பொருளை) மகன் விரயஞ் செய்தான்.

(69) தனது **தேடியதேட்டம்** (தன்னுழைப்பு) முழுவதையும் அவன் மூத்த மகனுக்கு ஈந்தான்.

(70) **தொட்டாட்டுவேலைக்காக** (குற்றேவலுக்காக) அவர் ஒரு கூலி யாளைச் சம்பளம் பேசிநின்றார்.

(71) **நகைநட்டு** (நகை முதலிய பொருள்கள்) இல்லாமல் எவ்வாறு தான் மணவிழாவிற்குப் போகலாமென அவள் கவன்றாள்.

(72) பொருளில்லாதவனுக்கு **நட்டதுட்டியும்** (வருவாய்க் குறைவும்) இல்லை ; குடிநிலுவையும் இல்லை.

(73) **நட்டுமுட்டு** (நடனத்திற்குரிய தளவாடங்கள்) இல்லாமல், நடனந் தடைப்பட்டது.

(74) தாய் இறக்கும்போது இவர்களெல்லாம் **நண்டு நசுக்காய்** (சிறு குழந்தைகளாய்) இருந்தனர்.

(75) இக்கறியிலே **நப்புப்சப்பு** (உருசி) இல்லை.

(76) அவள் மரவள்ளிக்கிழங்கை **நருக்குப் பிருக்காய்ச்** (மசிந்ததும் மசியாததுமாய்ச்) சமைத்தாள்.

(77) அவள் பயற்றம்பருப்பை **நருவல் நொருவலாய்** (இருவல் நொரு வலாய்) அரைத்தாள்.

(78) **நல்லது பொல்லாது** (பாவபுண்ணியம்) செய்யாதாருக்கே ஞானம் மிகும்.

(79) ஒருவனது **நன்மைதின்மை** (நலமுங்கேடும்) அவனது முற்றவத்தாற் காணப்படும்.

(80) அவனது நோய் **நாளுக்குநாள்**(ஒவ்வொருநாளும்) அதிகரிக்கின்றது.





(81) தன் மகன் **நிறுதிட்டமாய்ப்** (நேர்மையாய்ப்) பேசினானென்று தந்தை மனமகிழ்ந்தான்.

(82) **நீக்குப்போக்கு** (உதவி) இல்லாமையால் அவன் அவ்வேலையை முடியாது நின்றான்.

(83) பெரும்பணம் இருந்தமைபற்றி அவன் **நீட்டுமுடக்கிற்** (கொடுக்கல் வாங்கலிற்) பிழை செய்யவில்லை.

(84) ஒருவனது **நெளிவுசுளிவை** (ஏற்றத்தாழ்வை) எடுத்துக் கூறல் நன்றாகாது.

(85) தன்பாடம் முழுதும் அவன் **படிப்படி** (சிறுகச் சிறுகச்) சொன்னான்.

(86) அவர் நோய்மிகுந்து **படுகிடையாய்க்** (எழுந்திருக்க முடியாத நிலையாய்க்) கிடந்தார்.

(87) அவன் பொருள்கள் எல்லாம் **பற்றற** (முழுதும்) அழிந்தன.

(88) அவ் வாசிரியர் அக் கல்லூரியினின்றும் **பற்றறுதியாய்** (முழுதுந் தொடர்பறுத்து) விலகினார்.

(89) அவன் **பிக்கல் பிடுங்கலுக்குள்** (தொந்தரைக்குள்) அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கின்றான்.

(90) அவன் தனது நண்பனுக்குப் **பிக்குப்பிசகு** (தொந்தரை) செய்தமை யால் அல்லல் உறுகின்றான்.

(91) அவன் அக்காரியத்திலே தலையிட்டது அவனது தந்தைக்குப் **பிராணசங்கடம்** (பெருந்துன்பம்) ஆயிற்று.

(92) அக்காரியத்தைச் சகிப்பது அவனுக்குப் **பிராண வேதனை** (மரண வேதனை) ஆயிற்று.

(93) அப் **பீச்சாங்கொள்ளிக்கா** (பயங் கொள்ளிக்கா) துணை தேடுகிறீர்?

(94) அப் **புத்தம் புதிய** (மிகப்புதிய) புத்தகத்தை எனக்குக் கொடுப்பாயா?

(95) அவனுடைய **புரட்டுருட்டு** (தந்திரச் செயல்) யாதும் என்னிற் பலிக்க வில்லை.

(96) அவன் **பெட்டைக்கட்டு** (தளர்ந்தமுடிச்சு) இட்டானென இகழப் பட்டான்.

(97) அவர்கள் இருவருக்கும் இடையிற் **பேச்சுவார்தை** (நட்பு) இரண்டு மாதகாலமாக இல்லை.

(98) அவற்றுட் **பொடிபொட்டுக்களை** (பதரானவற்றை) விலக்கி ஏனைய வற்றை எடுக்க.

(99) அவன் பின்னேரங்களிற் **பொழுது போக்காகப்** (இளைப்பாறும் விளை யாட்டாகப்) பந்தாடுகின்றான்.



RangaRakes tamilnavarasam.com

(100) பல்லூழிகாலமாகப் **போக்குவரவு** (இறக்கையும் பிறக்கையும்) புரிந்த யான் எப்பொழுது முத்தியடைவேன்?

(101) அவனது **போக்குவாக்கு** (பொலிந்த தோற்றம்) எவர் கண்களையுங் கவரும்.

(102) கொலைக் குற்றம்பற்றி அவன் **மரணசிட்சை** (மரண தண்டனை) பெற்றான்.

(103) தான் **மனப்பூர்வமாய்** (மனசார) அக்குற்றத்தைச் செய்யவில்லையென்று அவன் கூறினான்.

(104) தன் மக்கள் விரும்பியனவற்றைக் கொடுத்தபின் **மிச்சஞ்சொச்சத்தை** (மீதியை) அவன் ஓர் ஏழைக்குக் கொடுத்தான்.

(105) தனக்கு யான் குற்றஞ்செய்தேனென நினைந்து எனது நண்பன் என்னோடு முகமுறிவாய்ப் (வெறுப்பாய்ப், நிர்த்தாட்சிணியமாய்ப்) பேசினான்.

(106) அவனுக்கு **முடிவுகாலம்** (மரணகாலம்) வந்துவிட்டதென ஒரு சோதிடன் சொன்னான்.

(107) அத்தொண்டன் **முழுமுதலின்** (கடவுளின்) அருள் பெற்று முத்தி அடைந்தான்.

(108) அவ்வேலைக்காரன் **முழுமுச்சாய்** (விடாத் தீர்மானமாய்) அதனைத் தான் செய்துமுடிப்பானென்று நின்றான்.

(109) காணாமற்போன தன் பிள்ளையை **மூலைமுடுக்கு** (சந்துபொந்து) எல்லாந் தேடியும் அவன் காணவில்லை.

(110) அவனை **வந்தேறி** (புதிதாகக் குடியேறியவன்) எனத் தெரியாது நின்றேன்.

(111) அவன் என்னை **வம்புதும்பாகப்** (துராகிருதமாய்ப்) பேசினான்.

(112) கற்கும் பழக்கத்தை ஒருவன் மேற்கொண்டானாயின் அவனுக்கு **வரவர** (மேலும் மேலும்) அறிவு பெருகும்.

(113) சில நூல்கள் விளங்குதற்கு **வறைமுறுகலாய்** (கரடுமுரடாய்) இருக்கும்.

(114) அவன் கூறியவை எல்லாம் **வாய்ப்பேச்சாய்ப்** (வெறும் பேச்சாய்ப்) போயின.

(115) இச்சொத்து முழுதும் அவனுக்கு **வாராவரத்தாய்** (அநீதியாய்) வந்தது.

(116) ஞானிகள் **வீடுபேறு** (முத்திநிலையை) விழைவார்கள்.





(117) அவன் **வீடுவாசல்** (வீடும் அதனைச் சார்ந்த பொருளும்) இல்லாமல் அலைகின்றான்.

(118) அவன் **வெஞ்சோறு** (கறிசேர்க்கப்படாத உணவு) உண்டு சமியாக் குணம் பெற்றான்.

(119) அவன் அக்கதையை **வெட்கக்கேடாய்ச்** (கூச்சமின்றிச்) சொன்னான்.

(120) அவன் காரியத்தை முடிக்காது **வெட்டிப்பேச்சுப்** (வீண்வார்த்தை) பேசுகின்றான்.

(121) அவனுக்கும் இவனுக்கும் **வெட்டுப்பழி** (தீராப்பகை குத்துப்பழியாய்) இருக்கின்றது.

(122) **வெள்ளறிவு** (அவிவேகம்) உள்ளார் நீதிபதிகளாய் இருத்தல் உலகிற்குத் தீது.

(123) **வெளிவாயனிடத்து** (இரகசியம் வெளிவிடுபவனிடத்து) இரகசியஞ் சொல்லல் தீது.

(124) அவனுடைய **வைப்புச்செப்பு** (நகை பாத்திரம் முதலிய உடைமைகள்) எங்குள்ளன என்பதை ஒருவரும் அறியார்.



RangaRakes
tamilnavarasam.com

## அதிகாரம் 14.

# நிறுத்தக் குறிகள்

**237.** வாக்கியங்களின் பொருள் நன்கு விளங்குதற் பொருட்டு இற்றைக் கால எழுத்தாளர் தக்க இடங்களிலே நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுவர்; அந்நிறுத்தக்குறிகள் பெரும்பான்மை முற்றுப்புள்ளி ( . ) ,பிரிவிசைக்குறி (,), தொடரிசைக்குறி ( ; ), விளக்கிசைக்குறி ( : ), வினாக்குறி ( ? ) ,உணர்ச்சி மிகுதிக்குறி (!) என்பனவாம்.

பிறகுறிகளும் பொதுவழக்கிற் கையாளப்படும்; அவை தன்கூற்றுக் குறி ( “ ” ), மேற்கோட்குறி ( ‘ ’), அடைப்புக்குறி ( ) ,இரட்டைக்கீறு (-) என்பனவாம்.

**238.** **முற்றுப்புள்ளி** மிகநீண்ட நேரத்தைக் குறிப்பதாம்; அது (i) பொருள் முற்றிய வாக்கியங்களின் முடிவைக் காட்டுதற்கும், (ii) குறுக்கங்களைக் காட்டுதற்கும் வழங்கப்படுவதாம்.

(i) அவன் அதனை எடுத்துச் சென்றான்.

(ii) திரு. (திருவாளன், திருவாட்டி, திருவாளர்)
வே. கந்தன் (வேலன் கந்தன்)

**239.** **பிரிவிசைக்குறி** மிகக் குறுகிய நேரத்தைக் குறிப்பதாம்; அது (i) செவ்வெண்ணிலே நிற்குஞ் சொற்களையுஞ் சொற்றொடர்களையும் பிரித்தற்கும், (ii) விளிப்பெயர்களைப் பிரித்தற்கும், (iii) தொடர்வாக்கியங்களிலுள்ள தொடுசொற்களைப் பிரித்தற்கும், (iv) தனிவாக்கியங்களிலுந் தொடர்வாக்கியங்களிலும் வேறு பிரிந்திசைக்குஞ் சொற்களையாதல், தொடர்களையாதல் பிரித்தற்கும், (v) தன்கூற்று இடைப்பட்ட கலப்பு வாக்கியத்திலே தலைமைவாக்கியப் பகுதியினின்றுந் தன்கூற்றைப் பிரித்தற்கும், (vi) ஏழாம் வேற்றுமை யிடப்பொருள் காலப் பொருள்களில் வாக்கிய முற்பகுதியில்வரும் இடைச் சொற்களைப் பிரித்தற்கும், (vii) ஒருங்குவரும் வினையடைகளைப் பிரித்தற்கும் வழங்கப்படுவதாம்.





(i) கந்தன், முருகன், வேலன் என்னும் மூவரும் என்னிடம் வந்தனர்.
சூடுகுளிர், இன்பதுன்பம், மரியாதை அவமரியாதை என்னும் இவற்றைப் பொருட்படுத்தாது நிற்பவனே ஞானி எனப்படுவான்.

(ii) கந்தனே, இங்கே வா.

(iii) மழை பெய்யவில்லை; ஆகையால், அவன் வருவான்.
அவர் நிலத்தில் வீழ்ந்தார் ; எனினும், மண்டையுடையவில்லை.

(iv) நீ நாளுக்குநாளாகச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்தாயாயின், உனக்கு ஓர் இடையூறும் வராது.
அவர் கந்தனை வடக்கேயும், முருகனைத் தெற்கேயும் அனுப்பினார்.
அவனாதல், இவனாதல் அங்கே போகலாம்.

(v) அவன் என்னைப் பார்த்து, “நீ யாது செய்கின்றாய்,” எனக் கேட்டான்.

(vi) அங்கு, அவன் உணவருந்தாது ஆறுநாள்களுக்குக் கிடந்தான்.
அன்று, யான் அவனைக் காணவில்லை.

(vii) பின்னர், முடிவில், அவனை அவர்கள் சிறைப்படுத்தினார்கள்.

### பயிற்சி 50

**பின்வரும் வாக்கியங்களில் வேண்டிய இடங்களில் முற்றுப் புள்ளி களையும் பிரிவிசைக் குறிகளையும் இடுக:-**

(1) இராமன் கந்தன் ஆகிய இருவரும் அவ்வழியாற் சென்றனர்

(2) அவன் கந்நனுக்கு “நீ அறிவு மழுங்கினாய்” எனக் கூறினான்

(3) நிலம் நீர் தீ வளி வெளி என்னும் பூதங்கள் ஐந்தும் இறைவனாற் படைக்கப்பட்டவை

(4) “முருகனே நீ எங்கு செல்கிறாய்” என்று வினவிக் கொண்டு கந்தன் அவன் பின்னாலே தொடர்ந்தான்

(5) அவனாதல் இவனாதல் என்னிடம் வந்திலர்

(6) அவன் என்னிடம் “நீ கூறியது பிழை” என்று சொல்லி விட்டுச் சென்றான்

(7) பூவுலகம் பிதிருலகம் சுவர்க்கவுலகம் என்பன மூன்று வகையான உலகங்கள்

(8) பொருட்செல்வம் எம்மைத் தேடிவரலாம்; ஆனால் கல்விச்செல்வந் தேடப்பட வேண்டும்

(9) ஐயனே யான் உம்மிடம் வேலைசெய்து கூலிபெறுவதிலும் பிச்சை எடுப்பது நன்று



RangaRakes

tamilnavarasam.com

(10) அப்பொழுது யான் அங்கு இருக்கவில்லை
(11) அவர் தமது மூத்தமகனுக்கு ஒருபுத்தகமும் இளையமகனுக்கு ஒருகடிகாரமும் விலைக்குவாங்கிக் கொடுத்தார்
(12) இனி ஒருமுறையேனும் அவன் அக்காரியத்திற் பிரவேசியான்
(13) உயர்ந்தோர் இழிந்தோர் செல்வர் வறியவர் அறிந்தோர் அறியாதார் எல்லாரும் ஒரு நாட் சாவர்
(14) அன்று அவர் தம் மாணாக்கருக்குச் சொன்னது "கடவுளை வணங்குக: அருளுமாறு வேண்டுக" என்பது
(15) திருமுருகனைக் கொண்டு யான் அவ்வேலைச்செய்து முடிப்பேன்
(16) நேற்று யான் அவனிடஞ் சென்று " நண்பனே நீ இக்கொடுமையை ஏன் செய்தாய்? என வினாவினேன்
(17) அவன் மதுரையில் அல்லது மதுரைக்கருகில் உயிர் நீத்தான்
(18) யான் அவர்களைக் காணும்போது சிலர் பாடிக் கொண்டுஞ் சிலர் ஆடிக்கொண்டும் இருந்தனர்
(19) வெயிலெறித்தாலென்ன எறியாது விட்டாலென்ன யான் அங்கிருந்து காலை ஒன்பதுமணிக்குப் புறப்படுவது நிச்சயம்
(20) ஒருவரும் அங்குச் செல்லாதுவிட்டால் அதுநன்று

**240.** **தொடரிசைக்குறி** பிரிவிசைக் குறியிலுஞ் சிறப்புக் கூடிய நிறுத்தத் தைக் குறிப்பதாம்; அதுதொடர் வாக்கியங்களிலுள்ள ஒத்த தொடர்களைப் பிரித்தற்கு வழங்கப்படும்.

(i) அவன் முருகனை வடக்கே அனுப்பினான்; கந்தனைத் தெற்கே போக்கினான்.
(ii) அவ்விழாவிற்குக் கந்தன் சென்றான்; முருகன் சென்றான்; வேலன் சென்றான்; எல்லோரும் இன்பம் நுகர்ந்தனர்.
(iii) அவன் கோயிலுக்குப் போனான்; கடவுளைத் தொழுதான்; வீடு திரும்பினான்.
(iv) அவன் அற்றைப்பாடம் படிக்கவில்லை; எனினும், ஆசிரியர் கடி யாதவாறு தப்பிவிட்டான்.
(v) கந்தனும் முருகனுந் தனித்தனி வேலனுக்கு நிகராவர்; ஆயின், கந்தன் முருகனுக்கு நிகராவன்.





**241.** **விளக்கிசைக்குறி** தொடரிசைக் குறியிலுங் கூடிய நிறுத்தத்தைக் குறிப்பதாம்; அது (i) மேற்கோள்களை வாக்கியங்களுக்கு உட்படுத்து தற்கும், (ii) எண்ணப்படும் பொருள்களை ஒருங்கு வாக்கியங்களுக்கு உட்படுத்துதற்கும், (iii) ஒன்றுக்கொன்று நேர்மாறான வாக்கியங்களைப் பிரித்தற்கும் பெரும்பான்மை ஒரு கீற்றை முன்னிட்டு வழங்கப்படும்.

(i) கேளுங்கள். வள்ளுவர் கூறுகின்றார்:- "இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணை."
(ii) அப்போரிற் பங்குபற்றிய நாடுகள் பின்வருமாறு: இங்கிலாந்து, பிரான்சு, எகிப்து.
(iii) மனிதன் ஆக்குகின்றான்: கடவுள் அழிக்கின்றார்.

**242.** **வினாக்குறி** முற்றுப்புள்ளிக்குப் பதிலாக நேர் வினாவைக் குறிப் பதற்கு வாக்கியமுடிவில் வழங்கப்படுவதாம்.

(i) நீயா அங்குச் சென்றாய்?
(ii) நீ எங்கே போகின்றாய்?

**243.** **உயர்ச்சிமிகுதிக்குறி** (i) வியப்பு, அச்சம், இரக்கம் முதலிய குறிப்புப் பொருளை உணர்த்துதற்கு அக் குறிப்புப் பொருளை உணர்த்தும் இடைச் சொற்களுப் பின்னும் வாக்கிய முடிவுகளிலும், (ii) சொல்லழுத்தம் பெற்ற விளிப்பெயரைப் பிரித்தற்கு அவ் விளிப்பெயருக்குப் பின்னும், (iii) ஏ, ஓ என்னும் இடைச் சொற்களாலே தொடரப்பட்ட விளிப்பெயருள்ள வாக் கியங்களிலே அப் பெயர்களுக்குப் பின்னும் வாக்கிய முடிவுகளிலும் வழங்கப் படும்.

(i) அம்மா! யான் இறந்தே விட்டேன் .
இது நடந்து விட்டதே!
இக் காட்சியின் அழகென்ன!
(ii) இராக்கத! உன்னாலேயே என்மகன் இறந்து விட்டான்.
(iii) ஏ அப்பனே! எனக்கு அருள் செய்கின்றாயில்லை.
ஓ மகனே, உன்னை எங்குக் காணப் போகின்றேன்!

**244.** **தன்கூற்றுக்குறி** பேசுபவன் தன்கூற்றாய்வழங்குஞ் சொந்தச் சொற் றொடரையாதல் மேற்கோளையாதல் உள்ளடக்குதற் பொருட்டு வழங்கப் படுவது.



RangaRakes tamilnavarasam.com

(i) அவன் என்னை நோக்கி, "நீ அறிந்ததை யானும் அறிவேன்," என்றான்.
(ii) அவன் என்னைப் பார்த்து, " அறஞ் செய விரும்பு," என்றான்.

245. **மேற்கோட்குறி** அறிவுடையோரின் வாக்கியங்களை உள்ளடக்குதற் பொருட்டு வழங்கப்படும்.

(i) எனதுசெல்வம்; " இறைக்க ஊறும் மணற்கேணி' என உணர்ந்தேன்.
(ii) எனது தந்தையார் என்னைப் பார்த்து, " ஏ மகனே! " எங்குப் புகை அங்குத் தீ என்றால்; அவ்வாக்கியம் ' எங்குத் தீயில்லை அங்குப் புகைஇல்லை' என்பதற்கு நிகராகாதா?" என்று வினவினார். தன் கூற்றுக்குள்ளே மேற்கோள் வருமிடத்துக் குறியிடும்வகை மேற் காட்டப்பட்டமை காண்க.

246. **அடைப்புக்குறிகளும் இரட்டைக்கீறுகளும்** வாக்கியங்களினுடைய தலைப்பகுதிகளிருந்து அவற்றோடு இலக்கணத்தொடர்பில்லாத தொடர் களைப் பிரித்தற்கு வழங்கப்படுவன. இத்தொடர்கள் **இடைப்பிறவரல்** எனப்படும்.

(i) அவள் இறைவனிடமிருந்து பெற்றது (அவன் விரும்பியது அவ் வளவே) அவனது அருளே.
(ii) இத்தகைய துணிவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு – விரும்பின், மன வுறுதி யென்க – இந்திய சரித்திரத்திற் காணலாம்.

## பயிற்சி 51

**பின்வருவனவற்றிற்கு நிறுத்தக்குறிகள் இடுக:-**

(1) அவன் வேலை யாதுஞ் செய்யாதிருந்தான் ஆயினும் அன்றையக் கூலி பெற்றான்.
(2) அவன் நீயா அதனைச் செய்தாய் என்றான் நான் அதற்கு நான் அதனைச் செய்திலேன் என்றேன்.
(3) ஏ மகனே நீ என்னைவிட்டுச் சென்றனையே.
(4) அவ்வேலையில் ஈடுப்பட்டவர்கள் கந்தன் முருகன் வேலன் என்பவர்கள்.
(5) அ என்பது இ இற்குச்சமன் இ என்பது உ இற்குச் சமன் ஆயின் அ என்பது உ இற்குச் சமன்.
(6) அவனுக்கு உபதேசஞ் செவிடன் காதிற் சங்கு ஊதியதுபோல இருக்கும்.





(7) கந்தனும் முருகனுமாதல் முருகனும் வேலனுமாதல் அவ் விழா விற்குப் போகவேண்டும்
(8) உடையது விளம்பேல் என்பது ஔவையாரின் வாக்கு.
(9) ஓ தெய்வமே நின்னாலேயே இது இவ்வாறு விளைந்திருக்க வேண்டும்.
(10) நேருவிற்குக்கீழ் இந்தியா நீங்கள் நம்பாதுவிடலாம் தன்சரித்திரத்தில் இல்லாத பலம் படைத்திருக்கின்றது.
(11) சொற்களின் வகைகள் பின்வருமாறு பெயர் வினை இடை உரி
(12) கோழிப்பலியையாதல் ஆட்டுப்பலியையாதல் வடை மடையை யாதல் வேண்டிநிற்கும் இத்தெய்வம் ஒரு பேயாகுமொழிய வணங்கத் தக்க கடவுளாகாது.
(13) இனி செய்யுள் என்பது பலபொரு ளொருசொல் செய்கை பாட்டு காவியம் விளைநிலம் என்பன அதன்பொருள்கள் ஆயினும் இங்கு செய்யுளென்பது பாட்டு என்னும் பொருளிலேயே எடுத்தாளப்படு கின்றது.
(14) கண்மணி யாரோ மக்கள் காலடிச்சத்தங் கேட்கின்றது அவர்தாங் கலியாணத்தரகர் சண்முகம்பிள்ளை வாரும் வாரும் இந் நாற் காலியில் அமரும் ஓ கட்டாடி யாரும் வந்திருக்கின்றார் கட்டாடி யாரே அந்த ஆசனத்தில் அமரும்.
(15) சீதனமா கேட்கிறீர்கள் நல்லமாம்பழந் தின்பிக்கின்றதற்குங் கூலியுங் கொடுத்தா தின்பிக்க வேண்டும் என்மூத்த மருமகன் நீதிபதி அடுத்த மருமகன் வைத்தியன் என் கணவன் நகரசபைத் தலைவன் எங் களுடைய பெருமையைப் பொருட்படுத்தாமற் சீதனமா கேட் கிறீர்கள்.
(16) ஞானிகள் தொண்டர் விருந்தினர் சுற்றத்தினர் தான் என்னும் ஐந்து இடங்களிலும் அன்புடைமை முதலாய ஆறு ஒழுக்க விசேடங்களைப் பேணுதல் இல்வாழ்வானுக்குத் தலைமையான ஞானச் செய்தி என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.
(17) எனினும் அவர்கண்ட பொருள் நூலாசிரியரது அடிக்கருத்தை ஒட்டிச் செல்கின்றதா என்று வினவின் அது மறுத்தே சென்று நிமிர்ந்து ஓடுகின்றதென்றே விடையிறுத்தல் வேண்டும்,
(18) அதனைக் கேட்டுவிட்டுத் தெளிந்த புத்தியுடைராய் எனது நாத னாரும் மைத்துனரும் எங்கள் இல்லம் வந்து சேர்ந்து முன் சீதனத் தையே பொருளென்று கருதி உங்களைப் புறக்கணித்தோம்



RangaRakes tamilnavarasam.com

இப்பொழுது உங்களையே பொருளெனக் கருதி வந்திருக்கின்றோம் முன்செய்த பிழையைப் பொருத்தருளுக என்று கூறி எங்களிடம் மன்னிப்புக் கேட்டார்கள்.

**(19)** நுண்கலைகளுள் ஓவியமுஞ் சிற்பமுங் கண்ணாற்பெற்ற அறிவூடாக மனவெழுச்சியைத் தருவன இசையென்பது செவியாற்பெற்ற அறிவு வாயிலாக மனவெழுச்சியைத் தருவது இவ்வாறன்றி நாடகமுஞ் செய்யுளுங் கண் செவி என்னும் இராண்டாலும் பெற்ற அறிவை அடிக்கொண்டு மனவெழுச்சியைத் தருவனவாகலான் இவை இரண் டிற்கும் ஏனைய நுண்கலைகளுக் கில்லாத தனிப்பெருமை உண்டு.

**(20)** எம்உரையாசிரியர் சிலசொற்கொண்டு அரிய பெரிய கருத்துக்களை உணர்த்தும் ஆற்றல் படைத்தவர் வேண்டாச்சொற் சிறியதாயினும் பயிலாப்புலமை வாய்ந்தவர் சொல்வளம் பெற்றவர் தங்கருத்தைப் புலப்படுத்துவதற்குச் சொல்பற்றி நல்கூர்தல் அவர்மாட்டு இல்லை எனலாம். வடசொல்லாக்கத்தினுங் கை தேர்ந்தவர் அவர் கைப் பட்ட வடசொல்லானது தமிழிலேயே தொன்றுதொட்டு இருந்தது போன்றதாகும்.



## அதிகாரம் 15

# கதையெழுதுதல்

**247.** ஒரு கதையைப் பிறர் தெளிந்து நயக்குமாறு சொல்வதற்குப் பயிற்சி வேண்டும். பயிற்சி இல்லாதார் கதை சொல்லுமிடத்து அக்கதையினது தலைமைப்பகுதிகளிற் சிலவற்றைக் குறைத்தும், தலைமையல்லாப் பகுதி களுட் சிலவற்றை வீணாக வளர்த்தும், முன் சொல்ல வேண்டியதைப் பின்சொல்லியும், பின் சொல்லவேண்டியதை முன்சொல்லியும், ஒரு முறை கூறியதை மறுபடி கூறியும் நின்று கேட்பவருக்கு மயக்கமும் வெறுப்பும் உண்டாக்குவர். பிறர் சுவைக்குமாறு கதை எழுதுதற்கு விரும்புபவன் தனது உள்ளத்திற் கதையின் பீசம் முழுவதையுஞ் சிந்தித்து வைத்து அதனுடைய தலைமைப் பகுதிகளை ஒழுங்குபடுத்திய பின்னரே எழுதத் தொடங்கவேண்டும்.

கதைகளின் பீசங்கள் குறிப்புக்கள்பற்றித் தரப்பட்டால் அவற்றை அடிக்கொண்டு கற்பனையின் உதவியாற் கதையை உருவாக்கும்போது, அக்குறிப்புக்களிலுள்ள சொற்களை ஆளாது அவற்றின் பொருளை ஆண்டு செவ்விய உரைநடையில் ஏற்ற தலையங்கமிட்டு எழுத வேண்டும். பின்வரும் உதாரணம் இவற்றை விளக்குதல் காண்க:-

### பீசம்

ஒரு சிங்கந் துயின்றது – எலியால் எழுப்பப்பட்டது – சிங்கம் வெகுண்டது – எலி, "ஒரு காலம் உதவிசெய்வேன்," என்றது – சிங்கந் தீங்கு செய்யாதுவிட்டது – சிங்கம் பொறியில் அகப்பட்டது – எலி கயிற்றை நன்னி விடுவித்தது – சிங்கம் நன்றி பாராட்டியது.

### முழுக்கதை

### சிங்கமும் எலியும்

ஒருநாள் ஒரு சிங்கந் தன்காட்டிற்குள் ஓரிடத்திற் பசிக்களையாற் செத்ததுபோற் படுத்திருந்தது. அதன் பக்கத்தாற் போன எலி ஒன்று அச் சிங்கத்தைக் கண்டது; சிங்கம் இறந்துவிட்டதா என அறிதற்கு அதன் வாலிற் பற்றி இழுத்தது; பிடர்மயிரை நறுக்கியது; பல படித்தாய்க் குறும்பு விளைத்தது. அலைப்புண்ட சிங்கம் வெகுட்சியுற்று அவ்வெலியைப் பிடிக்கத் தருணம்பார்த்து இருந்தது. அவ்வெலி தன்முன்னங்கால் ஒன்றிற்கு அண்மை யில் வருவதை உணர்ந்த சிங்கம் அக்கால்கொண்டு அதனைப் பிடித்து விட்டது. தன்னிலையை உணர்ந்த எலி , " அண்ணலே, என்னைக்



RangaRakes
tamilnavarasam.com

கொல்லாதீர்; யான் அறியாமை காரணமாக உமக்குப் பிழை செய்து விட்டேன்; எனக்கு உயிர்ப்பிச்சை ஈந்தருளுவீராயின், ஒரு காலத்திலாதல் நான் உமக்கு உதவுவேன்," என்று கெஞ்சியது. அச் சிங்கம் மனமிளகி அவ்வெலிக்கு விடுதலை அளித்தது.

பின்னொருநாள் அச்சிங்கம் இரைதேடிக் காட்டிற்குள் அலைந்து திரியும்போது பின்னற் கயிற்றால் ஆக்கப்பட்ட மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு பெரிய பெட்டியிற்குள்ளே பசுக்கன்று ஒன்று நிற்பதைக் கண்ணுற்றது; உடனே அக்கன்றை அடைதற்குப் பெட்டியின் பக்கங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்தது; ஒரு பக்கத்தில் ஒரு பலகை சரிவாய் இருப்பதைக் கண்டு அதன்மீது தன் முன்னங்கால்களுள் ஒன்றை வைத்தது; வைத்த மாத்திரத்தில் வழிதிறந்தது: அதனை உணர்ந்த சிங்கம் மனமகிழ்ந்து ஒரு பாய்ச்சலிற் பாய்ந்து பசுக்கன்றைக் கொன்று புசித்தது: புசித்ததும், வெயியேபோக நினைந்து தான்வந்த பக்கம் பார்த்தது; பலகை மூடியிருப் பதைக் கண்டது; எத்தனையோ அடிகொடுத்தும் பலகை திறவாதிருப் பதைக் கண்டு அலுப் புற்று மற்றைய மூன்று பக்கங்களுள் ஒன்றையாதல் தகர்க்கலாம் என எண்ணியது; அப்பின்னல்களை அடித்தும் இழுத்தும் அறுக்க முயன்றது: முயற்சி பலிக்காது விடக் களைப்புற்றுத் தன் விதியை நொந்து வருந்தியது. அந்நேரத்தில் அவ்வழியாற் சென்ற எலி தனக்கு உயிர்ப்பிச்சை அளித்த சிங்கம் பட்ட துன்பத்தைக் கண்டது; அப் பெட்டிக்கு அருகில் வந்து, "எனக்கு உயிர்ப்பிச்சை ஈந்த வள்ளலே, கவலை கொள் ளாதீர்; ஒரு நொடிக் குள் உம்மை விடுவிப்பேன், என்று கூறிக்கொண்டு ஒரு பக்கத்துப் பின்னலைத் தன் கூறியபற்கள் கொண்டு அறுத்து ஒரு பெரிய வழியை உண்டாக்கியது. அச்சிங்கம் அவ்வழியால் வெளிப்போந்து " சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்' என்னும் பழமொழியை நினைந்து எலிக்குத் தனது நன்றியைத் தெரிவித்துவிட்டுத் தன்னளைக்குச் சென்றது.

## பயிற்சி 52

**பின்வரும் குறிப்புக்கள் கொண்டு நயக்கத்தக்க கதைகள் எழுதுக:-**

**(1)** கள்வர் இருவர் ஒரு வீட்டிற் களவாடினர் – காட்டுவழியாற் சென் றனர் – இருவருந் தனித்தனி அப்பொருளை அபகரிக்க நினைத்தனர் – ஒருவன், "பசி எடுக்கின்றது" என்றான் – மற்றையவன் அயற்கிராமத்துக்குப் போய் உணவு வாங்கிவரச் சென்றான் – தான் உணவருந்திய பின் மீதி





யுணவிற்கு நஞ்சிட்டுக்கொண்டு வந்தான் – காட்டில் இருந்தவன் உணவு கொண்டுவந்தனை வெட்டி வீழ்த்தினான் – பிணத்தை ஒரு கிடங்கிற் புதைத் தான் – உணவை அருந்தினான் – இறந்தான்.

**(2)** ஓர் அரசன் கதை கேட்க விரும்பல் – முடியாக் கதை சொல்பருக்கு அரசில் ஒரு பகுதி கொடுத்தற்கு வாக்களித்துப் பறைசாற்றல் – கதை முடித்தாற் சிரச்சேதம் எனல் – புலவர் பலர் கதைகூற முயலல் – கதை முடியச் சிரமிழத்தல் – இவற்றைப் பார்த்துச் சகிக்காத புலவன் ஒருவன் எறும்புக் கதைகூறல் – இடையில், ஓரெறும்பு ஒரு தினை மணியைக் காவிற்றெனல் – மறுபடியும் மறுபடியும் அதனையே கூறல் – அரசன் அப்பால் என்ன நடந்ததெனல் – புலவன் தினைகாவி முடிய வில்லை யெனல் – அரசன் வெட்கி அரசில் ஒரு பகுதியை ஈந்து தன் மடமையை உணரல்.

**(3)** ஒரு நாள் இரவு குருடன் ஒருவன் ஒரு கையில் விளக்கு ஒன்றும் ஒருகையிற் குடம் ஒன்றும் ஏந்தி ஒரு வழியாற் செல்லல் – இளைஞன் ஒருவன், "மடமை நிரம்பிய குருடா, விளக்குப் பிடித்துந் தடுமாறி நடக் கின்றாயே, "என இகழ்தல். குருடன் வெகுளாது, "நின் போன்ற அறிவிலிகள் இரவில் என்மீது மோதி என் குடத்தை உடைக்காமைப் பொருட்டே விளக்குப் பிடித்திருக்கின்றேன்," எனல். இளைஞன் வெட்கி மன்னிக்குமாறு வேண்டி அப்பாற்போதல்,

**(4)** ஓர் அரசன் தன் பற்கள் எல்லாம் விழுந்தமை கனாவிற்காணல் – சோதிடன் ஒருவனை வரவழைத்துப் பலன் கேட்டல் – அவன், "உமது பிள்ளைகள் எல்லாம் உமக்குமுன் இறப்பர்," எனல் – அரசன் வெகுண்டு சோதிடனைச் சிறை செய்தல் – வேறொரு சோதிடனை வர வழைத்துப் பலன் கேட்டல் – அரசன் குணமறிந்து அவன், உமது கனா மங்களமானது; உமது தமருக்குப் பின்னரே நீர் இறப்பீர்," எனல். அரசன் உவந்து பல பரிசளித்து அனுப்புதல்.

**(5)** பெருந்தலைச்சாத்தனார் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றி இருந்த குமணனிடம் பரிசில் வாங்கச் சென்று பாடல் – குமணன் அவருக்குத் தன் வாளைக் கொடுத்து, "எனது தலையை அரிந்து எனது தம்பியிடங் கொண்டு செல்வீராயின், பெரும் பரிசில் பெறுவீர்," எனல் – அவர் தலையரிய மறுத்து வாளைக்கொண்டு இளங்குமணனுக்குக் காட்டிப் பரிசில் வேண்டல் – அவன் துக்க மேலிட்டு, "எனது தமையனை எப் பொழுது காண்பேன்?" எனப் பிதற்றல் – புலவர் அவனைத் தேற்றல் – இருவருங் குமணனிடம் ஏகி அழைத்துவரல் – அரசகட்டில் ஏற்றுவித்தல்.



RangaRakes

tamilnavarasam.com

**(6)** நெடுங்கிள்ளி என்னும் அரசன் உறையூரை ஆளல் – இளந்தத்தன் என்னும் புலவன் அவனிடம் பரிசில்பெற வரல் – நலங்கிள்ளியிடமிருந்து ஒற்றுவந்தானென நினைந்து அப்புலவனைக் கொல்லத்துணிதல் – கோவூர் கிழார் இதனை அறிந்து நெடுங்கிள்ளியிடஞ் சென்று புலவர் இயல்பை எடுத்தோதல் – இளந்தத்தன் விடுதலை அடைதல் – பரிசில் பல பெற்று ஏகல்.

**(7)** சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானொடு பொருது சிறைப்படல் – நீர் விடாயால் வருந்தி நீர் கொடுக்கும்படி காவலரைக் கேட்டல் – அவர் மறுத்தல் – பின் கொடுத்தல் – அரசன் நீரைக் கையிற்கொண்டு, “இளமல்லாத இனத்தாரின் உபகாரத்தால் வந்த நீரை இரந்துண்ணக்கடவேனல்லேன்,” என நினைத்து நீருட் கொள்ளாது நின்று மானத்தால் உயிர் நீத்தல்.

**(8)** ஒரு களிறு தன் பிடியோடுங் கன்றுகளோடும் நீர் விடாயால் உந்தப்பட்டுத் தடாகந்தேடிக் காட்டில் அலைதல் குளமொன்று காணல் – கன்றுகள் அதற்குள் ஓடிச் சேறாடல் – களிறு அவற்றைக் கடியாது குளத்தருகே பிடியொடு சென்று அதனை நீர் அருந்துமாறு தூண்டல்– பிடி மறுத்துக் களிற்றை அருந்தும்படி வேண்டல் – நீர் இருவருக்கும் போதாதென உணர்ந்த களிறு பருகுகிறது போலச் சாடை காட்டல் – பின். பிடியைப் பருகுமாறு ஏவல்– பிடி நீர் குடித்தல்– எல்லாம் ஒருங்கு காட்டிற் புகல்–களிறு நீர் விடாயால் இறத்தல்– பிடியுங் கன்றுகளும் வருந்தல்.

**(9)** அறிஞர் ஒருவர் ஓர் அரசனிடஞ் செல்லல்– அரசன் அவர் கல்வியறிவைப் புகழ்ந்து, “கடவுள் என்பவர் யாவர்?” என வினவுதல்– அறிஞர் விடையிறுத்தற்கு ஒரு நாட்டவணை கேட்டல்– அரசன் உடன்படல்– அடுத்த நாள் அரசன் அவ்வினாவை மறுபடியுங் கேட்டல்– அறிஞர் இரண்டுநாட்டவணை தரவேண்டுமெனக் கெஞ்சுதல்–அரசன் இணங்குதல்– இவ்வாறு பலநாட் செல்லல்– ஒரு நாள் அரசன் கோபித்து அன்றே விடையிறுக்க வேண்டுமென வற்புறுத்தல்– அறிஞர் அவனுக்கு, “கடவுளைப் பற்றி நினைக்க நினைக்க விளக்கங் குறைந்து குறைந்து வருகின்றது,” எனல். அரசன் அறிஞரை மெச்சுதல்.

**(10)** அரசன் ஒருவனுக்கு ஓர் ஆண்மகவு பிறத்தல்–தாய் பிரவச வேதனையால் இறத்தல்–கைக்குழந்தையுள்ள இளம் பெண்ணொருத்தி அரசன் மகனுக்கு வளர்ப்புத் தாயாய் அமர்தல்– அவள் குழந்தைகள் இருவரையும் பராமரித்தல்– அரசன் பகைவர் அவனது மகனைக்





கொல்லச் சூழ்ச்சி செய்தல்– அவர்கள் அரமனைக்குட் புகுதல்– அவ் விளம் பெண் அதனை அறிதல்–தன் குழந்தைக்கு அரசவுடை தரித்துக் கிடத்திவிட்டு அரசன் மகனை எடுத்தோடி மறைத்தல்–படுக்கையிற் கிடந்த குழந்தையைப் பகைவர் கொன்றுவிட்டுச் செல்லல்– அரசன் அவ்விளம் பெண்ணிற்குப் பெரும் பரிசில் அளித்தல்–அவள் அதனை மறுத்துத் தற்கொலைபுரிதல்– அரசன் துக்கக்கடலில் மூழ்கி அவளுக்கு ஞாபகச் சின்னமாக ஒரு கட்டடங் கட்டுவித்தல்.

**(11)** மாணக்கன் ஒருவன் தனது நண்பனைப் பார்த்து, “இப்பெட்டியிற்குட் கிடக்கும் பழத்தை நீ தின்றாயாயின், அதனைப் பெட்டியிற்குக் கீழே வரச் செய்வேன்,” எனல்.–நண்பன், “ அது உன்னாற் செய்யமுடியாது, “எனல்– இருவரும் பந்தயம் ஒட்டல்–நண்பன் அப்பழத்தைத் தோனீக்கித் தின்று முடித்தல்– மாணக்கன் தோலை எடுத்து நண்பனின் காலிற்குக் கீழ் இட்டுவிட்டுப் பெட்டியைத் தூக்கி அவனது தலைக்கு மேற் பிடித்துக் கொண்டு, “பழம் பெட்டியிற்குக் கீழ் வரச்செய்கின்றேன்; பார்,” என்று கூறல்– நண்பன், “பழம் அவ்வாறில்லை; பழத்தின் பகுதிகளே அவ்வாறு இருக்கின்றன, எனல்– மாணாக்கன் பந்தயம் இழத்தல்.

**(12)** அடிமை ஒருவன் தனது கொடிய எசமானனிடமிருந்து தப்பி ஓடல்–குகை ஒன்றுக்குட் போய் ஒளித்தல்–சிங்கம் ஒன்று கர்ச்சிக்கும் ஓசை கேட்டல்–சிங்கம் அக்குகைக்குட் புகுதல்–அடிமை பயந்து ஒடுங்குதல்– சிங்கம் அவனுக்கு முன்னங்கால் ஒன்றைத் தூக்கிக் காட்டல்– அவன் அதன்கண் முள்ளொன்று இருப்பதைக் காணல்– மெல்லென அதனை எடுத்துவிடல் –சிங்கம் வாலையாட்டி நன்றிகாட்டி வேறிடஞ் செல்லுதல்–அடிமை எசமான் கையிற் சிக்கல்– நீதிபதிக்குமுன் கொண்டு செல்லப்படுதல்– அவனைச் சிங்கத்தின் முன் விடவேண்டுமென நீதிபதி தீர்ப்பளித்தல்– ஆயிரத்துக்கு மேற்பட்ட சனத்திரள் அக்காட்சியைப் பார்ப்பதற்குச் செல்லல்– அடிமை சிங்கத்திற்கு முன் அரங்கில் விடப்படல்– சிங்கம் அவனைத் தாக்க விரைந்து ஓடல்–அண்மையில் வந்ததும் வேகங் குறைந்து தரையிற்படுத்து அவன் கால்களை நக்கல்–சனங்கள் அதிசயப்படல்–நகரதிபதி அவனை அழைத்துக் காரணங் கேட்டல்–அவன் தன் கதை சொல்லல்–அதிபதி அவனுக்கு விடுதலையளித்துச் சிங்கத்தையும் அவனுக்குக் கொடுத்தல்–அவன் சிங்கத்தைக் காட்டில் விடுத்துத் தன்னிச்சையாக வாழ்தல்.

**(13)** வேடன் ஒருவன் காட்டில் மான்வேட்டையாடல் மான் – ஒன்றைக் கொன்று காவிச் செல்லல்–இடையில் ஒரு பன்றியைக் காணல்–மானை



RangaRakes
tamilnavarasam.com

நிலத்தில் வைத்துவிட்டுப் பன்றியை அம்பால் எய்தல்–பன்றி உறுமி அவனை அடித்து விட்டு இறத்தல்–அவன் நிலத்தில் வீழ்ந்து உயிர் நீத்தல்– கால்களுக்குக் கீழ் அகப்பட்ட பாம்பொன்று உழக்கப்பட்டமையாற் சாதல்–நரியொன்று இரைத்தேடி வரும்போது வேடனும் மானும் பன்றியும் பாம்பும் இறந்துகிடத்தலைக் காணல்–அது தனக்குள்; " மனிதனது தசை தின்று முடித்தற்கு ஒரு மாதஞ் செல்லும்; மானும் பன்றியும் இரண்டு மாதங்களுக்கு உதவும்; பாம்பு ஒரு நாளுணவாகும்; வில்லினது நாணை இப்போதே புசிப்பேன், ; என நினைந்து மகிழ்தல்–அந்நாணைத் தின்னத் தொடங்குதல்– நாண் அறவில்லின் வீச்சால் உயிர் நீத்தல்.

**(14)** சிங்கம் ஒன்று ஒரு மலைக்குகையில் வாழல்–எலி யொன்று அது தூங்கும்போது அதன்பிடர் மயிரை நறுக்குதல்–சிங்கங் கோபங் கொண்டு அதனைப்பிடிக்கத் தெண்டித்தல்–பலநாள் முயன்றும் அது பிடிக்கப்படாமையாற் சிந்தித்தல்–பூனை ஒன்றைத் தனக்கு நண்பனாகக் கொண்டு வந்து இரைகொடுத்து வளர்த்தல்– எலி பூனைக்குப் பயந்து அக்குகைக்குள் உள்ள பொந்திலிருந்து வெளிவராது பட்டினிகிடத்தல்–பசிபொறுக்க ஆற்றாது ஒரு நாள் வெளிச்செல்லப் பூனையாற் பிடிக்கப்பட்டு இறத்தல்– சிங்கம் எலிப் பீதியின்றி வாழ்தல்–பூனைக்கு இரையூட்டாது இருத்தல்–பூனை உயிர்துறத்தல்.

**(15)** ஒருகாட்டிலே தெருக்கரையிலுள்ள ஆலயம் ஒன்றில் ஒருபுறாவும் ஒரு காகமுங் கூடிவாழ்தல்– வெயிற் கடுமையால் வருந்திய பிரயாணி ஒருவன் அம்மரநிழலிலே தூங்குதல்–சிறிது நேரத்தால் அவன் முகத்தில் ஞாயிற்றின் கதிர்படுதல்–அம்மரத்தில் வசித்த அன்னம் ஒன்று அதனைக் காணல்– மனமிரங்கி அவன் முகத்திற் கதிர்படாவகைதன் இறக்கைகளை விரித்துக் காத்தல்–கதிர்சாய அன்னம் பறந்து ஏகல்–இதனைக் கண்ட காகம் பொறாமை மேலீட்டால் அப்பிரயாணியின் வாயில் எச்சமிட்டுப் பறந்து செல்லல்–பிரயாணி திடீரென விழித்துத் தன்வாயில் எச்சம் இருப் பதைக் கண்டு சினந்து மேனோக்கிப் பார்த்தல்–புறாவைக் காணல்–அம்புகொண்டு அதனை எய்து வீழ்த்தல்.



## அதிகாரம் 16

# கடிதமெழுதுதல்

**248.** கற்றவர் ஒவ்வொருவருந் தமது வாழ்க்கையோடு தொடர்புடைய சில தொழின் முறைக் கடிதங்களைச் சில வேலைகளில் எழுதவேண்டியவர் ஆவர்; ஆகலால், அவர் தெளிவான கடிதங்கள் எழுதப்பழகுதல் இன்றி யமையாதது.

நோக்கம்பற்றி உறவுமுறைக் கடிதங்கள், தொழின்முறைக் கடிதங் கள் எனக் கடிதங்கள் இரண்டு இனங்களாகப் பிரிக்கப்பட்டு உலக வழக்கில் இருத்தல் காணப்படும். எல்லாக் கடித இனங்களுக்கும் உரு பற்றி ஆறுகாரியங்கள் பொதுவாக உண்டு. அவை (1) **தலைப்பு,** (2) **முகமன்விளி**, (3) **அறிவிப்பு, அல்லது செய்தி,** (4) **முடிபு, அல்லது அனுமதி பெறல்**, (5) **கையொப்பம், அல்லது கைச்சாத்து,** (6) **விலாசம், அல்லது முகவரி என்பனவாம்.**

**249.** தலைப்பு என்பது கடிதம் எழுதப்படுகின்ற இடத்தையுங் காலத் தையும் அறிவிப்பது; இடமாவது கடிதம் எழுதுகின்றவனது விலாசம்; காலமாவது கடிதம் எழுதுகின்ற திகதி; தலைப்பினது நிலை கடிதத்தின் முதற் பக்கத்து நுனியின் வலப்புறமூலை; விலாசம் மேலுந் திகதி கீழுமாய் இருத்தல் வேண்டும்.

25, நல்லூர் வீதி<br>
யாழ்பாணம்.<br>
இலங்கை.<br>
22-7-57.

நற்சான்றுப் பத்திரங்களிலும், அழைப்புப்பத்திரங்களிலும், அவ் வழைப்பிற்கு ஏற்றுக்கோடலையாதல் மறுப்பையாதல் தெரிவிக்கும் பத்திரங் களிலுங் கடிதத்தின் இடப்புறத்தில் அறிவிப்புக்குக்கீழ் எழுதுவோனின் விலாசம் மேலும், எழுதிய திகதி கீழுமாக இடப்படுதல் வழக்கு.



RangaRakes
tamilnavarasam.com

**250. முகமன் விளி** என்பது கடிதம் எழுதப்படுவோனுக்கு எழுதுவோன் என்ன தொடர்புள்ளான் என்பதைச் சார்ந்து வருவது, அதன் வகைகள் பின்வருமாறு:–

| கடிதவினம் | முகமன் விளி |
|---|---|
| (அ) அறிமுகமானவனுக்கு | அருமைத் திரு. முருகனே, எனதுஅருமைத் திரு.முருகனே, |
| (ஆ) நெருங்கிய நண்பனுக்கு | எனது அருமைக் கந்தனே, அருமைக் கந்தனே, அன்ப, |
| (இ) சுற்றத்தினனுக்கு | எனது அருமைத் தந்தையாரே, எனது அருமைச் சகோதரியே, அருமை முருகா, அருமை மாமனாரே, |
| (ஈ) ஆசிரியனுக்கு | அருமை ஐயனே,அருமை அம்மையே, |
| (உ) அலுவலகத்தானுக்கு | ஐயனே, ஐயா, அம்மையே,அம்மா, |
| (ஊ) வியாபாரத்தாபனம் ஒன்றிற்கு | அருமை ஐயரே, அல்லது பெரியீர், |
| (எ) பத்திரிகை அச்சிடுவிப்போனுக்கு | ஐயனே, ஐயா, |

அருமை என்னுஞ் சொல்லை வழங்குதல் வெறும் உபசாரமாகும்; முகமன் விளியினது நிலை தலைப்புக்குக்கீழ் மட்டத்தில் முதற்பக்கத்து இடப்புறமாகும்.

**251. அறிவிப்பு,** அல்லது **செய்தி** என்பது கடிதத்தின் உள்ளுறையாகும்; இதனது நடை எழுதப்படுங் கடித வினத்தைச் சார்ந்தது; நெருங்கிய உறவினனுக்கு எழுதுங் கடிதத்தினது நடை தொழின் முறைக் கடிதத்தினது நடையிற்கு பெரிதும் வேறாகும். எனினும், பின்வருங் குறிப்புக்கள் கடிதங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாதல் அறிக:-

(அ) கடிதம் விடய மாற்றத்திற்குத் தகப் பந்திகளாகப் பிரிக்கப்பட வேண்டும்.
(ஆ) எளிய நேரான சிறு வாக்கியங்களே வழங்கப்பட வேண்டும்.
(இ) கடிதம் முடிந்த கருத்துக்கொண்டதாய் இருத்தல் வேண்டும்; எழுதி முடிந்தபின் மறந்துவிட்டனவற்றைப் பின்வாசகமாய் இணைத்தல் ஆகாது.





(ஈ) கடிதந் துப்புரவாய் எழுதப்பட வேண்டும்.
(உ) நிறுத்தக் குறிகள் வேண்டிய இடங்களிற் பிழையின்றி இடப்பட வேண்டும்.

**252. முடிப்பு,** அல்லது **அனுமதிபெறல்** என்பது கடிதம் எழுதி முடிக்கும் விதத்தைக்காட்டுவது; கடிதத்தின் இறுதியில் வலப்புறத்தில் எழுதப்படும். எழுதுவோனின் பெயர் மாத்திரத்தோடு திடுகூறாய்க் கடிதம் முடியப்படாது. கடித இனங்களுக்குத் தக அனுமதிபெறும் வகைகள் விதிக்கப்பட்டுள்ளன, அவை பின்வருமாறு:–

| கடிதவினம் | முடிப்பு அல்லது அனுமதிபெறல் |
|---|---|
| (அ) அறிமுகமானவனுக்கு | தங்களுக்கு உண்மையானவன், தங்களுக்கு நேர்மையானவன் |
| (ஆ) நெருங்கிய நண்பனுக்கு | தங்களுக்கு மிக்க நேர்மையானவன். தங்கள் நண்பன், தங்கள் அன்பன், |
| (இ) சுற்றத்தினனுக்கு | தங்களிற் பற்றுமிக்க மகன், தங்களில் அன்புமிக்க மருமகன், |
| (ஈ) ஆசிரியனுக்கு | தங்களுக்குப் படிவுள்ள மாணாக்கன், |
| (உ) அலுவலகத்தானுக்கு | தங்களுக்குப் படிவுள்ள அடியவன், |
| (ஊ) வியாபாரத் தாபனம் ஒன்றிற்கு | தங்களுக்கு நம்பிக்கையானவன், தங்களுக்கு உண்மையானவன், |
| (எ) பத்திரிகை அச்சிடுவிப்போனுக்கு | தங்களுக்கு உண்மையானவன், |

**253. கையொப்பம்,** அல்லது **கைச்சாந்து** என்பது முடிப்புக்குக் கீழே சிறிது வலப்புறத்தில் எழுதப்படுவது. மணஞ் செய்த பெண் திரு. (திருவாட்டி) என்பதையுஞ் மணஞ் செய்யாத பெண் செல்வி என்பதையும் அடைப்புக்குள் இட்டு அதன்பின் கையொப்பமிடுதல் வழக்கு.

தங்களுக்கு உண்மையானவள்,
(திரு) மு. கமலம்.

**254. விலாசம்,** அல்லது **முகவரி** என்பது கடிதவுறையில் எழுதப் படுவது. எழுதப்படுவோனது பெயர் சிறிது இடப்புறமாகவும் அவன் விலாசத்தின் ஒவ்வொருவரியுஞ் சிறிது சிறிது வலப்புறமாமாகவும் எழுதப்பட வேண்டும்.

RangaRakes
tamilnavarasam.com

| | |
|---|---|
| | அஞ்சற் செலவு முத்திரை |
| திரு.பொ. காங்கேயன்,<br>25, நாவலர் வீதி,<br>யாழ்ப்பாணம். | |

**கடிதவினங்கள்**

255. உறவுமுறைக் கடிதங்களுள்ளே கேண்மை காட்டுவனவற்றை எழுதும் முறைகள் பின்வருவனவற்றால் அறியப்படும்.

**(i)** [விடுதிவீட்டிலிருந்து இளைஞன் ஒருவன் தனது தந்தைக்கு எழுதியது]

இந்துக்கல்லூரி விடுதிவீடு,
வண்ணார்பண்ணை.
20-7-57.

**எனது அருமைத் தந்தையாரே,**

நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்தை நேற்றுப்பெற்றேன்: அதற்காக உங்களுக்கு நன்றி அறிவிக்கின்றேன். உங்கள் கடிதம் எப்பொழுது எனக்குக் கிடைக்குமெனக் காத்திருந்த எனக்கு அது கிடைத்தும் பெருமகிழ்ச்சி உற்றேன். இன்னும் பதினைந்து நாட்களில் நாம் விடுமுறை பெறுவோம். பதினைந்து நாள்களும் பதினைந்து ஆண்டுகளாகத் தோற்றம் அளிக் கின்றன.

நான் விடுதிவீட்டில் இருப்பதை முற்றாய் வெறுக்கின்றேன். இங்கு அறுபது பிள்ளைகளே விடுதிகொண்டிருக்கிறார்கள்; அவர்களுட் பெரும் பான்மையோர் என்னிலும் வயது கூடியவர்கள்; என்னையும் என்போன்ற சிறுவர்களையும் அவர்கள் படுத்தும்பாடு சொல்லுதற்கு முடியாது; விடுதி





வீட்டதிபர் முன்னிலையில் அவர்கள் நல்லவர் போல நடித்துக்காட்டி விட்டு அவர் அப்பாற் சென்றதும் எங்களை வருத்துவதே அவர்கள் தொழில். என்னை அவ்விடுதி வீட்டிலிருந்து எடுத்துவிட்டு நாடோறும் வீட்டிலிருந்தே கலாசாலைக்குச் சென்று கற்கும் மாணக்கனாகச் செய் தாலே என்மனஞ்சாந்தம் அடையும்.

அன்பை முன்னிட்டு எழுதிய
தங்களில் அன்புமிக்க மகன்,
மகிணன்.

**(ii)** **[இளைஞன் ஒருவன் தனது நண்பனுக்கு எழுதியது]**

16, பலாலித்தெரு,
திருநெல்வேலி.
20-7-57.

**அருமைக் காங்கேயனே,**

சென்றமாதம் இரண்டாந் திகதி தொடக்கம் நாம் புதிய ஓரில் லத்திற்கு குடியிருக்கிறோம் என்பதை உமக்கு அறிவிக்கின்றேன். அது எம்மூர் அஞ்சலகத்திலிருந்து வடக்கே நூறடி தூரத்தில் இருக்கின்றது; முந்திய இல்லத்தைப்போலன்றி விசாலமான பல அறைகள் கொண்டது; காற்றோட்டம் நன்கு அமையப்பெற்றது; அதன் பின் புறத்திற் பயிர்செய்தற்கு வளம்மிக்க தோட்டம் ஒன்று உண்டு; நானும் எனது அண்ணனும் வாழை, மா, பலா முதலியவற்றை அதன்கண்ணே நட்டு நாடோறும் நீரிறைத்துக் காலைப்பொழுதைக் கழிக்க எண்ணியிருக்கின்றோம்.

எங்கள் புதிய இல்லத்திற்கு வந்து ஒரு வாரத்திற்காதல் தங்கி எங்களோடு அளவளாவிப் போகுமாறு உம்மை வேண்டுகிறேன். பின்னேர வேளைகளில் எங்கள் வீட்டிற்கு அண்மையில் உள்ள தோட்டங்களுக்குச் சென்று இயற்கைக் காட்சிகளைக்கண்டு இன்பந் துய்க்கலாம் என்பதைத் தெருவிக்கின்றேன்.

தங்கள் வீட்டிலுள்ளார் யாவர்க்கும் எனது
அன்பு உரித்தாதலை விரும்புந் தங்கள் அன்பன்,
**கா. அருணந்தி.**



RangaRakes
tamilnavarasam.com

**256. உறவுமுறைக் கடித வகைகளுள் ஏனையவற்றை எழுதும் முறைகள் பின்வருனவற்றால் அறியப்படும்:**

**(1) நற்சான்றுப் பத்திரம்**

ஆ. அருணந்தி என்பவர் எங்கள்கல்லூரியில் இரண்டு ஆண்டுகளாகக் கல்விகற்று இப்போது கல்விப் பொதுத் தகுதிப் பத்திரப்பரீட்சையிற் சித்தி அடைந்திருக்கிறார்; கணிதத்திலும் இரசாயனவியலிலும் விசேட சித்தி பெற்றிருக்கிறார்; கல்வித்துறையிலேயன்றி விளையாட்டுக்களிலும் மிக்க ஆர்வமுந் தேர்ச்சியும் உடையவர்; எங்கள் உதைபந்தாட்டக் குழுவிலே தலைமைப் பதவியைச் சென்ற ஆண்டு ஏற்று நடத்தியவர்; தாம் எடுத்துக் கொள்ளும் வேலையை ஊக்கத்தொடுஞ் சிரத்தையொடுஞ் செய்து முடிப்பவர்; அவருடைய நற்குணத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் யான் சான்று பகருகிறேன்.

**க. இளம்பூரணன், க.நி.,**
**தலைமையாசிரியன்.**

யாழ்ப்பாண இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
20-7-57.

**(2) அழைப்புப் பத்திரம்**

**(i)** உபசாரமான அழைப்புக்கள் பொதுவாகப் படர்க்கையிலே எழுதப் படவேண்டும்; அதற்குத் தலைப்பாதல், முகமன் விளியாதல், உபசார முடிப்பாதல் இருத்தல் ஆகாது. எழுதுவோனின் பெயர் உள்ளுறையிலும், விலாசமுந் திகதியும் உள்ளுறைக்குக்கீழ் இடப்புறத்திலும் இருத்தல் வேண்டும்.

**உபசாரமான அழைப்புப் பத்திரம்**

திரு.க. பெருமாளும் அவர் மனையாளும் ஆடித்திங்கள் முதலா நாள் (16-7-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவிலே தமது இல்லத்திற்கு வந்து சிற்றுண்டி அருந்திப் போகுமாறு திரு. பொ. புகழேந்தியையும் அவர் பாரியாரையும் அன்போடு வேண்டுகின்றார்கள்.

ஏழுமலையில்லம்,
கொக்குவில்.
10-7-57.





**உபசாரமான ஏற்றுக்கோடற் பத்திரம்**

திரு. பொ. புகழேந்தியும் அவர் பாரியாருந் தங்களை ஆடித்திங்கள் முதலாநாள் (16-7-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவிலே தம் இல்லத்திற்குச் சென்று சிற்றுண்டி அருந்திப் போகுமாறு திரு.க. பெரு மாளும் அவர் மனைவியாரும் அன்போடு விடுத்த அழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஆற்றுப்படைவீடு,
திருநெல்வேலி
12-7-57.

**உபசாரமான மறுப்புப் பத்திரம்**

திரு.பொ.புகழேந்தியும்அவர் பாரியாரும் தங்களை ஆடித்திங்கள் முதலாநாள் (16-7-57) செவ்வாய்கிழமை பிற்பகல் 4 மணியளவிலே தம் இல்லத்திற்குச் சென்று சிற்றுண்டி அருந்திப் போகுமாறு திரு.க. பெருமாளும் அவர் மனையாளும் அன்போடு விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு, முன்னரே தவணையிட்ட ஒரு காரியந்தடையாய் நிற்றலால், தாங்கள் வரமுடியாமையை அறிவித்துப் பெரிதும் வருந்துகின்றார்கள்.

ஆற்றுப்படைவீதி,
திருநெல்வேலி.
12-7-57.

**(ii)** உபசாரக்குறைவான அழைப்புக்களும் ஏற்றுக்கோடல்களும் மறுப்புக்களும் பொதுவான கேண்மைக் கடிதங்கள் போல எழுதப்பட வேண்டும். அவற்றில் உபசாரச் சொற்கள் கேண்மைக் கடிதங்களிலுங் கூடுதலாகக் காணப்படும்.



RangaRakes
tamilnavarasam.com

### (அ) உபசாரக்குறைவான அழைப்புப்பத்திரம்

**எனது அருமையான திரு. முருகையனே,**

திங்கட்கிழமை 22–ஆந் திகதி இரவு 8 மணியளவில் எமது இல்லத்திற்கு வந்து என்னுடன் ஒருங்கு இருந்து இராவுணவு அருந்தியருளுவீரா?

12, கலைபயில் சோலை, தங்களுக்கு நேர்மையானவன்,
ஆடி,18. **வே. கந்தையன்.**

### (ஆ) உபசாரக்குறைவான ஏற்றுக்கோடற் பத்திரம்

**எனது அருமையான திரு. கந்தையனே,**

திங்கட்கிழமை 22 ஆந் திகதி இரவு 8 மணியளவில் உமது இல்லத்திற்கு ஏகி உம்முடன் ஒருங்கு இருந்து இராவுணவு அருந்துமாறு நீர் கேட்டுக்கொண்டபடி செய்கிறேன். உமது அன்பான அழைப்பிற்கு நன்றி செலுத்துகிறேன்,

15, பழமுதிர் சோலை, தங்களுக்கு நேர்மையானவன்,
ஆடி, 20. **கா. முருகையன்.**

### (இ) உபசாரக்குறைவான மறுப்புப்பத்திரம்

**எனது அருமையான திரு. கந்தையனே,**

திங்கட்கிழமை 22 ஆம் திகதி இரவு 8 மணியளவிலே உமது இல்லத்திற்கு ஏகி உம்முடன் ஒருங்கு இருந்து இராவுணவு அருந்துமாறு நீர் விடுத்த அழைப்பை ஏற்றுக்கோடற்கு, முன்னரே தவணையிட்ட ஒரு காரியந் தடையாய் நிற்றலால், யான் வரமுடியாமையை அறிவித்துப் பெரிதும் வருந்துகின்றேன்.

15, பழமுதிர் சோலை, தங்களுக்கு நேர்மையானவன்,
ஆடி, 20 **கா. முருகையன்.**





### (ஈ) உபசாரக்குறைவான திருமணப்பத்திரம்

அன்பரே,

நிகழும் ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 20 ஆந் திகதி (5-9-57) வியாழக்கிழமை பிற்பகல் 1மணி 4 நிமிடத்திற்கு மேல் வரும் நல்வேளையில்,

| | |
|---|---|
| திருநெல்வேலி<br>**திரு. பொ. இரத்தினம் அவர்களின் புதல்வன் குணவாளனுக்கும்** | **எமது புத்திரி திருவளர் செல்வி கமலத்திற்கும்** |

திருமணம் நடத்தப் பெரியோர் நிச்சயித்து இருப்பதால், அவ்வமையந் தாங்களுந் தங்கள் சுற்றத்தினருஞ் சமூகந்தந்து திருமண விழாவைச் சிறப்பித்து மணமக்களை வாழ்த்தி ஏகுமாறு வேண்டுகின்றோம்.

அம்மன் வீதி, தங்கள் நல்வரவை எதிர்பார்த்து நிற்குந்
கொக்குவில். தங்கள் அன்பர்,
15-7-57. **இளமுருகனும் பாரியாரும்.**



RangaRakes tamilnavarasam.com

(உ) உபசாரக்குறைவான குடிபுகு விழா அழைப்புப்பத்திரம்

அன்பரே,

கொக்குவில் கிழக்கிற் பொற்பதித் தெருவின் கிழக்குப் பக்கத் தேயாம் புதிதாய்க் கட்டுவித்த மனையில், நிகழும் ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 16 ஆந் திகதி (1-8-57) புதன்கிழமை இரவு 3 மணி தொடக்கம் 5 மணி வரைக்கும் உள்ள நல் வேளையில் யாம் குடிபுகு விழா செய்ய எண்ணி இருக்கின்ற மையால், அவ்விழாவிலே தாங்களுந் தங்கள் சுற்றத்தினருங் கலந்து எம்மை மகிழ்விக்குமாறு தங்களை வேண்டுகிறோம்.

பொற்பதித்தெரு,
கொக்குவில்.
14-7-57

தங்கள் நல்வரவை எதிர்பார்த்து நிற்குந்
தங்கள் அன்பர்,
**கந்தவேளும் பாரியாரும்.**

257. **தொழின் முறைக் கடிதங்கள்** தெளிவாய் மட்டுக்கு விஞ்சாமல் எடுத்துக்கொண்ட விடயத்தையே தழுவியிருப்பன; அவை கேண்மை கடிதங்களிலும் உபசாரக்கூற்று மிக்கவை. தொழில் செய்வோர் முயற்சி கூடியவர்களாகையால் நீண்ட பிதற்றற் கடிதங்களை எழுதவோ வாசிக் கவோ நேரம் வாய்க்கப்பெறார். எனினும், சில உபசாரக்கூற்றுக்களை எடுத்தாள்வார்.

தொழின்முறைக் கடிதங்களின் உரு முன் விபரித்த வண்ணம் இருக்கும்; ஆனால், கடிதம் எழுதப்படுபவனின் விலாசங் (வியாபாரத் தாபனமாயின், அதன் விலாசம்) கடிதத்தின் முதற்பக்கத்து இடப்புற மூலை யில் தலைப்புமட்டத்திற்குக் கீழே இடப்படுதல் வழக்கு. தொழின் முறைக் கடிதங்களை எழுதும் முறைகள் பின்வருவனவற்றால் அறியப்படும்;





(i) **வியாபாரக் கடிதம்**

15, தெற்குவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
20-7-57.

கரந்தைத் தமிழ்சங்கத்திற்கு,
தஞ்சை.

பெரியீர்,

கீழ்க்காணுந் தங்கள் வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் அறுபது பிரதிகளை எனக்குப் பெறுமானங் கட்டியெடுக்கும் அஞ்சலில் அனுப்புமாறு வேண்டுகின்றேன்.

வியாபாரிகளுக்கு வழக்கமாக நீங்கள் அளிக்குங் கழிவுவீதத்தை எனக்குங் கொடுப்பீர்களென எதிர்பார்க்கின்றேன்.

1. **தொல்காப்பியம் சொல்லதிகாரம்-தெய்வச்சிலையார் உரை,**
2. **சிலப்பதிபாரம்-புகார்க்காண்டம்,**
3. **பரதசாத்திரம்.**

தங்களுக்கு உண்மையானவன்,
**அருட்பிரகாசன்.**
(புத்தக வியாபாரி)

ii) **விண்ணப்பப் பத்திரம்**

20, கீழைவீதி,
சிதம்பரம்.
18-7-57

கீழேத்தேய நட்ட ஈட்டுக் கம்பனிக்கு
மதுரை.

பெரியீர்,

இன்று "தினசரியில் வெளியிடப்பட்ட எழுத்துவினைஞன் வேலை க்கு எனது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.



RangaRakes
tamilnavarasam.com

என்வயது இருபது; மதுரைத் தமிழ்ப்பண்டிதர் பரீட்சையிலே தேறியிருக்கிறேன்; இவ்வாண்டு நடந்த பொதுத்தகுதிப் பத்திரப் பரீட்சையிலுஞ் சித்திபெற்றிருக்கின்றேன்; தட்டெழுத்து அடிப்பதிலும் எட்டுமாதப் பயிற்சி எனக்கு உண்டு.

இவ்விண்ணப்பத்துடன் மூன்று நற்சான்றுப் பத்திரங்களை இணைத்திருக்கின்றேன்; எனது நடத்தையைப்பற்றித் திருநெல்வேலிப் பரமேசுவரக் கல்லூரித் தலைமையாசிரியரை விசாரித்து அறியலாம்.

அவ்வேலையில் என்னை அமர்தினால், தங்களுக்கு முழுத்திருத்தி அளிக்க முயலுவேன் என்பதைத் தங்களுக்கு நிச்சயப்படுத்துகின்றேன்.

தங்களுக்குப் படிவுள்ளவன்,
**ம. மாணிக்கன்.**

## பயிற்சி 5

**சிறுகடிதம் வரைக:-**

**(1)** உமது தந்தையாருக்குக் கலாசாலை விடுதி வீட்டின் சிறப்புக்களை எடுத்துக்கூறி.

**(2)** நண்பன் ஒருவனுக்கு உதைபந்தாட்டப்போட்டி ஒன்று பொருளாக.

**(3)** உமது கலாசாலைச் சஞ்சிகை ஆசிரியனுக்கு வீட்டுப் படிப்பு மிகுதியைக் கண்டித்து.

**(4)** உமது தம்பிக்குக் கற்பனையான, அல்லது உண்மையான ஆகாய விமானப் பயணம் ஒன்றைப்பற்றி.

**(5)** உமது அயலவன் ஒருவனுக்கு அவனது நாய் இரவில் உமக்கு நித்திரைப்பங்கஞ் செய்கின்றதென முறையிட்டு.

**(6)** நண்பன் ஒருவனுக்கு உமது பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு வரவழைத்து.

**(7)** ஒரு வியாபாரத் தாபனத்திற்கு அத்தாபனத்தில் விலைக்குக் கொண்ட பொருள்களின் குறைகளைக் கூறி.

**(8)** உமது நண்பனுக்கு அவன் விடுத்த சிற்றுண்டி அழைப்பிற்குச் செல்ல இயலாமையைக் கூறி.

**(9)** உமது ஆசிரியனுக்குக் கலாசாலை செல்வதை நிறுத்தி வேலை தேடப் போகின்றீர் எனக்கூறி.





**(10)** சிறைச்சாலை அதிபருக்குச் சிறையிலிருக்கும் நண்பன் ஒருவனைக் காண அனுமதி தரும்படி.

**(11)** நண்பன் ஒருவனுக்கு நீர் பார்த்துச் சுவைத்த புகைப்படம் ஒன்றின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லி.

**(12)** ஒரு செய்தித்தாள் ஆசிரியனுக்கு உமது மாகாணம் பாராளுமன்றத்தாற் கவனிக்கப்படாமையை எடுத்துக் கூறி.

**(13)** இராப்பகலாகப் படிக்கும் நண்பன் ஒருவனுக்கு விளையாட்டுக்களிற் பங்குபற்றும்படி.

**(14)** தந்தையை இழந்து வருந்தும் நண்பன் ஒருவனுக்கு அனுதாபங் காட்டி.

**(15)** தன் சகோதரியினது திருமணத்திற்கு உம்மை அழைத்த ஒருவனுக்கு அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டீர் எனக் கூறி.

**(16)** உமது மைத்துனனுக்கு நீர் வசிக்கும் நகரின் சிறப்புக்களை எடுத்துக் காட்டி.

**(17)** உமது மாமனாருக்கு நீர் கல்வியைத் தொடர்ந்து கற்பதற்குப் பொருளுதவிசெய்யுமாறு கேட்டு.

**(18)** கல்வியதிகாரிக்கு ஆசிரியவேலை ஒன்றைக்கோரி.

**(19)** ஒரு புத்தகசாலைக்குச் சில புத்தகங்களை விலைக்குத் தருமாறு கேட்டு.

**(20)** உமது பட்டினத்து அஞ்சலகவதிபதிக்கு அஞ்சலகக் காசுப்பத்திரங்களின் விபரங்களை உமக்குத் தெரிவிக்குமாறு.



RangaRakes tamilnavarasam.com

## அதிகாரம் 17

# சுருக்கவுரை யெழுதுதல்

**258.** சுருக்கவுரை என்பது பொழிப்பு; ஒரு விரிந்த கட்டுரையின் சிறப்புப் பொருளைத் திரட்டி எடுத்தால் அது அக்கட்டுரையின் சுருக்கவுரை யெனப்படும்; திரட்டுரை என்பது அதன் பரியாயப்பெயர். ஒரு கட்டுரையின் சுருக்கவுரையானது வேண்டா விபரங்களை ஒழித்துச் சிறந்த விபரங்களை மாத்திரங் கொண்டிருக்கும். அக் கட்டுரையை ஒரு போதாயினுங் கல்லாத ஒருவன் அதன் சுருக்கவுரையைக் கற்றானாயின், இவன் அதனது தாற் பரியத்தை உணர வேண்டும். சுருக்கவுரையானது தெளிவாயுந் தொடர்புள்ள தாயும் நிறைகருத்துக்கொண்டதாயும் இருத்தல் வேண்டும்; வாசிப்போர் உள்ளங்களைக் கவரத்தக்க நடையுள்ளதாயும் இருத்தல் வேண்டும்.

சுருக்கவுரை பெயர்த்துரையிலும் வேறு. ஒரு கட்டுரையின் பெயர்த் துரையிற் பொழிப்போடு விபரங்களும் இருக்கும்: அப்பெயர்த்துரை கட்டுரை யளவிற்கோ அதனைக் கடந்த அளவிற்கோ விரிந்து செல்லும்: ஆனால், அக்கட்டுரையின் சுருக்கவுரை சிறப்பில்லாத விபரங்களை ஒழித்து அக் கட்டுரையின் செம்பாகத்தையே கொண்டிருக்கும்; அதன் அளவு கட்டு ரையின் மூன்றிலொரு பங்கிற்கு மேற்படாதிருக்கவேண்டும்.

**259. பின்வரும் விதிகளைக் கடைப்பிடித்தாற் சுருக்கவுரை நன்கு அமையும் என்பது துணிபு:-**

(1) முதன்முதலாகக் கட்டுரையைக் கூர்ந்த நோக்கொடு வாசித்து அதன் போக்கை அறிக; அது இன்னதைப் பற்றியதெனத் தரப்பட வில்லையாயின், அதற்கு ஒரு தலையங்கமுங் காண்க.

(2) இரண்டாம் முறையாகக் கட்டுரையை வாசித்து அதன் கண்ணே சிறப்புள்ள பகுதிகள் இவை சிறப்பில்லாப் பகுதிகள் இவை என ஆராய்ந்து கண்டு சிறப்பில் பகுதிகளைத் தள்ளிச் சிறப்புப்பகுதிகளை ஒரு தாளிற் குறித்து வைக்க.

(3) குறித்துவைத்த அப்பகுதிகளின் சிறப்புக்களை ஒப்பிட்டு அவற்றிற் குத்தக விரிவாயுங் குறைவாயும் எழுதும் வகையைச் சிந்தித்துப் பரும்படியான ஒரு சுருக்கவுரையை மூன்றிலொரு பங்கிற்கு,





அல்லது கேட்கப்பட்ட அளவிற்கு உமது சொந்தச் சொற்கள் கொண்டு எழுதுக; தன் கூற்று வாக்கியங்களைப் பிறன்கூற்று வாக் கியங்களாக எழுதுதல் மரபென அறிக: தன் கூற்றுக் கட்டுரை களைத் தன்கூற்றுச் சுருக்கவுரையாக்கல் சிலவிடத்து விரும்பப்படு மென்பதையும் அறிக.

(4) மூன்றாம் முறையாகக் கட்டுரையை வாசித்துச் சுருக்கவுரையிற் சிறப்புப் பகுதிகளில் எவையேனும் விடுபட்டிருக்கின்றனவா என்றுஞ் சிறப்பில் பகுதிகளில் ஆராய்ந்து திருத்தி முடிந்த சுருக்கவுரையை இலக்கணப் பிழையின்றி எழுதுக.

**வினா:** பின்வருங் கட்டுரைக்கு ஏற்ற தலையங்கமிட்டு அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

பண்டைத் தமிழர் பெண்களை ஆயிழை யென்றும், மெல்லிய லென்றும் அவர்களுடைய பெண்மைக்குணத்தை நோக்கி அழைத்தனர் என்பதை அவர்கள் எமக்கு உதவியருளிய இலக்கியங்களால் அறி கின்றோம். அக்காலம் பெண்களுக்கு மணவினை செய்யும்போது சீதனங் கொடுக்கும் வழக்கம் இருக்கவில்லை. இக்காலத்திலும் இந்தியாவிற் பெரும் பான்மையானும் அவ்வழக்கம் இல்லை. யாழ்ப்பாணத்திலோ வெனின், சீதனம் இல்லாப் பெண்ணானவள் தன்னை ஈன்றெடுத்த பெற் றொருக்குப் பெரும் பொறையாய் இருக்கிறாள். மூளியலங்காரியாய் இருந்தாலும் ஒருத்தி எண்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான சீதனமுடைய ளாயின், மன்மதனைப்போன்ற அழகும், உயர்ந்த அரசியல்வேலைச் சிறப்புமுள்ள ஆண்மக்கள் பலர் அப்பெண்ணை மணஞ் செய்ய முன்னிற்பர். சீதனமில்லாப் பெண் ஒருத்தி சிறந்ததோர் எழில் வாய்ந்தவளாயினும், யாழ்ப்பாணத்திற் பேய்தானும் அவளை வதுவைசெய்ய ஒருப்படாதென்றே கூறலாம். சீதனத்தின் பொருட்டே பெண் ஒருத்தியை ஆண்மகன் ஒருவன் விவாகஞ் செய்தானாயின், அப் பெண் அவனுக்குப் பணமூடையென்றாதல் பொருட்குப்பையென்றாதல் தோற்றங் கொடுப்பா ளேன்றி மெல்லியலுமாகாள்; துடியிடையுமாகாள்,

இனிச் சீதனத்திற்காக ஒரு பெண்ணை மணந்தவன் அச்சீதனத்தை நுகர நுகர அது தேய்ந்து தேய்ந்தொழியும். ஒழிந்தபின், அவ்வொழிந்த சீதனமுடையாள் அந்நுகர்ந்த கொழுநனுக்குப் பணமூடை, பொருட் குப்பை என்பனவாய் விளங்குதலுமற்று மூதேவி, சண்டாளி என்னுந் தோற்றங்



RangaRakes tamilnavarasam.com

களையே அளிப்பள். ஆகையால், சீதனங் கேட்பதுங் கொடுப்பதும் ஆகிய வழக்கங்களை அறவே ஒழித்துப் பண்டைத் தமிழர் பண்பாட்டின்படி ஒழுகுதல் இற்றைக் காலத் தமிழர்களுக்குச் சிறப்புக் கொடுக்கும் என்பது ஒருதலை.

**விடை** **சுருக்கவுரை**

பண்டைத் தமிழர் பெண்களின் பெண்மைக்குணத்தை நோக்கி அவர் களை மெல்லியல் முதலாயின பெயர்களால் அழைத்தனர். சீதனங் கொடுக்கும் வழக்கம் இற்றைக் காலத்திலே பெரிதும் யாழ்ப்பாணத்திலே தலையெடுத்துப் பெண்களின் பெண்மைக் குணத்தை நோக்கவிடாது அவர் களையும் அவர்களைப் பெற்ற பெற்றோரையும் அலைக்கின்றது. எழினலம் பெற்ற பெண்கள் பலர் சீதனமில்லாமையால் மணஞ்செய்ய முடியாது வருந்துகின்றார்கள்: சீதனமுடையார் அழகு குறைந்தவராயினும் எளிதில் விவாகஞ் செய்யும் நிலையைப் பெறுகிறார்கள்: எனினும், தங்கணவராற் பணமூடை, பொருட்குப்பை என இழிக்கப்படுகிறார்கள்: சீதனஞ் செலவான பின் இவராற் சண்டாளி, மூதேவி என ஏசப்படுகிறார்கள். இவ்வழக்கம் எல்லார்க்குந் தீங்கு பயக்கின்றமையால் ஒழிக்கப்படல்வேண்டும்.

## பயிற்சி 54

**பின்வருங் கட்டுரைகளுக்கு ஏற்ற தலையங்கங்கள் இட்டு அவற் றை மூன்றிலொருபங்குக்கு மேற்படாமற் சுருக்கி எழுதுக.**

**(1)** இற்றைக்காலத்து ஓவியருஞ் சிற்பிகளுமே தம் ஆற்றலால் உள் ளதை உள்ளபடி தோற்றுவிப்பர்; உண்மையினின்றும் ஒரு சிற்றிடை வில கினும் அவர்கள் தந்தொழிலிற் கைதேர்ந்தாராகார்; புலவரோவெனின், இயற்கை காட்சியில், நாம் நாடோறுங் காணும் புறப்பொருளையோ அவற் றாற் பெற்ற அகப்பொருளையோ உளம் ஈர்க்கப்பட்ட நிலையிலே நின்று கண்டு தாங் கண்டவற்றைத் தம் புனைந்துரை ஆற்றலாலே நல்லிசைச் சொற்கள் கொண்டு செய்யுளிலே தொகுத்துக் கூறி அச்செய்யுளைப் படிப் பாராகிய எம்மையுந் தாங் கண்டவாறு கண்டு இன்புறச் செய்வர். புலவர் பாடிய பொருள் பிறரான் மதிக்கப்படும் பொருளாய் இருக்க வேண்டிய தில்லை. அப்பொருள் பலராலும் இழிக்கப்படுவதொன்றாயினுமாகலாம்;





அது பகுதி பகுதியாய் உலகியற் பொருளோடொத்தும் பிண்ட மாய்க் கற்பனைப் பொருளாயிருக்கினும் இருக்க; அன்றிப் பிண்ட வகையாலும் உலகியற் பொருளாயிருக்கினும் இருக்க; அப் பொருள் உணர்ச்சி மிக்க புலவன் ஒருவனாற் காணப்படுந்தோறும் அவன் உள்ளத்தை உடைக்கும்; உடைந்த உள்ளம் அவன்வாயினின்றுஞ் சொல்லாறாய் ஒழுகிப்படிப்போர் உள்ளத்தை ஞெகிழ்த்து அவன் நுகர்ந்த இன்பத்தை அவர்க்குங் கொடுக்குமெனிற் செய்யுள் தோன்றும் எனலாம். ஒவ்வொரு செய்யுளுந் தனித்தனி பொருளொடு பொதிந்து இன்னோசைத்தாய் இருத்தல்வேண்டும். பொருளில்லாச் செய்யுள் உயிரில்லா உடம்பிற்கு நேர். பொருளுக்குத் தக்க ஓசையின்றிய செய்யுள் படிப்போர் உள்ளத்தில் உணர்ச்சியைக் கிளராது. செய்யுள் என்பது வெறுமனே மனக்கிளர்ச்சியை மாத்திரம் உண்டுபண்ணுவதொன்றன்று. ஒரு பழைய கட்டில் ஒருவன் உள்ளத்தில் அவனது இறந்ததாயையோ, தந்தையையோ நினைவூட்டி மனக்கிளர்ச் சியை எழுப்பினும் எழுப்பும். அந்நினைவின் வண்ணம் நின்று தன் சொல் வன்மையால் அவன் ஒரு செய்யுளை இயற்றித் தருவானாயின், அது சிறப்புடைச் செய்யுளாகாது. அது படிப்போர் மாட்டு மனக்கிளர்ச்சியைக் காட்டுமேயன்றி அவர் உள்ளத்தை ஞெகிழ்த்துக் கவியின்பத்தை யூட்டா தெனலாம்.

**(2)** திடீரென ஓர் உருவந் தன் கைகளால் என்னை வளைத்துப் பிடித்துக்கொண்டது. எனது நெஞ்சுடன் கைகள் இறுக நெருக்கப்பட்டன. "ஐயோ! ஐயோ! வைரவர், வைரவர்," என்ற ஓசைகள் என் செவிகளுக்குள் வீழ்ந்தன. வேலப்பன் யாதோ ஓர் உருவத்தைக்கண்டு அதனை வைரவ ரெனக்கொண்டு அதற்குப் பயந்து என்னைக் கட்டிபிடித்து அலறுகின்றான் என உணர்ந்தேன். விடு, விடு என்று பன்முறை கூவினேன். பாவி பயத் தினாலே தான் செய்கின்றது இன்னதென்று அறியாதவனாய்ப் பின்னரும் என்னை இறுகப்பிடித்தான்; பிடிக்கப்பிடிக்க எனக்கு மூச்சுத் திணறத் தொடங்கியது. ஆயினும், யான் அவ்வேதனையைப் பொறுத்துக்கொண்டும் என் வலக்கையையாயினும் விடுவிக்கும் அமயம் பார்த்துக்கொண்டும் வாளா நின்றேன், அவன் வைரவர்ப் பயத்தினால் என் பிற்பக்கத்தால் என்னை கட்டிப்பிடித்தவண்ணம் அங்கு மிங்குமாக ஆடி நிற்கையில் என் வலக்கையை அவன் பிடியினின்றும் நீக்கத் தருணம் வாய்த்தது. அக்கையை மெல்லன எடுத்துச் சோரவிட்டுச் சட்டெனத் திரும்பி அவன் கன்னத்திற் படாரென ஓரறை கொடுத்தேன்," கொடுத்ததும், "ஐயோ! வைரவர் என்னை



RangaRakes

tamilnavarasam.com

அடித்துவிட்டார்,'' என்ற ஓசையுடன் என்னைப் பிடித்த பிடியை நழுவ விட்டான். விட, யான் ஓரோட்டமாக ஓடி நூறுயார் தூரத்திற்கு அப்பாற் சென்று விட்டேன். அவனும் அலறிய வண்ணம் என்னை தொடர்ந்து ஓடிவந்து சார்ந்து, "ஐயோ, இன்றுவைரவரால் அடியுண்டேன்,'' என்றான். "வேலப்பா, நீ பயப்படுதல் தகாது; நீ ஒரு வீரன் என்பதை உணர்; இது தானே உனது இல்லம்; நீ அங்குச் சென்று ஆறியிரு,'' என்றேன். தெரு விற்கும் அவன் இல்லத்திற்கும் உள்ள இடைத்தூரம் ஐம்பதடி இருக்கும். துணையின்றி அத்துணைத் தூரத்திற்குஞ் செல்ல முடியாதவனாகி என்னைத் தனது இல்லத்தின் வாயில்வரை வரும்படி மன்றாடினான். யான் அதற்கு உடன்படாதானாகி அவனது இல்லக் கிழத்தியைக் கூவியழைத்து அவளிடம் அவனை ஒப்படைத்துவிட்டு என் வீடுபோய்ச் சேர்ந்தேன். தனது இல்லமடைந்த வேலப்பனுக்கு வைரவப் பயத்தினாற் பதினான்கு நாட் காய்ச்சல் காய்ந்ததாகக் கேள்விப்பட்டேன். பிற காரணம் யாது மின்றி வைரவர்பற்றிய பயத்தினாலே அவன் கொக்குவில் விட்டேகி இப்பொழுது இருபத்தைந்து ஆண்டுகள் சென்று விட்டன. அவனைப்பற்றிய செய்தி ஒன்றும் இன்றைவரை அறியாதவனாய் இருக்கின்றேன். இல்லாத வைரவருக்குப் பயந்து தம் இல்லம் விட்டோடு பவர்களுக்கு வேலப்பன் சான்றாவான்.

**(3)** உலக வழக்கிலே தமிழன் தனது பேச்சை எவ்வாறு நிகழ்த்து கின்றான் என்பதை நோக்குவோம். அவன் "கல்லடித்தது, வளையடித்தது'' என்கின்றான். தமிழனிற் பிழையாதும் இல்லை. கல் முதலியனவே அவனுக்குத் துன்பஞ் செய்வனபோலும். தன்பிழைகளைத் தமிழன் புறப் பொருள்களில் ஏற்றிக் காண்கின்றான். ஆனால் பிறமொழியாளர் பலர் "கல்லை யடித்துக் கொண்டேன்'' என்னும் பொருள்படும் வாக்கியங் களையே வழங்குகின்றனர். அவர்கள் தம்பிழைகளைத் தம்மீதே இட்டுக் காண்கின்றார்கள். 'கல்லை அடித்துக்கொண்டேன்'' என்பதில், "மடமை காரணமாக'' என்பது எஞ்சி நிற்கின்றதன்றே. ஆயின், "கல்லை அடித்துக் கொண்டேன் என்பது 'யான் மடையன்'' என்பதனோடு ஒக்கும். "யான் மடையன்'' என்னும் உணர்ச்சி மனத்தை நலியச் செய்யுமாகையால் அருவருத்து விடத்தக்கது. பிழையைப் புறப் பொருள்களில் ஏற்றிக் காண்பது ஒருகுறி யெதிர்ப்பை யுடைத்து. புறப்பொருள்கள் எல்லாந் தனக்கு உபகாரஞ் செய்யவுள்ளன என்பதே தமிழன்கொண்ட கொள்கையாகும். அதற்கு மாறாகக் கல்முதலாயின தனக்கு அபகாரஞ் செய்தனவே என்னும்





உணர்வு அவை மாறாகாமை நிற்றலுக்கு அவன்மாட்டு முயற்சியை விளை விக்கும். ஆயின், கல்லடித்தது, வளையடித்தது என்னுந் தமிழனுடைய வழக்குகள் போற்றற்குரியன எனலாம்.

இனிப் பூதன் மகன், முருகன் மனைவி என்று கூறும்போது, தமிழன் அவற்றால் என்னவென்ன கருதுகின்றான் என்பது ஆராயற்பாலது. தமிழிலக்கண அறிஞர் பூதன் மகன், முருகன் மனைவி என்னுந் தொகைச் சொற்களைப் பூதனுக்கு மகன், முருகனுக்கு மனைவி என்றே விரித்துநிற்பர். ஆயின், தமிழன் வழக்குத் தந்தைக்கும் மகனுக்குமுள்ள முறைமையையுங் கணவனுக்கும் மனைவிக்குமுள்ள முறைமையையும் அறிவுறுத்துதற் கண்ணே அமைந்துள்ள தெனலாம். மகனாவான் தன் தந்தைக்கும் மனைவி யாவாள் தன் கணவனுக்கும் உடைமைப்பொருள் என்னும் வழக்குகள் தமிழ்மரபில் இல்லை என்றே கூறலாம்; மற்றுப் பிறமொழிகள் பலவற் றுள்ளும் பூதனுடையபூ, முருகனுடைய முடி என்றாற்போலப் பூதனுடைய மகன், முருகனுடைய மனைவி என்னும் வழக்குக்கள் வழங்குகின்றமையால், அம்மொழி பேசுவோர் மகனைத் தந்தையின் அடிமை என்றும் மனைவியைக் கணவனின் அடிமை என்றுங் கொண்டனர் ஆவார். ஆகையால், மகனை யாதல் மனைவியையாதல் அடிமை எனக்கொள்ளாத பண்புடைய தமிழனின் பெருமை வியக்கற்பாலது.

**(4)** உலகில் யாதும் ஓர் அரசவேகாந்தம் உண்டெனில், அது நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிற் கிடக்கும் ஒருவனுக்குத்தான் கிடைக்கும். நோயாளி அப்படுக்கையை எவ்வாறு கண்ணியப்படுத்துகின்றான்! மன வடக்க மின்றி என்னவென்ன வீணெண்ணங்கள் கொள்ளுகின்றான்! துடிக்குங் கன்னங்களின் என்றும் மாறுந்தேவைகளுக்குத்தக ஓர் அரசனை ஒப்பத் தனது தலையணையைப் புரட்டியும் எறிந்தும் இடம்பெயர்த்துந் தாழ்த்தியும் மொத்தியுந் தட்டையாக்கியும் உருமாற்றியும் அவன் ஆளுகின்றவாறு என்னே! அரசியல்வாதியிலும் பன்முறைபக்கம் மாறுகின்றான்; இப்போது நீட்டிநிமிர்ந்து படுத்திருக்கிறான்; பின் படுக்கையின் அரைப்பங்கு நீளத்திற் குறுக்காகக் குடங்கிப் படுத்திருக்கிறான்; ஒருவராதல் அவன் குப்புறப் படுத்திருக்கிறானென முறையிடமாட்டார். நான்கு திரைகளுக்கும் உட்பட்ட பிரதேயத்திற்கு அவன் தனியாட்சியுள்ளவன்; அப்பிரதேயம் அவனது சொந்த ஆட்சிக்கடல்.



RangaRakes
tamilnavarasam.com

நோயானது ஒருவனின் ஆன்மப்பரிமாணங்களை அவனுக்கென விரித்துக் கொடுக்கின்றவாறு என்னே! அவன் தனக்குதானே சொந்தப் புறநீங்கலான பொருளாகின்றான்; ஒப்பில்லாத தன்னயமே அவனுடைய தனிக்கடமையென அவனிடத்துப் புகுத்தப்பட்டிருக்கின்றது அதுதான் அவனுக்குரிய இருசட்ட அட்டவணைகளுமாகும். உடனலம்பெறும் முறையை யன்றிச் சிந்திப்பதற்கு அவனுக்கு யாதொன்றுமில்லை. அவன் இருக்கும் இடத்தில் உள்ளே யாதல் வெளியேயாதல் நடைபெறுங் காரியங்கள் ஒன்றோடொன்று அடிபடுதலை அவன் கேட்பதில்லை; அவை அவனைத் தாக்குவதுமில்லை.

சிறிது நேரத்திற்கு முன்னா் தனது அருமையான நண்பன் ஒருவனின் வாழ்க்கையை ஆக்குதற்கோ அழிப்பதற்கோ உரிய ஒரு வழக்கில் மனம் ஈடுபட்டிருந்தான். இப்போது "நண்பன்" என்றசொல்லும் 'அழிவு' என்ற சொல்லும் வெறும் பசபசப்பன்றி அவன் உள்ளத்தைக் கலக்கவல்லன வல்ல. உடனலம்பெறும் வகையையன்றி வேறொன்றையும் அவன் சிந்திக்க வேண்டியதில்லை. அவ்வொடுக்குஞ் சிந்தனைக்குள்ளே எத்துணைப் பிற கவலை யுலகங்கள் அமிழ்த்தப்பட்டிருக்கின்றன! அவன் நோய் என்னும் வன்கவசம் அணிந்திருக்கின்றான். துன்பம் என்னுங் கடின மான தோலாற் சுற்றிக் கட்டப்பட்டிருக்கின்றான்; தனது அனுதாபத்தை யாதோ ஒரு நூதனமான திராட்சப்பழத்தை வைத்திருப்பதுபோலத் தனக்கெனவே பூட்டிவைத்திருக்கிறான். அவன் தன்மீது இரங்குகின்றான்; தனக்குள்ளே புலம்புகின்றான்; தன்னைநினைந்து பரிதபிக்கின்றான்; தான் வருந்துவதை நினைக்க அவன் குடல்களும் உருகுகின்றன. தனது நிலைமைக்காக அழுதற்கும் அவன் நாணுகின்றானில்லை. தனக்கு எவ்வாறு நலன் செய்ய லாமெனச் சூழ்ச்சி செய்துகொண்டே இருக்கிறான்.

– **சாள் இலாம்பு.**

(5) இப்பொழுது அறைகளிலும், வாயில்களிலும் சாராள வெளிகளிலும் அலப்புவாயர் நின்று வெப்பம்மேற் கொண்டுவிட்டதென நாடோறுங் கூறித் தம்முரையாடலைத் தொடங்கி முன்னையிலுங் கூடுதலாக ஒருவரோடு ஒருவர் பேசுகின்றார்கள்; யன்னற்படல்கள் விழவிடப்படுகின்றன; கதவுகள் திறந்துவிடப்படுகின்றன; கம்பளிச் சட்டைகள் புறக்கணிக்கப்படுகின்றன; சூடான ஆகாரத்திலுங் குளிர்ந்த ஆகாரம் நன்றெனக் கொள்ளப்படுகின்றது; தேநீர் ஏன் இவ்வாறு தொடர்ந்து இளைப்பாறுகின்றது என மக்களிடையே





வியப்பு எழுகின்றது; அவர் தகழிகளில் இலற்றீசுக்கீரைகளை அரிந்து போடுவதில் மகிழ்ச்சி அடைகின்றார்கள்; தொழில்பயில்வோர் புழுதிபடிந்த வாயில்களுக்குத் தகரப் பெட்டியில் நீர் கொண்டுவந்து ஊற்றுகிறார்கள். இப்பொழுது தெருநடுவாக அசைந்தாடிச் சென்று நீர்ப்பெட்டிக்குவெளியால் நீர்த்தாரையைக் குலுக்கி ஊற்றும் நீர் வண்டி உண்மையாக யாதோ ஒன்றைச் செய்கின்றது. இப்பொழுது பழக்கடைகளும் பாற்பண்ணைகளுங் கண்ணுக்கு இன்பம் அளிக்கின்றன; பெறக்கூடியவர்களுக்குப் பனிக்கட்டி களே பொருளாய் இருக்கின்றன. இப்பொழுது பெண்கள் நீர்நிலைகளில் வீண்பொழுது கழிக்கின்றார்கள்; மக்கள் பூங்கொத்துக்களை ஒருவருக்கு கொருவர் கொடையாகப் பரிமாறுகிறார்கள்; மதுசாரம் பனிக்கட்டிகளுக்குள் இடப்படுகின்றது; தலைமையுணவு அருந்தியபின்னர் வீண்பொழுது கழிப் போன் நெடுங்கழுத்துப் புட்டிகளிலிருந்து வாசனைத் தைலத்தை எடுத்துத் தனதுதலையிற் பூசிக்குளிரச் செய்கின்றான். இப்பொழுது வீண் பொழுது கழிக்கும் அவன் தனது புதுப்பரியின்மீது இவர்தலைத் தடுக்க முடியாத வனாய் ஊர அவன் காற்செருப்புக்கள் அவனை எரிக்கின்றன. இப்பொழுது ஆண்முயற்றோல்கள் கோசரின் சட்டைக்கைகள் ஆகின்றனவல்ல. இப்பொழுது தந்தசை குறைக்க நடக்கும் போட்டிப் பரியோட்டுவோர் தம் மனத்தில் வைகின்றார்கள். இப்பொழுது அஞ்சல் வண்டியில் இருந்த கொழுத்தமனிதர் ஐவர் அவ்வண்டியில் ஆறாமவனாக ஏறவருங் கொழுத்த மனிதன் ஒருவனைக்கண்டு அவ்வாறு புடைத்திருத்தற்கு அவனுக்கு உரிமையில்லை யென்னுஞ் சிந்தையராய் அவனை வெறுக்கின்றார்கள். இப்பொழுது அலுவலகத்திலுள்ள எழுத்துவினைஞர் சோடா நீரையுஞ் சிங்காரப்பீரையும் பருகிச் செய்தி தாளைப் படிக்கின்றாரேயன்றி வேறுயாதுஞ் செய்கின்றிலர். இப்பொழுது பழைய ஆடை விற்போன் தெருவில் வெப்பம் மிக்கமை பற்றி மனிதர் நடமாடாப் பகுதிகளிலே தன் தனிக்கூப்பீட்டை முற்றாய்க் கைவிடுகின்றான். அப்பக்காரர் குணங் கெட்டாராய்த் தோற்று கின்றனர்; சமையற்காரர் துன்ப முறுகின்றனர். கிழப் பெண்கள் தம் மேன் மடிப்புச்சட்டைகளுக்கு ஊசி குத்தாதவராய் நெஞ்சு தகர்ந்த நிலைமை யோடு தள்ளாடித் தள்ளாடி நடக்கின்றார்கள்; பணிப்பெண்கள் வெப்பம்பற்றித் தாம் இழிந்தோராய்க் காணப்படுகின்றார்களென அஞ்சுகிறார்கள்; திரோ பெரிப்பழக்கலம் ஒன்றைத்தம் முன்னிலையில் வருவித்துவைத்த இவ் வாசிரியருந் தங்கட்டுரை முடிவிற்கு வந்துவிட்டார்.

– **இலே அந்து.**



RangaRakes

tamilnavarasam.com

**(6)** படிப்புக்கள் உவகை ஊட்டும்; அணியைச் சிறப்பிக்கும்; ஆற்றலைப் பெருக்கும்; உவகை யூட்டுதற்கண் ஒதுக்கத்திலுந் தனிமையிலும் பயன் மிகுத்துக் காட்டும்; அணியைச் சிறப்பித்தற்கண் உரையாடலிலே மிக்க பயன் கொடுக்கும்; ஆற்றலைப் பெருக்குதற்கண் அலுவலைத் துணிதலிலும் அதன்பகுதிகளை ஒழுங்குபடுத்தலிலும் பெரும் பயன் அளிக்கும். கைதேர்ந்த மனிதர் தங் காரியங்களை நிறைவேற்ற வல்லவர்என்பதே அதற்கு காரணம்; அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் ஒவ்வொன்றாகத் தீர்மானிக்க வல்லவர்போலும்; ஆனால், பொதுயோசனைகளுங் காரியங்களின் பீசங்களும்அவற்றை ஒழுங்குபடுத்தும் முறைகளுங் கல்விகற்றுத் தேர்ச்சி பெற்றாரிடமிருந்தே சிறப்பாக வருகின்றன. படிப்புக்களிலே நெடுநேரம் வினைக்கெடுவது சோம்பாகும்'; அணிக்காக மட்டுக்கு விஞ்சி அவற்றை வழங்கல் வெறும் ஆடம்பரமாகும்; அவற்றின் விதிகள் மாத்திரங் கொண்டு துணிதல் ஒரு பண்டிதனின் இரகசியச் செயலாகும் அவை இயற்கையை நிறைவிக்கின்றன; அனுபவத்தால் நிறைவிக்கப்படுகின்றன. அதற்குக் காரணம் இயற்கையான ஆற்றல்கள் இயற்கைத் தாவரங்கள் போலப் படிப்பாலே மட்டத்திற்கு நறுக்கப்பட வேண்டி யவை என்பதே; படிப்புக்கள் பெருந்தொகையான வழிவகைகளைப் பிறப்பிக்கின்றன; ஆயினும் அனுபவத்தால் எல்லையுறுகின்றன. வஞ்ச நெஞ்சினர் படிப்புக்களை நிந்திக்கின்றனர்; இயல்பான மக்கள் அவற்றைப் வியக்கின்றனர்; அறிவுடையோர் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தஞ் சொந்தப்பயனைக் கற்பிக்காமையே அதற்குக் காரணம்; ஆனால், அது அவையில்லாத ஓர் அறிவு; அவற்றிற்கு மேலானது; உற்று நோக்குதலாற் பெறப்படுவது. மறுக்கவாதல், கண்டிக்கவாதல் படித்தல் ஆகாது. நம்பவாதல் காரணமின்றி ஏற்றுக் கொள்ளவாதல் கல்விகற்கப்படாது; உரையாடலுக்கோ வாதத்திற்கோ கல்விகற்றல் மேற்கொள்ளப்படாது ஆனால், சீர்பார்த்துச் சிந்திப்பதற்கே கல்வி கற்கப்பட வேண்டும்.சில நூல்கள் சுவைக்கப்பட வேண்டும்: சில விழுங்கப்படவேண்டும்; மிகச் சிலவே மென்று தின்று சீரணம் பெறுமாறு செய்யப்படவேண்டும்; இவற்றைப் பிறவாறுஞ் சொல்லலாம்; சிலநூல்கள் பகுதிகளாகவே படிக்கப்பட வேண்டும்; சில நுணுகி ஆராயாதே படிக்கப்பட வேண்டும்; மிகச்சிலவே முற்றாய் முழுக்கருத்தோடு நுணுக்கமாய்ப் படிக்கப்படவேண்டும் சில நூல்கள் பிரதியாட்களாற் கற்கப்பட்டுப் பிறராற் சங்கிரகங்களாகச் செய்யப்படலாம்; ஆனால் அவ்வாறு செய்தல் சிறப்பில்லாத வாதங்களிலும் எளிய நூலினங்களிலுமே கொள்ளப்படும்; மற்று, வடித்தெடுத்த நூல்கள்





பொதுவடிநீர் போன்றிருக்கும்; அவை சுவையற்ற பொருள்களாகும். ஒருவனை வாசிப்பு நிறை மனிதனாகச் செய்யும்; அறிஞர் சங்கம் எதற்கும் ஆயத்தம் உள்ளவனாகச் செய்யும்; எழுதுதல் நிறுதிட்டமுள்ளவனாகச் செய்யும். ஆகவே, ஒருமனிதன் சிறியதாக எழுதுவானாயின், அவனுக்குப் பெரும் ஞாபகசக்தி வேண்டும்; அவன் சிறிதாக சங்கம் மருவுவானாயின், அவனுக்கு இரசிக புத்தி இருத்தல் வேண்டும்; அவன் சிறிதாக வாசிப்பானாயின், தான் சிறிதாக வாசிக்கவில்லை என்பதை அறிந்தவனாகத் தோற்றம் அளிப்பதற்கு, அவனுக்கு மிக்க சாமர்த்தியம் வேண்டும்.

**பிறான்சிசு பேக்கன்.**

**(7)** ஒழுக்கவறிஞர் ஒரு பாபச்செயலின் பருமையை அதன் மன்னிப்பின்மையோடு கூடியவரை குறைந்த அளவிற்கு மயங்கினால், அது நன்றாம். அவ்விரண்டு இயல்புகளும் முற்றாய் வேறானவை. ஒரு குற்றத்தின் பருமை அது யாவனுக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அவனின் இயல்பிலும், அதன் விளைவுகளின் பரிமாணத்திலுந் தங்கி இருக்கின்றது. அதன் மன்னிக்கப்படுந்தன்மை, மனிதனாக நின்று பேசுமிடத்து, அதனைச் செய்தற்கு அறிவுமயங்கும் அளவிலே தங்கியிருக்கின்றது. ஒருவனுக்கு வர இருக்குந் தண்டனையின் அளவை ஒருசூழல்வகை துணிகின்றது: மற்றைச் சூழல் வகை தண்டனைக் கழிவுக்குரிய உரிமையைத் துணிகின்றது. பழிகளின் சார்பளவுகளையாதல், சார்பு விளைவுகளையாதல் மதிப்பிடுதல் மனிதருக்கு எளிதன்றாதலால், அத்தகைய நுண்ணளவுகளை அளக்கும் பொறுப்பை விட்டுத் தவறுகளின் தெளிவான மற்றைத்தன்மையை அவர்கள் ஆராய்தல் பொதுவாக அறிவொடுபட்ட செயலாகும். மிகக் குறைந்த மயக்கம் பற்றிச் செய்யப்பட்ட குற்றங்களாக மிகக்கூடிய குற்றங்களாக மதிக்கப்பட வேண்டும். பிறருக்குத் துன்பம்பயத்தல், பகைசாதித்தல், தன்னயம்பற்றிக் கருத்தொடு பொய்ம்மைச் சொற்களைச் சொல்லல் என்னுங் குற்றங்களின் பருமையைக் குறைப்பதில் எனக்குக் கருத்தில்லை; எனினும், வஞ்சச் செயல்களின் இருண்ட வடிவங்களைத் தடுத்தற்குத் தம்மியல்பு சிந்திக்கப்படாதாராயுந் தாஞ்செய்த குற்றங்கள் பற்றித் தண்டிக்கப்படாதாராயும் நின்று எங்கள் வாழ்க்கையோட்டங்களிற் கலந்து நிற்பவர்மாட்டு நாங்கூடிய எச்சரிக்கையோடு விழிப்பாயிருத்தாலே மிகக்கிட்டிய வழி என எனக்குத் தோன்றுகிறது.



RangaRakes tamilnavarasam.com

நாம் ஒருபோதாயினும் பொய்ம்மைச் சொற்களைச் சொல்லல் ஆகாது. ஒரு பொய்ம்மைச்சொல் துன்பம் பயக்காதென்றும் ஒன்று புறக் கணிக்கத்தக்கதென்றும், ஒன்று நோக்கின்றிச் சொல்லப்பட்டதென்றும் எண்ணவேண்டாம். எல்லாவற்றையும் ஒருங்கு தள்ளுக; எது மிகப் பெரிது எது மிக இருண்டது என விசாரியாது எங்கள் நெஞ்சிலிருந்து அவை எல்லாவற்றையுந் தீரக்கூட்டித் தள்ளவேண்டும்; அவ்வாறு தள்ளுதலே நன்று. உறுதியொடும் நேர்மையொடும் மெய்ம்மைச் சொற்களைச் சொல் லலும் அதன்படிநடத்தலும் அச்சுறுத்தலுக்கு, அல்லது தண்டித்தலுக்கு அஞ்சி அது சொல்லல்போல ஏறத்தாழக் கடினமாயிருக்கும்; அவை ஒருவேளை அத்துணை அருந்தொழிலாயும் இருக்கலாம். ஒருவன் நாளுக்குநாள் எடுக்குஞ் சிறுபிரயாசத்தால் மெய்ம்மையைக் கடைப்பிடிக்க லாமாயினும், உலகில் எத்தனைபேர் பொய் சொல்லாவிட்டால், தஞ் செல்வம் அழியும், வாழ்க்கை கேடுறும் எனக் கண்ட அமயங்களில் மெய்ம்மை கடைப்பிடிப்பர் என்ற ஒரு வியப்பான எண்ணம் எனக்கு எழு கின்றது. எல்லாப் பாவங்களுள்ளும் பொய்ம்மைச் சொற்களைச் சொல் வதிலும் இறைவனுக்கு கூடுதலாக அறமுரணானதும் அறத்தினது நன்மை பற்றியும் உயிரினது நன்மைபற்றியுங் குறைந்ததும் யாதுமில்லை என ஒருவன் கண்டபின், அறிவொடு இருக்கும் போதாதல் மயக்கமின்றி இருக்கும் போதாதல் அவன் அழுக்குக்குள் விழுவது ஒரு வியப்பான துடுக்காகும். போக்கு என்னபோலிகளையாதல் ஆபாசங்களையாதல் பொறுக் கவோ நம்பவோ நெருங்கினாலும், யாதுந் தனது தன்னிச்சையான செயல் களின் அமைதியைக் குலைத்தல் ஆகாதென்றோ தனது தேர்ந்த மகிழ்ச்சி களின் உண்மையைக் குறைத்தல் ஆகாதென்றோ அவன் தீர்மானித் தானாயின், அவன் பிறர்மதிப்புக்குரிய மனிதன் ஆவான் என்பது துணிபு.

**யோன் இறக்கின்**

**(8)** யான் அறிந்தவரையிலே முதன்முறையாகத் துக்கவுணர்ச்சியை யான் பெற்றது எனது தந்தையார் உயிர்துறந்த தினத்திலேயே; அக் காலத்தில் எனக்கு ஐந்து வயது ஆகவில்லை; ஆனால், வீட்டிலுள்ளோர் யாவரும் என்ன கருத்துக்கொண்டு நின்றனர் என்பதை அறியாது மலைத் தேன்; ஒருவராதல் என்னுடன் விளையாடுவதற்கு இசையாததன் காரண மென்னவென உண்மையான விளக்கம் என்மாட்டு எழவில்லை. எனது தந்தையாரின் உடல்கிடந்த அறைக்குள் யான்போனதும் எனது தாயார் அதன் பக்கத்திலே தனிமையாக அழுதுகொண்டிருந்ததும் இன்னும் எனது





ஞாபகத்தில் இருக்கின்றன. என்கையில் அடிபொல்லொன்று இருந்தது; அப்பா எனக் கூப்பிட்டுக் கொண்டு பிணப்பெட்டியை அடிக்கத் தொடங் கினேன்; அவர் அதற்குட் பூட்டிவைக்கப்பட்டிருந்தாரென ஒரு சிற்றெ ண்ணம் எவ்வாறோவந்து எனது நெஞ்சத்திற் குடி கொண்டிருந்தது என்பதே எனது செயலுக்குக் காரணமாகும். எனது தாயார் என்னைத் தன்கைகளால் வாரிப்பிடித்துத் தூக்கிக்கொண்டு தன்கண்ணேயுள்ள பேசாத் துயரத்தை பொறுத்துக் கொண்டு என்னை இடம் பெயர்த்து வைத்தார்; தமது ஆலிங் கனத்தால் ஏறத்தாழ என்னை மூச்சுத் திணறச் செய்துவிட்டார்; கண்ணீர் வெள்ளத்திலே மூழ்கியவராய், எனது தந்தையார் யான் சொல்லுவன வற்றைக் கேட்கமாட்டாரென்றும், என்னோடு பின்னொரு போதும் விளையாடமாட்டா ரென்றுந் தாம் அவரைத் தரைக்குக் கீழே புதைக்கப் போகிறாரென்றும், அங்கிருந்து அவர் மறுபடி ஒருபோதும் எம்மிடம் வரமாட்டாரென்றுஞ் சொன்னார். அவர் எழினலம் வாய்ந்தபெண்; உயர்ந்த பண்பாடுடைய ஆன்மா; தன்வசமிழந்த பாழ்நிலையிலும் அவரது துயரத்தில் ஒருமாட்சிமை இருந்தது; அது எனக்கு ஒரு துன்பமான உணர்ச்சியை ஈந்ததுபோலத் தோன்றிற்று; எதனைப்பற்றி யான் விசனப்பட வேண்டுமென யான் உணரு முன்னர் எனது ஆன்மாவை அவ்வுணர்ச்சி பற்றிக்கொண்டது; அன்று தொடங்கி உருக்கமே எனது நெஞ்சின் பலவீன மாகுமாறு அது செய்து விட்டது. குழந்தைப் பருவத்து உள்ளம், எனது எண்ணத்தின்படி, கருப்பத்திலுள்ள உடல்போன்றிருக்கும்; தைக்தக்கதாய் மனப்பதிவுகளை ஏற்கும்; ஒருபிள்ளையோடு பிறந்த மறை மருந்து பிரயோகித்தும் எடுக்கப்படாதவாறுபோல அம்மனப் பதிவுகள் விவேகத் தாலே நீக்குதற்கு வன்மை மிக்கன. அதுபற்றியே என்மாட்டுள்ள நல் லியல்பு எனக்கு ஒரு சிறப்பாகா தென்கின்றேன். யான் எனது துன்பத்தின் காரணத்தை அறியுமுன்னரே, அல்லது எனது சொந்தத் தீர்ப்பிலிருந்து ஆதரவு காணுமுன்னரே எனது தாயாரினது துயரக்கண்ணீராற் பன்முறையும் அமிழ்த்தப்பட்டமையால், யான் அனுதாபம், பச்சாத்தாபம், ஆண்மையொடு படாத மனநலம் என் பவற்றைப் பெற்றேன். அன்றுமுதலாக அது என்னைப் பத்தாயிரம் இடுக்கண்களுக்குள் அகப்படுத்தி விட்டது. என்னிலுள்ள கசிவிற்குத்தக மனிதரிற் காணப்படும் மனநெகிழ்ச்சிகளுக்கு இடங் கொடுத்துச் சென்ற துன்பங்களின் ஞாபகத்திலிருந்து எழுகின்ற என்கவலை களை யான் துய்க்கலாமொழிய வேறு யாதும் நயத்தையான் அடைத்தல் முடியாதென்பது இதிலிருந்து புலனாகின்றது.

**- இரிசாட்டுதில்**





RangaRakes

tamilnavarasam.com

**(9)** திரோயின் புருவம் மிகச் சுருங்கிவிட்டது. அவன் தன் பற்களை நெருக்கமாக நிறுத்திவைத்தான். அவனுடைய அழுத்தப்பட்ட உதடுகள் யாதோஒரு பெரும் நோவால் வருந்துகின்றவனின் உதடுகள்போல அசைந்தன. இந்த ஒருமையான இடையூறு அவனிடத்து ஒரு நூதனமான மனச்சலனச் சங்கமத்தைக் கொடுக்க, அவன் அதனைத் தான் அடைந்த துன்பங்களுள்ளே மிகக் கூடியதாகக் கொண்டான். திரோயின் முகம் அடுத்துக்காட்டும் பளிங்குபோல் இருந்தது. இப்பொழுது அவனை உற்று நோக்கியவன் யாவனும் அவன் முன்னொருகாலத்திற் சிரித்தானென்றாதல், பாடினானென்றாதல், ஒருபெண்ணின் செவிகளுக்குட் காதன்மொழித் தேறலைப் பெய்தானென்றாதல் சிறிதும் நம்பமாட்டான். தன் பாழ்பட்ட நிலையை நினைந்து வைகின்றதற்கே அவன் முதன்முதலாக முடுக்கப்பட்டான்; கலகஞ்செய்யும் அக்கீழ்ப்பருவத்தை அடைதற்கும் ஒரு முயற்சி வேண்டும்; ஆனால், அவனைப் பிழிந்தாற் போல அவன்மாட்டுள்ள பிணியான துன்பம் அம்முயற்சியை எழுப்பவிடாது தடுத்தது. அத்தோற்றம் வந்த மாதிரியை நினைக்குமிடத்து அது முந்திய நாள்களின் மற்றை இருண்ட காட்சியின் மீது ஏற்றப்பட்டு அம்முழுச் சுருட் சித்திரத்திற்கும் யாதோ ஓர் ஏற்றம்போல ஆயிற்று. அது அவனாற் பொறுக்கக்கூடிய அளவிற்கு மேலாக விஞ்சிவிட்டது. இயல்பாய் வேகவுணர்ச்சி உள்ளவனாகிய அவன் தனக்கு வருந்துன்பங்களை ஒத்திவைத்தல் மாத்திரையால் அவற்றினின்றும் தப்பும் ஆற்றல் படைத்தவன்; தன்னையலைக்கும் மாயத் தோற்றங்கள்பற்றிச் சிந்தித்தலை விடயம் பழையதாகிக் காலத்தான் மென்மையாகும் வரை நீட்டி வைத்திருக்க வல்லவன். பன்னியின் சமாதியிற்பூ நாட்டியமை தனக்கு வந்த முதலாகுலத்தை விலக்குதற்கு அவன் எடுத்துக் கொண்ட ஒருவகை உபாயமாகும்; இப்போது அவனுடைய நோக்கம் அறியப்பட்டுத் தந்திரமாய் வெல்லப்பட்டதுபோல் இருந்தது.

திரோயானவன் இந்த நிர்மூலமாக்கப்பட்ட சமாதியருகிலே நின்றபோது ஏறத்தாழத் தன் வாழ்க்கையிலே முதன்முதலாகத் தான் வெறொரு மனிதனாக இருந்தால் நன்றென நினைத்தான். தனது வாழ்க்கை தனக்கே சொந்தம் என்னுஞ் செய்தி ஒவ்வொரு விபரத்திலும் உண்மையாகத் தன்னை ஒத்துநிற்கும் பிறருடைய வாழ்க்கையிலுங் கூடுதலான பலனளிக்குமென அவ்வாழ்க்கையை வேறு பிரித்துக்காட்டுந் தனி விசேடமென மிக்க விலங்குக் குணத்தொடு பொருந்திய மனிதன் அபூர்வமாய்த்தான் உணராது விடுவான். தான் தனது சொந்த நிலைமையையன்றி வேறொன்றையும்





விரும்பாதிருக்கப் பிறர் நிலைமையைத் தான் உடையனாதல் தன்னைப் பிறிதொரு தன்மையினனாகச் செய்துவிடும் என்பதை நினைந்து திரோய் மற்றை மனிதர்மீது அவர்களினுடைய நிலைமை குறித்துத் தான் பொறாமை கொள்ளல் ஆகாதெனத் தனது நிலையற்ற போக்கில் நூற்றுக் கணக்கான தடவைகளாக உணர்ந்திருந்தான். அவன் தன் பிறப்புவாசியைப் பற்றித் துக்கிக்கவில்லை; வாழ்க்கை யலைவுகளைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை; தன்னோடு தொடர்புள்ளவை எல்லாம் விண் வீழ் கொள்ளிபோலச் சந்தேகத்திற்கு இடமானவையென நினைந்து மனநோக வில்லை. காரியங்கள் எல்லாம் ஒரு வாய்ப்பான காலத்திற் சீராகி நன்கு முடிவடைதல் பொருளியல்பென அவனுக்கு ஒரு தோற்றம் இருந்தது.

**- தோமசு ஆடி.**

**(10)** அத்தியட்ச குருமாருக்காக வாதித்த நியாயவாதி நடுவர் ஆலோசனை செய்யும் அறைக்குச் செல்லும் படிக்கட்டுகளில் ஒரு தொகை வேலைகாரரோடு இரவு முழுவதையுங் கழித்தனர். வாயில் காப்போரை மேற்பார்வை செய்வதற்கு அது மிக வேண்டியதாயிற்று. அவ்வாயில் காப்போர் அரசனைச் சார்ந்தோராகக் கருதப்பட்டனர். அவர்கள் கவனமாகக் கண்காணிக்கப்படாவிடின் அரசனின் எண்ணத்தோடொப்பத் தண்டனை விதிக்குமாறு தீர்ப்பளித்த நடுவனுக்கு மாத்திரம் உணவளித்து அதனாலே மற்றைப் பதினொருவரையும் பட்டினிபோடவுங்கூடும். ஆகையால், கடுங்காவல் வைக்கப்பட்டது. சுங்கானைப் பற்றவைக்கும் ஒரு மெழுகுதிரிதானும் உள்ளே கொண்டு செல்வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. ஏறத்தாழக் காலை நாலு மணிக்கு நடுவர்குழு முகம் கழுவதற்காக நீர் நிறைந்த சில பாத்திரங்கள் மாத்திரம் உள்ளே கொண்டு செல்வதற்கு இடங்கொடுக்கப்பட்டது. தாகத்தால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அவர்கள் அந்நீர் முழுவதையும் பருகிவிட்டனர். பெருந்தொகை மக்கள் கூட்டங்கூட்டமாக ஞாயிறு காலிக்கும்வரை அருகிலுள்ள வீதிகளில் உலாவிக்கொண்டு நின்றனர். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வைற்றோலிலிருந்து ஒரு தூதுவன் என்ன நடைபெறுகின்றதென அறிதற்கு வந்தான். கடும் வாக்குவாதக் குரல்கள் அவ்வறைக்குள்ளே மீட்டும் மீட்டுங் கேட்கப்பட்டன. ஆனால், யாதொன்றும் நிச்சயமாய் அறியப்படவில்லை.



RangaRakes
tamilnavarasam.com

முதலில், ஒன்பதின்மர் எதிரிகளைக் குற்றமிலிகள் என்னும் மூவர் அவர்களைக் குற்றவாளிகள் என்றும் வாதித்து நின்றனர்; பின்னர் அச் சிறுபான்மையோருள் இருவர் மற்றைப்பக்கத்தாரின் முடிபுக்கு இடங் கொடுத்தனர்; ஆனால், ஆணோல் என்பவன் பிடிவாதமாய் நின்றான். பெருங் காணிபடைத்த நாட்டுப் பெருமகன் தோமசு ஒசுத்தின் என்பவன் சான்றுகளையும் பேச்சுக்களையும் மிக்க அவதானத்தோடு கேட்டு முழு வதையுங் குறித்துக்கொண்டவனாய் ஆணோலோடு அப்பிரச்சினையை வாதிக்க விரும்பினான். அதற்கு ஆணோல் மறுத்துவிட்டான்: நியாயம் பேசவோ வாதிக்கவோ தனக்குப் பழக்கமில்லையென்று விடாப்பிடியாய் நின்றான். தனது மனச்சாட்சி திருத்திப்படவில்லை; தான் அத்தியட்ச குருமாரைக் குற்றமிலிகளெனத் தீர்த்தல் முடியாதெனக் கூறினான். அதற்கு ஒசுத்தின், "நீ இத்தகை முடிபுக்கு வருவாயெனின், என்னைப்பார்; யானே இப்பன்னிருவருள்ளும் பெரியவனும் பலவானுமாய் இருக்கின்றேன்: இது எனக்கொரு பழிச்சொல்லாகும் முன்னர், ஒரு சுங்கானளவிலுங் கூடுத லில்லாத மெலியவனாகும்வரை யான் இங்கேயே நிற்பேன் என்பதை அறிந்துகொள்," என்றான். காலை ஆறுமணிக்கே ஆணோல் மனமிளகினான். உடனே நடுவர் யாவரும் ஒருதீர்ப்புக்கொண்டனர் என்பது எல்லோருக்குந் தெரிந்ததொரு விடயமாயிற்று: ஆனால் தீர்ப்பு இன்னதென்பது இன்னும் இரகசியமாகவே இருந்தது.

பத்துமணிக்கு நீதிமன்றம் மீண்டுந் தொடங்கியது. என்றுமில்லாத வாறு மக்கட்கூட்டம் அதிகரித்தது. நடுவர் தமது இருப்பிடத்திலே தோன்றினர்; அங்கே மிக்க அமைதி நிலவியது.

சேர் சமுவல் அத்திரி என்பவர், "தவறாய் நடந்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்ட இவ்வெதிரிகளுள் அனைவரிலுமா, அன்றி ஒருவரிலா குற்றங் காண்கின்றீர்கள்? அல்லது, அனைவருங் குற்றமிலிகளெனக் கொள்ளுகின்றீர்களா?" என்றனர். அதற்குச் சேர் உறோகர் இலாங்கிலி என்பவர், "அவர்கள் குற்றமிலிகள், " என விடையிறுத்தனர். அச்சொற்கள் அவரது உதடுகளினின்றும் வெளிவந்ததும் அலிபாட்சு என்பவர் துள்ளியெழுந்து தமது தொப்பியை ஆட்டினர். அக்குறிப்பை உணர்ந்து அவ்வரங்கில் உள்ளோர் யாவரும் பேராரவாரஞ் செய்தனர். ஒரு கணப்பொழுதில் அப் பெரிய மண்டபத்திற் குழுமியிருந்த பத்தாயிர மக்களும் பழஞ்சிந்தூரக் கூரை தகர்ந்து விழத்தக்கவாறு பேரிரைச்சலிட்டனர்.

- பிரபு மக்கோலே.





**(11)** அவ்வேரியின் கரைப்பக்கமாய்ப் போனபொழுது, அக்கரையில் நீர் ஒழுகும் மதகுவாய் கட்டப்பட்டிருந்தது; அவ்வேரி இருக்கும் இடமுங் கடற்பாறையுள்ள நிலம்; அதன் கண்ணும் நீர் ஓயாமல் ஊறி மதகு வழியாய்ச் சென்று அப்பக்கத்திலுள்ள வயல்களிற் பாய்கின்றது. அவ் வயலெங்கும் நென்முளை தோன்றி இலை விரிந்து பச்சைப் பசேலென்று ஒரே பரவலாயிருந்தது. அவ்வேரியின் கரை மருங்கில், தென்னந்தோப்புக்கள் மிகக் கொழுமையாய் இருந்தன; சில மரங்களிற் சிவப்பான இளநீர்க் குலைகளுஞ் சில மரங்களிற் பசுமையான இளநீர்க்குலைகளுந் தொங்கின; ஏறக்குறைய ஒவ்வொரு தெங்கிலும் மிளகு கொடிகள் சன்னல் பின்னலாய்ப் பிணைந்து ஏறிப் படர்ந்திருந்தன. இவ்வாறு செழிப்பாய்த் தோன்றும் அத் தென்னந்தோப்புக் கடந்து அப்புறஞ் செல்லக் கற்பாறைகள் எங்குஞ் சிதறிக்கிடக்கும் ஆலமரத் தோப்புக்கள் கட்புலனாயின. வான் அளாவி அடிபெருத்து முடிபரந்த அவ்வால மரங்களை நோக்கும்போது என் னுள்ளத்தில் அச்சந்தருவதான ஓர் எண்ணந் தோன்றிற்று. மிகப் பழைய வாய்ப்பான ஆலமரங்களை அவற்றின் கோடுகளிலிருந்து கீழ் இறங்கும் விழுதுகள் நிலத்தில் ஊன்றித் தூண்கள் போலத் தாங்கிக் கொண்டிருந்தன. அம்மரங்களின் பொந்துக்களிற் கொவ்வைப் பழம்போல் அலகு சிவந்து மேனி எல்லாம் பச்சென்றிருக்கும் அழகிய பேட்டிளங் கிளிப் பிள்ளைகள் தாம் பொரித்த குஞ்சினங்களுக்குப் பழங்களைக் கோதிக்கோதி இரை யூட்டின; ஆண்கிளிகளிற் சில வளார்களில் ஒற்றைக் காலைத் தூக்கிச் சிறு துயில் கொண்டிருந்தன; சில சீழ்க்கை அடித்தன. இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு அப்புறம் போகப்போகக் கருகலாய் ஒன்றன் மேலொன்று அடுக்கடுக்காய் ஒழுங்கின்றி விலங்கிக்கிடக்கும் மலைகள் தோன்றின. அம்மலைகளிற் சிறுத்தைப் புலிகளும் ஓநாய்களும் மிகுதியாக உள்ளன என்று அங்குள்ளோர் சிலர் சொல்லக் கேட்டமையின் அங்குப் போவதற்கு அஞ்சி மறித்தும் யானிருக்கும் மாளிகை வந்து சேர்ந்தேன்.

வந்துசேர்ந்தபின் நான் காலையிற் கண்ட குறிஞ்சி நிலவளங்களை நினைந்து நினைந்து மகிழ்ந்து, இவைதம்மை நிலவியற்கை பொருந்தக் கண்டுபாடும் நல்லிசைப் புலவர்களான கபிலர், நக்கீரர் முதலான ஆசிரியர் அருளிச் செய்த அருமைத் திருப்பாட்டுகளுடன் ஒத்துப்பார்த்து அவை மிகப் பொருட்பொருத்தம் உடையனவாய் விளங்குதல்கண்டு வியந்தேன்.

- மறைமலையடிகள்

**(12)** அவ்வண்ணங் கம்பர் சேரனிடத்திலிருக்கச் சோழன் நெடுநாளாகக் கம்பர் முகத்தைக் காணாமையால், தன்முகத்தைக் காணாத சிசுப்போலவும்,



RangaRakes

tamilnavarasam.com

மழைமுகத்தைக் காணாத மயில்போலவும், கணவர் முகத்தைக் காணாத கற்புடைமடவார் போலவும், போர்முகத்தைக் காணாத சுத்தவீரர்போலவும், கொடுப்போர் முகத்தைக் காணத இரப்போர்போலவும் ஏக்கமுற்று, "ஐயோ! நான் தீர்க்காலோசனை பண்ணாமலுஞ் சிறிதாயினுந் தாட்சணியஞ் செய்யாமலுங் கண்டித்துப்பேசி, எனது தேசத்தைவிட்டுப் போய்விடும் என்றதனாலன்றோ வித்துவரத்தினமாகிய கம்பர் என்சமுகத்தை விட்டு விலகிப் போனார்? இனி என்றைக்கு அவர் முகத்தை நான் காண்பேன்! அவர் இல்லாதசபை தாமரை இல்லாத தடாகமுஞ் சந்திரன் இல்லாத வானமும் நதி இல்லாத நாடுந் துதி இல்லாத நாவும் ஞானம் இல்லாத கல்வியுங் கற்பு இல்லாத பெண்டிருந் தெய்வத்தியானம் இல்லாத நெஞ்சும் புத்திர பாக்கியம் இல்லாத இல்வாழ்க்கையுஞ் செங்கோலரசன் இல்லாத நகரமும் போலச் சிறப்பு இழந்திருக்கின்றதே! அவர் எங்கே போனாரோ! எவ்விடத்தில் இருக்கிறாரோ! இன்ன தேசத்தில் இருக்கிறாரென்று எந்த மகானுபாவனாவது வந்துசொல்லக் கேட்பேனோ! என்று தன்சபையாருடனே சொல்லித் துக்கப்பட்டு அட்டத்திக்கிலுமுள்ள அவ்வத்தேசங்களுக்குத் தூதர்களை அனுப்பிப் பலநாள்களாகத் தேடியுஞ் செய்தி தெரியாது தடுமாறிப் பின்பு தெய்வகதியாய்ச் சேரவரசனுடைய சபையில் இருக்கிறாரென்று சிலர் வந்து சொல்லக் கேல்விப்பட்டு, அதை உள்ளபடி தெரித்துக் கொண்டு, "இந்த நிருபங்கண்ட நாழிகைக்குத் தயைசெய்து வரவேண்டும்," என்று கம்பருக்கு ஒரு நிருபமும், "தாமதம் இல்லாமல் எப்படியாவது நீர் கிருபைக்கூர்ந்து கவிச் சக்கரவர்த்தியாராகிய கம்பரை அனுப்பிவைக்க வேண்டும்" என்று சேரனுக்கு ஒரு விண்ணப்பமும் எழுதி ஓர் ஆளிடம் அனுப்பினான்.

கம்பர் சோழன் தமக்கு எழுதிய நிருபத்தைச் சேரனுக்குக் காட்டி, "சோழவரசனிடத்திற் போக நமக்கு அனுமதி கொடுத்து அனுப்ப வேண்டும் என்னச் சேரனுந் தனக்குச் சோழன் அனுப்பிய கடிதத்தைக் கம்பருக்குக் காண்பித்து, "நீர் இங்குச் சிலகாலம் வந்து வசிக்கும்படி நேரிட்டது யார் செய்த புண்ணியமோ!" என்று "இப்பொழுது நீர் திடீரென்று பிரிந்து போக வேண்டி வந்தது எனது நீர்ப்பாக்கியந்தானோ!" என்றும், "சேர்ந்திருந்தமையால் என்சபை இந்திரசபைபோலச் சிறப்புற்றிருந்ததே!" என்றும், "நீர் நீங்கிவிட்டால் இனி அது மனையாளில்லாத இல்லம்போல அழகிழந்திருக்குமே!" என்றும், "உம்மைபோல எனக்குச் சாதுரியமாகவுஞ் செவிக்கு இன்பமாகவும் இராமாயணம் பிரசங்கஞ் செய்வார்கள் வேறே யார் இருக்





கின்றார்கள்," என்றும், எனக்கு இத்தனை கோரமான துக்கஞ் சம்பவித்ததே!" என்றும் விசனப்பட்டான்.

**வினோதரசமஞ்சரி.**

**(13)** உலகம் நாடோறும் மாறுதலடைந்து வருகிறது, மரங்கள் வளர்கின்றன; சாய்கின்றன. விலங்குகள் பிறக்கின்றன; சாகின்றன. மனிதனும் பிறக்கிறான்; இறக்கிறான் தாவர முதல் மனிதன் ஈறாக உள்ள பொருள்கள் எல்லாந் தோன்றி மறைவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இறப்பும் பிறப்பும் இவ்வுலகில் என்றும் நிகழ்ந்தது கொண்டிருக்கின்றன. இறப்பு நிற்குங்காலமும் பிறப்பு நிற்குங்காலமும் உண்டோ என்னும் ஆராய்ச்சியும் உலகத்தில் நடைபெறுகிறது. உலகத்திற் சின்னாள் வாழ்ந்து மறையும் மக்கள் நினைப்பனவும் பேசுவனவுஞ் செய்வனவும் அளப்பரியனவாம். மனிதன் ஆகாயக்கோட்டையைக் கட்டிக்கட்டி அழிகிறான். குறையின்றி வாழும் மக்களைக் காண்டல் அருமை.

குறையுடைய மனிதன் தன் குறையை நிறைவு செய்தற்கு எண்ணாத எண்ணங்களை எண்ணி ஏங்கி முடிவில் இறந்துபோகிறான். உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் எண்ணும் எண்ணம் ஆகாயம்போல் விரிந்து நிற்கின்றது. இவ்வளவு எண்ணங்களை எண்ணும் இவன் எங்கே செல்கிறான்? அந்தோ!

உலகத்தில் மனிதன் எதற்காகப் பிறந்தான்? வீணான எண்ணங்களை எண்ணி இறந்துபடவோ? இறந்துபடவே மனிதன் பிறந்தான் என்று சொல்லல் முடியாது. வேறொரு காரணத்துக்காகவே மனிதன் பிறக்கிறான். அக்காரணத்தை ஆராய்ந்து காண்டல் வேண்டும். அவ் வாராய்ச்சி செய்து காரணங்கண்ட முன்னோர் வரலாற்றையும் அவர் தம் அனுபவ மொழிகளையும் நோக்கல் வேண்டும். புத்தர், கிறீத்து, மகம்மது, திருவள்ளுவர் முதலிய பெரியோர் உலகத்திற்கு என்ன அறிவு றுத்தியிருக்கிறார்? "மனிதன் மரம்போல வளர்ந்து மாள்வதற்குப் பிறக்கவில்லை" என்னுங் கருத்தைப் பலமுகமாகக் காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு அவர் வெளியிட்டுளர். அவர் கருத்துவழி நடந்தால், மனிதன் தன் பிறப்பு நோக்கத்தை உணர்வான்.

**- திரு. வீ. கலியாணசுந்தரன்.**



RangaRakes

tamilnavarasam.com

**(14)** இதுவரையும் இவ்வியாழ்ப்பாணத்திலே திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்கள் எவையோ! வாணங்கள் பட்டு வீடுகள் எரிந்ததும், பந்தல்கள் எரிந்ததும், கோயில்கள் எரிந்ததும், பலருக்குத் தலை உடைந்ததும், கைமுறிந்ததும், கால் ஒடிந்ததும், குடல் சரிந்ததும், மரணங் குறுகியதுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பல பெண்டிர்கள் சனநெருக்கத்திலே சோரர்கள் கைப்பட்டுத் தங்கள் ஆபரணங் களை இழந்ததும், இரவலாபரணங்கள் இழந்து, போன முயல் பெருமுயல் என்றாற் போல' உடையவர் விதித்த விலைப்படி இருமடங்கு இறுத்ததும், தூர்த்தர்கள் கைப்பட்டுக் கற்பழிந்ததுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பற்பலர் இராத்திரியிலே குடும்பத்தோடு வீடுவிட்டு நீங்கிவிட, அவர்கள் வீடெரிதலும், களவுபோயதுந் திரு விழாக் களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பல சிறு பிள்ளைகள் சன நெருக்கத்தாலே தங்கள் கைப்பற்றிய பிதாமாதாக்களைப் பிரிந்து அழுதழுது தங்கள் கால் கை கழுத்துக்களில் உள்ள ஆபரணங்களைப் பறிகொடுத்துத் தேம்பித் தேம்பி வீடுசேர வழியறியாது மயங்கித் திரிந்ததும், அவர்கள் பெற்றார்கள் தலைமுட்டியும் மாரடித்தும் அவர்களைத் தேடித்தேடி அலைந்ததுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பற்பலர் கல்லெறியுண்டு தடியடியுண்டு கத்திவெட்டுண்டு தலையுடைந்து காலொடிந்து கை முறிந்து கோட்டுக்குத்திரிந்ததும், தாங்கள் வருந்தித் தேடிய பொருளைப் பிறக்கிறாசிமாருக்கு வலிந்துபோய் இறுத்துவிட்டு, அவர்கள் கைப்பற்ற வேண்டியதெல்லாங் கைப்பற்றிக்கொண்டபின், முடிவிலே, "நீங்கள் சமாதானமாய் விடுங்கள், 'என்று தங்களுக்கு விதிக்கத் தாங்கள் மறுக்க, அவர்கள் மூலரோககயரோக சலரோகங்களினாலே தங்கள்மேலே நாய் போல விழுந்து சள்ளிடத் தாங்கள் எதிர்பேசப் பயந்து மொறு மொறுத்துக் கொண்டு திரும்பி வெளியில் வந்து, மனம் புழுங்கி மண்ணள்ளித் திட்டித் திரிந்ததுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ!

**- ஆறுமுகநாவலர்.**

**(15)** கல்வி கல்லாதவனுங் கடமை செய்யாதவனுமாகிய ஒரு புத்திரனைப் பெற்றதினால் என்னபயன்? குருடாகிய கண்ணாற் பயன்யாதும் இல்லையே. அது கண்ணுக்குப் பீடையையே தரும். பிறவாத மகன், பிறந்தமகன், மூடமகன் என்னும் இவருள் முன்னைய இருவரும் விரும்பத் தக்கவர்; பின்னையோன் விரும்பத்தக்கவனல்லன். முன்னைய இருவரும் ஒருமுறையே மனத்திற்குத் துன்பம் தருவர்; பின்னையோன் கணந்தோறுந்





துன்பம் விளைப்பன் என்பதே அதற்குக் காரணம். இன்னும், தன்பிறப்பாலே தன்குலத்தை உயர்த்துபவனே உண்மையாகப் பிறந்தவன் எனப்படுவான். இந்த மாறும் உலகத்தில் யார் இறவாது இருப்பவர்? யார் மறுத்தும் பிறவாதிருப்பவர்? நற்குணமுள்ள மக்களினது தொகையை எண்ணப்புகு மிடத்துச் சிறுவிரல் விரைவாய் மடங்காத பிள்ளையினது தாயானவள் ஒரு புத்திரனைப் பெற்றாளென்று சொல்லப்பட்டாளெனின், அவள் ஒரு மலடிக்கே நிகராவள். தானம் தவம், வீரம், கல்விச்செல்வம், பொருட் செல்வம் என்னும் இவற்றிற் புகழ்பெறாத ஒருவன் தனது தாயின் உச்சிட்ட மேயாவன். அன்றியும், நூறுமூர்க்கரைப் பெறுவதிலும் ஒரு சற் புத்திரனைப் பெறுவதுநன்று; தனிச் சந்திரன் இருட்டை நீக்குகின்றது; நட்சத்திரக் கூட்டம் முழுவதுஞ் சேர்ந்தும் அதனை நீக்குவதில்லை. யாதோ ஒரு புண்ணிய தீர்த்தத்திற் செய்தற்கரிய தவத்தைச் செய்த ஒருவனுடைய புத்திரன் படிவும், செல்வமும், அறமும், விவேகமும் உள்ளவன் ஆவான். செல்வப் பெருக்கம், நோயின்மை, இன்சொல், அன்புள்ள மனைவி, படிவுள்ள மகன், செல்வந்தருங் கல்வி என்னும் இவ்வாறும் இவ்வுலகத்து மக்களுக்கு மகிழ்ச்சி தருவன. பண்டசாலையை நிரப்பும் நாழிபோன்ற புத்திரர் பலரைப் பெறுவதினால் யார் நன்மதிப்புப் பெறுவார்! தனது தந்தைக் குப் புகழை ஈந்து தன்குலத்தைத் தாங்கி ஆதரிக்குந் தனிப் புத்திரனைப் பெறுதல் நன்று. கடன்படுகின்ற ஒருதந்தை சத்துரு; அவ்வாறே வியபிசாரஞ் செய்கின்ற தாயும், அழகு படைத்த மனைவி சத்துரு. அவ்வாறே கல்விகல்லாத புத்திரனும். இடைவிடாத படிப்பாலே தொடரப்படாத கல்வி நஞ்சு; அசீரணங்கண்டபின் உண்ணப்படும் உணவு நஞ்சு; வறியவனுக்கு ஒருபொதுச்சபை நஞ்சு; விருந்தனுக்கு இளம்மனைவி நஞ்சு. நற்குணம் வாய்ந்த ஒருவன் எக்குலத்திற் பிறந்தாலும் மதிக்கப்படுகின்றான். குற்றமில்லாத மூங்கிற்கோலாற் செய்யப்பட்டாலும் நாணில்லா வில்லாற் பயன் என்னே! அந்தோ! இரங்கத்தக்க பிள்ளையே, சோம்பல் வாழ்க்கையைச் செலுத்துகின்றாயே; சென்றகாலங்களில் அறிவைத் தேடவில்லையே; அதனாலே கற்றோர் அவையிற் சேற்றிற் புதைந்த பசுப்போலத் துன்பம் உறுகின்றாயே!

**- இதோபதேசம்.**



RangaRakes
tamilnavarasam.com

## அதிகாரம் 18

# வாக்கிய அமைப்பும் பந்தி அமைப்பும்

**260.** உரை வடிவிலுள்ள நூல்களை ஆராய்ந்தால், அவை அதிகாரங்களாகவும், ஒவ்வோர் அதிகாரமும் முதல்வரி சற்றே வலப்புறத்திலிருந்து தொடங்கும் பந்திகள் எனப்படுஞ் சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருத்தல் காணப்படும். ஒவ்வொரு பந்தியும் ஒரு வாக்கியத்தாலேனும் பல வாக்கியங்களாலேனும் ஆக்கப்பட்டிருத்தலுங் காணப்படும்.

### I. வாக்கியவமைப்பு

**261.** நல்ல கட்டுரைகள் எழுத வேண்டுமாயின், நல்ல வாக்கியங்களை எழுதும் பயிற்சி வேண்டும். ஒருமைப்பாடு. தெளிவு, வேறுபாடு என்னும் இயல்புகள் உள்ளனவே நல்ல வாக்கியங்களாகும் என அறிதல் வேண்டும்.

(அ) **ஒருமைப்பாடு:** ஓரெண்ணமேபற்றி எழுந்த வாக்கியம் ஒருமைப்பாடு என்னும் இயல்புடையது எனப்படும்.

**(i)** இலங்கைத் தமிழர் இலங்கையிலே தந் தாய்மொழியாகிய தமிழுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் நிலையை உணர்ந்தும் இனித் தமக்கு வரவிருக்குந் துன்பங்களை நோக்கியுங் கவலை கொள்கிறார்கள்.

இவ்வாக்கியம் ஓரெண்ணமேபற்றி எழுந்தமையால் இதன்கண் ஒருமைப்பாடு என்னும் இயல்பு இருத்தல் காண்க.

**(ii)** திரு. அ. இ. மருதனார் தமிழருக்கு வாய்ப்பான தொண்டர்; அவர் தேவைப்பட்ட வேளைகளில் உணவு அருந்துவர்.

வாய்ப்பான தொண்டராயிருந்தாலும் உணவருந்துதலும் இசைவில்லாத இரு வேறு இயல்புகளாதலால், இதன்கண் ஒருமைப்பாட்டுப் பங்கம் இருத்தல் காண்க.

(ஆ) **தெளிவு:** ஒரு வாக்கியத்திலுள்ள சொற்கள் பொருள் எளிதில் விளங்குமாறு சிறந்த ஒழுங்கில் இருந்தால், அது தெளிவு என்னும் இயல்புடையது எனப்படும்.





**(i)** அவன் பிழை செய்தானென்று விளக்கமாகச் சொன்னேன். இதன் கண்ணே தெளிவென்னும் இயல்பிருத்தல் காண்க.

**(ii)** விளக்கமாக அவன் பிழை செய்தானென்று சொன்னேன். இதன் கண்ணே 'விளக்கமாக' என்னுஞ் சொல் பிழை செய்தலுக்கும் அடையாய்க் கொள்ளலாமாதலால், தெளிவுப் பங்கம் இருத்தல் காண்க.

(இ) **வேறுபாடு:** ஒரு வாக்கியத்தில் அழுத்தம், சமநிலை, சந்தம் என்னும் இயல்புகள் இருந்தால், அது வேறுபாடு என்னும் இயல்புடையது எனப்படும்.

**அழுத்தமாவது** சுருக்கமாய்ச் சொல்லுதலாலும், அடுக்குச் சொற்பிரயோகங்களாலும், சொல்லொழுங்கு மாற்றங்களாலும், வாக்கியங்களை உணர்ச்சி மிகுதி வாக்கியங்களாகவாதல் வினா வாக்கியங்களாகவாதல் மாற்றுதலாலும் பெறப்படும்.

**(i)** "அவனை அழைக்க" என்பது சுருக்கம்பற்றி அழுத்தம் என்னும் இயல்புடையதெனப்படும். அவ்வாறு சொல்வதற்குப் பதிலாக, "பொதுவாக ஒருவேளை அவனை அழைத்தால் அது புத்தியொடு பட்ட காரியமாகலாம்', எனக் கூறின் அழுத்தம் பெறப் படாமை காண்க.

**(ii)** தமிழர் ஒருபோதும் தம்மொழிப்பற்றுக் குறையார். இங்கு அடுக்குச் சொற் பிரயோகத்தால் அழுத்தம் பெறப்பட்டமை காண்க.

**(iii)** சீறிச்சீறி அழுதுகொண்டு ஓடிற்று அக்குழந்தை. இங்கு சொல் லொழுங்கு மாற்றத்தால் அழுத்தம் பெறப்பட்டமை காண்க.

**(iv)** "அவன் அடாத கொடும்பழியைச் செய்தான்;" என்பதற்குப் பதிலாக " அவன் எத்துணை அடாத கொடும் பழியைச் செய்தான்! எனக் கூறின், உணர்ச்சி மிகுதி வாக்கியமாக மாற்றியமைபற்றி அழுத்தம் பெறப்பட்டமை காண்க.

**சமநிலை** என்பது அழுத்தம் பெறவேண்டிய சொற்களைத் தக்க இடங்களில் வைப்பதாலுங் கருத்தறிவிக்கத்தக்க சொற்களை வழங்குவதாலும் பெறப்படும்.

**(i)** இருப்பது பொய்; போவது மெய்.

**(ii)** பொருளாற் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கு இல்லை;



RangaRakes tamilnavarasam.com

அதுபோல, அருளாற் பயனன்கோடல் ஊன்றின்பவர்க்கு இல்லை. அவ்வாக்கியங்களிற் சமநிலை இருத்தல் காண்க.

**சந்தம்** என்பது மோனை முதலாயினவற்றைக் கையாளுதலாலும் ஓசை நயம்படச் செய்தலாலும் பெறப்படும்.

(i) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
(ii) முதிரும் அறிவில் அறிஞர் உணரும் முதல்வ தருக முத்தமே.

இவ்வாக்கியங்கள் சந்தத்தால் அழகுபெற்றமை காண்க.

### இயல்பு வாக்கியங்களும் ஆவர்த்தன வாக்கியங்களும்

**262.** **இயல்பு வாக்கியமாவது** எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்னும் ஒழுங்கில் வருவது.

**ஆவர்த்தன வாக்கியமாவது** சிறந்த எண்ணம் பின்னும் விசேடிக்கும் விவரங்கள் முன்னுமாக வருவது.

(i) யான் ஒரு தனி மனிதனைக் கடற்கரையிலே தூரத்திற்கண்டேன். இது எழுவாய், செய்யப்படுபொருள், பயனிலை என்னும் ஒழுங்கில் வருவதால் இயல்பு வாக்கியம் எனப்படும்.
(ii) ஆற்றங்கரையிற் சோலை ஒன்றுக்கு நடுவேயுள்ள ஒரு வெளியிலே தனது தலையை நிமிர்த்திக்கொண்டு நின்றது ஒரு கலைமான். இதன் கண்ணே சிறந்த எண்ணம் பின்னும் விசேடிக்கும் விவரங்கள் முன்னுமாக வருதலால், இது ஆவர்த்தன வாக்கியமெனப்படும்.

**263.** இயல்பு வாக்கியங்கள் எளிமையும் இயற்கையுமானவை; உரையாடலிலுங் கதை சொல்லுதலிலும் வழங்கப்படும். ஆவர்த்தன வாக்கியங்கள் கூடுதலான இலக்கியத்தொடர்பும் முடுக்குங் கொண்டவை; கட்டுரைகளிற் பெரும்பான்மை வழங்கப்படும். இயல்பு வாக்கியமிகுதி நடையலைவையுந் திருத்தமின்மையையுந்தரும்; ஆவர்த்தன வாக்கிய மிகுதி நடையோசை யொருமையிளைப்பையும் ஆடம்பரத்தையுந் தரும். இரண்டையுஞ் செம்மைப்படக் கலந்தெழுதுதல் கட்டுரைகளைச் சுவைப் படுத்தும்.





### நீண்ட வாக்கியங்களுங் குறுகிய வாக்கியங்களும்

**264.** நீண்ட வாக்கியங்கள் ஒத்தபல செய்திகளோடு கூடிய எண்ணங் களைப் புலப்படுத்தற்குங் கட்டுரைக்கு மாட்சிமை கொடுத்தற்கும் பயன் படுவன. குறுகிய வாக்கியங்கள் வேகவுக்கிரங்களை விவரித்தற்கு மிக்க பயன் அளிப்பன.

மாணாக்கர் பிழையின்றிப் பேசுதற்கும் எழுதுதற்கும் பொதுவாகக் குறுகிய வாக்கியங்களையே வழங்கல் வேண்டும்; பயிற்சி மிகுந்தபின்னர் நீண்டவாக்கியங்களையுங் கலந்து பிரயோகிக்கலாம்.

**பயிற்சி 55**

**1. பின்வரும் வாக்கியங்களின் சிறப்புக்களை ஆராய்க:**

(அ) வாயில் வந்தன வந்தனபேச எங்குக் கற்றீர்?
(ஆ) பணமுடையவர் அறிவில்லாவிடத்துப் பாவமே தேடிக்கொள்வர்.
(இ) எப்பொருளும் எல்லாருக்கும் நல்லதுமன்று; எல்லாருக்கும் பொல் லாததுமன்று.
(ஈ) கள்வன் ஒருவன் அள்ளற்பள்ளத்தில்வீழ்ந்து தன் முள்ளந் தண்டை முறித்துக்கொண்டான்
(உ) தெரியாது நீ வந்துவிட்டாயென்று நான் சொன்னேன்.
(ஊ) உண்டு கொழுத்தால், நண்டு வளையில் இராது.
(எ) வேதனம் வாக்கிக்கொண்டு இவர் எவருக்காவது கல்வி கற்பித்த தில்லை.
(ஏ) முறத்தடிபட்டாலும் முகத்தடி படலாகாது,
(ஐ) அப்பிள்ளை பால்குடிக்க மறுத்தால் அதுநன்கு காய்ச்சப்படல் வேண்டும்,
(ஒ) காண்பன மெய்யுமன்று; காணாதன பொய்யுமன்று.

**2. மேல்வரும் வாக்கியங்களைக் கூடிய அழுத்தவடிவில் எழுதுக:**

(அ) யான் ஒருபோதும் அங்குச் செல்லமாட்டேன்.
(ஆ) அவன் ஒரு நல்ல மனிதன்.
(இ) எங்களிடம் பணம் இல்லை.
(ஈ) கந்தன் பாவச்செயல் செய்பவனல்லன்.



RangaRakes tamilnavarasam.com

(உ) அவன் கெட்டகாரியங்கள் செய்தலைப் பலமுறை கண்டிருக்கின்றேன்.

(ஊ) கடன்படாதவர் உலகில் இல்லை.

3. கீழ்க் காணப்படும் உரைப்பகுதிகளிலுள்ள வாக்கியங்கள் எல்லாங் குறுகியவை: அவற்றுட் சிலவற்றை நீண்ட வாக்கியங்களாக மாற்றி அவ்வுரைப் பகுதிகளைச் சிறப்பிக்க:–

(அ) பூனை வீட்டுவிலங்குகளுள் ஒன்று. இலங்கையிலுள்ள பூனைகள் பேசியாதேசத்துப் பூனைகள் போற் சிறந்தனவல்ல. பேசியாப் பூனைகள் பெரும்பணங் கொடுத்து வாங்கப்படும். பூனை ஊனுணவு தின்னும்; புலிபோன்ற தோற்றம் அளிக்கும்; சத்தமின்றி அசையும்; விரைவாய் ஓடும்; எலி பிடிக்கும் இயல்பிருக்கின்றமையால் மனிதனுக்குப் பயன்படும்.

(ஆ) உப்புக் கடலுப்பு மலையுப்பு என இருவகைப்படும். முன்னது கடனீரிலிருந்து எடுக்கப்படும். பின்னது சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படும். உப்பு வாழ்க்கைக்குத் தேவையானபொருள். உப்பின்றி உணவு சுவைக்காது. உப்புத் தாவரப் பொருள்களிலும் உண்டு.உப்பை நீக்கியுண்டால் உடல்மெலியும். உப்பை மட்டுக்குவிஞ்சி வழங்கினால் நெஞ்சுநோய் கூடுதலுறும். அளவாய் வழங்கல் இன்பவாழ்க்கைக்கு ஏதுவாகும்.

## II. பந்தியமைப்பு

265. **பந்தியாவது** ஒரு பொருளின் ஒருதுறை கூறும் வாக்கியத்தொகுதி. ஒருபொருள்பற்றி எழுந்த ஓர் உரையினத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பலபந்திகள் இருக்கலாம். விளக்கம் எளிதாகும்பொருட்டு உரையினங்கள் எல்லாம் பந்திகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒரு பந்தியிலிருந்து மற்றைப் பந்திக்குச் செல்லும்போது, கருத்து மாறவேண்டும். பந்திகளாக பிரிக்கப்படாத உரையினங்கள் வாசித்தற்கு எளியனவாகா; வாசிப்போர் உள்ளங்களைக் கவரா. ஒரு நற்பந்தியில், (1) ஒருமைப்பாடு, (2) நற்றுறை வாக்கியம், (3) தருக்கவொழுங்கு, (4) வேறுபாடு, (5) நன்முடிப்பு வாக்கியம் என்னும் இவை இருத்தல்வேண்டும்.

(1) **ஒருமைப்பாடு** என்பதே ஒரு பந்தியின் உயிர் எனலாம். ஒவ்வொரு வாக்கியமும் ஓர் எண்ணம்பற்றி எழுதுவது போல் ஒவ்வொரு பந்தியும் ஒருபொருளின் ஒரு துறையைப்பற்றிக் கூறவேண்டும்.





ஒரு பந்தியிலுள்ள பல வாக்கியங்களும் அப்பந்தியிற் கூறுந் துறைக்குத் தொடர்புடையன வாயிருத்தல் வேண்டும்.

(2) **துறைவாக்கியம்** என்பது ஒரு பந்தியின் அடிப்பொருளை உணர்த்துவது; பொதுவாக முதல் வாக்கியமே அப்பொருளை உணர்த்தும். அப்பந்தியிலுள்ள ஏனைவாக்கியங்கள் அத்துறை வாக்கியத்தின் பொருளை விரித்துக் கூறுவனவேயாகும்.

(3) **தருக்க வொழுங்கு** என்பது செய்திகளை அவை நிகழ்ந்த ஒழுங்கிற் கூறுவது. ஒரு பந்தியிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் அப்பந்தியினது துறை வாக்கியத்தோடு கொள்கைபற்றித் தொடர்புடையதாய்ச் செய்திகள் நிகழ்ந்த ஒழுங்கிற் கூறப்படவேண்டும்.

(4) **வேறுபாடு** என்பது நடையோசை யொருமையிளைப்பைத் தராதிருத்தற்பொருட்டுக் கையாளப்படுவது; அது பந்தியினது நீளத்தையாதல், பந்தியிலுள்ள வாக்கியங்களினுடைய நீளங்களையாதல் மாற்றுவதாலும் ஒரு பந்தியில் வேறுவேறு வாக்கியங்களை வழங்குவதாலுஞ் சொல்வளம் பெறச் செய்தலாலும் பெறப்படும்.

(5) **நன்முடிப்பு வாக்கியம்** என்பது துறை வாக்கியம் எனப்படும் முதல் வாக்கியத்திற் கூறுதற்கு எடுத்த பொருளை ஒரு முடிபுக்குக் கொண்டுவரும் ஈற்று வாக்கியம். ஒரு பந்தியிலுள்ள துறைவாக்கியம் வாசிப்போனுக்கு கருத்தை எழுப்பும்; நன்முடிப்பு வாக்கியம் அவ்வெழுந்த விருப்பத்தைப் பூர்த்தியாக்கும். நற்பந்திகளுக்குப் பின்வருவன எடுத்துக்காட்டுக்களாகும்:

(i) "அழுக்காறாவது பிறருடைய கல்வி செல்வம் முதலியவற்றைக் கண்டு பொறாமையடைதல். பொறாமையுடையவன் தன்னுடைய துன்பத்திற்குத் தானே காரணனாகின்றான். அக்கினியினாலே பதர் எரிவதுபோலப் பொறாமையினாலே மனம் எரிகின்றது. ஆதலினாலே, பொறாமை யுடையவனுக்குக் கேடு விளைத்தற்கு வேறு பகைவர் வேண்டாம். அப்பொறாமை ஒன்றே போதும்.

- (ஆறுமுகநாவலர்.)

(ii) இப்பொழுது உலகஞ் சமரசத்தைக் கூறிக் கொண்டுநிற்றல் வெள்ளிடைமலை. சமரசம் மூலைமுடுக்குக்களிலும் பேசப்



RangaRakes
tamilnavarasam.com

படுகிறது; எழுதப்படுகிறது. இப்பேச்சாலும் எழுத்தாலும் சமரச வேட்கை ஒருவாறு உலகிடை அரும்பியிருக்கிறதென்பது புலனாகிறது. அவ்வேட்கை செயலிலும் முகிழ்க்குங்காலம் விரைவில் நண்ணுதல் வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவனை வழுத்துகிறேன்.

**-(வி. கலியாணசுந்தரன்.)**

**(iii)** இங்ஙனமாயினும், அந்நேரத்தில் அங்கு வேறு சிலர் செய்த செய்கைகளால் எனக்கு மிகுந்த களிப்புண்டாயிற்று. ஒருவன் ஒரு பழைய சரிகையாடையில் ஒரு பொதியை நிரம்ப உன்னிப் பாய் மறைந்தெடுத்து வருதலைக் கண்டேன்; வந்தவன் அப் பொதியினை அக்குவியன்மேல் எறிகையில் அது வறுமை என்று தெரிந்தேன். மற்றொருவன் நிறைந்த செருக்கோடு நடந்து போந்து தன் மூட்டையினை எறிய, அதனை ஆராய்ந்து நோக்கினோற்கு அஃது அவன் மனைக்கிழத்தியாய்க் காணப் பட்டது.

**- (மறைமலையடிகள்.)**

## பயிற்சி 56

**1. பின்வரும் பொருள்கள் ஒவ்வொன்றையும்பற்றி ஒவ்வொரு சிறுபந்தி எழுதுக:-**

(i) பசு, (ii) தென்னை, (iii) ஒரு மழை நாள், (iv) யானை, (v) ஓர் உதைபந்துப்போட்டி, (vi) ஆறுகள், (vii) வெகுளி, (viii) கிளி, (ix) இனியவை கூறல், (x) என் கலாசாலை, (xi) வயற்செய்கை, (xii) சூது, (xiii) மலைநாடு, (xiv) ஓர் அழிந்த வீடு, (xv) கிராமக்கோடு, (xvi) ஒரு பரிசளிப்பு விழா, (xvii) அணுக்குண்டு, (xviii) கைத்தொழில்கள், (xix) கூட்டுறவுச்சங்கம், (xx) யான் விரும்பும் விளையாட்டு.





**2. மேல்வருந் துறை வாக்கியங்களை அடிக்கொண்டு பந்திகள் எழுதுக:-**

(i) யான் எனது கலாசாலைக்குச் செல்லும்போது ஒரு யாசகனைக் கண்டேன்.
(ii) திடீரென ஓர் ஓசை கேட்டது.
(iii) விளையாட்டுக்கள் உடனலனைத்தருவன.
(iv) யான் யாழ்ப்பாணத்திற் கல்விகற்றது எனக்கு நற்பயன் அளித்தது.
(v) இற்றைக்காலப் போர்முறை கொடுமையானது.
(vi) யான் கண்ட கனா உண்மையாயிற்று.
(vii) எனக்கு என்னுடைய தமையனாரே தெய்வம்
(viii) கல்லாத மனிதர் பூமிக்குப் பொறையாவர்.
(ix) ஒவ்வாக் கூட்டிலுந் தனிமை அழகு.
(x) தமிழ்மொழியிற் பற்றில்லார் தமிழராகார்.

**3. கீழ்க் காணும் பொருள்கள்பற்றிப் பத்து வரிகளுக்கு மேற்படாமற் பந்திகள் எழுதுக:-**

(i) நாய் வளர்த்தல்
(ii) கிராம வாழ்க்கை.
(iii) எனது மலைநாட்டுப்பிரயாணம்.
(iv) ஒரு மாட்டு வண்டி.
(v) யான் முதன்முதல் அனுபவித்த துன்பம்.
(vi) யான் முதன் மந்திரியானாற் செய்வன.
(vii) எனது குடை.
(viii) கெடுவான் கேடு நினைப்பான்.
(ix) பாழடைந்த நகரமொன்று.
(x) யான் கற்றுச் சுவைத்த நூல்.



RangaRakes
tamilnavarasam.com

## அதிகாரம் 19.

# கட்டுரை யெழுதுதல்

**266.** **கட்டுரை** என்பது யாதும் ஒரு பொருள் பற்றி எழுதப்பட்ட ஓர் இலக்கிய உரையினம் எனப்படும். வாக்கியவமைப்பிலும் பந்தியமைப்பிலுந் தேர்ச்சிபெற்ற மாணாக்கர் கட்டுரை எழுதுவதிலே திறமைகாட்டுவர். எனினும், அறிஞர் எழுதிய இலக்கியங்கள் பலவற்றை நன்கு கற்றுச் சுவைத்து நல்லாசிரியன் கண்காணிப்பிலே தாமும் பலகட்டுரைகளை எழுதியவரே கட்டுரைச் செல்வம் பெற்றவர் ஆவார்.

நல்ல கட்டுரைகளில் (1) ஒருமைப்பாடு, (2) தருக்க வொழுங்கு, (3) சுருக்கம், (4) பொருட்செறிவு, (5) நடையழகு, (6) தனிப்பண்பாடு என்னும் இயல்புகள் இருத்தல் வேண்டும்.

(1) **ஒருமைப்பாடு:** ஒரு கட்டுரை ஒரு பொருளையே பற்றிக் கூறுமாயின், அது ஒருமைப்பாடென்னும் இயல்புடன் விளங்கும். அப்பொருளொடு இயையாத பிறிதொன்றும் அக்கட்டுரையில் இருக்கப்படாது ; அங்கு, பல துறைகளைக் கூறும் பந்திகள் பல இருக்கலாம்; ஆயினும், அத்துறைகள் எல்லாந் தம்முள்ளே தொடர்புடையனவாய்க் கட்டுரைப் பொருளுக்கு இசைந்து நிற்றல் வேண்டும்.

(2) **தருக்கவொழுங்கு:** ஒரு கட்டுரையிலுள்ள ஒவ்வொரு பந்தியும் அக்கட்டுரைப் பொருளோடு இயைந்த ஒவ்வொரு துறையையுங் கூறுமிடத்து அத்துறைகள் எல்லாம் அவை நிகழ்ந்த ஒழுங்கிலிந்தால், அக்கட்டுரை தருக்க வொழுங்கில் அமைந்ததெனப்படும்; ஒழுங்கு மாறினால் வாசிப்போனுக்கு மயக்கத்தைக் கொடுக்கும்.

(3) **சுருக்கம்:** கட்டுரையினது அளவு எழுதுவோனது கட்டுரை வல்லமையையும் அதனை வாசிப்போனது நிலையையுஞ் சார்ந்தது. பொதுவாகக் கலாசாலை மாணாக்கர் 250 சொற்களுக்குக் குறையாத அளவு கட்டுரைகள் எழுத வேண்டும்.

(4) **பொருட்செறிவு:** கட்டுரை சொல்வளம் மிக்குப் பந்தி பந்தியாகப் பொருள் செறிந்து நின்று முடிந்தாற் பொருட் செறிவுடைய தெனப்படும்; பொருள்முடியாக் கட்டுரைகள் பொருட்செறிவுடையன எனப்படா.





(5) **நடையழகு:** கட்டுரை முழுவதும் ஒரு நடையினதாயிருத்தல் வேண்டும் ; அப்போது தான் அது நடையழகு உள்ளது எனப்படும்; ஒருபந்தி ஒருநடையிலும் ஒரு பந்தி ஒருநடையிலும் எழுதுதல் வாசிப்போர்க்கு வெறுப்பைக் கொடுக்கும்.

(6) **தனிப்பண்பாடு:** கட்டுரை எழுதுவோன் அக்கட்டுரைக்குட்புகுந்து எழுதினால், அது தனிப்பண்பாடு பெற்றது எனப்படும் ; பிறர் கொள்கைகளைக் கூறினுங் கூறலாம்; ஆயினும், கட்டுரைப் பொருளைப்பற்றித் தான் கொண்ட கொள்கையைக் கூறாதுவிடல் ஆகாது.

### கட்டுரை எழுதும் வகை

**267.** கட்டுரை எழுதத் தொடங்குமுன் கட்டுரைப் பொருளைப்பற்றி ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும்; பின்னர் சிறந்த கொள்கைகளை இயல்பான ஒழுங்கிற் பலதுறைகள் கொண்ட சட்டக வடிவத்திற் குறிக்கவேண்டும்; அதன் பின்னர் ஒவ்வொரு துறையையும் பற்றி ஒவ்வொருபந்தி எழுதினாற் கட்டுரை நன்கு வாய்க்கும்.

கட்டுரைகளிலே தோற்றுவாய்ப் பந்தியே மிகச்சிறந்ததாய் இருத்தல் வேண்டும் ; அது குறுகியதாய் வாசிப்போர் உள்ளத்தைக் கவரக்கூடியதாய் இருத்தல் வேண்டும். முடிப்புப் பந்தியுஞ் சிறப்பிற் குறையப்படாது; கட்டுரை முடிந்தது என்னும் உணர்வை வாசிப்போருக்குக் கொடுக்கத்தக்கதாய் இருத்தல் வேண்டும். ஏனைப் பந்திகள் கட்டுரையின் உடல் எனப்படும்; அவற்றின்கண்ணே கட்டுரையின் செய்திகள், சிந்தனைகள், எடுத்துக் காட்டுக்கள், வாதங்கள் எல்லாம் இடம்பெறும்.

கட்டுரைகள் எழுத்துச் சொற்பிழைகளின்றி இலக்கண விதிகளைத் தழுவித் தக்க நிறுத்தக் குறிகளோடு எழுதப்படவேண்டும். அவற்றிலே கொச்சைச் சொற்களையாதல் பொருளறியாச் சொற்களையாதல் வழங்கல் ஆகாது.

### கட்டுரையினங்கள்

**268.** வருணனைக்கட்டுரை, வரலாற்றுக்கட்டுரை, சிந்தனைக்கட்டுரை, விளக்கக்கட்டுரை, கற்பனைக்கட்டுரை எனக் கட்டுரை ஐந்து இனங்களாகப் பிரிக்கப்படும். இவ் வினங்கள் ஒன்றுக்கொன்று முற்றும்



RangaRakes
tamilnavarasam.com

வேறானவையல்ல; ஓரினக்கட்டுரையில் ஏனையினக் கட்டுரைகளின் இயல்புகள் வந்து கலக்கலாம். வருணனைமிகுந்த கட்டுரையை வருணனைக் கட்டுரையென்றும், வரலாறுமிகுந்த கட்டுரையை வரலாற்றுக் கட்டுரையென்றும், இவ்வாறே பிறவற்றையுங் கூறலாம்.

(1) **வருணனைக் கட்டுரையாவது** நாடு, நகரம் முதலிய இடங்களையும், சூரியோதயம் முதலிய காட்சிகளையும், விலங்கு, தாவரம் முதலிய இயற்கைப் பொருள்களையும், தேர், பட்டு முதலிய செயற்கைப் பொருள்களையும் வருணித்து உரைப்பதைப் பெரும்பான்மையாகக் கொண்டது. இதன்கண்ணே சில வரலாற்றுச் செய்திகளுஞ் சிந்தனைச் செய்திகளும் பிறவும் வந்துகலக்கலாம்.

(2) **வரலாற்றுக் கட்டுரையாவது** சரித்திரக் கதைகள், புராணக்கதைகள், தற்சரித்திரங்கள், விழா, போர் முதலிய நிகழ்ச்சிகள், விபத்துக்கள், பிரயாணங்கள் என்பனவற்றை விவரித்துக் கூறுதலைப் பெரும்பான்மையாகக் கொண்டது. சிறுவருணனைகளும் உணர்ச்சிமிகுதிச் செய்திகளும் உரையாடல்களுங் கலக்கப்பட்டாற் கட்டுரை சிறக்கும்.

(3) **சிந்தனைக்கட்டுரையாவது** ஒழுக்கம், அரசியல், சமயம் என்பனவற்றின் சிந்தனைகளைப்பற்றிப் பெரும்பான்மையாகக் கூறுவது, எடுத்துக்காட்டுக்களாகச் சிறு கதைகளும் நிகழ்ச்சிகளும் இதன்கண் கலக்கலாம்.

(4) **விளக்கக்கட்டுரையாவது** கலாசாலை முதலிய தாபனங்கள், கைத்தொழில்கள், விஞ்ஞான விடயங்கள், இலக்கியப்பொருள்கள் என்பனவற்றின் விளக்கங்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது. இதன்கண்ணே சிறு கதைகளுஞ் சிந்தனையுரைகளும் இடையிடையே வரலாம்.

(5) **கற்பனைக்கட்டுரையாவது** தனக்கு இல்லாததோர் இயல்பை உள்ளது போலவும் நடவாததொரு நிகழ்ச்சியை நடந்தது போலவுங் கற்பித்துக் கூறுவதைப் பெரும்பான்மையாகக் கொண்டது. 'யான் எமது நாட்டிற்கு அரசனானால், யான் செய்வன', 'ஒரு பசுவினது தற்சரிதை' என்னும் பொருள்கள் இக் கட்டுரையினத்தைச் சேர்ந்தவை. இக்கட்டுரையில் வரலாறு, வருணனை, சிந்தனை முதலியன வந்து இடையிடையே கலக்கும்.





**269.** கட்டுரைகள் எழுதும் முறை பின்வரும் மாதிரிக் கட்டுரைகளால் அறியப்படும்:–

**(I) எம் பழக்கவழக்கங்கள்.**

சட்டகம்

(அ) பழக்கவழக்கங்கள் காலத்துக்குக்காலம் மாறுவன.
(ஆ) அரிச்சுவடி செய்த முறை.
(இ) மக்கள் தமக்குப் பெயரிடு முறை.
(ஈ) பிரசவ வீடு முதலியன சென்று வந்து நீர் மூழ்கும் பழக்கவழக்கம்.
(உ) தீண்டாமை என்னும் பழக்கவழக்கம்.
(ஊ) பண்டைக்காலத்தாரின் பழக்கவழக்கம் இற்றைக் காலத்தாரின் பழக்க வழக்கங்களிலுஞ் சிறப்பு வாய்ந்தன.

எம் பழக்க வழக்கங்கள் காலத்துக்குக்காலஞ் சாதிமத பேதங்கள் காரணமாக மாறுதலடைந்து வருகின்றன. அம்மாறுதல்கள் எமது பண்பாடுகளை எத்துணை வளர்த்தோ சிதைத்தோ நின்கின்றன என்று ஆராய்தல் தகும்.

முதற்கண், தமிழனாவான் தன்னரிச்சுவடியை எவ்வாறு ஆக்கிக் கொண்டான் என்பதை நோக்குவோம்; தனது உயிருக்கும் அகரமுதற்பன்னீ ரெழுத்துக்களுக்குமிடையே தனித்தியங்கும் ஒற்றுமைப்பண்பு கண்டான். கண்டவன் அப்பன்னீரெழுத்துக்களையும் உவமையாகு பெயரால் உயிர் என்றான். அவ்வாறே, தனது மெய்யிற்குங் ககரமுதல் னகர ஈறாகிய பதினெட்டு எழுத்துக்களுக்குந் தனித்தியங்குஞ் சத்தியின்றி, இயக்க இயங்கும் ஆற்றலாகிய ஒற்றுமை கண்டு அப்பதினெட்டு எழுத்துக்களையும் மெய் என்றான். உயிரென்றோ சடமென்றோ கூறொணாத தாயினுஞ் சித்தென்பதுபற்றி உயிரொடு ஒரு சாதியாகிய கடவுளுக்கும் உயிருமாகாது மெய்யுமாகாது நிற்கும் ஆய்த வெழுத்திற்குந் தனித்து நிற்கும் ஆற்றலில் ஒற்றுமைகண்டு, அவ்வாய்த எழுத்தை உயிர் வரியிற் கிடத்தித் தனிநிலை என்றான். இவ்வகையால், அண்டத்திற்காணும் இறை, உயிர், கட்டு என்பனவற்றைத் தனது அரிச்சுவடியில், தனிநிலை, உயிர், மெய் என்று கண்டான். பிறரெல்லாம் இத்தகை மாண்பொடு படாத அரிச் சுவடியை உண்டாக்கி நிற்பத் தமிழனாவான் தன் கருத்தின் ஆழத்தைப் புலப்படுத்தும் வண்ணம் தனது அரிச்சுவடியையே செய்து வழங்கும் வழக்கம் போற்றத் தக்கது.



RangaRakes tamilnavarasam.com

பண்டைத் தமிழர் தம் பெயர்களைக் கபிலரென்றோ, பரணரென்றோ தமிழ் மரபின்படி அமைத்தனர். இடைக் காலத் தமிழர் பலர் ஆரியக் கலப்புப் பற்றிச் சித்தசேனன், உதய குமரன் முதலிய ஆரியப்பெயர்களைப் பூண்டனர். இற்றைக்காலத்துத் தமிழரிற் சிலர் மதவேறுபாட்டாலே யோவான் என்றும் யோசேப்பு என்றும் பெயர் கொள்ளுகின்றனர். இப் பெயர்கள் மதக்குறியீடுகளாகுமெனக் கொண்டு அவற்றை ஒருவாற்றால் ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், சிலர் தமக்குந் தமது மக்களுக்கும் 'பிளாய்க்' என்றும் 'றெட்' என்றும் பெயரிடுகின்றனரே; இவ்வழக்கம் மிக வெறுக்கத்தக்கது. தமிழனாவான் மதம் மாறினானாயின் தமிழனாகானோ! ஆங்கிலங் கற்றானாயின், அவன் தமிழன் என்பது ஒழிந்து ஆங்கிலேயன் எனப்படுவானோ! ஆகலான், தமிழனாவான் பிறமொழிப் பெயர்களை நீக்கித் தமிழ்ப் பெயர்கள் மேற்கொள்ளுவானாயின், அவனது பண்பாடு சிறக்கும் என்பது ஒருதலை.

இனி, பண்டைக்காலந் தொடங்கி இடைக்காலம்வரை தமிழனாவான் ஒரு பிரவச வீட்டிற்கோ ஒரு சாவீட்டிற்கோ சென்று வீடு திரும்பினானாயின், தனது உடைகளை நீரில் அலம்பித் தோய்த்துத் தானும் நீரின் மூழ்கியே தனது இல்லம் புகுதல் வழக்கு. இது புறத்தூய்மைக்கண் தமிழன் கொண்ட கருத்தை நன்கு புலப்படுத்துகின்றது. இற்றைக் காலத்துத் தமிழருட் பலர் மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கினாராய்ச் சாவீடு சென்று திரும்பியபின்னர் நீரின் மூழ்காதும் உடைகளைத் தோய்க்காதும் தமது இல்லம் புகுகின்றனர். அந்தோ! இவர்களிடத்துள்ள அறியாமை நிந்திக்கத் தக்கது. தெருவிற் சென்றுவிட்டு இல்லம் புகும்போது கைகால்கள் கழுவிச் செல்லுந் தமிழர் பண்டும் இன்றும் உளர். எனினும், தெருவிற்சென்ற செருப்புடன் வீட்டிற்குள்ளே நுழையுந் தமிழர் பலர் இன்று காணப்படுகின்றனர். இவர் பண்டையோர் வழக்கங்கள் எல்லாம் அநாகரிகமானவை யென்று கொண்டு அவற்றிற்கெல்லாம் செருப்படி கொடுக்க வேண்டுமென்ற உள்ளத்தினர். கொள்ளத்தக்கன இவை தள்ளத்தக்கன இவை என்பதைத் தீர விசாரியாது, நல்லன தீயனவாகிய யாவற்றையும் பண்டைக் கொள்கைகளென ஒருங்கு தள்ளித் தம் பண்பாடு இழந்து வெறுவிலிகளாய் நிற்பவர் இவரே. இத்தகையினரைத் தெளிவித்துப் பண்டைத்தமிழர் வழக்கத்தை நிலைநிறுத்தல் அறிஞர் பணியாகும்.

தமிழ் நூல்களுள்ளே மிகப் பழமையானது தொல்காப்பியமே. அதன் கண்ணே தமிழ்மக்களை அந்தணர், வேந்தர், வைசியர், வேளாளர் என





நால்வகைச் சாதியினரால் வகுத்திருத்தல் காணலாம். ஆகவே, ஆரியருடைய வருணாச்சிரம தருமந் தொல்காப்பியம் காலத்திலேயே தமிழ் மக்களிடைப் புகுந்திருத்தல் வேண்டுமென முடிபு கொள்ளலாம். இந்நால்வகைச் சாதியினரேயன்றி இழிந்தார் எனப்படுவாரும் தமிழகத்தின் கண்ணே இருந்தார் என்பதற்குஞ் சான்று உண்டு. எனினும், தீண்டாமை என்னுங் கொடிய நோய் இக்காலம்போல் அக்காலத்திலே தலையெடுத் தோங்கிற்று என்று சொல்லல் முடியாது. எம்மிடைக் காணும் இத் தீண்டாமை என்னும் வழக்கமானது எம்மைப் பிறரெல்லாம் இகழுமாறு செய்கின்றது; ஆகலான், இவ் வழக்கம் புறக்கணிக்கத்தக்கதாகும்.

மேற்கூறியவாற்றாலும் பிறவாற்றாலும் பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்கள் பெரும்பான்மையானுஞ் சிறந்தனவென்றும், இடைக் காலத்தாரின் வழக்கங்களுட் சில கடியப்படத்தக்கனவென்றும், இற்றைக் காலத்தாரின் வழக்கங்களுட் பல புறக்கணிக்கத் தக்கனவென்றுங் காணலாம்.

## ஒரு குதிரையினது தற்சரிதை

சட்டகம்

(அ) தம்மினத்தை மனிதர் எள்ளுவதைக்கேட்டு அவரோடு ஒப்பிடுதல்,
(ஆ) தனது இளமைப் பருவத்தில் தனது தாயின் முன்னிலையில் துள்ளிக் குதித்து விளையாடி இன்புற்றமை.
(இ) ஓர் இளைஞன் கையிற்சிக்கி ஏறுகுதிரையாகப் பழக்கப்பட்டமை.
(ஈ) நங்கை ஒருத்திக்கு விலைப்பட்டு வண்டியிழுத்து வருந்தியமை.
(உ) ஒரு பெருமகனுக்கு விலைப்பட்டு ஏறுகுதிரையாகி மனமொருமைப்பட்டு வாழ்ந்து விபத்துக்குள் ஆளாயமை.
(ஊ) முதியவர் ஒருவருக்கு விலைப்பட்டு அன்பினாற் பல்லாண்டுகட்கு வாழ்ந்து கிழப்பருவம் அடைந்தமை.
(எ) தாயாரின் பிரிவை நினைக்கும் போதுந் தன்னினத்தின் அடிமை வாழ்க்கையை எண்ணுந்தோறுந் துக்கமேலீடு.

மனிதர் பலர் ஒருவரை ஒருவர் குதிரை, கழுதை என்று ஏசுவதைக் கேட்டிருக்கின்றேன். அவர் அவ்வாறு ஏசும் போது எனக்குந் கோபமுந் துக்கமும் மாறிமாறி வருவதுண்டு. நாம் அவரைப்போல இருகைகளும் இருகால்களும் படைத்திலேமாயினும் நாலுகால்கள் கொண்டுள்ளோம். அவர்க்கு வாலில்லை; எமக்கு வாலுண்டு அவர்க்குப் பகுத்தறிவுண்டு; எமக்கு அது இல்லையாம். பகுத்தறிவுள்ளவர் எனப்படும் அவர் தமக்கு



RangaRakes
tamilnavarasam.com

நன்றிசெய்த ஒருவரை மறப்பினும் மறப்பர்; நாம் உயிருள்ளவரையும் அத்தகையினோரை மறவோம். அவர்க்குப் போக போக்கியங்கள் உண்டு; எமக்கு அவை வேண்டாவாம். என் கதையைக் கூறி எனது இனம் அடையும் இன்ப துன்பங்களை விளக்குகின்றேன்.

எனது இளமைப் பருவத்திலே எனது தாயார் மைதானம் ஒன்றிலே புல்மேய்ந்துகொண்டிருக்க, அவர் பக்கத்தினின்று இயற்கைக் காட்சிகளைக்கண்டு சுவைத்து இன்பமேலீட்டினாலே துள்ளிக்குதித்து விளையாடுவது என்வழக்கமாய் இருந்தது. என்பசிக்கு என் தாயரிடஞ் சென்று பாலூட்டிவிட்டுப் புன்னுனியில் இங்கொருகடி அங்கொருகடியாகக் கடித்து அப்புல்லொடு முனிந்து தூரத்திற்கு ஓடுவதுந் திரும்பி எனது தாயாரண்டை வந்து சிறுகக் கனைப்பதும் இடையிடையே யான் செய்துவந்த களிப்புச் செய்திகள். இவற்றை எல்லாம் பார்த்து மகிழ்ந்து என் தாயார் என்மீது கண்காணிப்பாய் இருந்தார். அவரின் கருணையினால் யான் இடையறாத இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தேன். பின்வரும் விளைவுகள் யாதுந் தோன்றாது நின்றேன்; ஆனால் என் தாயார் இடைக்கிடை என்னைப் பார்த்துக் கண்ணீர் விடுவதுண்டு. ஒரு முறை அவர் அழுதமைக்குக் காரணம் வினவ, எனது பிற்காலத்தை நினைந்து தாம் மனமுருகினார் எனச் சொன்னார். வராத காலத்திற்காக உளமுடைதல் புத்தியொடுபட்ட செயலாகாதெனச் சொல்லி அவரை மனமாற்றினேன்.

ஒருநாள் இளைஞன் ஒருவன் பதினாறு வயதினன் ஒரு தடம்வீசி என்னைப் பிடித்து வாயில் இரும்புத் துண்டொன்று இட்டு அதனுனிகளில் வார்பூட்டி என் பிடரிற் கட்டி அவ்வாரில் நெடுங் கயிறொன்றின் ஒரு முனையை இணைத்து மற்றைமுனையைப் பிடித்தவண்ணந் தன்னைச் சுற்றி ஓடுமாறு கசைகொண்டு என்னைச் செலுத்தினான்; யான் அஞ்சினேன்; வெகுண்டெழுந்தேன் ; ஆனால், என் தாயார் என்னெதிர்ப்பால் தீமையொழிய நன்மையாதும் பெறப்படா தெனக்கூறி அடங்குமாறு பணித்தார். யான் என் தாயாரின் சொற்படி அடங்கி ஓடினேன். இவ்வாறு பல நாள்களாக எனக்குப் பயிற்சி அளித்து, ஈற்றில் என்னை ஓர் ஏறுகுதிரையாக அவ்விளைஞன் செய்து விட்டான்.

யான் நங்கையொருத்திக்கு வண்டிக்குதிரையாக விலைப்பட்டேன். அவள் என்னை வண்டி யிழுப்பதற்குப் பழக்குவித்து இரவும் பகலுமாக என்னைக்கொண்டு வேலை செய்துவித்தாள். யான் இதனை விரும்ப



RangaRakes



வில்லை; வண்டியோட்டிக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினேன் : விரைவாய்ச் செல்லுமாறு ஏவியவிடத்து மெல்ல நகர்வேன்; பின்னர், பறவை பறந்தாற்போல் விரைந்து ஓடுவேன் ; நிற்கும்படி பணிக்கச் சொற்கேளாது மிக்க தூரமோடி நிற்பேன்; ஓட்டத்தொடங்க மறுப்பேன் ; கசைகொண்டடிக்க வண்டி கவிழுமாறு பின்னிடைவேன். யான் கொடுத்த துன்பத்திற்கு அளவே இல்லை. என்னை வெறுத்து அந்நங்கை பெருமகன் ஒருவனுக்கு விலையாகக் கொடுத்தாள்.

அப்பெருமகன் காலை மாலைகளிற் கடற்கரையிலுள்ள பெருவெளி ஒன்றில் என்மீது ஊர்ந்து பவனிசெல்வது வழக்கம்; யான் இவ்வேலையை உள்ளக்களிப்போடு ஏற்று நின்றேன். அப்பெருமகன் நற்குணம் படைத்தவன்; உயிர்கள்மீது பெருங்கருணை யுள்ளவன் ; எனக்கு நல்லுணவு அளித்து என்னை அன்பாய் வளர்த்து வந்தான். ஒருமுறை கடற்கரையிற் பவனி செல்லும்போது மழைநீர் அரித்த கிடங்கொன்று என்னெதிரிலே தோன்றிற்று; இன்னது செய்யலாமென யான் நிச்சயிக்கு முன்னர் என் எசமான் அதனைப் பாய்ந்தோடுமாறு என்னைத் தூண்டினான். அதனைத் தாண்டிப்பாய்தல் என்னால் முடியாத காரியமென எனக்குத் தோன்றிய போதிலும் என்மீது அன்புவைத்த அவனின் சொல்லை மறுக்க முடியாதவனாகி என்னாற் கூடியவரை உன்னிப் பாய்ந்தேன்; தவறிக்கிடங்கிற்குள் வீழ்ந்தேன் ; எனது காலொன்று சுளுக்கி விட்டது; என் எசமான் என் முதுகிலிருந்து வீசப்பட்டுக் கைமுறிந்து கிடந்தான்.

யான் வைத்தியசாலை ஒன்றில் இரு வாரங்களாகச் சிகிச்சை செய்யப்பட்டேன். அதன்பின் முதியவர் ஒருவருக்கு விலையாக விற்கப்பட்டேன். அவர் விரும்பியது புரளியில்லாக் குதிரை; என்னிடத்து அடக்கமும் அமைதியுங்கண்டு மிக்க அன்பு காட்டினார் ; மாலை நேரங்களில் என்மீது இவர்ந்து தம்மூரிலுள்ள தெருவொன்றிற் பவனி செல்வதே அவர் வழக்கம்; யான் இவ்வேலையை முழுமனத்தோடு பல்லாண்டுகளாகச் செய்து வந்தேன்; இப்பொழுது யான் கிழப்பருவத்தை அடைந்துவிட்டேன்; புல்வெளியிலே புன்மேய்வதொழிய எனக்கு வேறுவேலை யாதுமில்லை. மனத்திருத்தியோடு அமைதியான வாழ்க்கையைச் செலுத்துகின்றேன்.

என் தாயாரை நினைக்கும் போதெல்லாம் அவரைச் சந்திக்கச் சந்தர்ப்பம் இல்லாமைபற்றி உளங் குலைந்து கண்ணீர் தாரைதாரையாகப் பெருகிநிற்பேன்; எனக்கும் எனது இனத்திற்கும் அடிமை வாழ்க்கைக்கே



tamilnavarasam.com

யன்றி மணம் முதலிய நற்காரியங்களுக்கு இடம்இல்லை என்பதை எண்ணுந்தோறும் உளமுடைந்து இறைவனை நொந்து நிற்பேன்; மறுபிறப் பிலாயினுந் தன்னிச்சையாகத் திரியும் மனிதனாய் யான் பிறப்பேனெனக் கொண்டு என்னுள்ளத்தைத் தேற்றுவேன்.

## பயிற்சி 57.

**பின்வரும் பொருள்கள் ஒவ்வொன்றும்பற்றி (சட்டகம் யாதுந் தந்தால் அதனைத் துணைக்கொண்டு) ஒவ்வொரு கட்டுரை எழுதுக:-**

1. **கடனீராடுதல்** – (1) கடனீராடுதல் மிக்க இன்பந்தரும், (2) கடனீருக்கு, நோய் தீர்க்கும் ஆற்றலுண்டு, (3) களைப்பு நீக்கி உயிர்ப்புக் கொடுக்குந்தன்மையுண்டு, (4) கடனீராடுதற்கண் விபத்து, (5) ஆற்று நீராடுதலிலுங் கடனீராடுதல் நன்று, (6) நீராடுதல்களுட் கடனீராடுதலே பயன்மிக்கது.

2. **ஊக்கமுடைமை** – (1) ஊக்கமுடைமையின் கருத்து, (2) ஊக்க முள்ளவனுக்குத் தேவையான எல்லாங் கிடைக்கும், (3) அது உடனலன், பொருட்செல்வம் முதலியனவற்றிற்கு ஏது, (4) அதன் விளைவுகளை எறும்பு, தேனீ முதலியவற்றிலிருந்து கற்கலாம், (5) அது ஒழுக்கத்தையுஞ் சிறப்பிக்கும்.

3. **கடற்கரை உலாவொன்று** (1) பிற்பகலிற் கடற்கரையிலே மக்கள் உலாவுங்காட்சி, (2) அலை மோதுங் காட்சி, (3) அடிவானத் தோற்றம், (4) ஞாயிறு மறையுங் காட்சி, (5) நிலாவெறிக்குங் காட்சி, (6) உலாவால் விளையும் பயன்.

4. **நிலக்கரி** – (1) நிலக்கரி உண்டாகுமாறு, (2) அதனைப் பெறுமிடம், (3) அதனைப் பெறும்விதம், (4) சுரங்கம் அறுத்தற்கண் விபத்து, (5) நிலக்கரியின் பிரயோசனங்கள், (6) அதிலிருந்து பெறும் பிற பொருள்கள், (7) அது எந்நாட்டுக்குந் தேவையான ஒரு பொருள்.

5. **உதை பந்தாட்டம்** – (1) உதை பந்தாட்டத்தின் சரித்திரம், (2) விளையாட்டு நிலத்தின் பரிமாணம், (3) விளையாட்டு நிலப் பாகுபாடுகள், (4) விளையாட்டுக் போட்டிப் பாகுபாடுகள், (5) விளையாட்டு விதிகள், (6) விளையாடும் வகை, (7) விளையாட்டு விதிதவறினால் வருங் குற்றங்கள், (8) நடுவனும் எல்லை மனிதரும், (9) வெற்றிகாணும் முறை, (10) விளையாட்டுப் பேறுகள்.

6. **நவீன கதை வாசித்தல்** – (1) நவீன கதையின் இலக்கணம், (2) அதன் இனங்கள், (3) அதன் இயல்புகள், (4) அதன் தேர்வு, (5) அதனை வாசித்தலால் வரும் நன்மை தீமைகள்.

7. **உதை வண்டி** – (1) உதை வண்டியின் சரிதை, (2) உதை வண்டியும் அதன் பகுதிகளும், (3) உதைவண்டி யோடலால் வரும் நன்மைகள், (4) அதனை ஓடலால் வருந் தீமைகள், (5) ஒப்பீட்டினால் நன்மையே மிக்க தெனல்.

8. **வேலை நிறுத்தங்கள்** – (1) வேலை நிறுத்தங்கள் என்றால் என்ன என்பது, (2) அவற்றின் காரணங்கள், (3) அவற்றின் நயங்களும் நட்டங்களும், (4) மேலைத்தேய கீழைத்தேய எடுத்துக்காட்டுக்கள், (5) தொழிலாளருக்குரிய தனி ஆயுதம்.

9. **ஆகாய விமானம்** – (1) ஆகாய விமானத்தின் சரித்திரம், (2) அதன் விவரணம், (3) அதன் இனங்கள், (4) அதன் விருத்திகள், (5) அதனால் விளையும் நன்மைகளுந் தீமைகளும். (6) ஒப்பீட்டினால் நன்மையே மிக்க தெனல்.

10. **கிராமச்சங்கம்** – (1) கிராமச்சங்கத்தின் இலக்கணம், (2) அதனை அமைக்கும் முறை, (3) அதன் வருவாய்கள், (4) அதன் கடமைகள், (5) அதனால் நாம் அடையும் பேறுகள்.

11. **இற்றைக்காலக் கல்விமுறை** –(1) கல்வியினது தேவை, (2) இற்றைக்காலக் கல்வியின் அமைப்பு, (3) அதன்கட் காணப்படுங் குறைபாடுகள், (4) அக்குறைபாடுகளைத் தீர்க்கும் வழிகள், (5) அக்கல்வி முறையால் வரும் பயன்கள்.

12. **யான் விரும்பும் நூல்** – (1) நல்ல நூல்களின் இலக்கணம், (2) தேர்ந்தெடுத்த காரணம், (3) அந்நூல் இயற்றியவனின் வாழ்க்கை, (4) அந்நூற் பொருள், (5) நூற்பாத்திரங்கள், (6) நூலினது நடை, (7) நூற்பயன்.

13. **உடலுறுதியும் உளவுறுதியும்** – (1) உடலுறுதி விலங்குகளுக்கும் உண்டு ; உளவுறுதி நன்மனிதருக்கே உண்டு, (2) உடலுறுதியின் நன்மைகள், (3) உளவுறுதியின் நன்மைகள், (4) உடலுறுதியிலும் உளவுறுதி நன்றெனல்.







RangaRakes
tamilnavarasam.com

**14. ஒரு கிராமப்பாடசாலை** – (1) கிராமப்பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகள், (2) ஒரு கிராமப் பாடசாலையின் அமைப்பு, (3) அதன் கண் ஆசிரியர் கல்வி கற்பிக்கும்முறை (4) ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் இடையேயுள்ள தொடர்பு, (5) அப் பாடசாலையால் வரும் விளைவுகள்.

**15. நாடக வரங்கம்** – (1) நாடகவரங்கத்தின் சரித்திரம், (2) அது கட்டப்பட்ட நோக்கம், (3) அது படிப்படியாக மாறியமை, (4) அதனால் விளையும் நன்மைகள், (5) அதனால் உண்டாகுந் தீமைகள், (6) கல்விக்கு இருப்பிடமாதலால் நன்மை பெரிதெனல்.

**16. ஒளிப்படம் பிடித்தல்** – (1) ஒளிப்படமென்றால் என்னையெனல், (2) ஒளிப்படம் பிடித்தல் ஒரு நுண்கலை கற்றலுக்கு நிகர், (3) அது ஒரு பொழுது போக்காகவுங் கொள்ளப்படலாம், (4) அறிவு வளர்க்குங் கருவி எனல்.

**17. அறஞ் செய்தல்** – (1) அறம் என்பதன் பொருள், (2) அதனைச் செய்யும் முறைகள், (3) அதுபிறர் துன்பத்தை நீக்கும், (4) செய்வோனுக்கு மேற்கதி கிடைக்கும், (5) தக்க பாத்திரத்திற்கே செய்யவேண்டும், (6) அது மனிதரை விலங்குகளினின்றும் பிரிக்கும் ஓர் இயல்பாதலால் எல்லாராலும் மேற்கொள்ளப்படவேண்டியது.

**18. போரால் வரும் நன்மை தீமைகள்** – (1) இணங்காத இருநாடுகள் எடுத்தாளுமுறை, (2) மறக்கருணைபற்றியும் எழலாம், (3) மனிதரது சோம்பலுள்ளத்தை எழுப்பும், (4) நாட்டுப்பற்றை வளர்க்கும், (5) நாகரிகமற்ற செயல் (6) அதனால் வருங் கெடுதிகள், (7) போர்ப்பயிற்சி எல்லார் மாட்டும் இருத்தல் வேண்டும்.

**19. பஞ்சம்** – (1) இயற்கையிலுள்ள ஒரு கெடுதி, (2) அது தோன்றும் விதம், (3) அதற்கு முன்னறிவிப்புக்களாய் வருவன, (4) அதனால் வருந் துன்பங்கள், (5) அதன் கொடுமையைக் குறைத்தற்கு அரசினர் எடுத்தாளும் முறைகள், (6) அதனாலுஞ் சில நன்மைகள் வரலாம்.

**20. கிராம வாழ்க்கையும் நகரவாழ்க்கையும்** – (1) கிராம வாழ்க்கை இயற்கையானது; நகர வாழ்க்கை செயற்கையானது, (2) கிராம வாழ்க் கையின் நயங்கள், (3) அதன் நட்டங்கள், (4) நகர வாழ்க்கையின் நயங்கள்,





(5) அதன் நட்டங்கள், (6) இரு வாழ்க்கைகளிலுங் கிராம வாழ்க்கையே சிறந்ததென முடிபு கூறல்.

21. பொதுமக்கள் கொள்கை
22. காலத்தின் அருமை
23. தனது துன்பத்திற்குத் தானே காரணம்
24. பெண்கல்வி
25. என்னைச் சிறந்தவனாக்கிய நூல்
26. எந்நாட்டுப் பறவைகள்
27. ஒரு வைத்தியசாலை
28. நன்மாணாக்கரின் இயல்புகள்
29. யான் விரும்பும் நவீனகதை
30. தீயில்லாமற் புகைகிளம்பாது
31. ஒரு பசுவினது தற்சரிதை
32. வள்ளுவர் கண்ட அருணெறி
33. எனதுவேணவா
34. பெற்றாருக்குக் கீழ்ப்படிதல்
35. நாட்டுத்தொண்டு
36. தன்னம்பிக்கை
37. எங்கலாசாலை நூனிலையம்
38. எங்கல்விப் பிரச்சினைகள்
39. தீராக்கோபம் போராய் முடியும்
40. யான் கண்ட பெருமகன் ஒருவன்,
41. செய்தித்தாள்கள்
42. திருவள்ளுவர்
43. எந்நாட்டிலுள்ள விடுதலை விடுதிகள்
44. படுகொலை வழக்கொன்று
45. யான் விரும்பிய ஆசிரியன்
46. திரைப் படங்கள்
47. மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை
48. பேய்பிடித்த வீடு
49. சிக்கனவாழ்வு
50. எதுநிகழினுங் கடமைதவறாதிருத்தல்
51. ஒரு நிலவுலா
52. செய்வன திருந்தச்செய்
53. தனிமை வாழ்க்கை
54. ஓர் எறும்பினது தற்சரிதை
55. தொழின்முறைக்கல்வி
56. பிரயாணங்களால் விளையும் நன்மைகள்
57. தேனுண்டானால் ஈ தேடிவரும்.



RangaRakes

tamilnavarasam.com

58. தமிழினத்திலுள்ள சாதிப்பிரச்சினைகள்
59. உடனலப் பாதுகாப்பு
60. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்
61. யான் பார்த்துச்சுவைத்த திரைப்படமொன்று
62. இற்றைக் காலத்துத் தமிழ்ச்செய்யுள்கள்,
63. எளியவாழ்க்கையும் ஆழ்ந்த சிந்தனையும்
64. எங்கிராமச் சந்தை
65. கைக்கெட்டினது வாய்க் கெட்டவில்லை
66. நாடுகள் எல்லாவற்றிற்கும் ஒரு பொதுமொழி தேவை
67. கூட்டுறவு இயக்கம்
68. மீன்பிடிதொழில்
69. வேட்டையாடுதல்
70. உரையாடல்
71. சீரியர் கெட்டாலுஞ் சீரியரே
72. வாசிகசாலைகள்
73. ஒரு தேனீயினது தற்சரிதை
74. சமூகநலச் சங்கங்கள்
75. யான் முதன்முதல் ஓர் ஓரிடத்தில் ஓடியமை
76. எனது உள்ளங் கவர்ந்த கிழவன் ஒருவன்
77. தெருவில் நடந்த ஒரு விபத்து
78. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
79. சூறாவளிக் காற்று
80. எங்கலாசாலை வாசிகசாலை
81. பொதுச்சங்கம்
82. ஆகாயவிமானப் பிரயாணம் ஒன்று
83. கிட்டாதாயின் வெட்டெனமற
84. பாராளுமன்ற வாட்சி
85. தீப்பற்றிய வீடொன்று
86. விலங்குகளுக்குக் கொடுமை இழைத்தல்
87. குடியரசு
88. கிராம வைத்தியன் ஒருவன்
89. எமது வாய்பேசா நண்பர்கள்
90. பூமிநடுக்கம்
91. கல்வி
92. அரசியல்வாதியின் வாழ்க்கை
93. ஞாபகசக்தியால் விளையும் நன்மைதீமைகள்
94. நாவடக்கம்
95. ஒரு துறைமுகக்காட்சி
96. நயத்திற்காக வாசித்தல்
97. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
98. எமது குடியியற் பொறுப்புக்கள்





99. எமது கலாசாலையிலே நடந்த ஒருபரிசளிப்புவிழா
100. வேலைத்தேர்வு
101. ஒலிபரப்பால் விளையும் நன்மை தீமைகள்
102. நீர்மின்றிட்டம்
103. நட்பு
104. தமிழ்மகளிர் கடன்
105. ஓர் ஆற்றங்கரைக்காட்சி
106. ஆங்கிலக் கல்வியினது தேவை
107. சரித்திரக்கல்வி
108. விஞ்ஞானத்தின் அற்புதங்கள்
109. விளம்பரஞ்செய்தல்
110. மூடக்கொள்கைகள்
111. எங்கிராமங்களின் நிலைமை
112. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
113. சூரியோதயக்காட்சி ஒன்று
114. வாசிப்புத் தரும் இன்பம்
115. முயற்சி திருவினை ஆக்கும்
116. சாரணர் இயக்கம்
117. தாய்மொழி மூலம் பாடங்கள் கற்றல்
118. போரை நிற்பாட்டும் உபாயங்கள்
119. பேசாதிருந்தாற் பிழை ஒன்றுமில்லை
120. உலோக நாணயம் ஒன்றினது தற்சரிதை
121. கட்சிக்கொள்கைதரும் நன்மை தீமைகள்
122. ஓய்வுநேரங்களை நன்குகழித்தல்
123. பண்டைக் காலந்தொட்டு நிலவிவருகின்ற அமைதி
124. புகழ்பட வாழ்தல்
125. ஒருகடற் பிரயாணம்
126. வறுமையும் நன்மை விளைக்கும்
127. அரசியல் வாழ்க்கையிற் பெண்கள் பங்குபற்றுதல்
128. பழகப்பழகப் பாலும் புளிக்கும்
129. யான் முதன் முதல் உதைவண்டி ஓடியமை
130. எம்முன்னோரிலும் யாம் மகிழ்ச்சி மிக்கோரா?
131. எனது பிறந்ததினக்கொண்டாட்டம் ஒன்று
132. யான் பார்த்துக் கொண்டாடிய ஒருவிழா
133. பரீட்சைகள்
134. ஏழை அழுதகண்ணீர் கூரிய வாளை ஒக்கும்
135. காட்டுவாழ்க்கை
136. விருத்திமுறை வரிகள்
137. எண்ணும் எழுத்துங் கண்ணெனத்தகும்
138. இற்றைக்காலப் போர் முறைகள்
139. எறும்பூரக் கல்லுந் தேயும்,



RangaRakes

tamilnavarasam.com

140. எந்நாட்டு விலங்குகள்,
141. எனது முன்னிலையிலுள்ள புத்தகங்கள்,
142. எனது நாட்டிற்கு முதலமைச்சனாயிருந்தேனாயின் யான் செய்வன,
143. சித்திரக்காட்சிச்சாலை ஒன்றிற்கு யான் சென்றமை,
144. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
145. வாசிப்பு ஒருவனை நிறைமனிதனாக்கும்,
146. தேகப்பயிற்சி,
147. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்,
148. ஒரு புகைவண்டிப் பிரயாணம்,
149. உலகத்திலே நாடுகளுக்கிடையேயுள்ள நிலைமை,
150. எமது நாட்டு மரங்கள்,
151. யான் விரும்பும் விளையாட்டு,
152. குடித்தொகையெடுப்பு,
153. தூக்குத் தண்டனை,
154. புலாலுண்ணாமை,
155. நல்ல பிரசை ஒருவனின் கடமைகள்,
156. ஏற்றமுண்டானால் இறக்கமுண்டு,
157. திருவள்ளுவர் கண்டபெண்,
158. அரசியற்றுறையில் ஆசிரியர் ஈடுபடல்,
159. மலைநாட்டு வாழ்க்கை,
160. உதைபந்தாட்டப்போட்டி ஒன்று,
161. தமிழனின் பெருமை,
162. தென்கீழ் ஆசியாப் பிரச்சினைகள்,
163. விலங்குகளிடத்து இரக்கங்காட்டல்,
164. யான் கண்ட கனா ஒன்று,
165. மாணாக்கர் அரசியற்றுறையில் ஈடுபடல்,
166. பத்தாண்டு குறைந்த வயதினேனாயின் யான் செய்வன,
167. தமிழ்த்திரைப் படங்களிலுள்ள குறைபாடுகள்,
168. இலங்கையிற் பிரசாவுரிமைப் பிரச்சினை,
169. எமது நாட்டிலுள்ள போக்குவரத்து வசதிகள்,
170. தெருவிபத்துக்கள்,
171. காலந் தாழ்த்தலால் வருங் கெடுதிகள்.
172. கல்வியிற் பெரியன் கம்பன்,
173. யான் விரும்புங் கைத்தொழில்,
174. பொறுத்தார் பூமியாள்வர்,
175. மலைநாட்டு அரசருள் ஒருவன்,
176. கிராமப் பொழுது போக்குக்கள்,
177. தமிழ்நாட்டு அரசருள் ஒருவன்,
178. உயர்கல்வி தன்மொழி மூலங்கற்றல்,
179. தொன்மை மறவேல்,
180. பொதுநன்மை





181. எனது கலாசாலை வாழ்க்கை
182. அரசசேவையை யான் விரும்புங் காரணங்கள்
183. இளங்கோவடிகள்
184. வடவத்திலாந்திக்குச் சமாதானச் சங்கம்
185. ஆத்திரங்கொள்பவனுக்குப் புத்திமட்டு
186. வீட்டு மிருகங்கள்
187. யான் விரும்பும் விளையாட்டுக்கள்
188. எமது நாட்டுப் பெண்கள் செய்யத்தக்க குடிமைக் கைத்தொழில்கள்
189. எமது நாட்டின் பொருளாதாரவிருத்தி
190. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
191. தாய்மொழிப்பற்று
192. உலக உடனலச் சங்கம்
193. இற்றைக்காலப் பெண்கள்
194. பொதுவுடைமைக் கொள்கை
195. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
196. உலகசமாதானத்திற்கு ஒருவழி
197. எமது வனவிலங்குகளின் பாதுகாப்பு
198. தன்கையே தனக்குத்துணை
199. நுண்கலைகள்
200. தொண்டுகளுட் சமயத் தொண்டே சிறந்தது
201. உழவுத்தொழிலின் சிறப்பு
202. எமது நாட்டு நூதனசாலை
203. வானொலி நிலையங்கள்
204. வறுமைப்பட்டேனாயின் யான் செய்வன
205. வறியவர்க்கு உதவி செய்யும் முறைகள்
206. யான் செய்த ஒரு யாத்திரை
207. திருஏற உருஏறும்
208. மேலைத்தேச வைத்தியமுறை
209. அரசசேவையிலே தன்மொழி வழங்கல்
210. எனது வாழ்க்கையில் ஒரு சிறந்த நாள்
211. மூன்றாம் உலகப் போரிலே நிகழத்தக்கன
212. ஒரு கலாசாலை விடுதியில் யான் கழித்த நாள்கள்
213. விருந்தோம்பல்
214. ஆசியாக் கண்டத்து அமைச்சர் ஆலோசனைச்சபை
215. இற்றைக் காலத்துத் தமிழிலக்கியங்கள்
216. கலாசாலை நூனிலையங்கள்
217. ஔவையார்
218. ஆகாய விமானப் போக்குவரத்தின் எதிர்கால நிலைமை
219. இளமையும் முதுமையும்
220. வாழ்வுந் தாழ்வும் ஒருவழி நில்லா
221. யான் கலாசாலையில் நடத்திய ஒரு பரிசோதனை





RangaRakes
tamilnavarasam.com

222. எமது நாட்டு விலங்குச்சாலை
223. ஆனைக்கும் அடிசறுக்கும்
224. நுளம்புக்கொடுமை
225. அரசசேவையிற் கைக்கூலி பெறல்
226. பாராளுமன்றத்து அங்கத்தவனாய் இருந்தேனாயின் யான் செய்வன
227. எமது நாட்டிற்கு அரசகருமமொழி
228. எம்மூரின் இயற்கை வனப்பு
229. ஐக்கிய நாட்டுச்சங்கம்
230. மனமுண்டானால் இடமுண்டு
231. சரித்திரத்தில் இடம்பெற்ற ஒரு நகரம்
232. விஞ்ஞானக்கல்வி
233. சமூக வாழ்க்கையிற் பெண்கள் பங்குபற்றுதல்
234. எம்நாட்டு ஆக்கப் பொருள்கள்
235. தாமதந் தாழ்விற்குஏது
236. யான் விரும்பும் புலவன்
237. எமது நாட்டிற் பாழ்பட்ட நகரங்கள்
238. எமது கலாசாலைச் சஞ்சிகை
239. எமது நாட்டைக் கைத்தொழினாடாக்குதல்
240. தமிழ்மொழியும் பிறமொழிகளும்
241. நேரல்லாத வரிமுறைகள்
242. வறுமை விளைக்குங் குணவியல்பு வேறுபாடு
243. இன்னாசெய்யாமை
244. அணுக்குண்டின் ஆற்றல்
245. கலாசாலைக் களிப்பிரயாணம் ஒன்று
246. பொருட்செல்வம் உடையேனாயின் யான்செய்வன
247. பெண்கள் எழுத்துவினைஞர் சேவையில் அமர்தல்
248. ஆண்பெண்கள் ஒரு கலாசாலையில் ஒருங்கு கற்றல்
249. மனங்கொண்டது மாளிகை
250. எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வழங்கல்
251. என்வாழ்க்கையின் இலக்கு
252. தமிழ் நாட்டுப் பெண்மணிகள்,
253. தன் முதுகு தனக்குத் தெரியாது,
254. போர்முறைப் பயிற்சி ஒவ்வொருவருக்குந் தேவை,
255. எமது பல்கலைக்கழகம்
256. கல்விகற்றாரின் வேலையின்மைப் பிரச்சினை
257. எமது நாடு பண்பாட்டுப் பாலை நிலமாகுமா?
258. நாட்டபிமானி ஒருவன்
259. தென்னாபிரிக்காவிலே தமிழர் நிலைமை
260. தமிழ் மொழியை வளர்க்கும் வழிகள்
261. செயற்கைச் சந்திரன்.



## அதிகாரம் 20

# பெயர்த்துரை எழுதுதல்

**270.** பெயர்த்துரை என்பது ஓர் உரைப்பகுதியின் பொருளையாதல் ஒரு செய்யுட் பகுதியின் பொருளையாதல் எளிய சொற்களில் கூறுவதாம். அது ஒருவனது விளங்கும் ஆற்றலைச் சோதிப்பதற்கும், அவன் கூற விரும்பியதை உரைக்கும் ஆற்றலைப் படைத்தற்கும், பிறருக்கு நல்விளக்கத்தை உண்டாக்குவதற்கும் பயன்படும். ஒரு மொழியிலுள்ளதை வேறு ஒருமொழியிற் கூறுவதே மொழிபெயர்ப்பு; ஒருமொழியில் ஒருவன் தனது சொற்களிற் சொன்னதை அம்மொழியில் வேறொருவன் தனது சொற்களிற் சொல்வது பெயர்த்துரையாகும். சுருக்கவுரை, அல்லது திரட்டுரை தாற்பரியத்தை மாத்திரங் கூறுவது; பெயர்த்துரை தாற்பரியத்தோடு விவரங்களையுங் கூறும்.

**271. பெயர்த்துரை நன்கு அமைதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் பின்வருமாறு:-**

(1) தந்த பகுதியை இருமுறையாதல் வாசித்து அதனது தாற்பரியத்தை அறிதல் வேண்டும்.

(2) அப்பகுதியில் ஒவ்வொருசொல்லுஞ் சொற்றொடரும் என்ன பொருள்களில் வழங்கியிருக்கின்றன என்பதை நிச்சயித்தல் வேண்டும்.

(3) பொருள் செறிந்து திட்ப நுட்பமாயிருக்கும் வாக்கியங்களை விரித்தும், தளர்ந்த நடையுள்ள வாக்கியங்களைச் சுருக்கியும் நின்று பொருள் திருத்தமுறச் செய்தல் வேண்டும்.

(4) நீண்ட வாக்கியங்களை வேண்டியவிடத்துக் குறுகிய வாக்கியங்களாகப் பிரித்துங் குறுகிய வாக்கியங்களை நீண்ட வாக்கியங்களாகச் சேர்த்தும் பொருள் தெளிவுறச் செய்தல் வேண்டும்.

(5) அப்பகுதியின் முழுப் பொருளையுங் கருத்துக் கூட்டாமலுங் குறைக்காமலும் எளிய சொற்களில் எழுத வேண்டும்.

(6) அப்பகுதியிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பதிலாக ஒவ்வொரு சொல் இடவேண்டும் என்னும் நியதியில்லாமையால் எளிய சொற்களை மாற்றாது விடலாம்.



RangaRakes
tamilnavarasam.com

(7) வினாவாக்கியங்களையும் உணர்ச்சி மிகுதி வாக்கியங்களையுங் கூற்று வாக்கியங்களாக மாற்ற வேண்டும்.

(8) செய்யுணடையை உரைநடையாக மாற்ற வேண்டும்.

(9) ஓசை பெரிதுஞ் சிதையாதவாறு காக்க வேண்டும்.

(10) முதன் முதற் பரும்படியான ஒரு பெயர்த்துரை எழுதி அதனை இருமுறையாதல் வாசித்து வேண்டிய திருத்தங்களைச் செய்துவிட்டு முடிப்புப் பெயர்த்துரையை எழுதுக.

**272. பெயர்த்துரை எழுதும்முறை பின்வரும் வினாவிடைகளால் அறியப் படும்:-**

(1) குறைகுடங் கூத்தாடும்.

(2) சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தாவதென்ன?

(3) கற்றவனுக்குத் தன்னாடுந் தன்னூருமேயன்றி யாதாயினும் ஒரு நாடும் நாடாம்; யாதாயினும் ஓர் ஊரும் ஊராம்.

(4) அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா – தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

**(வாக்குண்டாம்)**

(5) ஒற்றை யொருகாலில் – நின்றுகனி, உண்ணும் அரிய வித்தை
கற்றதும் யாவரிடம் – அவரை நீ, காட்டுவையோ? கிளியே!

**(தேசிகவிநாயகம்பிள்ளை)**

(6) மலரின்மே லிருந்த வள்ளல் வழுவிலா வரத்தி னானீ
உலைவிலாத் தருமம் பூண்டா யுலகுள தனையு முள்ளாய்
தலைவனீ யுலகுக் கெல்லா முனக்கது தக்க தேயாற்
புலையுறு மரண மெய்த லெனக்கிது புகழ தேயால்.

**(கம்பராமாயணம்.)**

**விடை**

(1) நூல்களைச் சிறிது கற்றவர் தங்களைத் தாமே புகழ்ந்துரைப்பர்.

(2) பெரியோரைப் பார்த்துக் கீழ்மக்கள் தகுதியல்லாத சொற்களைச் சொன்னாலும் அப்பெரியோர் அவற்றைப் பொருட்படுத்தார்.

(3) கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்புச் செய்யப்படுமாகலான், எல்லாநாடுகளும் ஊர்களும் அவனது சொந்த நாடும் ஊரும் போலாகும்.





(4) கிளைகொண்ட வடிவத்தாலே நீண்டுயர்ந்த மரங்கள் எல்லாம் தாம் பழுக்குங் காலம் வந்தாலன்றிப் பழாவாம் ; அது போல, மேலும் மேலும் முயன்றாலும் எடுக்கப்பட்ட தொழில்கள் முடியுங் காலம் வந்தாலன்றி முடியாவாம்.

(5) கிளியே, ஒரு காலைத் தூக்கிக்கொண்டு ஒரு காலில் நின்றுகொண்டு நீ கனி உண்ணும் விதத்தைப் பார்க்க எனக்கு வியப்பாய் இருக்கிறது.

(6) தாமரை மலரின்மேல் வீற்றிருக்கின்ற பிரமதேவனது குற்றமற்ற வரத்தினாலே நீ அழிதல் இல்லாத தருமத்தை மேற்கொண்டாய் ; உலகு உள்ளவரைக்குஞ் சாகாதிருக்கும் நீண்ட ஆயுளைப் பெற்றுள்ளாய்; இலங்கையரசைப் பெற்றமையால் நீ உலகுக்கு எல்லாந் தலைவன்; எனின், இராமனைச் சேர்ந்து வாழ்தல் உனக்குத் தக்கது; இழிவு பொருந்திய மரணத்தை அடைவிக்கும் இந்நிலை எனக்குப் புகழ் விளைவிக்கத் தக்கது.

## பயிற்சி 5

**பின்வருவனவற்றிற்குப் பெயர்த்துரைகள் எழுதுக:**

(1) பாவலர் அருமை நாவலர் அறிவார்.

(2) உற்றார் இல்லாத ஊரும் ஊரோ?

(3) நுளையன் அறிவானா இரத்தினத்தின் பெருமையை?

(4) ஆயிரம் நட்சத்திரங் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகா.

(5) நரியின்மேல் நாராயணாத்திரந் தொடுப்பாரில்லை.

(6) பூவொடு சேர்ந்த நாரும் மணம்பெறும்.

(7) துன்பத்திற்கு இடங்கொடேல்.

(8) சேரிடமறிந்து சேர்.

(9) தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.

(10) தேடாதழிக்கிற் பாடா முடியும்.

(11) தமக்கு இறுதிவரும் என்பதை உணர்வார் பெரியாரோடு மாறு கொள்ளார்.

(12) கீழ் மக்களுக்கு இரங்கி நன்மை செய்யப் புகுந்தவர் அவராலே துன்பம் அடைவர்.

(13) அரசரிடம் அமயமறிந்து சொல்வோர்க்கு முடியாத காரியம் யாதுமில்லை.



RangaRakes
tamilnavarasam.com

(14) கண்ணோட்டம் இல்லாதார் கண்ணுடையரல்லர்; கண்ணுடையவர் கண்ணோட்டமிலராதலுமில்லை.

(15) பிறர்க்கு ஈவதுந் தாம் நுகர்வதுமாகிய இரண்டு செய்கையுமுடைய ரல்லாதார்க்குப் பலவாக அடுக்கிய கோடி பொருளுண்டாயினும் ஒன்றுமில்லை.

(16) செய்யாது கழியும் நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யு மாயின், அச்செயல் அவன் யாக்கையொடு கூடுநாள் வரும் வழியை வாராமல் அடைக்குங் கல்லாம்.

(17) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(18) பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(19) வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(20) நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

— திருக்குறள்.

(21) மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை —சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர்.

— நல்வழி

(22) பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

— நன்னெறி.

(23) வானகமே, இளவெயிலே, மரச்செறிவே,
நீங்களெல்லாங்
கானலினீரோ? — வெறுங்
காட்சிப் பிழைதானோ?





போனதெல்லாங் கனவினைப் போற் புதைந்தழிந்தே
போனதனால்
நானுமோர் கனவோ? இந்த
ஞாலமும் பொய்தானோ?

(24) நீர்ச்சுனைக் கணம் மின்னுற் றிலக
நெடியகுன்றம் நகைத் தெழில் கொள்ள
கார்ச்சடைக்கரு மேகங்க ளெல்லாங்
கனக மொத்துச் சுடர் கொண்டுலாவ
தேர்ச்சி கொண்டுபல் சாத்திரங் கற்றுந்
தெவிட்டொணாத நல்லின்பக் கருவாம்
வேர்ச்சுடர்ப் பரமாண் பொருள் கேட்டும்
மெலிவொர் நெஞ்சிடை மேவுதலென்னே!

- சுப்பிரமணியபாரதி.

(25) வளமை சேர்ந்திடு மூப்பிய லால்முது
மந்தி தாவி மனையிடைப் பாய
இளமை மந்தி உருவடி வாய்விடும்
ஈழ மண்டல நாடெங்க ணாடே.

— சின்னத்தம்பிப்புலவர்.

(26) வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான் மடந்தைக்குத் தார்வேந்தன் — போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று.

- புகழேந்திப்புலவர்.

(27) காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நீடரையில் வந்ததற்பின்
வாரொன்று மென்கூந்தல் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

- காளமேகப்புலவர்.



RangaRakes
tamilnavarasam.com

(28) பொன்னொளியும் மரகதத்தின் பொலிவுஞ் செந்நெற்
புலங்காட்ட அதன்மீது நிழலை வீசும்
பன்னரிய சரற்கால மேகந் தன்னைப்
பரிதிவிரைந் தெழுந்தோடி வெருட்டிச் செல்லத்
தன்னைமறந் தொளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்த் தேன்மறந்து சுழன்று பாட
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங்களித்துக் குரலெழுப்பித் திரியும் மாதோ!

- சி. தேசிகவிநாயகம்பிள்ளை.

(29) கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக் கீந்த
திசையறியா ஓட்டத்தைத் தேக்கிக் கட்டித்
திறமிகுந்த கால்வாய்கள் செய்து பாய்ச்சித்
தரையறியா இலக்கியக்கா வனத்தைத் தந்தான்
தனிப்புலமைக் கம்பனெனுங் கவிதைத் தச்சன்
உரையறியாப் பயனளிக்க உதவும் பாட்டை
உலகமெலாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்.

- நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை.

(30) செந்தீயி னாப்போலச் செழுந்தளிர்க ளீன்று
திருமாலி னிறம்போலப் பசியதழை பொதுளி
நந்நாத நெடுந்தெருப்போற் கிளைகள் பல வோச்சி
நடுக்காட்டி லோரிலவ மரம்வளர்ந்த தன்றே.

- சோமசுந்தரப்புலவர்.

(31) காரேயுன் னீரையெல்லாங் கள்ளன் கவர்ந்தானோ
நீரே யுதாவாய் நெறியாமோ – நேரேதான்
வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
பேரிகொண்டு நீதிரண்டு பெய்.

- வேதநாயகம்பிள்ளை.

(32) விரியிருட் பகையை யோட்டித் திசைகளை வென்று மேனின்
றொருதனித் திகிரியுந்தி யுயர்புகழ் நிறுவி நாளு
மிருநிலத் தெவர்க்கு முள்ளத் திருந்தருள் புரிந்துவீந்த
செருவலி வீரனெனச் செங்கதிர்ச் செல்வன்சென்றான்.

- கம்பராமாயணம்.



## அதிகாரம் 21.

## நயமெழுதுதல்

273. நயம் என்பது மேம்பாடு என்னும் பொருளது; பெரும்பான்மை செய்யுளுக்கே உரியது; ஒருவன் ஒரு செய்தியை உணர்த்தற்கண்ணே கேட்பானுக்கு உணர்ச்சி மிகுதியை விளைத்தற் பொருட்டு வழக்கமான கூற்றிலிருந்து சிறிது விலகி அழகுபெற உரைத்தானாயின், அவன் நயம்பட மொழிந்தானாவன். அந்நயமானது நெகிழிசையில்லாச் செறிவோடு பொருந் தியும் வெறுத்திசையில்லா ஒழுகிசையோடு மருவியுஞ் சொல்லின்பம் பொருளின்பங்களோடு கூடிப் பொருள் எளிதிற் புலப்படுமாறு பெரும்பான்மை சுவை, தன்மை, உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பு, தற்குறிப் பேற்றம், ஒட்டு(பிறிது மொழிதல்) என்னும் பொருளணிகள் பற்றித் தோன்று வதாம்.

(i) தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ
வுண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகுவேன்

இதன் கண்ணே நெகிழிசையில்லாச் செறிவு அமைந்திருத்தல் காண்க.

(ii) இமையவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமையந் தொறுநின்ற தையல்–சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.

இதன் கண்ணே வெறுத்திசையில்லா ஒழுகிசை அமைந்திருத்தல் காண்க.

(iii) இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லா
முய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
வைவண்ணத்தரக்கி போரின் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ண மங்குக்கண்டேன் கால்வண்ண மிங்குக்கண்டேன்.

இது இராமனை விசுவாமித்திரன் புகழுங் கூற்று. இதன் கண்ணே சொல்லின்பம் மிக்க அமைந்திருத்தல் காண்க.



RangaRakes tamilnavarasam.com

(iv) சேணு லாவிய நாளெ லாமுயி ரொன்று போல்வன செய்துபி
னேணு லாவிய தோளி னானிட ரெய்த வொன்று மிரங்கிலா
வாணி லாநகை மாத ராள் செயல் கண்டுமைந்தர்மு னிற்கவு
நாணி னாளென வேகினாணளிர் கங்கு லாகிய நங்கையே.

இது தசரதன் மூர்ச்சையாகக் கிடக்க இரவு கழிதலின் வருணனை. இதன்கண்ணே சொல்லின்பத்தோடு பொருளின்பமுஞ் செறிந்திருத்தல் காண்க.

**பொருளணிகள்**

**274.** **சுவையாது** ஒருவன் மாட்டு உண்ணிகழ் தன்மை புறத்துப்புலனாய் விளங்க வீரம், அச்சம், இளிவரல், வியப்பு, உவகை, அவலம், வெகுளி, நகை என்னும் எண்வகை மெய்ப்பாட்டாலும் இயல்வது.

(i) அனுமனை வாலிசேயை யருக்கன் சேய்தன்னை யம்பொன்
தனுவுடை யவரை வேறோர் நீலனைச் சாம்பன் றன்னைக்
கனிதொடர் குரங்கின் சேனைக் கடலையுங் கடந்து மூடும்
பனிதுடைத் துலகஞ் சுற்றுங் கதிரெனத் திரிவன் பார்த்தி.

இது கும்பகர்ணன் கூற்று; இதனுள் வீரச்சுவை அமைந்திருத்தல் காண்க.

(ii) நாண்டொழி லோசை வீசிச் செவிதொறு நடத்த லோடும்
ஆண்டொழின் மறந்து கையி னடுக்கிய மரனுங் கல்லும்
மீண்டன மறிந்து சோர விழுந்தன விழுந்த மெய்யே
மாண்டன மென்றே யுன்னி யிரிந்தன குரங்கின் மாலை.

இது இந்திரசித்தினுடைய வில்லினது நாணொலி கேட்டதும் வானர சேனை நிலைகெட்டு ஓடினமையைக் கூறுகின்றது; இதனுள் **அச்சச்சுவை** அமைந்திருத்தல் காண்க.

(iii) மந்திரச் சுற்றத் தாரும் வானுதற் சுற்றத் தாருந்
தந்திரச் சுற்றத் தாருந் தன்கிளைச் சுற்றத் தாரும்
எந்திரப் பொறியி னிற்ப யாவரு மின்றித் தானோர்
சிந்திரக் களிறு கூடம் புக்கெனக் கோயில் சேர்ந்தான்.





இது இராவணன் எவருமின்றித் தனியே கோயில் சேர்தலைக் கூறுகின்றது; இதனுள் **இளிவரற்சுவை** அமைந்திருத்தல் காண்க.

(iv) தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

இந் நறுந்தொகைச் செய்யுளில் **வியப்புச்சுவை** அமைந்திருத்தல் காண்க.

(v) குனிந்த கோலப் புருவங்கள் கொம்மைவேர்
பனித்த கொங்கை மழலைப் பணிமொழி
நுனித்த தொன்று நுவல்வ தொன்றாயினாள்
கனித்த வின்களி கள்ளினிற் காட்டுமோ.

இது இலங்கையில் மகளிரன்றி ஆடவர் யாவரும் கொல்லப் பட்டாரென அனுமன் கூறக்கேட்ட சீதையினது நிலையைக் கூறுகின்றது; இதன் கண் **உவகைச்சுவை** அமைந்திருத்தல் காண்க.

(vi) கைகளை நெரித்தாள் கண்ணின் மோதினாள் கமலக் கால்கள்
நெய்யெரி மிதித்தா லென்ன நிலத்திடைப் பதைத்தாணெஞ்சம்
மெய்யென வெரிந்தா ளேங்கி விம்மினா ணடுங்கி வீழ்ந்தாள்
பொய்யென வுணரா ளன்பாற் புரண்டனள் பூச லிட்டாள்.

இது சனகன் மகோதரனாற் பற்றப்பட்டு வந்தது பொய்யென்பதை அறியாத சீதையினது நிலையைக் கூறுகின்றது; இதன்கண் **அவலச்சுவை** அமைந்திருத்தல் காண்க.

(vii) மடித்தவாய் கொழும்புகை வழங்க மாறிதழ்
துடித்தன புருவங்கள் சுறுக்கொண் டேறிடப்
பொடித்ததீ நயனங்கள் பொறுக்க லாமையால்
இடித்தவான் றெழிப்பினா லிடிந்த குன்றெலாம்.

இது இராமன் இட்ட அம்புமதிலைக் கடக்கமுடியாது நின்ற கும்பகருணனது நிலையினையும் அதனால் விளைந்த பயனையுங் கூறு கின்றது; இதன் கண் **வெகுளிச்சுவை** அமைந்திருத்தல் காண்க.



RangaRakes tamilnavarasam.com

**(viii)** குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

இக்குறள் வெண்பாவில், நகைச்சுவை அமைந்திருத்தல் காண்க.

## பயிற்சி 59

**பின்வருஞ் செய்யுள்களில் எச்சுவைகள் அமைந்து கிடக்கின்றன எனக் காட்டுக:-**

**(1)** உறங்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங் – கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறி தாப் போர்த்து விடும். **(நாலடியார்)**

**(2)** குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு – மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீாங்கோதை யாள். **(நாலடியார்)**

**(3)** கைநெரித்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தா –டையல்
சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்
புனவேழ மேல்வந்த போது,

**(4)** என்றலு மிலங்கை வேந்த னெயிற்றின மெழிலிநாப்பண்
மின்றிரிந் தென்ன நக்கு வாலிசேய் விடுத்த தூத
வன்றிற லாய வாலி வலியன்கொ லரசின் வாழ்க்கை
நன்றுகொ லென்ன லோடு நாயகன் றூத னக்கான்
**(வாலியின் உடனலனை அனுமானிடம்
இராவணன் விசாரித்தல்)**

**(5)** ஒருவர் வாய்க் கொள்ளுந்தேனை யொருவருண் டெளிதிற்போவா
ரொருவர்கைக்கொள்ளுந்தேனையொருவர் கொண்டோடிப்போவா
ரொருவரோ டொருவ ரொன்றைத் தழுவுவர் விழுவரோடி
யொருவர்மே லொருவ ரேறி யோகையென் றுவகை கூர்வார்
**(வானரர் களித்தல்)**





**(6)** கோன்மேற் கொண்டுங்குற்றமகற்றக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனினன்றாம் பொறையென்னாக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல்யானைக் களிமன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான்.
**(தசரதன் கைகேயின் காலில் விழுதல்)**

**(7)** கைபிசையா வாய்மடியா கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான் – வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர் வேந்தன் றூதிசைத்த போது.

**(8)** நாணின ளொதுங்கின ணதி மடந்தையும்
பூணுறு முலைமுகம் பொருந்த நோக்கினள்
சேணுறு தனது மெய்தேசு போனகை
வானிலவெழச் சில வாய்மை கூறுவாள்.
**(பாரதம், கங்கை சந்தனுமகாராசனைக் கண்ட இடத்தில் நிகழ்ந்தவை)**

**(9)** கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ –பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர். **(நளவெண்பா)**

**(10)** ஆயிடை காண்கிலா தழுங்கிச் செங்கடை
யாயரி நெடுங்கணீ ரருவி பாய்தரத்
தூயமென் மலர்க்கர நெரித்துத் துண்ணென
வாய்வெரீஇ யால்வயி றதுக்கி மாழ்கினாள்
**(நைடதம், நளனைப் பிரிந்த தமயந்தியினது நிலை)**

**275.** **தன்மை**யாவது ஒரு பொருளைப்பற்றி உவமை முதலிய விகார வணிகள் இன்றி உள்ளவாறே கூறுவது பொருள், குணம், சாதி, தொழில் என்னும் இவைப்பற்றித் தோன்றும்.

ஓடின புரவி வேழமோடின வுருளைத் திண்டேர்
ஓடின மலைக ளோட வோடின வுதிரப் பேராறு
ஆடின கவந்த பந்த மாடின வலகை மேன்மேல்
ஆடின பதாகை ஓங்கி யாடின பறவை யம்மா.

இதன் கண்ணே தொழிற்றன்மை யணி அமைந்திருத்தல் காண்க.



RangaRakes tamilnavarasam.com

**276.** **உவமை**யாவது வினை, பயன், மெய், பண்பு என்பன ஏதுவாகப் பொருளொடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்படத்தொடுப்பது. ஒரு பொருள் ஒரு பொருட்கு உவமையாகுமிடத்து முன்னதுஉவமை என்றும் உவமானம் என்றுங் கூறப்படும்; பின்னது பொருள் என்றும் உவமேயம் என்றும் உரைக்கப்படும் ; உவமைக்கும் பொருளுக்கும் ஒருபுடை ஒற்றுமையிருந்தாலே போதும்; உவமை, உவமையுருபு, ஏது, பொருள் என்னும் நான்கும் விரிந்து நின்றால், அதனை **விரியுவமை** என்றும், உவமையுருபு, ஏது என்னும் இரண்டுமாதல், அவ்விரண்டனுள் ஒன்றாதல் தொக்கு நின்றால் அதனைத் **தொகையுவமை** என்றுங் கூறுதல் வழக்கு.

(i) சேல்போற் பிறழுங் கண். இது வினையுவமை; விரியுவமைப்பாற் படும். சேல் என்பது உவமை; கண் என்பது பொருள்; பிறழ்தல் என்பது இரண்டற்கும் பொதுவேது ஆகியவினை; போல் என்பது உவமைருபு.

(ii) மாரியன்ன வண்கை. இது பயனுவமை; விரியுவமைப்பாற்படும். மாரி என்பது உவமை; கை என்பதுபொருள்; வண்மை என்பது இரண்டற்கும் பொதுவேதுவாகிய பயன்; அன்ன என்பது உவமவுருபு.

(iii) துடியிடை. இதுமெய்யுவமை; தொகை யுவமைப்பாற்படும். துடி என்பது உவமை; இடை என்பது பொருள்; இரண்டற்கும் பொதுவேது ஆகிய வடிவையுணர்த்துஞ் சொல்லும், உவமையுருபுந் தொக்கு நிற்கின்றன.

(iv) பவளச் செய்வாய். இது பண்புவமை; தொகை யுவமைப்பாற்படும். பவளம் என்பது உவமை; வாய் என்பது பொருள்; செம்மை என்பது இரண்டற்கும் பொதுவேது ஆகிய பண்பு; உவமையுருபு தொக்கு நிற்கின்றது.

**277.** ஒருபொருட்கு உவமைகூறுங்கால், அவ்வுவமை சிறப்பு, நலன், காதல், வலி என்பன நிலைக்களன்களாகப் பிறக்கும்.

(i) முரசு முழங்குதானை மூவருங்கூடி, அரசவை யிருந்த தோற்றம் போல. இங்கு, சிறப்பு நிலைக்களனாக நிற்றல்காண்க.

(ii) ஓவத்தன்ன விடனுடை வரைப்பின். இங்கு, நலன் நிலைக்களனாக நிற்றல் காண்க.

(iii) பாவையன்ன பலராய் மாண்கவின். இங்கு, காதல் நிலைக்களனாச நிற்றல்காண்க.





(iv) அரிமாவன்ன வணங்குடைத் துப்பின். இங்கு. வலி நிலைக்களனாக நிற்றல் காண்க.

**278.** **எடுத்துக்காட்டு**வமையாவது உவமையும் பொருளுந் தனித்தனி வேறுவேறு வாக்கியங்களாக இருக்க இடையிற் போல முதலிய உவமவுருபு தொக்கு நிற்பது.

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

இ–ள்: முதற்பொருள் இல்லாத வணிகருக்கு ஊதியம் இல்லையாம்; அதபோலத் தம்மைத்தாங்குந் துணையில்லாத அரசருக்கு அதனால் வரும் நிலையில்லை. இங்கு, அதுபோல என்னுஞ்சொல்லானது தொக்குநிற்பதையும் அதனாலே முதலிலார்க்கு ஊதியமில்லை என்பது மதலையாஞ் சார்பிலார்க்கில்லை நிலை என்பதற்கு எடுத்துக்காட்டாய் நிற்றலையுங் காண்க.

**279.** **உருவகமாவது** உவமிக்கப்படும் பொருளையும் உவமையாம் பொருளையும் ஒன்றெனுமாறு ஒற்றுமை கொளுத்தி உரைப்பது. உவமிக்கப்படும் பொருள் முன்னும் உவமையாம்பொருள் பின்னுமாய் நிற்க, "ஆகிய" என்னும் மாட்டேற்றுச் சொல்லானது தொக்குநின்றால் அது தொகையுருவகம் என்றும், அச் சொல் விரிந்து நின்றால் அது விரியுருவகம் என்றுங் கூறப்படும்.

வாய்ப்பவளம், குழற்கொன்றை, அடித்தளிர் –தொகையுருவகம்.
வாயாகிய பவளம், குழலாகியகொன்றை அடியாகியதளிர்
- **விரியுருவகம்.**

**280.** பொருளைக் குறிக்கின்ற சொல்லும் உவமையைக் குறிக்கின்ற சொல்லுந் தம்மிற் புணருமிடத்து அவற்றிடையில் ஒற்றுத் தோன்றல், திரிதல் என்பன இன்றி மாட்டேற்றுச் சொல்லும் விரியாவிடத்து உவமையாய் வருதலும் உண்டு

வாய்பவளம், குழல்கொன்றை, அடிதளிர் –உவமை.



RangaRakes tamilnavarasam.com

**281.** விரியுருவகங்களில் "என்னும்", "ஆக"என்பனவும் மாட்டேற்றுச் சொற்களாய் நிற்பதுண்டு.

வாய் என்னும் பவளம், குழல் என்னுங் கொன்றை, அடி என்னுந் தளிர், வாய் பவளமாக, குழல்கொன்றையாக, அடி தளிராக.

**282. ஏகதேசவுருவக**மாவது ஒரு செய்யுளில் ஓரிடத்து ஒருபொருளை உருவகஞ்செய்யுங்கால், மாட்டேறுபெற உருவகஞ்செய்து அப்பொருளோடு சம்பந்தமுறப் பிறிதொருபொருளை அச்செய்யுளிற் பிறிதோரிடத்து மாட்டேறுபெற உருவகஞ்செய்யாது கூறினாற் பிறப்பது.

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

இங்கு, கடுமொழியையுங் கையிகந்த தண்டத்தையும் அரமாக உருவகஞ் செய்தவர் அதற்கேற்ப அடுமுரணை இரும்பென்னாமையால், இது ஏகதேசவுருவகமாதல் அறிக.

**283.** யாதுமோர் உருவகத்தை உவமையாக்குமிடத்து உவமையை முன்னும் பொருளைப் பின்னும்வைத்து உவமவுருபை விரித்தாயினுந் தொகுத்தாயினுங் கூறல் வழக்கு.

**உருவகம்:** வாய்ப்பவளம், குழலாகிய கொன்றை, அடி என்னுந்தளிர்.

**உவமை:** பவளவாய், கொன்றை போன்ற குழல், தளிரன்ன அடி.

## பயிற்சி 60

**1. பின்வரும் உவமைகள் வினை, பயன், மெய், பண்பு என்னும் ஏதுக்கள் பற்றி எவற்றைச் சார்ந்தன எனக் கூறுக:-**

1. அம்பனையவேற்கண்
2. அமுதம் போலும் அடிசில்
3. அருந்தா அமுதன்ன அஞ்சொல்
4. அல்லிக் கமலமனையதாவடி
5. அறற்கூந்தல்
6. அன்னநடை
7. ஆடியிற் பாவையன்னாள்
8. ஆம்பல் மலரன்ன கண்
9. இரவேய்குழல்
10. இடியேறு போன்ற முழக்கம்
11. இழைபோல் இடை
12. உரலையொத்த பரந்த அடி





13. உவர்க்கடலனைய செல்வன்
14. ஊழி முடிந்தன்ன ஓங்கிருள்,
15. எட்பூப்போலும் மூக்கு
16. ஏறுபோற்பீடு நடை
17. கடல்போன்ற கல்வி
18. கண்ணனைய பாங்கி
19. கணைபோலுங்கண்
20. கமலக்கண்
21. கயற்கண்
22. கழைபோல் வளர் நெல்
23. கன்னல்போல் இன்சொல்
24. காக்கைச்சிறகன்ன கருமயிர்
25. காந்தள் மெல்விரல்
26. காயாமலரன்ன மேனி
27. கிஞ்சுக வாய்
28. கிளிபோலும் மொழி
29. குமிழ்போலும் மூக்கு
30. குயில்போலுங்குரல்
31. குருதி கண்டாலென்ன காந்தள்
32. குவளைபோலும் விழி
33. கொழுங்காவியைப்போல் நள்ளிரவு
34. கோபத்தன்ன தோயாப் பூந்துகில்
35. செங்கனிவாய்
36. செந்தாமரை வதனம்
37. செம்புருக்கி வார்த்தாலனைய வழி
38. செல்லேய் முரசு
39. செவ்வானன்ன மேனி
40. சேதாம்பல் போல் வாய்
41. சேலன்ன நீள் விழி
42. தண்டாளம் போல நகை
43. தளவேய் நகை
44. தளிரன்ன மேனி
45. தளிர் புரை மெல்லடி
46. தாமரை போலும் முகம்
47. திங்கள் போலும் வதனம்
48. தீப்போலும் வெம்மை
49. தீயினன்ன ஒண் செங்காந்தள்
50. தூண்போலுந் தோள்
51. தெள்ளமுதன்ன தேமொழி
52. தேன்போலும் மொழி
53. நரிபோலுந் தந்திரம்
54. நாய்போலும் நன்றி மறவாமை
55. நீர்க்குமிழிபோலும் வாழ்க்கை
56. நுண்கொடியேரிடை
57. நெருப்பினன்ன சிறுகட் பன்றி
58. நெருப்புப்போலக் கோபம்
59. பங்கயம் போற்கண்
60. பவளம்போல உதடு
61. பளிங்கு போன்ற நெஞ்சு
62. பறைக்குரலெழிலி
63. பால் போலும் இன்சொல்
64. பால் போலும் வெண்மை
65. பாலன்ன பாயல்
66. பானல்போற் கருங்கண்
67. பிடிபோலும் நடை
68. பிறைபோல் வளைநுதல்
69. பிறையன்ன எயிறு
70. புயல்போற் கொடைக்கை
71. புயலன்ன ஓதி
72. பொய்போலிடை
73. மதிபோலும் முகம்
74. மந்தாரமன்னகை
75. மந்திபோன்ற மனம்
76. மயில்போற் சாயல்
77. மலைபோலுந்தோள்
78. மாந்தளிர் மேனி



RangaRakes tamilnavarasam.com

79. மாவடுவகிரன்னகண்
80. மான்போலும் நோக்கு
81. மின்போன்ற இடை
82. முத்தன்ன வெண்ணகை
83. முல்லைப்பூப்போலும் பல்
84. வஞ்சி மருங்குல்
85. வடுக்கண்டனைய கண்
86. வரைபுரை களிறு
87. வல்லிக்கொடி மருங்குல்
88. வாயு போலும் வேகம்
89. வாள்போலுங் கண்
90. விற்புருவம்
91. வேய்புரை தோள்
92. வேல்விழி
93. வேலன்ன கூர்ங்கண்
94. வேளனைய விடலை

**2. கீழ்க்காணும் உவமைச் சொற்றொடர்களைத் தக்க வாக்கியங்களில் அமைக்க:-**

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல
2. அச்சில்லா வண்டிபோல
3. அடியற்ற மரம்போல
4. அடுத்தது காட்டும் பளிங்கு போல
5. அத்தி பூத்தாற்போல
6. அம்பலந் தாள்கூட்டுவார்போல
7. அம்புவிட்டு ஆக்கரக்குமாறு போல
8. அயிலாலே அயில் போழ்வது போல
9. அழலிடைப்பட்ட வெண்ணெய்போல
10. அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல
11. அனலிடைப்பட்ட மெழுகு போல
12. ஆகாயத்திற் கோட்டை கட்டுவதுபோல
13. ஆண்டிகள்கூடி மடங் கட்டுவது போல
14. ஆந்தை விழிப்பதுபோல
15. ஆப்பிழுத்த குரங்குபோல
16. ஆற்றங்கரையின் மரம்போல
17. இடியொலி கேட்ட நாகம்போல
18. இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓராப்போல
19. இரண்டு தோணியிற் கால்வைத்தாற்போல
20. இருதலைக் கொள்ளியிடத்து எறும்புபோல
21. இலவு காத்த கிளிபோல
22. இலைமறை காய்போல





23. உட்சுவரிருக்கப் புறச்சுவர் தீற்றுவது போல
24. உண்ட இல்லுக்குத் தீயிடுவதுபோல
25. உண்ணுந்துணைக் காக்குங் கூற்றுப்போல
26. உருத்திராக்கப் பூனைபோல
27. உருள் பெருந்தேருக்கு அச்சாணிபோல
28. உலக்கை தேய்ந்து உளிப்பிடியானமைபோல
29. உலக்கைமேற் காக்கை நின்றுழல்வதுபோல
30. உவர்நிலம் உட்கொதிக்குமாறு போல
31. உள்ளங்கை நெல்லிக்கனிபோல
32. உள்ளிருந்து அச்சாணி கழிக்குமாறு போல
33. ஊமை கண்ட கனாப்போல
34. ஊழித்தீப்போல
35. எட்டி பழுத்தாற் போல
36. எறிகிற வீட்டிற்கு எண்ணெய் ஊற்றினாற்போல
37. எய்தவனிருக்க அம்பைநோவது போல
38. ஏய்ப்பினில் வைப்புப்போல
39. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாமைபோல
40. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியதுபோல
41. ஏழை சொன்னசொல் அம்பலம் ஏறாததுபோல
42. ஒருநாட்கூத்திற்கு மீசை சிரைத்தாற் போல
43. ஒளிமுன் இருள்போல
44. ஓரறையுட்பாம்பொடு உடனுறையுமாறு போல
45. ஓருயிரும் ஈருடலும்போல
46. ஓடும் புளியம்பழமும்போல
47. கங்கைபரந்தாங்கு போல
48. கடன்பட்டார் நெஞ்சம் போல
49. கண்ணை இமைகாப்பதுபோல
50. கருடனைக் கண்ட பாம்புபோல
51. கரும்புத் தின்னக் கைக்கூலி கேட்டாற்போல
52. கல்லில் நார் உரிப்பதுபோல
53. கல்லொடு கையெறியுமாறு போல
54. கழிவிழாத் தோளேற்றுவார்போல
55. கனியிருக்கக் காய் கவர்ந்தாற்போல
56. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தாற்போல



RangaRakes

tamilnavarasam.com

57. காட்டில் எறிந்த நிலாப்போல
58. கார்த்திகைப்பிறை கண்டதுபோல
59. காலத்திற் பெய்த மழைபோல
60. கானற்சலம்போல
61. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல
62. கிணற்றுத் தவளை போல
63. கிளியை வளர்த்துப் பூனையின்வாயிற் கொடுத்தது போல
64. கீரியும் பாம்பும் போல
65. குங்குமஞ் சுமந்த கழுதைபோல
66. குடத்துள் வைத்த விளக்குப் போல
67. குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளிவைத்தாற் போல
68. கும்பிடப்போன தெய்வங் குறுக்கே வந்தாற் போல
69. குரங்கின்கைப் பூமாலைபோல
70. குரங்கின் கைக்கொள்ளி கொடுத்தாற்போல
71. குருடனுக்குக் குருடன் வழி காட்டினாற் போல
72. குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புபோல
73. குளிக்கப்போய்ச் சேறு பூசியமைபோல
74. குன்றின் மேலிட்ட விளக்குப்போல
75. குன்றுமுட்டிய குருவிபோல
76. கூலிக்கு மாரடிப்பது போல
77. கொல்லன் உலையிற் றுருத்திபோல
78. கொழுகொம்பில்லாக் கொடிபோல
79. சகடக்கால்போல
80. சந்திரனில்லா வானம்போல
81. சாடிக்கேற்ற மூடிபோல
82. சிலையில் எழுத்துப்போல
83. சுரத்திடைப் பெய்த பெயல்போல
84. சூரியனைக்கண்ட இருள்போல
85. செவிடன் காதிற் சங்கு ஊதியதுபோல
86. தரித்திரனுக்கு புதையல் அகப்பட்டதுபோல
87. தாமரை இலையில் நீர்போல
88. திங்களை நாய் குரைத்தாற்போல
89. தீட்டினமரத்திற் கூர்மைபார்ப்பதுபோல
90. தேவரே தின்னினும் வேம்பு கைப்பதுபோல





91. தோளிலிருந்து செவியைக் கடிப்பதுபோல
92. நகமுஞ் சதையும்போல
93. நரிக்கூக் கடற்கெய்தவாறு போல
94. நரிவால் கொண்டு கடலாழம் பார்ப்பதுபோல
95. நரையான் புறத்திட்ட சூடுபோல
96. நாய்காணிற் கற்காணாதவாறு போல
97. நாய் பெற்ற தெங்கம்பழம்போல
98. நாய்மேற் றவிசிடுமாறு போல
99. நாவற்கீழ்ப் பெற்ற கனிபோல
100. நீர்மேலெழுத்துப்போல
101. நீர்க் குமிழிபோல
102. நெற் செய்யப்புற் றேய்ந்தாற்போல
103. பசுமரத் தாணிபோல
104. பசுத்தோல் போர்த்த புலிபோல
105. பருத்தி புடைவையாய்க் காயத்தாற்போல
106. பலாக்குறைத்துக் காஞ்சிரை நடுவதுபோல
107. பாண்சேரிப் பற்கிளக்குமாறு
108. பாம்பின் வாய்த் தேரைபோல
109. பாம்பு கடித்ததற்குத் தேளுக்குப் பார்ப்பதுபோல
110. பாயிருள் நீக்கும் மதியம் போல
111. பாலுந் தேனுங் கலந்தாற்போல
112. புண்ணிலே புளி விட்டதுபோல
113. புலிமுகத்துண்ணி பறித்துவிடல்போல
114. புழுப்பெய்து புண்பொதியுமாறு போல
115. புறக்குடத்தில் வார்த்த நீர்போல
116. புன்னுனி மேல் நீர்போல
117. பூவோடு சேர்ந்த நார் போல
118. பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டதுபோல
119. மச்சு ஏற்றி ஏணிகளைவது போல
120. மதிப்புறத்துப்பட்ட மறுப்போல
121. மலையைக் கல்லி எலியைப் பிடித்தாற்போல
122. மீகாமன் இல்லாத மரக்கலம்போல
123. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டமைபோல
124. முதலிலார்க்கு ஊதியம் இல்லையானாற்போல



RangaRakes
tamilnavarasam.com

125. முயல்விட்டுக்காக்கைதினல் போல
126. முழங்குறைப்பச் சாணீளுறுமாறு போல
127. முள்ளினால் முட்களையுமாறு போல
128. யானைபோய் வால்போகாதவாறு போல
129. யானையால் யானை யாப்பது போல
130. வளர்த்தகடா மார்பிற் பாய்ந்தாற்போல
131. வெயின் முன் பனிபோல
132. வெள்ளிடைமலைபோல
133. வேலி பயிரை மேய்ந்தாற்போல
134. வைக்கோற் போரில் நாய்போல

**3. மேல்வரும் உருவகங்களை உவமைகளாக மாற்றுக:-**

அங்கைமலர், அளகக்கங்குல், அளகம்புயலாக, அறியாமை என்னும் அகவிருள், அறவாழி, ஆவிக்கமலம், இடராழி, இன்மொழித்தேன், உரன் என்னுந் தோட்டி, உள்ளத்தடம், கட்காவி, கண்கழுநீராய், கண்ணம்பு, கண்மலர், கண்வண்டு, கரங்கள் காந்தளாய், காமக்கடல், காமக் கடும்புனல், காமத்தழல், குணமென்னுங் குன்று, குழற்கார், கைத்தளிர், கொன்றை பொன்னாக, சினம் என்னும் நெருப்பு, செங்கைத்தளிர், செஞ்சடை பவளக் கொடியாக, செவ்வாய்த்தளிர், செவ்வாய் பதுமமாய், ஞானமாம் விளக்கு, தாட்டாமரை, திருமுகமே தாமரை, தீங்கிளவி பண்களாய், நகைமுகிழ், நடனச் செவ்வேல், நால்வேதக்கடல், நான்முகன் மீகானாக, நுதற்பிறை, பிறவிப்பெருங்கடல், புருவச் சிலை, பெண்கொடி, பெண்ணாரமுதம், பேரின்பத்தீஞ்சுவை, மருங்குல் கொம்பாக, மருங்குற்கொடி, மாதர்க்கொடி, முகத்தாமரை, முகமலர், மெய்ஞானத் தெப்பம், மென்னகையேதாது, மைவாரளகமதுகரம், மொழியே முருகுலாந் தேறல், வதனமதியம், வரன் என்னும் வைப்பு, வார்கடல் நெய்யாக, விழியே களிவண்டு, வெய்ய கதிரோன் விளக்காக, வையமேதகழி.

**4. பின்வருஞ் செய்யுள்களிலுள்ள உவமை யுருவகங்களை வேறு வேறாக எடுத்துக்காட்டி, நீர் கண்ட உவமைகள் எவ் வேதுக்கள்பற்றித் தோன்றின எனக் கூறுக:-**

(i) அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.





(ii) உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

(iii) அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(iv) வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(v) இன்பம் விழையான் வினைவிழைவான் நன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றுந் தூண். (திருக்குறள்)

(vi) நட்புநா ரற்றன நல்லாரு மஃகினா
ரற்புத் தளையு மவிழ்ந்தன – உட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன கலுழ்.

(vii) கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர் –தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு. (நாலடியார்)

(viii) மாதிர மெவையு நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத் தானோர்
பூதல மென்னு நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.
(கம்பராமாயணம்)

(ix) திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமு கம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே –ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. (நளவெண்பா)

(x) திரைநெடுங்கடல் வயிறுளைந் தீண்டவெண் டிங்க
ணிரை செழுங்கதிர்க் கரங்களா லம்பர நீவ
விரவுகின்றபுன் மாலையாந் தெரிவையுள் வெள்கி
யருணவெங்கதிர்ச் சுடரினை யொளியற வவித்தாள். ([illegible])



RangaRakes
tamilnavarasam.com

**284.** **வேற்றுப்பொருள்வைப்பாவது** முன்னர் ஒரு பொருளினது தன்மையை உரைத்துப் பின்னர் அதனைச் சாதித்துத் தரும் பிறிதொரு பொருளை உலகு அறிந்த முறைமையால் வைத்து மொழிவது.

நிறைவாரி யைத்தாண்டி நின்றா னனும
னறை பெரியோர்க் கென்னோ வரிது.

இங்கு, அநுமன் கடலைத்தாண்டி நின்றான் என்று கூறிவிட்டு அதனைச் சாதித்தற்குப் பெரியோர்க்கு யாதும் அரிதில்லை என்று உலகறிந்த முறைமையால் வைத்துமொழிந்தமையால், இது வேற்றுப் பொருள் வைப்பணியாதல் காண்க.

**285.** **தற்குறிப்பேற்றமாவது** ஒரு பொருட்கண்ணே இயல்பாக நிகழுந் தன்மையை விலக்கிக் கவி தான் கருதிய வேறொன்றினை ஏற்றிச் சொல்லுவது.

மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னுங்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்க
ணையனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா.

இங்கு, கொடிகள் காற்றால் அசைந்தாடுதலைக் கம்பர் தங் கருத்தை ஏற்றி அவை இராமனை விரைவாக வருமாறு அழைக்கின்றன எனக்கூறியமையால், இது தற்குறிப்பேற்றவணியாதல் காண்க.

**286.** **ஒட்டு, அல்லது பிறிதுமொழிதல்** என்னும் அணியாவது ஒரு பொருளைப்பற்றிக் கூறக்கருதிய கவி அதனை மறைத்து அதனை வெளிப்படுத்தக்க பிறிதொன்றினைக் கூறுவது.

பீலிபெய் சாகாடு மச்சீறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

பகைவ ரெல்லாருந் தனித்தனி தன்னிலும் எளியரென்று அவரொடு பகைகொள்பவன் அவர் ஒருங்கு தொக்குழி அவரால் வலியழிவன் என்பது தோன்றப் பீலியேற்றிய சகடமும் அப்பீலிமிகுத்தேற்றப்படின் அச்சு முறியும் என்று கூறியமையாலே, இது ஒட்டு, அல்லது பிறிதுமொழிதல் என்னும் அணியாதல் காண்க.





**287.** **செய்யுள்களுக்கு நயங்கூறல் பின்வருவன வற்றால் அறியப்படும்:-**

**தசரதன் அமைச்சரை நோக்கிக் கூறுவது**

(1) அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ் சிறை கடத்தலி னினியதி யாவதே.

**நயம்:** மக்கள் பெறுஞ் சிறப்புக்களுள்ளே முத்தியே பெறுதற்கரியது என்பது தோன்ற அதனை அருஞ்சிறப்பு என்றார்; அதனை அடைதற்கு முதற்கண் ஒருவன்மாட்டுத் துறவு வலிந்து மேற்கொள்ளப்படாது தானேயாய் அமையவேண்டும் என்பது தோன்ற அமைவருந்துறவு என்றார்; அத்துறவு நெறியிலே நின்று ஆன்மார்த்த நூல்களைக் கேட்டல் சிந்தித்தல் செய்து அவற்றின் பொருளைத் தெரிந்து நிற்க அவற்றிற்கு இனமாகிய தெளிவு தானேயாய் மிகும் என்பது தோன்ற அவ்வழி தெரிஞ்சுறவென மிகுந் தெளிவு என்றார். துறவையுந் தெளிவையும் முத்தியடைய விரும்பும் ஆன்மாவாகிய பறவைக்கு உளவாய இரண்டு சிறைகளென உருவகஞ் செய்தார். ஏனையான்மாக்களுக்கு இச்சிறைகள் முளைப்பதன் அருமை தோன்றப் பெருஞ்சிறை உளவெனின் என்றார். பிறவியைப் பெருங் காவற் சாலையென உருவகஞ் செய்வாராய் இப் பெருஞ்சிறை என்றார். துறவு, தெளிவு என்னும் இரண்டு சிறைகள் கொண்டு பிறவி என்னும் பெரிய காவற்சாலையைக் கடத்தலின் பயன் பேரின்பம் என்றும் அதனின் மிக்கது யாதுமில்லை என்பதுந் தோன்ற இவ்விருஞ்சிறை கடத்தலின் இனியதி யாவதே என்றார். பிறவியைக் காவற்சாலை என்றும் அதனைக் கடத்தற்குத் துறவையுந் தெளிவையுஞ் சிறைகளென்றுங் கூறியவர் அவற்றிற்கேற்ப அச்சிறைகளை உடையது ஆன்மா என்னும் பறவை என்று கூறாமையாலே, அது ஏக தேசவுருவகவணியாகும். இச் செய்யுளிற் பொருட் செறிவும் வெறுத் திசையில்லா ஒழுகிசையும் ஒருங்கு அமைந்திருத்தல் நயக்கத்தக்கது.

**இராவணன் மாலியவானிடத்து**
**இராமனின் ஆற்றல் முதலியவற்றை வியந்து கூறல்.**

(2) போயினித் தெரிவு தென்னே பொறையினா லுலகம் போலும்
வேயெனத் தகைய தோளி யிராகவன் மேனிநோக்கித்
தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுது மன்றே காமனு நாமு மெல்லாம்.



RangaRakes
tamilnavarasam.com

**நயம்:** சீதையானவள் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலும் பொறையுடையவள் என்பான் பொறையினா லுலகம்போலும் என்றான்; இங்கு வழங்கியது பண்புவமை. அவள் தோளின் வடிவம் பற்றி மூங்கில்போ லென்பான் வேயெனத் தகைய தோளி என்றான்; இங்கு உபயோகித்தது மெய்யுவமை. இராமன் இரகுவமிசத்தில் உதித்த மேன்மையை யுடையவன் என்பது தோன்ற அவனை இராகவன் என்றான். மேனியழகுபற்றிக் காம னையும் வீரச்சேவகச் செய்கைபற்றித் தன்னையும் இராமனோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துக் காமனுந் தானுந் தொகுதியாகச் சீதைக்கு நாய்போலத் தோற்றம் அளிப்பர் என்று கூறுவான் 'மேனி நோக்கி ... காமனு நாமு மெல்லாம்' என்றான். இங்கு இராமனைக் காமனோடு ஒப்பிட்டது பண்புவமை ; தன்னோடு ஒப்பிட்டது தொழிலுவமை. காமனுந் தானும் நாய் போல்வர் என்பதில் இளிவரற்சுவை அமைந்திருந்தல் காணப்படும். தன்னை 'நாம்' என்று பன்மையாற் கூறியது செருக்குப் பற்றியாம். இராமனது வீரச்சேவகச் செய்கைக் கொடுமை பற்றி நெருப்புப் போன்ற தென்றான். இங்கு அமைந்துகிடந்தது பண்புவமை. முன்னர் தான் இராம னொடு போர்செய்து அவன் தன்னிலுங் காமனிலும் வலிமையழகுகளிற் கூடியவனெனக்கண்டு வைத்த தனக்கு மேலுந் தொடந்து போர்புரிந்து அறிதற்கு யாதுமில்லை என இராமனது ஆற்றலழகுகளை வியப்பானாய்ப் போயினித் தெரிவதென்னே என்று கூறினான். இதன்கண் வியப்புச் சுவை அமைந்திருத்தல் காணப்படும். இச்செய்யுளில் ஓசை நயத்தோடு பொரு ளின்பஞ் செறிந்திருத்தலும் உணரப்படும்.

**கைகேயியின் கொடுமையாலே தசரதன் மூர்ச்சையாகிக் கிடக்கப்**
**புட்கள் ஒலித்தலின் வருணை**

(3) தோய்க யத்து மரத்து மென்சிறை துள்ளி மீதெழு புள்ளெலாந்
தேய்கை யொத்த மருங்குன் மாதர்ச் சிலம்பி னின்று சிலம்புவ
கேக யத்தர சன்ப யந்த விடத்தை யின்னதொர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ தித்து மனத்துள் வைவன போன்றவே.

**நயம்:** அயோத்திமாநகரமானது செயற்கை நலனோடு கூடிக் கிடந்ததேயன்றி, மக்கள் நீராடுதற்குரிய குளங்களும் அக்குளங்களைச் சுற்றி அமைந்த மரங்களுங் கொண்டுள்ள தென்றும், அந்நீர் நிலைகளிலும் மரங்களிலும் உள்ள பறவைகள் மெல்லிய சிறையுடையவை என்றும், அதனால் அவை மக்களுக்குத் தீங்குசெய்யாத சிறு புட்களென்றும், பொழுது விடியும்போது அவை மகிழ்ச்சி மிகுதியினாலே ஆகாயத்திலே எழுவன என்றுந் தோன்றுமாறு தோய்கயத்து ......... மீதெழு புள்ளெலாம் என்று





கூறியும், அங்குள்ள மாதர் தம் மருங்குல் இயற்கையாகத் தேய்வைப் பெற்று அதன்மாட்டு மனம் பொருந்தியரென்பது தோன்றத் தேய்கையொத்த மருங்குன் மாதர் என்று கூறியும், அப்புட்கள் ஆகாயத்திலே எழுந்தொழு லிப்பது அம்மாதர் நடக்கும்போது உண்டாகுங் காற்சிலம்பு ஒலிப்பது போன்றது எனத் தோன்றுமாறு சிலம்பினின்று சிலம்புவ என்று கூறியும், அந்நகர் இயற்கை நலனோடுங் கூடிக்கிடந்த தென்று வர்ணித்தார் எனலாம். மாதர்ச்சிலம்பினின்று சிலம்புவ என்பதிலே தொழிலுவமை அமைந்திருக்கின்றமை காணலாம்.

இனி, கேகயத்தரசன் பயந்த விடமென்பதால், கையேயியை நஞ்சு என்று கூறினாராவர்; அதற்கேற்பக் கேகயத் தரசனைப் பாற்கடலாகக் கொள்ள வேண்டும் ; ஆயின், இனிய பாற்கடலிற் கடு நஞ்சு தோன்றியவாறு சிறந்த கேகயத்தரசன் குலத்திற் கொடிய கைகேயி பிறந்தாளென்று கூறி னாராவர். தசரதன் இறப்பால் தனக்கும் தன் மகனுக்கும் பழியையும் பிறருக்குக் கெடுதியையுந் தன் வரத்தாற் பிறரொருவரும் பெறாதவாறு தேடிக்கொண்டாள் என்பது தோன்ற இன்னதோர் கேடுசூழ் மாகயத்தி என்றார். அப்புட்கள் ஒலிப்பன, அவை கைகேயியின் கொடுமையைக் கண்டு நீர் கொதிப்பதுபோலச் சினம் பொங்கி, அரசன் அவளிடத்து அன்பு கொண்டுள்ளானாகையால் அவளை வெளிப்படையாய் வைதால் அவனது கோபத்திற்கு ஆளாக வேண்டிய நிலைமை தமக்கு வரலாமென நினைந்து தம் மனத்துள் வைதாற் போலுமென்பார். உட்கொதித்து மனத்துள் வைவன போன்றவே என்று கூறினாராவர். இங்கு புட்கள் ஒலித்தமைக்குக் கம்பர் இயல்பான தன்மையை விலக்கித் தாங்கருதிய பிறிதொன்றினை ஏற்றிச் சொன்னமையால், இதன்கட்கிடந்த அணி தற்குறிப்பேற்றமாகும். இச்செய்யுள் பொருட் செறிவொடு ஓசை நயத்தையுங் கொண்டுள்ளதெனலாம்.

**தருமன் கண்ணபிரானுக்குக் கூறியது**

(4) வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்கா டென்னச்
செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு
திறத்தேமுஞ் சென்று மாள்வேங்
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனத்
திருநாட்டிற் கலந்து வாழ
உயிரனையாய் சந்துபட உரைத்தருளென்
றானறத்தின் உருவம் போல்வான். (வில்லிபாரதம்)



RangaRakes

tamilnavarasam.com

**நயம்:** பகையானது பகைகொண்டாரை அழிப்பதில் மிக்கது என்பது தோன்ற அதனைக் கடுநெருப்பென உருவகஞ் செய்வானாய்த் தருமன் வயிரமெனுங் கடுநெருப்பு என்றான். தானாகவே பெருங்கெடுதி செய்ய வல்ல பகை என்னும் நெருப்பை மிகும்படிமூட்டி வளர்த்தால் வெகுளி தோன்றுமென்றும், அது காரணமாக உக்கிரம் பொருந்திய போர் நிகழு மென்றும், அப்போரில் நெருப்பானது உயர்ந்த மூங்கிற்காட்டை அழிப்பது போலத் துரியோதனனாதியோர், தாம் என்னுஞ் சிறந்த இருதிறத்தோரையும் அப்பகை ஒருங்கு அழிக்குமென்போன் உயர் வரைக்காடென்ன .... சென்று மாள்வேம் என்று கூறினானாவான், 'சென்று மாள்வேம்' என்பதனாலே தாமாகப் பகை கொண்டு அதனை வளர்த்துப் போர்செய்து அழிவார் என்றவாறு, இரவில் மலரும் ஆம்பல், பகலில் மலருந் தாமரை என்னும் இருவேறு இயல்புடையமலர்கள் ஒருங்கு வாழ்ந்து மணம் வீசுகின்ற வயல்களையுடைய திருநாடு என்பான் கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனத் திருநாடு என்றான். திருநாடு என்றதனாலே அந்நாடு செல்வத்தாற் பொலி வுற்றிருந்ததென்பது அறியப்படும். அந்நாட்டில் அவ்விருவேறு இயல் புடைய ஆம்பலுந் தாமரையும் வாழுமாறு, இருவேறு தன்மைவாய்ந்த துரியோதனனாதியோருந் தாமுங் கூட்டுறவு வாழ்க்கை நடத்தலாம் என்பது தோன்றக் கலந்து வாழ என்றான். கண்ணனைத் தன்னுயிரைப் போற் பேணி நின்றான் என்பது தோன்ற உயிரனையாய் என விளித்தான். அழைத்த காரியந் துரியோதனனாதியோருக்குந் தமக்கும் நிகழவிருக்கும் போரை விலக்கிச் சந்து ஏற்படுத்தலே என்பது தோன்றச் சந்துபட உரைத்தருள்க என்றான். அறமே வடிவெடுத்தாற் போன்ற தருமன் என்பது தோன்றத் தருமனைப் புலவர் அறத்தின் உருவம் போல்வான் என்றார். இச் செய்யுள் நெகிழிசையின்றிப் பொருளின்பம் பயந்து நிற்றல் நயக்கத்தக்கது.

### சூரியன் உதித்தலின் வருணனை

(5) வான நெடுவீதி செல்லும் மணித்தே ரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன் – போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று. **(நளவெண்பா)**

**நயம்:** ஆகாயத்தை நெடுவீதியென உருவகஞ் செய்வாராய் வான நெடு வீதி என்றார். அவ்வீதியின்கண்ணே செல்லுஞ் சூரியனை அழகிய தேருடையவன் என்பதுபட மணித்தேரோன் என்றார். தமயந்தியைத் தமயந்தி





என்றாதல் பெண்ணென்றாதல் கூறாது மடந்தை என்று மொழிந்தது அவள் மடந்தைப் பருவத்தினள் என்று அறிவித்தற் பொருட்டாகும். நளன்காட்டில் அலைந்துதிரிந்த போதிலும் முன்னர்த் தனக்கென அடையாளப் பூவுடைய அரசனாய் இருந்தான் என்பது தோன்றத் தார்வேந்தன் என்றார் எனலாம்; அன்றி, நளன் அப்பொழுது அரசிழந்து காட்டில் அலைந்து திரிந்த போதிலும் முன்னர் மாலைகள் அணிந்து மகிழ்ந்திருந்தானென்றும், அரசர் குலத்திற் பிறந்தவனென்றுந் தோன்றுமாறு அவனைத் தார்வேந்தன் என்றார் என்றுங் கூறலாம். 'போனநெறி காட்டுவான்' என்பதனாலே சூரியனை ஆண்மகனென உபசரித்தாராவர் ; நீட்டுவார் செங்கரத்தை நின்று' என்பதனாலே சூரியனாகிய ஆண்மகன் சிவந்த கிரணங்களாகிய தன் கைகளை உதயகிரியில் நின்றவண்ணம் நீட்டினான் என்று கூறினாராவர். சூரியனை ஆண்மகனென்று கொண்டவர் அதற்கேற்ப இருளைப் பெண் மகளென்று உபசரித்தார் ஆவர். ஓரிடத் தினின்றும் ஒரு பெண்மகளை விலகச் செய்வதற்கு ஆண்மகன் ஒருவன் அவ்விடத்திற் கைநீட்டுமாறு போலச் கருமை பொருந்திய இருளாகிய பெண்ணை அக்காட்டினின்றும் விலகச் செய்தற்குச் சூரியனாகிய ஆண்மகன் தன்சிவந்த கிரணங்களாகிய கைகளை அவ்விடத்து நீட்டினான் என்பதுபட இருள்போய்க் கைவாங்கக் கானூடே நீட்டுவான் செங்கரத்தை என்றார். போனநெறி காட்டுவான் போல்..... நின்று என்பதனாலே நளன் தமயந்தியைக் காட்டிலே தனிவிட்டுச் சென்ற வழியைச் சுட்டிக் காட்டுவான் போலுஞ் சூரியன் உதித்தான் என்று கூறினாராவர். சூரியன் உதித்தமையைப் பற்றிக் கூறப்புகுந்த புகழேந்திப்புலவர் அதன் இயல்பான தன்மையை விலக்கிப் பிறிதொன்றனை ஏற்றிச் சொன்னமையால் இச்செய்யுளில் அமைந்த அணி தற்குறிப்பேற்றமாகும். இச்செய்யுள் ஒழுகிசையோடு சொல்லின்பமும் பொருளின்பமும் பெற்றிருத்தல் நயக்கத் தக்கது.



RangaRakes

tamilnavarasam.com

## பயிற்சி 61

**பின்வருஞ் செய்யுள்களுக்கு நயமெழுதுக:-**

**ஒளியும் இருளும்.**

(1) நீர்ச்சுனைக் கணம் மின்னுற் றிலக
நெடியகுன்றம் நகைத் தெழில் கொள்ளக்
கார்ச்சடைக் கரு மேகங்க ளெல்லாங்
கனக மொத்துச் சுடர்கொண்டு டுலாவத்
தேர்ச்சி கொண்டுபல் சாத்திரங் கற்றுந்
தெவிட்டொ ணாத நல்லின்பக் கருவாம்
வேர்ச்சுடர்ப் பரமாண் பொருள் கேட்டும்
மெலிவோர் நெஞ்சிடை மேவுத லென்னே!

(சி. சுப்பிரமணியபாரதி)

**சரற் காலம்**

(2) பொன்னோளியும் மரகத்தின் பொலிவுஞ் செந்நெற்
புலங் காட்ட அதன்மீது நிழலை வீசும்
பன்னரிய சரற்கால மேகந் தன்னைப்
பரிதிவிரைந் தெழுந்தோடி வெருட்டிச் செல்லத்
தன்னைமறந் தொளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்த் தேன்மறந்து சுழன்று பாட
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங்களித்துக் குரலெழுப்பித் திரியும் மாதோ!

(சி. தேசிகவிநாயகம்பிள்ளை)

**கவி தாகூர்**

(3) கலைமகள் கண்ணீர் சோரக்
கவிமகள் கலங்கி வீழத்
தலைமகள் இறந்தா னென்று
இந்தியத் தாய்த விக்க
அலைகடற் கப்பா லுள்ள
அறிஞர்கள் யாரு மேங்க
மறைந்தனன் கவிதா கூரே.

(வெ. ராமலிங்கம்பிள்ளை)





**இளமை நிலையாமை**

(4) மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா புதிர்தலு முண்டு.

(நாலடியார்.)

**உபகாரச் செய்கை**

(5) நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்
கன்மேலெழுத்துப்போற் காணுமே – யல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகார
நீர்மேலெழுத்திற்கு நேர்.

(வாக்குண்டாம்)

(6) அங்கண் விசும்பின் அதனிலாப் பாரிக்கு
திங்களுந் தீங்குறதல் காண்டுமால் உலோபி
அறைப்பாய் அருவி அணிமலை நாட
உறற்பால யார்க்க முறும்.

(பழமொழி நானூறு)

**வலியறிதல்**

(7) நுனிக்கோம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(திருக்குறள்)

**உருவத்தால் வரும் பெருமை**

(8) தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே

(நறுந்தொகை)



RangaRakes
tamilnavarasam.com

**அந்திப்பொழுது**

(9) மல்லிகையே வெண்சங்கா வண்டுத வான்கருப்பு
வில்லி கணையெறிந்து மெய்கரப்ப – முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

**(நளவெண்பா)**

**கடலை நோக்கி நளன் கூறுவது**

(10) போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் – தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று.

**(நளவெண்பா)**

**துரோபதையினது துகிலுரியும்போது வீமனது தன்மை**

(11) அழுதழுது தொடும்புலிவாய் அகப்பட்ட
மான்பிணைபோல் அரற்றா நின்ற
எழுதரிய மடப்பாவை தங்கள் முகங்
களைநோக்கி இரங்கி வீழ்ந்த
பொழுது மனம் புகைமூளப் பூந்தடங் கண்
அனல் மூளப் போரின்மூளப்
பழுதுபடா அடலாண்மைப் பவனகும்
றான்றடக்கை படைமேல் வைத்தான்

**(வில்லிபாரதம்)**



RangaRakes tamilnavarasam.com